
# பிரபந்தத் திரட்டு



பதிப்பாசிரியர்:

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பிரபந்தத் திரட்டு

பதிப்பும் [illegible]
டாக்டர் அன்னி தாமசு
[illegible]கத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
அடையாறு—சென்னை-600 020.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | — | Pirapantat tiraṭṭu |
| Editor | — | ANNIE THOMAS, M.A.,Ph.D.<br>Senior Research Fellow,<br>I. I. T. S, Adaiyaru, Madras-20 |
| Publisher & Copy Right | — | International Institute of<br>Tamil Studies, Madras-600 020. |
| Publication Number | — | 28 |
| Language | — | Tamil |
| Edition | — | December, 1980 |
| Paper used | — | 18.2 Kg. |
| Size of the book | — | 21×14 cms. |
| Printing types used | — | 10, 12 Points |
| Number of Copies | — | 1200 |
| Number of Pages | — | xxxii+382 |
| **Price** | — | **Rs. 16/= (Rupees Sixteen)** |
| Printers | — | Novel Art Printers<br>Madras 600 014-Phone 82731 |
| Binding | — | Section, Card Board |
| Artist | — | Amudhone |
| Subject | — | Rules on Tamil Genres and connected facts |
| Special Information | — | Manuscript edition |

இந்நூல் 1981 சனவரியில் மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி வெளியிடப் பெறுகின்றது.

# முகவுரை

**டாக்டர். ச.வே. சுப்பிரமணியன்**
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை 600 020.

தமிழர்தம் பேரறிவை, அவர் எழுதி வைத்துள்ள நூல்கள் உணர்த்துகின்றன. அவர்தம் அறிவுக் களஞ்சியத்தில், உருவாகி வெளிவந்த பல உயர்ந்த கருத்துகள், அச்சேறாமல சுவடிகளிலேயே பிறர் அறியாது உறங்கிக் கிடக்கின்றன. அவற்றை வெளியிட வேண்டும் என்று தமிழக அரசு எண்ணியது. அதன் விளைவாக, இந்நிறுவனத்தில், சுவடியியல் கல்வி தொடங்கினோம். அதோடு, சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளோம்.

இதுவரை, அச்சேறாத சுவடிகள் நான்கு வெளி வந்துள்ளன.

ஐந்தாம் நூலாகப் பிரபந்தத்திரட்டு என்ற இந்நூல் வெளிவருகின்றது. பல புதிய செய்திகளை இந்நூல் தருகின்றது.

பொதுநிலையில், சுவடிகளைப் பதிப்பிப்பது மிகவும் கடினம். இந்நூலைப் பதிப்பிக்க, பதிப்பாசிரியர் டாக்டர் அன்னி தாமசு எடுத்துக்கொண்ட அரிய முயற்சியையும், மிகுந்த உழைப்பையும், ஆழ்ந்த அறிவையும், நுண்மாண் நுழை புலனையும் இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் எடுத்து இயம்பும். அதற்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். இதுபோன்ற பல சிறந்த நூல்களை அவர் தருதல் வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இந்நிறுவனத்தின் நற்செயல்கள் அனைத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் முழுநிலையில் தருகின்ற கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரித்து.

அடையாறு,
சென்னை—20

அன்பன்
**ச.வே. சுப்பிரமணியன்**

# நன்றியுரை

அச்சேறாது, அறிவாரற்று முடங்கி கிடக்கும் ஏடுகளை பலரும் பார்க்கும் வண்ணம் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் முயற்சியை உருவாக்கியவர், கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள். 'பிரபந்தத் திரட்டு' எனும் ஏடு நிறுவனம் வாயிலாக வெளிவர வேண்டும் எனும விருப்புடன், அதன் பதிப்புப் பணிக்கு என்னை ஆட்படுததியவர் நிறுவன இயககுநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள். இதற்கு உதவியாக, ஏட்டைப் பிரதி செய்தும், ஐயங்கள் நீக்கியும், வெளியிட அமைதி அளித்தும் அமைந்தவர் திரு.மு கோ. இராமன் அவர்கள். எழுத்துப் பிரதியை மூல ஏட்டுடன் ஒத்து நோக்க முழுமையாக உதவி, ஏடுபடிக்கும் கல்விக்கு என்னை அறிமுகம் செய்தவர் திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள். நூலை, உ.வே.சா. நூலகத்தில் அறிமுகம் செய்யுங்கால் பல கருத்துகள் வழங்கி நெறிப்படுத்தியவர் திரு.மு. சண்முகம் பிள்ளை அவர்கள். பதிப்புப் பணியில் எனக்கு உறுதுணையாக அமைந்து பல்லாற்றானும் உதவியவர் திரு.ஆ. சிவலிங்கனார் அவர்கள்.

அச்சேறுங்காலைப் படிவங்களைப் பார்வையிட்டு உதவியவர், டாக்டர். க. காந்தி, திரு. இரா. பால சுப்பிரமணியன் ஆகியோர். மிகக் குறுகிய காலத்தில செவ்வையாக அச்சியற்றி அளித்தவர் நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் நாரா நாசசியப்பன் அவர்கள்.

அனைவருக்கும் நன்றியுடையேன்.

**அன்னி தாமசு**

# உள்ளே


| | | |
|---|---|---|
| முன்னுரை | | vi |
| Introduction | | xxix |
| பிரபந்தத் திரட்டு | | 1 |
| | பாயிரம் | 3 |
| 1. | திரட்டியல் | 7 |
| 2. | புறநடையியல் | 59 |
| 3. | கருப்பொருளியல் | 67 |
| 4. | பொருத்தவியல் | 75 |
| 5. | உவமாரூட வியப்பு சார்வியல் | 103 |
| 6. | விசேடவணி வியப்பு சார்வோரியல் | 149 |
| 7. | சாதிமரபு சார்வோரியல் | 203 |
| 8. | குலநில வியப்பு சார்வோரியல் | 214 |
| 9. | ஒழிபியல் | 269 |
| 10. | கொடையியல் | 346 |
| பாடல் முதற்குறிப்பு | | 369 |
| சொல்லகராதி | | 375 |

# முன்னுரை

அச்சில் வெளிவராத தமிழ் நூல்களை அறிமுகம் செய்யும் நோக்கில், பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் எனும் திட்டத்தின் கீழ், 'பிரபந்தத் திரட்டு' எனும் பாட்டியல் இலக்கண நூல் வெளிவருகின்றது.

## ஏடு

உ.வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிகளுள் ஒன்றாக இது அமைகின்றது. சுவடி எண். 2209. நாற்பத்தியேழு ஏடுகள் (94 பக்கம்) கொண்டு அமையும் இச்சுவடியின் அளவு $14\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. ஒவ்வொரு பக்கத்திலும் சுமார் ஒன்பது முதல பதின்மூன்று வரிகள் உள்ளன. இச் சுவடியில், இருவிதமான கையெழுத்து அமைவதால், இது மூல ஏடாகவன்றி, இருவரால் தோன்றிய நகல் ஏடாக அமையலாம். ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன. சுவடி, பழைமயான தோற்றத்டன் அமைகின்றது.

உ.வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிகளின் விளக்கம் (தொகுதி 4, பக். 437, ஆண்டு 1962), இதனை அபூர்த்தி எனக் குறிக்கின்றது. ஆயின், ஐயரவர்களின் புதல்வர், நவநீதப் பாட்டியலின் முன்னுரையில் (1961, பக் IV), இதனை, முழுமையாகக் கிடைக்கின்ற அச்சில் வராத நூலாகப் பிரபந்ததீபத்துடன் குறிப்பிடுகின்றார்.

அபூர்த்தி எனக் குறிப்பிடுவதற்கு ஏதேனும் காரணம் அமையலாம். இரண்டு மூனறு இடங்களில், செய்தி முடிந்தபின் ஏட்டில் இடம் விடப்பட்டுள்ளது (gap). நகல் எடுக்கும் போது இவ்வமைப்பு வரலாம் எனக் கூறுவர்,

சில பாடலில் செல்லரித்தல் போன்ற ஏட்டுப் பொடிவால் ஓரிரு எழுத்துகள் அறிய இயலாத நிலை அமைகின்றது. இதனை 'அபூர்த்தி' என்பரா என்பது ஐயமே.

'பிரபந்தத் திரட்டு' எனக் கூறும் தலைப்பு ஏட்டுக்குப்பின், கலைஞானம் 64 பற்றிய ஒரு பட்டியல் தரும் தனி ஓலை அமைகின்றது. அதனைத் தொடர்ந்து ஒரு தனி ஓலையில், கடவுள் வாழ்த்தும் நுவல்பொருளும் கூறும் பாயிரமாக வெண்பா ஒன்று அமைகின்றது. தொடர்ந்து அமையும் ஓலையில், 'பிரபந்தத் திரட்டு' எனும் பெயருடனும் 'முதலாவது திரட்டியல்' எனும் குறிப்புடனும் சாதகம் பற்றிய வெண்பா அமைந்து நூல் தொடங்குகின்றது.

சில இயல் முடிவில், இயல் முடிந்தது என்னும் குறிப்பும், அது வரை யுள்ள பாடல் எண் தொகைக் குறிப்பும் அமைகின்றன. ஆயின், எல்லாவிடத்தும் இவ்வமைப்புப் பின்பற்றப்படவில்லை. சில இயல்களில், இயல் முடிவுச் செய்தி மட்டும் அமைய (1, 2) இன்னும சிலவற்றில் தொகை மட்டும் (8, 10) உண்டு; சிலவற்றில், இயல்முடிவும் தொகை எண்ணும் உண்டு (3, 4, 5); இன்னும் பிற வற்றில், இயல் முடிவு அல்லது எண் பற்றிய எச் செய்தியும் இன்றி, இடைவெளி மட்டும் அமைகின்றது (6, 7, 9).

ஏட்டில், முதல் பாடல் முதல் இறுதிப்பாடல்வரைத் தொடரெண் தரப்படாது, ஒரு இயலுக்குள் அமையும் பாடலுக்கே எண் தரப்படுகின்றது.

பத்து இயல்களும் முடிந்தபின், தனி ஏட்டில், ஐந்து ஆசிரியங்களில் தொண்ணூற்றாறு பிரபந்தப் பட்டியல் அமைகினறது. மீண்டும் ஒரு தனியேட்டில், பூமிசுககிரன் என்ற பகுதி, பாடலும் உரைநடையுமாக அமைந்து, ''முற்றும்'' என்ற சொல் பெற்று முடிகின்றது.

பிரபந்தத் திரட்டின் பத்து இயல், 526 பாடலுக்கு முன்னும் பின்னுமாக அமையும் இப்பகுதிகள் (கலைஞானம், பிரபந்தப் பட்டியல, பூமிசுக்கிரன் 527-533)இந்நூலுக்கு உரியனவா என்பது ஐயமே. பிரபந்தப் பட்டியல் பின்னொருவரால் தொகுக்கப் பட்டிருக்கலாம். நூலின் அகத்தே, முதல், ஒன்பதாம் இயல்களில் அமையும் பிரபந்தப் பெயர்கள் பெரும்பாலும் இங்கமைந்த

போதும், இரண்டிற்குமிடையே அமையும் சிறுபான்மை வேறு பாடு இவ் எண்ணத்தை எழுப்புகின்றது.

உ.வே. சாமிநாதையர் நூல் நிலையச் சுவடிகள் விளக்கம் (மேற்படி), இப்பிரந்தத் திரட்டின் முதற்பாடலாகக் கடவுள் வாழ்த்து வெண்பாவினையும் ஈற்றுப் பாடலாகப் பிரபந்தப் பட்டியல் கூறும் இறுதிப் பாடலையும தருவதனை ஏற்பின், முன் கண்ட கலைஞானம், பூமிசுக்கிரன் பகுதிகள் நூலைச் சார்ந்தன வல்ல என்பது புலனாம்.

ஆனால், ''முற்றும்'' என்ற சொல், 'பூமிசுக்கிரன்' எனும் பகுதிக்குப் பின்பு, சுவடியின் முடிவிலேயே அமைவதால் ஐயம் நீங்காதமைகின்றது. நூலாசிரியருக்கு உரியதாக அன்றி, நகல் எடுத்தவர், அல்லது நூலைக் கற்றவர் இணைத்ததாகவும் இவை அமையலாம்.

## கையெழுத்துப் பிரதி

உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில, பிரபந்தத் திரட்டினைத் தாளில் பிரதி செய்தும் வைத்துள்ளனர். (தொடர் எண் 597, Copy of manuscript 598, First 121 Pages) முன் குறிதத ஏட்டின் பிரதியாக இது தென்படு கின்றது. ஆயின் 138 தாளில் பிரதி செய்யப்பட்டுள்ள இது, ஏற் கெனவே வழங்கிய இன்னொரு (தாள்?) பிரதியின் நகலாக விருக்கலாம் என்பது எண்ணம். 'பிரபந்தத் திரட்டின் இயலட்ட வணை' எனும் தலைபபில், தற்போது கிடைக்கும் பிரதியின் இறுதிப் பக்கம் தரும் பக்க எண்கள் இவ் எண்ணத்தைத் தரு கின்றன. 117 பக்கமுடன் அம்முதற்பிரதி வழங்கியமை தெரிகின்றது.

ஏட்டுச் சுவடிக்கும் இத் தாள் பிரதிக்கும் சில அமைப்பு வேறு பாடுகள் தென்படுகின்றன. இப்பிரதி, 'பிரபந்தத்திரட்டு' எனும் தலைப்பும், அதனைத் தொடர்ந்து, 'திரட்டியல்' எனும் தலைப் பும் பெற்ற பின்பே கடவுள் வாழ்த்துக் கூறும் வெண்பாவைத் தருகின்றது; சாதகம் பற்றிய பாடல் தொடர்கின்றது. எனவே, ஏட்டில் திரட்டியலுக்கு வெளியே அமைந்த பாயிரப்பாடல், இங்கு முதல் இயலின் தொடக்கமாக அமைகின்றது.

இயலின் தொடக்கத்தில், இயல் எண்ணும் பெயரும், இயலின் முடிவில், அச்செய்தியுடன் 'முடிந்தது' எனும் குறிப்பும் முழுமையாக அமைகின்றன. முதலியல் தவிர, பிற இயல்களனைத்தின் முடிவிலும், இத்தனை இயலுக்கு இத்தனை செய்யுள் என எண்முடிவு மிக ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை ஒருவேளை, பிரதி செயதவரே எழுதியிருக்கலாம.

இப்பிரதியில், பத்தாவது இயல் நிறைவுற்றதன் குறிப்புகட்குப் பின்பு, பிரபந்தப்பட்டியலும், பூமிசுக்கிரனும், முற்றும் என்ற முடிவுக்குப்பின் கலைஞானம் பற்றிய பகுதியும் அமைகின்றது. அதனைத் தொடர்ந்து, 'பிரபந்தத் திரட்டு முற்றும். இப்பிரபந்தத் திரட்டு சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் அ-ந் தேதி ஆரம்பித்து கச-உ முற்றுப் பெற்றது' என்ற குறிப்பு உள்ளது. ஓலைச் சுவடி தராத இப்பகுதி, முன் காகிதப் பிரதி செய்தவர் குறிப்புப் போலும்.

ஏற்கெனவேகுறிப்பிட்ட இயலட்டவணையைத் தொடர்ந்து, 'இது நொச்சியூர் (மன்னார்குடி தாலுகா) ஒரு சேர்வை காரரிடத்திலிருந்து வாங்கி வந்தது' எனும் குறிப்பும் உள்ளது. டாக்டர். ஐயர் அல்லது ஏடுபெற்று வந்தஒருவர் இக் குறிப்பினை எழுதியிருக்கலாம்.

## நூல்

பிரபந்தத் திரட்டியல் எனும் இந்நூல், கடவுள் வாழ்த்துக் கூறும் பாடலும், திரட்டியல் (75), புறநடையியல் (17) கருப்பொருளியல் (16), பொருத்தவியல் (54), உவமாரூட வியப்பு சார்வியல் (54), விசேடவணி வியப்பு சார்வோரியல் (79), சாதிமரபு சார்வோரியல் (18), குலநிலவியப்பு சார்வோரியல் (76), ஒழிபியல் (107), கொடையியல் (29) எனப் பத்துப் பகுதிகளும் கொண்டு, 526 பாடலால் அமைகின்றது.

முன்னும் பின்னுமாக, ஆறு செய்யுளும், இரு உரைநடைப் பகுதியும் பெறுகின்றது.

## யாப்பு

பொதுவாக, இலக்கண நூல்கள், ஒரே யாப்பில் முழுமையாக அமைவது பெரும்பான்மை. தொல்காப்பியக் காலம் முதல்

நூற்பா இலக்கண யாப்பாக அமைகின்றது. யாப்பருங்கலக் காரிகை. வீரசோழியம் முதலியன கட்டளைக் கலித்துறையை யாப்பாகக் கொண்டன. வச்சணந்தி மாலை, வெண்பா யாப்பில் தோன்றியது. சிதம்பரப் பாட்டியல், பிரபந்த தீபிகை போன்றவை விருத்தத்தில் அமைகின்றன.

பொதுவாக, எந்த இலககண நூலிலும், இருவகை பலவகை யாப்புக் கலத்தல் இல்லை. யாப்பு-பாட்டியல் இலக்கணங்களைப் பொறுத்தவரை இதனை மிக உறுதியாகச் சொல்லலாம். விருத்த யாப்பு வடிவாகும் போது, பலவகை விருத்தங்கள் கலப்பதே அவற்றில் உண்டு.

யாப்பிலக்கணத்திற்குச் சான்றிலக்கிய நூலாக அமையும் மாறன் பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, பல்சந்தப் பரிமளம் போன்றன பல்வகை யாப்பினவைத் தருகின்றன. இவை இலக்கணமாகவன்றி இலக்கியமாகவன்றி இலக்கியமாக அமைவது வேறுபாடு. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் வாழ்ந்த வீரபத்திர முதலியாரின் விருத்தப்பாவியல், பல்வகை விருத்த அமைப்பை இலக்கண வடிவாகக் கொள்கின்றது.

இதற்குக் காலத்தால் முந்திய பிரபந்தத் திரட்டு, முதல் மூன்றியலும் வெண்பாவாகவும், பின் இயல்கள் விருத்தமாகவும் இயலுவது தனிநிலையாகும். நான்கு அளவொத்த அடிகளாலாவது விருத்தம் எனும் பொது அமைப்புப் பற்றியே 'விருத்தம்' என்ற சொல் இங்குக் கையாளப்படுகின்றது. ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை போன்ற பல வடிவங்கள் விரவி வருகின்றன. ஆசிரிய விருத்தத்தில், ஆறு முதல் பன்னிருசீர் வரைப் பல நிலைகள் அமைகின்றன. வெண்பாக்கள் பெரும்பாலும் நேரிசையே.

## பொருள் :

பிரபந்தம் எனப் பெயர்பெறும் இலக்கண நூல்கள் பெரும்பாலும் இலக்கிய வகைகளான பிரபந்தம் பற்றி மட்டும் மொழிகின்றன (பிரபந்த மரபியல், பிரபந்ததீபம்) பாட்டியல் செய்தி கூறும் இலக்கண நூல்களின் 'பிரபந்தம்' எனப் பெயர் பெறும் பகுதியும் இவ்வாறு அமைவது இயல்பு (சுவாமி நாதம்; பிரபந்த மரபு) ஒவ்வொரு நூல்கள் பிரபந்தம் எனப்

பெயர் பெறினும், பிரபந்த இலக்கணத்தோடு பொருத்தம் பற்றியும் மொழிவதுண்டு. (பிரபந்த தீபிகை மங்கலப் பொருத்தம் மட்டும் )

அருகி, இவற்றில் பிரபந்தமும் பொருத்தமுமன்றி, செய்யுள் தொடர்பான பிறசில எண்ணங்களும் அமைவதுண்டு. பாட்டியல் நூல்களின் செல்வாக்கால், அவை தம் பொதுவியலிலோ ஒழிபியலிலோ கூறும் சில செய்திகளை இவையும் மொழிகின்றன. ஆசிரியன், புலவர், பாவுக்கும் இனத்திற்குமுரிய சாதி முதலிய பகுப்பு, செய்யுள் விளக்கம், நூல் பெயர் பெறல், பாடல் அரங்கேற்றமும் தலைவன் பரிசு முதலியனவும், பாடலின் நன்மை தீமை, போன்ற ஒரு சில செய்திகளைப் பிரபந்த மரபியல் கூறுவது இங்குக் கருதத் தக்கது.

பிரபந்தத் திரட்டு, பிற பாட்டியல்-பிரபந்தவியல் நூல்களின் பொதுமரபினைப் பின்பற்றிய போதும், பிரபந்த பொருத்தச் செய்திகள் மட்டுமன்றி, உவமான சங்கிரகம், நிகண்டுகள் போன்றன தரும் இன்னும் பல செய்திகளையும் இணைப்பதால் வேறுபடுகின்றது. இதன், முதல மூன்றியல்களும் பிரபந்தம்பற்றி மொழிகின்றன. தொடர்ந்து வருகின்ற நான்காமியல், பொருத்தம் பற்றிய செய்திகளை மொழிகின்றது. ஐந்தாமியல், உவமான சங்கிரகம் போன்று, உடலுறுப்புகட்கேற்ற உவமைகளையும் பெண்டிருடன் தொடர்புடைய அணி செயல், உணர்வு போன்றவற்றையும் விளக்குகின்றது. ஆறாமியல் சிவன் முதல் மதன் ஈறாகக் கடவுளர்க்கும் தெய்வத் தொடர்புடைய பிறவற்றுக்கும் சிறப்பியலபுகளைக் கூறி விளக்குகின்றது. தொல்காப்பியம் மரபியலில் அந்தணர் முதலிய நாற்சாதியினருக்கும் உரியனவற்றை விளக்குவதனை ஒத்து, ஏழாவது இயல் அமைகின்றது. எட்டாவதியல், வேறு பலகுலத்தினரைச் சுட்டுவதுடன் முதல், கரு, உரிகளையும், உறவு முறை, உடலியல் போன்ற பல செய்திகளையும் விரிக்கின்றது. ஒன்பதாமியல் ஒழிபுச் செய்திகளுக்கு இடமளிக்கின்றது. பாட்டியல்கள் தம் பொதுவியல் பகுதியில் சுட்டும் நாற்புலவர், நாற்பாவுக்குச் சாதியும் பிறவும், அரங்கேற்றம், பரிசு, பாடலின் நன்மை தீமை, பாயிரம் போன்ற செய்திகளின் விரிவு இடம் பெறுவதுடன், தமிழ் எழுத்து வரி வடிவம், சில பிரபந்த வகைகள் போன்றனவும் இடம் பெறுகின்றன. பத்தாம் இயல், கொடையும், கொடைச் சிறப்பும்,

வள்ளல்கள் பெருமையும், வரையாது கொடுக்கும் மன்னர் இயல்பும் பேசி அமைகின்றது.

பிரபந்தம் தொடர்பான பல செய்திகளைத் திரட்டித் தருவதனால் இது பிரபந்தத் திரட்டு எனப் பெயர் பெற்றிருக்கலாம். செய்யுளிலக்கியத்தோடு ஏதேனும் ஒரு நிலையில தொடர்புடைய செய்திகளே இப்பல வியல்களிலும்தரப்படலால் பிரபநதம எனப் பெயர்பெறல பொருத்தம் எனவும் கருதலாம்.

**ஆசிரியர் :**

இந்நூலின் ஆசிரியர் பற்றிய எக்குறிப்பும் கிடைக்கவில்லை. இவர் பெயர் தொடர்பான யாதொரு செய்தியும் அறிய இயலவில்லை.

கடவுள் வாழ்த்து, விநாயகர் வணக்கமாக அமைவதால் இவர் சைவர் எனக் கருத இடமுண்டு. தடை நீக்கும் விக்கினேசுவரனை மரபுவழி நின்று பாடினார் என இதனை மறுக்கவும் இயலும். ஆறாவது இயலில் கடவுளரைச்சிறப்பணிகள் சுட்டி மொழியும் போது, முதலில் சிவனையே கூறுகின்றார். ஆயின் இயல பொருண்மைக்கேற்பப் பிறகடவுளர்ச் சிறப்பும் கூறுகின்றார். எக்கடவுட் பழிப்பும் அமையவில்லை.

முகடிக்குரியன மொழியுமிடத்து, அவளுக்கு உணவு சிவனை மறந்தவர் திரவியம் எனலும் (தேறுணாத் தனைச் சிவனையே மறந்தவர் திரவியம் 258), கவிஞன் எல்லாம் சிவனையே பாடல் வேண்டும் எனக காரணம் காட்டுவதாலும்,

(பாப்பாடத் தெரிந்தவவன் பரமனையே பாடு
பாடினியே லெழுபிறப்பும் வாணிவிடா ளவளுந்
திப்பாயு நடத்தானைப் பூசனைசெய் வதனால்-434)

கொடையியலில் குமரிக் கண்டத்தைப் பேசும்போது, 'இந்தக் குமரிக் கண்டந் தன்னில் சிவதலமோ முதலான பொருளெல்லாம் விளங்கும்' (499) என முதன்மை அளிப்பதாலும், இவரை சைவர் எனக் கருத இடமுளது.

ஏடு, பிள்ளையார் சுழியுடன் (உ) தொடங்குதல், கடவுள் வாழ்த்துக்கு முன்னும் பின்னும் சிவமயம் என்ற சொற்களும், பின்பு தொடர்ந்து திருச்சிற்றம்பலம் என்ற சொல்லும் அமைத

லும், சில இயலமுடிவில் (5, 8) சிவமயம் என்ற சொல் காணப்படுதலும், இறுதியிலமையும் பிரபந்தப்பட்டியல் தலைப்பில் சிவமயம் எனக் குறிபெறலும், அவ்வாறே கலைஞானப் பட்டியலும் குறிப்புப் பெறலும், கையெழுத்துப் பிரதியின் முடிவில் திருச்சிற்றம்பலம் எனும் சொல் அமைதலும், ஏடுநகல் செய்தோருக்கன்றி, மூலநூலாருக்கும் உரியது என்றால் நூலாசிரியரைச் சைவர் எனக் கொள்ளத் தடையில்லை.

கொடையியலில், நாட்டுப் பெயர்கள் தருமிடத்து, சோழ நாட்டிற்குச் சிறப்பளித்து 'விறல் சோழம்' (502) எனலும், இருபத்தொரு வள்ளல்களை நாட்டிற்கேற்பப் பகுத்துக் கூறுமிடத்து, முதலில் சோழ நாட்டினரைக் கூறுவதும் (503) இந்நூலாசிரியர் சோழ நாட்டினராகலாம் எனும் எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன.

**காலம்:**

இந்நூலின் காலம் பற்றியும் எக்குறிப்பும் கிடைத்திலது. ஆயின், ஈகார உயிரை, இந்நூல் இ என்ற எழுத்தையே மேற்சுழியுடன் தருவதனால், இதன காலம் இருநூறு ஆண்டுவரை முந்தியதாகலாம் என வரிவடிவ அமைப்பில் கருதுவர். இறொழித்த வன்மை (128), இரசை (158), இரசையின் (159), இகாரஞ் சுழியேவும் (465) எனப் பன்முறை இது அமைகின்றது. உயிரெழுத்துகளை வரிசையாகக் கூறும் போதும், 'அ ஆ இ இ' என இவ் வடிவே அமைகின்றது. 'ஈ' எனும் வடிவு எங்கும் காணப்படவில்லை.

தமிழ நெடுங்கணக்கின் எழுத்துகட்கு முழுமையாக வரிவடிவம் கூறும் நிலை, 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த தண்டபாணி சுவாமிகளின் அறுவகையிலக்கணத்திலேயே அமைகின்றது. அங்கு ஈகாரம் இன்றைய வடிவில் தரப்படுகின்றது.

'உட்பெறு புள்ளி உருவாகும்மே' (14) என்பது போன்று, தொல்காப்பியம் முதலே தமிழின் வரிவடிவம் பற்றிய சில எண்ணம் அமைந்த போதும், அறுவகை இலக்சணமே விரிவாகவும் முழுமையாகவும் அதனைக் கூறும் நோக்குக் கொண்டமைகின்றது. பிரபந்தத் திரட்டில், வரிவடிவம் பற்றிய, இந்த அளவு முழுமையான தன்றியும், சில செய்திகள் அமைவதால், இதனை

அறுவகை இலக்கணத்துக்கு முந்திய காலத்தினதாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரியதாகக் கருதலாம்.

தமிழ் நெடுங்கணக்கின் எழுத்துகட்கு வரிவடிவம் கூறும் போது, மெய்களுடன் உயிர்மெய் எகர ஒகரமும், அவ்வுயிரும், மாத்திரைக் குறுக்க எழுத்தும் புள்ளி பெறவேண்டும் எனும் தொல்லை வடிவினை ஆதரித்தும் (461), தொடருமுயிர் எஏ ஒஓ வொன்றாயித் தோன்றும்' (466) எனக் கூறுவதால் வரிவடிவம் மாறுவதற்கு முந்திய காலப் பகுதியை இதன் கீழெல்லையாகக் கருதலாம்.

கோதும்பை, காண்டாமிருகம், ரெட்டி போன்ற சொற்கள் தமிழ் மொழியில் இடம்பெற்ற காலத்தைக் கணக்கிட இயலுமெனின் அச்சொற்கள் பயிலும் இந்நூலின் காலத்தையும் கணிக்க முடியலாம். வடவொலியும் எழுத்தும் பயிலலும் (மயேஸ்வரி-265) எண்கள், தமிழ் எண் வடிவில் அமைதலும் ஒரு வேளை இதன் காலக் கணிப்புக்கு உதவலாம்.

## இலக்கண மரபு

பொதுவாக இலக்கண நூல்களில் அமையும் சில பொது வெளியீட்டு மரபுகள், இப்பிரபந்தத் திரட்டின் கண்ணும் காணப் படுகின்றன.

(1) முன்னோர் கருத்தையே தாம் எடுத்து மொழிவதாகக் கூறல் பல இலக்கண நூல்களில் அமையும் பொது இயல்பாம். இந்நூலும் பலவிடங்களில் இதனைக் கொண்டுள்ளது. சான்றாகச் சில

மொழியப்படும் (194)
முன்னோ ரியற்படி...(217)
எனச் சொல்வார் (285)
என்று இயம்பினா ரன்றே (353)
என்மனார் புலவர் (355)
கூறுவேம்,
முன்னோர் குறித்த நூலறிந்தே (372)
தெருண்ட மேலோர் சொற்றதனான்
மருண்டி டாது வசனித்தோம் (376)

எடுத்துரைக்கினுமா மென்பர் அறிஞோரே (399)
என்றறைந்தாா மேலவரே (405)

(ii) அற நூல்களிலும், பிறவற்றிலும் அமையும் முன்னிலை மொழிகள் போன்று, இலக்கண நூல்களிலும் அமைதல் உண்டு. இவை பெரும்பாலும் மகடூஉ முன்னிலையாக அமைதலும், யாப்பு வடிவ நிறைவு செய்தலும் இயல்பு.

பிரபந்தத் திரட்டில் மகடூஉ முன்னிலைகள சில பயில் கின்றன.

பஞ்சார், சரணாய் (29)
அத்திர விழிப் பெண்ணே யணங்கே மடமானே
சித்திரக்கவிப் பாட்டென்றே செப்பு (55)
தேனே, சுயம் வரப்பேர் செப்பு (65)
தேன்மொழியாய, பட்டாபிடேகமாம் (74)
பாவாய் மூவாறாமே (125)
மயலதி லுற்றார் வேலன், பெணடீர் (281)

மகடூஉக குறிப்பின்றியும், முன்னிலை மொழியுடன் (நீ) பல்லிடங்களிலும் பயில்வது தனித்தன்மையாகத தென்படு கின்றது. வைத்திய நூல், சித்தா பாடல் போன்றவற்றில் ஆசிரியர் மாணவருக்குக் கூறுவது போன்ற செயல்முறை மரபு காரணமாக இதுவும் அமைந்திருக்கலாம்.

செப்பு நீ (77)
நீகாண்டி சொல்லகத்தே (114)
அணி வகுத்தறி நீயே (146)
தொகுத்து நீ பாரே (153)

இனனும் சில, இவ்வாறு முன்னிலைச் சொல் இன்றியும், ஏவல் வினையடி பெற்று முன்னிலையில் கூறும் பாங்கினைத் தாங்கி நிற்கினறது.

சாதகத்தின் சாதகமாச் சாற்று (2)
முரண்வஞ்சி முன்னி யறி (29)
காப்பியப் புறநடையாங் காண் (76)
புகனாளெனக் குறிமின் (145)
அணியறிந்து செய்யுட்கள் பாடே (288)

(iii) பொதுவாகக் கதை கூறும செய்யுளிலக்கியங்களில், ஆசிரியர் தன்னை வெளிப்படுத்துவதுண்டு. இலக்கணத்திலும், 'மொழிவாம என்றல், கூறிற்றென்றல' (தொல். 1610) எனும் உத்திகள் காணப்படலாம் என்பர். பிரபந்தத் திரட்டின் ஆசிரியரும், இத்தகு மொழிகளில் தன்னை நூலுள் வெளிப் படுத்துகின்றார். முன்னிலை மொழியோடு இணைந்தும், அவை மறைந்தும் இது அமைகின்றது.

மிஞ்சி நான் இன்னதிட்டம் ஏனைத் தமிழுக்கும்
அஞ்சாமற் சொல்வே னறி (85)
அணி செப்புதும் நீ காணே (244)
கொண்ட லேழின் இயல்பினைக் கூறுவாம் (290)
நன்னூற் படியே தொண்ணூற்
றாறான குலமும் நவிலுவாம் (360)
வேறு தத்துவந் தன்னைத்
தேற வுரைக்கப் புகுந்தேமே (377)
சிருறு திறன் கூறாமே (398)
வழங்குநெறி பலநெறியு மாற்றுது நீ கேளாய் (403)

## முன் நூலும் ஆசிரியரும்

சில நூல்கள், ஆசிரியர் பற்றிய குறிப்புகள், பின்வந்த நூல்களில் காணப்படுவது இயல்பு. முதல்நூலில் ஒருவேளை இத்தன்மை அமையாது எனக் கருதினும், வழிநூல், சார்பு நூல்களில் அமைதல் இயல்பே.

பிரபந்தத திரட்டு ஆசிரியர், தமிழ்மொழி வடமொழி நூல், ஆசிரியர் பற்றிய சில எண்ணங்களை அங்கங்கு அமைக்கின்றார்.

ஒன்பதாவது இயலில், நூற் பட்டியல் ஒன்றனைத் தருகின்றார்.

...மா நிகண்டு
தேக்கு பொருள் வள்ளுவர் நாலடி
சிந்தாமணி நூற்றிரட் டிவையே
முதல விலககியல்... (393)

எதற்கும் அஞ்சாத கவிஞனைப் பற்றிப் பேசுமிடத்துக் கீரனைக் குறிப்பிடுகின்றது (408). கோவை பற்றிப் பேசும்போது,

கலித்துறையி லன்றியும் கோவை வருதலுக்குச் சான்றாக, கீரன் ஆசிரியத்தில் செய்தார் எனவும, பூதர் விருத்தத்தில் செய்தார் எனவும் குறிசகின்றது (497) யமகண்டம் பாடிய கவிகாளை மேகமும் (441), 'பொதியமுனி தொல்காப்பியருடனே' (412) எனத் தமிழ் இலக்கணிகளும் குறிக்கப்படுகின்றனர்.

தொல்காப்பியத்தின், பனம்பாரனார் சிறப்புப் பாயிரத்தில், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்' எனச் சிறப்பாகச் சுட்டப்பட்ட ஐந்திரத்தினைப் பிரபந்தத் திரட்டும் சிலமுறை எடுத்துக் காட்டுகின்றது. நூலாசிரியரின் வடமொழி விருப்பும், கல்வியும் இங்கும் வெளிப்படுகின்றது.

*மினுசுதலினா னவைவ யயிந்திர முரைத்தனன்*
*வயிரப்படை விறற் குமரனே (197)*

*நுங்குசெம்மை பொன்மைவெண்மை செம்மையென*
*வயிந்திரியர் நுவன்றா ரன்றே (280)*

*இவை யெல்லாம் வியாகரணப் படியு*
*மன்றி யயிந்திரப் படியுந தமிழினுக்கு... (480)*

பதினெண் புராணங்களின் செய்தியினை அடிப்படையாக்கிப் போலும் இவர் இறைவர்க்கு விசேடவணி உரைத்தமையால், கூறாதனவற்றை அங்குக் காணும்படிக் கூறுமிடத்து அவை பற்றிய சுட்டு அமைகின்றது.

உன்னிவிடா தீரொன்பான் புராணத்து முற்றறிநீ (279) இவ்வாறு, வெளிப்படையாகவும் தெளிவாகவும் அன்றியும் சில முன் நூல்கள் சுட்டப்படுகின்றன. தொன்னூல் (431), கீர்த்தி விசேடம் (512), தொகுத்தறி நூலானே (263), முன்னோர் நூல் (285), எனப் பகரு நூலே (286), அவிர்கதிர் மண்டல முதலா மாரகங் காயங்களவை கூறினார் கூற்று (296), நன்னூல் (360), முன்னோராற் குறித்த நூல் (372) மதன நூல் (213) மன்னர் நூலே (522), ஆருடம் (278), மூவாறு காவியம் (213), காவியம் (490) எனவும் பல குறிப்புகள் அமைகின்றன.

## முன்னோர் மொழியும் கருத்தும்

இலக்கண நூல்கள், முன் இலக்கணங்களின் தொடர்களையும், நூற்பாக்களையும் எடுத்தாள்வ துண்டு. இலக்கியங்கள், முன்னோர் மொழியும் கருத்தும் ஏற்றுப் பயன்படுத்துவ துண்டு.

பிரபந்தத் திரட்டின் சில அடிகள், முன்நூல்களை நினைப்பூட்டு கின்றன.

> தந்தி மெய்ககவளச் சேரறுகல் போற்
> செலவினை யெண்ணாரே (524)

எனும் பகுதி, புறநானூற்றையும் (101)

> படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு முள்ளார் (523)

என்பது, திருக்குறளையும் (25)

> குலவித்தை கல்லாமல் பாதியன்றோ (435)

என்பது, பழமொழி நானூற்றையும் (6)

> வறுமையினி லுட்பினுக்குங் கூழினுக்கு மாற்றுவார் (411)

என்பது, ஔவையார் தனிப்பாட்டையும், கூழுண்டு கோவை பாடியதையும் நினைவூட்டுகின்றன.

சில பழமொழிகளைக் கருத்து விளக்கத்திற்காக எடுத்தாளும் பாங்கும் இந்நூலின்கண் அமைகின்றது.

> கண்டது கற்றுற்றானேற் பண்டித
> னாவா னெனவும் புகல்வார் (430)

> சாடுவித்து வானை யடித்தவனு மில்லைப் பெற்ற
> தாயைச் சேர்ந்தவனு மில்லை யெனு முலக வழக்கே (439)

> பகாந்த வில்லுந் சொல்லுமே பலகால மென்பார் (439)

> எண்ணும் எழுத்துமே கண்ணெனவே போற்றி (439)

> அணியறையி லாடியன்றோ அம்பலத்தில் புகுவார் (441)

## மேற்கோள்

கதையையோ, நிகழ்ச்சியையோ மேற்கோளாகச் சுட்டிச் செல்லும் பாங்கு பொதுவாக இலக்கண நூல்களில் அமைவதில்லை.

சான்றிலக்கியம் அமைக்கும் பாங்கு, யாப்பில் அருகி அமைகின்றது. யாப்பருங்கலக்காரிகை இவ்வகையில் முதல நூல் எனலாம். அதுவும் மயேச்சுரர் யாப்பினைப் பின்பற்றி அவ்வாறு அமைநதது என்பர் உரையாசிரியர் குணசாகரர். யாப்புக்குத் தனி சான்றிலக்கியம் உருவானதைப் பாப்பாவினம் சிதம்பரச் செய்யுட்கோவை, பல்சந்தப் பரிமளம் என்பனவும்

காட்டுகின்றன. ஆயின மேற்கோள் காட்டும் பாங்கு, இலககியமும், அநநூலும் கொள்வதே இயல்பு. வள்ளுவர் 'இந்திரனே சாலும் கரி' (25) என ஐம்புலன் அடக்கியவர் ஆற்றலைப் புலப்படுத்தக் கதைக் குறிப்புத் தருதல் இங்கு நினைக்கத்தக்கது.

பாட்டியல் மரபிலும், முன்னூல்களில் இல்லாத புதுமை இணைவாகப் பிரபந்தத் திரட்டியல் இத்தகு மேற்கோள் ஆட்சியைத் தருகின்றது. தூதுப் பொருட்கள் பத்து என்பதனை நிறுவ, அப்பத்துப் பொருட்களையும் தூது விட்ட புராண மாந்தர் நிலையைக் குறிக்கின்றது (491-492). பெரியோரின் சொல்வன்மையைப புலப்படுத்த, இந்திரன் ஆயிரம் கண் பெற்றமையும், நகுடன் சர்ப்பமானமையும் (410) குறிக்கப் படுகின்றன. கீரன் சீற்றமுற்றமையும் (408), இறைவன் ஆவடு துறையில் பொன்னீநதமையும் (438), (குமணன்) மாயத் தலையீநதமையும (409) இன்னும் பல கதைகளும் இவ்வாறு எடுத்தாளப்படுகின்றன. கருத்து விளக்கத்திற்காக அமையும இச்சான்றுநிலை பிரபநதத திரட்டிற்குப் பல பகுதியிலும் இலக்கியச் சுவை சேர்ககின்றது.

## மரபும் புதுமையும்

நூற்பெயா நிலையிலேயே பிரபந்தத்திரட்டுப் புதுமை காட்டுகின்றது. இலக்கியத் தொகுப்புக்கள் பெறும் திரட்டு எனும் பெயரும் (அகத்தியர் தேவாரத்திரட்டு), பிரபந்தத் திரட்டு எனும் பெயரும் (குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு) இங்கு இலக்கண நூலுக்கு ஆகியுள்ளன. பாட்டியல் நூல்கள சில, பெயர் பெறும் மரபுக்கேற்ப இது பிரபந்தம் எனும் பெயராட்சி கொள்கின்றது(பிரபந்த மரபியல், பிரபந்த தீபம்).

நூற்பெயரில் மட்டுமன்றி, இயல் தலைப்புகளிலும் இதன் கண் புதுமை உண்டு. பிரபந்தம் பற்றிப் பேசும் இதன் முதல் இயலிலேயே இந்நிலை அமைந்து விடுகின்றது. முன் நூல்களில், பிரபந்த இலககணம் கூறும் பகுதிகள், இனவியல் (பன்னிரு பாட்டியல்), செயயுளியல் (வெண்பாப் பாட்டியல்), செய்யுண் மொழி யியல் (நவநீதப் பாட்டியல்), மரபியல் (சிதமபரப் பாட்டியல்), செய்யுண் மரபியல் (தொன்னூல் விளக்கம்), பிரபந்த மரபு (சுவாமிநாதம்) எனப் பெயர் பெற, பிரபந்தத் திரட்டு, 'திரட்

டியல்' எனப் பெயர் அமைக்கின்றது. அகப்பொருளிலக்கணங்கள், பொருளின் பகுப்பினைச் சுட்டி யமைக்கும் 'கருப்பொருள்', என்பதனை இந்நூல் பாடலின் நுவல்பொருள், அடிப்படை என்ற தற்கால ஆட்சியை ஒப்பக் கையாளுவதனைக் கருப்பொருளியல் என்ற மூன்றாம் இயல்பெயர் காட்டுகின்றது. ஐந்துமுதல் எட்டு வரையுள்ள இயல்கள் வியப்புசார்வியல் அல்லது சார்வோரியல் எனப் பெயர் பெறும் நிலை பிற எந்த இலககண நூலிலும் அமைந்ததாகத தெரியவில்லை. உவமாருடம் (6), விசேடவணி (6) முதலிய பெயர்நிலைகளும் இத்தகையனவே.

பெயர்நிலை போன்றே பொருள் அடிப்படையிலும் இந்நூல் பல புதுமைகளுக்கு இடமளிககின்றது. முதலியலான திரட்டியலிலேயே புதுமை புகுந்துவிடுகின்றது. பிரபந்த மரபியல், சதுரகராதி, பொருட்டொகை நிகண்டு முதலியன அமைத்த மரபைப் பின்பற்றிப் பிரபந்தம் தொண்ணூற்றாறு என மொழிந்த போதும், அங்கமையும் பட்டியல் இங்கு இடம் பெற வில்லை. முன் நூல்கள் பலவும் கூறிய பல வகைகள் இங்கு விடப்பட்டன. மெய்க்கீர்த்தி, நாமமாலை, நாழிகைக்கவி, கைக்கிளை, அட்டமங்கலம், ஒருபா ஒருபது, இருபா இருபது, மங்கல வெள்ளை, செருக்கள வஞ்சி, தானைமாலை, வஞ்சிமாலை, அனுராகமாலை, உலாமடல், சதகம், பதிகம், யானைத்தொழில், வருக்கமாலை ... போன்றன. ஆயின், அவை குறிப்பிடாத ஐம்பதுக்கும் மேற்பட்ட புது வகைகள் இங்கு இணைக்கப்படுகின்றன: துனிவிசித்திரம், லட்சுமி விலாசம், கூடன்மாலை, குலோதயமாலை, ஆடாமணி, பருவமாலை, தடாக சிங்காரம், சடானனம், ராசாங்க மாலை, தாமரை நோன்பு, வாடாத மாலை, கனகாபிடேகம், முரண் வஞ்சி, மாதிரக் சட்டு, மதன விசயம், காமரசமாலை, சகத்திராங்கி, சிந்து மோகினி, காதலுத்தியாபனம், மதன சிங்காரம், கலியாண சுந்தரம், தரும விசேடம், தள சிங்காரம், விசய வித்தாரம், மானதவம்... போன்றன.

பிரபந்தத் திரட்டுக் கூறும் புது வகைகளை ஒரு சில பகுப்புகளுள் அமைத்துக் காணலாம்; (1) பெயரால மாறுபட்டு, முன்பாட்டியல்களால் வகுக்கப்பட்ட வகைகளுடன் சார்பு காட்டுவன. குறியறிசிந்து, பண்ணை விசித்திரம், சின்னமாலை போன்றன இத்தகையன. இவை முறையே குறவஞ்சி, பள்ளு, புகழ்ச்சி மாலை என்பனவற்றுடன் தொடர்பு காட்டுகின்றன

(2) முன் பாட்டியல்களால் பேசப்படாதபோதும், கிடைக்கும் இலக்கிய வகையுடன் தொடர்பு காட்டுவன. நொண்டி, சடானனம், போன்றன இத்தகையன. பதினெட்டுப் பத்தொன் பதாம நூற்றாண்டு பல நொண்டி நாடகங்களை மக்கள் இலக் கியமாகத் தந்துள்ளன (சீதக்காதி நொண்டி நாடகம்). சடா னனம் என்ற பெயர் நிலை இல்லாத போதும், ஆறு பாடலால் அமைவதால் சட்கம், அறுமணி போன்ற இலக்கியங்கள் ஒப்புடை யனவாகக் கருதத் தக்கன. (3) முன்பாட்டியல்களால் கூறப் படாதனவும் இலக்கியம் கிடைக்காதனவாகவும் இருந்த போதும், பொருண்மை நிலையால் முன் இலக்கியங்களுடன் தொடர்பும் தோய்வும் கொள்ளுவன. பெரும்பான்மையான புதுவகைகள் இங்கு அடங்குகின்றன தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பிற்கால உலா, தூது, கோவை, பிள்ளைத்தமிழ் போன்றவற்றிற்கு விதையாயின என்பது போன்ற நிலை இங்கும் உண்டு. துனி விசித்திரம் மருத ஊடற்சாயலும், மாதிரக்கட்டு, குறிஞ்சியின் வெறியாட்டுத தோயவும் காட்டுகின்றன. குலோதய மாலை, ராசாங்கமாலை, புறநாட்டுச் செய்கை போன்றன புறப் பொருட் சார்பு காட்டுகின்றன. திருப்பெயர்பொறி, சிலம்பில் சேரன செங்குட்டுவன் செயலை ஒத்து அமைகின்றது. சுயம் வரம், பட்டாபிடேகம் போன்றன காப்பியக் கூறு தனித்து வளர்ந்தமைக்குச் சான்றாகின்றன. பருவமாலை உலாவின் மகளிர்ப் பருவத்துடனும், விடயசந்திரோதயம் குறவஞ்சி போன்றவற்றின் சந்திரோபாலம்பனத்துடனும் தொடர்பு கருதும் நிலையில் அமைகின்றன. (4) வடமொழித் தொடர் புடன் அமையும் வகைகள். பெயர் நிலையில் மட்டுமன்றிப் பொருள் நிலையிலும் இவை தமிழ்த்தொடர்பு குன்றி யமைவ தாகத் தெரிகின்றது. தெய்வக்கையுறை, வச்சிராங்கி, கான வேட்டம், வேடர் வினோதம், கன்னி மயக்கம், வசன சம்பிர தாயம், கதைமொழிமாற்று, கற்பனை விலாசம், நதிவிசேடம் வதன சந்திரோதயம், தேவாங்கவரையுள் தொடங்கிய சுமார் இருபத்தைந்து வகைகள் இங்கு அடங்குகின்றன. இங்கடங்கும் வகைகள் சில தெய்வச் சார்புப் பொருண்மையும் (வச்சிராங்கி), மன்னனின் புறவாழ்வும் (விசய வித்தாரம்), காதல் செய்தியும் (மதன சிங்காரம்) காட்டி அமைகின்றன.

இத்தகு பல இலக்கிய வகைகளை இந்நூல் திரட்டிக் கூறிய போதும், அவற்றில் பலவற்றிற்குப் போதிய விளக்கம் இன்மை

யாலும், இப் பெயர்நிலை வகைகளுக்கு இலக்கியம் கிடைக் காமையாலும், இவற்றில் பலவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வதில் சிக்கல் அமைகின்றது.

திரட்டியலில் கூறப்படாத சில புது இலக்கிய வகைகள் ஒழிபி யலில் அமைந்து, பிரபந்தப் பட்டியலை பெரிதாக்குகின்றன. இவைகளும், முன்னூல்கள் குறிப்பிடாத புது வகையாம். திருமுக விலாசம், கனக விசையம், சமுக விலாசம், அட்டவித சமரம், மாதர் மயக்கம், காதல், இரவிடையீடு, ஆன்மநிலை, இந்திர சாலம், பலதொகை, சலோகம்... போன்றன. இவ்வாறு புதுப் பிரபந்தம் படைப்பதுடன், சில மரபு வகைகள் பற்றிய எண்ணத் திலும் பிரபந்தத் திரட்டுக் கருத்து மாறுபாடு கொள்ளுகின்றது.

சான்றாகத் 'தூது' எனும் பிரபந்தத்தைக் காட்டலாம். அஃறிணையையும் உயர்திணையையும் ஆடவனோ பெண்ணோ செய்திகூறி அனுப்புதல் தூது என்பதே முன்நூல்கள் கருத்து. பிரபந்தத் திரட்டு, தூதினைப் பத்துவகை யாக்குகின்றது. தூது செல்லும் பொருள் காரணமாக இப்பன்மை அமைகின்றது இப் பத்துத் தவிரப் பிற பொருட்களைத் தூதனுப்புதல் கூடாது எனும் கருத்தும் இங்கு நிலவுகின்றது.

பிரபந்தத் திரட்டு, சில பிரபந்தங்களுக்கு விலை கூறும் பாங் கினைப் புறநடையியலில் தருவது, முன்னூலில் இல்லாத புதுமை யாம். சாதகத்திற்கு விலை நூறுபொன் எனல் மரபு எனக் கூறி, அவ்வடிப் படையில் தூது, உலா, கலம்பசம், மஞ்சரி, மாதி ரக்சட்டு, கோவை... போன்று இன்னும் பலவற்றிற்கும் பொன் விலை சுட்டுகின்றது (85-88). இங்கு இலக்கியவகைக்கு மதிப்புக் கூறப்பட, ஒழிபியல் பாவகைகளுக்கு இத்தகு விலை நவில் கின்றது.

> 'வெள்ளை சொல்லு நாலெட்டாம், அகவலுக்குப் பாதி
> விளங்கு கலிக்கு அதிற் பாதி, பாதிவஞ்சிக்கு ஆம
> பொன்னுள்ள விலை ...' (431)

எதனையும் புலமையாலன்றிப் பொன்னால் மதிப்பிடும் ஒரு காலப் பகுதிபோலும் இது.

பொருத்தவியல், பெரும்பாலும் மரபுச் செய்திகளையே தரு கின்றது. பெரும்பான்மையான பாட்டியல்கள் முதலில் பொருத்

தம் பற்றிய செய்தியைச் கூறியபின் பிரபந்த வகைகளைக் கூற, இந்நூல் அம்முறையை மாற்றி, முதல்மூன்றியல்களில் பிரபந்தம் தொடர்பான எண்ணங்களைத் தந்து, பிறபு நான்சாமியில் பத்துப் பொருத்தங்களைக் கூறுகின்றது.

பொருத்தம் பத்து எனும் மரபுக் கருத்துப் பிரபந்தத் திரட்டில் பின்பற்றப்பட்ட போதும், சில பொருத்தவகை பற்றிய அடிப்படை எண்ணங்களில் மாறுபாடு அமைகின்றது. எழுத்துகளின் வருணப் பாகுபாட்டில் பன்னீருயிரும் முதல் மெய்கள் ஆறும் அந்தணர் என்பது மரபு எண்ணமாக விருக்க, பிரபந்தத் திரட்டு, முதல் நான்கு குறில் உயிர்களும் நெடில் உயிர்களும் அந்தணர் எனவும், முதல் நான்கு மெய்யும் அரசர் எனவும் கூறி மாறுபடுகின்றது. உண்டிப் பொருத்தத்தின் நஞ்செழுத்துப் பற்றிய செய்தியிலும் கருத்து வேறுபாடு அமைகின்றது. முன் நூல்களால் நஞ்செனக் கொள்ளப்பட்ட 'ஆ' காரம் இங்கு அமுதாகக் கொளளப்படுகின்றது

பாட்டியல் செய்திகள் கூறும் நூல்கள் உவமை பற்றிய எண்ணங்களுக்கு இடமளிப்பது முன் நூல்களில் மிக அருகியே உண்டு. பனனிருபாட்டியல் பிள்ளைத் தமிழை விளககிய பின், இரு பாடல்களில் ஆண்பாற் பருவததிற்கும், பெண்பாற் பருவத்திற்கும் ஏற்ற உவமைகள் சிலவற்றை மொழிகின்றது (114, 115). நவநீதப் பாட்டியலின் பொது மொழியியல், இவ்வாறு பிரபந்தத் தொடர்பு இன்றி உவமைப்பட்டியல் ஒன்று அமைக்கின்றது (85, 86)

அணியிலக்கணங்களே பெரும்பாலும் உவமைக்கு இடமளிக்கின்றன. ஆயின் உவமைப்பட்டியல் தருவது, அறுவகை இலக்கண அணிப்பகுதியிலேயே உண்டு (பக். 95-99). தனி நூலாக இவ் உவமைச் செய்திகள் உருவாகியமையை, உவமான சங்கிரகம், இரததினச் சுருக்கம் போன்ற நூல்கள் காட்டுகின்றன.

பிரபந்த இலக்கணம் கூறும் நூலில், உவமைபற்றிய முழு இயல் ஒன்று அமைவது புதுமை. பிரபந்தம் புனைவோருக்கு மரபு உணர்த்தல் வேண்டி இது அமைந்திருக்கலாம். பாதாதி கேசம, கேசாதி பாதம், அங்கமாலை போன்ற வகைகளுக்குப் பெணணின் வருணனை அமைக்க உதவும் இவை வாய்ப்பாக அமைவதால், இங்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம். ஆடவர்க்குரிய

உவமையும் ஆணுடைமை பற்றிய செய்திகளும் இடம்பெற்ற போதும், பெண்ணுக்கும், தொடர்புடைய செய்திகட்குமே இட மிகுதி அமைகின்றது. இடைக்கால இலக்கியங்கள், பெண்ணின் உடலழகுக்கும், காதற் செயலுக்கும் மிகுந்த இடம் கொடுத்தது இதற்குக் காரணமாகலாம். தொல்காப்பியம் தந்த மெய்ப்பாட்டியல் செய்திகளில, காதல் தொடர்பான உணர்வு வெளிப்பாடுகள் இங்கு மிகுதியாக ஆளப்பட்டமை சுட்டத்தக்கது.

மலர்கள், அணிகலன்கள், மெல்லும் திரவியம், பஞ்ச சயனம் போன்று இப்பகுதியில் அமையும செய்திகள் நிகண்டுச் சாயல் கொள்ளுகின்றன. ஆறாவதியலான விசேடவணி வியப்பு சார் வோரியலும் மிகுதியான நிகண்டுத் தொடர்பு காட்டுகின்றது.

சொல்தொகுதிகளாக அமையும் நிகண்டுகளை இலக்கணத்தின் ஒரு கூறாகக் கருதலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் திவாகரத்துக்கு முன் தனி நிகண்டு நூல் கிடைக்காவிடினும், தொல்காப்பியத்தின் உரியியல், மரபியல் போன்ற பகுதிகளிலேயே இவற்றின் விதை அமைவதாகக் கருதுவர். யாப்பிலக்கணத்தில் நிகண்டின் செல்வாக்கு அமைந்ததை, முதல்தனி யாப்பு நூலான யாப்பருங்கலம் முதலே காணமுடிகின்றது. பின்பு, யாப்புப் பகுதிகளிலன்றியும், பாட்டியல் செய்தி கூறும் நூல்களில், செய்யுள் பற்றிய சில நிகண்டுச் செய்திகள் இடம் பெற்று வந்தன. அதன் தொடர்ச்சி மட்டுமன்றி, பெருக்கத்தையும் பிரபந்தத் திரட்டில் காண்கின்றோம்.

நிகண்டுகளின் தெய்வப் பெயர்த் தொகுதி (வானவர் வகை) தந்த செய்திகள், பெருக்கத்துடனும் சிறந்த வகைப்பாட்டுடனும் இங்கு அமைகின்றன. இத்தகு செய்திகள் ஓரளவு சுருக்கமாக, தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணத்திலேயே அமைகின்றது. தெய்வங்கள் தவிர, தெய்வச் சார்புடைய அட்டநாகம், நிதிகள், திசையானை, ஏழுகொண்டல் போன்றன பற்றிய எண்ணங்களும் இப்பகுதியில அமைகின்றன. அத்துடன, இறைவர் சிலருக்குத் தோற்றமும் கூறப்படுவது புராணச் சார்பு கொள்கின்றது. இப்பகுதியைப் பல புராணச் செய்திகளின் கருவூலம் எனலாம். இறைவர் தொடர்பான புராண எண்ணங்கள் இழக்கப்படலாகாது, பிழைபடலாகாது எனும் நோக்கம் ஆசிரியருக்கு இருந்திருக்கலாம். பிள்ளைத்தமிழின் காப்பு,

மஞ்சரி போன்றவற்றிற்கு இறைவர்களைப் பொருளாகக் கொள்வதன் தேவையும இப்பகுதிகள் ஒரு பிரபந்த இலக்கணம் கூறும் நூலில் இடம்பெறக் காரணமாகலாம்.

இறைவர் போன்று, நால்வகை சாதியினரான மககட்குரிய உடமை இயல்புகளைக் கூறும் ஏழாம் இயல், நிகண்டின் மக்கட் பெயர்த தொகுதி அல்லது ஆடவர் வகையின் தொடர்ச்சி காட்டுவதுடன், தொல்காப்பிய மரபியலின் எண்ணத் தொடர்ச்சியும் கொள்ளுகின்றது. பிரபந்தத் தலைவராக இவர் அமைதல் பற்றி இத்தகு செய்திகள் இடம்பெறுவது இயைபுடைத்து எனக் கருதலாம். அரசரைப் பற்றிய செய்தியின் கீழ், நிகணடைப் பின்பற்றிக் குருகுலவேந்தர், முத்தமிழ் வேந்தர் தொடர்பான எண்ணங்கள் முறையே சுருங்கியும் விரிந்தும் அமைகின்றன.

நாற்சாதியினர் அன்றியும், பலவகைக் குலத்தினர் பற்றி எட்டாமியலில் பிரபந்தத் திரட்டுத தருஞ் செய்திகளும் ஓரள வேனும் நிகண்டுகள் சாதிவிளக்கம போன்ற நூல்களில் இடம் பெறறனவே. பலவகை மண உறவு காரணமாக ஏற்பட்ட குலப் பெருக்கத்தை நினைந்து, எண்மணம், உறவுப் பெயர் உடலுறுப் புகள் பற்றிய தொடர்புடைய எண்ணங்களையும் இங்குப் பிரபந்தத்திரட்டு அமைக்கின்றது. இச் செய்திகளை நிகண்டு வேறுபட்ட கண்ணோட்டத்தில் தருகின்றது என்பதே மாறுபாடு. இப்பகுதியில் அமையும், அரசனுக்குரிய யானை, பரி, தேர் பற்றிய செய்திகள், நிகண்டின் அநுபோக வகையில் சுருக்கமாகச் சுட்டப்படுகின்றது.

அகப் பொருள் இலக்கணங்கள் தரும் முதல், கரு, உரி பற்றிய எண்ணங்கள் பொதுவாகப் பாட்டியலில் அமைதலில்லை. ஆயின் பிரபந்தத்திரட்டின் எட்டாம் இயல் இச்செய்திகளை விரிவாகத் தருகின்றது. முதற்பொருட்கூறான நிலம்,குறிஞ்சிமுதலிய ஐந்து என்னும் பண்டை எண்ணத்தை ஏற்றுக் கொண்டு, நில வகை முப்பத்தைந்து என இந்நூல் விரிப்பது புதுமை. தலை, இடை, கடை என ஒவ்வொரு நிலத்திலும் முப்பகுப்புக் கொள்ள லால் பதினைந்தும், ஐந்நிலமும் தனித்தனியே பிற நான்குடனும் மயங்கும் சார்பு நிலையால் இருபதுமாகப் பகுப்புப் பெருக்கம் பொருந்துகின்றது.

கரு பற்றிய எண்ணத்திலும் பிரபந்தத் திரட்டுச் சிறிது மாறுபாடு காட்டுகின்றது, தொல்காப்பியம், தெய்வம் முதலிய

எட்டினைக் கூற, நம்பியகப் பொருள் அதனைப் பதினான்காக விரித்து, நிலத்திற்கேற்பப் பட்டியல்களும் அமைக்கின்றது. பிரபந்தத் திரட்டு 'இலச்சினை'யை இணைத்துக் கரு பதினைந்து எனக் கூறுவதுடன் மா, மரம், புள் போன்றவற்றில் பெருக்கமும் காட்டுகின்றது காண்டாமிருகம், கோதுமை போன்ற கருப் பொருட்பட்டியலில் இணைவதும் புதுமையாம்.

நிகண்டின் இயல்வகையும் (பிங்கலம்), பாட்டியலின் ஒழிபுச் செய்திகூறும் பொதுவியல் பகுதிகளும் தரும் கவிஞன், கவிதை தொடர்பான எண்ணங்களின் விரிந்த ஆட்சி, பிரபந்தத்திரட்டின் ஒன்பதாம் இயலில் அமைகின்றது. இறைவருக்கும் மன்னர் போன்றோர்க்கும் அணிவகை முன்னியலில் கூறப்பட்டமைக் கேற்பப் புலவர்க்குரியன இங்குக் கூறப்படுகின்றன. நால்வகைப் புலவரையும், நால்வகைக் கவிகளையும் முன்நூல்கள் தந்த போதும், அவரைத் தம்முள தொடர்புபடுத்தும் நிலை இங்கமை தல் புதுமை.

அன்னையைவயிற் கவிக்காசு மதுரங் கமகனுக்கே
அறிவாதி சித்திரம் வாக்கிக்கு வித்தாரப்பா (392)

பிரபந்தத்திரட்டின் இவ் ஒழிபியல் சில இலக்கணச் செய்தி களுக்கும் இடமளிக்கின்றது இது முழுமையாக அன்றியும் ஓரளவு பாட்டியல் மரபினைப் பின்பற்றியதேயாகும். வெண்பாப்பாட் டியல், பொதுச் செய்திகள் பற்றிய பகுதியில் இருவகைப் பாயிரங்களைச் சுருக்கமாகச் சுட்டி அமைகின்றது. இச் சிறப்புப் பாயிரமும பொதுப்பாயிரமும் பற்றி நன்னூல் தரும் விரிவுகளை உட்கொண்டு விளக்கமாக இந்நூல் அமைகின்றது. நூல்பற்றிய எண்ணங்கள் அமையுமிடத்துப் பாயிரச் செய்தியும் அமைதலின் தேவை பற்றி இது இணைக்கப்பட்டிருக்கலாம்.

எழுத்து வரிவடிவம் பற்றிப் பிரபந்ததிரட்டுப் பேசுவதும் புதுமையாம் பொதுவாக எழுத்துப் பற்றிய எண்ணங்கள் எழுத்திலக்கணங்களிலேயே முதலிடம் பெறுகின்றன. யாப்பு நூல்கள் அசைபற்றிப் பேசும்போதும், பாட்டியல்கள் பல்வகைப் பொருத்தம் பற்றிக் கூறும்போதும் எழுத்தினைக் குறித்தாலும் வரிவடிவம் குறித்துப் பேசும் வாய்ப்பு அமைவதில்லை.

தேவபாடையின் எழுத்து வலஞ்சுழிக்கும் எனவும் அசுர பாடையின் எழுத்து இடம்சுழிக்கும் எனவும் தேவபாடைக்கு

மறுதலையாகக் கும்பமுனி செய்த பூந்தமிழின் எழுத்தும் வலம் சுழிக்கும் எனவும் கூறுகின்றது பிரபந்தத்திரட்டு தமிழ்மொழி வரலாற்றைப் பொறுத்தவரை, இத்தகைய கண்ணோட்டம் புதுமையாம். ட, ப, ம, ய, ழ எனும் ஐந்து தமிழெழுத்து இடம் சுழித்து (anti clock-wise) மாறுபடுவதையும் இந்நூல் குறிக்கின்றது.

எழுத்துப் போன்றே, சொல்நிலைபற்றியும் சில சுவையான கருத்துகளைத் தருகின்றது. திசைச் சொல்லும் திரிசொல்லும் பற்றிய எண்ணச் சார்பாக இதனைக் கொள்ளலாம். தேவ பாடையில் தோழியை முல்லை என்பாரெனவும் அசுரபாடையில் மல்லிகை என்பாரெனவும், அவ்வாறே தேவமாதர் கணவனைக் கரவீரம் என்பாரெனவும் அசுரமாதர் சவிந்து என்பாரெனவும் கூறுவதனை ஒத்த செய்திகள் வடமொழி இலக்கியச் சார்பு பற்றி ஏற்பட்டிருக்கலாம். நட என்பதற்குச் 'சற்ப' எனல் போன்றன, வடமொழி மூர்த்திலிருந்து தமிழில் வழங்கும் புராணச் செய்திகள் போன்றவற்றை முற்றிலும் புரிந்துகொள்ள உதவும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கலாம்.

பெரும்பாலும் இலக்கண நூல்களே குறிக்கும் செந்தமிழ் நாடு பாண்டிநாடு, கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு எனும் எண்ணங்களும் இங்கமைந்து, பிரபந்த நூலமைப்புக்கு மாறுபட்டுப் புதுமை சேர்க்கின்றன.

பிரபந்தம் பற்றிய எண்ணங்கள், சாதகம் முதலாக பிரபந்த வகை விளக்கத்தில் தொடங்கி, கவிதைக் கான பரிசைப் புலவன், புரவலனான கொடையாளியிடம் பெறுவதில் நிறைவுறுவது முழுமைகாட்டுகின்றது. பிரபந்தத் திரட்டும் பிரபந்தம்பற்றித் தொடங்கும் கொடையியலில் முடிகின்றது. கொடைவள்ளல் இருபத்தொருவகை நிகண்டு சுட்டியபோதும் பிரபந்தத்திரட்டில் விரிவும் செயல்விளக்கமும் அமைகின்றன. பரத கண்டத்தின் ஒன்பது கூறுகள், அவற்றுளொன்றான குமரிக் கண்டத்தின் ஐம்பத்தாறு தேசங்கள், அதன் மூவகை வள்ளல் என இது படிப்படியே செல்கின்றது. இவ்விருபத்தொருவர் ஒழியவும் பிறர் உள்ளனர் எனச் சில சான்று காட்டிப், பேரரசராக அமையும் இக் கொடை வள்ளலின் அரசத் தன்மையும் இப்பகுதி தருகின்றது. இவை புதுமைச் செய்திகளாம்.

'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல' எனும் எண்ணத்திற்கேற்பப் பிரபந்ததிரட்டுப் பல புதுமைகட்கு வழி விடுகின்றது. இப்புதுமை, பல புதுப் பிரபந்தங்களைப் படைத் தளிப்பதால் மட்டுமின்றி, பிற பல துறைச் செய்திகளை இணைப்பதாலும் ஏற்படுகின்றது.

## பதிப்பு

மூலம் மட்டும் கிடைத்த ஒரே ஏடு இப்பதிப்புக்கு அடிப் படையாக அமைகின்றது. நூலைப் புரிந்துகொளவதற்கு வாய்ப்பாகப் பாடல்களை உரைநடைப்பகுதியும், பிற நூலகளி லிருந்து இயன்றவிடங்களில் ஒத்த கருத்துகள் அமைத்தும, தரப் படுகின்றது.

பொதுவாக ஏடுகளில் அமையும் ழ-ள, ற-ர மயககங்கள் இந் நூலிலும் உண்டு. ஒவ்வொரிடங்களில் அவை திருத்தப்பட் டுள்ளன. தேவைக்கும், பொருள் தெளிவுக்கும ஏறப, எழுத்து விடல, சேர்த்தல், மாற்றல் அருகிச் செய்யப்பட்டுளளன. எழுத் திணைவு பகர அடைப்புக்குறியுள் தந்து வேறுபடுத்தப்பட் டுள்ளது. பதிப்பு முற்றுங்காறும் மூலஏட்டை உடன்வைத்துக் கொள்ளும் வாய்ப்பு இன்மையானும, தேவை ஏற்பட்டபோது அதனை மீண்டும் பெறும் வாய்ப்புப் பெறாமையானும் 186, 476 பாடல்களை முழுமை செய்ய இயலவில்லை. முழுத்தெளிவு பெற இயலாத சில பாடல்கள (262, 263, 265, 281, 370, 451) அக் குறிப்புடன் விடப்பட்டுள்ளன. போதிய தெளிவில்லாத இன் னும் பிற பகுதிகட்கும் நிறைவு செய்யும் நோக்கில எழும் எண்ணங்கள் வரவேற்கப்படுகின்றன.

# Introduction

The anonymous manuscript, entitled, *Pirapantat tiraṭṭu*, available in the Dr. U.V. Swaminatha Aiyar library, Thiruvanmiyur, is edited here with commentary.

The period of this work can be roughly assigned to the latter half of the eighteenth or the first part of the nineteenth century. There is no internal or other evidences to know about the name or time of the author.

This work, is a new and novel addition to the field of Tamil *Pāṭṭiyal* treatises. According to the general nature of the traditional *Pāṭṭiyal* treatises, dealing with the different library genres and angury in verse, this work also allots a few of its chapters to such discussions. But, deviating from them, this also includes many other matters, which are not generally dealt with in *Pāttiyal* treatises. Because of this, it gets the appearance of a fivefold grammatical treatise.

Subjects generally dealt with in *Eḻuttilakkaṇam* (Phonology) find a place in the ninth chapter (*oḻipiyal*) of this work. Number and nature of the Tamil alphabets and the mode of writing the Tamil scripts are discussed here. Rules regarding the two types of prefaces (*pāyiram*), viz., general and special, discussed generally in the introductory sections of works like *Naṉṉūl* also find a place here.

Similarly, some matters noted down in *Col ilakkaṇam* (morphology) of the traditional grammatical treatises also find a place in the ninth chapter. Listing of the lands where classical and dialected Tamil are spoken, is one such matter. A discussion on some sanskrit usages with corresponding Tamil meanings found here, though novel, can be connected to discussions on loan words and library usages (*ticai, tiri col*) usually found in treatises on morphology.

The eighth chapter (*Kula ulaviyappucār rōriyal*) gives room for thoughts on *porul ilakkaṇam*. Matters discussed in *Akattiṇai-yiyal* of *Tolkāppiyam*, with its later developments and new additions are found here. A due treatment of the three sections of *akapporul*, viz., mutal, karu and uri, dealing with space, time, god, animals, flora, fanna, etc., attributed to each region and the five emotional actions.

Similies and other figures of speech are generally discussed in *Aṇi ilakkaṇam* (poetics). Branching off from the tradition of discussing the different figures of speech, works like *Uvamaṉa Caṅkriakam*, list the different similies apt for each organ of the human body, to be helpful in giving a figurative description of a beautiful lady. *Pirapantat tiraṭṭu*, allots its fifth chapter (*Uvamāi ūṭaviyappuc cārviyal*) for similar content.

*Yāppilakkaṇam* (prosody) is yet another section of Tamil treatises, which later gave room for the development of *pāṭṭiya*, tradition. In the earlier treatises like *paṉṉirupāṭṭiyal* of thel tenth century, only discussions on genres and augury in verse were present. But in the following centuries, may be because of the influence of *Nikaṇṭu* which were classified collections of vocabulary, many more ideas connected to poets and poetry found place in *pāṭṭiyal* treatise we find the widened continuation of this tradition in *pirapantattiraṭṭu*. So here we find a over-lapping of the two branches of knowledge, *paṭṭiyal* and *Nikaṇṭu*.

The first three sections of *Pirapantattiraṭṭu*, (*Tiraṭṭiyal, Puranaṭai yiyal* and *Kaiupporul* iyal), deal with the discussion on ninety-six genres. But only a partial following of tradition

is found here, as more than fifty new genres are included here while some of the traditional varieties are left out. As an after thought, may be, about ten more new varieties are included in the ninth section.

Augury in verse, dealing with the different concords (*Poruttam*) which should be considered in the auspicious beginning of any literature, dealt with in the fourth section of *Pirapantat tiraṭṭu* (*Poruttaviyal*), shows a more or less complete following of *Pāṭṭiyal* tradition.

The first few stanzas of the ninth section speak of the poet, his poetic creations, different varieties of metres and such connected aspects which have precedents in *Nikaṇṭu* as well as the last sections of *Pāṭṭiyal.*

Select matters found in Nikaṇṭu are largely elaborated and widely treated in the rest of the sections of *Pirapantat tiraṭṭu* The sixth section (*Vicēṭavaṇi viyappuccārviyat*) deals with the different possessions of Gods and heavenly beings. Though we do not find a parallel to this in the earlier *Nikaṇṭu*, we come across a few references of this line there also.

Similarly, the seventh section (*Cati marapu cāivōriyal*) dealing with the attributes of each of the four castes, has precedents in *Marapiyal* of Tolkappiyam and Āṭavar vakai and Makkat peyart tokuti of *Nikṇṭu.* Further matters found in these sections of *Nikaṇṭu* and works like *cāti vilakkam* find a place in the eighth section of *Pirapantattiraṭṭu.* The ninety six different sub-castes are discussed here, along with the eight types of mariage, kin-ship terms and concepts of the body.

Just as the above, the tenth and last section of *Pirapantat-tiraṭṭu* (Kotaiyiyal), also has a marginal influence of the above stated *Nikaṇṭu* sections. The names of the twenty-one famous munificent monarchs discussed there, form the nucleus of this *iyal*, around which their different acts of benevolence and connected factors are spun.

This work made up in ten sections has, in total, 526 verses, beginning in invocation to god, and ending in describing the benevolence of patrons. Three separate leaves of the manuscript provide a list of the different genres, and discussions on *Pūmicukkiraṉ* and the sixty-four branches of knowledge. These may be considered as later additions to the manuscript.

The first three sections of the work are made up of *veṇpā* metre while the rest are in different *viruttam* metres. This is quite unique, as, usually a treatise does not have more than one metre.

# பிரபந்தத் திரட்டு

பிரபந்தங்கள் பற்றிய பல செய்திகளையும் திரட்டித் தரும் இலக்கண நூலாக இது அமைகின்றது.

பிரபநதம் என்ற, வடமொழி வழிவந்த சொல் நன்றாகக் கட்டப்பட்டது என்ற அடிப்படைப் பொருள் நிலையில், செம்மையாக யாக்கப்பட்ட இலக்கியத்தைக் குறித்து*, தமிழில் வழங்குகின்றது.

இசசொல்வழக்கு, தமிழில் மிகப் பிற்காலத்தே அமைகின்றது. ஆழ்வார் பாசுரங்கள், நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டில் நாதமுனிகள் பிரபந்தம் என்ற சொல்லை முதலில் கையாண்டு, இலக்கிய நூலின் பெயராக்கினார். பதினோராம் நூற்றாண்டில், சைவத் திருமுறைத் தொகுப்பிலும், பதினோராம் திருமுறைக்குப் பிரபந்த மாலை எனும் பெயரளித்தார் நம்பியாண்டார் நம்பி. பிற்காலத்தில் அஷ்டப்பிரபந்தம் போன்றவற்றிலும் இந்நிலை தொடர்ந்து இலக்கியங்கள் பல அடங்கிய நூல்கட்குப் பெயராயிற்று.

பதினாறாம் நூற்றாண்டில், 'பிரபந்த மரபியல்' என்பதில், இப்பெயர் முதலில் இலக்கணத்துக்குரிய தாயிற்று. இலக்கிய வகைகளைப் பற்றி மொழியும் இலக்கணநூல் எனும் பாங்கில் இப்பெயர்ப் பொருத்தம் அமைகின்றது. இதன் மரபுத் தொடர்ச்சி பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் எனப் பிறவற்றிலும்

---

**Pra - bandha** : a composition, especially any literary production p. 683.

A Sanskrit English Dictionary, Oxford, 1974.

காணப்படுகின்றது. நூற்பெயராக அன்றியும், இலக்கிய வகை பற்றியமையும் உட்பகுப்பின் பெயராகவும் இது அமைவதனைச் சுவாமிநாதத்தின் பிரபந்த மரபு தருகின்றது. இவறறின் எண்ண இயைபு 'பிரபந்தத் திரட்டு' என்பதிலும் அமைகின்றது.

திரட்டு எனும் சொல், திரள் எனபதன் அடிப்படையில் தோன்றி, பல பொருளையும் ஒன்றாகக கூட்டுதல், கலததல், குவித்தல், தொகுததல் போனற நிலைகளைக் குறிககின்றது. நூல்களைப் பொறுத்த மட்டில இசசொல் தொகைநிலையைச் சுட்டும் பெயராகப் பொருந்துகின்றது. இததிரட்டு எனும் சொல்லும் பிரபந்தம் எனபது போன்று முதலில் இலக்கிய நூலையே குறிக்க வழங்கியது.

பததாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் நீலகேசிக் காப்பியம், நீலகேசித திரட்டு எனவும் வழங்கப்பட்டது*. பதினான்காம் நூற்றாணடின் அகத்தியர் தேவாரத் திரட்டு, மூவர் தேவாரப் பாடல் (25 பதிகம்) களின் சிறுதிரட்டாக அமைகின்றது. இது அகத்தியத் திரட்டு எனவும் சுட்டப்படுகின்றது. இது பக்திப்பாடல் தொகுப்பாக அமைய, பதினைந்தாம் நூற்றாண்டின் புறத்திரட்டு, பல புறப் பொருட்பாடல்களின் (1570) தொகுப்பாக அமைகின்றது. சங்கநூல் பல, தொகை எனப் பெயர்பெற, பின்பு, திரட்டு என்ற பெயரால் அத்தகு தொகைநிலை சுட்டப்படுகினறது எனலாம். இப் பதினைந்தாம் நூற்றாண்டின் தத்துவராய சுவாமிகள் சமயசாததிரம், தேவாரம் ஆகியவற்றினின்று, குறுந்திரட்டு, பெருந்திரட்டு என்று இருநூல்கள ஆக்கினார். இவற்றை நோககத் தொகுத்தல் மட்டுமனறி, தேர்ந்து சிலவறறைச் சேர்ததளிக்கும் பாங்கில் திரட்டு (Selection), தொகையிலிருந்து (Collection) சிறிது மாறுபடுகின்றது எனலாம்.

இவ்வாறு, இலக்கியத்தைக் குறித்துவந்த பெயர், இலக்கணத்தின் பெயர்ப்பகுதியானதைப் பிரபநதத் திரட்டே காட்டுகின்றது. ஆயின், இலக்கியத் திரட்டுகள் பெருமபாலும் பல

* 'சமய திவாகரர் வகுதத இநத நீலகேசியின பழைய உரை நூலினகண் சருக்கநதோறும இறுதியில நீலகேசித திரட்டு எனறு இந்நூல குறிக்கபபடுகினறமையால் இந்நூல நீலகேசித திரட்டு என்றும் வழங்கப்பட்டதெனறுணரலாம.' முனனுரை, பக். 10.

நீலகேசி, கழகம், 1973.

நூலில் அமைந்த பாடல்களால் உருவாக, இப் பிரபந்தத் திரட்டு அவ்வாறன்றி, கருத்துத் திரட்டாக அமைகின்றது. ஏற்கெனவே வழங்கிவந்த பல இலக்கணக் கருத்துகளை ஏற்று, நூலாசிரியர் தாமே தம்நடையில் புதுநூல் இயற்றுகின்றார்.

'பிரபந்தத் திரட்டு' என்ற பெயர்நிலையால், இது குமர குருபரர் பிரபந்தத்திரட்டு, மீனாட்சி சுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டு, சிவப்பிரகாசர் பிரபநதத் திரட்டு என்பனபோல இலக் கியச் சாயல் கொள்ளினும், அவை பிரபந்த இலக்கியங்களின் திரட்டாக அமைய, இது பிரபந்த இலக்கணக் கருத்துகளின் திரட்சியாக அமைகின்றது.

## பாயிரம்

1 தொண்ணூற்றா றான தொகைசேர் பிரபந்தம்
பண்ணுறப் பாடும்வகை பாடுதற்கு - நண்ணுதுணை
தொநதிவயிற் றன்சிவன்சேய் சுப்பிரமணி யன்றுணைவ
னைந்துமுகத் தன்பொன் னடி

கடவுள் வாழ்த்தும், நுவல் பொருளும் கூறப்படும் பாயிர மாக இப்பாடல் அமைகின்றது.

கடவுள் வணக்கத்துடன் தொடங்கப்படும் நூல் செவ்வை யாக முடியும் என்பது பொதுஎண்ணம். 'வழிபடு தெய்வ வணக்கம் செய்து, மங்கல மொழி முதல் வகுத்து எடுத்துக் கொண்ட இலக்கண இலககியம் இடுக்கண் இன்றி இனிது முடியும் என்ப' எனும் யாப்பருங்கல விருத்தியுரை (பக். 14, 15) இங்கு எண்ணத் தக்கது.

கடவுள் வாழ்த்தும், நூற்பொருளும் சுட்டி யமையும் இத்தகு பகுதியைச் சிறப்புப் பாயிரம் எனவும் தற்சிறப்புப் பாயிரம் எனவும் கூறுகினறனர் உரையாசிரியர். யாப்பருங்கல விருத்தி,

வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்
சிறப்பென்னும் பாயிரமாம் (பக். 11)

எனக்கூற, பன்னிரு பாட்டியலின் உரை,

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப்பாகும் (பக். 2)

எனப் பேசுகின்றது.

இந்நூல் கடவுள் வாழ்த்தை விநாயகர் வணக்கமாக அமைக்கின்றது. விநாயகக் கடவுள் பற்றிய குறிப்பு முதலில் அப்பர் தேவாரததில், 'கணபதி யென்னும் களிறும்' (திருவதிகை வீரட்டானம்; 2.5) என்பதில் அமைய, அவரைப் பற்றிய தனி நூல்கள் மூன்று பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

கடவுள் வாழ்ததில் விநாயகரைக் கூறிய முதல்நூல் நந்திக் கலம்பகம் (8-ஆம் நூற்றாண்டு). கல்லாடமும் (11-ஆம். நூ.) இதனை யமைக்கின்றது.

கடவுள் வாழ்த்தில் பாடற்குரியோர் யார் என்பதனைத் திருக்குறளின் பரிமேலழகருரை விளக்குகின்றது. 'கவி தான் வழிபடு கடவுளையாதல், எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல்' என்பது அங்கமையும் விளக்கம். இந்நூல் தரும் விநாயக வணக்கம் இவ்விருநிலையிலும் பொருந்துகின்றது எனலாம்.

இப்பாடலில், ஆசிரியர், விநாயகனை 'ஐந்து முகத்தன்' எனக குறிப்பதால், இலங்கையிலுள்ள பஞ்சமுகவிநாயகர், தந்தையான சிவபெருமானுக்குரிய ஐம்முக நிலை இவருக்கும் ஆகுதல் என்பனவற்றைக் கொண்டு, ஏற்புடையதாகப் பொருத்திக் கொள்ளலாம்.

விநாயகன் தடைகளை நீக்கும் விக்னேசுவரன் ஆகையால் முதற்செய்யுளில் வழிபடப்படுகினறார். தொண்ணூற்றாறு பிரபந்தங்களைப் பாடும்வகை பற்றிப் பேச இவர் துணை வேண்டப்படலால், இது காப்பாகவும் பொருந்துகின்றது.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற எண்ணம், 16-ஆம் நூற்றாண்டிற்குரியது எனக் கருதப்படும் பிரபந்த மரபியல எனும் இலக்கண நூலில் முதன்முதல் கையாளப்படுகின்றது.

... பிளளைக்கவி முதல் புராணம் ஈறாகத்
தொண்ணூ [ற்றா றெனும்] தொகைய தான
முற்பக ரியல் [பை] முனனுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே (1)

என்பது அதன் முதற்செய்யுள்.

பிற்காலத் தெழுந்த பிரபந்த தீபிகையின் முதற் செய்யுட் பகுதியும்,

பதினாறை யாறிற் பெருக்கு பிரபந்தாதி
பலவகை யெடுத்துரைக்கின்... (1)

என இவ் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனும் எண்ணமும் வரையறையும் படிக்காசுப் புலவரிடம் முதலில் அமைகின்றது. இன்னும் அச்சு வடிவு பெறாத, இவரது சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில், 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' எனும் தொடர் அமைவதாக உ.வே.சா. அவர்கள் காட்டுகின்றார். இதை ஆய்வாளர் பலரும் பின்பற்றி மொழிகின்றனர்.

தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் எவையெவை எனும் தெளிவான பட்டியல் முதன்முதல் வீரமாமுனிவரின் சதுரகராதியிலேயே அமைகின்றது. பின்பு, குடுமியாமலை சுப்பிரமணிய பாரதியாரின் பொருட்டொகை நிகண்டும் இவ்விலக்கியப் பெயர்ப் பட்டியலை அவ்வண்ணமே தருகின்றது.

தொண்ணூற்றாறு எனும் எண் இயைபு சிந்தனைக்குரியது. 'தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்ற ஒரு கணக்கு சைவ சமயத்தில் நெடுங்காலமாக உள்ளது; பிரபந்தமும் தொண்ணூற்றாறு என்ற கருத்தை ஒருகால் அவை தோற்றுவித்திருக்கலாம்' என்பர் (மு. அருணாசலம், பிரபந்த மரபியல், முன்னுரை, பக். 8). இதற்கு வாய்ப்பாகப் 'பாசண்டம்—தொண்ணூற்றாறு வகைச் சாத்திரக்கோவை' எனும் அடியார்க்கு நல்லார் உரையும் (சிலம்பு. 9.14-15) காட்டப்படுகின்றது. பொருட்டொகை நிகண்டும், தொண்ணூற்றாறு எனும் எண்ணுக்குரியதாகத் தத்துவங்களையும் கூறுவதும் இங்குச் சுட்டத்தக்கது.

பிற்காலச் சோழப்பேரரசைத் தோற்றுவித்த விசயாலயன் (கி.பி. 850-71) புகழை ஒட்டக்கூத்தர் மூவருலாவிலும் மொழியுமிடத்து, அவன் வீரப்புண்கள் தொண்ணூற்றாறு என எண் தருகின்றார் (குலோ. 20-21; இரா 18-19).

— மீதெலாம்
எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும் (விக். 29, 30)

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இக்கருத்து, அடுத்த நூற்றாண்டின் சங்கர ராசேநதிர சோழனுலாவிலும் (14-15) அமைகின்றது. தொண்ணூற்றாறு எனும் எண்ணின முதன்மையும் சிறப்பும் இவற்றில் புலப்படுகின்றன.

தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் எவை என்பது பற்றியும் நூல்களிடையே கருத்துவேறுபாடும் முறைவைப்பு மாறுபாடும் உண்டு. சாதகம் முதலாகக் காப்பியம் ஈறாகப் பிரபந்தம் தொண்ணூற்றாறு என்றும் (ச.), பிள்ளைக் கவி முதல் புராணம் முடியப் பிரபநதம் தொண்ணூற்றாறென்றும் (பி. ம) இருகருத்துகள் நிலவுகின்றன. ஆயின் பிரபந்தத் திரட்டில் காணப்படும் செய்தி, கருத்து வேறுபாடு காட்டுகின்றது.

கடவுள்வணக்கமும் நுவல்பொருளும் தரும் இப்பாயிரப் பாடல், நேரிசை வெண்பாவாம். இரண்டாமடியின் பாடும் வகை என்பதும், மூன்றாமடியின் சுப்பிரமணி என்பதும் கனிச்சீர் போன்று தோற்றமளித்துத் தளைபிழைபட வாய்ப்பளித்த போதும், வரிவடிவம கருதாது, ஒலிநிலை கொள்ளின், முன்னதின் மகரக் குறுக்கமும், பின்னதின் வடவொலியும் (பிர) தடையாக அமையாது, தளைமுழுமை தருகின்றன. இந்நூலின் பிறபாடல் களிலும் இத்தகு தளைநிலை காணப்படுகின்றது.

முதலாவது

# திரட்டியல்

நூலின் பெயருக் கேற்ப, இம் முதலியலும் திரட்டு எனும் பெயா பெறுகின்றது. தொண்ணூற்றாறு எனச் சுட்டப்பட்ட பிரபந்தங்களின இயல்பைத் திரட்டி மொழியும் பகுதி எனப் பொருள்படுகின்றது. தொல்காப்பியம் முதல், பெரும்பாலும் இலக்கணங்கள் ஏற்கும் பகுப்புப் பெயர்நிலையான 'இயல்' இங்கும் பொருந்துகின்றது. நூலை விளக்குமிடத்துத் தொல் காப்பியம் சூத்திரம்-ஒத்து-படலம்-பிண்டம் எனப் பகுப்புப் பெயர்நிலைகளைச் சுட்டியபோதும், ஒத்து என்பதைப் பயன் கொள்ளாது 'பிறப்பியல்' முதலாகப் பெரும்பாலும் இயல் எனவே பகுதிப்பெயர் கொண்டமை இங்கு நினைக்கத் தக்கது.

இதன்கண், சாதகம் முதலாக ஒலியந்தாதி ஈறாகப் பிரபந்த வகைகள் விளக்கம் பெறுகின்றன. எழுபத்தைந்து வெண்பாக் களால் இவ்வியல் அமைகின்றது.

### சாதகம்

2 திதிவார நாள்யோகஞ் சேர்கரணங் கண்டு
துதியா ரிராசிபிற் சூட்டி—விதிகோட்கண்
மாதம் வருட மதித்துரைத்தன் மாந்தர்க்குச்
சாதகத்தின் சாதகமாச் சாற்று

இப்பா சாதகம் எனும் பிரபந்தத்தின் இலக்கணம் கூறுகின்றது. திதி, வாரம், நாள், யோகம், கரணம் எனும் பஞ்சாங்கமும்

கண்டு, இராசியும், கோளும் பார்த்து, அத்துடன் மாதம், வருடம் ஆகியனவும் கூறல் சாதகத்தின் இயல்பாம்.

இவ் இலக்கிய வகையைச் சில நூல்களே மொழிகின்றன. பன்னிருபாட்டியலுக்குப்பின், சதுரகராதி இதற்குப் போதிய விளக்கம் தருகின்றது. திதி முதலிய எழுவகை உறுப்புகளின் நிலையைச் சோதிட நூலான் நன்குணர்ந்து அவற்றால் தலைவனுக்கு உறுவனவற்றைக் கூறுவது எனச் சதுரகராதி அமைக்கின்றது. பின்வந்த முத்துவீரியம், பிரபந்ததீபிகை, பிரபந்த தீபம் என்பன இதனைப் பின்பற்றி மொழிகின்றன. பிறந்த நேரத்தின் அடிப்படையில் நன்மை, தீமை கணிக்கப்படுகின்றன.

இதற்கு இலக்கியம் கிடைக்காத போதும், தலைவருக்குச் சாதகம் கருதப்பட்டமை தெரிகின்றது. பெருங்கதை, உதயணனுக்கு, நரவாணதத்தன் பிறந்தபோது சாதகர்மம் செய்ததையும் சாதகப்பட்டிகை எழுதியதையும் தருகின்றது (5.6:73-84). சீவகசிந்தாமணி, சுடுகாட்டில் சீவகன் பிறந்தபோது அன்னையுற்ற அவலத்தில், 'அரும் பொற் பூணு மாரமு மிமைப்பக் கணிகளகன்கோயில், ஒருங்குகூடிச் சாதகஞ் செய்தோகை யரசர்க்குடன்போக்கி' (308) எனச் சாதகம் செய்தலைக் குறிக்கின்றது. சீவகனுக்குக் குழந்தைகள் பிறந்தபோதும் சாதகம் வகுக்கப்பட்டது பற்றிய செய்தி உண்டு (2705). ஆண்கட்கு மட்டுமன்றிப் பெண்டிர்க்கும் சாதகம் வகுத்த செய்தியைச் சூளாமணி, சயம்பவைக்குக் குறிக்கின்றது (310). கம்பன், தசரத குமாரர் பிறப்பைக் கூறுமிடத்து, 'அந்தணாளாகள் கூடினர், நாளொடு கோளும் நின்றமை நாடினர், உலகு இனி நவை இன்று என்றனர்' (287) என்பதில் இச்செய்தியை ஓரளவு குறிப்பிடுகின்றது.

சாதகம் கணிக்கும் முறைகள் பற்றிப் பல செய்யுள் நூல்கள் உள்ளன. நாடிசோதிடம், சாதகாலங்காரம் போன்ற இவை இலக்கியமாக வன்றி, இலக்கணமாக அமைகின்றன.

திதி, பதினைந்து

1. பிரதமை 2. துதியை 3. திரிதியை 4. சதுர்த்தி 5. பஞ்சமி 6. சட்டி 7. சத்தமி 8. அட்டமி 9. நவமி 10. தசமி 11. ஏகாதசி 12. துவாதசி 13. திரையோதசி 14. சதுர்த்தசி. இவற்றில், சுக்கில பக்கத்தில் சுத்தமென்றும், கிருட்டிண பக்கத்தில் பகுளமென்றும் கூட்டவேண்டும்,

15. சுக்கில பக்கத்திற்குப் பௌர்ணமி, கிருட்டிண பக்கத்திற்கு அமாவாசி.

**வாரம், ஏழு**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி சனி.

**நாள், இருபத்தியேழு நட்சத்திரம்**

அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம, பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி.

**யோகம், இருபத்தியேழு**

விட்கம்பம், பிரீதி, ஆயுட்மான், சௌபாகியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிடணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி.

**கரணம், பதினொன்று**

பவ, பாலவ, கவுலவ, தைதுலை, கரசை, வனசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாத, நாகவா, கிமித்துக்கின.

**இராசி, பன்னிரண்டு**

மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், குமபம், மீனம்.

**கிரகம் (கோள்), ஒன்பது**

ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது.

**மாதம், பன்னிரண்டு**

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

**வருடம், அறுபது**

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கீரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய—இவ்விருபதும் உத்தமம். சருவசித்து, சருவதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ—இவ்விருபதும் மத்திமம். பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சத, நள, பிங்கள, காலயுத்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துமி, உருத்திரோற்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய—இருபதும் அதமம். (1)

## பிள்ளைத் தமிழ்

3 சார்காப்புச் செங்கீரை தாலார்சப் பாணிமுத்தம்
வாரானை சோமன் மலிபறைதே—ரார்சிற்றிற்
பேர்நரர்க்கு மின்னார்க்குப் பேசுநீ ராடலுடன்
சேர்கழங்கூ சற்பின்முன் செப்பு

4 இரண்டைந்தே ழொன்பான் னியல்பதினொன் றார்பன்
னிரண்டுபதி னெட்டிருபா னாலு—விரும்புமுப்பா
னாறுநாற் பானெட்டா மாணுக்கு மேலிரண்டாண்
டேறுமின் னார்க்குமதி யே

5 கூறுங்காற் றெய்வக் கொலையகற்றிக் காக்கவெனக்
கூறுதுட்ட தெய்வத்தைக் கூறாதே—மாறாமல்
ஏற்று விருத்தப்பா விற்புணர்த்தி பாடகலச்
சாற்றுகின்ற பிள்ளைத் தமிழ்

இம்மூன்று பாடலும் பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறுகின்றன.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை (வருகை), சோமன் (அம்புலி), பறை, தேர், சிற்றில் என்பன ஆடவர்க்குரியனவாம். பெண்டிர்க்கு நீராடல், கழங்கு, ஊசல் ஆகியன ஈற்றில கூறப்படும். ஆணுக்கு உரிய பருவ வயது முறையே இரண்டு, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பன்னிரண்டு, பதினெட்டு, இருபத்துநான்கு, முப்பத்தாறு, நாற்பத்

தெட்டு எனும் மாதநிலையாம். ஆணுக்கு இவ்வாறு நான்கு வயது மேலெல்லையாகப் பெண்ணுக்கு ஆறுவயது வரையாக லாம். காப்புப் பருவத்தில் தெய்வங்களைக் கூறும்போது, கொலைத் தொழிலும் துட்ட தெய்வமும் நீக்கப்படவேண்டும். இவ் இலக்கியம் விருத்தப்பாவில் அமைய வேண்டும்.

இலக்கியத்தில் பெரும்பான்மை பயின்ற பெயரையே இந்நூல் கூறினும், பொதுவாகப் பிறநூல்கள பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி எனும் பெயரை ஆணடன. இவற்றிடையே, பருவங்கள, வயது, யாபபு, செய்யுட்தொகை போன்ற கூறுகளில் மாறுபாடு அமைகின்றன.

இந்திரகாளியம், பருவங்களில் சில புதுமை அமைக்கிறது. பிறப்பு, ஓகை (உவகை), வளர்ச்சி, அச்சமுறுத்தல், குழமகன் எனப் பேசுகின்றது. இவர் தரும் பட்டியலைப் பகுத்து நோக் கின், பதினொரு பருவம் கூறலுப, இறுதி மூன்றான சிற்றில், குழ மகன, ஊசல என்பன பெணபாற்குரியன என்பதும் தெரி கின்றன. பன்னிருபாட்டியலும், பெண்பாற்கு, சிற்றில் இழைத் தல், சிறுசோறாககல், குழமகன, ஊசல், காமன் நோன்பு ஆகிய வற்றைச் சுட்டி மாறுபடுகின்றது.

ஆண்பாற் பருவங்களைப் பொறுத்தமட்டில் பன்னிரு பாட் டியல் தருவன பின்னூல்க ளனைத்திலும் பின்பற்றப் படுகின்றன. அவற்றின் முறைவைப்பில் மட்டும் சிலநூல்கள் முன்பின் மாற்றம் தருகின்றன. வெண்பாப் பாட்டியலும் நவநீதப் பாட்டியலும் பெண்பாலுக்குத் தனிப்பருவம் கூறவில்லை. ஆண்பாற்குரியன வற்றில் ஈற்று மூன்றொழிந்தது பெண்பாற்கு என அமைந்து விடுகின்றன. பிரபந்த மரபியல் முதல் பின்னூல்கள் கழங்கு, அம்ம(ா)னை, ஊசல் ஆகிய மூன்றைச் சிற்றில், சிறுபறை, சிறு தேர்க்குப் பதிலாகப் பெண்ணுக்கு இணைக்கும்.

குழந்தைப் பருவ வயதும் பெரும்பான்மையான நூல்களில் குறிக்கப்படுகின்றது. ஓரளவு ஒற்றுமை இருப்பினும் நூல் களிடையே கருத்துமாறுபாடும உண்டு. இந்திர காளியம், தோறறம முதல் பதினாறு வயதுவரை எலலை அமைக்கினறது. பனனிரு பாடடியல மூனறு முதல இருபதொரு திஙகள எனவும் ஏழுமுதல் பதினைந்து வயது எனவும் தருகினறது. பின்வரும் நூல்கள் மூன்று முதல் இருபத்தொரு திங்கள் எனும்

எண்ணத்தை ஏற்க, அவற்றில் ஒற்றையாக வருவன எனச் சில விதந்தோதுகின்றன. ஒவ்வொரு நூல்கள் இத்துடன் ஐந்து, ஏழு ஆண்டுகள் எனவும் மூன்று, ஐந்து, ஏழு ஆண்டுகள் எனவும் கூறுகின்றன. பிரபந்த தீபிகையே பருவங்களை வயதுடன் பொருத்தி, இருதிங்களில் காப்பு, ஐந்தில் செங்கீரை, ஏழில் தாலம், ஒன்பதில் சப்பாணி, பதினொன்றில் முத்தம், ஓராண்டில் வாரானை, ஒன்றரையில் அம்புலி, இரண்டில் சிற்றில், மூன்றில் பறை, நான்கில் தேர் என நுவல்கின்றது. பெண் பாலுக்குப் பருவமேலெல்லையாகப் பூப்பினை இந்திர காளியமும், பன்னிரு வயதில் காமன் நோன்பெனப் பன்னிரு பாட்டியலும் தருகின்றன.

கொச்சகக் கலியும், பன்னீரடிவரையுள்ள நெடுவெண்பாட்டும் இந்திரகாளியத்தால் யாப்பாகச் சுட்டப்படுகின்றன. பன்னிருபாட்டியல், அகவல் விருத்தம், கட்டளை ஒலி, கலிவிருத்தம் என்பதுடன் பிறர் மதமாக நெடுவெண்பாட்டினையும் அளிக்கின்றது. பிற நூல்களில், அகவல் விருத்தம், வகுப்பு என்பனவே பொதுவாகத் தரப்படுகின்றன.

பருவத்துக்குப் பத்தாகப் பத்துப் பருவத்திற்கும் பாடல் எனும் கருத்து பின்பு அமையினும், முன்னூல்கள் எண்ண வேறு பாடு கொள்கின்றன. 1, 3, 5, 7, 9 அல்லது 11 பாடல் ஒவ்வொரு பருவத்தில் வரலாம் என இந்திரகாளியம் கூறுகின்றது. நூல் 50 பாடலில் குறையலாகாது என நவநீதப் பாட்டியல் சொல்ல காப்பில் 9 அல்லது 11 பாடல் அமைதலை அந்நூலுடன் இலக்கண விளக்கமும் பேசுகின்றது. தலைவனின் குலத்திற் கேற்ப நூறு முதல் 60 வரை பாடலெண்ணிக்கை அமைதலைப் பிரபந்த மரபியல் சுட்டுவது புதுமை.

பிள்ளைத்தமிழ் மிகுந்த இலக்கியப் பயிற்சியுடையது. பிள்ளைத்தமிழ் தனியிலக்கியமாக உருவாகுதற்கு முன் ஆழ்வார் பாடல்களில் இடம்பெறுகின்றது. பெரியாழ்வார் திருமொழி, தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி, தளர்நடை, அச்சோ, புறம்புல்கல், பூச்சிகாட்டுதல், முலையுண்ணல், நீராடல், பூச்சூடல், காப்பிடல் போன்று பல குழந்தைச் செயல்களைத் தொடர்புபடுத்திக் காட்டுகின்றது. நாச்சியார் திருமொழியின் 'சிற்றில் சிதையேல்' எனும் பகுதியும், பெருமாள் திருமொழியின்

'தாலாட்டு' என்பதும், பெரிய திருமொழியின் அம்மமுண்ண அழைத்தலும், சப்பாணிப்பருவமும் இங்கு நினைக்கத் தக்கன.

ஒட்டக்கூத்தர், பத்துப் பருவங்களில், பருவத்துக்குப் பெரும் பாலும் பதினொரு பாடலாக, குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழை இயற்றி இவ்விலககிய வகையில் முதனூல் அமைக்கின் றார்.

பருவத்துககுப் பததுப்பாடலாகி, பெரும்பாலும் நூறுபாட லுடன் அமைவது பிளளைத்தமிழ் இலக்கியப் பொதுப்பண்பான போதும், பருவத்துக்கு ஐந்துபாடல் பெறுவதைக் கலைசைச் செங்கழுநீா விநாயகர் பிள்ளைத் தமிழும், பருவததிற்கு மூன்று பாடல் பெறுவதை பழநிப் பிளளைத் தமிழும், பருவத்திற்கு ஒரு பாடலுடன் அமைவதைப் புலவர் மு. கோ. இராமனின் திருநாவுககரசர் பிள்ளைத்தமிழும் காட்டுகின்றன. (2-4)

## பல்சந்தமாலை, துனிவிசித்திரம்

6 பத்துக் கொருசந்தம் பாடிப்பா நூறாக
வைத்தறான் பல்சந்த மாலையா—முத்துமுலைப்
பெண்கலவி பாடிப் பிரிவாய் விரித்துரைத்தல்
அண்ணுந் துனிவிசித்தி ரம்

பல்சந்த மாலை, 'துனிவிசித்திரம் என இருவகைகளின் இலக் கணம் கூறப்படுகின்றது.

பத்துப்பாடலுககு ஒருசந்தமாக நூறுபாடல்களால் அமை வது பல்சந்தமாலை. பன்னிரு பாட்டியல் முதலிய நூல்கள் ஓரளவு வொத்தும் மாறுபட்டும் இதற்கு இலக்கணம் வகுக் கின்றன. கலம்பகததோடு இவ்வகைக்குச் சார்பு காட்டும் பன்னிரு பாட்டியலின் விளக்கம் சிந்தனைக்குரியது. பத்து முதல் நூறுபாடல் வரலாம் எனவும், பாடல்கள் எவ்வியாப் பிலும், அமையலாம் எனவும் அந்தாதி இயைபு வேண்டும் எனவும் கருதுவதாகக் கொள்ள முடிகின்றது. அகவல் விருத்தம் அல்லது வகுப்பால் இவ்இலக்கியம் ஆகும் எனப் பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் போன்றன கூறுகின்றன. பத்துப் பாடலுக்கு ஒரு சந்தமாகப் பத்துச் சந்தம் கொண்டு இவ்வகை அமைதல் இலக்கண விளக்கம் முதல் கருதப்படுகின்றது.

மணிவாசகரின் திருச்சதகம், சதகம் எனப்பெயர் பெற்றமை யினும், பததுப்பாடலுக்கு ஒருசந்தமாக நூறு பாடலால் அமை வது இயைபு பற்றி இங்கு நினைக்கத்தக்கது.

துனிவிசித்திரம், பெண்கலவி பாடிப் பின்பு பிரிவை விரித் துரைத்தலாம். இவவகை பிறபாட்டியல்களால் கூறப்பட வில்லை. துனிவிசித்திரம் என்ற பெயர்நிலை, ஊடற்சிறப்புரைத் தல் பற்றிப் பொருத்தம் கொள்கின்றது. (5)

## அந்தாதி, மும்மணிக் கோவை

7 பாவுங் கலித்துறைவெண் பா விருத்தத் தானூறு
மேவந்தா தித்தமிழா மேனிலத்திற்—றாவகவல்
ஆந்தமார் வெண்பாக் கலித்துறையந் தாதிமுப்பான்
வநதாலா மும்மணிக்கோ வை

அந்தாதி, மும்மணிக்கோவை ஆகிய இரு பிரபந்தங்களின் இலக் கணம கூறப்படுகின்றது.

அந்தாதித் தமிழ், கலித்துறை வெண்பா, விருத்தம் ஆகிய வற்றுள ஒன்றால் நூறுபாடலில் அமைகின்றது. பெயர்நிலைக் கேற்ப அந்தாதித் தொடர்புடன் விளங்குகின்றது.

அகவல, வெண்பா, கலித்துறை, எனும் மூன்று யாப்பும் தொடர்ந்து அந்தாதி பெற்று முப்பது பாடலில் வருவது முமமணிக கோவையாம்.

இந்நூல் மட்டுமே, அந்தாதி இலக்கிய வகையை 'அந்தா தித் தமிழ்' எனச் சிறபபிககின்றது. பன்னிரு பாட்டியல் அந்தாதித் தொகை எனக் கூற, பிற அந்தாதி எனவே சுட்டுகின்றன. வெண்பா அல்லது கலித்துறை அந்தாதித்து வருதல் என்பதே பொதுக்கருதது. சுவாமிநாதம் விருதததையும் சேர்க் கினறது. இநநூலும் அதனைக் கூறுவது நினைக்கத்தக்கது. நூறு பாடலால் அமையவேண்டும எனும எண்ணம வெண்பாப் பாட்டியல் முதல் அமைகின்றது. வேண்டிய எப்பொருளிலும் இவ்விலக்கியம் அமைதலைப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடு கின்றது. 'சீர்' அந்தாதியாக வரல் வேண்டும் எனும் கருத்து வெண்பாப்பாட்டியலுக்கு உரியது. அந்தாதி எனும் பொதுப்

பெயரமையினும், வெண்பா அந்தாதி, கலித்துறையந்தாதி, விருதத அநதாதி என யாப்புக கேற்ற பெயர் இலக்கியத்திற்கு அமையும் வாய்ப்பும் புலப்படுகிறது.

பெரும்பாலும் எல்லா இலக்கணமும் சுட்டும் இலக்கிய வகையாக மும்மணிககோவை அமைகினறது. வெள்ளை, அகவல், கலித்துறை என முறைமாற்றததுடனும், வெள்ளையும் அகவலும் நேரிசையாக அமைதல் எனும சிறப்புக் குறிப்புடனும் பனனிரு பாட்டியல் அமைகின்றது. நவநீதப பாட்டியல் முதல், முப்பது எனும் எண்ணிககை வரையறை அமைகின்றது. இலக்கண விளக்கம முதலிய நூல்களில், கலித்துறை, கட்டளைக்கலித்துறையாக அமையவேண்டும், அந்தாதி அமைய வேண்டும் எனும் எண்ணம் காணப்படுகின்றது. சுவாமிநாதம், முன்நூல்களிலிருந்து மாறுபட்டு, பத்துவெண்பா, பத்துஅகவல், பின் பத்து கலிபபா எனக கூறுவது நினைக்கத் தக்கது.

அநதாதி எனப் பெயர் அமையாவிடினும், அந்தாதி இலக்கிய வகையின் தோற்றம் சங்கப்பாடலிலேயே அமைந்து விடுகின்றது. பதிற்றுப்பத்தின நான்காம் பத்தும், ஐங்குறு நூற்றின் தொண்டிப் பத்தும், பத்துப்பாடல் அந்தாதிப்பதைக் காட்டுகின்றன. பொருட்டொடர்நிலையாக அமையும் பெருங்கதையின் உட்பகுப்புகள், சொற்றொடரமைப்புக் கொண்டு கதை நவில் இலககியத்திலும் அந்தாதி நிலை காட்டுகின்றன. ஆழவார்களின பகதிப்பாசுரங்களின தொகையான நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பல அந்தாதிப்பிரபந்தங்களுக்கு இடமளிக்கின்றது. மூன்றாவதாயிரம், ஆறு அந்தாதி நூல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பெரும்பான்மை வெண்பா அந்தாதிகளாக அமைகின்றன. திருவிருத்தம், இராமாநுச நூற்றந்தாதி ஆகியன கட்டளைக் கலித்துறை அந்தாதிகள்.

பக்தி இலக்கிய காலம், பல பிரபந்தங்களின் தோற்றக் களனாக அமைகின்றது; மூவகைப்பாடல் அந்தாதித்து வரும் மும்மணிக கோவையின் தோற்றமும பக்தி இலக்கியமான பதினோராம் திருமுறையில் அமைகின்றது. ஏழு மும்மணிக் கோவைப் பிரபந்தங்களுக்கு இந்நூல் இடமளிக்கின்றது. முப்பது என்ற எண்ணிக்கை முழுமை இன்றியும் மும்மணிக்கோவை அமையும் வாய்ப்பை, பட்டினத்தாரின் திருக்கழுமல மும்மணிக்

கோவை 12 பாடலும், அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை 23 பாடலும், நக்கீரதேவரின் திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 15 பாடலும் பெறல் காட்டுகின்றது. ஆயின், முப்பா இணைப்பு இவற்றில் முழுமையாக அமைகின்றது. இவ் இலக்கிய வகைக்குப் பொருண்மை இலக்கணத்தில் கூறப்படாத போதும், பாட்டுடைத் தலைவன் பெருமையும், கிளவித் தலைவன்—தலைவியரின் வாழ்வு சுட்டும் அகப்பொருண்மையும் விரவிவருவது இலக்கியங்களை நோக்கப் புலப்படுகின்றது. (6)

## மும்மணி மாலை, லட்சுமி விலாசம்

8 வெண்பாக் கலித்துறை வேந்தன்பா முப்பதாய்
மண்பாவின் மும்மணி மாலையாம்—பெண்ணை
மணங்கூட்ட மாலொடுபொன் வந்ததாப் பாடல்
அணைலட் சுமிவிலா சம

மும்மணிமாலை, லட்சுமிவிலாசம் ஆகியவற்றின் இலக்கணம் தருகின்றது.

வெண்பா, கலித்துறை, வேந்தன்பா எனப்படும் அகவல் ஆகியன முப்பது பாடலில் வருவது மும்மணிமாலை. பெண்ணைத் திருமணம் செய்ய, திருமாலொடு பொன் வந்ததாகப் பாடல் லட்சுமி விலாசம்.

மூவகைச் செய்யுளால் அமையும் மும்மணிக்கோவை போன்று மும்மணி மாலையும் பெரும்பான்மை இலக்கணங்களால் சுட்டப்படுகின்றது. மூவகைச் செய்யுள் கலந்து அந்தாதித்தலே இவ்விருவகை இலக்கியங்கட்கும் அடிப்படை. பாடலெண்ணும் யாப்பும் கூட ஒன்றாகவே அமைந்த போதும் யாப்பின் முறைவைப்புக் காரணமாக வேறுபாடு ஏற்பட்டுள்ளது. மும்மணி மாலையின யாப்புகளுள் ஒன்றாக, அகவலுக்குப் பதில் அகவல் விருத்தத்தைப் பன்னிருபாட்டியல் கூறுகின்றது.

இலக்கியங்களை நோக்க, மும்மணிகோவை, கோவை என்ற தன் பெயருக் கேற்ப அகப்பொருட்கூறு பெற்று அமைதலும் புலப்படுகின்றன.

லட்சுமி விலாசம் என்பதைப் பிரபந்தத் திரட்டு மட்டுமே இலக்கிய வகையாகச சுட்டுகின்றது. (7)

## கூடன்மாலை, குலோதய மாலை, தசாங்க வன்னிப்பு

9 மானவலிய மேவ வரல்கூடன மாலையா
மானக் குலோதய மாலைகுலந்—தான்விரித்த
னாதனுக்குத் தான்சமம்மே நாட்டித் தசாங்கத்தை
ஓதல் தசாங்கவன் னிப்பு

கூடன்மாலை, குலோதயமாலை, தசாங்க வன்னிப்பு எனும் மூன்று இலககியங்களின் விளக்கம் இங்கு அமைகின்றது. இம் மூனறு வகையும் பிறபாட்டியல்களால் சுட்டப்படாதனவாம்.

பெண், தானாகக் கலவிககு ஒருப்படலைப் பாடுவது கூடன் மாலை. தலைவன் உதித்த குலத்தின் பெருமையை விரிப்பது குலோதயமாலை. தலைவற்குரிய தசாங்கங்களை அவனுக்கு ஒப்புமை கூறி வருணிபபது தசாங்கவன்னிப்பு.

தசாங்கம் எவை என்பது, இந்நூலில் கூறப்படவில்லை. ஆயின் 'ஊர்குடை கோல் நாடு நகர் ஒள்வேல் கரி பரி வாள் வார் சிலை' (16) என்பதில பிறிதொரு விளககம் அமைகின்றது.

பெரும்பான்மையான பாட்டியல்கள் தசாங்கப்பொருண்மை பற்றிய வகையாகத் தசாங்கப் பத்து, தசாங்கத் தயல் என்பன வற்றைக் குறிக்கினறன. நேரிசை வெண்பாக்கள் பத்தில் உரைப்பது முன்னது. ஆசிரியவிருத்தம் பத்து (மு.வீ), அல்லது ஆசிரியம பதினான்கில் உரைப்பது (பி.தீ) பின்னது. பிரபந்தத் திரட்டு தரும் விளக்கம் ஓரளவு அடிப்படை ஒப்புமை கொண்ட போதும் வேறுபாடு காட்டுகின்றது.

## ஆடாமணி

10 வாயின் மணிநாவா டாமற் செயமின்னாள்
வாயின் மணிமுத் துறவசைக்க—வேயிறைவன்
பூசலிட்டுப் பின்மேவப் பூட்டி யுரைப்பதுவே
வாசமிகு மாடா மணி

ஆடாமணி எனும் இவ்வகையும் பிறநூல்களில் கூறப்படாதது. வாயிலின் ஆராய்ச்சி மணி ஒலிககாத நல்லாட்சியில், வெற்றித் தெய்வத்தின் ஆசிமொழிகள் அமையும் வண்ணம், அரசன் போர் மேற்சென்று மீளலைக் கூறும் இலக்கிய வகை இது.

செயமின்னாள் என்றதால் துர்க்கையும், வாயின்மணி என்பதால் அவள்நாவும் கொள்ளபபட்டு, 'முந்துற அசைக்க' என்பது பாடமாக ஏற்கப்படின், அரசன் போர்மேற் செல்லுமுன்பே, தேவியின் வெற்றிநகை அமைகினறது என இயைக்கலாம.

## நான்மணிமாலை, பருவமாலை

11 வெண்பாக் கலித்துறை வேநதன்பா மன்விருத்த
மண்ணினாற் பானான் மணிமாலை—பெண்பருவ
மேழுக்கு மாண்டேழ் துறைக்கல்வி யேற்றமுறல்
வாழ்பருவ மாலையா மால்

இப்பா, நான்மணிமாலை, பருவமாலையாகியன வற்றிற்கு விளக்கம் தருகின்றது.

வெண்பா, கலித்துறை, அகவல், அகவல் விருத்தம் ஆகியன நாற்பது பாடலாக அந்தாதித்து அமைதல் நான்மணி மாலை. எழுவகைப் பருவ மகளிர்க்கும் உரிய வயதும் எழு வகைத் துறைக் கலவியைப் பொருத்தமுற விளக்கல் பருவ மாலை.

நான்மணி மாலை ஓரளவு வேறுபாடின்றி, அனைத்து நூல் களிலும் குறிக்கப்படும் இலக்கிய வகையாம். பன்னிரு பாட்டியல் போன்றன 'விருத்தம்' எனப் பொதுவாகக் குறிக்கின்றன. நாற் பாவின் முறைவைப்பைச் சிறிது மாற்றி, வெண்பா, கலிததுறை, விருத்தம், அகவல் என இலக்கண விளக்கம் முதலியன நவில் கின்றன. பன்னிரு பாட்டியல், அகவலும் அகவல் விருத்தமுமாக நாற்பது பாடலும் இவ்விலக்கியம் என்கிறது. பிரபந்த மரபியல், மும்மணி மாலையின் யாப்புடன் அகவல் பத்துவரல் என்பதால், வெண்பா, கலித்துறை, அகவற்பாவோடு மீண்டும் அகவற்பாவே வரல்கருதப்படுவது வேறுபாடாக அமைகின்றது. தொன்னூல் விளக்கம் தரும் நூற்பாவில், யாப்புப் பற்றிய விளக் கம் முனனூல்களை நோக்கத் தெளிவுகுன்றி யமைகின்றது. நாற்பாவின் விருத்தத்தால் இவ்விலக்கியம் ஆகும் எனும் எண்ணம் அமைவதாகத் தோன்றுகினறது.

பதினோராம் திருமுறை வழங்கும் பட்டினத்தாரின் கோயில் நான்மணிமாலை இவ்வகையில் முதல்நூலாக அமைகின்றது. வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவல்

எனும் நாற்பா முறைவைப்பு, நாற்பது பாடலில் அந்தாதியும் மண்டிலமும் பெற்றுவருவது இவண் அமைகின்றது.

பருவமாலையைப் பிரபந்தத்திரட்டே இலக்கியவகையாக் கியபோதும், எழுவகைப் பருவமகளிர் பற்றிய செய்தி பல இலக் கியங்களிலும், உலாவிலும் இடம்பெறுவதேயாம். உலா இலக் கியம் தரும் எழுவகை மகளிர்நிலை அடிப்படையாக இப்புது வகை உருவாகியிருக்கலாம். பாட்டியல்கள், இவர் பருவங்கட் குரிய ஆண்டுகள் கூறுவதோடு, பன்னிருபாட்டியல் இவர் செய லாகச் சில விளையாட்டு முதலியவற்றைத் தருகின்றது.

சிற்றில் பாவை கழங்கு அம்மனையே
பொற்புஉறும் ஊசல் பைங்கிளி யாழே
பைம்புனலாட்டே பொழில் விளையாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க்கு உரிய ஆகும் என்ப (137)

இத்தகு கருத்துகளே, இங்குக் கருதப்பட்டிருக்கலாம். உலாவிலக் கியங்களும் பெரும்பாலும் இச்செய்கைகளை மகளிர்க்குரிய தாகக் காட்டல் குறிப்பிடத்தக்கது.

## இரட்டைமணிமாலை, இணைமணி

12 இருபானா வெண்பா வகவல் விருத்தன்
மருவு மிரட்டைமணி மாலை—யொருநூறு
வெண்பாக் கலித்துறையு மேவலொரு சாராக
வெண்ணு மிணைமணி யே

இரட்டைமணிமாலை, இணைமணி (மாலை) ஆகியவற்றின் இலக்கணம் கூறப்படுகின்றது.

இருபதுபாடல், வெண்பாவும் அகவலுமாக இருத்தல் இரட்டைமணிமாலையாம். நூறுபாடல், வெண்பாவும் கலித் துறையுமாக அமைதல் இணைமணிமாலையாம்.

இவ்விரு இலக்கிய வகையும் பெரும்பாலும் எல்லா இலக்கணி களாலும விளக்கப்படுவதாம். யாப்பு வகையில் ஒருசில வேறு பாடு உண்டு. பன்னிரு பாட்டியல் வெண்பாவும் கலித்துறையு மாக இரட்டைமணிமாலை அமையும் எனக் கூறுகின்றது.

வெண்பாவும் விருத்தமுமாக அமைவதும் இது என வெண்பாப் பாட்டியல் போன்ற சில கூறுகின்றன. சுவாமிநாதம்,

ஒத்த வெள்ளை கலித்துறையும் பின் அகவலும் பின்
உறும் அகவல் விருத்தமும் சேர்ந்து அடைவின்
மாலையுமாம் (169)

என அனைத்து மாலை இலக்கியங்களையும் உள்ளடக்கிக் கூறுவது வேறுபாடாக அமைகின்றது.

பதினோராம் திருமுறை நான்கு இரட்டைமணிமாலை களைத் தருகின்றது. காரைக்காலம்மையின் திருவிரட்டைமணி மாலையில் இவ்இலக்கிய வகையின் தோற்றம் அமைகின்றது. வெண்பாவும் கலித்துறையுமாக இருபது பாடல் அமையும் இவ் இரட்டைமணிமாலையின் பொதுவியல்பு, 37 பாடல் பெறுவ தால் கபிலதேவரின் சிவபெருமான் திருவிரட்டைமணிமாலையில் மாறுபடுகின்றது.

இணைமணிமாலைக்குப் பாடலெண்ணிக்கையில் நூல்களி டையே ஒப்புமை அமையினும், யாப்புப் பற்றிய கருத்தில ஓரிரு வேறுபாடு கருதப்படுகின்றன. வெண்பா, அகவல், வெண்பா, கலித்துறை என நான்கால் வருவது என வெண்பாப்பாட்டியல் சுட்டுகின்றது. வெள்ளை, அகவல் என இணைவதும் இவ்விலக் கியம் எனச் சிதம்பரப் பாட்டியல் கருதுவதாகத் தெரிகிறது. வெண்பா, கலித்துறை, அகவல், அகவல்விருத்தம் எனத் தொடர்ந்து வருவதைத் தொன்னூல் விளக்கம் சுட்டுகினறது. வெண்பா அகவல் மணிமாலை எனவும், வெண்பா கலித்துறை இணைமணிமாலை எனவும் இருவகைகள் அமையும் வாய்ப் பினைப் பிரபந்த தீபிகை கூறுகின்றது.

## தடாக சிங்காரம்

13 பன்பவனி சோலை மலர்ப்பலி வாவிவர
மின்னொருத்தி மின்போல் வியனெய்தக்—கன்னிக்
கிறைமோகத் தாற்சோலை யேற்றவெல்லாம் பாட
லறியுந்த டாகசிங்கா ரம்.

தடாக சிங்காரம் எனும் இவ்வகை பிரபந்தத்திரட்டில் மட்டுமே அமைவதாம்.

அரசன் உலாப்போந்து, சோலைசார்ந்த பொய்கைக்கரை வர, அங்கவன் கண்ட தெய்வமகள் வானில் மறைய, அவள்மேல்

அவனுற்ற காதலால், இயற்கைச் சூழல் மாற்றமுற்றதாகப் பாடல் இது.

சிருங்காரம் என்ற காமச்சுவை குறிக்கும் சொல் இங்குச் சிங்காரம் என அமைகின்றது. (12)

## சடானனம், நொண்டி

14 கலிப்பாவுந் தாழிசையு நான்மணிமேற் காட்டல்
நலத்துறுச டானன நற்பா—வலிக்காலிற்
காலற்ற வேகாங் கிரிகலிவெண் பாச்சிந்தாய்க்
கோலுற்றார் நொண்டியென்று கொண்டு

சடானனம், நொண்டி எனும் வகைகள் விளக்கப்படுகின்றன. இவ்விருவகையும் பிறபாட்டியலால் கூறப்படாதனவாம்.

சடானனம், ஆறுபாடலாலான இலக்கியத்திற்குப் பெயராகின்றது (சடானனன் = அறுமுகன்). நான்மணி மாலைக்குக் கூறிய வெண்பா, கலித்துறை, அகவல், அகவல் விருத்தம் என்ற நூற்பாவுடன் (11), கலிப்பாவும் தாழிசையும் இணைந்து தொடர இவ்வகை உருவாகின்றது. ஆறுபாடலான சட்கம் எனும் இலக்கியம், இயைபு பற்றி இங்கு நினைக்கத் தக்கது.

வன்செயல் காரணமாகத் தண்டிக்கப்பட்டு, ஒருகாலிழந் தலைக் கூறுவது ஏகாங்கிரியாம் (ஏக+அங்கிரி : ஒரு கால்). இது நொண்டியெனவும் கூறப்படும். இவ் இலக்கியவகை கலி வெண்பா சிந்து யாப்புகளில் இயலும். நொண்டிச் சிந்து எனவும் நொண்டி நாடகம் எனவும் இது இலக்கிய வழக்கில் அமைகின்றது. பரத்தமை காரணமாகப் பொருளிழந்து இழிவு பட்ட நிலையில், திருடச் சென்று கால் தறிபட்டும், பிடிக்கப் பட்டு மாறுகாலும் மாறுகையும் வெட்டித் தண்டிக்கப் பட்டும் துன்புற்றவன் மனந்திருந்தி இறையருள் காரணமாகக் குறை நீங்கி மகிழ்தலைக் கூறுவது இதன் பொருண்மை. பொதுமக்கள் இலக்கியமாகவும், இறையாற்றலும் தலப்பெருமையும் கூறும் நோக்குடனும் அமையும் இவ்விலக்கிய வகை பதினெட்டு-பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருவழக்கி லிருந்தது. சீதக்காதி நொண்டி நாடகம் குறிப்பிடத் தக்கது. (13)

## பன்மணிமாலை, சின்னப்பூ

15 ஊசலொரு போகொழிய வோதுங் கலம்பகப்பா
வா சமுறும் பன்மணி மாலைநூ—றாசிலெண்ணாங்
கூவு தசாங்கத்துக் குப்பத்தாய் நேரிசைவெண்
பாவுரைத்தல் சின்னப்பூப் பார்

பன்மணிமாலை, சின்னப்பூ எனும் இரு பிரபந்த இலக்கணம் தரப்படுகின்றது.

கலம்பகத்தின் உறுப்புகளுள், ஊசல், ஒருபோகு எனும் இரு உறுப்பின்றி, நூறுபாடல் அமைவது பன்மணிமாலையாகும். தசாங்கங்களைப் பத்து நேரிசை வெண்பாவில் பாடுவது சின்னப் பூவாம்.

பன்மணி மாலைக்குக் கலம்பக மாலை என்ற பெயரைப் பன்னிரு பாட்டியல் பயன்படுத்துகின்றது. இருபெயரும ஒரு நூலைக் குறிக்குமாற்றை, 'பன்மணி மாலையாம்; சொல்லுவர் இதுவே கவம்பக மாலை ஆகுமே' எனப் பிரபந்த தீபிகை தெளிவு படுத்துகின்றது. நீக்கப்படும் கலம்பக உறுப்புப் பற்றிய எண்ணத்தில் நூல்களிடையே வேறுபாடு அமைகின்றது. பன்னிரு பாட்டியல் ஒருபோகும், அம்மனையும் நீக்குதலை மொழிய, பிற நூல்கள் ஒருபோகு, அம்மனையுடன் ஊசலையும் நீக்குதலைக் கூறுகின்றன. பிரபந்தத் திரட்டு, பின்னும் சிறிது வேறுபட்டு ஒருபோகு, ஊசலை நீக்குவது நினைக்கத்தக்கது. ஒரு இலக்கி யத்தின் சிதைவு அல்லது குறையுரு பிறிதொரு இலக்கியத்தை உருவாக்கும் இந்நிலை எண்ணற்குரியது.

பன்னிரு பாட்டியல், சின்னப்பூவுக்குரிய தசாங்கங்களின் பட்டியலாக மலை, யாறு, நாடு, ஊர், பரி, களிறு, கொடி, முரசம், தார், பெயர் என்பனவற்றைத் தருகின்றது. வெண்பா வினால் இந்நூல் அமையும் என்பது ஒவ்வொரு சின்னமும், பத்து, ஒன்பது, ஏழு, ஐந்து அல்லது மூன்று பாடலில் பாடப்படும் என் பதும் பல நூலிடை யமையும பொதுக்கருத்து. பன்னிரு பாட்டி யல் தரும் விளக்கம் சிறிது விரிவாக அமைகின்றது. வெண்பாவின் முதலிரு அடியில் சின்னததின் தொழிலைக் கூறி, பினனீரடியில் தலைவன் இயற்பெயர்கூறி, அவனுக்குஅச சின்னத்தின் உரிமை யைத் தொடர்புபடுத்திக கூறலும் வேண்டுமென அது விதந் தோதுகிறது.

தத்துவராய சுவாமிகளின் சின்னப்பூவெண்பா, இவ்வகையின் ஒரே நூலாக அமைகின்றது. (14)

## விருத்தம், அலங்கார பஞ்சகம்

16 ஊர்குடைகோ னாடுநக ரொள்வேல் கரிபரிவாள்
வார்சிலைமேன் மன்பா வரலப்பா—வேர் வெண்பா
வார்விருத்த மன்பாக் கலித்துறைமன் சந்தமலங்
காரபஞ்ச கப்பாவாக் காட்டு

விருத்தம், அலங்கார பஞ்சகம் என்பன இங்கு விளக்கப்படுகின்றன.

அரசனுக்குரிய குடை, கோல், நாடு, நகர், வேல், கரி, பரி வாள், சிலை எனும் ஒன்பது உரிமைப் பொருட்களும் பற்றி யமையும் ஆசிரியப்பா தனியிலக்கியவகை உருவாக்குகின்றது. பன்னிரு பாட்டியல் முதல் பெரும்பான்மை நூல்களால் விளக்கப்படும் இது, விருத்த இலக்கணம் எனப்படுவதோடு, ஒவ்வொரு உடமையும் தனியிலக்கியம் ஆதலும் கருதப்படுகின்றது. யாப்பாக ஆசிரியம் அமைதல், பிரபந்தத் திரட்டுக்குமுன், பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல் ஆகியனவற்றில் தெரிகின்றது. பிற, பெரும்பாலும் விருத்தம் அல்லது ஆசிரிய விருத்தம் எனவே மொழிகின்றன. பத்துப்பாடல் எனும் அளவும் தென்படுகின்றது.

பிரபந்தத்திரட்டின் முடிவுக்குப்பின் அமையும் பிரபந்தப் பட்டியல் இதனை இராசவிர்ததி எனக்குறிக்கின்றது (விர்த்தி > விருத்தி > விருத்தம). செல்வம் அல்லது அடையாளப்பொருள் (விருது) எனும் அடிப்படைப் பொருள்நிலை அரசர் பாவான ஆசிரியத்தின் விருத்தம் எனும் வடிவும் இங்குப் பொருந்துகின்றன. இக்கருத்துப் பற்றி இவ்விலக்கியம் விருத்தம், விருத்த வகை, விருத்தவிலக்சணம் எனச் சுட்டப்படுகின்றது போலும்.

அலங்கார பஞ்சகம், ஐவகைசெய்யுளாலான அழகிய மாலை எனப் பொருள்படுகின்றது. வெண்பா, விருத்தம், அகவல், கலித்துறை, சந்தம் என்பன ஐவகை யாப்பு நிலையாக இங்கும் பெரும்பான்மையான பாட்டியல்களிலும் குறிக்கப்படுகின்றது. விருத்தம் என்பதைச் சிதம்பரப் பாட்டியல் வஞ்சி விருத்தம் என்கிறது. பிரபந்தத் திரட்டு இதன் பாடல் எண்ணிக்கையைக்

குறிக்காத போதும், ஐந்துபாடல் (இ.வி), பத்து (பி.ம), இருபத்தைந்து (தொ.வி), நூறு (பி.தீ) எனப் பல்வேறு கருத்து நிலவுகின்றது. அந்தாதியாக இந்நூல் அமைய வேண்டுமெனும் எண்ணம் பிரபந்த மரபியல், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகியவற்றில் உண்டு.

அரசனுக்குக் கருதப்பட்ட விருத்தவகை இறைவனுக்கு ஆனதை அருணகிரிநாதரின் வேல்விருத்தம் போன்றன காட்டுகின்றன. ஐந்து பாடலால் அமையும் பஞ்சகமும், ஐவகைப் பாடலால் அமையும் பஞ்சரத்தினமும், ஐவகை யாப்பு முறையே தொடர்ந்த இருபத்தைந்து பாடலால் ஆன அலங்கார பஞ்சகமும் தமிழிலக்கியத்தில் இடம்பெறுகின்றன. (15)

## பொய்ம்மொழி யலங்காரம், மெய்ம்மொழி யலங்காரம் தெய்வக் கையுறை

17 பொய்ம்மொழியு மெய்ம்மொழியும்போற்றுமலங் காரமிரண்
டய்யகலி வெண்பாவா லாற்றுவன—தெய்வத்தைக்
கூவித் துதித்துக் குவிமுலையைக் கைக்கொடுத்த
லோவிறெய் வக்கை யுறை

பொய்ம்மொழி யலங்காரம், மெய்ம்மொழி யலங்காரம், தெய்வக் கையுறை எனும் இவ் இலக்கியவகைகள் இந்நூற்கு மட்டுமே உரியன.

முன்னிரு இலக்கியமும் கலிவெண்பா யாப்பில் அணிநலம் பொருந்த அமைவன. பொய்மமொழியால் போற்றுதலாக முன்னதும், மெய்ம்மொழியால் போற்றுதலாகப் பின்னதும் அமைகின்றமையால் புகழாப் புகழ்ச்சியும், தன்மை நவிற்சியும் இவற்றில் முறையே கருதப்பட்டிருக்கலாம்.

தெய்வத்தைத் துதித்து, பெண்ணைக் கையுறையாக அளித்தல் தெய்வக் கையுறையாம். (16)

## குறியறி சிந்து

18 பவனிமின்னாற் கூட்டமயற பாவைவரல் கண்டு
திவளார நீககியெதிர் செவ்வே—ளவனுறுப்புக்
கூறலரண் கூடல் குறியகவ னாடுபிற
சோறல் குறியறி சிந்து

குறியறிசிந்தின் இலக்கணம் விரிக்கப்படுகின்றது.

தலைவன் பவனி வரல், மகளிர் கூட்டம் காமுறுதல், தலைவி வரல், உலாத் தலைவனைக் காணல், காமத்தால் துவள்தல், அவளை அங்கிருந்து நீக்கல், காமபாணத்தால் மன்மதன் எதிர்க்க உவாலம்பனம், தலைவனுறுப்பழகு பாங்கியிடம் கூறல், கூடலிழைத்தல், குறவஞ்சியிடம் குறி வினாவல், தலைவனது நாடு போன்றவற்றை அவள் கூறல் என்பன இதன் பொருள் நிலை. சிந்து என்பதால் யாப்பு குறிக்கப்பட்டது போலும்.

இப்பெயர்நிலை பிற பாட்டியல்களிலோ, இலக்கியத்திலோ அமையாத போதும், பாட்டியல் கூறும் குறத்திப்பாட்டும், இலக்கியம் அளிக்கும் குறம், குறவஞ்சி, குறவஞ்சிநாடகம், குளுவ நாடகம் என்பனவும் சிறிது ஒப்புமை காட்டுகின்றன. (17)

## பண்ணை விசித்திரம்

19 மாத ரிருவரிறை வன்னாடு மீறுதிணை
யோதுநதி மேகமழை யொள்ளிறைவ—னீதியா
நென்மாடு கோட்டை நாறிட்ட னின்றேச
லன்னசிந்து பண்ணைவிசித் திரம்

பண்ணைவிசித்திரம் எனும் வகை விளக்கப்படுகின்றது.

மூத்த பள்ளி, இளைய பள்ளி ஆகிய இருவரும் குடும்பனாகிய தலைவனும் இதன் பாத்திரங்கள். நாட்டு வளமும், குடிப்பெருமையும் கூறப்படுகின்றன. நதியில் நீர்வரவு, அதற்குக் காரணமாக மேகம் மழை பெய்தலும், தலைவன் தகுதியும்; நெல் வகை மாட்டுவகை கூறல; காவலில் வைக்கப்படல், நாற்று நடுதல் முதலியன; இரு பள்ளியரும் ஏசல் - என இதன் பொருட்கூறு அமைகின்றது. இங்கும், சிந்து யாப்புவடிவாகின்றது.

இப்பெயர்நிலையும் பிறபாட்டியல்களிலோ இலக்கியங்களிலோ காணாத போதும், பாட்டியல் கூறும் உழத்திப்பாட்டும், பள்ளு நாடகமும், இலக்கியம் தரும் பள்ளும் இயைபு காட்டுகின்றன. பள்ளிலக்கியங்கள் பல பயின்றபோதும், நவநீதப் பாட்டியலின் மிகைபபாடலே இதற்கு முதலில் இலக்கணம் அமைக்கின்றது. சதுரகராதி இதனை முழுவதும் பின்பற்றியது.

இவ்வெண்பா, ஈற்றயற் காய்ச்சீர்முன் மலர் வரலால் தளை தட்டியது எனத் தோன்றினும், முன் கருதியது போன்று (1), ஒலி கருதி தளை நோககின் (திரம் > த்ரம்) செவ்வியதாம். (18)

## ராசாங்க மாலை, மணியூசல்

20 வெண்கலியா லேவிருதுண் டானவெல்லா மேயுரைத்தல்
மண்ணுலகில் ராசாங்க மாலையா—நண்விருத்தத்
தாற்கலித் தாழிசையாற் சாற்றுபிற வாலாட்ட
லாற்று மணியூச லாம

ராசாங்கமாலை, மணியூசல் என்பன விளக்கப்படுகின்றன.

அரசர்க்குரிய விருதுகள் (கொடி, வெற்றி, அடையாளம்) எல்லாவற்றையும் வெண்கலியால் பாடல் ராசாங்க மாலை. விருத்தத்தால் அல்லது கலித்தாழியால் அல்லது பிறவற்றால் ஊசலாட்டுவதாகப் பாடல் மணியூசல்.

ராசாங்க மாலை பற்றிய குறிப்பு பிறநூல்களில் இல்லை. ஆயின், தசாங்கம் பற்றி யமையும் சின்னப்பூ, தசாங்கப்பத்து, தசாங்கத்தயல் போன்றனவும் இந்நூலின் தசாங்க வன்னிப்பும் (9) சிறிது பொருளியைபு காட்டுகின்றன. யாப்பு நிலையும், விருது எவை எனும் வரையறை இன்மையும், மாலை அமைப்பும் இங்குத் தனித்தன்மைக்குக் காரணம் எனலாம்.

ஊசல்பற்றிய எண்ணம வெண்பாப் பாட்டியல் முதலே அமைகினறது. பொன்னூசல் என நவநீதப் பாட்டியல் குறிக்கும். ஊஞ்சல், பொன்னூஞ்சல், ஊஞ்சல் பாட்டு எனவும் இலக்கியம் பெயர் பெறுவதுண்டு. ஆடீர் ஊசல், ஆடாமோ ஊசல் எனும் தொடர்கள் இங்கமைதலை முத்துவீரியம் சுட்டுகின்றது. சிலம்பின் ஊசல்வரியில் இந் நாட்டார் இலக்கியம் ஏட்டுப்பாடலாகின்றது. மன்னனைப் பாடிப் பின் இறைவனையும் ஊசல் பாட்டில் அமைக்கின்றனர். மணிவாசகரின் பொன்னூசல இதற்குச் சான்றாம். கலம்பகம், பெண்பாற்பிள்ளைத் தமிழ் போன்றன இவ்வூசலை உறுப்பாகக் கொள்வதுண்டு. (19)

## ஒன்பான்மணிமாலை, தசப்பிராதுற்பவம்

21 ஒன்பான் மணிக்கு முயர்திரிபாய்ச் சாற்றலே
ஒன்பான் மணிமாலை யோர்மாயன்—றன்பிறப்பை
மன்விருத்தம் பத்தாலே வாழ்த்தியே காவென்றல்
பன்றசப்பி ராதுற் பவம்

இப்பா, ஒன்பான்மணிமாலை, தசப்பிராதுற்பவம் ஆகிய வகைகட்கு இலக்கணம் வகுக்கின்றது.

ஒன்பது பாடல்களில் நவமணிகளைத் திரிபு எனும் அணியாக இடம்பெறக் கூறுவது ஒன்பான்மணிமாலை. திருமாலின் பத்துப் பிறப்புகளை ஆசிரியவிருத்தம் பத்தால் பாடிக் காக்க என வேண்டல் தசப்பிராதுற்பவமாம்.

பெரும்பான்மை நூல்கள் நவமணிமாலை எனும் பெயரையாள வெண்பாப்பாட்டியலும் இந்நூலும் ஒன்பான் மணிமாலை எனப் பெயர் தருகின்றன. ஒன்பது பாடலால் ஆவது இவ் இலக்கியம் என்பது அடிப்படை அந்தாதி இணைவின் தேவையை முத்துவீரியம் பிரபந்த தீபிகை ஆகியன சுட்டுகின்றன. பாவும் இனமும் வரும் எனப் பன்னிருபாட்டியலும், விருத்தங்களாலாவது என வெண்பாப் பாட்டியலும் பிரபந்தமரபியலும் வெண்பா முதலாக வேறுபாக்களால் அமைதல் என இலக்கண விளக்கமும் கூற வெண்பா முதல் பாவும் பாவினமுமாக அமைதல் என முத்துவீரியமும் பிரபந்த தீபிகையும் மொழிகின்றன. பிரபந்தத் திரட்டின் விளக்கம் வேறுபடுகின்றது.

பன்னிருபாட்டியல் முதலிய பல நூல்களும் மால்பிறப்புப் பற்றிய இவ்விலக்கிய வகையைக் கூறுகின்றன. உற்பவமாலை, ஆழியோன் பிறப்பு தெசப்பிராதுற்பவம் எனச் சிறிது பெயர் மாற்றத்துடன் இது அவற்றில் வழங்கப்படுகின்றது. பன்னிரு பாட்டியல் பத்து அவதாரப் பட்டியலாகச் சேல், ஆமை, ஏனம், சிங்கம், வாமனன், மூவகை இராமர், கரியவன், கற்கி என்பனதத் தருகின்றது. பாட்டுடைத் தலைவனைக் காக்கவேண்டி வாழ்த்தல் எனும் கருத்தையும் அந்நூல் வழங்குகின்றது. வாழ்த்துப் பொருண்மையை ஓரளவு குறிப்பாகப் பிறநூல் சில தருகின்றன. அரிபிறப்புப் பத்தினைப் பாடலே பொருண்மையாகக் குறிக்கப்படலும் உண்டு.

நவமணிமாலைக்குச் சிவப்பிரகாசரின் பிக்ஷாடன நவமணி மாலை முற்பட்ட சான்றாகும். பாரதியார், நவரத்தினமாலை எனும் பெயரில் இதனைக் கொள்கின்றார். தசப்பிராதுற்பவம், முழுநிலையிலன்றியும் ஓரளவு தொடக்கநிலை உருவுடன் அமைவதைப் பெரிய திருமொழியின் திருமாலின் திருவவதாரங்களில் ஈடுபடுதல் (11-4) எனும் பகுதி காட்டுகின்றது. (20)

## நயனப் பத்து, முலைப்பத்து, மடல்

22 கண்மெல் முலைமேற் கலித்துறை மன்விருத்த
மெண்ணி னயனப்பத் தின்முலைப்பத்—தண்ணு
மறம்பொருள்வீ டெள்ளியின்ப மாற்றன் மடற்கோன்பே
ருறுமெதுகை யாக நிறுத்து

நயனப்பத்து, முலைப்பத்து, மடல் எனும் வகைகள் விளக்கப்படு கின்றன.

ஆசிரியவிருத்தம் அல்லது கலித்துறையால் பத்துப்பாடல் மாதர் கண்பற்றியும் நகில்பற்றியும் அமைதல் முறையே நயனப்பத்து முலைப்பத்து எனப்படும். பன்னிருபாட்டியல் முதலே இவை அமைகின்றன. கண்பத்து பயோதரப்பத்து, அம்பகப்பத்து எனவும் பெயர் பெறலைப் பாட்டியல் வழி அறியலாம்.

அறம், பொருள், வீடு ஆகிய முப்பொருளைவிட இன்பமே, சிறந்தது என உயர்த்துக் கலிவெண்பாவாலாய இந்நூல், பாட்டுடைத் தலைவன் பெயருக்கு ஏற்ற எதுகை பெறுகின்றது. முன்பாட்டியல்கள், வளமடல், இன்பமடல் எனும் பெயரையும் ஆள்கின்றன. தலைவியைத் தனியிடத்துக் கண்டபின் அவள் பாலுற்ற அன்பு காரணமாக அவளைப் பெறவிழைந்து, அவளுருவைக் கிழியில் எழுதிக் கரும்பனையாலாகிய ஊர்தியில் செல்வது இம்மடலெனப் பன்னிருபாட்டியல் விளக்குகின்றது. கடவுள் தலைவனாமிடத்தன்றிப் பெண்டிர் மடலேறார் என்பதும் இந்நூற் கருத்து. தலைவிகூற்றாக வருவது இன்பமடல் எனவும், தலைவன் காமுற்று ஊர்வதாக அமைவது வளமடல் எனவும் கொள்ளப் பாட்டியல்கள் இடமளிககின்றன (சுவாமி 168).

தொல்காப்பியத்திலேயே மடல்பற்றிய எண்ணம் அமைந்து விடுகின்றது. ஆயின் அங்கு 'ஏறிய மடற்றிறம்' (997) பெருந் திணைக்குறிப்பாக அமைகின்றது. ஆழ்வாரின் பெரிய சிறிய திருமடல்கள் கடவுள் மாட்டு நயந்த பெண்டிர் நிலையைக் காட்ட பிற்காலத்து மடல்சில தலைலன் செயலாக உருவாகு கின்றன. (21)

## பாதாதிகேசமாலை, கேசாதிபாதமாலை அங்கமாலை

23 பாதாதி கேசமே கேசாதி பாதமே
யோதலப்பேர் மாலையா மொண்மேனி—மீதுறுப்பைச்
சாற்றி யுரைத்தல் தழையங்க மாலையாம்
வீற்றார் வெளிவிருத்த மே

பாதாதிகேசமாலை, கேசாதிபாதமாலை, அங்கமாலை எனும் வகைகள் இங்கமைகின்றன.

பாதாதிகேசமும், கேசாதிபாதமும் பற்றிப் பேசுவன முறையே அப்பெயர் பெறும் மாலைகளாம். ஒள்ளிய உடம்பின் உறுப்புகளை உரைப்பது அங்கமாலையாம். இது வெளிவிருத்த யாப்பால் அமையும்.

இம்மூவகை இலககியங்களும் பெருமபான்மைப் பாட்டியல் களால் பேசப்பட்டனவே. பாதாதிகேசம் எவையென அகஅடி முதல் கூந்தல் வரை முப்பத்திரண்டு உறுப்புகளின் பட்டியலைப் பன்னிருபாட்டியல் தருகின்றது. உறுப்புப் பட்டியலை நோக்க, பெண்ணே பாடற்பொருளாவாள் எனும் எண்ணம் எழுகின்றது. யாப்பாகக் கலிவெண்பா குறிக்கப்படுகின்றது. மாலை என இவையிரண்டும் பெயர்பெறல் முன் நூல்களில் சுட்டப்பட வில்லை. இவ்விரு இலக்கியங்களும், பிறபேரிலக்கிய உறுப்பாகப் பயில்வதுண்டு. காபபியங்கள் தரும் மாதவியின் விரல்முதல் தலைவரையுளள அணிகளும், சீதையின கோலங்காண் படல வருணனையும் மடலபிரபநதம் தரும் தலைவியின் இததகு முழு வருணனையும் இநநிலையின. திவவியப் பிரபந்தத்தின் திருப் பாதாதிகேச வண்ணம் (பெரியாழ்வார் திருமொழி 1.3) போன்றன தனிநிலையின எனத்தகும்.

அங்கமாலையும், உறுப்புகளைப் பாடலையே பொருளாகக் கொண்டுள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இது ஆதலினை முத்துவீரியம், பிரபந்ததீபிகை, பிரபந்ததீபம் ஆகியன சுட்டு கின்றன. இது வெளிவிருத்த யாப்பில் அமையும் என்பது பொதுக்கருத்து. வெண்பாவிலும வரலாம் எனும எண்ணமும் உண்டு (மு வீ, பி தீ, பிர.தீ) தொன்னூல் விளக்கம் (262), கலி வெண்பாவையும் வடிவாகச் சுட்டுகின்றது. பெரும்பான்மை நூல்களில் பாடலெண் தரப்படாவிடினும் பிரபந்ததீபம் 'முப்பான் மொழிதல்' எனச் சுட்டுவது எண்ணத்தக்கது.

அப்டரின் அங்கமாலை பெயர்நிலையில் பொருத்தம் காட்டினும் உடலுறுப்புகள் இறைவனைப் பணியவே அமைநதன எனும் கருத்துடன், உறுப்புகளை விளித்து மொழிதலாகிப் பொருள் நிலையில் வேறுபடுகின்றது. (22)

## புறநாட்டுச் செய்கை

24 வேந்தனத தாணிமிசை யுற்றொற்றர்ப் போக்கித
தாநதிரும்பி வேந்தரியல் சாறுவது—வாய்ந்த
புறநாட்டுச் செய்கை புறநாட்டார் பொன்னைத்
திறைகுவித்த லப்பெயர்ப்பாச் செப்பு

புறநாட்டுச் செய்கை என விளக்கப்படும் இவ்இலக்கியம் பிற பாட்டியல்களி லமையாததாம்.

இதற்கு இரு பொருட்கூறுகள் இருப்பதாகத் தெரிகின்றது. அரசவையில் அமர்நதிருக்கும் வேந்தன் முன், அவனால் அனுப்பப் பட்டு மீணடு வந்த ஒற்றர்கள் பிறநாட்டு வேந்தர் இயல்பு கூறுவது ஒன்று. பிறநாட்டாா திறையாகப் பொன்னைக் கொணடுவந்து அளித்தலும் புறநாட்டுச் செய்கையாம். புறநாடு என்பதால் அவனரசுககுப் புறமபேயுள்ள நாடு, அல்லது சுற்றுப் புறநாடு எனபன குறிக்கப்பட்டிருக்கலாம்.

'பெயராக' எனும் பொருளில் 'பெயர்ப்பா' எனும் ஆட்சி அமைகினறது (23).

## தாமரை நோன்பு

25 கங்குவில்வண் டேந்திநகை கால்பானு வான்மலர்த்திப்
பங்கய மாதொருத்தி பாங்கியிடஞ்—செங்கை
கொடுக்கவே கூறலேடார் தாமரை நோன்பு
எடுத்தல் கலிவெண்பா வே

தாமரை நோன்பு எனும் இவ்வகையும் பிரபந்தத் திரட்டிற்கே யுரியதாம்.

இரவில, வண்டு தங்கும்படி, ஒளிவீசுகின்ற கதிரவனைப் போலத் தாமரை மலரை மலரச்செய்து, பெண்ணொருத்தி தன் தோழிக்குக் கொடுப்பதாகக் கலிவெண்பாவில் பாடுவது தாமரை நோனபு.

இது செவ்வணியாக இருக்கலாம். இரவில் அனுப்புவதாலும் செம்மலர் அனுப்புவதாலும், தோழிவாயிலாக அனுப்பப் படலாலும் இவ்வெண்ணம் எழுகினறது. சிலப்பதிகாரம் 'வச்சிரவேந்தற்குக் கலிகெழுகூடல் செவ்வணி கட்ட'லைத் தருகின்றது (14 95). தொல்காப்பியம், கற்புக்காலப் பிரிவில் பரத்தமையைக் காட்டியும், பூப்பின்பின் ஈறாறுநாளும் பிரியான (1133) எனக் கூறியும் அமைய, நம்பியகப்பொருள் கற்பியலில, பரத்தையிற் பிரிவில் செவ்வணியைச் சுட்டுகின்றது.

தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி யிழையர்கண் டழுங்கிக் கூறலும் (205)

கோவை யிலக்கியங்கள் இதனைக் கிளவித்தொகையில் கொள்கின்றன.

நோன்பு எனும் இதன் பெயர்ப்பொருத்தம் ஆய்தற்குரியது. பிரிவு நீக்கம், தலைவனை அடைதல எனும் ஒருமுக எண்ணம் பற்றியும் இது நோனபாகலாம். (24)

## வாடாத மாலை கனகாபிடேகம்

26 மாலாற் றவம்புரிந்து மாதுலகேழ் கன்னிமார்
மாலைதரல் வாடாத மாலையாம்—வால்மின்னார்
பாங்கியர்க்கு வேந்தன் கனகமுடி பாய்விட
லாங்கன காபிடே கம்

வாடாதமாலை, கனகாபிடேகம் எனும் இவ்விருவகைகளும் இந்நூற்கே உரியனவாம்.

காதல் மயக்கம் காரணமாக, அன்புற்றவனைப் பெற விழைந்து தவமியற்றிய பெண்ணிற்குக் கன்னியர் எழுவர் தூதாகி அவன் மாலை கொணர்ந்து அளித்தல் வாடாதமாலை. தூயமின்னல் போன்ற அழகிய தலைவியின் தோழியர்க்குப் பரிசாக வேந்தன் பொற்கிழியனுப்புதல் கனகாபிடேகமாம்.

இங்குத் தவமியற்றல், நோன்பிருத்தலையோ, அனறி, அவனைப் பெறும் எண்ணம் ஒன்றே கொண்டமைதலையோ குறித்திருக்கலாம். 'வாடாதமாலை' என்றதால் தெய்வத்தின்

பால் ஏற்பட்ட காதல் எனவும் அவர்களின் மாலைவாடாமை யும் நினைக்கப்படலாம். கன்னியர் எழுவர் தவம்புரிந்து மாலை அளித்தனர் எனவும் கொள்ளலாம்.

வீராபிடேகம், விசயாபிடேகம் என வெற்றி கொண்ட மன்னன் முடிசூடும் நிலையை நோக்க, கனகாபிடேகம் என்பதும் பொன்முடிசூடலைக் குறித்ததோ என ஐயுறலாம். பட்டாபி டேகம் (74) தன் மகனுக்கு முடிசூட்டலைப் பொருளாகக் கொள்ள, கனகாபிடேகம், அரசன் தன் பக்கத் துணைவியரான அரசியருக்கு முடிசூட்டலைக் குறித்திருக்கலாம். (25)

## ஆற்றுப்படை, நட்சத்திரமாலை

27 வாணர்யாழ்ப் பாணா நடாபொருந மாரெணுரு
சேணாற்றி லுற்றதன்கை செப்பகவல்—கோணாத
வாறறுப் படையுடுப்பேர்க் கார்த்திரித் தல்சந்த
மேற்றநட் சத்திரமா லை

ஆற்றுப்படை நட்சததிரமாலை எனும் வகைகள் விளக்கப்படு கின்றன.

பாவாணா, பாணர், கூத்தர், பொருநர் எனபோர் தொலை வழியில உற்றநிலையை அகவற்பாவில் கூறுவது மாறுபாடற்ற ஆற்றுப்படையாம். இருபததேழு நாண்மீன்களின் பெயர் திரிபாய் அமையும்படிச் சந்தஇனபம பொருந்தப் பாடல் நட்சத்திர மாலையாம்.

பாட்டியலும் இலக்கியமும் ஆற்றுப்படையைப் பரக்கப் பேசுகின்றன. ஆற்றுப்படுத்தப் படுவோராகப் புலவர், பாணர், பொருநர், விறலியா, கூத்தரைப் பன்னிரு பாட்டியல் உரைக் கின்றது. புலவராற்றுப்படை கடவுட்குரியது என்பது இங்கமை யும் சிறப்பு எண்ணமாம். பிறபாட்டியல் சில, புலவரை அல்லது விறலியைவிட்டு விடுவதால், நால்வரை ஆற்றுப்படுத்தல் எனச் சுட்டுகின்றன. தொல்காப்பியப் பாடாண்திணைக் குறிப்பும் சங்க ஆற்றுப்படைகளும் இவ்வகையின் தோற்றக்களனாகக் கொள்ளத்தக்கன. தலைவன் கீர்த்தியும், கொடையும், கொற்ற மும் ஆற்றுப்படையில் இலங்கவேண்டும் எனப் பிற்காலப் பாட்டியல் விதந்தோதுகின்றன (மு.வீ, பி.தீ, பிர.தீ) இலக்கிய நிலையில் இன்று, தமிழிடம் ஆற்றுப்படுத்தல், மாணவரை

ஆற்றுப்படுத்தல் என்பனபோன்று பிறநிலைகளும் கிளைத்துள்ளன.

நட்சத்திரமாலையை, இருபத்தேழு பாடலாலான பிரபந்தமாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. பிறபாட்டியல்கள் இத்தகையதொருவகை கூறாதபோதும், சில சுட்டும் தாரகை மாலையின் விளக்கம், சிறிது சார்பு காட்டுகின்றது. பன்னிரு பாட்டியல் கூறும் இருபொருட்புணர்நிலை, வெண்பாப் பாட்டியல் கூறும் சந்த இணைவு, பிரபந்த மரபியல் வகுக்கும்.

> தாரகை இருபத் தேழையும் தகைபெறச்
> சொலலணி வகுப்பில் தூசி அணிதக
> வழுததுதல் தாரகை மாலை (17)

எனும் விளக்கம் ஆகியன இங்கு ஒப்புநோக்கத் தக்கன. (26)

## சின்ன மாலை, வருக்க மாலை

28 மயக்க வடிவஞ்சி யான்மா னணிசிறக்க
வியத்தன் மிளிர்சின்ன மாலை—நயத்ததாய்
மன்னகவ லேவருக்க மாயெட்டாய்ப் பாடினால்
மன்னும் வருக்கமா லை

சின்னமாலை, வருக்க மாலை ஆகியன விளக்கப்படுகின்றன.

பெண்ணின் அழகு சிறக்க வியந்து பாடும் அகவல் அடியும் கலியடியும் கலந்த வஞ்சிப்பா, சின்னமாலை. வருக்க எழுத்துகளால் தொடக்கம் கொள்ளும் எட்டு ஆசிரியப்பாவில் பாடுவது வருக்கமாலை.

சின்ன மாலை எனும் வகை இந்நூற்கே யுரியதாகத் தோன்றினும், பாட்டியல் சில கூறும் புகழ்ச்சி மாலை, இதனோடு மிகுதியான தொடர்பு காட்டுகின்றது. மகளிர் புகழ் உரைத்தற் பொருண்மையும், மயக்கவடி வஞ்சி வடிவும் இரண்டிலுமமைந்து இயைபு கொள்வதால், பெயர் மாறுபடினும் ஒரு வகையாகக் கொள்ளத் தக்கன எனலாம். சீரும்பேரும் சிறக்க உரைத்தல் எனவும் பேசுகுணப் பேரடுக்கி ஓதல் எனவும் இகழ்ச்சியில் குலம் இயையப் பாடல் எனவும் இதனைப் பாட்டியல்கள் பலவாறு விளக்குகின்றன.

வருக்கமாலை, பன்னிரு பாட்டியல் முதலே அமையும் வகை யாகும். மொழிமுதலாகிய எழுத்துக்கெல்லாம் வருக்கம் உரைத் தல் என்ற கருத்து அங்கு நிலவுகின்றது. எட்டுப்பாடல், அகவல் எனும் எண-யாப்பு நிலைகள் அங்கமைந்திலது. சிதம்பரப்பாட் டியலே, முதலில், உயிர், க, ச, த, ந, ப, ம, வ என்பனவற்றினைப் பாட்டுக்குரிய எட்டு வருக்கமாகச் சுட்டுகின்றது. முத்துவீரி யமும், பிரபந்த தீபிகையும் வருக்க எழுததினுககு ஒவ்வொரு செய்யுள் எனப் பொதுவாகக் கூறுகின்றனவே யொழிய அகவல் வடிவைக் கூறிற்றில.

திருவேங்கட வருக்கமாலை, மொழிமுத லெழுத்துகள் அனைத்தும் பொருந்தும்படியமைய, மதுரை மீனாட்சியமமை உயிர் வருக்கமாலை போன்ற நூல்கள், உயிரெழுத்துகள் கொண்டு மட்டுமே இதன் துணைவகை யொன்றமைய வாய்ப் பளிக்கின்றன. (27)

## முரண் வஞ்சி

29 வஞ்சிப்பா வாலமரம் வாய்த்தசெய்கை யெல்லாமு
மெஞ்சா திறைவ னிசைத்தலாய்ப்—பஞ்சார்
சரணா யுரைத்த றலந்தன்னி லெனறு
முரண்வஞ்சி முன்னி யறி

முரண்வஞ்சி எனும் இவ்வகையும் இந்நூற்கே உரியதாம்.

இவ் இலக்கியம் வஞ்சிப்பாவில் உருவாகின்றது. போர்க் களத்தின் நிகழ்வுகளை எல்லாம் (செம்பஞ்சுக குழம்பு ஊட்டப் பட்ட கால்களையுடைய பெண்ணே), அக்களத்திலேயே அரசன் கூறுவதாக அமைத்தல் முரண்வஞ்சி.

அரசன் தன் வெற்றியைத தானே கூறுதல் இயல்பு இல்லாமை பறறி இது முரண எனப்பட்டது போலும். வஞசி, அரசனின் போாய்பற செலலும பாங்கைச் சுட்டுவது தொல் காப்பியம் முதல் அமைகின்றது (1008). புறப்பொருள வெண்பா மாலையும தொடர்ச்சி காட்டுகினறது. ஆயின் அங்கெல்லாம் இம 'முரண வஞ்சி' எனும் நிலை காணப்பட்டிலது.

பாட்டியல்களும் வஞ்சிப் போர் பற்றியும், தொடர்புடைய களச்செய்திகள் பற்றியும் வஞ்சிமாலை, வரலாற்று வஞ்சி, மறக் கள வஞ்சி, செருககள வஞ்சி, போர்க்கெழு வஞ்சி, மெய்ககீர்த்தி

வஞ்சி போன்ற பல நிலைகளைச் சுட்டிய போதும், பிரபந்தத் திரட்டுப் போன்ற வஞ்சிமுரண் நிலை அங்கு அமையாமை குறிப் பிடத்தக்கது. (28)

## தூது

30 எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை
சகிகுயிலெனஞ சார்தென்றல் வண்டு—தொகைபத்தை
வேறுவே றாய்ப்பிரித்து விதரித்து மாலைகொண்டன்
பூறிவா வென்ற தூது

தூது எனும் வகை விளக்கப்படுகின்றது.

எகினம், மயில, கிள்ளை, எழிலி, பூவை, சகி ,குயில், நெஞ்சு, தென்றல், வணடு எனும் பத்துத் தூதுப் பொருட்களையும் தனியே விரிதது, 'தலைவனின் மாலையைப் பெற்று அன்பு பெருக வா' என்பது தூது.

இவ்வாறு பத்துத் தூதுப்பொருட்களைப் பட்டியல செய்தல் இங்குந்தவிர, இரத்தினச் சுருக்கத்தில (7) மட்டுமே காணபபடு கின்றது. தொல்காப்பியம (1139), உயர்திணையில் தூது செல் வோராகத் தோழி, தாய, பாாப்பான், பாங்கன, பாணன, பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்போரைச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. நவநீதப் பாட்டியல முதல் தூது இலக்கியப் பட்டியலில இடம் பெறு கின்றது கலிவெண்பா யாப்பாகச் சுட்டப்படுகின்றது. இரு திணைப் பொருளும் தூதாக அமையலாம் எனும் கருத்து அமை கின்றது. ஆணும், பெண்ணும் இவ்வாறு தாம காமுற்றோர் பால் தூதனுப்பலாம் எனப் பிற்கால நூல்கள் கூறும் (மு.வீ, பிர.தி).

தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றன புறத்தூதை யும், அகத்தூதையும் காட்டிய போதும், பாட்டியல் காலம் அகத் தூதினையே தனியிலக்கியம ஆக்குகின்றது. பண்டைய தனிப் பாடல் மட்டுமன்றி, காப்பியங்களும், பக்தி இலக்கியமும், தூதுக் குக் களமமைத்துள்ளன. மானிடத் தலைவன் மாட்டன்றி, இறைத் தலைவன் மீதும தூதிலக்கியம் எழ இவை காரணமாம். கொற்றவன்குடி உமாமதி சிவாசாரியாரின் நெஞ்சுவிடு தூது முதல் தனித்தூதிலக்கியமாம். தூதிலக்கியங்களில், உயர்திணையை

அனுப்பும் விறலிவிடுதூது ஆடவன் அனுப்பும் தூதாகவும், பிற பெருமபாலும் தலைவன்பால் தலைவி அனுப்பும் தூதாகவும் அமைகின்றன.

தூதுப்பொருட்கள், பிரபந்தத்திரட்டின் பட்டியலுள் அடங்காது பரந்துளளதைத் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. 'அன்பு கூறல்', 'மாலை கொணர்தல்' எனும் பொருண்மையும் செருப்பு விடுதூது போன்றவற்றில் மாறியுள்ளன.

பிற இலக்கிய வகைகளில் தூது ஒரு கூறாகப் பொருந்துவதைக் கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்றன காட்டுகின்றன. (29)

## உலா

31 பேதைமுத லேழ்பருவப் பெண்கண் மயக்கமுற
வோதுமறு குற்றானொள் வேலோனென்—றேத
மறக்கலி வெண்பாவின் மாட்ட லுலாவாம்
புறந்தசாங் கந்தாங்கிப் போற்று

உலா இலக்கியம் பற்றி இப்பாடல் பேசுகின்றது.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் எழுபருவப் பெண்களும காமுற்று மயங்கத் தலைவன் தெருவில் வந்தான் எனக் குற்றமற்ற கலிவெண்பாவில் கூறுவது உலா. தலைவனின் தசாங்கமும் இதன்கண் இடம் பெறும்.

அகமும் புறமும் இணைந்த இவ்விலக்கியம், தொல்காப்பியத்தின், 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (1031) என்பதில் விதைகொண்டுள்ளது காப்பியங்களும் முத்தொள்ளாயிரக கைக்கிளைப் பாடலும் உலாவரும் தலைவனையும் காதலுறும் தலைவி-பெண்டிரையும் படைக்கின்றன. எட்டாம் நூற்றாண்டில், சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாய உலாவின வழி, இது தனியிலக்கியமாக மலர்ந்தது.

எல்லாபபாட்டியலும இலக்கணம் வகுக்கும் வகையுள் உலாவும் ஒன்று. பன்னிரு பாட்டியல் விரிவும் விளக்கமும் பொருந்தச் சூத்திரம் அமைக்கின்றது. தலைவன் உலாவரல் வரை முதனிலை எனறும், எழுபருவமகளிர் செயலைப் பின்னிலை ஏழு

எனவும் குறிக்கின்றது. தலைவனது குடிப்பிறப்பும், நீதிமுறையும், மரபுச் சிறப்பும், திறை கொளலும், வரையாது ஈதலும் கூறி, உலாவர விடியலில் அவன் நீராடலும், அணியணிதலும், நகரத்தாரால் எதிர்கொளப்படலும், நகர வீதியில யானைமீது வரலும் கூறுவது முதனிலையாம். தலைவன், வேந்தனாகவோ கடவுளாகவோ, மாநதராகவோ இருக்கலாம எனவும் நாற்பத்தெட்டு ஆண்டளவும் பாடப்படலாம் என வயதெல்லையும் இங்குச் சுட்டப்படுகின்றன. பெண்டிர்க்குரிய செயலாகச் சிற்றில், பாவை, கழங்கு, அம்மனை, ஊசல், பைங்கிளி, யாழ், புனலாட்டு, பொழிலாட்டு, மதுநுகர்தல் என்பன சுட்டப்படல் இங்கு மட்டுமே உண்டு.

மகளிர் பருவங்கட்கு வயதெல்லை கூறல் வெண்பாப் பாட்டியல் முதல் அமைகின்றது. ஐந்து, ஏழு, பதினொன்று, பதின்மூன்று, பத்தொன்பது, இருபத்தைந்து, முப்பத்தொன்று, நாற்பது என ஈரெல்லை கூறல் பொது. பிரபந்தமரபியல் போன்றன இவ்வாறு எல்லை சுட்டாது, வயதை வரையறுப்பதால், மேலெல்லை மட்டுமே தரப்படுகின்றது.

தலைவனின் தசாங்கம் உலாவில் போற்றப்படலைத் தொன்னூல் விளக்கம் முதலியன வேண்டுகின்றன. பிரபந்த தீபம், தலைவனை ஒப்பில்லாதவன் என உரைக்க, சிதம்பரப் பாட்டியல் போன்றன, அவன் குழமகனாக-மிக்க இளமைப் பருவத்தினனாக இருத்தல் வேண்டும் எனச் சுட்டுகின்றன. இத்தலைமை மாற்றம் காரணமாகப் போலும், முன்னூல்களில் எழுபருவத்தார் காதலித்தல், மயங்கல் என்பது மாற்றமடைந்து, தொழுதல், துதித்தல், கண்டு உவத்தல், வியத்தல், வணங்கல், ஏத்துதல், பணிதல் என்பன பொருந்துகின்றன போலும்.

பிரபந்த தீபிகை, மத்தகயம், பரி, சிவிகை ஆகியனவற்றை உலாவரும் வாகனமாகச் சுட்டுகின்றது. (30)

## கலம்பகம்

32 வாகுதவம் வண்டமனை வண்பாண் மதங்குநல்
மாகைக் கிளையூசல் வன்மடக்கோ—டோகையூர்
கால மறங்களி பைந்தழை கண்டிரங்கல்
சாலெழிலி தூதுசம்பிர தம்

33 வஞ்சித் துறைவிருத்தம் வான்றுறைவெண் பாமருட்பா
மஞ்சகவன் மன்விருத்த வன்கலியு—மெஞ்சாது
பின்னாமோர் போகுவெள்ளை பேசுங் கலித்துறையே
முன்னாங் கலம்பகக்கு முன்

34 வணிகர்க்கைம் பான்முப்பான் மற்றோர்க் கமைச்சர்க்
கணியெழுபான் றொண்ணூ றரசர்—துணியதன்மே
லைந்தையர்க் கைந்ததன்மே லர்க்குயர்தெய் வத்துக்கு
முந்துமப்பா வெண்ணாக மூண்டு

இம்மூன்று பாடலும் கலம்பக இலக்கணம் தருகின்றன.

கலம்பகத்திற்குரிய பதினெட்டு உறுப்புகளை முதற்பட்டியல் தருகின்றது புயவகுப்பு, தவம், வண்டு, அம்மனை, பாண், மதங்கு, கைக்கிளை, ஊசல், மடக்கு, ஊர், காலம், மறம், களி, தழை, இரங்கல், கொண்டல், தூது, சம்பிரதம் என்பன அவை. அடுத்தபாடல், கலம்பக யாப்புநிலை சுட்டுகின்றது. ஒருபோகு, வெண்பா, கலித்துறை என்பனவற்றைத் தொடக்கமாகப் பெற்று, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், வெண்டுறை, வெண்பா, மருட்பா, அகவற்பா, அகவல் விருத்தம், கலிப்பா என்பன தொடரக் கலம்பகம் அமையும். மூன்றாவது பாடல், கலம்பகப் பாத்தொகை தலைவனுக்கேற்ப வருமாற்றைத் தருகின்றது. வணிகர்க்கு ஐம்பது, பிறருக்கு (வேளாளர்) முப்பது, அமைச்சர்க்கு எழுபது, அரசருக்குத் தொண்ணூறு, அந்தணாளருக்குத் தொண்ணூற்றைந்து, தெய்வத்துக்கு நூறு எனக் கலம்பகப் பாடல் எண்ணிக்கை அமையும்.

பொதுவாகப் பாட்டியலனைத்தும் இலக்கணம் சுட்டும் வகைகளில் இதுவும் ஒன்று கலம்பகம், அந்தாதியும் மண்டில இணைவும் பெறும். இதன் உறுப்புப் பதினெட்டு எனும் எண்ணம் எல்லா நூலிலும் அமைந்திலது. பன்னிருபாட்டியல, யாப்பு வகைகளோடு இணைத்து, புயம், அம்மனை, ஊசல், யமகம், களி, மறம், சித்து, காலம், மதங்கி, வண்டு, கொண்டல், சம்பிரதம், தவசு என்பனவற்றையே தருகின்றது. வெண்பாப் பாட்டியலில் பாண், கைக்கிளை, ஊர், தழை, இரங்கல், தூது ஆகியன இணைகின்றன. நவநீதப் பாட்டியல் குறம் எனப் புதுவுறுப்புத் தருகின்றது. தொன்னூல் விளக்கம் 'காற்று' எனக்குறிப்பது கொண்டலாகலாம்.பிற்கால நூல்கள் சில பதினெட்டுறுப்பை ஓரளவு தெளிவாக வரையறுத்துத் தந்தபோதும், இலக்கியங்கள்

பிச்சியார், கொற்றியார், வலைச்சியார், ஆற்றுப்படை போன்ற இணைவுகளால் எண்ணிக்கை வேறுபாடு கொள்கின்றன. சில உறுப்பு விடப்படலும், ஒரே உறுப்பில் ஒன்றுக்குமேற் பாடல் அமைதலும் உண்டு.

கலம்பகத்தின் தொடக்கமான மூன்றுபாடல் பற்றிய எண்ணத்தில் இலக்கணங்களும் இலக்கியமும் ஒருமை காட்டுகின்றன. பெரும்பான்மைப் பாட்டியல்கள் இடைவிரவும் பா-இனம் பற்றிய பட்டியல் அமைத்தபோதும், பிற்கால நூல்சில (தொ.வி, பி தீ, சுவாமி) 'ஐவகைப் பாவும் இனமும் பொருந்த' (பிரதீ-95) எனப் பொதுநிலையில் மொழிந்தமைந்து விடுகின்றன.

காவலனின் ஏவலுக்குட்பட்ட அரசியல் தொழிலர்க்குப் பாடல்கள் எண்பது எனவும், இருநிதியுடையோர்க்கு எழுபது எனவும் நவநீதப்பாட்டியல புதுமை புகல்கின்றது. பிறர்க்கு ஐம்பதும் முப்பதும் என இது கூறுவது முறையே வேளாளர்க்கும், சூத்திரர்க்கும போலும்.

தொல்காப்பிய உரையாசிரியர் விருந்தின் வகையாகக் கலம்பகத்தைக் கூறியபோதும், நந்திவர்ம பல்லவன் மீதெழுந்த நந்திக்கலம்பகமே முதலிலக்கிய வகை அமைக்கின்றது. அந்தாதித் தொடர்பும் பாடல்எண் பொருத்தமும் இதில் முழுமையாக அமையாத போதும், பிற்காலக் கலமபகங்கள் இலக்கணச்செவ்வி காட்டுகின்றன. (31-33)

## மஞ்சரி

35 மகிழ்பாலை பாதிரி வண்முல்லை புன்னை
யகல்குராப்பிண் டிக்குருகா ராமாத்—தகுசாதி
வாய்வினைநா லங்கிரிகை வல்வினைமூன் றேவாயொன்
றேய்நயன மெய்வினையொன் றே

36 ஆனைமுகன் சேயிறைவ னாதியயன் வேண்மகவான்
பானுமதி வேந்தன் பகர்தெய்வம்—பானுமதி
சேய்புதன்பொன் னோடுவெள்ளிச் சீர்ப்பகலி ராமந்தன்
காய்பகலி ராவை கறை

37 அறுகா ரிதழிதும்பை யம்புயங் காந்த
ளுறுகோங் கலரிபிச்சி யோமை—பெறவணிதல்
வெண்ணெய்தயிர் பானெய்தேன் வெல்லமெட்செந்
தண்கடலை யேனல்வைத் தல் [நெல்லரிசி

38 இரண்டு முதற்பதினொன் றீறான கோணந்
திரண்ட தரைமெழுகுஞ் சீர்தான்—மரம்பத்திற்
பத்துதிசை பார்த்தல்பார்த் தட்சரஞ் சேவித்த
லொத்தகற்பான் கன்னி யுறல்

39 வரும்பவனி பத்துவரும் வாகன நாலி
லரும்புமொன்பா னாண்மூன் றிற் காகும்—விரும்புகரி
பத்தாநா ளைப்பவனி பாவைபிரி வேவணிக
வெத்தருக்கா காமஞ் சரி

இவை மஞ்சரிக்கு இலக்கணம் கூறுகின்றன. மகளிரான் மலரும் மரம் (35), வழிபடு கடவுளரும் காலமும் (36), வழிபாட்டின் அணிப்பொருளும் படையலும் (37), வழிபாட்டு முறையும் மணமும் (38), பத்துநாட் பவனியும் பாடற் பொருளும் தலைவரும் (39) இவற்றில் விளக்கப்படுகின்றன.

மகிழ், பாலை, பாதிரி, முல்லை, புன்னை, குரா, அசோகு, குருக்கத்தி, மரா, சண்பகம எனும் பத்து மரவகைகளும் மலர்வதற்குரிய பெண்ணின் செயல்கள் : வாயின் செயலான சுவைத்தல், நட்புறல், நிந்தித்தல், நகைத்தல் எனும் நான்கும்; கால், கை ஆகியவற்றின் செயலான ஆடல், அணைத்தல், உதைத்தல் எனும் மூன றும்; மீண்டும் வாயின் ஒரு செயலான பாடுதலும்; கண்ணின் ஒரு செயலான பார்த்தலும், உடலின் செயலான நிழலும் ஆகும்.

விநாயகன், முருகன், சிவன், பிரம்மா, மன்மதன் சூரியன், சந்திரன், இந்திரன் என்பவர் வழிபடும் தெய்வங்களாம். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி எனும் கிரகங்கள் பகலிலும் இரவிலும் வழிபடற்குரியன. சனி, நண்பகலிலும், இரவிலும், விடியலிலும் கருதப்படும்.

அறுகம்புல், ஆத்தி, கொன்றை, தும்பை, தாமரை, காந்தள், கோங்கு, அலரி, பிச்சி, ஓமை எனும் புல்லும் மலரும் இவ் இறைவர் அணிதற்கு உரியன. இவர்க்குப் படைக்கப்படும் பொருள்கள் வெண்ணெய், தயிர், பால், நெய், தேன், வெல்லம், எள், செந்நெல்அரிசி, கடலை, தினை என்பனவாம்.

வழிபாட்டிற்காகத் தரையை மெழுகும்போது, இரண்டு முதல் பதினொன்றுவரையுள்ள நற்கோணம் நோக்கப்படும்

முன்சுட்டிய மகளிரான் மலர்மரம் பத்தும், அட்டதிக்கும் மேல் கீழுமான திசைபத்தும் பார்த்தலும், மந்திரம் ஓதலும் நிறைவேறியபின், கற்புடைய கன்னி வரல் அமைக்கப்படும்.

நான்கு வாகனங்களில், பத்துநாள் பவனி அமையும். முதல் ஒன்பது நாட்பவனியும் மூன்று வாகனங்களில் அமையும். பத்தாம்நாளில் களிற்றின்மீது தலைவன் உலாவருவான். அன்று அவன் பெண்ணைப் பார்ப்பதாக அமைக்கப்படும். இவற்றைப் பிரிவுகளாகக் கொண்டு பாடும் மஞ்சரி எனும் இலக்கியம் வணிகருக்குப் பாடப்படாது.

மஞ்சரி எனும் இலக்கியம் சுவாமிநாதத்தில் பெயர்நிலைச் சுட்டல் மட்டும் பெறுகின்றது (166). இதன் விளக்கத்தைப் பிரபந்தத்திரட்டில் முதலாவது காண்பதால், முழுமையாகப் புரிந்து கொள்ளவியலவில்லை. மஞ்சரி எனும் பெயர் இணைவு பெற்ற வா(ஆ)தோரண மஞ்சரி, வெற்றிக்கரந்தை மஞ்சரி எனும் நூல்களைப் பாட்டியல்கள் விளக்குகின்றன. இவை இங்கு இணைத்துக் காணத்தகுவன வல்ல. மாம்பழக் கவிசிங்க நாவலரின் சிங்கார ரச மஞ்சரி, தண்டபாணி சுவாமிகளின் நவரச மஞ்சரி, யமக மஞ்சரி, திரிபு மஞ்சரி போன்றனவும் வேறுபட்ட அமைப்பினவாம். மஞ்சரி என்பது மலர்களின் கொத்து எனப் பொருள்படுவதால், பல பாடல்களின் தொகுதியாலான இந்நூல்கள் அப்பெயர் கொள்கின்றன போலும். (34-38)

## மாதிரக் கட்டு

40 மான்மயறாள் கூளியென்று தய்மந்திர வாதிகொண்டு
தான்பார்க்க கொட்டங்கி தாலத்தின்—வான்றிசையைக்
கட்ட விவளெழுந்து கைநொடித்துக் கோமயலைக்
கொட்டங்கிக் கேயுரைத்தல் கூறு

41 உள்ளிட்டுக் கல்யாணத் துக்குமுகிழ்த் தம்வைக்க
உள்ளுமவ னென்கணவ னுண்மையென—வள்ளலுறக்
கொட்டங்கிக் கெல்லாங் கொடுத்தனை பின்சேற
லொட்டிலகு மாதிரக் கட்டு

மாதிரக்கட்டு எனும் இவ்வகை பிறநூலில் அமைந்திலது.

பெண் உற்ற மயலைப் பேயென்று கருதிய தாய், அதனை மந்திரவாதியைக் கொண்டு ஆய முற்படுகின்றாள். இதன்

பொருட்டு வந்த கோடங்கி, திசைகளைக் கட்ட, தலைவி எழுந்து கை நொடித்து மன்னன் பாலுற்ற மயக்கைக் கோடங்கியிடம் கூறுகின்றாள். இதன்காரணமாகத தலைவியை இற்செறித்து மணத்திற்கு முகூர்த்தம் நோக்க நினைக்கும் அவனே என் கணவனென அவளுரைக்கத் தலைவன் அவளை அணைதலும், குறிகூறிய கோடங்கிக்குப் பரிசுப்பொருட்கள் அன்னை கொடுத்தலுமாக இது அமைகின்றது.

'வான்றிசையைக் கட்ட' என்பதால் இது மாதிரக்கட்டு எனப்பட்டிருக்க வேண்டும். கோள்கள் தங்கும் நிலையடிப்படையாக முக்காலமும் உணர்ந்து மொழியும் திறனுடைமையால், கோடங்கி எனும் பெயர்நிலை இயைகினறது எனலாம் (கோள் + தங்கி > கோட்டங்கி > கோடங்கி). எதுகை நோககி, இது கொட்டங்கி என வாயிருக்கலாம்.

தலைவி, தலைவன் காரணமாக உற்ற வேறுபாட்டைத் தாய் ஐயுற்று முனையும் வேலன் வெறியாட்டும, அறததொடு நிறறலுமான பண்டை இலககியக் குறிப்புகளை இயைபுடையனவாகக் கொள்ளலாம். (3 -40)

## கோவை, மதன விசையம்

42 கலித்துறைநா னூறறா வகப்பொருண்மேற் காட்டி
வலித்துரைத்தல கோவை மதன—னலத்தார்
திசைவென் றிறைவன் செயலறிந்த மான்மு
னிசைந்தெதிர்த்த லவ்விசைய மே

கோவை, மதன விசையம் எனும் வகைகள் விளக்கம் பெறுகின்றன. இவற்றுள் பின்னது இந்நூற்கே உரியதாம.

அகப்பொருளில் நானூறு கலித்துறை அமைவது கோவை திக்கு விசயம் புரிந்த மன்னன் செயலைக் கேள்வியுற்று அன்புற்ற பெண்ணை மதனன் மலர்ப்பாணங்களால் எதிர்த்தல் மதன விசயம்.

அகப்பொருட்கோவை எல்லாப் பாட்டியல்களிலும் சுட்டப்படும் வகையாம். தொல்காப்பிய அகப்பொருட்டுறைகள் பிற்காலப் பொருளிலக்கணங்களில் ஒரு நிகழ்ச்சி முறைவைப்பைப் பெற்றது போன்று சங்கத் தனிப்பாடல் தரும் அகச்செய்தி இங்கு ஒரு அமைப்பாக்கம் பெறுகின்றது. களவு கற்பு எனும் கைகோளும்

ஐந்திணையும் பன்னிருபாட்டியல் சுட்டுகின்றது. கொடிச்சியும்; ஊரனும் எனப் பிரபந்தமரபியல் தலைவரை மொழிகின்றது. முதல், கரு, உரிப் பொருட்கள் வரல் எனவும் பன்னிரு அகப்பாட்டுறுப்புப் பெறல் எனவும் இலக்கண விளக்கம் இணைக்கின்றது. திணை முதல் துறையீறாக வருவன அவை என்பது முத்துவீரியம் தரும் செய்தி. தொல்காப்பியச் செய்யுளியல் (1259) இவற்றைத்

திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்
கேட்போர் கலனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ...

என மொழியும். சுவாமிநாதம், அகப்பொருட்கோவை போன்று புறப்பொருட்கோவையும் அமையலாம் என எண்ணுவது புதுமை. எல்லா இலக்கணமும் கலித்துறையையே யாப்பாக்க முத்துவீரியம் முதலியன கட்டளைக்கலித்துறை என விதந்து ஓதுகின்றன. இதுவன்றி, அகவல், வெண்பா, கலி, வஞ்சி, வண்ணம் போன்றனவற்றிலும் இப்பொருள் அமையும் வாய்ப்பு முத்துவீரியத்தில் தரப்படல் ஆய்வுக்குரியது.

எட்டாம் நூற்றாண்டின் பாண்டிக்கோவை இவ்வகையின் முதனூலாகவும், மணிவாசகரின் திருக்கோவையார் சிறந்த நூலாகவும் கருதப்படுகின்றது. (41)

### காமரச மாலை, வச்சிராங்கி

43 சீலமாங் கொக்கோகஞ் செப்புதலே காமரச
மாலை யரம்பையரி வன்னழகாற்—சாலவர
விந்திரனை திர்கக விறைவெல்லப் பாடன்ம
கிழ்நதிலங்கு வச்சிராங்கி

காமரச மாலை, வச்சிராங்கி எனும் இவ்விரு வகையும் இந்நூற்கே உரியன.

கொக்கோகப் பொருண்மையில் அமைவது காமரசமாலை மன்னன் அழகில் ஈடுபட்டு அரம்பையர் அவனை விழையவே, அதனை இநதிரன் எதிர்க்க, மன்னன் வெல்வதாகப் பாடல் இனிமை திகழும் வச்சிராங்கி இந்திரன வச்சிரப் படையுடையவனானமையால் இது இப்பெயர் பெற்றது போலும்.

கொக்கோகம், காமநூலைக் குறிக்கின்றது. பதினாறாம் நூற்றாண்டுக்கு உரியதாக, வரதுங்கராமர் என்பவர் பெயரில் கொக்கோக நூலொன்று அமைகின்றது. வடமொழியில், கொக்கோகர் செய்த ரதிரகசியம், ஜயதேவரின் ரதி மஞ்சரி, நாகார்ச்சுனரின் ரதி சாஸ்திரம் என இப்பொருள் பற்றியமைந்த பலநூல்களில், முன்னதை வரதுங்கர் தமிழ்ப்படுத்தினார் (மு. அருணாசலம், தமிழிலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம், பக்கம் 358-364). (42)

## சகத்திராங்கி, அண்டகோசம்

44 பாவெவையுங் கூறியொன் றுபார்த்தாலொன் றாயிரா
தோய்விலெண் ணாயிரமா வுற்றதுதான்—மேவு
சகத்திராங்கி யண்டநிலை சாரவண்ட கோசம்
வகுப்புக் கலிவெண்பா வாம்

சகத்திராங்கி, அண்டகோசம் எனும் வகைகள் விளக்கப்படுகின்றன. இவையிரண்டும் இந்நூறகே உரியன.

எல்லாப் பாவும் வரும்படி ஆயிரம் பாடலால் அமைவது சகத்திராங்கி. அண்டமாகிய உலகின் இயல்பு சார, வகுப்பு, கலிவெண்பாவில் உரைப்பது அணடகோசம்.

அண்டகோசம் எனும் தனிநூல் பெறப்படாத போதும், வேம்பத்தூர் முத்து வேங்கட சுப்பையன் இயற்றிய அணடகோள விலாசம் (அரசு கீழைச்சுவடி நூலகம், சென்னை, 1954) ஒப்புமை பற்றி இங்கு நினைககத் தக்கது. இது, செய்யுள் நடையில் அண்டகோளப் பிரமாணங்களைத் தொகுத்துக் கூறுகின்றது. பாதாளம், நவகண்டம், ஏழுகடல், ஆறுதீவு, மேலுலகம் எனும் தலைப்புகளின் கீழ் செய்திகள் அமைகின்றன.

'ஆயிரம' எனப் பொருள்படும் சகஸ்த்ரம என்பதும் 'உறுப்புகளுடையது' எனப் பொருள்கொள்ளும் அங்கி எனபதும் இணைந்த நிலையில், சகததிராஙகி, ஆயிரம் பாடல்களை உறுப்பாகப் பெறற நூலுக்கு ஆகியுளளது. (43)

## பரணி, சிந்துமோகினி

45 கடிகைதிரி முக்காலுட் கைமாச் சகத்திரந்
தடிசேனை யானுககுச் சாற்ற—னெடியபஃ
றாழிசையி ரண்டடியே சாராதி யேயிடையீ
றாழ்தல் வணக்க முறல்

46 சண்டநிலப்பேய் காளிவித்தை காவலன்சீர் போர்கூ
ழிடைபிறவ ரன்மற்று மேற—றொடுபரணி
வண்ணகவொத் தாழிசையான் மாதுகட னேராக்கிற்
பண்ணுசிந்து மோகினியாம் பார்

பரணி, சிநதுமோகினி ஆகியவற்றின் இலக்கணம் அமைகின்றது.

மூன்று நாழிகைப் பொழுதில், ஆயிரம் யானைகளைப் போரில கொன்ற படையுடையவனுக்குப் பரணி பாடப்படும். நீண்ட ஈரடித் தாழிசைகள் பலவற்றால் இது அமையும். முதல், இடை, ஈற்றுப் பகுதிகளை உடையதாக விருக்கும். தெய்வ வணக்கம், கடை திறப்பு, பாலைநிலம், பேய், காளி, இந்திர ஜாலம், அரசன் சிறப்பு, போர், கூழடுதல் என்பனவும் இடை யிடையே வேறு பிறவும் வந்து உருவாகும். பெண்ணின் செயலை இணக்குவதை வண்ணக வொத்தாழிசையில் பாடும் சிந்து மோகினி, இந்நூற்கே உரியது.

பரணி இலக்கிய வகைக்குப் பிரபந்த தீபம் ஒழியப் பிற வனைத்தும் இலக்கணம வகுககின்றன. இதனைத தொடர் நிலையாகப் பன்னிருபாட்டியல் கருதுகின்றது. குரவைப் பொரு ளின புறநடையாக நவநீதப் பாட்டியல் இணைக்கின்றது. ஒரு நாட்போரில ஆயிரம் யானைகளை வதைத்தல் எனக் காலக் குறிப்பு சுவாமிநாதத்தில் அமைகின்றது. இதிலும் பிரபந்தத் திரட்டிலும மட்டுமே காலம் சுட்டப்படுவது சிந்தனைக்குரியது.

பல யானைகளை வெல்லல் எனும் போர்நிலை, களவழி நாற் பதின் பின் பரணியிலக்கியத்தில் பெருகித் தொடர்கின்றது. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் புறபொருள் நிறைவு காட்டிய பரணி, தத்துவப்பிரகாசரின் பாசவதை மோக வதைப் பரணிகளில் தத்துவ உயர்வு கொள்கின்றது. தக்கயாகப் பரணி, இரணிய வதைப் பரணி என்பன இறைவரின் போர்ச செயல்களைப் பரணிக்கு ஆக்குகின்றன. கடைதிறப்புப் பகுதி காரணமாக இப் புறப்பாடலில் அகச்செய்தி கலக்கின்றது (44-45).

## காதலுத்தியாபனம்

47 வேனிற் பொழுதிலிறை மின்கன்னி யாசையாற்
றான்சோலை மேவுறவத் தையலறிந்—தூனுருக
நின்றுநகை யாத்தூது நெட்டிப்பின னேமருவல்
பன்காத லுத்தியாப னம்

காதலுத்தியாபனம் எனும் இவ்வகை பிறநூல்களில் இல்லை.

இளவேனிற் காலத்தில், தெய்வக் கன்னி மீது ஆசையுற்ற அரசன உவவனம் செலல, அதனை யறிந்த அவள அன்புற்று, உவகை கொண்டு, தூது நீக்கி, பினபு அவனை அணைதல் காதலுத்தியாபனம். (46)

## மதன சிங்காரம்

48 மதனனைமுன் பாடியவன் மாற்றிநினை மாது
விதனனைப் பாடியவன் மேவு—மிதம் பாடல்
வெண்கலியா லேயுரைத்த லூழ்விதியோ லாக்கலே
யண்சீர் மதனசிங்கா ரம்

மதனசிங்காரம் எனும் இவவகையும் இந்நூற்கே யுரியதாம்.

முதலில் காமக் கடவுளான மன்மதனைப் பாடி, பின்பு மனத் துயர் தந்த தலைவனை நினைந்து பாடி, அவனைப் பொருநதப் பெறும் இன்பத்தைப் பாடி, உலா விதிக் கொள்கை புலப்பட வெண்கலிப்பாவில உரைப்பது மதனசிங்காரம். (47)

## தமிழ்சொரி சிந்தாமணி,கலியாண சுந்தரம்

49 அநதாதிப் பாக்கதை யாத றமிழ்சொரி
சிந்தா மணித்தொகையுஞ செப்பளவோ—சொநதத்தின்
மானைககல் யாண மணங்குறிவென் றேசெய்த
லான்கலி யாணசுந்த ரம்

தமிழ்சொரி சிந்தாமணி, கலியாணசுந்தரம் எனும் இவ்விருவகை களும இந்நூற்கே யுரியன.

அந்தாதித் தொடர்பு பெறும்படியமைந்த யாப்பில் கதைப் பொருள் அமைப்பது தமிழ்சொரி சிந்தாமணி. அதன் பாடல் தொகை யளவு கூறற்கரிது. உறவுக்குட்பட்ட பெண்ணைக் குறி வென்று மணம் செய்வதைக் கூறல் கலியான சுந்தரம். (48)

## தரும விசேடம், சித்திரவுபாய செயம்

50 முப்பத் திரண்டற முற்றவஞசித் தாழிசையிற்
செப்ப றரும விசேடமா—மொப்பாம
லெத்தொழிலி னும்விருதா மேந்திழையை யேசெயித்தல்
சித்திரவு பாய செயம்

46 சண்டநிலம்பேய் காளிவித்தை காவலன்சீர் போர்கூ
ழிடைபிறவ ரன்மற்று மேற—றொடுபரணி
வண்ணகவொத் தாழிசையான் மாதுகட னேராக்கிற்
பண்ணுசிந்து மோகினியாம் பார்

பரணி, சிநதுமோகினி ஆகியவற்றின் இலக்கணம் அமைகின்றது.

மூன்று நாழிகைப் பொழுதில், ஆயிரம் யானைகளைப் போரில கொன்ற படையுடையவனுக்குப் பரணி பாடப்படும். நீண்ட ஈரடித் தாழிசைகள் பலவற்றால் இது அமையும். முதல், இடை, ஈற்றுப் பகுதிகளை உடையதாக விருக்கும். தெய்வ வணக்கம், கடை திறப்பு, பாலைநிலம், பேய், காளி, இந்திர ஜாலம், அரசன் சிறப்பு, போர், கூழடுதல் என்பனவும் இடையிடையே வேறு பிறவும் வந்து உருவாகும். பெண்ணின் செயலை இணக்குவதை வண்ணக வொத்தாழிசையில் பாடும் சிந்து மோகினி, இந்நூற்கே உரியது.

பரணி இலக்கிய வகைக்குப் பிரபந்த தீபம் ஒழியப் பிற வனைத்தும் இலக்கணம வகுககின்றன. இதனைத தொடர் நிலையாகப் பன்னிருபாட்டியல் கருதுகின்றது. குரவைப் பொரு ளின புறநடையாக நவநீதப் பாட்டியல் இணைக்கின்றது. ஒரு நாட்போரில ஆயிரம் யானைகளை வதைத்தல் எனக் காலக் குறிப்பு சுவாமிநாதத்தில் அமைகின்றது. இதிலும் பிரபந்தத் திரட்டிலும மட்டுமே காலம் சுட்டப்படுவது சிந்தனைக்குரியது.

பல யானைகளை வெல்லல் எனும் போர்நிலை, களவழி நாற் பதின் பின் பரணியிலக்கியத்தில் பெருகித் தொடர்கின்றது. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் புறபொருள் நிறைவு காட்டிய பரணி, தத்துவப்பிரகாசரின் பாசவதை மோக வதைப் பரணிகளில் தத்துவ உயர்வு கொள்கின்றது. தக்கயாகப் பரணி, இரணிய வதைப் பரணி என்பன இறைவரின் போர்ச செயல்களைப் பரணிக்கு ஆக்குகின்றன. கடைதிறப்புப் பகுதி காரணமாக இப் புறப்பாடலில் அகச்செய்தி கலக்கின்றது (44-45).

## காதலுத்தியாபனம்

47 வேனிற் பொழுதிலிறை மின்கன்னி யாசையாற்
றான்சோலை மேவுறவத் தையலறிந்—தானுருக
நின்றுநகை யாத்தூது நெட்டிப்பின னேமருவல்
பன்காத லுத்தியாப னம்

காதலுத்தியாபனம் எனும் இவ்வகை பிறநூல்களில் இல்லை.

## சிலேடா சாகரம்

52 சேர்ந்தமான வாரிக்குஞ் சீரிறைக்கு மேயுவமித்
தார்ந்தவுடன் வாரிக்கு மங்கனைக்கும்—வேந்தன்
புரையப் புகலல் புகழ்சிலேடா சாகரஞ்
சிஃறா ழிசையிற்காட் டு

இலேடாசாகரம் எனும் இவ்வகையும் இந்நூற்கே உரியதாம்.

மன்னனின் புகழ் சிலேடையாகத் தரப்படலால் இப்பெயர் பொருந்துகினறது. வான்மழைக்கும் இறைவனுக்கும் உவமித்து, பின் கடலுக்கும் பெண்ணிற்கும் வேநதன் இயல்பு பொருநதி வரும்படிக் கூறல் சிலேடா சாகரமாம். இது சில தாழிஙசகளில் (சிஃறாழிசை கொச்சகக் கலி) அமையும்.

கடல் சிலேடையாதலால், சிலேடாசாகரம் எனும் பெயர் பொருந்துகின்றது எனலாம். (51)

## விசய வித்தாரம், மானதவம்

53 அட்டதிக்குப பாலர் திறைதர வாளிறைவன்
விட்டு வரல்விசய வித்தாரம்—விட்டவிறைக்
கானந் தரிபூசை யாலழைத்து மாலரிவை
தானுதவன் மான தவம்

விசயவித்தாரம், மானதவம் எனும் இவவிரு வகைகளும் இங்கு மட்டும் அமைவனவாம்.

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனும் எண்திசைக் காவலர் திறைதரும்படி, வாள்தாங்கிய மன்னன் படையைவிட்டு வருவதாகப் பாடுவது விசயவித்தாரம். இசைப் பாடல், பூசை இவற்றால் அவ்விறைவனை அழைத்து, அவன்பால் மயக்கம்கொண்ட பெண் தன்னையே அவனுக்கு அளித்தல் மானதவம்.

எண்டிசை வென்ற இறைவனின் திக்குவிசயம் முன்னதிலும், கடவுள் மாட்டுக்கொண்ட காதலால் மானசிகமாகத் தன்னை அவனுக்களிக்கும் மனப்பூசை பின்னதிலும் கருதப்பட்டிருக்கலாம். (52)

## கானவேட்டம்

54 ஆனைபரி சேனைபுடை யாகவேட் டஞ்சென்று
கானலி னான்மயங்கிக் கானமுய—லானையினவக்
கம்பேவி யேதிகைத்த வபபோது மானொருத்தி
யின்பமுறல் கானவேட்ட மே

கான வேட்டம எனும் இவ்வகையும் இங்குமட்டும் உளதாம்.

யானை, குதிரை இவையுடன் சேனை புடைசூழ வேட்டை மேற் செனறு, கானல்நீர் காரணமாக ஐயுற்று முயல், யானை இவைமீது அமபு செலுததித திகைதத அந்நேரத்தில் ஒரு பெண் ணிடம் இனபம் பெறுதல் கானவேட்டம். (53)

## சித்திரகவிப் பாட்டு

55 சிததிரகவி யாறும்பின் றேறறுமட்ட நாகபந்த
வொத்த கவியுமற்று முளளவெல்லாம்—வைத்துரைத்த
லததிரவிழிப் பெண்ணே யணங்கே மடமானே
சிததிரகவிப் பாட்டென்றே செப்பு

56 நான்கடியை யீரடியாய் நண்ணிமா றிப்படித்த
றான்காண்கோ மூத்திரித லைவயிறு—மானவிடை
யச்சுவா லைந்தெட்டொன் பான்மனைவெண் பாவிரண்டு
மெச்சிரட்டை நாகபந்த மே

57 எந்தமனை நேர்ந்தாலு மேபாவி சைவதுதா
னந்த முரசபெந்த மாகுங்காண்—முந்துகோ
மூத்திரியிப் பந்தமனை முப்பான்மே லீரேழுஞ்
சேர்ந்தபதி னெட்டுமே செப்பு

58 மன்னிய நான்கு வகைப்படுஞ் சக்கரங்க
ளுனனுமனை யீரெட் டுடனொன்று—மன்னுநாற்
பானொன்பா னெண்பத்தஞ் செண்பத்தொன் பான்பாட
லானவெண் பாச்சூத்தி ரம்

59 எண்ணுறு கோட்டி லிழைத்துச் சுழிபோலு
நண்ணல் சுழிகுளமந் நற்றமிழ்போற்—கண்ணி
மருத்தாழு மாலைமாற் றாய்க்கோட்டில் வைத்தல்
சருப்பதோ பத்திரமெனச் சாற்று

60 தளையுடனே சொன்னவண்ணச் சந்தம் பிசகா
தளகுநெறி வெண்பாவண் ணத்துக்— குளதிகழா
தேற்றுக்கோட் டிற்பாட்டுக் கேற்றவெழுத் துக்கூட்டிச்
சாற்றலட்ட நாகபந் தம்

61 ஆனபனி ரண்டுபதினா றச்சிற புததியுத்திக்
கானபடி வெண்பாவண் ணம்படித்து—மேனிலத்தோர்
மானிலததோர் பேரூர்நா மம்பிறநா மந்திகழ்த
றானட்ட நாகபந் தம்

62 வண்ணநெறி போகாமல் வாழ்துறையா தேனுமுற
வுண்ணிறைபேர் மூன்றடியி னுங்குலவ—நணணுவண்ண
மோனை யெதுகைவெண்பா மோனை யெதுகைகோட
றானட்ட நாகபந் தம்

63 நெடிலைக் குறிலாய் நிகழ்த்து குறிலை
நெடிலாக் குயிர்மெயொற்றாய் நோநது—படியொற்
றுயிர்மெய்யாய் நாட்டுவா லொனறிற் பதியெண்
பயிலேழ் பணிக்கும் பதி

64 நன்மைபெறு சந்தியுட னானூற்றெட் டாங்கோடு
முன்னிவிடின் முந்நூற்று முப்பானோ—டுன்னிரண்டா
மூலையி னான்கு முடியிடையைந் தருசெட்டு
வாலிருபா னாலாறா வை

65 நூலிடையிர் சந்தியினா னூற்றெண்ப தாகுங்கோ
டேல்சந்தி தள்ளிமுந்நூற் றெண்பத்து—நாலாம்
வயிறிடை சென்னியைந்தாம் வால்பத்தொன் பானச்
சியனூற் றிருபத்தெட் டே

சித்திரகவிப் பாட்டு விளக்கப்படுகின்றது. இப்பதினொரு வெண்பாவில் கூறப்பட்ட பொருளை, ஒரு தலைப்பின்கீழ் சித்திரகவிப் பாட்டு என அடக்கினாலும், முதல் வெண்பாவில (55), சித்திரக்கவியாறும், அட்ட நாக பந்தமும் குறிக்கப்படலால், இதன்கண் ஏழு தனிவகைகளும் அடங்கும் எனவும் கொள்ளலாம். சித்திரகவி ஆறு எனக் குறிக்கப்படுவன, கோமூத்திரி (56), இரட்டை நாகபந்தம் (56), முரச பெந்தம் (57), சக்கரம் (58), சுழிகுளம (59), சருப்பதோ பத்திரம் (59) என்பனவாகலாம்.

ஆறு சித்திர கவிகளும், அவற்றின்பின் கூறப்படும் அட்டநாக பந்தம் என்பது போன்ற பிற கவிவகைகளும் எல்லாம் வைத்துப் பாடுவது சித்திரகவிப் பாட்டு.

நான்அடிப் பாடலை, இரண்டு அடியாக எழுதி, மேலும் கீழு மாக ஓரெழுத்து இடையிட்டு வாசித்தாலும் அப்பாடலே ஆக அமைபது கோமூததிரி. இரண்டு நாகங்கள இணைநது தலை, வயிறு, வால எனும இணையுமிடங்களில் இருபத்திரண்டு எழுத் துகள (5+8+9) வரும்படிப பாடபபட்ட இருவெண்பாக்கள் இரட்டைநாக பந்தமாம்.

எநத இடத்தில வந்தாலும், வடிவமைப்புக் கொள்வது முரச பெந்தம இநநான்கடிச செயயுளின முதலிரண்டடியும் ஒரு கோமூததிரியாகவும, பினனிரண்டடியும மற்றொரு கோமூத்திரி யாகவும அமையும. இதன் அறைகள் முப்பதுடன் பதினானகும் பதினெட்டுமாக அமையும் (நாற்பத்தெட்டு எழுததுகளில், நாற்பத்தினானகு தம்முள ஒப்புமை கொள்கினறன.)

சக்கரங்கள் நான்கு வகைப்படும். பதினேழு எழுதது அமை யும்படியுள்ள நான்காரைச் சக்கரம், நாற்பத்து ஒன்பது எழுத்து மனைகளில் வரும் ஆறாரைச் சக்கரம், எண்பத்தைநதும், எண்பததொன்பதும் எழுத்துடைய எட்டாரைச் சக்கரம் என்பன. இவற்றை வெண்பாவிலன்றிச் சூத்திரத்தில பாடுக.

எட்டெழுத்துக்களாலான வரியாகப் பாடலை அமைத்து, அதன் நான்கு வரிகளையும், மேலிருந்துகீழும் கீழிருந்து மேலுமா கச் சுழித்து நோக்கும வண்ணம் தருதல் சுழிகுளம. மாலை போனறு, முன்னிருந்து பின்னோககினும, பின்னிருநது முன் வரினும், ஒரேவிதமாக அமையும் மாலைமாற்று எனும் சித்திர கவி போன்று, நான்கு முகமாகவும் வாசிக்கும்படிக் கோட்டில் அமைப்பது சருப்பதோ பத்திரம்.

தளைபிழையாத வெண்பாவும், சந்தமும் அளவும் தவறாத வண்ணச் செய்யுளும் வடிவாகக் கொள்ளப்பட்டு எட்டு நாகங்கள் பிணைந்த படத்திற்கு ஏற்ப எழுத்துக்கள் அமைத்துப் பாடப் படுவது அட்டநாக பந்தம. பன்னிரண்டும் பதினாறும் எழுத் துகள ஒதது வரும்படி, அறிவுக்கும் உததிக்கும் ஏற்ப வெண் பாவோ வண்ணமோ பாடி, அதில் இறைவர் அலலது மனிதரின் பெயரும், ஊரும், பிறவும விளங்க அமைத்தலும் அது. எழுத்து

ஒத்துவரும் வண்ணச் செய்யுளின் நெறிபிழையாத துறைவடிவும் மூன்றடியிலும் பெயர் ஒப்புமைகொண்டு அமைதலும், வண்ணத் திலும் வெண்பாவிலும் எழுத்து ஒத்துவரும் மோனையும் எதுகை யும் வாய்ப்பாகக் கொள்ளப்படும். எழுத்து ஒத்துவருவதற்காக, நெடிலைக் குறிலாக்கலும், குறிலை நெடிலாக்கலும், உயிர் மெய்யை ஒற்றாய் மாற்றலும், அவ்வாறே ஒற்றினை உயிர்மெய் யாக்கலும் இதன்கண் உண்டு. ஒருபாம்பின் வாலில் முடியும் எழுத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப மற்ற ஏழுபாம்பிலும் அமைத் தல் வேண்டும். தலைதொடங்கி வால்வரை நோக்கும்போது, தத்தம் உடலிலும் பிறிது பிறிதுடலிலும் பொருந்துகின்ற இடங் களையும் இணைக்க, மொத்தம் நானூற்றெட்டு எழுத்தாம். கோட்டிலமையும் எழுத்துகளை மட்டும் நோக்க, முந்நூற்று முப்பத்திரண்டாக அமையும். மூலைகளில நான்கும், தலையில் ஐந்தும், இடையில் நாற்பதும், வாலில் இருபதும், இருபத்து நான்குமாக அமையும். பிறிதொரு வகை, நானூற்று எண்பது எழுத்துகளாலாகி, ஒத்துவரும் எழுத்துகள நீங்க, முந்நூற்றெண் பத்துநான்கு எழுத்துப் பெற்று, வயிறு, இடை, தலை ஆகியவற் றில ஐந்தும் வாலில் பத்தொன்பதும் எழுத்துடன் நூற்றிருபத தெட்டெழுத்தில் அமைகின்றது.

சித்திரகவி பற்றிய செய்தியையும், யாப்பு-பாட்டியல் நூல் களும் அணியிலக்கணங்களும் ஒருங்கு ஆய்கின்றன. நிகண்டுகளும், நாற்கவி வகைபற்றி மொழியுமிடத்துச் சில சித்திரவகைகளைக் குறிக்கின்றன. இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் ஞான சம்பந்தர் தேவாரமும்,பதினோராம் திருமுறை நூல் ஒரு சிலவும் சித்திர கவிக்குக் களமமைக்கின்றன.

யாப்பருங்கல இறுதிநூற்பா ஒருசில சித்திரகவிப் பெயர் களைச் சுட்ட, விருத்தியார் அவற்றிறகும் ஒத்த பிற சிலவற்றிற் கும் விளக்கம் அளிக்கின்றார். பிரபந்தத் திரட்டுக் கூறும் வகை யுள், கோமூத்திரி, சக்கரம், சுழிகுளம், சருப்பதோ பத்திரம், மாலைமாற்று போன்றன அங்கே அமைகின்றன. வீரசோழியம் ஒன்பது வகைகளை நுவல, தண்டியலங்காரம் நாகபந்தத்தையும் அதன் உரையும் மாறனலங்காரமும் முரச பந்தத்தையும் நோக்க ஏறத்தாழ நாற்பத்தொன்று வகைகளில் சித்திரகவி அமையும் வாய்ப்புப் புலப்படுகின்றது.

ஆழ்வார், நாயன்மாரின் பக்தி இலக்கிய ஆக்கத்திற்குப் பின்னும் சித்திரகவி வடிவங்கள் இலககியத்தில் இடம் பெறுவதைக் காஞ்சிப்புராணம், குருகை மானமியம், திருவலங கற்றிரட்டின் பலசந்தப் பரிமளம், ஆசுகவி, பி வி. அப்துலகபூர் அவர்களின் சித்திரகவிமாலை நூல்கள் போன்றவற்றில் பெருமளவு இடம பெறுகின்றன. இலக்கணங்கள் சுட்டாத மலைப்பந்தம, மாணிக்கமாலைப் பந்தம், சிவலிங்க பந்தம, வேலாயுத பந்தம், மயில்வாகன பந்தம், திருவடிப் பந்தம், திருக் கைப்பந்தம் போன்ற பல புதுவகைகள் அப்துல்கபூர் அவர்களிடம் இடம்பெறுவது சுட்டத்தக்கது.

வி.கோ. சூரியநாரயண சாஸ்திரியின் சித்திரகவி விளக்கம் இதன் பலவகைகளையும் விளக்கும் பாங்கில் அமைகின்றது.(54-64)

## சுயம்வரம்

66 பெற்றோன் மகள்வதுவை பேசியே தேசங்கட்
குற்றோலை போக்க வுறமன்னர்—வெற்றியவன்
மானவதுவை செய்ய மகிழ்கலிவெண் பாவுரைத்தல்
தேனே சுயம்வரப்பேர் செப்பு

சுயம்வரம் எனும் இவ்வகை இங்கு மட்டுமே உண்டு.

தந்தை, மகளின் மணம்பேசிப் பல தேசங்கட்கும் ஓலையனுப்பப் பல மன்னர் வந்து குழுமி, அவரில் வென்றோன் அவளை மணம்புரியக் கலிவெண்பாவில் கூறுதல் சுயம்வரம்.

சுயம்வரம் எனும் தனியிலக்கிய வகை பெறப்படாத போதும், பிறமொழி பண்புச் சார்புடைய தமிழிலக்கியங்கள் சுயம்வரம் பற்றிப் பேசுகின்றன. காப்பியக் கூறாக சுயம்வரம் பொருந்துவதும் சிலவிடத்துக் காணப்படுகின்றது நளவெண்பா தமயந்தியின் சுயம்வரத்தில் திருப்பமும், இரண்டாவது சுயம்வர அறிக்கையில் நிறைவும் கொள்கின்றது. (65)

## பிரிவுசுரம், சமசங்கிராமம்

67 தலைவன் பிரியத் தலைவி வருந்தல்
விரிவார் பிரிவுசுர மென்பா—ரிவை
சமங்கூர வேந்தன் சமந்தப்பி வேறல்
சமசங்கி ராமமென்றே சாற்று

பிரிவுசுரம், சமசங்கிராமம் எனும் இவ்விருவகையும் இங்கு மட்டுமே அமைகின்றன.

தலைவன் பிரிவு காரணமாகத் தலைவி உற்ற வருத்தத்தை விரித்துரைத்தல் பிரிவுசுரம். தலைவி முல்லையின் ஆற்றியிருத்தலாகிய பொறுமை கூர மன்னன் பொறுமை நீங்கிப் போர்மேற் சென்று வெலலுதல் சமசங்கிராமம் (சங்கிராமம்-போர்).

சமமான போர்நிலை பற்றி சமசங்கிராமம் எனும் பெயர்ப் பொருத்தம் அமைகின்றது. தலைவி தனிமைத் துயருடன் பொருது வெல்லலும், மன்னன் போர்மேல் பகைவரை வெல்லலும் ஒத்த இருவகைப் போர்நிலையாக அமைகின்றன. (66)

## வேடர்வினோதம், கன்னிமயக்கம்

68 மேவலுறா மானையொரு வேடத்தாள் மேவுதலே
மேவலுறு வேடர் விநோதமாம்—பூவையைத்த
வத்தா லெழில்பெற்று மாரன்போல் வந்துதன்ன
கத்தாக்கல் கன்னிமயக் கம்

வேடர்வினோதம், கன்னிமயக்கம் எனும் இவ்விரு வகைகளும் இந்நூற்கே உரியன.

விரும்பிப் பொருந்தாத பெண்ணை, உருமாறிச் சென்று பொருந்தச் செய்தல் வேடர்வினோதம். பெண்ணை அடைதற்காகத் தவம்புரிந்து அதன் விளைவாகப் பெற்ற அழகுடன் மன்மதன் போல வந்து அவளை அடைதல் கன்னிமயக்கம். (67)

## வசனசம்பிரதாயம், கதைமொழி மாற்று

69 சாற்றுவன வெல்லாந் தகையிற்பு ரண்மொழியாச்
சாற்றல் வசனம்பிர தாயமே யேற்றமின்னுந்
தானுமாய் மின்சொல்லைத் தானுமுறப், பெண்ணானுக்
கானாற் கதைமொழிமாற் றாம்

வசனசம்பிரதாயம், கதைமொழி மாற்று எனும் இவ்வகைகள் பிரபந்தத் திரட்டில் மட்டும் காணப்படுவனவாம்.

கூறும் செய்திகள் எல்லாவற்றையும், தகைமையற்ற புரட்டு மொழியாகக் கூறுவது வசன சம்பிரதாயம். தகுதியும் ஒப்பு முடைய பெண்ணும் தானுமாக, அவள் சொல்லைத் தானும் பொருந்தி, அப்பெண்ணை அவன பெறின் அது கதைமொழி மாற்று.

வசன சம்பிரதாயம் என்பதால், கூறப்படும் செய்தியில் பழமையும் (புராணம்), நிறைவும் (பூரணம்) எதிர்பார்க்கப்பட்ட போதும், இது எதிரிடையாகப் புரட்டிக் கூறலைத் தந்தது எனலாம். (68)

## கற்பனை விலாசம்

70 ஆதிமுத லந்தம்வரை பாதாதி கேசத்துக்
கோதிய கற்பனை யுண்டாக்கிக்—கோதை
மறையோர்செய் வேள்வி தனிலவந்த தாய்ப்பா
டறிகற் பனைவிலா சம்

கற்பனை விலாசம் எனும் இவ்வகையும் பிரபந்தத் திரட்டில் மட்டுமே யுண்டு.

அடிமுதல் முடிவரையிலான உறுப்புகட்கு ஏற்ற கற்பனைகளை ஆக்கித் தொடக்கம் முதல் முடிவு வரை அமைத்து, அப்பெண் அந்தணர் செய்யும் வேள்வியில் வந்ததாகக் கூறுவது கற்பனை விலாசம். (69)

## நதிவிசேடம்

71 இறைவ னதியை யெடுத்துமற்ற வற்றைக்
குறியிகழ்ந்து காமக் குணத்தார்—குறியிடத்துக்
காற்று மலரையுவ மானித்த லெந்நாளு
மாற்று நதிவிசே டம்

நதிவிசேடம் எனும் இவ்வகையும் பிறநூலில் காணப்படவில்லை.

அரசனின் தசாங்கங்களுள் ஒன்றான நதியைப் பாடு பொருளாகக் கொண்டு, பிறவற்றைச் சிறப்பற்றன வெனக் கூறி, குறியிடத்திற்கு அவ் ஆற்றுமலரை உவமித்துக் காமக் குண முடையார் கூறுவது நதிவிசேடம்.

மற்றவற்றைக் குறியிகழ்ந்து என்றதால, பிற நதிகளையோ, பிற அங்கங்களையோ கருதலாம். (70)

## வதன சந்திரோதயம்

72 தூதி யொருவிவந்து சொல்லுவதாய் மான்முகத்துக்
கேத மதியென் றிதமுரைததே—யோதுகலி
வெண்பாவாய் மாமதுர மேற்றதாய்ப் பாடுதலே
யண்வதன சந்திரோத யம்

வதனசந்திரோதயம் எனும் இவ்வகை பிரபந்தத் திரட்டிலன்றிக் காணப்பட்டிலது.

பெண்ணின் முகத்தை நோக்க, சந்திரன் குற்றமுடையது என இனிமையுறத் தூதுவந்த பெண் கூறுவதாய்க் கலி வெண்பாவில் பாடுவது வதன சந்திரோதயம். (71)

## திருப்பெயர்ப்பொறி, தேவாங்க வரையுள்

73 வெற்றிக் கொடிமேரு விண்ணாட்ட றன்பெயரைப்
பற்றி வரைதலந்தப் பான்மைப்பேர்—துற்றதே
வாங்கமின்னை யேசிறைவாய் வைத்துவந்து மேவுதலே
யோங்குதே வாங்கவரை யுள்

திருப்பெயர்ப்பொறி, தேவாங்கவரையுள் எனும் இவ்விருவகையும் பிரபந்தத் திரட்டிற்கே உரியன.

மேருமலையின் மீது, மன்னன் தன் வெற்றிக் கொடியை நாட்டித் தன் பெயரைப் பொறித்தல் திருப் பெயர்ப்பொறி. தெய்வ உலகப் பெண்ணைச் சிறைவைத்துப் பின் வந்து பொருந்துதல் தேவாங்கவரையுள். (72)

## பட்டாபிடேகம், களவுகண்ணி

74 தானரசு செய்துதவு தன்சேய்க் கரசுதவல்
தேன்மொழியாய் பட்டாபி டேகமா—மானாசை
யாலிறைவன் கங்குலிலே யார்களவிற் செல்லுதலே
சாலுங் களவுகண்ணி தான்

பட்டாபிடேகம், களவுகண்ணி எனும் இவ்வகைகளும் இந்நூலில் மட்டுமே யுண்டு.

தான் ஆட்சி செய்த அரசைத் தன் குமரனுக்கு அரசன் கொடுத்தல் பட்டாபிடேகம். பெண்பாலுற்ற அன்பு காரணமாக அரசன் இரவிலே களவுக் கூட்டத்திற்குச் செல்லல் களவுகண்ணி. (73)

## ஒலியந்தாதி

75 மூவெட்டி ரண்டெழுத்தாய் முற்றடிநான் காஞ்சந்தப்
பாவதன்மீத் தாண்டகமுப் பானாக—மேவவொலி
யந்தாதி யொன்றுக்கொன் றார்வியப்பாப் பாடிதுவு
மந்தாதி யிற்பிறிவே யாம்

ஒலியந்தாதி என்னும் அந்தாதியின் பிறிதொரு வகையின் விளக்கம் இங்கு அமைகின்றது.

இருபத்தாறு எழுத்துக்களையுடைய அடிகள் நான்காலான சந்தப்பாவின் மிக்க தாண்டகங்கள் முப்பதால் வருவது ஒலியந்தாதி. இதன் பாடல்கள் ஒன்றை நோக்க ஒன்று புதுமையும் வியப்பும் தோன்றப் பாடப்படும். இது அந்தாதியின் வகையாம். (74)

## காப்பியம்

76 காண்டொண்ணூற் றாறிற் கதைகண் மொழிதிறன்கண்
மாண்பார் பிறவும் வழுத்தினாற்—காண்பார்க்கு
மாப்பாரி லெச்சவைக்கு மாயெஞ்சா மானமில்லாக்
காப்பியப் புறநடையாங் காண்

காப்பியம் எனும் புறநடை பற்றி இப்பாடல் மொழிகின்றது.

இதுவரைக் கண்ட தொண்ணூற்றறுவகைப் பிரபந்தங் களிருக்க, கதை கூறும் நிலை வேறும் வேண்டப்படின், எல்லோருக்கும் எல்லா அவையோருக்கும் ஏற்புடையதாக எஞ்சுவது ஒப்பில்லாத காப்பியம் எனும் புறநடையாம்.

தொண்ணூற்றாறு எனும் பிரபந்தப் பட்டியல் தருவோர், இறுதியில் காப்பியம்-பெருங்காப்பியம்- புராணம் என அமைப் பதற்கேற்ப இந்நூலும் அதனை ஈற்றில் கூறுகின்றது எனலாம். பாட்டியல்களும் அணியிலக்சணங்களும் இலக்சணம் வகுக்கும் ஒருசில வகைகளில் காப்பியமும் ஒன்று. பன்னிருபாட்டியல் இதனைத் தொடர்நிலையென விளக்குகின்றது. தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டே பெரும்பான்மையான பிற்கால நூல்கள் காப்பிய விளக்கம் அளிக்கின்றன.

பெரும்பாலும், காப்பியம் என்பது பிரபந்த எண்ணிக் கையில் ஒன்றாகக் கருதப்பட, பிரபந்தத் திரட்டு, தொண்ணூற்றாறுககுப் புறம்பே அதைக் கொள்கின்றது. கதை மொழிதிறன் பெரும்பான்மையாகப் பிரபந்தங்களில் அமையாமை பற்றி இதை வேறுபடுத்திக் கருதினார் எனலாம்.

இந்நூலில், பிரபந்தம் தொண்ணூற்றாறு என்ற எண்ணம் இங்கும் (76), பாயிரத்திலும் (1), வலியுறுத்தப்பட்ட போதும்,

இவ்வியலிலிருந்து அவற்றைத் தெளிவாகப் பட்டியல் செய்வது சிறிது கடினமாகவுள்ளது. சித்திர கவிப்பாட்டு (55-65) என்பதை ஓரெண்ணாகக் கொள்ளாது, அத்துடன் அங்கு விளக்கம் பெறும் கோமூத்திரி, இரட்டைநாக பந்தம், முரசபெந்தம், சக்கரம், சுழிகுளம், மாலைமாற்று, சருப்பதோ பத்திரம், அட்டநாக பந்தம் என்பவற்றையும் இணைக்கும் போதே, சாதகம் (2) முதலாக ஒலியந்தாதி (75) ஈறாகத் தொண்ணூற்றாறு வகைகள் அமைகின்றன.

இவ்வாறன்றித் தொண்ணூற்றாறு எனும் எண் முழுமை காட்ட, இராசவிர்த்தி எனும் விருத்தவகை (16) இடமளிக்கின்றது. மன்னனின் ஒன்பது உறுப்புகளைத் தனித்தனியே பாடும் இதனை ஒருவகையாக வன்றி ஒன்பது வகைகளாகக் கணக்கிட்டால், எண் பொருத்தம் அமைந்து விடும். (75)

## இரண்டாவது

# புறநடையியல்

முன்னியலில் கூறிய பிரபந்தச் செய்திகட்குச் சில புற நடைகள் இங்கு இயம்பப் படலால், இது புறநடையியல் எனப் படுகின்றது. புறத்தே நடப்பதால் புறநடை என்றும் புறத்தே அடைவதால் புறனடை என்றும் கூறப்படும்.

பதினேழு வெண்பாக்களால் இப்பகுதி அமைகின்றது.

77 பாடுவிதஞ் சொல்லாப்பிர பந்தங்கட் குற்றநெறி
தேடிக் கவித்திறத்தாற் செப்புநீ—நாடு
முலகிற் பிறசான்றோ ரோதுவித மெல்லா
மலகிட் டிவையி லடக்கு

முன்னியலில் விளக்காத பிரபந்தங்களைக் கொள்ளும் முறை கூறப்படுகின்றது.

திரட்டியலில் கூறப்படாத பிரபந்தங்களைப் பாடும் வகையை வேறு நூல்களில் கண்டறிந்து, கவியாற்றலால் பாடுக. இங்கமையாது பிறசான்றோரரால் கூறப்பட்ட செய்திகளையும் பகுத்து வகுத்து பொருத்தமான விடங்களில் அடக்குக.

முன்னியலில் சுட்டப்படாத பிரபந்தம் என்றோ, சுட்டப் பட்டவற்றில் எவ்வாறு பாடப்படவேண்டும் என விளக்கம் பெறாத பிரபந்தம எனறோ கொள்ளலாம். அவ்வாறே, பிற சான்றோர் கூறுவனவெல்லாம் ஏற்றுக் கொள்க எனவோ, அவர் கூறுவன எல்லாம இவற்றுள் அடக்கததக்கனவே எனவோ கொள்ள இடமமைகின்றது.

முன்னியலில் கூறப்பட்ட பிரபந்தப் பாட்டியலின் முழுமையின்மையையும், காலத்திற் கேற்பப் பிரபந்த எண்ணிக்கையும் பொருண்மையும் மாறிவர வாய்ப்பமைதலையும் கருதினார் என்பது தெளிவு. பிரபந்தம் தொண்ணூற்றாறு என வரையறுத்த போதும், கவித்திற முடையவன் புதியன படைத்தலுன்மையை ஏற்கின்றார் எனலாம். தன்கருத்தையே முடிந்தமுடிபாக்காது பிறர் எண்ணத்தையும் ஏற்றல் புலப்படுகின்றது.

இங்கும், தளைபிழையாதிருக்க, 'சொல்லாப்பிர' என்பதன் ஈற்றசையை, ஒலிபற்றி (ப்ர) அமைக்க. (1)

78 இன்னபிர பந்தத்துக் கின்னபா வென்றுரையா
மன்னிகழ்த்தின் மாக்கலி வெண்பாவா—யுன்னியே
யாசு மதுரமொடு சித்திரவித்தா ரத்தறிவ
தேசு மிகுந்துலவச் செப்பு

யாப்புவடிவு கூறாத பிரபந்தங்கட்கு அமைதி கூறப்படுகின்றது.

முதலியலில் பிரபந்த இலக்கணம் கூறும்போது, பாவடிவு சுட்டாது விடப்பட்ட வகைகளுக்கு, கலிவெண்பா யாப்பாக நினைந்து, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவி மரபில் பொருத்தமானதை அழகு மிளிரும்படிக் கூறுக.

பொருளுக் கேற்பவும் தேவைக் கேற்பவும் வடிவையும் வெளியீட்டு நிலையையும் தேர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கப் படுகின்றது எனலாம். அல்லது கலிவெண்பா யாப்பு அனைத்திற்கும் பொருத்தமானதாகக் கொள்ளப்பட்டது எனக் கருதலாம்.

பொதுவாகப் பிரபந்தங்கள் வித்தாரகவியில் அடக்கப் படினும், இவர் சித்திரக்கவிப் பாட்டு போன்றவற்றையும் பிரபந்தமாகக் கூறலால், இங்கு ஆசு முதலிய நால்வகையின் கீழும் பிரபந்தத்தைப் பகுத்தமைக்க இடம் அளிக்கின்றார் போலும்.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பன நாற்கவி. இவை கவிஞனையும், அவனியற்றும் கவிதையையும குறிக்கின்றன. பொருள், அடி, பா, அணி முதலியன கொடுத்துப் பாடுக என்றதும் உடன்பாடுவது ஆசு. பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பம், செறிய உருவகம் முதலிய அலங்காரத்தோடு இன்னோசைத்தாய் அமுதமுறப்பாடுவது மதுரம். மாலைமாற்றுமுதலான மிறைக்கவி தெரிநது பாடுவது சித்திரம். மும்மணிக்கோவை, பன்மணிமாலை இனையன விரித்துப் பாடுதல் வித்தாரம்.

முன்கண்டபடி, இங்கும் ஒலிபற்றித் தளைநோக்கின் வெள்ளி பாப்புப் பிழையடாமை யறிக (சித்ர). (2)

79 சொல்லுந தொகைகளிலே தூதென்று சொன்னபத்து
நல்லோரோன றென்று நவின்றக்காற்—சொல்லுநீ
வேறென்று பின்னுமதை மேலிட்டாற் சொற்பொருள்கண்
மாறிநிற்றல் சொலலி மறி

தூது, ஒன்றன்று, பலஎனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

முதலியல், தூது எனும் பிரபந்தத்தை விளக்கும்போது எசினம் முதலிய தூதனுப்பப்படும் பொருட்களால் அது பத்து வகைப்படும எனும் எண்ணத்தை அமைக்கின்றது. அவவாறு அவை பத்து அல்ல, ஒன்றே என நல்லோர் கூறின், ஒன்றன்று வேறு என மொழிக. மீணடும் அதை மறுபபின், அனுப்பப்படும் பொருட்களும், அவறறிறகேற்பக் கூறும் சொற்களும் பததுவித மாக மாறுபட்டு நிற்பதைக் கூறித தடுக்க வேண்டும். (3)

80 என்று மறுததுரைத்தா லீதலாற் சநதிரகலை
குன்று சபைதயவு கூரகங்கை—பொனறருவே
வாய்த்த நரேந்திரன் வரைச்சிங்க மாதவமே
சீாத்திமுன்னோர் செப்பலெல்லாஞ் செபபு

மறுப்புக்கு, மறுப்புக கூறும் முறை சொல்லப்படுகின்றது.

முன்பாடலில் அமைந்தது போன்று கூறிய பின்புய தம கருதது மறுத்துரைககப்பட்டால், இவ்வாறன்றியும, முனனோர் மொழிகளான மரபுச் செய்திகளைக் கூறி நிலைநிறுத்துக.

இப்பாடலின், பிறபகுதிகள் மகடூஉ முன்னிலை போலும.

யாப்புத் தளைபிழையாமைக்குச், சந்திரகலை, நரேந்திரன் என்பனவற்றை ஒலியடிப்படையிற் கொள்க. (4)

81 சாதிநான் கிற்குந் தகுமாலைப் பேர்கோவை
தூதுலா மஞ்சரியுந் தோன்றற்கா—மோதும
பரணியிறை தெய்வம் பகர்மற்ற வெல்லா
முறைமூன்று சாதிகளுக் கும்

சாதிகேற்பப் பிரபந்தங்கள் பகுக்கப்படுகின்றன.

மாலை இலக்கியங்கள், நாற்சாதியினர் மீதும் பாடப்படும் கோவை, தூது, உலா, மஞ்சரி ஆகியன அரசனுக்காம். பரணி, அரசனுக்கும் இறைவனுக்கு மாகும். பிறவனைத்தும், மூன்று சாதிகளுக்கும் பாடப்படும். (5)

82 ஆனைமுகன் சேய்வீர னய்யன் வயிரவனே
யானபஞ் சம்முகிர்த்த மந்தரத்தோர்—சேனைப்
பதிமுப்பான் மூவர் பயிரவ ரெண்மர்
மதிபொன்செவ் வாய்புதன்வெள் ளி

83 மாரன் மகவான் மலிசேடன் சத்தகன்னி
மார்பரை கஙகைதிரு வாணிநில—மோர்விண்ணி
னார்வாணி காளிதுர்க்கை யாம்தரும தேவதையே
யோர்மால் பிறப்பொரு பத்து

84 சத்த ரிஷிக ளருணன்வான் றாழுமழை
வைத்த வருள்வடுகி மாதிறா—யொத்ததெய்வ
மொன்பானா றாமொன்றுக் கொன்றேவி நாயகன்மா
ரன்சர மெல்லார்க்குஞ் சாற்று

கடவுளரும் பிரபந்தமும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

விநாயகன், முருகன், வீரபத்திரன், ஐயனார், பைரவன் ஆகிய ஐந்து மூர்த்திகள்; தேவர் உலகத்தின் சேனைத் தலைவரான ஆதித்தர் பன்னிருவர் அச்சுவினிகள் இருவா, உருத்திரர் பதினொருவர். வசுக்கள் எண்மர் ஆகிய முப்பத்துமூவா; பயிரவர் எண்மர்; சநதிரன, வியாழன், அஙகாரகன், புதன், வெள்ளி எனும் கோள ஐவர், மன்மதன், இந்திரன், ஆதிசேடன, சபத கனனியர்; பார்வதி, கங்கை, இலட்சுமி, நிலத்திறகும் வானிற்கும் உரிய சரஸ்வதியர், காளி, துர்க்கை, தருமதேவதை என்போர்; திருமாலின தசாவதாரங்கள்; ஏழுமுனிவர்; அருணன், வருணன்; பைரவி ஈறாகக் கூறிய தெய்வங்கள் முனசுட்டிய பிரபந்தங்கள் தொண்ணூற்றாறில் ஒவ்வொன்றில் பாடப்படும். விநாயகன் அனைத்திலும் வரலாம். மாரரின் மலரம்புகள் அனைவருககும் கூறப்படலாம. (6-8)

85 சாதகத்தை யேமுதலாச் சாற்றுந தமிழ்களெல்லா
மோதுவிலை நூறுபொன்னா வொப்பிநிற்கு—மாதமிழாய்
மிஞசினா னின்னதிட்ட மேனைத் தமிழுக்கு
மஞ்சாமற் சொல்வே னறி

86 தூதுக்கு நூறுலாச் சொல்லுமதன் மேனூறா
மோதுங் கலம்பகமுந் நூறாகு—மீதுநூறு
மஞ்சரியைஞ் ஞூற்றிரட்டி மாதிரக கட்டிரட்டி
மஞ்சார்நா னூற்றுக்கோ வை

87 மதன விசய மதனி னிரட்டி
யதினிரட்டி காமரச வார—மதனிரட்டி
யோர்வச்சி ராங்கி யிரட்டி சகத்திராங்கஞ்
சாரிரட்டி யண்டகோ சம்

88 பரணியொரு லட்சம் பகரிரட்டி யாகும்
வருசிந்து மோகினி மற்ற—திரட்டியுத்தி
யாபன மற்றவெல் லாமா மடக்கமேயி
வைக்குள் மிகுசினுயர் வே

பிரபந்தங்கட்கு விலை சுட்டப்படுகின்றது.

பிரபந்த இலககணம் கூறும் நூல்கள் எல்லாம், சாதகம் எனும் வகையை முதலாவது மொழிந்து, அதன் மதிப்பை நூறு பொன் என்று உடன்படும். அவைகூறும் கருத்திற்கு மேற்பட்டுச் சென்று, அத திட்டத்தின் படி ஏனைத் தமிழ்ப் பிரபநதங்கட்கும் நான் மதிப்புக் கூறுவேன். தூதுக்கு மதிப்பு நூறுபொன்; உலாவுக்கு இருநூறு; கலம்பகம் முந்நூறு; மஞ்சரி நானூறு, மாதிரக் கட்டு ஆயிரம்; கோவை இரண்டாயிரம்; மதனவிசயம் நாலாயிரம; காமரசமாலை எண்ணாயிரம்; வசசிராங்கி பதினாறாயிரம்; சகத்திராங்கம் முப்பத்திரண்டாயிரம்; அண்ட கோசம் அறுபத்தினான்காயிரம்; பரணி ஒருலட்சம்; சிந்து மோகினி யிரண்டு லட்சம்; உத்தியாபனம் நான்கு லட்சம்; பிறவனைத்தும் இவைக்குள் அடக்கமாம். மிகின் உயர்வாம்.

பொன்னுக்காகப் பிரபந்தம் பாடிய ஒரு காலப் பகுதியை இது காட்டுகிறதோ என ஐயமெழுகின்றது. அல்லது, இவ்விலக்கியம் பாடலின் கடினம் பற்றி இவ்வாறு மதிப்பிடப்பட்டிருக்கலாம்.

இங்கு, இறுதி வெண்பாவில் (88) எதுகை பொருந்தவில்லை. (9-12)

89 ஆனைமுகன் மான்மதனை னாறுமுகன் சேற்கொடியான்
மோனசிவன் வீரனயன் முத்தனய்யன்—மோனசிவன்
மான்மாதர் காளிகலை மான்றருமி வாணிவீரி
யாணிபெண்ணாண் பிள்ளைப்பாக் காம்

பிள்ளைத்தமிழுக்குரிய கடவுளர் பற்றிய செய்தி இங்கமைகின்றது.

விநாயகன், திருமால், காமன், முருகன், காமன், சாத்துவிகக் குணமுடைய சிவன், வீரபத்திரன், பிரம்மா, முத்தன், அய்யனார், மோனசிவன், திருமால், சப்தமாதர், காளி, கலைமகள் தருமி, துர்க்கை, ஆனி (?) என்பவர் பெண்பால், ஆண்பால் பிள்ளைப்பாவுக்கு ஆவர்.

இங்குக் கருதப்படுபவர் பிள்ளைத்தமிழின் தலைவராகும் தகுதியுடைய கடவுளரா என்பது ஐயமே. சிவபெருமானுக்குப் பிள்ளைப்பருவம் பாடப்படும் மரபில்லாதிருக்க இங்கு 'மோனசிவன்' சுட்டப்படுவது இவ் எண்ணத்தை எழுப்புகின்றது பெண்பாற் பிளளைத் தமிழுக்கும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் காப்புப் பருவத்தில் பாடப்படும் கடவுளர் பட்டியல் சில பாட்டியல் நூல்களில் அமைவதுண்டு.

திருமால் அரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதி வடுகன
எழுவகை மங்கையர் இந்திரர் சாத்தன
நிதியவன் நீலி, பதினொரு மூவர்
திருமகள் நாமகள் திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே (ப. பா. 106)

மேலுள்ள பிரபந்தத்திரட்டுப் பாடலில் இதில் சில கடவுளர் பொருந்துவதும், ஒவ்வொரு கடவுளர் இருமுறை குறிக்கப் படலும் (மோனசிவன்; மால்; மதன், காளி, கலைமகள) நினைக் கத்தககது. இப்பாடலை முழுமையாகத் தெளிநது கொள்ள இயலவில்லை. (13)

90 இடுகுறியுங் காரணமு மேற்றபிர பந்த
மடுநாட்கு நாண்மூன் றடுக்கு—விடுநாளே
சோதியீ றாந்தினத்தைச் சொல்பதின்மூன் றாலடுக்கி
யோதிற்றிற் றேவகுரு வுன்னு

பிரபந்தங்கட்கு நாள், கோள் பகுப்புக் கூறப்படுகின்றது.

இடுகுறியாலும் காரணத்தாலும் பெயர்பெற்ற தொண்ணூற்றாறு பிரபந்தங்கட்கும் உரிய நாளை அறிய, அசுவதி முதல் ரேவதி ஈறான இருபத்தேழு நட்சத்திரங்களையும் மும்முறை அடுக்கி (27×3=81), பின்வருவனவற்றிற்கு அசுவதி முதல் சுவாதி ஈறான பதினைந்து நட்சத்திரங்களையும் கொள்க. இவற்றிற்குரிய கோள்களாக, ராகு, கேது நீங்கப் பிற ஏழையும் பதின்மூன்றுமுறை யடுக்கி (7×13=91), மீந்த ஐந்திற்கும் சுக்கிரனைக் கொள்க. (14)

91 இராசிகளை யெட்டடுக்கி யேற்றியிட பத்தில்
விராயவொன்பான மேலடுக்கி மிஞ்சொன்—றிராதேற்றி
யஞ்சு நிறங்களையு மாரவை யேழிசையு
மிஞ்சுதினம் போலடுக்கி மீட்டு

பிரபந்தங்கட்கு, இராசி, நிறம், இசை என்பன வகுக்கப்படுகின்றன.

பன்னிரு இராசிகளையும் எண்முறை அடுக்கிப் பிரபந்தங்கட்குரிய இராசிகளை அமைத்தல் வேண்டும் (12×8=96). இடபராசியில், ஒன்பதாவது வகை வரும் வண்ணம், எச்சம் ஒன்றும் அமையாது பொருத்தி, வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை எனும் ஐந்து நிறங்களையும் பொருந்தும்படி அமைத்து, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையையும், நாட்களை அடுக்கியது போன்று பொருத்தல் வேண்டும். (15)

92 இசைமணச் சோலைகளை யிவ்விடங்கட் கேற்றி
யிசைச்சுவையு மிவ்விடங்கட் கேற்றி—யிசைகுறியு
மிவ்விடங்கட் கேற்றி யிசைக்கிறையு மிவ்விடங்கட்
கவ்விசையைப் போலே யடுக்கு

இசைக்குரிய மணம், சுவை, குறி, இறை என்பனவற்றைப் பிரபந்தங்கட்கு இங்குக் கூறுகின்றார்.

இசைக்குரிய மணங்களான மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை என்பவற்றை உரிய இடத்தில் பொருத்தி, இசைக்குரிய சுவையான பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி என்பவற்றையும் அமைத்து, இசைக்குரிய குறியீட்டெழுத்தான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, (ச, ரி, க, ம, ப, த, நி) ஏழையும் அவ்வாறே இணைத்து, இசைக்குரிய

தேவர்களான விசுவாமித்திரன், யமன், அக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன் என்போரையும், அவ்வவ்விடங்களில், இசையை இணைத்தது போல அடுக்கிக் கொள்க. (16)

93 வெண்கலியாற் பாடும விகற்பமெலலாஞ் செப்பலிசை
வெண்பாத் தளையா விரிததுரைப்பார்—வெண்கலியுட்
சந்தமுமோர் சார்குலவிற் றக்க தளைவழுவா
வந்திடலு நன்றெனறே வை

வெண்கலியாப்புடைய பிரபந்தங்கட்குப் புறநடை அமைக்கின்றது.

வெண்கலிப்பா யாப்பாக வரும் பிரபந்த வகைகள் எலலாம், செப்பலிசை பெறறு வெணடளை வழுவாது வரும். ஆயின, வெணகலிப்பாவில சந்தம் ஒவ்வோரிடத்து வநது இணையும் போது, அதன் காரணமாக வெண்டளை வழுவினாலும், அது நனறென்றே கொள்ளப்படும். (17)

மூன்றாவது

# கருப்பொருளியல்

சில பிரபந்தங்கட்குரிய கருப்பொருள் பற்றிப் பேசுவதால் இவ்வியல் கருப்பொருளியல் எனப்படுகின்றது. இங்குக் 'கரு' என்பது தொலகாப்பிய அகததிணைக் கூறான கருவைக் குறிக்காது, உட்பொருள், அடிப்படை எனும் நிலையில், பிரபந்தத்தின் பாடுபொருள் அல்லது அமைப்படிப்படையைக் குறிக்கின்றது.

இவ்வியலில பதினாறு வெண்பாக்கள் உள.

## அந்தாதி

94 நாலா மடிமுதற்சீர் நாலாஞ்சீர் பிற்சீர்கள்
கோலுமெழுத் தொன்றொற்றிற் கூடுமுயிர்—சாலுமுயிர்
மெய்யிரண்டு மூன்றுவைத்து மேபிற்பாக் கூறுவன
வுய்யுமந்தா திக்கருப்பொ ருள்

95 வேற்றுமையுஞ் சாரியையு மெச்சங் களுமிடைச்சொ
லேற்றன வும்விகுதி யேற்றனவு—மேற்பிறவு
மல்வழியி னிற்சிலவு மாமெமுகத் தந்தாதிக்
கில்லைத் தவறுகரு வே

அந்தாதியின் கருவை விளக்குகின்றது.

ஒருபாடலின் ஈறு அடுத்த பாடலின் முதலாக வரும் அந்தாதியில் எந்தெந்தச் சீர் அல்லது எழுத்து தொடர்பு கொள்ளுகின்றது என்பதை இங்குக் கூறுகின்றார். நாலாம் அடியின் முதல்சீர், நாலாமடியின் நாலாம்சீர், பிற சீர்களின் எழுதது

ஒன்று, ஒற்றின் மேலேறிய உயிர், உயிர்மெய் இரண்டு அல்லது மூன்று—வைத்துத் தொடர்ந்து வரும் பா தொடங்கப்படும். யமக அந்தாதியில, வேற்றுமை, சாரியை, எச்சம, இடைச்சொல, விகுதி போன்றனவும் அல்வழியும் இவவாறு, வரும் பாவின் தொடக்கம் ஆதல் உண்டு. (1-2)

## தாமரைநோன்பு

96 நோன்புற்றுச் சேடி நுனிவாள் விழுமவேலை
தானபானு வேநகையாத் தாக்கவே—மான்பூ
மலாத்திக கொடுத்தலிறை வன்னிடத்திற் சேறல்
கலத்தன் மலர்ப்பாக கரு

இப்பாடல் தாமரை நோன்பினை கருநிலையில விளக்குகின்றது.

விரதம் ஏற்றுத் தோழி வருந்தி அயருமபோது, தானே கதிரவனின் ஒளிமிகுதியோடு தோயவுகொண்டு, சிறநத பூவை மலரச் செயது கொடுததலும, அதை அவள் தலைவனுககு அளிததலும, அவன் தலைவியை இணைதலும மலாப்பாவின கருவாம.

திரட்டியலில, தாமரைநோன்பு (25) என விளக்கப்பட்ட பிரபநதம் இங்கு மலாப்பா எனும் பெயருடன் அமைந்ததாகத் தெரிகினறது. செவ்வணியும, அதன் நிறைவாகத் தலைவனுடன இணைதலும கரு எனல் பொருந்தும. (3)

## வாடாத மாலை, தடாக சிங்காரம்

97 மாலையையே வல்வன மாலையொடும் வந்தணைதன்
மாலைக் கருப்பொருளா மன்னுமே—சோலைக்
கருமரங்கண் மானுவமை கண்டுநினற வேந்தன்
பொருமரஙகட் பாடு புகழ்

வாடாதமாலை, தடாகசிங்காரம் என்பனவற்றின் கருவை நுவல்கின்றது.

மலர்மாலையைத் தூதாக அனுப்புவதும், அம்மாலையுடன் வந்து சேர்தலும் வாடாதமாலை எனும பிரபந்தத்தின் கருப்பொருளாக அமைகினறன. சோலையின் மரங்களைப் பார்த்த மன்னன், அவற்றில, தான் விழைந்த பெண்ணின் ஒப்புமை கண்டு அவற்றைப புகழுதல தடாகசிஙகாரத்தின கரு.

திரட்டியலில் வாடாதமாலையும் (26), தடாக சிங்காரமும் (13) பெறும் விளக்கத்திற்கு, மேலும் சிறிது விளக்கம் தருவதாக இது அமைகின்றது. (4)

## மஞ்சரி

98 ஆரிமமோ நம்மும்மம் மாங்கி விமலஞ்சிஞ்
சீரார்சங் கிலீம்விம்மென் றானபத்து—மேரணமாய்
மூலமுன் னேசெபித்து முன்னறான் மஞ்சரிக்குச்
சாலுங் கருப்பொருளாச் சாற்று

99 பாவையைக் கண்ட பவனியா னில்வருந்த
மேவமைச்ச ரெண்ணியந்த மின்னாளைக்—கோவருகி
னுய்ப்பக் கடிமணத்தை யுற்றுநன்றா வாழுதலுங்
கைப்பில்லாப் பூவின் கரு

100 கடித்தனண்பு நிந்தித்தல் கண்டு நகைத்த
னடித்த (ல)ணைத்த லுகைத்தல்—படித்தலன்பாப்
பார்த்தனிழ லவ்வினைகள் பத்தாம் பரிசிவிகை
தார்க்கரியார்க் காமஞ் சரி

மஞ்சரியின் கருப்பொருள் விரிக்கப்படுகின்றது. திரட்டியலில் மஞ்சரியை விளக்கியபோது 'அட்சரஞ் சேவித்தல்' (38) எனக் குறிக்கப்பட்ட மந்திரமொழியும் (98), மஞ்சரியில் இணையும் மற்றுமொரு பொருள் நிலையும் (99), கற்புடை மகளிரான் மலரும் மரங்கட்கு (35) உரிய செயல் விளக்கமும், மஞ்சரியின் தலைவராகத் தக்காரும் (100), இங்குச் சுட்டப் பெறுகின்றனர்.

ஓம், நம், அம், ஆம், கிலிம், அலம், சிம், சங், கிலீம், விம் என்பன பத்து மந்திரங்கள். இறையமரும் கருவறையான மூலத்தானத்தின்முன் இவ்வாறு வழிபாடு நிகழ்த்தல் மஞ்சரியின் கருப்பொருளாம்.

அரசன் உலாச்சென்றபோது. குழுமிய மக்களில், ஒரு பெண்ணைக் கண்டு அன்புற்று, அவளைப் பெறாமையால் அரண்மனையில் வருந்தியிருக்க, அவன் வருத்தம் நீக்கும் முயற்சியில் அமைச்சர் அவளைக் கொணர்ந்து அவனுச்சு மணமுடிப்பதும், இருவரும் இன்பவாழ்வு நிகழ்த்தலும் மஞ்சரியின் கருவாம்.

கவைத்தல், நட்புறுதல் நிந்தித்தல், சிரித்தல், நடித்தல், அணைத்தல், உதைத்தல், புகழ்பாடுதல், அன்பாகப் பார்த்தல், நிழல்படுதல் என்பன பத்துச் செயல்களாம். குதிரை, சிவிகை, தார், யானை போன்ற சிறப்பங்கங்கள் உடைய அரசர்க்கு இம்மஞ்சரி பாடப்படும்.

மஞ்சரியைக் 'கைப்பில்லாப் பூ' (99) என இவண் சுட்டுவது சிந்தனைக் குரியது. (5-7)

இவ்வெண்பாக்களில் இரண்டு (98, 100), யாப்பு முழுமை கொள்ளாத தோற்றமுடையன. முதற்பாடலின் வடமொழி மந்திர ஒலியான 'கிலீம்' என்பதனை, 'க்லிம்' எனக் கொள்ளத் தளை பிழைபடாது; மகளிரின் செயல்பற்றி அமையும் பாடல், 'னடித்த/ணைத்த' என்பதால் நேரொன்றாசிரியத்தளை பெற்று வருவதால், 'ல'கரம் இணைத்து, னடித்த / லணைத்த என இயற்சீர் வெண்டளைக் கேற்ப அமைத்தல் தேவையாகின்றது.

## பட்டாபிடேகம்

101 முப்பா னிருவயதின் மூவைந்தொன் றாம்வயது
மெய்ப்பிள்ளை தன்னெறியை மேவவே—யொப்பிவைத்தல்
பாகனைய வின்பம் பிதாம்பயிறல் பட்டாபி
டேகக் கருப்பொருளென் றெண்

பட்டாபிடேகக் கருப்பொருள் விளக்கப்படுகின்றது.

முப்பத்திருவயதில் அரசன், பதினாறு வயதான தன் மகனைத் தான்செய்து வந்த அரசாட்சி நெறியின்பாற்படுத்தல், அதன் காரணமாக இன்பம் அடைதல் என்பன பட்டாபிடேகம் எனும் பிரபந்தக் கருப்பொருளாம்.

முதலியலில், பட்டாபிடேகம் (74), தன் அரசை அரசன் மைந்தனுக்கு அளித்தல் என்று சுருக்கமாகக் கூறப்பட்ட செய்தி இங்கு விரிவு பெறுகின்றது. (8)

## மதன சிங்காரம்

102 பாடு மதனன் படைமுதல வெல்லாமு
நாடுமன்ன னுக்குவமா னங்களிலே—பாடியே
யாரப் பவனிவர லாக்கன் மதனசிங்
காரக் கருப்பொருளாக் காட்டு

மதனசிங்காரம் எனும் பிரபந்தக் கருப்பொருள் தரப்படுகின்றது.

மன்மதனின் படை முதலிய அங்கங்கள் அனைத்தையும் மன்னனுக்குரியவற்றிற்கு உவமையாகப் பாடி, அவன் பவனி வரலாக உருவாக்குதல் மதனசிங்காரக் கருப்பொருளாம்.

முதலியல் தரும் இவ்வகையின் இலக்கணம் (48) இங்கு இன்னும் விளக்கம் பெறுகின்றது. (9)

## கானவேட்டம்

103 இறைமயக்கத் தாலரம்பை யிவ்வுலகில் வந்து
முறைமுறையே செய்கலவி முற்றி—நறையமுதந்
தேன்முதல வீந்துவிண்ணிற் சேறற் கருப்பொருளாங்
கானவேட் டத்தமிழ்க்குக் காண்

கானவேட்டத்திற்குரிய கருப்பொருள் சுட்டப்படுகின்றது.

மன்னன்பால் ஏற்பட்ட காமமயக்கம் காரணமாக மேலுலக மாதான அரம்பை இவ்வுலகில் வந்து, அவனைக் கலந்து மீண்டும் வானுலகு செல்லல் கானவேட்டம் எனும் பிரபந்தக் கருப்பொருள்.

முதலியலில் கானவேட்டம் (54) என்றதனை இங்குக் கானவேட்டத் தமிழ் எனச் சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கது. முதலியலில் தலைவனின் வேட்டச் செய்தியும், இங்குத் தலைவியின் நிலையும் விளக்கம் பெறுகின்றன. (10)

## கன்னிமயக்கம்

104 மதசாலை செய்துமன்னன் மானழகுக் கோதுச்
சிதவழகு வேண்டுதவஞ் செய்ய—மதனார்தன்
காமாங்க மேயுதவல் சோறல் கருக்கன்னி
காமயக்கத் துக்கென்றுங் காண்

கன்னிமயக்கம் எனும் பிரபந்தக்கரு விரிக்கப்படுகின்றது.

காமவிகாரம் காரணமாகக் கூடம் அமைத்து, மன்னன், தான் விரும்பும் பெண்ணின் அழகுக்கு ஏற்ற அழகு வேண்டித் தவம்செய்ய, மன்மதன் அருளால் அவன்போன்ற அழகுடல் பெறுதல், கன்னிகா மயக்கத்துக் கருப்பொருளாம்.

முதலியல் (68) மாரனின் அழகுபெற்றுக் கன்னியை மேவலையும் கூறுகின்றது. (11)

## பிள்ளைத் தமிழ்

105 இருகையை யூன்றி யொருதா ளெடுத்துத்
திருமுகமாட் டும்பருவந் திங்கள்—வரவழைத்தல்
சாமமுதற் சொற்றன முப்பான்மூ வர்ச்சாற்ற
லாம்பிள்ளைப் பாக்கருவ றி

பிள்ளைத்தமிழுக்கு உரிய கருப்பொருள் கூறப்படுகின்றது.

இருகைகளை ஊன்றி ஒருகாலை உயர்த்தி முகத்தை ஆட்டும் செங்கீரைப் பருவம், சந்திரனை அழைத்து சாம பேத தான தண்டங்களில் கூறும் அம்புலிப்பருவம் முதலியன கூறல், காப்புப் பருவத்தில் முப்பத்துமூன்று தேவரைப் பாடல் ஆகியன பிள்ளைப்பாக் கருவாம்.

முதலியல் பிள்ளைத்தமிழ் (3-5) என விளக்க, இவ்வியல் பிள்ளைப்பா எனச் சுட்டுகின்றது. (12)

## கோவை, ஆடாமணி

106 திணைமுதல பன்னிரண்டுஞ் செப்புதலாம் கோவைக்
கிணைசமம்பெண் கூற்றுதனூ றிற்கே—பணைகருவா
மாடா மணியை யசைக்கு மிடாமலென்ற
லாடா மணிக்கரு வே யாம்

கோவை, ஆடாமணி யாகியவற்றின் கருச்செய்தி இங்கு அமைகின்றது.

திணைமுதல் அமைந்த பன்னிரு அகப்பாட்டு உறுப்புகளையும் கூறுவதான கோவைக்கு, தோழி, தலைவியாகிய பெண்டிர் கூற்றைச் சமமாக இணைக்க நூறுபாடலுக்கு மருதம் பொருளாகும். ஆடாத மணியை, இடாமலே அசைக்கும் நிலையைக் கூறுவது ஆடாமணியின் கரு.

முதலியல், கோவைக்கு (42), அகப்பொருளையும் யாப்பு எண் நிலைகளையுமே சுட்டுகின்றது. இங்குத் 'திணைமுதல்' என்றதால், திணை, கைகோள், கூற்று, கேட்போா, களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை எனும் பன்னிரண்டின் இணைவும் கொள்ளப்படுகின்றது.

திரட்டியலின் ஆடாமணிச் செய்தி (10), இங்கு விளக்கம் பெறுகின்றது. (13)

## கலம்பகம்

107 ஆகுங் கலம்பகக்கந் தாதியே சாதிநெறி
போகுமுற் கூறுய் பொருண்மிகுந்தா—லாகுபொது
வெல்லார்க்கு மன்னவர் மானிடருக் கேற்றநெறி
சொல்லிலுயர் வோர்திறன்பார் சொல்

கலம்பகத்தின் கருப்பொருள் நுவல்கின்றது.

கலம்பகத்திற்கு அந்தாதி உரியதாம். பாடல் தலைவருக் கேற்ப முழுஉறுப்பு நிலையும் அமையும். பொருள்வளம் மிக்க இவ்வகை எல்லோருக்கும் பொதுவானது என்றபோதும், மன்னருக்கும், மனிதரில் உயர்ந்தோர்க்கும் சொல்லது நன்றாம்.

முதலியலில் கலம்பக உறுப்பு, யாப்பு, பாடலெண்ணிக்கை விளக்கம் (32-34) அமைகின்றது. இரண்டாவதியலில் சாதிக் கேற்ற பிரபந்தப் பகுபபால் (81), கலம்பகம் எல்லாச் சாதிக்கு முரியதாகக் கொள்ளும் வாய்ப்பமைகின்றது. அதற்கொரு புறநடை அங்கு அமைவதாகக் கொள்ளலாம். (14)

## மடல், உலா, பருவமாலை

108 ஆசிடையி லாவெதுகை யாமடற்குற் றாற்கூற்றும்
பேசுபரு வம்முமுலாப் பின்முன்னாங்—காசில்
குழமகனே யந்தாதி கூர்துறைமா லைக்கா
மழகுபொது வெப்பாவு மாம்

மடல், உலா, பருவமாலைகட்குக் கரு கூறப்படுகின்றது.

மடல் பிரபந்தம், ஆசிடையில்லாத எதுகையச், சாமுற்றான் கூற்றுமாக அமையும். உலா, எழுவகைப் பருவங்களைப் பின்பகுதியில் பேசி, முற்பகுதியில் குற்றமற்ற குழமகனான தலைவனைப் பாடும். எழுபருவப் பெண்டிரின் பல்வகைத் துறைக் கல்வியைப் பாடும் பருவமாலை அந்தாதி இணைவுடன் அமைவது அழகாம். பொதுநிலையில் இது எப்பாவாலும் உருவாசலாம்.

மடல் (22), உலா (31), பருவமாலை (11) என்பனவற்றின் துணைவிளக்கம் இங்கமைகின்றது. உலாவுக்குச் குழமகன் இங்குக் கூறப்படுவது முன்பு அரசன் சுட்டப்பட்டதற்குப் புறநடை போலும். (15)

## குறியறிசிந்து, சடானனம்

109 குறியறிசிந் துக்குக் குறவஞ்சி பாத
நெறிகுழுவ நாடகமு நேராம் தழைதா
ழிசையிணைத் தாழிசை சண்முகப்பாக் கேயா
மிசையிறக்குஞ் சொல்வர் நெறி

குறியறிசிந்து, சடானனம் எனும் வகைகளின் கரு குறிக்கப்படுகின்றது.

குறியறி சிந்துக்குக் குறவஞ்சியின் யாப்புவழியில் அமைந்த குழுவ நாடகம் ஒப்பாம். சடானனம் எனப்படும் சண்முகப் பாவுக்கு, தாழிசை, இணைத்தாழிசையாக அமைந்து இசை சேர்க்கும் என வழி கூறுவர்.

முதலியலில் குறியறிசிந்து (18) பற்றிக் கூறியபோது காட்டாத இணைவை இங்குச் சுட்டுகிறார். அங்கு, சடானன னற்பாவுக்கு (13), ஆறாவது யாப்புவகையாகச் சுட்டிய தாழிசைக்கு இங்கு விளக்கம் சேர்க்கின்றார் எனலாம்.

இவ்வெண்பா, இரண்டாவதடியில் ஒரூஉ எதுகை பெறாமையால் இன்னிசையாகி, இருவிகற்ப இன்னிசை வெண்பாவாக அமைகின்றது. (16)

நான்காவது

# பொருத்தவியல்

பொருத்தங்கள் குறித்துப் பேசும் இயல எனப் பொருள்படு கின்றது.

பிரபந்தத்தின் முதன்மொழியில் அமையவேண்டிய நல்லியல் புகள் இங்குப் பொருத்தம எனப்படுகின்றன. பொருத்தம் பற்றிய எணணம், பிரபந்தம் பற்றிய கருத்தோடே இணைந்து தோன்றியிருக்க வேண்டும். பிரபந்த இலக்கணம் கூறும் பாட்டியல்கள், பெரும்பாலும் பொருத்தம் பற்றிய எண்ணங் களை முன்னியலில் கொண்டமைவது இங்குக் கருதத்தக்கது. பிற்காலத்தில், பிரபந்தமரபியல், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் போன்ற சில நூல்கள் பிரபந்தம் பற்றி மட்டும் பேசியது போன்று, 19-ஆம் நூற்றாண்டில் குலாம்காதிறு நாவலரின் பொருத்த விளக்கம் பொருத்தங்கள் பற்றி மட்டுமே பேசு கின்றது.

பொருத்தங்கள் பத்து என்பது பொதுவான கருத்து. ஆயின் பன்னிரு பாட்டியல், எழுத்தியல், சொல்லியல் ஆகிய இருபகுதி களில் கூறும் செய்திகளை நோக்கப் பன்னிரு பொருத்தம் அமைந்ததாகத் தோன்றுகின்றது. இது கூறிய கன்னல், புள் எனும் எழுத்துப் பொருத்தங்கள் பின்பு காணப்படவில்லை. அவ்வாறே சொல்லியல் கூறும் பெயர்ப் பொருத்த நிலையும் பின்புள்ள நூல்களில் தரப்படவில்லை.

பொருத்தம் என்ற சொல்லாட்சி பன்னிரு பாட்டியலில் அமையவில்லை. நவநீதப் பாட்டியலே பொருத்தவியல் எனும்

இயல் பெயரைத் தந்து, முதன்மொழிக்கண் இவையும் இப்பத்தியல்புகளைப் பொருத்தம் எனச் சுட்டுகின்றது. பின்னூல்களில் இவ் ஆட்சி தொடர்கின்றது.

முதன்மொழியில் பொருந்தவேண்டியவை என்பதால் இவை பொருத்தம் எனப்பட்டிருக்கலாம். அல்லது, பாட்டுடைத் தலைவனின் பெயர், நாள், பால், வண்ணம் போன்றனவும் அவனைப் பாடும் இலக்கியத்தின் தொடக்கமும் ஏற்றவண்ணம் இணைவு கொள்ளுமபடி கருதப்பட்டதால் பொருத்தம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். மணமக்கட்கிடையே கருதப்படும் பொருத்தத்தையும், ஒத்தகிழவனும் கிழததியும் எனத் தொல்காப்பியர் (1039) விளககுவதையும் இங்கு எண்ணலாம்.

## பொருத்தம்

110 சாற்று மங்கலஞ் சொல்லெழுத் திசைவுறு
தானம் பால்பகு முண்டி
யேற்ற வன்ன நாட்கதி கணமெனத்
தசமே குலாம்பொருத் தங்கண்
மாற்று தூக்கின்முன் மொழிகொள வைப்பதே
மாண்ப தாமொன் றேனு
மாற்ற லின்றியே தவறினுந் தவறென்ப
வருங் கலைவல் லோரே

பொருத்தம் ஈவையென்பதும்,அதன் நிலையும் கூறப்படுகின்றன.

மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், சதி, கணம் என்று கூறப்பட்ட பத்தும் பொருத்தமாம். இவை செய்யுளின் முதல சொல்லில் பொருந்தி வருவது சிறப்பு. இவற்றுள் ஒன்று தவறினாலும், அது இழுக்கு எனக் கலை வல்லுநர் கூறுவர்.

இவற்றுள் மங்கலம், சொல் என்பன சொற்பொருத்தமாகவும், கணம் சீர்பொருத்தமாகவும் எழுத்து முதலிய ஏழும் எழுத்துப் பொருத்தமாகவும் அமைகின்றன.

இந்நூல் ‘தூககு’ என்பதாலும், இலக்கண விளக்கம்,

விரித்த பாமகட்கும் வேட்கும் இறைக்கும்
பொருத்தம் ஈரைந்தும் போற்றல் வேண்டும் (769)

என்பதாலும, பிரபந்தங்கட்கு மட்டுமனறி, எல்லாப் பாடலுக்கும் பொருத்தம கருதப்படலாம் எனும் எணணம் எழுகினறது. வரையறுத்த பாட்டியல், 'வாளா உரைபபுதில; தொன்னூலோர் வகுத்த வருணம உண்டி கேளார்நத நல்ல கதி கணம் ஆயந்து உரை' (10) என்பதாலும், வெண்பாப்பட்டியல்,

> திருமங்கை நின்றகலாள் தெவ்வுநோய் நீஙகும்
> தருமங்கள் நீங்கலாச் சாாவார்...

என உரைத்தலாலும்,ஒரு காலப்பகுதியில்,பொருத்தம் மிக அடிப்படையாகக் கடைப்பிடித்த நிலை புலப்படுகின்றது. பொருததங்கள அமையப் பாடலால் நன்மை விளையுமெனவும், அவை பொருத்தமின்றி வரின் தீமையுறும் எனவும் கருதியமை பாட்டியல்களின் பொருத்தவகை விளக்கங்களில புலப்படுகின்றது.

பன்னிருபாட்டியல், இலக்சண விளக்கம நீஙகலாகப் பிற நூல்கள் பொருத்தப்பட்டியலை மங்கலம முதலாகக் கணம் ஈறாகவே வைத்து அமைப்புமுறை கொளகின்றன. (1)

## மங்கலம்

(வேறு)

111 சீாமணி யெழுந்துலகு திங்கண்மலை பூபபொன்
காா பருதி யானைநிலங் கங்கை திருச்சொன்னீர்
தேரினொடு மாமுதல செப்புத வியற்பே
ரார்முன மொழிமங்கல மறைநதிடுத னனறே

வேறு

112 சொல்லு மங்கலத்திற்
கொல்கதி யொற்றுறி
னல்லசொல் லெடுத்தச்
சொல்லது தவிறே

வேறு

113 மங்கலச் சொல்லிற்
றங்கிய வொற்றிற்
றங்குயி ரேற்றின்
மஙகல மீறும்

வேறு

114 ஏற்று நாப்பா லுண்டியி லுறாவுண்டி
யேவனத் துறாவனங் கதியிற்
சாற்றெணாக் கதியி னெழுத்து நீத்துறுத
நரக்கணம் பொருந்தசைக் கொப்ப
மாற்றும் பத்தொன்பான் மங்கல மொழியின
மாற்றிய வகைக்கெலாம் வழுவா
யாற்றுவ தின்னவிவை பொருந்தாவென் றறைது
நீகாண்டி சொல்ல கத்தே

மங்கலப் பொருத்தம் விளக்கப்படுகின்றது.

சீர், மணி, எழுத்து, உலகு, திங்கள், மலை, பூ, பொன், கார், பகுதி, யானை, நிலம், கங்கை, திரு, சொல், நீர், தேர், மா முதலியனவற்றைக் கூறுதல்; இயற்பெயருக்குப் பொருத்தமாக முதன்மொழியில் மங்கலச் சொல்லைத் தருதல் நனறு. மங்கல மொழிகளில், விலங்கு-நரக கதிகளுக்குரிய ஒற்றுகள் (யரலறழ வளன) வரின், அச் சொற்களை நீககிப் பிறவற்றைக் கொள்க. மங்கலச் சொல்லில் உள்ள ஒற்றெழுத்து புணர்ச்சியில் சிதைநது, அங்கு உயிரெழுத்துப் பெறின், அச்சொல் மங்கலம் இழக்கும். ஏற்புடையதல்லாத பால், உண்டியில் பொருந்தாத நஞ்சு, வருணததில செவ்வியதல்லாத வருணம், கதியில் கூறத்தகாத கதி இவற்றின் எழுத்துகளை நீக்கிப் பிறவற்றை மேவல் வேண்டும். த (நேரநிரைநேர்), ர (நிரை நேர் நிரை) எனும் கணம, வருமொழியின் அசைககு ஏற்பப் புணர்ச்சியில் மாற்றம் பெறும் பத்தொன்பது மங்கலச சொற்கள், அவற்றின் இயல்பாகக் கூறிய வகைகளுக்கு எல்லாம் வழுப்பட மொழிதல் ஆகிய இவை பொருந்தாதனவாம். இவைபற்றிச் சொல்லின்கண் காண்க.

மங்கலச சொல்லின் பட்டியலைப் பாட்டியல்கள் இயல்பாகக் கூறுகின்றன. வெண்பாப் பாட்டியல் பததொன்பது சொல்லும் சுவாமிநாதம் முப்பத்திரண்டு சொல்லும தந்து ஈரெல்லை காட்டுகின்றன. பிரபந்தத்திரட்டு (114) பததொன்பான் மங்கல மொழி எனக கூறினும், பட்டியலில் (111) உலகு என்பதிணையப் பதினெட்டு சொற்களே அமைகின்றன. பாட்டுடைத் தலைவனின் இயற்பெயருககேற்ப மங்கலம் அமைவது பற்றிப் பிரபந்தத் திரட்டுக்கு முன் பன்னிருபாட்டியலே மொழிகின்றது (74-84).

வரையறுத்த பாட்டியலும், பிரபந்த தீபிகையும் மங்கலச் சொல்லையும், தொடர்ந்து வரும் எழுத்தையும் தொடர்புபடுத்திக் கூறுவது, ஓரளவு இதனுடன் இணைவு காட்டுகின்றது.

பன்னிரு பாட்டியல், மங்கலப் பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப் பொருத்தம் ஆகிய மூன்றையுமே 'மங்கலம்' என அடக்கிவிடுகின்றது. மங்கலச் சொல், அடையடுத்தும் அமையலாம் எனும் கருத்து சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம் போன்றவற்றில் அமைகின்றது. அதோடு, செய்யுளின் முதன் மொழியில் மட்டுமன்றி இடையிலும் கடையிலும் மங்கலம் வரலாமெனவும் இசசில நூல்களும் சுட்டுகின்றன.

பன்னிரு பாட்டியல், மங்கலம் சிதைந்தால் அது தலைமகனுக்குக் குற்றம் எனவும், அரசனை அண்டாதோரும், பரிசில் பெறாதோரும் அவனழிய மங்கலம் சிதைத்தலும் உண்டு எனவும் கூறுகின்றது.

பத்துப் பொருத்தங்களிலும் மங்கலம் தலையானதாகக கருதப்படுகின்றது. மங்கலம இருப்பின பிறபொருததங்கள் அமையாமையையும் வழுவன்று 'மங்கலத்தால் நஞ்சு சில அமுதமாகும்' எனும் சிதம்பரப பாட்டியல் கருத்து இவ எண்ணத்தைத் தருகின்றது.

மங்கலம் பற்றிய செய்திகளின் இறுதியில், 'காண்டி சொலலகத்தே' என்பதால் இவர், தொடர்ந்து வரும் சொறபொருத்தத்தைக் குறிப்பிட்டார் எனலாம். (2-5)

## சொல்

### வேறு

115 புகலுறு மாறுசொற் பொருத்த மாவன
வகையுளி பலபொருண் மாற்றி யேசிறப்
புமொழி நீக்கியொண் பொருளின் வைத்தல்சொற்
றருகடை திரிவுறா தமைத்த றானரோ

### வேறு

116 மெல்லிடை யாமின மங்கல மேவுஞ்
சொல்லுறி லீற்றுருப் போய்வலி தோன்றில்
வல்லமுற் சீர்முற்றல் பின்மொழி வந்தா
லல்லல் வகையுளி யாம்விடல் வேண்டே

117 மங்கலச் சொற்குறு கற்பெயர் வைத்தான
மங்கிய சொல்லது வாஞ்சிறப் பின்மை
யங்குப் பலபொரு ளோர்சொல விரிந்தா
லங்கதை யோர்மொழி யாக்கல்பிற சொல்லே

118 மங்கலச் சொற்பொருட் கொப்ப வருஞ்சொற்
றங்குத லொண்பொரு டள்ளவை நீக்கி
யங்குறல் கொண்டக லக்கவி சொல்வாய்
பொங்கிய கல்வியம் பூங்கட லானே

சொற்பொருத்தம் விரிக்கப்படுகின்றது.

கூறியபடி, சொற்பொருத்தம் என்பது, வகையுளியும் பல பொருளுடைய சொல்லும் மாற்றுதல், சிறப்புக் குன்றிய மொழி நீக்கல், சிறந்த பொருளுடைய சொல்லை வைத்தல், அத் தகுந்த சொல் ஈற்றில திரிவு பெறாதமைதல என்பதாம். மெல்லெழுத்தும் இடையெழுத்தும் பெறும மங்கலச சொற்கள், வரும்மொழி காரணமாக, தம் ஈறறுப பகுதியின் உருவு கெட்டு வலலெழுத்துப் பெறும் கடைதிரிவும், சீரமைப்புக் காரணமாக மங்கலசசொல் முதறசிரிலும வருமொழியிலுமாகப பிளவுபடும் வகையுளியும் விடப்படல வேண்டும். மங்கலச்சொல தன் முழுஉருவுடன் வராது குறுகி அமைதலும், தலைவனின் பெயருக்கேற்ற தானப் பொருததம் அமையாதமையும் சிறப்பற்றனவாம். பல பொருண்மைகளையுடைய சொல்லை நீககி, ஒரு பொருளுடைய சிறந்த சொல்லைக் கொள்ளவேண்டும். மங்கலசசொல் பொருளுடையதாக அமைநது, தொடர்ந்து வரும் சொல்லும் சிறந்த பொருளுடையதாக வைத்து அகலக்கவி பாடுக.

பன்னிரு பாட்டியலில், மங்கலத்தின் பகுதியாக அமைக்கப் பட்ட இச்சொலபற்றிய செய்திகள், வெண்பாப் பாட்டியலின் காலம்முதல தனிப்பொருத்தமாக உருவாகின்றது. இன்னின்ன சொல்நிலை அமைய வேண்டும் எனாது, இத்தகைய அமைப்புகள் வரலாகாது என எதிர்மறையில் விதிவகுத்தல (விலக்கு) இங்கு அமைகின்றது. அருகி, ஒரு பொருட்டாகி (ப.பா. 79) எனப்படு வதும் உண்டு.

பொதுவாக, வகையுளி, பலபொருளுடைமை, வனப்பின்மை, பொருளின்மை, ஈறுதிரிதல், சிறப்பின்மை, பொருள் தெரியாமை என விலக்குகள் சுட்டப்படுகின்றன. இவற்றைச் சிதமபரப்

பாட்டியல் ஆனந்தம் என மொழியும். நவநீதப் பாட்டியலும் இலக்சண விளக்கமும், தசாங்கம் பற்றிய சொற்களிலும் இச் சொற்பொருத்தம் நோக்கப்படுவதைக் கருதுகின்றன. இலக்கியத்தின் முதனமொழியான மங்கலச் சொல்லில் இப்பொருத்தம் நோக்கப்படல வெளிப்படையானமையின போலும் பலநூல்கள் அதனைச சுட்டவில்லை. சுவாமிநாதம் (147) குறிககின்றது. பிரபநதத்திரட்டு வெளிப்படையாகத் தருகின்றது. (6-9)

## எழுத்து

### வேறு

119 புகன்ற வெழுத்துப் பொருத்த மொன்றுமுதற்
பத்து ளொன்றாய்ப் போற்ற லாகு
மகன்ற விரட்டித் தவெழுத் தெல்லா
மாகாவவறறு ளாகா வாத
றிகழ்ந்த நாலுட னிரண்டா மாவ
னவிலோ ரெழுததுச் சீராய் நிலலாப்
பகர்ந்த கலித்துறை வெளளை முதல்நில
நீாக்கண நண்பாகா வன்றே

### வேறு

120 அறத்துறு சோமன் சீறநால தாமெழுத
துறறகுமே விதிமுன்னோ ரன்றியுந் தசசீா
நிறுத்திட வொற்றொடே நிகழ்த் தெழுத்தினுங்
குறைப்படு மிசைவுறா குலவு நீருமே

எழுத்துப் பொருத்தம் சுட்டப்படுகின்றது.

கூறிய எழுத்துப் பொருத்தம் ஒன்றுமுதல் பத்தில் ஒற்றையாக வருவனவற்றை ஏற்றலாகும். இரட்டை எழுத்துக்கள் அனைத்தும் ஆகாதனவாம். அவற்றுள்ளும் நாலெழுத்தும், இரண்டெழுத்தும் ஏற்புடையன ஆகும் என்று கூறியவற்றுள், ஓரெழுத்து சீராய் நில்லாது. கலித்துறைக்கும் வெண்பாவுக்கும் முதலில் நில (நிரை நிரை நிரை) நீர்க் (நேர் நிரை நிரை) கணங்கள் நட்புடையன அல்ல. அறம் சார்ந்த சோமன் (நிரை நேர் நேர்) எனும் சீர் நாலெழுத்து உடையதாயினும் அது பொருந்தும் தகுதியுடையது. முன்னோர் வகுத்த விதிகள இல்லாத போதும், த(நேர் நிரை நேர்),ளா(நேர்நேர் நிரை)கணங்கள் ஏற்க

வேண்டுமாயின் ஒற்றையும் சேர்த்து எழுத்தமைக்க வேண்டும். நீர்க்கணமான நேர்நிரைநிரை எழுததில் குறைப்படுவதால் பொருத்தமாக அமையாது.

எழுத்துப் பொருத்தம், பன்னிருபாட்டியலில் மங்கலத்தின் பகுதியாக அமைந்து பின்பு தனிவகையாகின்றது. மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது ஏற்றது எனவும் நான்கு, ஆறு, எட்டு நீக்கவேண்டியது என்பதும் பொது எண்ணம. எழுத்தெண்ணும்போது ஒற்றுடன் சேர்த்து எண்ணப்படவேண்டும். என்பதும், சமநிலை வருப்படி அமைப்பின் பாட்டுடைத் தலைவனுக்குக் கேடு என்பதும பன்னிருபாட்டியல் கருத்து. பிரபந்தத்திரட்டுப் போன்று கணப்பொருத்தத்தையும் எழுத்துப் பொருத்தத்தையும் இணைத்துப பார்த்தல் பிறநூல்களில் இல்லை. (10-11)

## தானம்

### வேறு

121 ஐயார் குறிலைந் நெடிலே முறையே
யாக்க சோடிணைத் தையுயிர்க் கிடமே
யியா யௌவுயிர்க் கிடமே யுவுமாக்கிப்
பாலகுமார விசார நரை
மெய்யா கியவிாத்த மோடே மரண
மேற்றிக் கவிராசன் முதற்சொலெழுத்
தையா கொடுகோன பெயர்பா லனதென்
றநதாதி செய்தாரு முன்மூன் றுமுனே

### வேறு

122 ஆதிமொழி யெல்லா
மோதலபொருந் தெட்டே
யாதியெழுத தொன்று
மோதுவதி தறகே

### வேறு

123 உயிர்கட் கிப்படிப்
பயிலக் கூறினா
முயிர்கட் [டு]கற்றதே
யுயிர்மெய்க் [டு]கற்றதே

தானப் பொருத்தம் நவிலப்படுகின்றது.

ஐந்து குறில்களையும் ஐந்து நெடில்களையும் அஆ, இஈ, உஊ, எஏ, ஒஓ என்ற முறையில் ஆக்கியிணைத்து, ஐ எனும் உயிரை இ-யின் இடத்தும், ஔவெனும் உயிரை உ எனும் இடத்தும் ஆக்கி, பாலன், குமாரன், இராசன், நரையுடம் புடையமுதுமை (மூப்பு), மரணம் எனும் பெயரளித்து, கவிதை யின் முதற்சொல்லுக்குரிய எழுத்தைத் தலைவன் பெயரின் முதலெழுத்துப் பாலன் எனக்கொண்டு, அந்தாதியாக்கி, முதல் மூன்றுள் ஒன்றைத் தேர்ந்துகொள்க. முதற்சொல்லாக எவை யெல்லாம் கூறுவது பொருத்தம் என்றதுபோல், எட்டு எழுத்து களே முதலெழுத்தாகப் பொருந்தவேண்டியன எனபது இங்குக் கூறப்படுகின்றது. உயிரெழுத்துகட்குக் கூறப்பட்ட இப பயிற்சியே, உயிர் மெய்கட்குமாகும்.

இந்திரகாளியம், பொருந்தாத் தானம் வரலின் தீப்பயனை,
மூப்பும மரணமும் மொழிந்த காலை
நிலையில் குலைதல் செல்வம் நீங்குதல்
கொலையில் பிணியில் கூட்டுதல் ஆகும் (41)

எனக் கூறுகின்றது. ஐந்து தானங்களில, ஏற்புடைய முதல் மூன்றினை நட்பெனவும் பிறஇரண்டினையும உதாசீனம, பகை எனவும் கூறுதல் பன்னிருபாட்டியலில் அமைகின்றது. இத்தானப் பொருத்தம் காணப் பிரபந்தத் தலைவனின் இயற்பெயர் கருதப் படவேண்டும் எனபதனைத் தொன்னூல்விளக்கம் சுட்டுகின்றது.
(12-14)

## பால்

### வேறு

124 ஐங்குறி னாலாணா னெடின் மங்கைய ராகுத லவ்வவரே
தங்கிய வாணொடு பெண்ணு மயங்குத றாரணி
மேன்முறையே
யிங்கலிநா லுயி ரொற்றவையேவர லின்மையு நன்மைகளே
யைங்குறினானெடி னாலுயிர்மெய்யினுமப்படியாகுமரோ

### வேறு

125 மூவா றொற்றும்
பாவா யலியேற்
பாவாய் நஞ்சொழி
மூவா றாமே

வேறு

126 ஒவ்வுயிரு மையோவு
மௌவுயிரு மலியே
லெவ்வகை பொருத்தமுற
லவ்வுயிர்க ளாமே

வேறு

127 முன்மொழி மங்கலச்
சொன்னிலா வாய்த
மன்னலி யென்னவு
முன்னுத னன்றே

பால் பொருத்தம் இயம்பப்படுகின்றது.

ஐந்து குறிலெழுத்துகளில் நான்கு ஆண்பால்; நான்கு நெடில் பெண்; அவ்வப் பாலினர்க்கு அவ்வவ் எழுத்து ஆகும், ஆணெழுத்தும் பெண்ணெழுத்தும் மயங்குதலும் உண்டு. நான்கு உயிரும், ஒற்றும் அலியாம்; இவை வரல் கூடாது நன்மை தரும் பாலெழுத்துகள் ஐந்துகுறிலில நான்கும், நான்கு நெடிலும், அவற்றின் உயிா மெய்யுமாகும். பதினெட்டு ஒற்றெழுத்தும் அலியெனின், அவற்றை நஞ்சு என்று ஒழி, ஓ, ஐ, ஓ, ஔ எனும் உயிர்கள் அலி எனின், அவை எவவாறு பொருத்தமாகக் கொள்ளப்படும்? முதன்மொழிககண் வரும் மங்கலச் சொல்லில் நில்லாத ஆய்த வெழுத்தையும் அலி எனக் கருதுதல் நன்று.

குறில் எழுத்துகள் ஆண் எனவும் நெடிலெழுத்துகள் பெண் எனவும கூறுவது பாட்டியல் இயல்பு. உயிர்குறிலும் உயிர் மெய்க்குறிலும் ஆண் எனவும் அவ்வாறே உயிாநெடிலும் உயிர் மெய்நெடிலும் பெண் எனவும் விதந்தோதுதலும் பொதுமை. ஆயின் பிரபந்தத்திரட்டுப் போன்று நான்கு உயிரை அலி என விலக்கல் அவற்றில் இல்லை. தொன்னூல் விளக்கம் உயிரெல்லாம் ஆண் எனவும உயிர்மெய்யனைத்தும் பெண் எனவும் இணைக்கின்றது புதுமைக் கருததாம். ஒற்றும் ஆய்தமும் அலி எனும் செய்தியில் நூல்களிடையே கருத்து வேறுபாடு அமைய வில்லை.

(15-18)

## உண்டி

வேறு

128 ஈறொழித்த வன்மை மென்மை யீறொழித்த குறிலே
யீறிலொரு மூன்றுயிரை யேயொழித்த நெடிலே
தேறமுத முந்நெடில் சிறப்பிலிடை யினமே
செப்புகுறி லொவ்வலி மெலிக்கடை யெழுத்தே
கூறுமிவை பன்னிரண்டு நஞ்சமுன் பின்னனங்
கூறுதலின் முந்நெடிலு மொவ்வுயிரு மழுதே
யூறுமிவை யிற்கொடிய நஞ்செழுத்து யரல
வொற்றுடன் சொலாவு முறுமோவு முறமாதே

வேறு

129 பொய்யா யரலப் பொல்லா நஞ்சு மோர்பாலு
மையமுத மிருந்தாலூறிய தாமன்றோ
மையார் யரலத் தானே யமுதாய் வரில்வவ்வு
மெய்யா மழளவும் றனவுஞ் சொல்வேன் விண்டின்றே

வேறு

130 கான்மாத் திரையள பெடைமுச் சுழியிவை
கருதிய நஞ்சென்றா
ரேன்மங் கலமொழி யவையிற் பொலிவன
விலையா கையினாலே
தான்விண் டதுமவை நஞ்சென் றறிதரு
னக்கர மிங்காகா
வான்மின் னவுமுரை யாலிட் டனம்வரன்
மாண்பா மறிதற்கே

வேறு

131 நஞ்சுபனி ரண்டு
மெஞ்சுகதி யாகு
மெஞ்சுக நீக்கி
னஞ்சிலெழுத் தாமே

132 முன்னவருள் ளிட்டுச்
சொன்னமிவை நன்று
துன்னுபதி னெட்டாய்
மன்னமு தெழுத்தே

வேறு

133 ஆரமுத வெழுத்தினுயிர்க் கற்றவே யுயிர்மெய்க்குச்
சாரமுத வுயிர்மெய்க்குஞ் சாற்றினவே மெய்களுக்குஞ்
சீரிலவை வந்தமையிற் சிறப்பின்றாம் வழுவமைதி
யேர்ஙஞண நடவமுத வெழுத்திருபா லாயமுதே

வேறு

134 ஒற்றவைநஞ் செட்டும்
பற்றுயிரி னமுதாம்
பற்றுயிரி னாலு
மொற்றுறினு மமுதே

உண்டிப் பொருத்தம் அமுது, நஞ்சு என வகுக்கப்படுகின்றது.

ஈறான ற ஒழிந்த வல்லெழுத்தும் (க, ச, ட, த, ப), ன ஒழிந்த மெல்லினமும் (ங, ஞ, ண, ந, ம), ஈறான ஒ ஒழிந்த குறிலும் (அ, இ, உ, எ), ஈறிலுள்ள ஐ, ஒ, ஔ எனும் மூன்று உயிரும் ஒழிந்த நெடிலும் (ஆ, ஈ, ஊ, ஏ) அமுதமாம். மூன்று நெடிலும் (ஐ, ஓ, ஔ), சிறப்பில்லாத இடையினமும், குறிலில் ஒ வும், வல்லினம மெல்லினங்களில் ஈற்றெழுத்தும் (ற, ன) எனும் பன்னிரண்டும் நஞ்சு. முன்பும், பின்பும் கூறலால், ஐ, ஓ, ஔ எனும் மூன்று நெடிலும் ஒ எனும் உயிரும் அமுது ஊறுவதுண்டு. இவற்றை விட மிகுந்த நஞ்சுடைய எழுத்து ய, ர, ல எனும் ஒற்றும் அவற்றோடிணைந்த ஆவும் ஓவும் (யா, யோ, ரா, ரோ, லா, லோ) ஆகும். ய, ர, ல எனும் பொல்லாத நஞ்செழுத்துக் களும் ஒருபால் உகர அமுது இணைந்தால் தாமும் அமுதூறும். குற்றம் பொருந்திய ய, ர, ல தனித்து அமுதாய் வரும் எனின் வ, ழ, ள, ற, ன என்பனவும் ஏற்புடையதாம் எனக் கூறுவேன். கால்மாத்திரை (மகரக்குறுக்கம்), அளபெடை, ஆய்தம் என்ப வற்றை நஞ்சென்றார். ஏன்? அவற்றை உடைய மங்கலமொழிகள் இல்லை யாகையால் நஞ்சென்றார். நஞ்சென்று அறியப்படும் ணகர எழுத்து ஆகாது எனப்படினும் வருவது மாண்பாம். பன்னிரு நஞ்செழுத்துக்களும் பொருந்தாத கதிக்குரியனவாம். அவற்றை நீக்கின், பிற நஞ்சில்லாத எழுத்துகளாம். முன்னோர் கருத்தை உள்ளிட்டு இவற்றைச் சொன்னோம். பதினெட்டான அமுதெழுத்து நன்றாம். அமுதவெழுத்து என உயிருக்குக் கூறி யனவே உயிர்மெய்க்கும் ஆகும். அவ்வாறே, உயிர் மெய்க்குக் கூறியவையே மெய்யெழுத்துக்கும் ஆகும். சீரில்லாதவை வருவது

சிறப்பின்மையாம். வழுவமைதியாக ங, ஞ, ண, ந, ட எனும் அமுது, ஆண், பெண் பாலில் (குறில், நெடில)பொருந்தும். நஞ்சு எனக் கூறப்பட்ட ஒற்றெழுத்துக்கள எட்டும், அமுதவுயிர் ஏறி வரின் அமுதாகும். அவ்வாறே நஞ்சென நீககப்பட்ட உயிர்கள் நான்கு, அமுதமெய்யுடன் வந்தால் அவையும் அமுதமாகும்.

இவ்வுண்டிப் பொருத்தத்தின்கண் விதிக்க வேண்டியன, விலக்க வேண்டியன ஆகிய இரண்டும் வருவதால் அமுதும் நஞ்சு மாகக் கூறப்படுகின்றன எனலாம். உணவில் உள்ள நஞ்சும் அமுதும்போல் எழுத்திலும் அமைவதாகக் கருதப்பட்ட ஒரு காலநிலை இங்கு அமைகின்றது. வசைகவி இயற்றலும், அறம் பாடலும் எழுத்துகட்கு இந்நன்மை—தீமை விளைக்கும் ஆற்றலை ஏற்றியிருக்கலாம். நஞ்செழுத்து, பெயரருகே வருமாயின் சாவும், அச்சமும் ஏற்படும் எனப் பன்னிரு பாட்டியல் நவில் கின்றது. எனவே முதல்மொழியில் மட்டுமன்றி, தசாங்கச் சொல்லின் அருகிலும் நஞ்சுவரல் வெண்பாப் பாட்டியல் முதல் பல நூல்களிலும் விலக்கப்படுகின்றது.

அமுத எழுத்துகளாக, உயிரில் அ இ உ எ எனும் நான்கைக் கருதுவது பொதுமை. சுவாமிநாதம் இந்நான்குடன் அவற்றின் நெடிலையும் ஏற்புடைய தாக்குகின்றது.மெய்யில், க ச த ந ப ம வ என்பனவே அனைத்து நூலாலும் அமுதாகக் கருதப்படுகின்றன. பிரபந்தத்திரட்டின் எண்ணம் பேரளவு மாறுபடல் எண்ணத் தக்கது.

நஞ்சு பற்றிய எண்ணத்தில் நூல்களிடையே சிலகருத்து, முறைவைப்பு வேறுபாடுகள் உண்டு. பன்னிரு பாட்டியல், ஆ, ஓ, ய், ர், ல்; இவை இணைந்த உயிர்மெய்யான ரா ரோ லா லோ யா யோ; அளபெடை; ஆய்தம், இகர உகர ஐகார ஔகார மகரம் எனும் ஐவகைக் குறுக்கம் என்பனவற்றை நஞ்சென் கின்றது. நவநீதப் பாட்டியல் நெடில் ஏழையும் நஞ்சாயடக்கு கின்றது. இலக்கண விளக்கம் ளா, ளோ என்பனவற்றையும் நஞ்சென்கின்றது. சுவாமிநாதம் ஞ, ண எனும் எழுத்துக்களும் நஞ்சு என நவில்கின்றது. எனவே நஞ்சு பற்றிய கருத்திலும், முன்னூல்கள் தம்முள் மாறுபட்டமை போன்று பிரபந்தத் திரட் டும் மாறுபடுவது புலப்படுகின்றது.

நஞ்சும் அமுதும் இவை என மொழிந்தபின், பிரபந்தத் திரட்டுச் சில அமைதிகளைக் கூறுவது போலச் சில பாட்டியலும்

அமைக்கின்றன. ஒற்று நஞ்சாயினும் அதன்மேல் ஏறிய உயிர் அமுதாயின் மறுக்க வேண்டாம் எனவும், மங்கலச் சொல்லில் வந்தால் நஞ்சும் அமுதமாம் எனவும், அமுதமான குறில் உயிர் நான்குடனும் எந்த ஒற்றுவரினும் அமுதே எனவும், மெய்யெழுத்து அமுதாயின் அதன் உயிர்மெய்யும் அமுதமே எனவும் இந்திரகாளியம் கூறுகின்றது.

அமுதெழுத்தைப் பெய்வதால் 'உலகோர் புகழ் நன்மை எய்தும்' என நவநீதப் பாட்டியல் பயன் கூறுகின்றது. (19-25)

## வருணம்

### வேறு

135 குற்றுயிரி னாலுமவை நெட்டுயிரி னாலுமறை
கூறுமுயிர் மெய்யின் முறையே
யுற்றவொரு நாலுமிறை நாலும்வணி கன்பம
வொழிந்தகுலம் விட்ட கதியிற்
பற்றுமிடை யாறும்வலி றவ்வுமெலி னவ்வுமுயிர்
பற்றிநிலை கொண்ட திணையே
மற்றவையொவ் வோவுமௌவு மீறுநடை கூடியுயிர்
வைத்ததி ணையிற்பு குவவே

### வேறு

136 நற்சாதி நான்கினும்
பற்றாத விழிதிணை
பற்றாதின் மையா
னற்சாதி குலவிலே

### வேறு

137 இழிதிணை நான்குயிர் மெய்யி லேறிலே
வழுவல விழிதிணை யாகி மாண்பதாம்
வழுவுறு மொற்றின்மே லுயிர்கள் வாய்க்கிலே
யிழிதிணை நற்றிணை யென்ன வாகுமே

### வேறு

138 தேவ வருண நிகழ்த்துங்காற்
சிவன்மா லேசே யிந்திரன்பானு
வோவி ன்முறை யேயிரண்டா
வொற்றின் மாண்பார் திணைமட்டாந்

தாவு மதிகூற் றொடுவருணன்
றனதன் முறையே பின்னவைக்காம்
பாவு மதிக்கை மறலிக்கொப்
பகரோ வருணன் றனற்கௌவே

139 பின்னா ரெழுத்துப் பனிரண்டும்
பிரித்த திணையா மதனாலே
முன்னாற் சொற்கட் கமையாதா
லொற்றோ ரெட்டு முயிரேறின்
மன்னா நமனா ரொழிமூவர்
மாண்பா லுடம்பு மாண்பாகு
மன்ன படியே நான்குயிரு
மொற்றி லேறி யமையினன்றே

வேறு

140 அகரக் குற்றுயி ராகா ரநெடி
லிகரக் குற்றுயி ரீகா ரநெடி
லுகரக் குற்றுயி ரூகா ரநெடி
லெகரக் குற்றுயி ரேகாரம் விதியே

வேறு

141 ஏறிய லவநம னெழுத்துமுத லெல்லாங்
கூறிய முனோரருக் குகூறினு மியைந்தாந்
தேறுமவை முன்னுறு சிறப்புடை யெழுத்தே
மாறுபுகல் கின்றவழு வாலமைதி யாமே

வருணப்பொருத்தம் சுட்டப்படுகின்றது.

குறில் எழுத்துகளில் நான்கும், நெடில் உயிர்களில் நான்கும் அந்தணர் சாதி. உயிர் மெய்யெழுத்துகளில் முறையாக வந்த நான்கும் (க, ங, ச, ஞ) அரச சாதி; தொடர்ந்த நாலும் (ட, ண, த, ந) வணிக வருணம். ப, ம என்ற இரண்டும் நான்காவது குலம். கதிப் பகுப்பில் விடப்பட்ட எழுத்துகளில், இடையினங் கள் ஆறும் (ய, ர, ல, வ, ழ ள), வல்லெழுத்தில் 'ற' என்பதும், மெல்லினத்தில் 'ன' கரமும், உயிரெழுத்துகளைச் சார்ந்து நிற்கும் திணையைச் சேரும். மற்றவையான ஐ, ஒ, ஓ, ஔ என்பன, ஈற்றில் ஒலிககின்ற உயிரெழுத்தான இ, உ எனும் பகுப்பில் சேர்ந்து அததிணையில் அமையும்.

நற்சாதியாக கூறப்பட்ட நான்கிலும் பொருந்தி வராத இழி திணை எழுத்துகள்,நற்சாதியைப் பாடுமிடத்து ஏற்புடையன வல்ல. இழி திணையாக அமையும் நான்கு உயிரெழுத்தும், மெய்யெழுத்துகளோடு இணைந்து வரும்போது குறையின்றாம். இழிதிணையாயினும் அவை சிறப்புடையனவாம். அவ்வாறே குற்றமுடைய ஒற்றுகள் மேல உயிர்கள் பொருந்தும் போது, இழி குலம் நற்குலம் எனத் தகும்.

தேவர்கட்கேற்ப எழுத்துகளை அமைத்தால், சிவன் திருமால், முருகன், இத்திரன், சூரியன் ஆகியோருக்கு முறையே இரண்டிரண்டு மெய்யெழுத்துசளாம் (கங, சஞ, டண, தந, பம). இவை மாண்புடைய திணைக்குரியவாம். சந்திரன், கூற்றுவன், வருணன், குபேரன் ஆகியோர் முறையே பின்வருகின்ற எழுத் திற்காம் (யர, லவ, ழள, றன). சந்திரனுக்கு ஐ, கூற்றுக்கு ஒ, வருணனுக்கு ஓ, குபேரனுக்கு ஔ. இவற்றுள் ஈற்றில் கூறிய பன்னிரு எழுத்துகளும் இழிதிணை ஆனமையால், முன் வருணத் தாரைப் பாடும் செய்யுளில் அமையா. இவற்றின் எட்டு ஒற்றெழுத்தும் தம்மீது உயிரேற்று வரினும் நிலைப்பதில்லை. கூற்றுவன் ஒழியப் பிற மூவரும் மாண்புடையவரானமையின், அவ்வொற்றுகளும் (யர, ழள, றன) உயர்வுடையனவாம். அவ் வாறே ஐ, ஒ, ஓ,ஔ எனும் நான்கு உயிரும் ஒற்றுடன் இணைந்து வரும்போது ஏற்புடையனவாம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ எனும் உயிர்க்குறிலும் நெடிலும் கொள்வது முறையாம். இவ்வுயிரெழுத்துகள் பொருநதி வந்த லவ எனும கூற்றுவன் எழுத்துமுதல் எல்லாமே, உயர்ந்த வர்கட்குக் கூறினாலும் இயைபுடையதாம். அவற்றின் முன் பொருந்துகின்ற சிறந்த எழுத்துக் காரணமாக, மாற்றும் படிக் கூறப்பட்ட அவ்வழுக்கள் அமைத்துக் கொள்ளப்படும்.

வருணப் பொருத்தத்திற்குப் பிரபந்தத் திரட்டு அமைக்கும் இத்தகு விரிந்த விளக்கம முன்வந்த பாட்டியல்களில் அமைய வில்லை. நால்வகை வருணத்தாரைப் போற்றி இலக்கியம் இயற்றும்போது, அவ்வவர்க்குரிய வருண எழுத்துக்களை நூலின் முதன்மொழியில் கொண்டு பாடுவது சிறப்பு எனும் கருத்து இந்திரகாளியத்தில் அமைகின்றது. இன்னின்ன எழுத்து இன்ன சாதிக்குரியது எனவும் இவ்விவ் இறைவர் படைத்த எழுத்துக்கள் இன்ன வருணத்தார்க்கு உரியது எனவும், கூறும் இரு முறைகள் பாட்டியலில் உண்டு பன்னிருபாட்டியல் முதல் சுவாமிநாதம்

வரை அனைத்து நூல்களும் வருணத்திற்கு எழுத்துப் பகுப்பதில் கருத்தொருமை கொள்கின்றன. பன்னிரு உயிரும் க முதல் ஆறும் அந்தணர், த முதல் ர வரை மன்னர், லவ றன வணிகர், ழள சூத்திரர் எனும் இவற்றின் கருத்து பிரபந்தத் திரட்டில் பேரளவு வேறுபட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இறைவரையும் எழுத்து களையும் இணைத்து நோக்கும்போது, வருணனுக்கும் (றன) கூற்றுவனுக்கும் (ழள) உரியன. நவநீதப் பாட்டியலில் மட்டும் எதிராக மாறுகின்றன.

எழுத்துக்களை வருணத்தில் உட்படுத்தும்போது, சிலவற்றை இழிதிணை என மாற்றும் பிரபந்தத் திரட்டின் கருத்து பிற நூல்களில் முற்றிலும் இல்லை. அவை பன்னீருயிரையும் பதினெண் மெய்யையும் நால்வருணத்தில் அடக்கி நிறைவு செய்து விடுகின்றன. வருணத்திற்கேற்ப எழுத்தை முதலில் கொள்ளும்போது நஞ்செழுத்து வரினும் இழுக்காகாது எனத் தொன்னூல் விளக்கம் கூறுகின்றது. எந்தக் குறிலுக்கு எந்த நெடில் இணை எனும் கருத்தை (140), பிரபந்தத்திரட்டு எடுத்து மொழிவது போன்ற நிலை பிறவறறில் இயையவில்லை.

நற்சாதி எழுத்தும், இழிதிணை எழுத்தும் இயைந்தமைக்கும் உயிர்மெய்களின் வழுவமைதி நிலை, உயர்குல ஆடவனும் இழிகுலப் பெண்ணும் இணையப் பிறக்கும் அனுலோமன், உயர்குலப் பெண்ணும் இழிகுல ஆணும் இணையபபிறக்கும் பிரதிலோமன் ஆகியவரின் நிலைக்குச் சார்பு கொண்டு தரப்பட்டதாகலாம். குறில் ஆண் எனவும் நெடில் பெண் எனவும் (124) கூறியன இங்கு மறையோர் சாதி ஆதலும், இடையாறும், ற, ன வுமாகிய இழிதிணை, அவற்றைப் பற்றி நிற்றலால் ஏற்புடையாதலும் இவ்வெண்ணததைத் தருகின்றன. (26-32)

## நாள்

142 சொற்றபடி நாளவை துணிந்துரை செய்வேமியா
முற்றுமுயிர் நான்குமுறை யைந்துமொரு மூன்று
மற்றமறி காரத்திகை பூராட முததிராட
மொற்றின் முறையேமொழி முதற்சில வுரைப்பாம்

### வேறு

143 கவ்வரியி னான்குட னிரண்டொடு மும்மூன்றுங்
காரோண மாதிரை புனர்தம் புணர்பூசஞ்

சவ்வரியி னான்குட னோரைந்து மொருமூன்றுஞ்
சாற்றுறு மிரேபதி அசுபதி பரணி
தவ்வரி யிரண்டுட னொரேழு மொருமூன்றுந்
தக்கவொரு சோதி விசாகஞ் சதையமாமே
நவ்வரியி லாறுமொரு மூன்றுமொரு மூன்று
நாடனுடங் கேட்டை பூரட்டாதி முறையாமே

144 பவ்வரியி னான்கெழுத் திரண்டுடனொ ராறும்
பத்திபெறு முத்திரமே யத்தமொடு சித்திரை
மவ்வரியி லாறுமொரு மூன்றுமொரு மூன்றும்
வந்தமக மாயிலிய நந்தவரு பூரம்
வவ்வரியி னான்குமொரு நான்குமுறை யானே
வாய்ந்திடு முரோகணியு மான்றலையு மாமே
யவ்வரியின்றொழிய யாவுத்திரட் டாதி
யாவதொரு மூலமதில் யூவோடிசை யோவே

வேறு

145 ஞகரமொடு ஞாகார
ஞெகரமொடு ஞேகாரமே
மிகுநாள விட்டமிவை
புகனாளெனக் குறிமின்

வேறு

146 மொழிக்கு மேமுத னூற்றிரண் டவைக்குளே
மூன்று யவ்வரி நீக்கிப்
பழக்கு நாளிரு பானொ டேழுக்குமே
பகர்ந்தன மிறையோ னாள்
வழக்க மாகிய மங்கலச் சீர்முதல்
வந்த நாளறிந் தேகோ
னழைக்கு மப்பெயர் நாண்முன் மூன்றொன்ப
தாயணி வகுத்தறி நீயே

147 திரிபங் கிட்டிடிற் சென்மானு சென்மமுந்
திரிசென்ம மது மாகா
வரித்தா யிரண்டா மொருநான்குட னாறு
மொன்பது மெட்டும்
பரிவ தாம்பிற பொருந்திலக் கணத்தினாட்
பகரினு நன்றேயாம்
புரிவை நாதிக மட்டம் ராசியும்
போக்கினு மழகாமே

வேறு

148 வடபத மிறைவன் பேர்வந்து நாள்பல
வடைவுறி னிலக்கணத் தன்றி யாம்பிற
வடைவுறு மிலக்கண மமைந்து நின்றிடும்
வடபதந் தள்ளிட வலல ரார்கொலே

வேறு

149 நின்று சுழ னாளி
லொன்றுமுறு நாளே
நின்றமொழி யாதி
யொன்றுமறி யீதே

150 கோளிலுயிர் மெய்க்கே
நாளறிவ தல்லாற்
கோளின்மெய் களுக்கே
நாளுமில வாமே

151 மற்றவை யெவைக்கு
முற்றவிவை நாளே
அற்றவைக ளெல்லா
மிற்றிவையா காவே

நாட்பொருத்தம் இங்குக் கூறப்படுகின்றது.

ஏற்கெனவே கூறியபடி, நாட்களைத் துணிநது கூறுவேன். உயிர்கள் அனைததும், முறையே முதல் நான்கும், ஐந்தும், மூன்றும், காாத்திகை (அ-ா), பூராடம் (உ-ஐ), உத்திராடம் (ஓ-ஔ) ஆகியனவாம். ஒற்றெழுத்துகளிலும். மொழிமுதலாகும் சிலவற்றை முறையே கூறுவேன்.

ககர வரிசையில், நான்கும், இரண்டும், மூன்றும், மூன்றும் முறையே ஓணம் (க-கீ), ஆதிரை (கு,கூ), பூசம் (கெ-கை), சகரவரிசையில், நான்கும், ஐந்தும், மூன்றும் முறையே இரேபதி (ச-சீ), அசுபதி (சு-சை) பரணி (சொ-சௌ). தகர வரிசையில் இரண்டு, ஏழு, மூன்று முறையே சோதி (த,தா), விசாகம் (தி-தை), சதையம் (தொ-தௌ). நகர வரிசையில் ஆறும், மூன்றும், மூன்றுமாக முறையே அனுடம் (ந-நூ) கேட்டை (நெ-நை). பூரட்டாதி (நொ-நௌ) அமைகின்றன.

பகர வரிசையில் நான்கெழுத்தும், இரண்டும், ஆறும் முறையே உத்திரம் (ப-பீ)அத்தம்(பு,பூ),சித்திரையாக(பெ-பௌ) அமையும். மகர வரிசையில் ஆறும், மூன்றும், மூன்றும், முறையே, மகம்(ம-மு), ஆயிலியம் (மெ-மை), பூரம் (மொ-மௌ) எனப் பொருந்துகின்றன. வகர வரிசையில் நான்கும், நான்குமாக முறையே உரோகணியாகவும் (வ,வா,வி,வீ), மகசீரமாகவும் (வு,வூ, வே, வை) வரும். யகர வரிசையில், மூன்றெழுத்து நீக்கி யாகாரம் உத்திரட்டாதி. யூ, யோ என்பன மூலம். ஞகர வருக்கத்தில் ஞ, ஞா, ஞெ, ஞே என்பன அவிட்டம். இவையே நாள் பொருத்தம்.

மொழிமுதல் எழுத்துகள் நூற்றிரண்டாம். அவற்றுள் யகர வரிசையின் மூன்று எழுத்துகளை நீக்கி (ய, யு, யௌ), பிறவற்றிற்கு இருபத்தெழு நட்சத்திரங்களைக் கூறினேன். பாடல் தலைவனுககுரிய நாளுக்கு ஏற்ற மங்கலச் சீரின் தொடக்க எழுத்தை அறிய, தலைவனுக்குரிய, நாள் முதலாக, அவ் இருபததெழு நாட்களை மூனறு ஒன்பதாக வகுத்து அமைகக $(27=3\times9)$

இவ்வாறு மூன்றாகப் பகுக்கும்போது,பிறநத நட்சத்திரமும், அதற்கு மூனறாவது வருவதும் ஏற்புடையனவலல. இரண்டு, நானகு, ஆறு, எட்டு, ஒனபது என்பன பொருந்துவதாம். பிறவும், பொருதத இலக்கணத்தில் நாளாகக் கூறப்படினும் நன்றாம். இவற்றில் வைநாசிகமும், அட்டமராசியும் விலக்கின் சிறப்பாம்.

வடமொழிச சொல்லாகத் தலைவனின் பெயர் வந்து அதற்கு நட்சத்திரஙகள் பல பொருந்தின், அது இலக்கணத்தால் அமைக்கப்படுவதன்றாம். பிற இலக்கணம் பொருந்தி நிற்கும் வடசொற்களை நீக்கும் இயல்பினர் இல்லை.

சுழன்றுவருகின்ற நாட்களில், ஏற்புடைய நாள் பொருத்த மாக, முதனமொழியின் கண் இணையும் என அறி. குற்றமற்ற உயிர்மெய் எழுததிற்கே நாள் வகுக்கப்படுமே யல்லாமல் மெய்யெழுத்திற்கு வகுக்கப்படாது. எல்லா எழுத்துகட்கும் இவையே நாட்களாம். இவையொழிய அமையும் எழுத்துக்கள் எல்லாம் இங்கு மொழி முதலாகப் பொருந்தா.

எழுத்துகட்கு நாள்வகுப்பதில், அனைத்துப் பாட்டியல் களும் கருத்தொப்புமை கொள்கின்றன. பன்னிருபாட்டியல்

முதலிய முன் நூல்கள் ஞசர வருக்கத்தில் ஞ, ஞா, ஞொ என்பதையும் யகரவருக்கத்தில் யா, யூ, யோ என்பதையுமே தருகின்றன. தொன்னூல்விளக்கம் முதலே பிற எழுத்திணைவுகள் அவ்வருக்கங்களில் அமைகின்றன. எல்லா நூல்களும் ஞகர வருக்கத்தில் தரும் ஞே, ஞொ என்பதைப் பிரபந்தத்திரட்டு ஞெ, ஞோ எனத் தருவது மாறுபாடாம்.

ஏற்புடைய நாட்கள் 'செல்வம் புகுதரும்' என்பது, பன்னிரு பாட்டியல் கூறும் செய்தி. தலைவனின் நாள்முதல், முதல் மொழியான மங்கலச் சொல்லின் நாள்வரை எண்ணும்போது ஏற்புடையன. அல்லாதன பற்றிய செய்திகளிலும் நூல்கள் கருத்தொப்புமை கொள்கின்றன. (33-42)

## கதி

### வேறு

152 சமையகர மிகர முகரம் மெகரங் கசடதப
தேவகதி யாவீயூ வேயு ஙஞணநமவுமே மனுடகதி
யிவைமுதற் சீர்ககாத னடை மிருககதி
யொவ்வோ யரலழற நரகர்க்
கமைகதி யையெளவு னவளவிவ் விரணடு மாகா
வன்னவை நல்லிருவர் பாலாகி னலஞ்செய்வார்
கமை கொ ளுயிர் நந்நான்கா லிரண்டிரண்டாய் வருஞ்சீர்
காட்டுடலைந்தைந்தாய்ந தொடுமூன்றாங் கதிக்கே

153 முன்னிரண்டு கதியொற்றே யுயிர்வரினு மாகு
மூட்டுயிரு முயிர்மெய்யி னுயிராகி னன்றாம்
பின்னிரண்டு கதிக்கொற்றே விதியுயிரு மனவே
பேசுமொற்றி லுயிரேறி னாலுயிர்மெ யுயிராய்ப்
பன்னிலை சுதியாமிக் கதிமெயுயி ரமுதாம்
பதினெட்டு நன்மையோர் சாரமுதம் வகரஞ்
சொன்னவை யாராய்ந்து முதன்மொழிகட் கேயாதல்
சொல்விசே டங்களையுந் தொகுத்துநீ பாரே

கதிப்பொருத்தம் வகுக்கப்படுகின்றது.

அ இ உ எ க ச ட த ப என்பன தேவகதி. ஆ ஈ ஊ ஏ என்பனவும் ங ஞ ண ந ம என்பனவும் மனிதகதி. இவ் இருகதியெழுத்தும் மகற்சீர்க்கு அகல் சாலம். ஐ ய ர ல ழ ற என்பன

விலங்குக் கதி. ஐ ஔ என்பனவும், ன வ ள என்பனவும் நரகர்க் குரிய கதியாம். இவ் இரு கதியின் எழுத்துகளும் ஏற்புடையன வல்ல. இவையும் நற்கதியெழுத்துகள் மேல்வரின் நலம் செய்யும். நாற்கதிக்கும் உயிரெழுத்துகள் முறையே நான்கு, நான்கு, இரண்டு, இரண்டு என வரும். மெய்யெழுத்து ஐந்து, ஐந்து, ஐந்து, மூன்று என இக்கதிகட்கு வரும்.

முன்னிரு கதிகட்குரிய ஒற்றெழுத்துகள், தம்மீது உயிர் ஏறி வரினும் ஏற்புடையனவாம். அங்கமைந்த உயிரெழுத்துகளும், தனிஉயிராகவன்றி உயிர்மெய்யின் பகுதியாக அமைதல் நன்று. பின்னிரு கதிக்குரிய ஒற்றும், உயிரும் அவ்விதி ஏற்பனவே, அவற்றின் ஒற்றின்மீது முதலிரு கதியின் உயிரும், அவ்வாறே உயிர் மீது, முதலிரு கதியின் மெய்யும் பொருந்தின் நற்கதியாகும். எனவே இக்கதிகளில் உயிரும் மெய்யுமாகி அமுதாக அமைவன பதினெட்டு. நன்மை சார்ந்த அமுதமாகக் கருதப்பட்ட வகரம் (129) முதல்மொழியில் பொருந்தும் ஏற்புடைமையை ஆராய்ந்து காண்க. பிற எழுத்துகளையும் இவ்வாறே தொகுத்துப் பார்க்க.

கதிகட்குரிய எழுத்துகளைப் பகுக்கும் எண்ணததில் பாட்டியல்கள அனைத்தும் கருத்தியைபு காட்டுகின்றன. பன்னிரு பாட்டியல மட்டுமே, உயிா 12, மெய் 18 என்பனவற்றை வகுப்பதுடன், ஆய்த எழுத்தையும் பகுப்பில் கருதி, நரகர் கதியில் அடக்குகின்றது.

விலககப்பட்ட கதியின் எழுத்துகள மங்கலச் சொல்லின் முதலாக அமையின விலக்கப்படா எனும் எண்ணம் குலாம் காதிறு நாவலரின் பொருதத விளககத்தில் அமைகின்றது (78)

(43-44)

கணம்

154 பொன்னபதச கணமவை பரணி யத்தம்
புனர்பூசம் பூசம் வாழ்புகழ் சூனிய நோயே
யன்னவை யின்பலன் காய்ச்சீர்க் கிவையோர்
நான்கு மாகன் முன்னதிரண்டு கணந் துறக்கஞ்
மன்னுசர மயகணமே சோதி யாரன [சோமன்
மவி கேட்டை சதையமே கேடு சாவு
துன்னுதிரு மகிழ்ச்சி பலன் கனிச்சீர் நான்கிற்
சொல்வன பின்னிரண்டு கணநிலநீ ராமே

வேறு

155 வானே பருதி
கானே ரனலே
யானே யொழ்சீர
மேனா டியவே

வேறு

156 மூன்று றததிரித திறைவ னாளை முனமொழிந்த
வான்றகு மெழுத்தின் முதனாளை முதல்வைததெண்
ணூனறுமுன் மொழிந்தவெ ணுகநதிடு மிந்நாட்காந்
தோனறுமிக கணச்குரிமை சொற்றன ருரைப்பாம்

157 முற்றுநே ராதிநிரை சொற்கமதி யாகு
முற்றுநிரை யாதிநேர் மண்புனல தாகும்
பறறுநிரை நோநடுவின பானுவன லாகா
பறறுநிரை நேர்கடை வளிக்குரிசில் வானே

வேறு

158 சரசைச் சீரி லிரண்டினைக் காயின்
சீரினி லாகிய சீரினி லவையே
யீரசைச் சீர்ப்பி னிரண்டு கனிச்சொற்
சீரினி லாகிய சீரினி லவையே

வேறு

159 ஈரசையின் மூவசையி னாருமுதற் சீரே
யார்வனவு நன்மையல தின்மையல வப்பா
சார்பல பொருத்தவகைக் கின்னமுற லுண்டே
லேரிலமை யவ்வவை யியற்பெற வமைத்தே

கணப்பொருத்தம் கூறுகின்றன.

ந ப த ச எனும் கணங்கள் முறையே பரணி, அத்தம், புனர் பூசம், பூசம் எனும் நட்சத்திரங்கட்கு உரியனவாம். இவை முறையே நல்வாழ்க்கை, புகழ், சூனியம, நோய் எனும நல்ல, தீய பலன்களை அளிக்கும். இவை நான்கும் காய்ச்சீராம். இவற் றில் முதல் இரண்டுமே ஏற்புடையதாம். இவை முறையே துறக்கம் (சுவர்க்கம்),சோமன் (சந்திரன்) எனும் கணங்களாம். ச ர ம ய எனும் கணங்கள் முறையே சோதி, கார்த்திகை, கேட்டை, சதையம் எனும் நாட்களுக்குரியவாம். இவை முறையே கேடு,

இறப்பு, செல்வம், மகிழ்வு என்பனவற்றைத் தம் தீப்பலனாகவும் நற்பலனாகவும் கொள்ளும். இந் நான்கு கனிச்சீர்களில், பாடலின் முதலில் கூறத்தகுவன பின் கூறிய இரண்டாம். இவை நிலம், நீர் எனும் கணம் சார்ந்தவனாம்.

வானம் (நிரை நிரை நேர்), பருதி (நேர் நிரை நேர்), காற்று (நேர் நேர் நிரை), தீ (நிரை நேர் நிரை) எனும் கணச்சீர்கள் விலக்கப்பட்டு, முன்பு ஏற்புடையனவாக மொழியப்பட்டவை நாடப்படவேண்டும்.

மூன்றாகப் பகுத்து, தலைவனின் நட்சத்திரத்தை முன் வைத்து அதற்குரிய எழுத்தை நோக்க ஏற்புடையதாகக் கொள் ளப்பட்ட எண்ணின் நாள் இங்குக் கணப்பொருத்த நாளிலும் இயைபு கொள்ளும். இக் கணங்களின் அமைப்பை முன்னோர் கூறியதுபோல் கூறுவேன்.

முழுவதும் நேராக அமைவது சொற்கம (சுவர்ககம); முதலில் நிரை இதில் அமைவது மதி. முழுவதும் நிரை வருவது மண்; அதன் முதல் நேராவது புனல் (நீர்). நடுச்சீர் நிரையாகப பற்றுவது பானு (பருதி); அதுவே நேராகப் பெறின் அனல் (தீ). ஈற்றில் மட்டும் நிரை வந்தது வளி (காற்று); அங்கு நேர் அமைந் தது வான்.

ஈரசைச் சீரில், தேமா புளிமா எனும் இரண்டினை ஏற்பு டைய கணமான காய்சசீரில் வைதது ஏறபுடையதாககுக. அவவாறே கருவிளப கூவிளம எனும ஈரசைசசீரின பின் கனிச் சொல தொடரும்படியமைத்து அககணத்தில் வைகக.

ஈரசையாலும், மூவசையாலும் முதற்சீர் நிற்கும். ஆயின் அவற்றால் நன்மையின்றித் தீமையுறும் என்றாலும், இணை கின்ற பிற பொருத்தங்கட்குக் குறை வரும் எனினும், அவை நீககிச் சிறப்புற ஏற்புடையதாக அமைக்கப்படும்.

கணப்பொருத்தம் என்பதில் சீர்ப்பொருத்தமே பார்க்கப்படு கின்றது. பிரபநத இலக்கியத்தின முதற்சீராகப் பொருந்தும் நிலை ஓரசை, ஈரசை, நாலசைச் சீர்களுக்கு அளிக்கப்படாது மூவசைச் சீர்கட்கே அளிக்கப்படுகின்றது. அவற்றுள்ளும், எட்டு மூவசைச சீர்க்கன்றி நான்கிற்கு மட்டுமே பொருத்தம் ஏற்புடை யதாகின்றது. புறநடையாக, நிரையீற்றியற்சீர் மங்கலம் சார்ந்து வநதால ஏற்புடையதாகும் எனும் கருத்து பன்னிரு

பாட்டியலில் அமைகின்றது. தமிழ் இலக்கியங்கள் பலவும் நரசைச் சீரில தொடக்கம் கொள்ளுவதால் போலும் இக்கருத்து விரிவடைந்து, அனைத்து நரசைச் சீரையும் ஏற்கும் நிலையைச் சுவாமிநாதத்தில் அமைக்கின்றது.

உண்டியில் அமுதும் நஞ்சும் கருதப்பட்டது போன்று, கணத்திலும் நன்மையும தீமையும் (ப.பா.66) நலமும் பகையும் கருதப்படுவது சுட்டத் தக்கது (இ. கா. 21). விலக்கப்பட்ட கணங்களும், முதல் எழுத்தாக அமுதெழுத்தைப் பெறுமபோதும், தெய்வத்துக்கு உரிய எழுத்தைக் கொள்ளும்போதும், நாட்பொருத்தம் காட்டுமபோதும் கொளளப்படும் என இந்திர காளியம் வழுவமைதி உரைககினறது. அவ்வாறே நல்லன எனக் குறித்த கணமும் நாட்பொருத்தம் கொள்ளாவிடின் தீமையே தரும் என்பது இதன் கருத்து.

சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியன இயற்சீருக்கும் கணம் வகுத்து, அயன் (பிரமன்), திரு, கோ (அரசன்), கருடன் எனப் பெயர் தருகின்றன. இலக்கண விளக்க (800) உரை, 'நேரசை யிறுதியாகிய தேமா, புளிமா என்னும் இயறசீரிரண்டும் வெண்பாவுரிச்சீரின் முன் நின்ற தேமாங்காய புளிமாங்காய் போல முறையே சுவர்கக கணமும் சந்திரகணமுமா மெனவும், நிரையசையிறுதியாகிய கருவிளங் கூவிள மென்னும் இயற்சீரிரண்டும் வஞ்சியுரிச்சீர்ப் பின்னின்ற கருவிளங்கனி கூவிளங்கனி போல நிலக்கணமும் நீர்கக்கணமுமா மெனவுஞ் சிறப்புப்பெற்று நடக்கும்' எனத்தரும் விளக்கம் இயற்சீரின் பொருத்த நிலையைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றது. இக்கருத்தைப் பிரபந்தத் திரட்டும் (158) பின்பற்றியுள்ளமை தெளிவு. (45-50)

### வேறு

160 ஏற்ற தானத்தின் மாற்றுறா தெண்ணி
லொவ்வோ மரணம தான
தாற்றுன பாலமு தருவனங் கதிக்குமே
தாழ்த லாயின வேனு
மாற்றல் கூறிய வழுவமை தியிலுறு
மவ்வ வைதமக் கொப்ப
மாற்று நீவழுத் தன்னையு முன்னவர்
மலர்ச்ச ரண்டலைப் பெற்றே

பொருத்தங்கட்குச் சில புறநடைகள் உரைக்கப்படுகின்றன, வழு எனக் கூறப்பட்ட சிலவற்றை அமைத்துக்கொள்ள வாய்ப்பாக வழுவமைதி தரப்படுகின்றது. ஒகர ஓகாரங்கட்கு இங்கு அமைதி தரப்படுகின்றது.

தானப் பொருத்தம் பார்க்கும்போது, மரண இடத்தில் வரும் ஒகர ஓகாரங்கள், பால் பொருத்தம், அமுதமாகிய உண்டிப் பொருத்தம் இவற்றிலும் வருணப் பொருத்தம், கதிப் பொருத்தம் ஆகியவற்றிலும் இழிந்ததாக அமையினும் மாற்றப் படாது, வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறே அவ்வவ் எழுத்திற்கு ஏற்ப, வழுவையும் மாற்றி அமைத்துக் கொள்க.

இவ்வாறு பொருத்தங்கள் பத்தும் கூறியபின் ஒழிபுச் செய்திகள் உரைத்தல் பிற பாட்டியல் இலக்கணங்களில் அமையாமை குறிப்பிடத்தக்கது. (51)

161 பொருத்த மான பத்தினுக்கும்
பொதுவா முயிர்கள் பனிரண்டிற்
பொருத்த மாகாத் தனியாவி
பொருந்து முடல்மே லுறிலவேறாய்ப்
பொருத்த மான பத்தினுக்கும்
பொதுவா மெய்கள் பதினெட்டிற்
பொருத்த மாகா வொற்றுயிர்கள்
பொருந்தும் பொருந்து மாத்திரையால்

பத்துப் பொருத்தங்கட்குமுரிய உயிர், மெய் நிலை சுட்டப்படுகின்றது.

பொருத்தங்கள் பத்திற்கும் பொதுவாக அமையும் பன்னிரு உயிரெழுத்துகளில், பொருத்தமாக இணையாத தனித்த உயிர் எழுத்து பொருத்தத் தன்மையுடைய மெய்யின் மீதேறி வரின் அவையும் பொருந்துவனவாம். அவ்வாறே பத்துப் பொருத்தங்கட்கும் பொதுவான பதினெட்டு மெய்யெழுத்துகளில், பொருத்தமல்லாத ஒற்றுகள், பொருத்த இயல்புடைய உயிருடன் இணைந்து வரும்போது தம் மாத்திரை அளவு காரணமாகப் பொருந்தும். (52)

வேறு

162 தானத்தி லையெளவை யிய்யுநிறுத்
தினதா லவையும் மமுதே
தானத்தி லொத்தவை பாலமு
தேவனந் தாழ்கதிக்குந் நலவே
தானத்தி லௌவின் பிறப்பொத்த
தாலுமவந் தானமுறு மமுதே
தானப் பொருத்தந் திறமென்
றிவைநடுத் தான மென்றார் பெயரே

தானப் பொருத்தத்திற்குப் புறநடையாக நடுத்தானம் கூறப்படுகின்றது.

தானப் பொருத்தம் அமைக்கும்போது, ஐ, ஔ எனும் எழுத்துகளை இ, உ எனும் எழுத்துக்குரிய இடத்தில் நிறுத்தி அமைத்துக்கொண்டதால், ஐ, ஔ என்ற உயிர்எழுத்துகளும் அமுத எழுத்தே, தானப்பொருத்தம் நோக்கும்போது ஏற்புடையனவாக அமையும் எழுத்துகள் பால்பொருத்தம் உண்டிப் பொருத்தங்களில் வேறுபட்டும் வருணப் பொருத்தத்தில் இழிகுலத்திற்குரியதாகவும் அமைந்தபோதும் ஏற்புடையனவாம். தானப் பொருத்தத்தில் ஔ எனும் எழுத்து, பிறந்த நாளை நோக்க நாட்பொருத்தம் கொள்ளும் எனின், குற்றமுடைய தானமாக அமையினும் மாண்புடையதாம். தானப் பொருத்தத்தில் ஏற்புடையன எனக் கூறப்பட்ட இவை, 'நடுத்தானம்' என்ற பெயரால் சுட்டப்படும்.
(53)

வேறு

163 குவ்வில்விட மென்றவொரு நாலுயிரி லேயைக்
கொண்டௌவுக் கக்கொண்டமுத மாமவை யடுத்த
வொவ்வுநெடி லோவுமொரு சார்முத மாமா
லுற்றகதி பாலவனமு மிம்முறைய வாமே
தவ்வுமெயு மிப்படித் தழைக்குமிட முண்டேற்
சாற்றிட மறிந்தமுதன் மெய்களமு தாதல்
செவ்வையுறு பாலமுத மொன்றினதி னாற்பத்
திற்குமெயு ரைக்கிலுயிர் மெய்யுமவை யாமே

உண்டிப் பொருத்தத்தின் சில புறநடைகள் இங்கு அமைகின்றன.

குற்றமற்ற விடம் எனப்பட்ட ஐ ஒ ஓ ஔ எனும் நான்கு உயிரெழுத்துகளில், ஐகார ஔகாரங்கட்கு அகரம் முதலாகக் கொண்டால் அவை அமுதமாம். அகரத்தை அடுத்த ஒகர ஓகாரங்கள் ஒவ்வொரிடத்து அமுதாகக் கொள்ளத் தக்கனவாம். சதி, பால், வருணப் பொருத்தங்களின் எழுத்துகளிலும் இவ்வாறு அமைத்துக கொள்ளலாம். மெய்யெழுத்துகளும் இவ்வாறு பயிலும் இடம் உண்டாயின், அவற்றைக் கூறுக. இடம் பொருந்தி முதன் மொழியின் எழுத்தாக மெய்கள் வந்து அமுது ஆதல் உண்டு, செம்மை பொருந்திய பாலும் உண்டியும் பொருந்தியதால். இதனால், பத்துப் பொருத்தங்கட்கும் மெய்யெழுத்துக் கூறப்படும் இடத்தில், அவற்றின் உயிர்மெய்யும் கருதப்படல் வேண்டும். (54)

ஐந்தாவது

# உவமாரூட வியப்பு சார்வியல்

உவமா + ஆரூட(ம்) என இதைப் பகுக்கலாம். உவமை என்பது வடமொழியின் உபமா என்பதின் சார்புடன் இங்கு உவமா என அமைகின்றது. ஆரூட என்பது அம் விகுதியுடன் ஆரூடம் என அமைகின்றது. ஆரூட* எனும் சொல், வடமொழியில் மேலேறியது எனப் பொருள்படுகின்றது. பெரும்பாலும் இச்சொல் கூட்டுத் தொடரில், 'இந்தியாரூடம்' என்பதுபோல் கையாளப்படுகின்றது; அறிவால் மேற்கொள்ளப்படல் இங்குப் பொருளாகின்றது. ஆரூட என்பது போலவே ஆரூடி என்பதும் பொருள்படுகின்றது.

ரூட, ரூடி† என்ற வடமொழிச் சொற்களும் பொருள் ஒப்புமை பற்றி இங்கு நினைக்கத் தக்கன. மரபும், பழமையும்

---

* Ārūḍha : mounted, ascended . risen, raised up, Often used in compounds - Intrıyārūḍha : brought under the cognizance of the senses, perceived.

Ārūḍi . ascent, mountıng

A Sanskrit English Dictıonary, p. 151, Oxford-1974.

† **Rūḍhā** : mounted, risen, ascended, lifted up, imposed on, laden...widely known, current, famous, traditional conventional, popular (said of words which have a meaning not directly connected with the etymology).

**Rūḍhi :** Rise, ascent, increase, growth, development, tradition, current usage (especially of speech). In rhetoric, the more amplified or popular or conventional meaning of words, the employment of a word in such a meaning Ibid, p. 885.

உடையதும், பயிற்சியமைந்ததுமான சொல்வழக்குகளும் ரூட என்பதால் குறிக்கப்படுவது நினைக்கத் தக்கது. அணியிலக்கணத் தொடர்பில் ரூடி என்பது சொல்லின, பெருகியதும், பழக்கமானதும், வழக்குடையதுமான பொருளையும், அத்தகு பொருளில் அச்சொல்லை ஆளுகையையும் குறிக்கின்றது.

இவற்றை அடிப்படையாக வைத்து நோக்க, உவமாரூடம் என்பது இத்தகு பயிற்சியும் வழக்கமுமுடைய உவமை பற்றிய இயலுச்குப் பெயராகிப் பொருந்துகின்றது எனலாம். கேசாதி பாத உறுப்புகட்கு ஏற்ற உவமைகளின் பட்டியல்கள் இவ்வியற் பொருண்மையில் முதலிடம் பெறுகின்றமை இம்முடிவை ஏற்கத் துணைநிற்கின்றது.

பிரபந்தத் திரட்டின் இயல்களில், உவமாரூட வியப்பு சார்வியல் (5), விசேடவணிவியப்பு சார்வோரியல் (6), சாதிமரபு சார்வோரியல் (7), குலநில வியப்பு சார்வோரியல் (8) எனும் பல தலைப்புகளில் 'வியப்பு'ம் 'சார்வு'ம் அமைகின்றன. உறுப்புகட்கேற்ற உவமைச் சார்பு காரணமாகச் 'சார்விய'லும் (5), அவ்வாறே மனிதருக்கும் தெய்வங்கட்கும் உரிய அணி, சாதி, குலம், நிலம்...பற்றிய சார்புகள் கூறப்படுவதால் 'சார்வோ'ரியலும் (6—8) பொருத்தம் கொள்கின்றன எனலாம். 'வியப்பு' என்றதால், அதிசயம், மெய்ம்மை (மெய்ப்பு) என்பன குறிக்கப் படுகின்றன பாராட்டு, மேம்பாடு அளவு என்பனவும் இச்சொற் பொருளாம்' வியப்பணியையும் இங்கே கருதலாம்.

இவற்றை நோக்க, இயல்பை உரைத்தல் எனவோ, மேம்பாட்டை உரைத்தல் எனவோ கொண்டு இவ்வியற்பெயர்களைப் பொருத்திக் கொள்ளலாம். வழக்குப் பயிற்சியுடைய உவமைகளின் சிறபபுச் சார்கின்ற இயல் எனும் பொருண்மையை இவ்வியலுக்குக் கொள்ள முடிகின்றது.

இதன்கண், ஐம்பத்து நான்கு விருத்தப்பாடல்கள் அமைகின்றன. பெண்ணின் உறுப்புகட்கேற்ற உவமைகளும், செயல்களும் பிறவும் மிகுந்த இடம்பெற, ஆடவர் இயல்பு சுருக்கமாக உரைக்கப்படுகின்றது.

---

தமிழ் லெக்சிகன், தொகுதி-6, பக். 3687.

164 கார்கூந்தற் கமுகு கொன்றைக் காயிருள் பூஞ்சோலை
கருமணல் சைவலம் வண்டினங் கவரி நீலமணியே
சாரரம்பை தாழைமலர் கூந்தலுக்காம் வகிரே
தாரைவனம் பகரிலைக் காம்பாங் கொண்டை பந்துஞ்
சேர்மலர்ச் செண்டுங் கமடந்தானுமா முடித்தல்
சீறரவின் படமழைக்கால வீணைநுனி விசிறி
யார்சடை பாம்பே பிடிக்கைச் சங்கிலி வாழைசசிப்
பணிசீபபுத் தைத்தகுழல் புலியுருவமாமே

கூந்தல், வகிர், கொண்டை, முடித்த கூந்தல், சடை, தைத்த குழல் என்பனவற்றிற்குரிய உவமைகள் தொகுக்கப்படுகின்றன.

மேகம், கூந்தற்கமுகு, கொன்றைக்காய், இருள், பூநிறைந்த சோலை, கரியமணல், பாசி, வண்டின் கூட்டம், கவரி, நீலமணி, வாதை, தாழை என்பன மலர்பொருந்திய கூந்தலுக்கு உவமையாம். கூந்தலில் அமையும் வகிருக்குக் கிளிககழுத்தின் கோடும், மலைநெல்லும், இலைக்காம்பும் உவமை. கொண்டைக்கு, பந்தும், மலர்ச்செண்டும், ஆமையும் உவமை. மயிர்முடிக்குப் பாம்பின் படம், மழைககால், வீணையின் முனை, விசிறி என்பன உவமையாம். பின்னிய குழலுக்கு பாம்பு, பிடியின் கை, சங்கிலி, வாழைக்குலையின சீபபு, கதவின் தாள் என்பன உவமையாம். அலங்கரித்த குழல் புலியுருவினதாம.

இரத்தினச் சுருக்கம், உவமான சங்கிரகம், அறுவகை இலக்கணம போனற நூற்களும், நூற்பகுதிகளும் இவ்வாறு உறுப்புக் கேற்ற உவமை கூறுகினறன. பிரபந்ததிரட்டு, கேசாதி பாத மாகக் கூற, உவமான சங்கிரகம் (செநதமிழ், 1914) பாதாதி கேசமாகக் கூறுகின்றது. திருவேங்கட ஐயரின் உவமான சங்கிர கமும், புகழேநதிப் புலவரின் இரத்தினச் சுருக்கமும், அறுவகை யிலக்கண உவமையியல்புப் பகுதியும் கேசாதி பாத முறையைக் கொள்கின்றன. பிறநூல்களினும் உவமை மிகுதிகாட்டும் உவ மான சங்கிரகம் (செந்தமிழ்), கொன்றைக் கனி, கல்லார் மனம், கூந்தற்கமுகு, பொதுமாதின் இதையம், சூல்மேகம், கவரி, கரு மையடர் கங்குல், மன்றல் கமழும் மஞ்சனிப்பூ, சிறைவண்டினம், சோலை, மைம்புனல், அறல், இநதிரநீலம், இருள், சைவலம் எனப் பதினைந்து பொருட்களைப் பட்டியல் செய்வது சிறப்பா கக் குறிப்பிடத்தக்கது. அவிழ்ந்த குழலுக்கு அகத்திக் காய்க் கொத்தை உவமையாக்குகின்றது அறுவகை இலக்கணம். (1)

165 வகிர்குழற் கம்பெற்று வில்லு மறையா மின்காரும்
வாரியுந் தோணியு மிருளு மகன்வில்லு மாகுந்
திகழ்சடை தென்னம்பாளை மாலையுமே பொருந்துந்
திருமலருந் தரளமதுந் திகழ்கூந்த லுடுவான்
றகவு நெய்த்துச் சுருண்டு கடைகுழைந்து வார்ந்தொழுகித்
தழைந்தளிகள் சூழ்ந்து வடிம்பலம்பி நிறங்கருகிப்
புகறகரங் கமழ்ந்துநீண் டகிற்புகைக் குலாயவண்
பூவணிந்து நெளிந்து வரிவரியாகுங் குணமே

கோதிய கூந்தலுக்கு உவமையும், கூந்தலின் அணிபொருளும், இயல்பும் உரைக்கப்படுகின்றன.

வாரிய குழலுக்கு, அம்பினை எழுப்பும் வில்லும், மின்னல் மறையாத கருமேகமும், படகுபோகும் கடலும், வானவில் பொருந்திய இருளும் உவமையாகும். அழகிய சடை தென்னம் பாளையுமாம். மாலையும் பொருந்தும். மலர்களும் முத்தும் பொருந்திய கூந்தல் விண்மீன்கள் பொருந்திய வானமாம். தகவுடன், கொழுத்து, சுருண்டு, சடைகுழன்று, நீண்டொழுகி, செழித்து, வண்டுகள் மொய்க்க, காலின் நுதியைத் தொடும்படி, கருநிறத்ததாய், மயிர்ச்சாந்தின் மணம் கமழ்ந்து, நீண்டு, அகிற் புகை விரவி, மலர்கள் பொருந்தி, நெளிவுகளுடன், கோடுகோடாக அமைவது இயல்பாம்.

இரத்தினச் சுருக்கம், பிரபந்தத்திரட்டைப் போலக் கூந்தலியல்பும் அணிபொருளும் விரித்துக் கூறுகின்றது.

நெய்த்துக் கருகி நெறித்துவிடும் பூமாலை
வைத்துக் கடைகுழன்று வார்ந்தொழுகி—மொய்த்தளிகள்
சூழ்ந்து வடிம்பலம்பித் துஞ்சுடைத்தா யூட்டுபுகை
வாழ்ந்துதக ரங்கமழு மால் (18

மாலைகழு நீர்முல்லை மல்லிகைசெவ் வந்திபிசசி
யேலம் வகுள மிலைத்தொடைதேன்—சாலநறும்
புன்னைபசும் பாளை பொலிந்து பிடித்தடக்கை
பின்னிவிட்ட கூந்தலெனப் பேசு (19)

இங்கு வகிர்குழற்குத் தனியுவமைகள் தரப்படவில்லை. (2)

வேறு

166 ஏறுநுதல் விற்பிறை புலிக்கை நகந்தோணி
தேறுபுருவக்கு மிவை செப்புபின் சிங்காடி
கூறு வளைவாளிவை குறிப்பொடு நெறித்து
மீறியிடங் கோட்டல் சுழித்திட்டல் குழிப்பாமே

நுதல், புருவம் ஆகியவற்றிற்கு உவமையும், புருவச் செயல் இயல்பும் உரைக்கப்படுகின்றன.

அகன்ற நெற்றிக்கு, வில், பிறைமதி, புலியின்கை நகம், தோணி ஆகியன உவமை, தெளிவுடைய புருவத்திற்கும் இவை கூறப்படலாம். சுண்டுவில், கொடுவாள் என்பனவும் புருவத்திற்காம். குறிப்பு உணர்த்துதற்காகப் புருவத்தை நெறித்தலும், மிகுதியாக இடம் வளைத்தலும், சுழித்தலும், குழத்தலும் அமையும்.

சிங்காடியாகிய சுண்டுவில்லை உவமான சங்கிரகமும் புருவத்துக்கு உவமையாக்கிற்று. பிரபந்தத்திரட்டுப் போன்று நுதலுக்கும் புருவத்திற்கும் ஒரே உவமைகளை இணைத்து ஆக்கும் பாங்கு பிறவற்றில் காணப்படவில்லை. நெற்றிக்குப் பிறையும் புருவத்துக்கு வில்லும் கூறல் இத்தகு நூல்களின் பொதுநிலையாம். உவமானசங்கிரகம், நுதலுக்கு அகத்தியரும்பு, வாசிகை, பூஞ்சிலை, படுத்தபிறை, கொக்கிறகு என்பனவற்றையும், புருவத்திற்கு நீலாஞ்சனம் சலசத்தாள், வில், வாளுறை, கடற்கரை என்பனவற்றையும் உவமையாக்குகின்றது.

புருவத்திற்குரிய செயலாகப் பிரபந்தத்திரட்டுக் கூறுவன போன்று பிறநூல்கள் கூறாமை குறிப்பிடத்தக்கது. முகம்பற்றிப் பேசும்போது பிரபந்தத் திரட்டு வெயர்வையைக் கூற, பிற நூல்கள் நுதல்பற்றிப் பேசுமிடத்தே பெரும்பாலும் குறித்து விடுகின்றன. (3)

வேறு

167 விண்ட தாமரை காவிகூற்றே கருவிளையம்புமாம் பிஞ்சின்
கண்டம் வாளயில் கடல்விட மமுதமே கயல்பிணை
சகோரந்தான்
வண்டுவெள் குடங்கை கணா மரசிலை மையிட்ட
கண்ணாமே
கொண்ட பானுவு மதியு மேயிணை விழிக்குறியிரு
நோக்காமே

கண்ணிற்குரிய உவமைகளைக் கூறுகின்றார். மையுண்ட கண்ணுக்கும், கண்ணிணைக்கும் தனியுவமையும் அமைகின்றன.

அலர்ந்த தாமரை, கருங்குவளை, கூற்று, காக்கணம், அம்பு, மாம்பிஞ்சின் துண்டு, வாள், வேல், கடல், நஞ்சு, அமுது, மீன், பெண்மான், சகோரம், வண்டு, விரும்பத்தகும் குடங்கை என்பன கண்ணாம. அரசிலை மையிட்ட கண்ணுக்கு உவமையாம் கதிரவனும் மதியும் இருவிழிக்குரிய உவமையாவதுடன், அவறறின் இருவகை நோக்குக்கும் உவமையாம்.

இரத்தினச் சுருக்கம், முதலுறுப்பாகக் கண்ணையே கொண்டு பல உவமைகளை அமைப்பது குறிப்பிடற்குரியது. உவமான சங்கிரகம் பல பொருட்களை உவமையாக்குகின்றது.

வேல்வா ளமுதங் கருங்குவளை வேலை மாவின் வடுவகிர்மன்
கோல்பங்கயமஞ்சமாகுடங்கைகூற்று விடங்காக்கணம்வண்டு
சால்பி னுறுகஞ் சனங்கயலசேல் சகோரம் வழிபோய்க
குழையடர்ந்து......(21)

திருவேங்கடையரின் உவமான சங்கிரகம் இவற்றில் பெரும்பான்மையைக்கூற அறுவகை இலக்கணம கணை,வேல், உற்பலம, கயல் எனச் சிறுபட்டியல் அமைககினறது. (4)

வேறு

168 குணததினொடு கதங்காட்டிக் கொடுந்தொழிலுஞ்
செய்யுங்
கூர்த்திணைந்து துடிக்குமன்ப ருள்ளமெல்லாங்
குடிக்குங்
கணத்தினையு நெடுங்காலங் காட்டுநின்று சுழலுங்
கதழ்ந்து திருகிககுமிறி நெளிந்தெடுத் தேறிடும்பி
னணைந்து குலுக்குஞ சுருட்டும் பளிச்சென்று திறக்கு
மனுராக வஞ்சமுறுங் கொலைவஞ்சம் போரே
யிணக்கு மதனாகம் விரகந் துஞ்சுங் களவே
யேறுசுகக் கலகமிடுந் தனவெச் சென்றாமே

கண்ணின் இயல்பும் செயலும் உரைக்கப்படுகின்றன.

சீர்மைப் பண்புடன் சினம் காட்டிக் கொடிய செயலும் செய்யும். கூர்மையாகி, இசைந்து துடிக்கும். அன்புற்றவரின் உள்ளத்தைக் குடிக்கும் ஒருகண நேரத்தையும் நீண்டகாலமாகத்

தோன்றச் செய்யும். நிற்கும், சுழலும், விரைந்து, மாறுபட்டு, குமிறி, நெளிந்து, ஏறிட்டு, உயரும். பின்பு அணைந்து, அசைக்கும். சுருங்கும் ஒளியுடன் திறக்கும். காமம் காரணமாகக் கொடுமை காட்டும். கொலை, கபடம, போர் என்பவற்றைப் பொருத்தும். மதனநூல கூறும் காமவிரகம் தங்கும். களவொழுககம் பொருந்தும். இனிய போரைச் செய்யும் தனங்களைப போல (உள்ளங்களிகக) வெம்மைதரும.

இரததினச் சுருக்கம் தரும் கண்ணின் இயல்பு விளக்கம் பெருமபாலும் இதனோடு ஒத்து அமைகின்றது.

குணமுங் கதமுங் கொடுந்தொழிலு மன்பின்
சுணமுங் குடியிருப்பாக் காட்டு-மிணையாய்த்
துடிக்குஞ் சுழலுஞ் சுருட்டு மன்பருளளங்
குடிககுமநு ராகவஞ்சங் கூநது (12)

வஞ்சங் கொலைபோர் மதனாக மம்விரகந்
துஞ்சுங் களவு சுகங்கலக-மஞ்சனமென
செமமைவெளுப் புக்கறுப்புச் செவவரிநீ லம்பெருமை
வெமமைமதர்ப் புக்கடைக்கண் வேல் (13)

இரததினச் சுருக்கமும், பிரபநததிரட்டும, உவமாரூட வியப்பு சார்வியல் பற்றிய எண்ணததில் மிகவும் ஒததுச்செல்லும். இந்நிலை, ஒன்றனை தேடியவு மற்றதில் அமைந்ததோ எனும் ஐயத்தை அளிககின்றது. இருநூல்களின் காலத்தெளிவு இன்மையால் முன்னோடி எது எனச் சுட்டவியலவில்லை. உவமான சங்கிரகமும் கண்ணின் இச்செயல்களை ஓரளவு குறித்து கடைக்கண் பார்வையையும் தனித்து இயமபுவது குறிப்பிடத்தக்கது. (5)

வேறு

169 கறுப்பொடு செம்மை வெளுப்பொடு கருவரி செவ்வரி காட்டிநின்
டுறுககியுருண்டு பெருததஞ்சன நறை யூறிவழிந்தொழுகும்
வெறுப்பொடு வெம்மை மதாபபுறு மேகுழைமேலோடியும் வருமே
குறிததமு நீருடுமுத்தங் கண்மயிர்கொள் வனமலர் நூலே

கண்ணின் பண்பும் செயலும், கண்ணீர், கண்மயிர் ஆகியவற்றின் உவமையும் இதில் அமைகின்றன.

கறுப்பு, சிவப்பு, வெள்ளை, கருவரி, செவ்வரி என்பன கொண்டு, நீண்டு, அச்சுறுத்தி, பெரிதாக, மையுண்டு அமையும். வெறுப்பும், சினமும், வலிமையும் காட்டும். காதளவோடும். கண்ணின் நீர், விண்மீன் எனவும் முத்து எனவும் குறிபெறும். கண்ணின் மயிருக்கு, மலரும், நூலும் கொள்ளப்படும்.

இரத்தினச் சுருக்கம் (13) கண்ணின இப்பண்புகளைச் சுட்ட, பெருமபாலும் எல்லா நூல்களும் கண்ணின காதளவோடிய இயலபைக் கணிக்கின்றன. பிரபந்தத்திரட்டு ஆசிரியர், கண்ணின் மயிருக்குக் கூட உவமை அமைக்கும் நுண்மையும் கண்ணீருக்கு உவமை சுட்டும் பாங்கும் பிறவற்றில் அமையாமை குறிப்பிடத் தக்கது. (6)

வேறு

170 மதிகமலங் குடைகிடுகு கடல்வளை மாயவன்மின
வட்டிலை நீர நிலை யமுத மாடிவட்டின் மயிறக
ணதிரசிறை சகோரம் வலைவானமாம் வதன
மன்பு வெறுப்பே காட்டல் குளிர்தல் கோணலுமே
முதுநாண மடைதல் கெர்பங் கொள்ளல் கவிவாய்
முகிழ்த்தல் மலர்தலுங் குணமாங் குறுவேர்வை
துதியுடுப் பாம்புத்தி மலரரும்பு தண்டுலமே [முத்தந்
சொலன்னங் கரும்புவரி சொல்லுவது நன்றே

முகத்திற்குரிய உவமையும், பண்பும் செயலும், வெயாவைக்குரிய உவமையும் அமைகின்றன.

சந்திரன், தாமரை, வெண்கொற்றக்குடை, கேடகம், கடலின் சங்கு, திருமகள், பொன்தட்டம், அழகிய குளம், அமுதம், கண்ணாடி, பூத்தட்டம், பீலிக்கண், சகோரப்புள், வலை, வான் என்பன முகத்திற்குரிய உவமையாம். அன்பு வெறுப்பு எனும் குணங்களைப் புலப்படுத்தல், குளிர்தல், கோணல், நாணம் புலப்படுத்துதல், செருக்குக் கொள்ளுதல், கவிழ்ந்த நிலையில் மலர்ச்சிகாட்டல் என்பன இயல்பாம். முகத்தில் துளிக்கும் வேர்வைக்கு, முத்தும், விண்மீனும், பாம்பின்படப் பொறியும், மலரின் அருமபும், அரிசியும் உவமையாம். சொல்லுக்கு, அன்னமே!கரும்பு, வண்டின் முரற்சி என்பனவற்றைச் சொல்வது நன்று.

கமலம், திங்கள் என்னும் பொதுவுவமைகளையே பிறநூல்களில் பெரும்பானமை காணமுடிகின்றது. இவற்றுடன் படிமககலம், செண்டு, பூத்தட்டு என்பனவற்றை உவமான சங்கிரகம் தருகின்றது. முகததின் குணமும் செயலும் அங்குக் குறிக்கப்படாமை சுட்டத்தக்கது.

வெயர்வைக்கு உவமான சங்கிரகம் முத்தத்தைச் சுட்டுகின்றது. இரத்தினச் சுருககமும் அதனையே மொழிய, பிரபந்தத் திரட்டு உவமைப் பெருக்குக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

எல்லா நூல்களும், பொதுவாக முகத்திற்கும், அதன் நுதல், புருவம், கண், கபோலம், இதழ், காது போன்ற உறுப்புகட்கும் உவமை தருவதுடன அமைந்து விடுகின்றன. ஆயின் தண்டபாணி சுவாமிகள், அறுவகையிலக்கண உவமையியல்புப் பகுதியில நாடி (தாடை)க்கும் உவமைதரல் குறிப்பிடததக்கது.

சிறுமாங் கனியுடன் ஆடிக் காமபும்
நஙகையர் நாடிக் கிணைசொல லலமே (28) (7)

வேறு

171 காதிறகு வள்ளை கததிரிகை யூசலுமாங்
காட்டுந் தோரணமாஞ் சக்கரமு மாந்தக்கை
பேர்த மருக மாகுங் கபோலங் கண்ணாடி
பொனனிலை நீர்நிலை மயிலின்கட் சிறகுசானை
யோதுகுமிழ சாதியெட்பூ முருக்ககத்தி முகைப்பூ
வொண் மூக்காங் கிளிமூக்கு மொக்குநறை
யிதழ்க்கே
யாதல்கிடை துப்பிலவு கோபமுருக கோடுசெவ்
வாம்பல் கொவ்வை வீழிவெல்லத் திரட்சி
கிளிமூக்கே

காது, கன்னம, மூக்கு, இதழ் என்பனவற்றிற்கேற்ற உவமைப் பொருட்களின் பட்டியல் இது.

காதிற்கு உவமை, வள்ளை, கத்திரிகை, ஊசல், தோரணம், சக்கரம் என்பனவாம். தக்கை, பெரிய உடுக்கை இவையும் காதாம். கனனம், கண்ணாடி, பொன்னிலை, நீர்நிலை, மயிற் கண், சிறகு, சாணை என்பவற்றை உவமையாகக் கொள்ளும். குமிழ், சாதிமலர், எட்பூ, முருக்கு, அகத்தி இவற்றின் மொட்டும்

மலரும் முகத்திற்கு உவமையாம். கிளிமூக்கு தேனூறும் இதழுக் குவமை. கிடை, பவளம், இலவமலர், இந்திர கோபம், முருக்கு, செவ்வாம்பல், கொவ்வைக்கனி, வீழிக்கனி, இளியவெல்லத் திரட்சி ஆகியன கிளிமூக்குப் போன்ற இதழுக்கு உவமையாம்.

காதிற்கு உவமையாக வள்ளைக்கொடி, கத்திரிக்கோல், ஊசற்கயிறு ஆகியவற்றைக் கூறுதல் நூல்களின் பொதுநிலை. உவமான சங்கிரகம் இன்னும் சிறிது விரிவாக, 'நகுபூ வள்ளை பொன்னூச லவில்கத் திரிகை சுராத்தலைமான், புகுமவாய் கதவிற் பூட்டுதொடர் புகழுங் காதுக குவமையதாம்' (23) என்கின்றது.

கவுளுக்குக் கண்ணாடியும், சாணையும் பொது உவமைகளாம். பரிக்கலனை என்பதையும் உவமான சங்கிரகம் குறிப்பிடும் குமிழ், சண்பகம், எட்பூ என்பன நாசிக்குரிய பொதுமையான ஒப்புப்பொருட்களாக விருக்க உவமான சங்கிரகம்.

> ...எட்பூவுங் குமிழரும்பு
> முந்தக் கமழ்செண் பகவரும்பு முருகா ரிலவம் பூங்காம்பும்
> பந்தக் கவிஞ ரெல்லோரும்பகர்வார்நாசிக் கிணையெனவே
> (20)

என உவமைப் பெருக்கம கொள்கின்றது. இப்பட்டியல் இன்னும் சிறிது வளர்ந்த நிலையைப் பிரபந்தத் திரட்டுக் காட்டுகின்றது.

இதழுக்கு எல்லா நூல்களும் உவமைப் பெருக்கம் காட்டு கின்றன. உவமான சங்கிரகம் (17), இதழுக்கும் வாய்க்குமுரிய உவமைகளை இணைத்துவிடுவதால் பட்டியல் நீண்டமைகின்றது. இந்நூல்கள் கூறுவன வனைத்தும் பிரபந்தத் திரட்டிலும் இணைகின்றன. (8)

வேறு

172 பசிக்காமம்
பொசிப்பார
நிசிப்போது
ருசிப் பாமே

இதழுக்குரிய உவமைகளைக் கூறியதைத் தொடர்ந்து, அதனைச் சிறப்பிக்கும் பாங்குடன் இப்பாடல் அமைவதாகக் கொள்ள லாம்.

காமப் பசிக்கு உணவாக, இரவுநேரத்தில் இதழ்ச்சுவை அமைகின்றது.

உவமைச் செய்திகூறும் பிறநூல்களில் இத்தகு இயல்பு நிலையைச் சிறப்பிக்கும் பாங்கு அமைந்திலது. (9)

வேறு

173 வாய்குமுதம் வீழிதொண்டை வாரிச மகத்திச்
சேயமல ரெயிற்றுவமை செம்பவள முத்தோ
டாயுமுல்லை குலலைகழு முண்முருந்து வான்மீன்
றூயமுது தூதுளைபொன மாதுளமு மாமே

வாய், எயிறு என்பனவற்றின் உவமைகள் இங்கு அமைகின்றன.

குமுதம், வீழி, தொண்டை, தாமரை, செம்மலர்கள் ஆகியன வாயிற்கும், செம்பவளம், முத்து, முல்லை, குல்லை, மாதுளை, மலர், முருந்து, விண்மீன், அமுது, தூதுளை, பொன், மாதுளை விதை என்பன பல்லிற்கும் உவமையாம.

இங்கு வெண்பல்லிற்கும், வெற்றிலைக் காவியேறிய பல்லிற்கும் உவமை கருதுவது தெரிகின்றது. இதழுக்குரிய உவமை சில வாய்க்கும் ஆதல் குறிப்பிடத்தக்கது. இச்சார்பு பற்றிப் போலும் உவமான சங்கிரகம் இரண்டையும இணைத்து ஒரு பட்டியலுக்குள் அடக்குகின்றது.

கொண்ட பவள முருககிந்த்ர கோப மிலவு செம்பரத்தந
தொண்டை வீழி யமுததுண்டரு சொற்க பாட மாதுளம்பூ
வண்டு கவியுஞ் செழுங்குமுத மலர்தூ துளைசெங கமலமொப்புக்
கண்டு மொழிந்தா ரீரிதழ்க்குங் கனிவா யினுக்கு மிணையாமே (17)

பல்லுக்குரிய உவமைகளில் புன்கின்அரும்பு, பதுமராகம் என்பனவற்றையும் உவமானசங்கிரகம் (18) இணைக்கின்றது. சற்றே சிவந்த எயிற்றுக்குப் பவளத்தை உவமை கூறுவதன் நயம் குறிப்பிடற்குரியது. (10)

174 பாற்கடல் குறிஞ்சி யமுதங்கழை பலன்க
ளேற்குமித ழவ்வுவமை யேற்குமலர் வாய்க்கு
மீற்குவை யரும்பரிசி வாரிபிறை வெண்சங்
காற்றலுறு மம்புமறை யாகுநறை பற்காம்

இதழ், வாய், எயிறு என்பனவற்றிற்கு மேலும் சில உவமைகள் கூறப்படுகின்றன.

பாற்கடல், குறிஞ்சி, அமுதம், கரும்பு, பழவகைகள் இதழுக்கு ஏற்ற உவமையாக அமையும். மலரை ஒத்த வாய்க்கும் இவை பொருத்தமானவையாம். எயிற்றுககுக் கூரிய அரும்பு, அரிசி, வளைந்த பிறைச் சந்திரன் வெள்ளைச் சங்கு; ஆற்றலுடைய அம்பும் தேனூறுகின்ற பல்லுக்குக் கூறப்படும்.

பாற்கடல், குறிஞ்சித்தேன், கரும்பின் பலன்களான சீனி, பாகு .. எனவும் முதலடியைப் பொருள் கொள்ள வாய்ப்பமைகின்றது. அல்லது பலன் என்பதனைப் பொதுவாகச் செடி கொடி மரங்களின் பயனான இன்பழங்கள் எனவும் அமைக்கலாம் போலும். (11)

175 முக்கனி சுரும்புகுயில் கிள்ளைமுதிர் சீனி
சற்கரை கற்கண்டுவெல்லம் தேனமுதந் தண்பால்
கைக்கழை யிசைக்குழல்கள் வீணைமலி பூவை
சொற்குநகை யாம்பவளம் வெண்டரள மாலை

சொல்லுக்கும், நகைக்குமுரிய உவமைகள் இவை.

மா, பலா, வாழை எனும் முக்கனிகள், வண்டு, குயில், கிள்ளை ஆகியவற்றின் குரல், இனிமை மிகுந்த சீனி, சருக்கரை, கற்கண்டு, வெல்லம், தேன் அமுதம், குளிர்ந்தபால், கரும்பின் இடைப்பகுதி, குழல் வீணை யாகியவற்றின் இசை, பூவையின் பேச்சு என்பன சொல்லுக்கு உவமையாம். சிரிப்பிற்குச் செமபவளமும் வெண் முத்து மாலையும் உவமைகளாம்.

பெண்ணின் மொழிக்கு எல்லா நூல்களும் பல உவமைகளைக் காட்டுகின்றன. திருவேங்கடையரின உவமான சங்கிரகம் உவமைப் பொருட்கள் பதினான்கு என்கின்றது.

நாட்டுங் கதலி நடுக்கரும்பு மாவருக்கை
காட்டுங் குயில்கிள்ளை கற்கண்டு—வேட்டருந்துஞ்
சீனி சருக்கரைசெந் தேனமுதம் பால்குழல்யா
ழானபதி னான்குமொழிக் காம் (5)

இரத்தினச் சுருக்கம் 'மது' வையும் இணைப்பதும் (21), உவமான சங்கிரகமும் பதினான்கு பொருள் சுட்டி, அதில வரிசசிறை வண்டு இரங்கும் ஓசையைச் சேர்த்தலும் (19) குறிப்பிடத்தக்கன.

பல்லுக்குக் கூறிய உவமையிலிரண்டையே பிரபந்தத் திரட்டு இங்குப் பெண்ணின சிரிப்புக்கு ஆக்குகின்றது. தொடர்ந்து வரும் பாடலிலும் இன்னும் சிலவற்றைக் கூறுகின்றது. (12)

176 பின்னுநகை யாடிதிங்கள பாளைவிரி வொக்குந
துன்னிமலி சங்குகளம் பூகமும்பின் சொல்ப
மன்னுமலர் மாலைகழை மூங்கில்புயம் யாழ்கை
பொன்னின்மலர் காந்தளொடு மாந்தளிரு மாமே

நகைக்கு மேலும் சில உவமையும், கழுத்து, புயம, கைக்கு உவமைகளும் அமைகின்றன.

மேலும், நகைக்கு கண்ணாடி, நிலவொளி, விரிந்த பாளை ஆகியன ஒப்புடையன. சங்கு, கழுத்துக்காம். கமுகையும் கூறுவதுண்டு. மலர்மாலையும், கரும்பும், மூங்கிலும் தோளுக்கு ஆகும். யாழ்க்கோடு முன்கையாம். பொன்மலர், காந்தள், மாந்தளிர் என்பன அங்கைக்கு உவமை.

இரத்தினச் சுருக்கமும் (26), உவமானசங்கிரகமும் (18) சிறந்தநகை வெண்ணிலவாம் என ஒரே உவமை தருகின்றன. சங்கும், கமுகுமே பொதுவாகக் கழுத்திற்கு உவமையாகின்றன. ஆனால் உவமான சங்கிரகம்,

சங்கு செம்பு பாலிகைபூ சனிப்பூச் சூல்கொ ளிளங்கமுகு
மங்க லஞ்சேர் சுருளேந்து மடலுங் கழுத்துக் குவமை
பெறும் (16)

என விரிவு கொள்கின்றது.

தோள், முன்கை, அகங்கைக்கு, பிரபந்தத்திரட்டுத் தரும் உவமைகளையே திருவேங்கடையரின் உவமான சங்கிரகம் தருகின்றது. பொன்னின் மலர் எனப் பிரபந்தத்திரட்டுக் கூறுவதைத் தாமரை எனக் கொள்ளப் பிறநூல்களின் இணைப் பொருள் உதவுகின்றன. உவமான சங்கிரகம், தோளுக்கு மூன்று உவமைகளைத் தருகின்றது.

விளங்கு மெழிற்பூ ரணகும்ப மீசையே தரித்த மாலிகைவேய்
கிளர்ந்த மலர்ப்பஞ் சணைமூன்றுங் கிளரு மென்றோட்
கிணையாமே (13)

177 கையின் விரலே பயற்றங்காய் கெளிறுகையி
னொய்ய வுகிர் வசிர நுடங்கு கிளிமூக்கே
யய்ய மணி துத்தி பொனலங்கு மலர்வேங்கை
கொய்யவுறு துததிமலர் கூறுமணி முத்தே

கையின் விரல், நகம் இவற்றிற்கு உவமையும், சுணங்கிற்குரிய உவமையும் உரைக்கப்படுகின்றன.

கையின் விரலுக்குப் பயற்றங்காய், செளிறு எனும் மீன் என்பன இணையாம். கைவிரல் நகத்திற்கு, வைரமணி போன்ற வளைந்த கிளிமூக்கு உவமையாம். அழகிய மணிபோன்ற தேமலுக்குப் பொன், ஒளியுடனமையும் வேங்கைமலர், கொய்கின்ற துத்திச் செடியின் மலர், முத்து என்பன கூறப்படும்.

பெரும்பாலான நூல்களில், விரலுக்கும் நகததிற்கும் இவ்வொப்புமைகளே அமைகின்றன. ஆயின் உவமான சங்கிரகம்,

அலரிக் காய்முத் திரைக்கோல்பொன் னாழி துலங்கும் பயற்றங்காய்
குலவப் பகுமாந் தளிர்பவளக் கொம்பு கெளிறு கிட்டிககோ
னிலவச் சுழற்றுந் திறவுகோல் நேரு மிருகை விரற்குவமை.
(14)

எனக் கூறுவது பெருக்கம் காட்டுகின்றது. திருவேங்கட ஐயரின் உவமான சங்கிரகம், தேமலுக்கு, 'அம்மேனி பூந்தி தலை வேங்கை பசும பொன்' (15) எனக் கூறுகின்றது. (14)

வேறு

178 சூதுகிண்ணங் குரும்பைசெப்புச் சுடிகைகோங் கரும்பு
சொற்றாளம குமிழசிமிழ் தாமரைபம பரமே
யோதுமலை யிளநீர் சகோரம்பந்து கலசமுறுங் கும்பங்
குடமறாப் பியானை சக்கரவாளந் தீதின்
மா துளை யெலுமிச்சம்பழம் பட்டடை போர்திரு
முலையா மணக்களபஞ் சந்தனங் குங்குமஞ்சாந்
தூதுமளி மலர்ச்சவா தொழுகு புழுகிவை யார்ந்
தூர்ந்து கமகமென்று முகமாக்கி யொளிவிடுமே

நகிலின் இணைப்பொருட்களும், இயல்பும், அணிபொருளும் உரைக்கப்படுகின்றன.

சூதாடுகருவி, கிண்ணம், தென்னங்குரும்பி, செப்பு, மகுடம், கோங்கமலரின் அரும்பு, கைத்தாளம், குமிழ், சிமிழ, தாமரை, பம்பரம், குன்றம், இளநீர், சகோரப் பறவை, பந்து, கலசம், கும்பம், குடம், யானைக்கோடு, சக்கரவாகப் புள், மாதுளைக் கனி, எலுமிச்சம்பழம், தாங்குபலகை என்பன, போர் செய்யும் அழகிய நகிலாம். மணம் பொருந்திய கஸ்தூரி, சந்தனம், குங்குமம், சாந்து, வண்டு மொய்க்கும் மலர், சவ்வாது, புழுகு என்பன பொருந்தி, மணம் மிக்கு, முனைகொண்டு விளங்கும்.

திருவேங்கட ஐயரின் உவமான சங்கிரகம், கொங்கைக் கண்ணையும் பொருளாகக் கொண்டு நீலமணியை உவமையாக்குகின்றது பொதுவாக அரும்பினை உவமையாக்கல் பெரும்பான்மையான நூல்களில் அமைகின்றது. அறுவகை இலக்கணம், கூவிளம் பழததை உவமையாக்குகின்றது. உவமான சங்கிரகம், நாற்பத்திரு உவமைகள் கூறுவதாகத் தெரிகின்றது.

வல்லுச் சக்கிர வாகமதன்
மகுட மெலுமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய்
விளவின் கனிகோ புரத்தூவி
சொல்வெற் பிளநீர் கதலிப்பூச
சொர்னத் தாளஞ் சிவலிங்கந்
தெல்லுக் கரகங் கோங்கரும்பு
சிமிழ்பம் பரம்பொற் குடங்கிண்ணம் (11)

செண்டு குமிழ்வார் கூடாரஞ்
சேவின் சிமிழ்பொற் கரண்டகமென்
புண்ட ரீக முகிழ்பந்து
புன்னைக் காய்மா துளங்கனிமேற்
கொண்ட மொக்குள் பிடிசெம்பு
கொட்டைப் பாக்கு பருதிமதி
மிண்டு மிபமத் தகமருப்பு
மெழுகி னுருண்டை பசும்பொற்றேர் (12)

படர்ந்த செப்பு மாவிலிங்கம்
பழமா றேழு மிணைந்து... (13)

இப்பட்டியலில், சிவலிங்கம், வில்வக்கனி, கோபுரத்தூவி போன்ற பல பிற நூல்களிலமையாதனவாம்.

அணிபொருட்களாக பணப்பொருட்களையும் மலரையும் பிரபந்தத்திரட்டுத்தர, இரத்தினச்சுருக்கம், நித்திலம், கச்சு, வடம் என்பனவற்றையும் (16) சுட்டுகின்றது. (15)

வேறு

179 அடர்ந்து திரண்டிடங் கொண்டிறு
மாந்தழ காகிய செயல்களே
படர்ந்து பரந்துகுவிந் துமணாந்து
பணைப்பொடு விம்மி முகந்
தொடர்ந்து தடங்கொண் டிணைத்துத்
ததும்பித் திமுக்கென் றெழுந்து தண்ணென்
றடங்கிவெச் சென்றுகை வீணையணைத்
துளடங்கு தொயிற் பெறுமே

நகிலின் பண்பும், இயல்பும் உரைக்கப்படுகின்றன.

நெருங்கி, திரட்சியுடையதாய், இடங்கொண்டு, இறுமாப்புடையதாய், அழகுச் செயல்கள் தாங்கி, பரந்து, குவிந்து, மேல் நிமிர்ந்து, செழுமையுடன் உயர்ந்து, முகஞ்செய்து, தடங்கொண்டு, இணைந்து ததும்பித் திமுக்கென்று எழுந்து தண்மையுடையதாக அமைந்து, வெம்மையளிக்கும்படி கையோடு வீணையை அணைத்து, உள்ளே தங்கும்படித் தொய்யில் பெறும்.

இரத்தினச்சுருக்கம் தரும் வெண்பாவில் இப்பாடற் செய்தி ஓரளவு முழுமையாகவே அமைகின்றது.

அடர்ந்து திரண்டிடங்கொண் டண்ணாந்து விம்மிப்
படர்ந்து சுணங்கு பரந்து—தடங்கொண்
டிணைத்துத் ததும்பி யிறுமாந்து வீங்கிப்
பணைத்துமுகம் பார்க்குமது பார் (15)

இங்கும், உவமான சங்கிரகத்திலும் (13), சுணங்கு பரத்தல் கூறப் படலால், பிரபந்ததிரட்டின், 'அழகாகிய செயல்களே படர்ந்து' என்பதனைச் சுணங்குபரத்தலாகக் கொள்ள வாய்ப்புளது.

தொய்யில் மார்பில் எழுதப்படும் என்பதை உவமான சங்கிரகம் (13) சுட்டிச் செல்கின்றது. (16)

வேறு

180 கரும்புங் கற்பகமும்
விரும்ப ரம்பையுமே
குரும்பை மென்முலைமே
லரும்பிய தொயிலே

நகிலில் எழுதும் தொயிலுக்கொருவிளக்கம் இங்கு அமைகின்றது. முன்பாடல், 'தொயிற் பெறுமே' எனக் கூறியதன் விரிவு இது.

கரும்பும், கற்பகவல்லியும், விரும்பத்தக்க அரம்பையின் உருவமும் இளநீர் போன்ற மெல்லிய நகிலில் விரியும் தொய்யிலாம்.

புகழேந்திப்புலவரின இரத்தினச் சுருக்கமும், ஓரளவு இதனை ஒத்த நிலையில், 'கற்பகவல்லி கரும்பு கருங்கண் மாழை பொற்சிறுபுள்' (16) எனபதில் இத்தொய்யிலணியும் பாங்கினைச் சுட்டுகின்றது.

இலக்கியங்களும், 'கரும்பும் வல்லியும் பெருந்தோளெழுதி' (சிலம்பு 2 29) என இதனைச் சுட்டுகின்றன. (17)

வேறு

181 ஆலிலைகண் ணாடிவயி றாஞ்சுழியி லஞ்சிமல
ரம்புயமு நாபிபணமுஞ்
சாலுமலை யேறுபடி வாழைகனி தாறுமடி
தந்தமடி யாமயிர்வரி
யோலமிடும் வண்டொழுகெ றும்பொழுகு சங்கிலியு
றுங்கரிபி ணித்ததறியே
நீலமணி சைவலம ணுத்திரள்வெ ளிச்சமலர்
நாளமுநி லைப்பெறுமரோ

வயிறு, உந்திச்சுழி, வயிற்றின் வரிமடிப்பு, மயிரொழுங்கு என்பன வற்றின் இணைப்பொருட்கள் சுட்டப்படுகின்றன.

ஆலமரத்தின் இலையும், கண்ணாடியும் வயிற்றுக்கு இணை. நீர்ச் சுழியும், இலஞ்சி மலரும், தாமரையும், பணமும் கொப்பூழுக்கு ஒப்புமையாகக் கூறப்படும். மலையேறும் படிகளும் வாழைக்கனித் தாறும் வயிற்றின் மடிப்பாம். வயிற்றின் ரோம ஒழுங்கு, ஒலிககின்ற வண்டுகளின் வரிசை,எறும்பு வரிசை,சங்கிலி,

யானை பிணிக்கும் தறி, நீலமணிகளின் கோர்வை, பாசிக் கொத்து, அணுக்களின் திரள், ஒளியால் மலரும் தாமரையின் தண்டு என்பனவாக அமையும்.

ஆலிலையை வயிற்றுக்கு உவமையாக்குவது பொதுவாக நூல்களிடையே பரக்கக் காணப்படுகின்றது. பிரபந்தத்திரட்டு கண்ணாடியை இணைக்க, உவமான சங்கிரகம், 'வயிற்றுக் காலிலையுங் கடிசேம்பிலையு மதிப்பிளவுங் கதலிக்குருத்து மிணையாமே' (8) எனப் பிறவற்றையும் இணைக்கின்றது.

உந்திச்சுழிக்கு மகிழம்பூவையும் நீர்ச்சுழியையும் உவமையாக்கல் பொதுநிலையாக அமைய, உவமான சங்கிரகம் இன்னும் சிலவற்றைத் தருகின்றது.

வட்டச்சோகி மல்லிகைப்பூ வருநீர்ச் சுழிநந் தியாவட்ட
மொட்டென் றுவமை யுந்திக்கு மொழிவர்... (9)

வயிற்றின் மடிப்புகட்கு, திருவேங்கடையரின் உவமான சங்கிரகம்,

ஏறும்படியும் எறிநீர்த் தடந்திரையுங்
கூறும்படிமடிப்புக் கொள் (8)

எனக் கூற நீர்த்திரை யொன்றையே உவமான சங்கிரகம் கூறுகின்றது. இரத்தினச் சுருக்கமும் அறுவகையிலக்கணமும் எதுவும் கூறிற்றில.

வயிற்றின உரோம ஒழுங்கைப் பலபட இந்நூல்கள் புனைகின்றன. திருவேங்கடையரின் உவமான சங்கிரகம (9), பிரபந்தத்திரட்டு கூறும் இணைகளையே தருகின்றது. ஆயின், உவமான சங்கிரகம், இன்னும் மிகப்பலவற்றை இணைக்கின்றது.

... ... ... சலாகை, வார்கயிறு
துட்ட மதன னாணொழுக்கந்
தும்பித் துதிக்கை யெறும்பொழுக்கம்
விட்ட கரிய மணிக்கோவை
வேழத் திழியு மத்தாரை (9)

விரும்பா விலையி னடுநரம்பு
விண்டு கிடத்த விரதவடங்
கரும்பா மிளநீர்க் காம்புநறுங்
களபத் தின்றவ குளித்தாரை

யரும்பார் வனசப் பூம்பசுந்தா
ளவிர்வான் றாரை யென்றிசைய
வரும்பே ருவமை பெறுமடிப்பின
வயிற்று ரோமத் தொழுங்கினுக்கே (10)

இரத்தினச் சுருக்கம், இவவகைக்கும் உவமை வகுக்காமை எண்ணத் தக்கது. (18)

182 சீறரவும் பைங்கொடியுங் கொம்புமதன்
மெய்யுமுட றேய்பிறையு நூலும்பிடியு
மீறுதுடி யுஞ்சவலை யுங்குளிரு சிங்கமும்
வியன்குழவி யுங்ககனமுந்
தேறுகணை யுங்கமுகு மாலையுநு சுப்பது
சிறுத்துவளை வாய்மெலிவு கொண்
டாறிமுலை மீறிடிலொ சிந்திடவ சைந்திதைய
மஞ்சவுறும் வஞசகமதே

நுசுப்புக்கு உவமையும் இயல்பு விளக்கமும் தரப்படுகின்றன.

சீற்றமுடைய பாம்பும், பசிய கொடியும், மெல்லிய மரக் கிளையும், எரியுண்ட மதனது உருவமும், தேய்ந்த பிறையும், நூலும், கைப்பிடியும், துடியும் சவலைக்குழந்தையின் மெலிவும், ஒலிக்கின்ற சிங்கமும், ஆகாயத்திலுள்ள வளர்பிறையான குழவித் திங்களும், வானமும், உறுதியுள்ள கணையும், கமுக மரமும், மாலையும் இடையாம். அது, சிறியதாகி, வளையும் இயல்பினதாய், மெலிந்து அமைந்து, நகிலின் பெருகிய வளர்ச்சி யால் நுடங்கி, அசைந்து, பார்ப்போர் நெஞ்சம் அஞ்சும்படி வஞ்சம் கொள்ளும்.

இரத்தினச் சுருக்கம் இடைபற்றி மொழியாதிருக்கத் திருவேங்கடையரின் உவமான சங்கிரகம், பாம்பு, கொடி, கொம்பு, மாரன் உடம்பு, இழை, கைப்பிடி, பிறை, மின், துடி, கோளரி (10) என்பனவற்றைக் கூறுகின்றது. சீயம், நூல், உடுக்கை என்பனவற்றையே அறுவகை இலக்கணமும் கூறும், உவமான சங்கிரகமும்,

கொடிநூல் துரும்பு தேய்ந்தபிறைக்
கொழுந்து சிங்க மதனுருவம்
துடிவிண் மின்கைப் பிடிகுலிசந்
துலங்கு மரவு மிடைகொப்பாம் (8)

என பெரும்பாலும் ஒத்துச் செல்கின்றது. துரும்பு, வச்சிரப் படை என்பன புதியனவாம். இந்நூல்கள் ஒன்றிலும், இடையின் இயல்பு சுட்டப்படாதிருக்கப் பிரபந்தத் திரட்டு அதனையும் குறிப்பிடுவது சிறப்பு. (19)

183 மாக்கடித டக்குவமை தாமரைப சுஞ்சுனைபொன்
மானுறுகு ளம்பரசிலை
யாக்கமுறு தேருருள் வியாழமொடு பட்டமு
மரும்பியவி ருந்தமுடனே
யூக்கமுறு சேமணிப லாச்சுளையு மாமதனி
லூறியமு தங்குமிழியாய்த்
தேக்கிடவெ ழுந்துமண மேழிடமு மேகமழ்தல்
செய்யுமத சாலையுமதே

கடிதடத்தின் உவமைகளும் பண்பும் விரிக்கப்பெறுகின்றன.

அல்குலுக்கு, உவமை செந்தாமரை மலர், தண்ணிய சுனை, பொன்தட்டு, மானின் குளம்பு, அரசமரத்தின் இலை, தேரின் தட்டு, பாம்பு, பட்டம், அரும்பையுடைய காம்பு என்பன வற்றுடன், கன்றின் கழுத்தில் கட்டப்பட்ட மணி, பல வின் சுளை என்பனவுமாம். அதில் ஊறி, அமுதம் பெருகி, குமிழி யிட்டுத் தேங்க எழும் மணம். ஏழிடமும் கமழும்படி அமைகின்ற மதசாலையாகவும கடிதடம் அமைகின்றது.

கடிதட உவமை என இணைத்துக் கூறிய இதனை, அல்குலுக் கும் பெண்குறிக்கும் எனப் பகுத்துக் கூறுதல் பிறநூல் சிலவற்றில் அமைகின்றது.

சொல்லிய வல்குல் சுனையோ டரசிலையுஞ்
சில்லியும் பொற்கொடிஞ்சித் தேர்த்தட்டும்—வல்லரவு
மண்குறிக்குஞ் சிற்றால வட்டமும் பட்டமுமாம்
பெண்குறிக்கு மான்குளம்பைப் பேணு (11)

என்பது திருவேங்கடையரின் உவமான சங்கிரகம். 'சேயமணி யாலவட்டந் தேரரவு தூய வல்குல்' (27) என்பதுடன் இரத்தினச் சுருக்கம் அமைந்துவிட, அறுவகை இலக்கணம்,

சிறுகீரை வித்துறு செம்பொற் றட்டமும்
தேர்த்தட்டும் வாவியும் தேன்கூடும் மின்னார்
கடிதடக் குவமையாக் கழறினர் முன்னோர் (உவமை. 36)

என்கின்றது. இவ்வுறுப்பிற்கும் உவமான சங்கிரகம் உவமைப் பெருக்கம் கொள்கின்றது.

பொற்றட் டனங்க ளரமனைவேள்
பொக்கி சங்காக் கணம்பூப்பைந்
தெற்றுந் தேன்கூ டரவபடஞ்
செந்தா மரைப்பூ மதுக்குழலாம்
பற்றும் வாழைப் பூமலிபொற்
பதக்கங் குதிரைச் செவிதேர்தட்
டுற்ற வமுத சர்க்கரைகூ
ருடும்பின் வாய்நற் றேன்கிணறு (6)

அடருஞ் சத்தி பீடமத
னால வட்டங் குளமடைபாற்
கடறூ விளக்குச் சங்கநிதி
கவினா ரிளவெற் றிலைவிண்ணிற்
படரு மரசி னிலைபட்டம்
பகரு மல்கு றனக்கிசையத்
தொடரு முவமை பெண்குறிக்குச்
சொல்லத் தகுமான் குளம்பொன்றே (7)

இந்நூல்கள் அனைத்தும் உவமை கூறுவதுடன் அமைந்துவிட, பிரபந்தத் திரட்டு அதன் பண்பையும் விளக்குவது வேறுபாடாக அமைகின்றது. (20)

184 நாட்டு சகுனம் புளினம் பூவுறு திரட்சிகுட
நல்கு குமிழிக் குலமரோ
சூட்டிய பிடிக்கை யிளவாழை பளிங்கிட்டிலகு
தூண் டொடை முழச்சரண விளக்
கீட்டலவன் றந்துகணைக் காலதுவ ராலினொடெக்
காளமுறு தூணிமத்தம் பூக்
காட்டிய தராசு பரடாங் குதிகள் பந்துமலர்
கண்டவொரு செண்டு பெறுமே

தொடை, முழங்கால், கணைக்கால், பரடு, குதிகால் ஆகியவற் றிற்குரிய உவமைகள் தொகுக்கப் பெறுகின்றன.

விரும்பத்தக்க கிழங்கு, மணற்குன்று, மலர்த்திரட்சியான பூப் பந்து குடம் சொரியும் தண்ணீர், ஏற்றி மொழிதற்குரிய பெண யானையின் துதிக்கை, இளம் வாழைமரம், பளிங்கு பொருந்தி

ஒளிவிடுகின்ற தூண் என்பன தொடை. முழங்காலை விளக்க உவமையாக நண்டினைத் தந்து கணைககால், வரால்மீன், எக் காளம் எனும் இசைக்கருவி, அம்பறாத்தூணி என்பனவாம், ஊமத்தம்பூ, ஒத்த தராசு என்பன கரண்டையாம். குதிகால். பந்து, மலர்ச்செண்டு என்பனவற்றை உவமையாகப்பெறும்.

'காரிகை இருக்கைக களிற்றின் கும்பம் போலும் என்று புகன்றனா புலவர்' என அறுவகை யிலக்கணம் மட்டும் இணை கூறுகின்றது.

வாழை, பிடியின்கை என்பன குறங்கின் உவமையாகப் பொதுவாக அமைகின்றன. உவமான சங்கிரகம் தொடையை, அல்குல் தடம் நீந்தக் குலவு தெப்பம் (5) எனச் சிறப்பிக்கின்றது.

முழங்காலுக்கு, அலவன் எனும் பொது உவமையிருக்க, 'அலவன் பசுமூக் குற்றதிற லாலான் பணிகே டகத்தின் குமிழ் சொலுநன் முழந்தாட் குவமை'(5) என உவமான சங்கிரகம் கூறு கின்றது.

கணைக்கால் காகளம், மகரம் எனும் பொது உவமைகளைப் பெற்றதை அறுவகை இலக்கணம் உணர்த்துகின்றது. திருவேங் கடையரின் உவமான சங்கிரகம், வேணு, அம்புபெய்தூணி என்பனவற்றையும் இணைக்கின்றது (12). விரவுதேன் பூ விரி பாளையையும் இணைத்து ஐந்து உவமையை உவமான சங்கிரகம் (4) தருகின்றது.

'காலில் பரடிரண்டும் கைத்தரா சொக்கும்' (13) என்பது திருவேங்கடையரின் உவமான சங்கிரகம். அறுவகை இலக்கணம் தராசுத் தட்டுடன் ஒங்கிளம் குரும்பையையும் இணைக்கின்றது. உவமான சங்கிரகம் இவற்றுடன், பந்து, சிப்பி ஆகியவற்றையும் இணைத்து இணைப்பொருட்களை நான்காக்குகின்றது.

...பாலின் பாளை யுட்குரும்பை பந்து தராசு சிப்பியிவை
நாலுங் கரட்டுக் குவமையென நவில்வ ரியனூற் கவிவலரே
(3)

குதிங்காலுக்குப் பந்தினை பெரும்பான்மை நூல்களும் உவமப் பொருளாக்குகின்றன. அறுவகை இலக்கணம் இக் குதியை எலுமிச்சம் பழம் எனக் காட்டுவது புதுமை. உவமான சங்கிரகம் இன்னும் பல புதுமை புகல்கின்றது,

பரவு சிறுதூ ரிகைப்பெட்டி பந்து சங்கு வனசமுகி
ழிரக நறுமாங் கனிகுதிங்கா லேய்க்கு முவமை... (4)

185 நூலெழுது பொத்தகமு மாமைமுது குங்கலமு
நோக்குவளை யும்புறவடி
கோலியமு ருக்கமுகை செம்பவள மேவிரல
குறிக்குமுகிர் வெண்மதியமு
மாலினினி ரைத்தகழு நீரிதழு முத்துமுறும்
வாய்ந்திலகு முட்சரணமே
சாலுறும னிச்சமனத் தூவியொட சோகிசைபஞ
சம்புயமு மாந்தளிருமே

புறவடி, கால்விரல், கால்விரல்நகம், உள்ளங்கால் ஆகியவற்றின் உவமைகள் பட்டியல்படுத்தப்பெறுகின்றன.

நூல் எழுதிய புத்தகமும், ஆமையின் முதுகும், கலமும், அழகிய சங்கும் புறவடியாம். வளைந்த முருக்க மலர்மொட்டு, செம்பவளம் என்பன விரல். விரலின் நகம், வெண்ணிலவும, அழகு பெற்று வரிசையாக அமைந்த கழுநீர் மலரின் இதழும், முத்தமும் எனப் பொருநது உள்ளங்கால், அனிச்சமலர், அன்னத் தூவி, அசோக மலர், பஞசு, தாமரை, மாந்தளிர் என்பன வற்றைப் பொருத்தமான உவமையாகக் கொள்ளும்.

புறவடிக்கு ஆமையும், புத்தகமும் ஒப்பாதல் பெரும்பான்மை நூல்களின் பொது எண்ணமாம். பிரபந்தத்திரட்டு, கலமும் வளையும் இணைப்பது புதுமை.

விரலுக்கு பவளத்தை உவமை யாக்கல் திருவேங்கடையரின் உவமான சங்கிரகத்தில், 'திரண்ட வித்துருமம் போலும் விரல்' (13) என்பதில் அமைகின்றது. அறுவகை இலக்கணம் மஞ்சட் கொமபினை உவமையாக்குகின்றது. இவ்விரண்டையும் உவமான சங்கிரகம (2)கூற,முருகக முகையைப் பிரபந்தத் திரட்டு கூறுவது புதுமை.

கால்விரல் நகத்திற்கு, 'விரற் பவளங் கூறாகிர்க்கு வெண் பிறையு முத்து நிரைக் கழுநீர்ச் செவ்விதழும் நேராம்' (14) என திருவேங்கடையரின் உவமான சங்கிரகம் கூறுவது பிரபநதத் திரட்டை ஒட்டிச் செல்கின்றது. அறுவகை இலக்கணம், சிபபின் நிரை எனக்கூற, உவமான சங்கிரகம படிகம எனவும் கண் பத் தாகக் கடைந்த மதி (3) எனவும் கூறுகின்றது.

உள்ளங்காலுக்கு, மென்மையும் செந்நிறமும் பற்றி இரு பண்புடைய பொருட்கள் ஒப்பாகின்றன. பிரபந்தத் திரட்டுச் செய்தியே பெரும்பாலும் பிறவற்றில் அமைய, உவமான சங்கிரகம் முயலின் வயிறு, நாயின் நாக்கு என்பனவற்றையும் இணைக்கின்றது.

வனச மலர்மாந் தளிர்முயலின் வயிறு செயலை யனத்தூவி
சுனக னாக்குச் செம்பஞ்சு துகடீ ரனிச்ச மிவை மடவார்
வினவுள் ளடிநேர்... (2) (22)

186 அன்னமொடு பெண்பிடிந டைகருவமை சாயன்மயி
லாரமுத மேனிகழையே

... ... ... ...
... ... ...
... ... ... ...

காடைகள்ச கோரமலியும்
பன்னுகிர வுஞ்சமிவை யெண்குரல்கள் சங்கமொடு
பண்ணளிகள் சார்குல வுமே

பெண்ணின் நடை, சாயல் மேனி குரல் ஆகியவற்றிற்குரிய உவமைகள் இங்கமைகின்றன.

அன்னம், பிடி என்பன பெண்ணின் நடைக்கு உவமை. பெண்ணின் சாயலுக்கு உவமை மயிலும் அமுதமாம். உடலுக்கு ஒப்புக் கரும்பாம். காடை, சகோரம், கிரவுஞ்சம் எனும் எட்டும் அப்பெண்டிர் குரலுக்கு இணையாம். சங்கின் இன்னோசையும் வண்டினங்களின் முரற்சியும் இணையாகப் பொருந்தும்.

திருவேங்கடையரின் உவமான சங்கிரகம் மட்டும் நடை, சாயல், மேனிக்கு உவமை தருகின்றது.

பாயற் பிடிவேழம் பைந்தூவி யன்னநடை
சாயற்கு மின்னமுதந் தானமயிலாஞ்—சேயிழையாய்
மாந்தளிர்பூஞ சண்பகப்பூ மாமேனி யம்மேனி
பூந்திதலை வேங்கைபசும் பொன் (15)

மேற்கண்ட பிரபந்தத் திரட்டின் விடப்பட்ட பகுதியில் பெண்டிர் குரலுக்கு இணையான பிறபொருட்கள் அமைந்திருக்க வேண்டும். (23)

187 கூறுமுத லாமியல்கு றித்தவொரு பத்துமரங்
கொண்டவிவர் கற்பினுறவே
தேறியம லர்ப்பொழில்ம லர்ப்பொய்கையோ டூசல்கள்
செய்குன்ற மலர்மாதவிகளே
யூறுமது பானமயில் கிள்ளைகுயில் பூவையன
வோதவுறு பந்தடிகழங்
கேறுமலர் முல்லைபல ராயமொடு கூம்புற
விலங்குமொரு தெய்வமுளரே

மகளிர் விளையாட்டிற்குரியன கூறப்படுகின்றன.

ஏற்கெனவே, முதலாம் இயலில் குறித்த பத்து மரங்களும் இபபெண்டிரின் கற்பால் மலர,தெளிவுடைய மலர்ச் சோலைகள், பூங்குளங்கள், ஊசல், செய்குன்றம், மலர்கள் நிறைந்த மாதவிப் பந்தர் இவற்றில் விளையாடுவர். மது அருந்துதல், மயில் கிள்ளை குயில் பூவை எண்பனவற்றோடு பேசுதல், பந்தடித்தல், கழங்காடுதல் முதலியன செய்வர். ஏறிப்படர்கின்ற மலருடைய முல்லைக்கொடியை வளர்த்துவர். பலர், தோழியர் கூட்டத் துடன் சோலையில் வனதேவதை போன்று காட்சியளிபபர்.* (ஆயத்துடன், கைகள் கூப்பி, விளங்குகின்ற தெய்வத்தை வழி படுவர்).

இரத்தினச் சுருக்கம், இவற்றில் சிலவற்றை மகளிர் விளை யாட்டிற்குரியனவாசக் கூறுகின்றது.

மருங்கு வளர்பூங்கா மலர்வாவி யூச
றிருந்துமணிச் செய்குன்று தேமா—விரும்பமுத
பானங் கிளிபூவை பந்துகழங் கன்னமயின்
மானமுல்லைப் பந்தர் வளர்ப்பு (29)

முதலாம் இயலில் பிரபந்தத் திரட்டு, மஞ்சரிக்கு விளக்கம் தரும் போது மகளிரான மலர்மரம பததைச் சுடடுகின்றது (35). மீண் டும் கருப்பொருளியலில் இச்செய்தி தரப்பட்டது (100). பெரும்பாலும தொகையகராதி, நிகண்டு போன்றன இதைக குறிக்கினறன. இரத்தினச் சுருக்கம்,

* பெண்ணின் அழகுபற்றி அவள் வருத்தும் தெய்வமாக அமை வதை, 'மணங்கமழ் பூங்கானன மனனிமறறாணடோா, அணங் குறையு மெனப தறியேன' (சிலமபு 7. 9) போன்ற பகுதிகள் காட்டுகின்றன (74)

எண்மாதவி சண்பகம் பாலைபுன்னை யெழிற்படலி
கொண்மா மகிழமராவொ டசோகுரா முல்லை மின்
பண்பாட னீழற்பட னட்டலாடற் பழித்தலுண்ணல்
கண்ணோக்குதை யணைத்தல் சிரித்தற் கலர்க்காடுறுமே (41)

என இதனைத் தருகின்றது.

188 சூதுசது ரங்கமொடு பாண்டிபசு வாடலுளர்
பாங்கியொடு தொட்டவிறையோன்
பாதைவழி போகவலர் நாடுநகர் விட்டிறைந
கர்க்குமுறு பண்பையுளரே
காதல்வரை வேறிவரு கற்பினெறி போகவலர்
வண்டொடறு கான்ஞிமிறுக
ளோதுமிசை யாமதுக ரஞ்சுரும்பு தும்பியுள
ரொள்விளரி பாட்டுமுளரே

பெண்டிரின் பல்லியல்பு நிலை உரைக்கப்படுகின்றது.

சூதாடல், சதுரங்கம் விளையாடல், பசுப் பாண்டி எனும் பல்லாங்குழி விளையாட்டு என்பன செய்வர். தோழியுடன், பொருந்தியதலைவனின களவுநெறியில் போகும் வன்மையுடைய வர். தன் நாட்டினையும நகரையும் விட்டுத் தலைவன் நகர்க்குப் போகும் பண்பினர். களவு, திருமணம் வழிவரும் கற்பு எனும் நெறிகளிலும் போகும் ஆற்றல் உடையவர். வண்டு, ஆறுகால் புளளான ஞிமிறு என்பவை போன்ற இசையினர். மதுகரம், கரும்பு, தும்பி போன்ற ஒலியும கொள்வர். இனிய விளரி இசைப் பாட்டும் உடையவர்.

'மின்னார் முற்றோன்றுமிசை' என இரத்தினச் சுருக்கம் விளக்குவதில், பிரபநதத திரட்டின் மேற்கணட இசைச் செயதிக்கு இணை அமைகினறது.

வளர்க்குஞ் சிறுதூவி வண்டறுகாற் றும்பி
யளிக்குங் குலவுஞிமி றாாபபும—களிககுஞ்
சுருமபு மதுகரமுஞ் சூழ்விளரிப பாட்டு
முருந்தெயிற்று மினனார்க்கு முன் (30) (25)

189 வாணியயி ராணிமலர் மின்னவணி மாதுசத்திய
வாய்மையொடு ருக்குமணியே
நாணிலவரு சீதைரதி கஙகையொட ரம்பையர்க
ணலலவடி வேலன்மனையார்

கோணுதம யந்தியொட ருந்ததிது ரோபதைமெய்க்
குந்திமுத லோருவமையாம
பேணுமலர் பொனறரளங் கண்முதல வேயருமை
பேசுமொழி யாலுவமையே

மகளிாககுச சிறபபு உவமையாகக் கூறத்தகும் **உத்தமப்** பெண்டிர் முதலியன.

கலைமகள், இந்திராணி, மலர்மகளான இலக்குமி, பூமிப் பெண், சத்தியபாமை, உருக்குமணி, நாணேற்றிய வில்லால் பெற்ற சீதை, இரதி, கங்கை, அரம்பையர்கள், சிறந்த வடிவேலையுடைய முருகனின் மனைவியரான வள்ளி, தெய்வ யானை, மாறுபட்ட தமயந்தியொடு அருந்ததி, திரெளபதி, உண்மையுடைய குந்தி முதலியவர் உவமையாம். மதிக்கத் தகுந்த மலர், பொன், முதது, கள் முதலியன, அவர்கள் பேசும் மொழி காரணமாக உவமையாம்.

இரத்தினச் சுருக்கம், மடவார்ச் சிறப்புவமை எனச் சுட்டுவனவற்றில், மேற்கண்ட தெய்வப் பெண்டிா சிலர் அடங்குகின்றனர்.

வதியு மின்னார் தமைப்பேசத் திருவுமை வாணிமதி
ரதியை யும்பர்பதி வாழு மற்றோரை யரம்பையரை...(54)
(26)

வேறு

190 சோருங் கலிங்கம் வளைபொன்
கலன்க ணாணுந் துறந்து விடுவா
ரூரும் பசப்பு மடலுங்
களிப்பு முளர்கூடல் செய்வ ரிருகண்
ணீரும் பிலிற்றி மலர்மெத்தை
யேறி லுடல்கொப்பு ளிக்கு மிளையார்
சாருங் குறித்த வன்பான
பொருள்க டன்னைத் துறக்கு மயலார்

பிரிவாற்றாமைக்குரிய குறிகள் பேசப்படுகின்றன.

ஆடைதளரும்.வளையல், பொன் அணிகள், நாணம் என்பன வற்றைத் துறந்துவிடுவார். உடலில் பசலை படரும். மடல் ஏறுவேன் என்பர். கள்ளுண்டோர்போல் களிப்புறுவர். கூடல்

இழைத்துப் பார்ப்பர். கண்கள் இரண்டும் நீர்வழிய அமைவர். மலர்பரப்பிய பஞ்சணையில் கிடப்பினும் வெம்மையால் உடல் கொப்புளிக்கும் இளமைத் தளமையுடையவர். அருகில் உள்ள, குறிப்பிடத்தக்க அன்பான பொருட்களையும் துறக்கின்ற மயக்கத்தினர்.

இங்கும், தொடர்ந்துவரும் பாடலிலும், பிரபநதத்திரட்டு கூறுவதை ஓரளவு ஒத்து அமையும் பிரிவாற்றாமைச் செய்திகளை இரத்தினச் சுருக்கமும் தருகின்றது. அதன் முதற் பாடலான,

சோருந் துகிலும் வளைகலை நாணுந் துணிந்துமட
லூருந் தொழிலு மொளிகூர் பசலையு மோடரிக்கண்
ணீருங் கிழியும் பருமணற் கூடலு நின்றரற்றும்
ஊருந் தனியு மறைபோன நெஞ்சமு முண்டென்பரே [1]

இங்குச் சுட்டப்படும் அரற்றல், நெஞசம் இழத்தல் எனும் நிலைகள் பிரபந்தத் திரட்டில் குறிபெற்றில. (27)

191 நடுக்கங்கள் சோக மண்ணாத மேனி
வாரார் வுறக்க நல்லா
ரொடுக்கங் கிடைப்பர் புண்ணான நெஞ்சு
புகைதா முயிர்ப்பு முள்ளா
ரடுக்கின்ற விச்சை யாலே யுடற்குண்
முத்தம் பொரிந்தும் வேவா
தொடுகுற் றழுக்கி னுடையே யுடுததி
யேகாங்கி யாவா சொலலார்

மயலுற்ற பெண்டிரின் இயல்பு இங்கும தொடர்ந்துரைக்கப் படுகின்றது.

நடுக்கம், சோகம், நீராடாத மாசுடைய உடலினர். உறக்கம் கொளளார். தோழியரின் வருதத மொழிகள் பெறுவர். புண்ணான நெஞ்சுடையவர். பெருமூச்சுக் கொள்வா. நெருங்குகின்ற ஆசை காரணமாக, உடலில் அணிந்த முத்துமாலை பொரியும்படி வெம்மையுறுவர். தொடர்ந்து, மாசுபடிந்த உடையே யுடுத்தித் தனிமையுடையவராகவும் பேச்சற்றவராகவும் ஆவார்.

இரத்தினச் சுருக்கம், உணவுண்ணாமை, விளையாட்டுகளில் ஈடுபடாமை போன்ற இயல்புகளையும் காமுற்றார்க்கு உரியதாகச் சுட்டுகின்றது.

உண்ணாது வள்ளத் தமுதமு மூசலுங் கந்துகமு
நண்ணா வியல்பு நடுக்கமு ஞ சோபமு நாள்பலவு
மண்ணாத மேனியும் வாராவுறக்கமு மாசுடையும்
புண்ணான நெஞ்சும புகை நா ழுயிர்ப்பும் பொரிமுத்துமே
[2]

மெய்ப்பாட்டியல் கருத்துகளின் தொடர்ச்சியின் வேறுபாடாக இவற்றைக் கருதலாம். (28)

192 பனிநீரு முத்து மலரிட்ட தொதது
மலரிட்ட பாயு மலையார்
தனிநீ ரரத்த மாலிக் குலங்க
டண்ணேறு குளிரி கதலி
யணியாய விருளு மிப்பத்து மாலு
ளார்க்குத் தொடுத்த பகையே
யினிதான வூர்க ளன்பான தெய்வ
மென்றுந் துறப்பர் மயலால்

பிரிவாற்றாமையால் வருந்தும் பெண்டிர்க்குப் பகையாவன எவை என இப்பாடல் மொழிகின்றது.

தண்ணிய நீரும், முத்தும், மலர் கொத்துகளும், மலர் இட்ட படுக்கையும், தனிநீரான கடலும், களபமும், மழையும், தண்மை யேறிய குளிர்ச் செடியும், கதலியும், வருந்துகின்ற இருளும் ஆன பத்தும், காம மயக்கம் உற்றவரை வருத்தும் பகையாம். இத்தகைய பகையுற்றவர், அதுவரை தமக்கு இனியதாகக் கொண்ட ஊரினையும், அன்பு பூண்ட கடவுளரையும் கூட, அம் மயக்கம் காரணமாக நீக்குவர்.

இப்பகைப் பொருட்கள் பத்தினை இரத்தினச் சுருக்கமும் மொழிகின்றது.

முத்துங் களபமுந் தண்பனி நீரு முயங்குமலாத்
தொத்துங் குளிரியுந் தூய்மலர்ப் பாயலுஞ சூழ்ந்துபுறங்
கத்துங் கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப்
பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாமொரு
பைந்தொடிக்கே [3] (29)

வேறு

193 கச்சை நீக்குவர் மாலை வேண்டிலர்
கண்மை யிட்டிலர் திலத மிட்டிலா
குழன்மு டித்திலர் நகைபொ ருந்திலர்
கழங்கோ டம்மனை யாடில
ரிச்சை யாச்சுனை யாடில ரிசையே
புரிநதிலர் கிள்ளை யேந்தி லர்வண்
டெடுத்திலர் பூவை வேண்டில
ரிரண்டு கண்ணும் பொருந்திலார்
மெச்சு பாங்கியர்க் கேவல் காட்டில
ரன்ன நஞ்சென வோதுவார்
மலர்மெத் தையேயா மென்பா
மெற்கு நெருஞ்சி யாமல ரென்பரே
செச்சை மார்பினர் பிரியிலெம் முயிரே
யிராவென வோது வார்மிகத்
தேடுவார் குறிநாடுவார் கவிபாடுவார்
மயன் மாதரே

மயலுற்ற மாதர் விட்டு நீக்குவன பற்றிய செய்திகள் இங்கு அமைகின்றன.

அணிந்த கச்சினை நீக்குவர். மாலை அணிதலை வேண்டார் கண்ணிற்கு மையிடார். நெற்றியில் திலகம் இடார். கூந்தலை முடியார். பல்வகை அணிகளையும் அணியார். கழங்கு, அம்மனை முதலியன விளையாட மாட்டார். ஆசையோடு சுனையில் நீர்குடையார். இசைக் கருவிகளை மீட்டார். வளர்ப்புக் கிளியை கையில் எடார். வண்டு போன்று இசை எழுப்பார். வளர்ப்புப் பறவையான பூவையை விரும்பார். கண்களில் உறக்கம் கொள்ளார். பாராட்டத்தக்க தோழியர்க்கு பணிகள் சொலலார். உணவினை நஞ்செனக் கூறுவர். முன்பு மலர் மெத்தை என்போம, அது இப்போது எமக்கு நெருஞ்சிமலர் போனறது என்பர். சந்தனம் பூசிய மார்பினரான தலைவர் பிரிநதால் எங்கள் உயிர் உடலில் நிலைக்காது எனச் சொல்லுவர். தலைவனை மிகுதியாகத் தேடுவர். குறிகேட்பர். கவிதை புனைவர், மயல்கொண்ட மாதர்.

இரததினச் சுருக்கத்திலும் இக்கருத்து விரிவாக அமைகின்றது.

தொடியும் பலகலனுந் தூய்கச்சு முத்துங்
கடிகமழ்தா ரும்புனையாள் கால—விடமனைய
சேல்விழிக்கு மையுந் திலகநுதற் குங்குறியாள்
சாலமுடி யாளளகந் தான் [4]

தானே கழங்கமனை தண்சுனை நீராடாள்
கானே ரிசைபயிலாள் கைக்கிளியு—மானினமும்
பூவையை யும்போற்றாள் பொருந்தவே பாங்கியருக்
கேவல் புரியாள களிப்பதென்று [5] (30)

வேறு

194 அடிக்கடி சிரிப்பர் மலரோதிகள் குலைப்ப
ருடைமாறி யுடையே யுடுத்துவார்
கடுக்கென நடப்பர் மொழியிற் கொடுமை வைப்பர்
கடைக்கண் ணயில் விடுப்பர் சுழல்வார்
துடித்திடை தளாட முலையாட வருகாமுகர்க
டோள் புகுவர் முத்தமிடுவார்
தடுத்திடுவர் விட்டிடுவர் வாயிதழ் கொடுப்ப
ரவர்சால மொழியப் படுமரோ

மயலுற்ற பெண்டிரின் மெய்ப்பாடும், செயலும் கூறப்படுகின்றது.

அடிக்கடி சிரிப்பார். மலரணிந்த கூந்தலைக் கலைப்பர். உடைகளை மாறறி மாற்றி அணிவர். உயர்ந்து நடப்பர். பேச்சில் கடுமை கொள்வர். கடைக்கண் பார்வை எனும் வேலினை விடுவர். மயங்கிச் சுழல்வர். பிரிவாற்றாமையால் துடிப்பர். மெல்லிய இடை தள்ளாடும் படியும், நகில்கள் அசையும்படியும், வருகின்ற காதலரின் தோளை அணைப்பர். முத்தம் அளிப்பர். அவரைத் தடுப்பர். பின்பு விடுவர். வாயிதழைச் சுவைக்க அவர்க் களிப்பர். இவ்வாறு இவர்கள் செயல் மிகுதியாகக் கூறப்படும். (31)

195 அன்னமென்ன கிள்ளையென்ன கோகிலமு மென்னவர
லாவதென்ன பாலுமமுதுந்
தின்னுமென்ன பாங்கியரி ருந்துமென்ன மன்னவர்
தினந்தினம் வரப்புரிகிலா
ரென்னவிவை யொடுமிவ ரொடுமொழி வார்சில

ருளேசொலி விடுப்ப ரிறையூர்த்
துன்னுவளை யுஞ்சரிய நாணமறு கதெருவி
னூடுதிசை துன்றி வளர்வார்

மயலுற்ற மாதரின் இன்னும் சில பண்பும் செயலும் விளக்கப் படுகின்றன.

அன்னம், கிளி, குயில் எனும் தலைவியின் வளப்புகள் வந்தாலும், அவை பாலும், சோறும் உண்டாலும், அருகே தோழியர் இருப்பினும் அவற்றால் மகிழாது, தலைவர் என்றென்றும் வரவில்லையே எனும் ஏக்கத்தை அப்பறவை யிடமும் தோழியரிடமும் கூறுவர். சிலரிடம் தம் உள்ளக் கருத்தைக் கூறித் தூது விடுப்பர். தலைவனின் ஊரைச் சென்றணையும் குறிக்கோளாகக் கொண்டு, கைவளை நெகிழ, நாணம் இழக்கத் தெருவழியாக அததிசையினை முன்னுவர். (32)

196 அன்றில் கொடிதென்ப ரனையுங் கொடிய ளென்பர் சிலர்
வீணை கொடிதென்பர் சிலரே
தென்றல் கொடிதென் பர்சிலர் சேமணி யதென்பர்
குயிலென்பர் கடலென்பர் சிலரே
நின்ற நிலவுங் கொடிய தென்பர் மதனுங் கொடிய
னென்ப ரயலாரு மவரே
யென்று நவில்வா ரெனது கொங்கை கொடி தென்பர்
மன தென்பர் கொடிதா யிழையரே

மயலுற்ற மாதரின் துன்பத்திற்குக் காரணமாக அமைவன இங்கு மொழியப் படுகின்றன.

அன்றில் பறவை கொடியது என்பர். அன்னையும் கொடிய வள் என்பா சிலர். வேறு சிலர் இன்னிசை வீணை அத்தகையது என்பர். சிலா தென்றல கொடியது என்பர். கன்று காலிகளின கழுத்து மணியின் ஓசை கொடியது எனக கூறுவர். குயிலும், கடலும், ஒளிவிடும் நிலவும் அத்தகு கொடுமையுடையன என்பர், மதன் ஐங்கணை எய்து துன்பம் தரலால் அவனும் கொடியவன் என்பர். அவர் தூற்றுவதால் அயலாரும் அத்தகையவர் என மொழிவர். தலைவனைச் சேராத தன் மார்பும், ஆற்றாமையில் வருந்தும் தன் நெஞ்சும் கொடியன எனவும் இப பெண்டிர் கூறுவர்.

துயருககு ஏது என இவற்றை இரத்தினச் சுருக்கம் மொழி கின்றது.

தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங் கோகிலத்துக்
கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கு— நின்றரற்று
மன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே
யென்னைக்கு மாரற் கியம்பு [6] (33)

197 கொஞ்சுவர் சிரிப்பர் மடிமேல் விழுவர் வெம்புவர்
குளிர்ப்பர் வெகுள்வா ருருகுவ
ரஞ்சுவர் கடிது விடலன் னவியல் சொன்ன
தசமா னவைநலன் புகலுவா
ரெஞ்சிய வொழிந்தவை சொலார் பெரியர் சொன்னவில்
வேக மனத்துன்ன வணியே
மிஞ்சுத வினானவை யயிந்திர முரைத்தனன்
வயிரப் படைவிறற் குமரனே

மயலுற்ற மாதரின் இன்னும் சில மெய்ப்பாடுகளும் செயலும் தரப்படுகின்றன. இவற்றிற்கு மூலமாக இந்திரனின் அயிந்திரம் அமைந்ததும் மொழியப்படுகின்றது.

கொஞ்சுவார், சிரிப்பார், மடியில் விழுவார், விம்முவார், ஆறுவார், கோபமுறுவார், உருகுவார், அச்சமுறுவார், விரைவாகத் தூதுசெல்ல விடுக்கப் படுவனவாகக் கூறப்பட்ட எகினம் முதலிய பத்தினைப் போற்றுவர். இவை யொழியப் பிறவற்றைப் பெருமையுடையவர் கூறமாட்டார்கள் சொல்லால் கூறுவதற்கு அப்பாற்பட்ட வேகமுடையதாக மனத்தின் இயல்பு மிகுவதால் அவை கூறப்பட்டது. அயிந்திரத்தில் அவற்றை வச்சிராயுத முடைய இந்திரன் உரைத்தான்.

'ஒழிந்தவை சொலார்' எனப்பட்டதால், எகினம் முதலிய பத்து ஒழியப் பிற கூறப்படா என உணர்த்துவதாகக் கொள்ளலாம். அல்லது, மயலுற்ற மாதரின் பிற செயல்கள் பெருமையுடையோரால் கூறப்படா எனக் கொள்ளலாம். அவ்வாறு கூறின் அவை மனம் பொருந்தும் இயல்புடையனவாக அன்றி வெறும் அலங்காரமாகவே மிஞ்சும் என்பது எண்ணம் போலும்.
(34)

வேறு

198 தீதில் பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவைசொ றெரிவையே
யேத மேயகல் பேரிளம் பெண்ணெனப் பொன்
மாதர்கள் பருவமே

ழோது கடன்மணி கதிர்நிலாத் துரியோத
னாதிகள் சமரநா
ணீதி வள்ள லறத்தெண் வருட
நிலைத்த மற்ற வடக்குமே

மகளிர்ப் பருவம் ஏழும், அவர்க்குரிய வயதும் உணர்த்தப்படு கின்றன.

நீதில்லாத பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, துன்பங்கள் நீங்கிய பேரிளம் பெண் என மாதர்பருவம் ஏழாம். அவர்க்குரியதாகக் கூறத்தக்கன, கடல், மணி, கதிரவன், மதி, துரியோதனன் முதலியோர் செய்த பாரதப்போரின் நாட்கள், நீதியுடைய வள்ளல்கள், அறங்கள் முதல் எட்டு வருடம் என்பன. இடையே வந்த பிற ஆண்டுகளையும் அடக்கிக்கொள்க.

இரத்தினச் சுருக்கமும், இச்செய்தியை ஓரளவு இதே அமைப்புடன் மொழிகின்றது.

வாரிமணி வெய்யோன் மதிபார தம்வள்ளல்
சீரி லறம்வளர்க்குஞ் செய்கைதா—னாரிகேள்
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
வீதெழுவர் தம்பருவ மெண் (40)

இங்குக் கூறப்பட்ட தொகைப் பொருட்களின் அடிப்படையில் வயது கணிக்கப்பட வேண்டும். கடல் ஏழு—உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என. இது பேதையின் பருவம். மணிகள் ஒன்பது-கோமேதகம், நீலம், பவளம், புட்ப ராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என. இது பெதும்பையின் பருவம். கதிர் எனப்படும் ஆதித்தர் பன்னிருவர். தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித் துரு, துவட்டா. இது மங்கையின் பருவம். சந்திரகலை பதினாறு. அல்லது பிரதமை முதல் அமாவாசி அல்லது பௌர்ணமி வரை யுள்ள திதி பதினைந்து கொள்க (பார்கச. 2-உரை). இது மடந் தைப் பருவம். பாரதப்போர் பதினெட்டு நாளளவும் நடந்ததன் அடிப்படையில் அரிவையின் பருவம் கணக்கிடப்படும். வள்ளல்கள் இருபத்தொருவர் (பார்க்க. 502, 503). இது தெரிவையின் பருவம். அறங்கள் முப்பத்திரண்டு (பார்க்க. 50. உரை). அது முதலான எட்டு வருடங்கள், அதாவது நாற்பது வரை பேரிளம் பெண்,

இவ்வாறு பருவ வயதைக் கணித்தல் வியப்பாகவும் புதுமையாகவும் உள்ளது. உலா பற்றிப் பாட்டியல்கள் பேசும்போது பருவத்தை மொழியும். நிகண்டுகளும், தொகையகராதிகளும் இச் செய்தியை அமைப்பதுண்டு அங்கெல்லாம், இன்ன ஆண்டு முதல் இன்ன ஆண்டுவரை இப்பருவம் என்ற முறையமைவதால், பிரபந்தத்திரட்டின் பருவநிலையிலிருந்து சிறிது மாற்றம் அமைகின்றது. "ஐந்து முதல் ஏழளவும் பேதை, எட்டு முதல் பதினொன்றளவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவும் மங்கை, பதினான்கு முதற் பத்தொன்பதளவும் மடந்தை, இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை, இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும் தெரிவை, முப்பத்திரண்டு முதல் நாற்பதளவும் பேரிளம் பெண்"- (பக். 152, தொகையகராதி,கழகம்).

(35)

வேறு

199 தாய ருளடி யாள்பணி
யாய வழகு கமலமான்
றூய பொறுமை யவனிமான்
மேய கலவி வேசையே

பெண்டிரின் பல பண்பு நிலைகட்கு ஒப்புமை கூறப்படுகின்றது.

அன்பு செய்வதில். தாயரைப் போன்றும், பணிபுரிவதில் வீட்டிலுள்ள அடிமை போன்றும், அழகு நிலையால் தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போன்றும், தூய்மையான பொறை காரணமாகப் பூமாதேவி போன்றும், கலவி யின்பம் அளித்தலில் விலைமகள் போன்றும் அமைகின்றாள். (36)

வேறு

200 காலைதனி லெழுதல் காணாம லின்புறுதன்
மாலை முழுகி மனையடைத லுற்றாரோ
டேலவுண லுயிரோம்பிக் காகம்போ லாவார்
மாலாற் கருவா லணிகுன்றுவா ரிழையோர்

பெண்ணின் பழக்க வழக்கமும் தோற்ற வேறுபாடும் இயம்பப் படுகின்றன.

விடியலில் துயில் நீங்கி எழுதல், சோலையிலும், பிறவிடத்தும் யாரும் காணாத நிலையில் இன்பம் துய்த்தல், மாலையில் நீராடல், வீடு சென்று சேரல், உற்றாருறவினருடன் உணவுண்

ணல், விருந்தளித்துப் பல்லுயிர் ஓம்பல், காகம் போன்று பகுத் துண்டு இணைந்து வாழ்தல், காம மயக்கம் காரணமாகவும் கருவுறுதல் காரணமாகவும் அழகு குறைதல் என்பன இழைகள் அணிந்த பெண்டிர் இயல்பாம். (37)

வேறு

201 மல்லிகை கொன்றை தும்பை வாய்ச்சி கோங்கலரி பிட்சி
குல்லை சண்பக மணிச்சங்கு குங்குமம் பாரி சாதம்
முல்லை செவ்வந்தி தாழை முளரி பாதிரி யசோகம்
மல்லி மந்தாரம் புன்னை நந்தியா வருத்தம் பச்சை

202 குராவேல மயிலை யாத்தி குடமுல்லை பவள மல்லி
மராமருக் கொழுந்து நீலோற் பலமகிழ் கழுநீர் சந்தம்
பராய்மலை யலரி பூங்கற்பகஞ் சிறுகரந்தை நீபம்
விராய குருக்கத்தி தேக்கு மென்மையர்த் தரிக்கு மாலை

பெண்டிர் அணியும் மலர்மாலைகளின் பட்டியல் இது.

மல்லிகை, கொன்றை, தும்பை, இருவாட்சி, கோங்கு, அலரி, பிச்சி, குல்லை, சண்பகம், நீலமணி போன்ற சங்குப்பூ, குங்குமம், பாரிசாதம், முல்லை, செவ்வந்தி, தாழை, தாமரை, பாதிரி, அசோகு, மல்லி, மந்தாரை, புன்னை, நந்தியாவட்டம், பச்சிலை, குரவு, வேலம், மயிலை, ஆத்தி, குடமுல்லை, பவளமல்லி, மரா, மருக்கொழுந்து, நீல நிறமுடைய கழுநீர், மகிழம், செங்கழுநீர், சந்தனம், பரவிய மலையலரி, கற்பகப்பூ, சிறு கரந்தை, வெண் கடம்பு, விரவிய குருக்கத்தி, தேக்கு என்பன மென்மையான மகளிர் அணியும் மாலையாம். (38-39)

வேறு

203 ஏல மிலவங்கஞ் சாதிக்காய் தற்கோல
மிலைபாக்குச் சுண்ணம் பாதிரி கிராம்பு சுக்குக்
கோலிய சாதிப்பத்திரி கற்பூர மிதழிற்
கூட்டி மெல்லுந் திரவிய மன்புறுவார் கள்ளியே
சாலு நாற்றம் விலையி னற்றுயில் பஞ்சணையே
தயங்கு மயிர்ச்சேண மன்னத் தூவியி லாஞ்சயன
மாலமரத் தண்பாய்த் துயிலே மஞ்சமுமா
முகங்கால் வாட்கணுக்கு மஞ்சளுஞ் செம்பஞ்சு
மையுமிடுவார்

மகளிர் மெல்லும் வாசனைப் பொருட்கள், விரும்பும் பொருள், வீசும் நாற்றம், துயிலும் ஐவகைப் பஞ்சனை, முகம் கண் காலுக்கு இடும் பொருட்கள் என்பன விரிககப்படுகின்றன.

ஏலம், லவங்கம், சாதிக்காய், தக்கோலம், வெற்றிலை-பாக்கு-சுண்ணாம்பு, பாதிரி, கிராம்பு, சுக்கு, வகுக்கப்பட்ட சாதிப்பத்திரி, கற்பூரம் என்பனவற்றை வாயிலிட்டுக் கூட்டிச சுவைக்கும வாசனைப் பொருட்களால் இன்பம் அடைவரீ. கள்ளிப் பாலின் நன்மணம் பொருந்துவர். விலை கூறுதற்கரிய நல்லுறக்கம் கொள்ளுவது பஞ்சாலாகிய படுக்கையில். அதில் விளங்குவன, மயிர்மெத்தை, அன்னத் தூவியிலான படுக்கை என்பன. ஆலமரத்தின் தண்ணிய இலைப்பாய் துயில்வதற்குரிய மஞ்சமுமாம். முகம், கால், வாள்போன்ற கண் ஆகியவற்றிற்கு முறையே மஞ்சளும், செம்பஞுசுக் குழம்பும், மையும் இடுவர்.

பஞ்சவாசம், பஞ்சசயனம் பற்றிய செய்தி இரத்தினச் சுருக் கத்தில் காணப்படுகின்றது.

> தற்கோல மேல மிலவங்கம் பாளிதஞ் சாதியங்காய்
> நற்கூறை நாற்ற மயிற்சேணம் பஞ்சணை நற்றுகிலே
> விற்கூறு தூவி தண்மீப்பாய் சயனம் விளங்குமைந்தாம்
> பொற்கோட் டலர்முலைப் பூவையன் னாரன்பு
> போர்த்தவர்க்கே (33)

இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர் அன்னத்தூவி இவற்றால் செய்யப்பட்ட அமளி பஞ்சசயனம் எனவும் இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் எனும் ஐந்தும் வாசனைப் பொருள் எனவும் அகராதிகள் கூறுகின்றன. (பக். 94, 198, தொகையகராதி). (40)

வேறு

204 கடக மேலீடு கொப்புருக்கு மணிசவடி
கட்டுவட நாகபடந் தண்டொட்டி மிஞ்சி
விடுமணி மோகன மாலை காலாழி பீலி
வெற்றிலை நறுக்கு மயிலடிகான் மோதிரம்பு
ருடராகம் பவள முத்து வச்சிர மரகதம்ப
துமராகம் வயிடூரியங் கோமேத நீல
மடைமாலை வயிரமணி சிறுமணி பெருமணியச்சு
மணிகோ தும்பைமணி நெல்லிக்காய் மணியே

205 ஒன்றுபூக் காப்பூ துத்திப்பூ வெள்ளிப்பூப் பொற்பூ
வுடைமணி சிங்கசரங் கைச்சர மங்கசரமே
முன்சரம் புஞ்சரம் பின்சர மிணைசரம் விடுசர
முறுக்கு தண்டே சிலம்புபாடகஞ் சதங்கைகொலுசு
மின்கிண்கிணி காஞ்சி கலாபந திருக்குப் பருமம்
விரிசிகைபுட்டிகை யரைஞாண் சுட்டிபட்டம்பாளை
பின்சங்கிலி கற்னாவ தங்க மோதிரம் வெண்பிறை சூரியப்
பிறைகுப்பி தொங்கன் மணிவடமே

வேறு

206 பிடிமயிர்க் கவரி
வடிசரப் பணியே
தொடுபதக் கமுமே
மடவியர்க் கணியே

பெண்டிர்க்குரிய அணிகலன்கள் பட்டியல் படுத்தப்படுகின்றன.

கங்கணம், மேலீடு, சொப்புருக்கு, மணிகளுடைய சவடி, கட்டுகின்ற வடம், நாகபடம், தண்டை, ஒட்டியாணம், மிஞ்சி, விடுமணிகள், மோகனமாலை, கான் மோதிரம், பீலி, வெற்றிலை நறுக்குப் போன்றும் மயிலடி போன்றுமுள்ள கால்மோதிரம், புருடராகம் பவளம் முத்து வச்சிரம் மரகதம் பதுமராகம் வயிடூரியம் கோமேதம் நீலம் எனும் நவமணிகள் பொருந்திய மாலை, வைரம், சிறுமணி, பெருமணி, அச்சுமணி, கோதுமை மணி, நெல்லிக்காய்மணி என்பன பொருந்திய மாலை.

ஒன்றிய பொன்மலர், துத்திப்பூ, வெள்ளிப்பூ, மணி பொருந்திய பொற்பூ, சிங்கசரம், கைச்சரம், அங்கசரம், முன்சரம், புன்சரம், பின்சரம், இணைசரம், விடுசரம் எனும் சரப்பணிகள், முறுக்கியது போன்ற தண்டை, சிலம்பு, பாடகம், சலங்கை, கொலுசு, கிண்கிணி எனும் காலணிகள், காஞ்சி, கலாபம் எனும் இடைபணிகள், திருக்கு, பருமம், விரிசிகை, புட்டிகை. அரைஞாண், நெற்றிச்சுட்டி, பட்டம், பாளை, பின்சங்கிலி, கன்னாவதஞ்சம், தங்கமோதிரம், தலையிலணியும் வெண்பிறை, சூரியப்பிறை, குப்பி, தொங்கல் என்பன, மணிவடம்.

கவரிமானின் மயிர், சரப்பணி, பதக்கம் என்பன மகளிர்க்கு அணியாம்,

நிகண்டுகள் பொருட்பெயர்த் தொகுதியில் இத்தகு பல்வகை அணிகளையும் அவற்றின் பல்வேறு பெயர்களையும் வழங்கு கின்றன. அங்கமைவதினும் வேறுபட்ட பல பெயர்களைப் பிரபந்தத் திரட்டு தருவது வளர்ச்சியாகக் கருதத் தக்கதாம்.

இவை, சங்கிலி (வயிரச்சங்கிலி), பூணநூல் (உபவீதம்), தோளணி (வாகுவலயம், அங்கதம், கேயூரம்) விரலணி (ஆழி, வீசம், இலச்சினை, மோதிரம்), அரைஞாண் (இரதனம்), அரைப் பட்டிகை (மனா, அத்து), கழல், சதங்கை (கிண்கிணி, சிறுமணி), பாதகிண்கிணி (பரிபுரம், நூபுரம், பரியகம்), பாதசாலம் (கால் மணிவட்டம), தெய்வ உத்தி (திரு), தலைப்பாளை (தொய்யகம்), தலைக்கோலம் (பங்குசம், பிஞ்ஞசம்), நுதலணி (புல்லகம், இலம் பகம, சுட்டி, சூட்டு, வநதிகை) கொப்பு (வாளி), தோடு (தாடங் கம), பொன்னோலை (மாழை, கொநதளம), செவிமலர் (கன்னா வதஞ்சம் கன்னா வதங்கம், கன்னப்பூ), கொடி (பெருஞசூட்டு, வள்ளிகை), முலை வடம் (ஆரம், பதக்கம், கண்டிகை, மாலை, கோவை, காசு, காழ், தாமம், கோவை, மாலை, இழை, சரம், கலாபம்), வளை (சங்கு, தொடி, சூடகம், சரி, கன்று, குருகு வண்டு), பிடிகம், கங்கணம் (கடகம், கடையம், கண்டிகை) மேகலை (காஞசி, கலாபம், பருமம், விரிசிகை, கலை), சிலம்பு (பரிபுரம், அரவம், அரி, தளை, ஞெகிழி), பாடகம் (பாதகடகம்), பரியகம் (சரி), கிண்கிணிமாலை (குரல், தார்), சரி மணிக் கோவை (கலாபம், தோரை), கடைபபுணர்வு (கடை, கயில், மடை), கிம்புரி (கோளகை, தாங்கி, வைரம்), கேவணம் (குழி வட்டம்) எனப் பலவாம் (பக் 537-551, ஆசிரியநிகண்டு, தஞ்சை சரசுவதி மகால், 1975). (41-43)

வேறு

207 மடவியர்க் குவமை
தொடுமியற் றொகையி
னடைவுசொற் றனமா
ணுடைமைசொற் றிடுவாம்

பெண்கட்குக் கூறியது போன்று ஆணுக்குக் கூறுவேன் எனும் ஆசிரியர் கூற்று இது.

பெண்டிருக்குரிய உவமைகளை, தொடக்கம் முதல் இவ்விய லின இப்பகுதி வரைக் கூறினேன். இனி ஆடவர்க்குரிய உவமை களைக் கூறுவேன்.

பிரபந்தத்திரட்டுக கூறிய உறுப்புகட்கு, வேறு சில நூல்கள் உவமை அமைக்காமை காணப்பட்டது போன்றே, இந்நூல் விட்ட சில கூறுகட்கு உவமை அமைக்கும் பாங்கும் காணப்படு கினறது. ஏற்கெனவே சுட்டியபடி, கொங்கைக் கண்ணுக்கு நீல மணியை உவமையாக்கல், திருவேங்கடையரின் உவமான சங்கிர கத்தில் (8) அமைகின்றது. அவிழ்ந்த கூந்தலுக்கு அகத்திக் காயை அறுவகை இலக்கணம் உணர்த்துவதும் முன்பு சுட்டப் பட்டது. அவ்வாறே நாடிக்கு, சிறுமாங்கனியையும், ஆடிக் காம் பையும் அந்நூல் கூறுமாறும் கண்டோம்.

மென்தோட் பேதைதன் முதுகினை வெருகந்
தளிரெனச் சாற்றலும் தக்க இயல்பே (82)

என, முதுகுக்கு உவமை வகுத்தலும் அந்நூற்கே உரியதாம். நெற்றியில் மகளிர் அணியும் திலகத்திற்கு, உவமான சங்கிரகம் மட்டுமே உவமை கூறும்.

வகுத்த நுதலி லிடுந்திலக மானுந் தினக ரோதயமுஞ்
சகத்துக் கிறைவர் நுதற்கண்ணுந் தயங்கு நாக ரதினமே
(24)

நூல்களிடையே காணப்படும் இவ்வேறுபாடுகள், ஆசிரியரின் தனித்தன்மைககுச் சான்றாக அமைகின்றது. (44)

வேறு

208 கண்ணகங்கை யுந்திமுகம் வாய்சரணங் கஞ்ச
மெண்ணுமுக மாமதியு மேறுதுடி பம்பை
நண்ணுமலை தூணெழுந றும்புயங்கண் மீசை
விண்ணுலவு மீட்டிகணை வாங்குசமு தாடே

ஆடவனின் உறுப்புகள் சிலவற்றிற்கு உவமைகள் சுட்டுகின்றார்.

கண், உள்ளங்கை, வயிறு, முகம், வாய், பாதங்கள் என்பன தாமரை; எண்ணத் தகுந்த முகம், சிறநத நிலவும், இடியோசை யுடைய துடி, பம்பை எனும் கருவியுமாம். மலை, தூண் என்பன எழுச்சியுடைய நறிய தோள்களாம். மீசை, விண்ணில் 'செலுத் தப்படும். ஈட்டியையும், கணையையும் வளைந்த படைக்கலத் தையும் ஒக்கும். இவை ஆடவர்க்குரியன.

பெண்டிருக்கு உவமைகளைக் கூறும் இரத்தினச் சுருக்கம், உவமான சங்கிரகம் போன்ற நூல்கள் ஆடவருக்கு உவமை வகுக்

காதே அமைந்து விடுகின்றன. ஆயின், தண்டபாணி சுவாமி களின் அறுவகை இலக்கணம், ஆடவருக்குப் பொது உவமைகளை வகுப்பதோடு, பெண்டிரின் உறுப்புவமை கூறுமிடத்து ஆங் காங்கு ஆடவருக்கும் உரைத்துச் செல்கின்றது.

கண்ணிற்கு, 'போர் விடைக் கணனும் புருடர்க்குரியவே' (21) எனகிறது. முகததிற்குச் சந்திரனும், தாமரையும் கூறுவது இரு பாலருக்கும் பொது எனவும் (20) கூறுகின்றது. பிரபந்தத் திரட்டு சுட்டாத புருவததுககு, 'விற்பொரு புருவம்' (20) எனவும், 'காகமுக கென்ன கவின்தரு புருவம்' (21) எனவும் உரைக்கின்றது.

பிரபந்தத்திரட்டுப் போன்றே, தோளுக்கு மலையை இணை யாககுவதுடன், மார்பினைப் பாயல் எனவும் சுட்டுகின்றது.

மலையென எழுவன வழங்கும் தோள்களும்
பாய லாமென படர்தரு மார்பமும்
காளையாக குரிதகெனக் கழறினர் கற்றோர் (33)

அடிக்குச் செந்தாமரையையும், கால் உகிருக்கு மதியைக் கூறுவதும், எல்லோருக்கு மன்றி தெய்வத் தன்மையுடையவருக்கு ஏற்கும் என்பதும் (40) அந்நூலின் எண்ணமாம். (45)

209 வாய்கனிபன் முத்துவரி வண்பவள மென்சொ
லாயினிமை கொண்டபொரு ளியாவுமுனி சொல்லே
சாயலிடி சிங்கமொடு தும்பிபகர் சொல்லே
சேயவுரு மேகமரி யானைபுலி யாளி

வாய், பல், சொல், சாயல், குரல் என்பனவற்றின் உவமைகள் தரப்படுகின்றன.

வாய், கனியாம். பல், முத்தின் வரிசையும், வண்மையான பவளமுமாம் (மெல்லிய சொல்லை யுடையவளே). இனிமைப் பண்பு பொருந்திய பொருட்கள் யாவற்றையும் வெறுககும் படி யாகச் சொல் அமையும. சாயல், இடி போன்றும சிங்கம் போன் றும யானை போன்றும் அமையும் எனச் சொல். அழகிய உருவம், மேகம், சிங்கம், யானை, புலி, யாளி போன்றும் அமை யும். (46)

210 வேகமது மாச்சரப மெய்ககருடன் வாயு
வாகுமனங் கோபமழல் சேற்கொடையைந் தாரு
வேகமணி யான்கமலஞ் சங்கநிதி வள்ள
லாகுமைவர் மான்மகன்பொன் னோன்முருகன் வேளே

வேகம், கோபம்,கொடை பற்றியமைந்த உவமை நிலைகள கூறப்படுகின்றன.

வேகத்திறகு உவமை, சரபப் பட்சி, கருடன், காற்று, மனம் என்பனவாம். கோபத்திற்குத் தழல் ஒப்பு. கொடைச் செயலுக்குக் கற்பகமரம், மேகம், சிந்தாமணி, காமதேனு, பதுமநிதி, சங்கநிதி, வள்ளல்கள் என்போர் உவமை. பொதுநிலையில், திருமால, பிரம்மன், குபேரன், முருகன், மன்மதன் என்னும் ஐவர் இணையாம்.

கொடைக் கரத்திற்கு இத்தகு உவமைகளை அமைத்தல் அறுவகை இலக்கணத்திலுமா உண்டு.

மேகமும் நிதிகளும் விண்ணூர்த் தருவும்
சிநதா மணியும் தேனுவும் தெய்வமும்
தினநதொறும் கொடுப்போன் செங்கைக கிணையே (35)

பொது உவமைகளை, மக்களின் இயல்புக்கேற்ப அறுவகை இலக்கணம் பிரித்து அளிக்கின்றது. தவத்தோருக்கு இணை வசிட்டன், அகத்தியர் போன்றோர் (11). அந்தணரைப் புகழும் போது கூறத்தக்கவர் இநதிரன், நான்முகன் ஆகியோர் (12). முறைவழாத அரசருக்கு இராமன், தருமனைக் கூறல் தகுதி (13). வீரருக்கு வீமனையும், விசயனையும் கூறல பொருத்தம் (14). வணிகருக்குக் குபேரனையும் (15), வேளாளருக்குச் சடையன் போன்றோரையும கூறுக (16) என்கின்றது.

மிடியறக் கொடுக்கும் வீறுடை ஒருவனைக்
கன்னனா தியர்க்கிணை கழறலும் அனறி
அரனஅரி குகவேள் அனையான் எனினும்
முத்தமிழ்ப் புலவோர் முனியா ரன்றே (17)

எனும் இதன்கருத்து பிரபந்ததிரட்டை ஒத்துச் செல்கின்றது. இரத்தினச் சுருக்கமும் இவ்வாறே ஐவகை நிதிகளையும் கடவுள் சிலரையும கூறுகினறது (53). (47)

211 கன்னனொடு சிவகன் முதறபெயாக ளாகு
மன்னவய னும்பெறு மழித்தலர னொப்பா
மன்னுசன்கை வச்சிரத்தண் ட ஞசெகங்கண் மாாபா
முன்னிய கணாடியொடு முண்டகமு மாமே

ஆடவர் பெறும் பெயர்களும, செயல்பற்றி ஒப்புப் பெறும் இறை வருமு, கை, மார்பு ஆகியவற்றிறகு உவமையும் கூறப்படுகின்றன.

கனனன், சிவகன் முதலிய பெயர்களைப் பெறுவர். நிலை பேறுடைய செயலகள பறறி அயனையும், அழிக்கும் ஆற்றல் பற்றி அரனையும ஒப்பர். நிலைததவியல்புடைய மனிதனின் கை, வச்சிரத்தண்டினை ஒப்பாகக் கொள்ளும். உலகங்கள் மார்பாம். அதறகுக் கண்ணாடி, தாமரை எனபனவும் உவமை.

மார்புக்குப் பாயல் உவமை எனும் எணணம் அறுவகை இலக்சணததில (33) அமைகின்றது. ஆடவர்க்குரிய சிறப்பு உவமை என இரத்தினச் சுருக்கம கூறுவது சீவகன கன்னன் போன்றோரையும் குறிப்பிடுகின்றது.

திருமான முருக னளகேச ரிநதிரன சேண முகிலே
பொருமாரன் வீமன விசயன் மெயக்கன்னன்புகழத்தருமன
வருமான சிவகன் மூவேழு வள்ளல வனச நிதி
தருமாமணி சங்கந் தேனுவைப் போலவுஞ சாற்றுவதே
(53) (48)

212 சொன்னமட மாதருவ மானமவை சொற்ற
னன்மையல வேசிலவு நன்மைபெறு மூரு
வன்னவயி ரத்தினுறு துணைநிக ராகு
மன்னிரதமி யானைபரி சேனையவ ராமே

மாதாக்குரிய உவமை நிலையும அவற்றில் சில ஆடவர்க்காகு மாறும் உரைக்கப்படுகின்றன.

ஏற்கெனவே கூறிய மடவார்க்கு உரிய உவமைகள், ஆடவருக்குக் கூறுவது நன்றன்று. ஆயின் அவற்றில் சில நன்றே பொருந்துவனவாம். உருவம், பல வண்ணங்கள் காட்டும் வயிரம் பொருந்திய துணை நிகர்க்கும் என்பது, தேர், யானை, பரி, சேனை எனும நாற்படையுடைய மன்னவருக்காம். (49)

வேறு

213 மூவா றெனும்படை யெடுப்பர் முனைமேலே
மூவாத வெண்குடை பிடிப்பர் விருதுள்ளார்
மூவாறு காவிய மளப்ப ரறிவாலே
மூவாத வேண்மதன நூலறிவர் மாதோ

ஆடவரின் ஆற்றலும் செயலும் தரப்படுகின்றன.

வேல், வில், வாள போன்ற பதினெண் படைக்கலங்களையும் எடுப்பர். போர்க்களத்தில், மன்னனின் அழியாத வெற்றியைக் கூறும் வெண்கொற்றக் குடையை ஏந்துவர். பல விருதுகள் பெறுவார். பதினெட்டுக் காவியங்களையும் கற்றுக் கரை காண்பர். அறிவுகாரணமாக, என்றும மூப்படையாத காம வேளின் மதன நூலாகிய காமத்தை அறிவா.

இங்கமையும் மூவாறுபடையை, வில், வேல், வாள், மழு, வச்சிரம், அங்குசம, பாசம், தணடு, தோமரம், சூலம், சக்கரம், சங்கு, கலப்பை, பிரம்பு, குத்துக்கோல், கவண், அம்பு, கேடயம எனக் கொள்ளலாம.

பதினெண் புராணம, பதினெண் உபபுராணம் என்பதனை ஒப்பப் பதினெண் காவியமும இவர் சுட்டுகின்றார் எனலாம். (50)

வேறு

214 அரிவையாகள செய்செயலு மாவர்நெறி நிற்பார்
மருவுசம பேதமொடு தானமுறு தண்டம்
புரிவரெறிந் தெய்துகுத்தி வெட்டுவர் புகுந்தாற்
றுருவனென வாழ்வர்நரர் சொல்லியல்க ளாமே

ஆடவர் இயல்பும் செயலும் கூறப்படுகின்றன.

காம மயலுற்றுப் பிரிவாற்றாமை பற்றி வருந்தும் மாதர்க்குரியனவாக முன்பு சொல்லப்பட்ட செயல்கள் இவருக்கும் ஆகும். நன்னெறியில் நிற்பார்கள். சாம பேத தான தண்ட முறைகளை கைப்பிடிப்பர். வேலெறிதல், அம்பு எய்தல், ஈட்டியால் குத்துதல், வாளால் வெட்டுதல் எனும் செயல்கள் புரிவர். மனவுறுதி கொண்டு ஒரு வழிச் சென்றால், துருவன் போனது வாழ்வா. மனிதருக்குரியனவாகச் சொல்லத்தகும் இயல்புகள் இவை.

துருவன், தவம் செய்தார்க்கு எல்லாச சிறப்பும் உண்டாகும் என்பதற்குச் சான்றாக அமைபவன்.

ஒப்புமை கூறுதல், வேறுபாடு மொழிதல், இவையெல்லாம் தருவேன் எனல், ஏவியதைச் செய்யவில்லையெனில் தண்டிப்பேன் எனல்-என்பன சாம, பேத, தான, தண்டமாம. (51)

வேறு

215 பகைக்கு நஞ்சரி கால னனலிடி
நகைக்கு வெண்மதி நன்முத்த மாலையே
மிகைக்கு மேருவுந் தீபமு மாவரே
தொகுக்கு நண்பினிற் சொலலைவ ராவரே

ஆடவரின் பண்புக்கும் இயல்புக்கும் ஏற்ப வெவ்வேறுபட்ட உவமைகள் இங்குத் தரப்படுகின்றன பகை, நகை, மிகை, நட்பு என்பன பொதுப் பண்பாம்.

பகைக்கு, நஞ்சு, சிங்கம, காலன், நெருப்பு, இடி என்பன உவமை. நகைக்கு, வெண்ணிலவும், முத்து மாலையும் ஒப்பு. மேன்மைக்கு, மேருவும விளக்கும் இணையாம். சேருகின்ற நட்புக்குப பஞ்சபாண்டவரைச் சொல். (52)

216 அங்கதஞ் சரப்பணி பதக்கமரை நாணே
தங்கமகு டங்கடக மிஞ்சிமணி மாலை
தொங்கிய கடுக்கனொடு கண்டிமணி யாழி
பொங்குந ராகம்மணிக ளாம்பிற பொருந்தும்

ஆடவர்க்குரிய அணிகலன்கள் சுட்டப்படுகின்றன.

அங்கதம், சரப்பணி, பதக்கம், அரைஞாண், பொன்முடி, கடகம், மிஞ்சி, மாணிக்க மாலை, தொங்குகின்ற கடுக்கன், கண்டி, மணிமோதிரம் இவை பொருந்துகின்ற ஆடவரது மார்பில் பிறமணிகளும் பொருநதும. (53)

217 உவமைப்பொரு ளுலகினுற் றோருறும் பொருளுக
கவையுளார்க் கொப்ப வமைந்தவன்றி வேறின்றே
யிவைபலவு முவமித்தன முன்னோரியற் படியு
முவமையிலி யாமேசிலவுமுரைத்தனமொண் பொருளாயே

உவமாரூட வியப்பு சார்வியலுக்கு முடிவு உரைக்கப்படுகின்றது.

உவமைப் பொருட்கள் உலகினிலுள்ளவையும், அவற்றைப் பெற்றவருக்கும், அப்பொருளுக்கும், ஒபபுமையுடன அமைந்தனவே யன்றிப் பிறிதன்று. இங்குக் கூறிய பல உவமைகளும் முன்னோர் நெறிபபடி மொழிநதனவாம் அங்குக் கூறாதன சிலவற்றிற்கு நானே ஒள்ளிய பொருட்களை ஒப்புமையாகக் கூறினேன். (54)

ஆறாவது

# விசேடவணி வியப்பு சார்வோரியல்

பல கடவுளருக்கும் உரிய சிறப்பும் தனித்தன்மையுமுடைய பொருட்களை வகுத்துக் கூறுவதால், இவ்வியல் 'விசேடவணி' எனும் பெயர்ப்பொருத்தம் கொள்கின்றது.

பாட்டுடைத் தலைவராகப் பிரபந்தத்தில் பல கடவுளர் அமைகின்றமை பற்றி, அவருக்குரிய சிறப்பு உடைமைப் பொருட்கள் கூறப்படலைப் பொருத்திக் கொள்ளலாம். பாட்டுடைத் தலைவராக அன்றியும் சில பிரபந்தங்களில் கடவுளர் இன்றியமையா இடம் பெறலை மஞ்சரியின் இறைவழிபாட்டுக் கூறும், பிள்ளைத் தமிழின் காப்புப் பருவமும் பிறவும் உணர்த்துகின்றன.

இரண்டாமியலான புறநடையியலில், பல கடவுளரைக் கூறி, அவற்றுள் ஆனைமுகனும் மாரனும் பொதுவாகப் பிறர், பிரபந்தம் ஒன்றற்கொருவராக அமைப்பார் என்பதும்(82-84), இவ்வியலில் விரிக்கும் வாய்ப்பளிக்கின்றது எனலாம்.

நிகண்டுகள் கூறும் வானவர் வகையின் விரிந்த வடிவமாக இது அமைகின்றது எனல் பொருந்தும்.

எழுபத்தொன்பது விருத்தங்களில் இப்பகுதி அமைகின்றது.

218 மலைநதி நாடூ ரணிபரி தோலே கொடிதேரே
நிலைமுழ வேறே குடைபடை வேலே குணநாளே
யலர்முறை மேலே மனைமக வூணே கறியார்வே
கலைவரி பூணே நடம்வினை தானே யுளர்மேலார்

வேறு

219 அரனொழி யனையவர்
நிரநிறை பெறுகுவர்
வருமிவை யணிகுறை
யரியவ ருளர்சிலர்

கடவுளருக்கு வகுக்கப்படும் விசேடவணி வகைகளும், அவற்றைப் பெறுபவரும் பற்றி இப்பாடல்கள் கூறுகின்றன.

மலை, நதி, நாடு, ஊர், அணியும் பொருள், குதிரை, யானை, கொடி, தேர், உறுதியான முரசு, ஏறு, குடை படை, வேல், குணம், நட்சத்திரம், மலர், பிற கடவுளரோடு கொள்ளும்முறை, அதன்மேல், மனைவி, மக்கள், உணவு, உண்டகறி, ஆடி, அணி யும்பூண், நடனம், செயல் என்பன மேன்மையுடைய தெய்வங் கட்கு உண்டு.

அரன் தவிரப் பிறதெய்வங்கள் இவற்றை நிரலாகவும் நிறைவாகவும் பெறுவர் வருவனவற்றில் அருமையாகச் சில ருக்குச் சில அணிகள் குறைந்தமைகின்றன.

நிகண்டுகள், வானவர் வகைபற்றிப் பேசும்போது, பெரும் பாலும் அவ்வவ் இறைவர்க்குரிய மறுபெயர்களைக் கூறுகின்றன. அருகிக் கொடி, ஊர்தி போன்றன கூறப்படுகின்றன. ஆயினும் பிறசில விசேட அணிகளை உணர, அவர்களின் பலபெயர்கள் துணையாக அமைவது உண்டு.

அறுவகை இலக்கணம், அணியிலக்கணப் பகுதியில், உடைமை யியல்பு எனும் தலைப்பின்கீழ் முருகன், சிவன், கணபதி, மால், மதனன் போன்ற சிலருக்குச் சுருக்கமாக இத்தகு விசேட வணிகளை வகுக்கின்றது இந்நூலே அணியிலக்கணப் பகுதியில் இத்தகு செய்திகளை இணைத்ததாகத் தெரிகின்றது.

இரத்தினச் சுருக்கம் மன்மதனுக்குரிய மாலை கணை முதலியவற்றைத் தருவதுடன், ஈற்றுப் பகுதியில் சிவன்பெருமை, விநாயகன் பெருமை, முருகன் பெருமை, திருமாலின் பெருமை, பிரமன் பெருமை எனச் சுட்டுவதில் விசேட அணிகள் சில விளக்கம் பெறுகின்றன.

உவமான சங்கிரகம், மதனனுக்கு மட்டும் இத்தகு செய்தி களை மிகவிரிவாக அமைக்கின்றது. (1-2)

வேறு

220 கங்கைநதி யாரறுகு வெண்டலையோ டென்புறு
கரந்தையலர் தும்பை யரவே
திங்களொடு கூவிளை யெருக்கிதழி மாலையரி
யேறுதிகழ் செம்பொன் வரைவிற்
றங்குவன நீடுகயி லாசமிட நாணரவு
தந்திவிட கொள்மருப்
பங்கமுறி ராயிரம ரிக்கணைவை யம்புவன
மாழிமதி பானுவிவையே

அரசனுக்குரிய விசேட அணிகள் சில கூறப்படுகின்றன.

கங்கை நதி, ஆத்தி, அறுகு, தலையோடு எலும்பு, கரந்தை மலர், தும்பை, பாம்பு, திங்கள், வில்வம், எருக்கு, கொன்றை மாலை யுடையார். திருமாலை ஏறாகப் பெற்றார். ஒளிவீசுகின்ற பொன்மலையாகிய மேருவை வில்லாகக் கொண்டார். தங்குவது சுடுகாடு (திருவாலங்காடு). உரிய இடம் கைலாசம். வில்லுக்கு நாணாக அமைந்தது ஆதிசேடன் என்னும் பாம்பு யானையுருக் கொண்டுவந்த கயாசுரனை வென்றவர். திருமாலை அம்பாகக் கொண்டவர். தேராக அமைவது உலகம். அத்தேரின் சக்கரமாக அமைந்தன கதிரும் மதியுமாம்.

பிங்கலம் தரும் சிவபிரான் பெயர்களில், கங்காதரன், மானிட மேந்தி, குன்றவில்லி, கைலையாளி, கொன்றை மாலையன், சசிதரன் என்பன (94), சில இயல்புகளை விளக்கி நிற்கின்றன. இரத்தினச் சுருக்கத்தின்,

கங்கையும் வில்வமு மென்பு மராவுங் கடுக்கையும்வெண்
திங்களும் தும்பையு மாரு மெருக்குந் திகழறுகும்
பங்கய னன்னத் துருவாகி நாடிப் பறந்தறியா
வெங்கள் பிரான்பவளச் சடைமீ தணிந் தேர் பெற்றதே
(60)

எனும் பாடல் பொருளொப்புமை கொள்கின்றது. அறுவகை இலக்கணம் ஒரே பாடலில் சிவன் விசேட அணிகளைத் தொகுத்துத் தருகின்றது.

கொன்றையும் தும்பையும் கொக்கிறகு இளமதி
கங்கை யாதிய கவின்தரு சடிலமும்
வெண்டலை என்பு விடப்பணி ஏனக்

கொம்பு கூர்மத்து ஒடுஇவை குலவி
மார்பு மழுமான் வளர்கனல் சூலம்
கபாலம் தோய்தரு கைசளும் கரித்தோல்
புலித்தோ லாதியும் பொலிநத வெண் ணீறும்
முக்கணும் குயில்பொரு மொய்குழல் பாகமும்
இடபமும் களிறும் இவர்த லாதிய
பிறவும் பொன்மலைப் பிஞ்ஞகற் குரித்தே (47) (3)

221 மின்னு பவளச் சடைசனற் கதிர்மதிக் கணுடைய
வெம்புலியோ ராயிரமருப்
புன்னு பரிசத்தமி விடங்கமுறு போர்வைகரி
யுற்றகொடி தானும்விடையே
மன்னிய வோரைந்து முகமைந் திருகரங் கையில்
வாட்கழுமுண் மெய்த்துடியுளார்
துன்னு மயன்மாலு மறியாதமுடி சென்னியுளர்
சொல்லுமதனைப் பொடிசெய்தோர்

சிவனின் அணிகளும் இயல்பும் தொடர்கின்றன.

மின்னுகின்ற பவளம் போன்ற செஞ்சடையினர். கனலும் கதிரும் மதியுமான கண்ணுடையவர். உடையாக முனிவர் ஏவிய புலியின் தோலை உடுத்தவர். ஆயிரம் மருப்பு உன்னுபரி சத்தமி. அழகிய போர்வையாகக் கரியின் உரியை உடையவர். கொடியாக அமைந்ததும் இடபமே. நிலைபெறும் ஐந்து முகத்தினர். இருகரம். கையில் ஒளியுடைய சூலம், துடி என்பன உடையார். திருமாலும், பிரம்மாவும் அறிய இயலாத அடிமுடியுடையவர். காமனை நீறாக்கியவர்.

அடிமுடி தேடிய செய்தியை இவர் 'அயன்மாலு மறியாத முடிசென்னியுளர்' எனக் குறிப்பதனை, 'அடிசென்னி' எனக் கொண்டாலே பொருந்தும்.

இரத்தினச் சுருக்கம், இதனை ஒத்த சில செய்திகளைத் தருகின்றது.

மின்னும் பவளமுரு செவ்வானும் வேணி மெய்யூர்தியுடன்
துன்னுங் கொடிவிடை யேந்தல் கபாலந் துடிசுடர்மான்
மன்னுங் கொடுங்சதிச் சூலாயுதம் படை மாதவற்கு
முன்னந் திகிரியளிததோன் முடித்தது முறகங்கையே (59)

சிவபிரானின் ஐந்து முகங்களை,

ஈசானந் தற்புருட மகோரம் வாமஞ்
சத்தியோ சாதஞ் சங்கர னைம்முகம் (99)

எனப் பிங்கலம் விளக்கும். மன்மதனை நீறாக்கியதால், காம நாசன் எனும் பெயரும், அடிமுடிதேடிப் பெறாமையால் மாலயற்கரியோன் என்ற பெயரும் இவருக்கு அமைகின்றன. (4)

242 வானமெனும் நாடர் குறட்பேய்த் தகுணிதம் புரிவர்
மங்கைபுணர் தாமதகுணர்
பானுவெயிறைக் கமல மின்முலையை, மாமலர்
பரிந்தவ ணாசியையய
னானதலை மாலுர மகன்கள் மகன்சிகைசெ
யங்குடை பொனண்ட மதுவே
மானையணி தாண்டவ ரழற்படிவர் நூன்மருவு
மார்பர்மறை நூபுரவரே

சிவனின் விசேட அணிகள் தொடர்ச்சி.

வானத்தை நாடாக உடையவர். குறள் பேய்களுடன் இசைக்கிணைய நடனம் புரிவர். தன்னுடலின் ஒருபாதியில் உமா தேவியை இணைத்ததால் தாமதகுண முடையவர். கதிரவனின் பல்லையும், வாணியின் மார்பையும், சிறந்த மலரை அறுத்த தவளின் மூக்கையும், அயனின் தலையையும், திருமாலின் மார்பினையும், மக்களுக்கு மக்களின் தலையையும் சிதைத்தவர் வெற்றிக் குடையாகப் பொன் அண்டத்தைக் கொண்டவர். மானை அணியாக ஏந்தியவர். தாண்டக ஆடல் புரிந்தவர். அயனும் மாலும் தேட சோதிவடிவாக நின்றவர். முப்புரி நூல் அணிந்த மார்பினர். மறையையே காற்சிலம்பாகக் கொண்டவர்.

பிங்கலம், பேயோடாடி, நாரிபாகன், அழலாடி போன்ற பெயர்களால் ஈசுவரனைக் குறிப்பதில் மேற்கண்ட இயல்புகள் சில வெளிப்படுகின்றன. அயன், மதி, வாணி போன்றோர்பால் அமைந்த சிவன் செயல்களை இரத்தினச் சுருக்கம்,

உதிக்குங் கடவுட் கதிரோன்றன் பல்லை யறவுதிர்த்து
விதிக்குந் தலையைத் திருகித் தகர்வரும் வெங்கனற்கு
மதிக்குங்கரமறுத்திந்துவைத்தேய்த்துயர்வாணி துண்டஞ்
செதிக்கும் படித்தள்ளியீமத்துட்டாண்டவஞ் செய்தனனே
(56)

எனத் தருகின்றது.

223 சொன்முயல கற்பத ரழற்கையர் விடத்தை
யமுதுக் கிசைய வுண்ட பரர்காலன்
மனநடுங்க வுதைபாதர் பெறுமாதிரைய ராவர்
மழுநீரி னிறைவர்
மன்னவள ரஞ்சுறு கிருத்தியர் படைக்குறளர்
வன்னமுறு செனனி யுருவா
ருன்னிய பஞ்சக்கரர் மகற்கறியர் பாண்டர
நடத்தாரருக் கணிகளே

அரனின் விசேடவணித் தொடர்ச்சி.

முயலகனைப் பாதத்தின்கீழ்க் கொண்டவர். கையில் நெருப் பேந்தியவர். அமுதம் போன்று விஷத்தை உண்டவா. காலன் மனம் நடுங்கும்படி உதைத்தவர். ஆதிரையை நாளாகப் பெறுவர். மழுவினை ஆயுதமாகத் தாங்கியவர். கங்கை நதிக்குத் தலைவர். மன்னி வளருகின்ற ஐந்து தொழில்கள் உடையவர். குறட்படையுடையவர். வண்ணம் பொருந்திய செஞ்சடையின ரான முனிவா நினைக்கும் சிவாயநம எனும் ஐந்தெழுத்துக்கு உரியவர். சிறுத்தொண்டநாயனாரிடம் மகனைக் கறியாகப் பெற்றவர். பாண்டரங்க நடனம் செய்தவருக்கு உரிய அணிகள் இவை.

பிங்கலம், கறைமிடற்றோன், நீலகண்டன், காலகாலன், பாண்டரங்கன், பூதபதி எனும் பெயர்கள் வாயிலாக மேற்கண்ட இயல்புகள் சிலவற்றைச் சுட்டியது. இரத்தினச் சுருக்கம்,

மாதவர் வேள்வி புரிந்தே விடுத்த வரியரவு
போதகம் வேங்கை மழுமான் முயலகன் பொங்கனலென்
றோதரும் வெம்பகை வீறொழித்தே... (58)

காராழி நஞ்சுண்டு தக்கன்றன் வேள்வி கடிந்தரக்க
னோராத் தலைநெரித்தேசண்டன்வீழ வுதைத்தனனே (55)

எனச் சில புராண நிகழ்வுகளைச் சுட்டுகின்றது.

அணிநிலை மட்டும் பிரபந்தத் திரட்டுக் கருத, இரத்தினச் சுருக்கம் பெருமை உரைத்தலை நோக்கமாகக் கொண்டதால் செயலுக்கு முதன்மையளித்து, முப்புரத்தை நகையால் எரித்தது, அளகேசனுக்குச் சங்கநிதி முதலியன உதவியது போன்று இன்னும் பிற செயல்களையும் இணைக்கின்றது,

சிவனின் ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியம்) சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பன (தமிழ் லெக்சிகன், தொகுதி 4, பக். 240÷).

வேறு

224 ஆனைமுக னாறுமுக னையனொரு வீரபத்திரன்
மோன வயன்மாலை முதலோரும் பிள்ளைகளே
யானமான் மைத்துனனும் வேதன் மருமகனுந்
தானாவர் மற்றோருஞ் சார்ந்த முறையானே

அரசனுக்குரிய மகவு, முறை ஆகிய உடைமைகள் கூறப்படுகின்றன.

விநாயகன, முருகன் ஐயனார், வீரபத்திரன், வைரவன் எனும் ஐந்து முதன்மையுடையவரும் பிள்ளைகள். திருமால் சிவபிரானுக்கு மைத்துனன்; அயனார் மருமகன். பிற கடவுளரும் இதோடு சார்ந்த முறையுடையவர்கள்.

நிகண்டு, சிவபிரானுக்குரிய மக்களைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடாவிடினும், வானவர் வகையில தொடர்ந்து அவரை வைத்துப் பெயர் வேறுபாடுகள் தருவதால் மறைநிலையில் இயையு காட்டுகின்றது எனலாம்.

புராணக் கண்ணோட்டத்தில் கடவுளருக்கு முறைத் தொடர்பு அமைத்தமை, ஒருமைப்பாட்டு நோக்கினையும் வெளிப்படுத்துகின்றது எனலாம்.

'மோனவயன் மாலை' என்பதால் மோனம் உள்ள வயன் (வயிரவன்) எனும் சிறப்புடைய ஐவர் என்பதுடன், மோனனான வயிரவன், அயன், மால் எனும் சிறப்பினர் எனவும் கொள்ள வாய்ப்பு அமைகின்றது. (7)

வேறு

225 ஆனையயில் வேலனயர் பிளளையொரு வீரனரி
யாரணன் மகன்முத லாவே
ஞனமறு மிங்கிவர் கிழத்தியர்கண் மற்றவ
ருரைக்கு மனிதர்ச் சிலர்களே
மேனிலம திற்குலவு மவ்வணிபெ றற்குரியர்
மேலவரை யொன்றும வழியே
வானுலவ வேமொழிது நின்றவட சொற்படி
வகுத்தறிமி னெஞ்சமுறவே

இவ்வியலில் கூறப்படும் செய்தி தொடுத்துச் சுட்டப் படுகின்றது.

ஆனைமுகன், அயில்வேலன், அயனார், வைரவன், வீரபத்திரன், திருமால், பிரம்மா, இந்திரன் முதலாக மன்மதன், குறைவற்ற இவர்களது மனைவியர்கள் முதலியவரைக் கூறுகின்றேன். மனிதர் சிலர்களே, மேனிலத்தோருக்குரிய அணிகள் பெறுவதற்கு உரியவர். மேனிலத்தோரை ஒத்த நெறியே சிறப்புறவே கூறுவேன்; வடமொழியில் அமைந்த செய்தியின்படி மனமுற, வகுத்து அறிமின்.

பிரபந்தத் திரட்டு ஆசிரியர் வடமரபு வழிச் செல்லும் பாங்கினர் என்பதை இப்பாடலின் கூற்று உணர்த்துகின்றது. (8)

வேறு

226 தந்தைமலை நதிநாடு ரணிமுழவு குடையே
தானையுரு விடம்பணியே தன்செயலே யெழுத்து
முந்துபரி வடவை பிரணவ மானைமூல
மோங்குகொடி வாணிரதம் பூதமுட னாகு
முந்துமே றங்குசமும் பாசமுந்தன் கொம்பு
முனைப்படைமுக்குணந்தந்தைமுறையினாமுறையே
வந்தமனை வல்லவையூ ணப்பவகை கறியே
வைத்தகறி பொற்கலை மகப்பே றிலாரே

விநாயகருக்குரிய விசேடவணிகள் கூறப்படுகின்றன.

தந்தையாகிய அரசனுக்குரிய மலை, நதி, நாடு, ஊர், அணி, முழவு, குடை, படை, உருவம், இடம், தொழில் என்பன விநாயகருக்கும் பொருந்தும. அவர் செயல், எழுதுதல், வேசமுடைய குதிரை வடவைத்தீ. யானையாக அமைவது பிரணவ மந்திரம். மூலத்தானத்தில் எழுந்து படரும் ஒலியே தேராக அமைவது; பூதம் போன்ற உடலினர்; பெருச்சாளி முந்துகின்ற ஊர்தியாம். அங்குசமும், பாசமும், தனது கொம்பும் படைக்கலனாம். சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணத்தினன். தந்தையாகிய அரனின் முறைப்படியே பிற கடவுளருடன் முறை அமைகின்றது மனைவி வல்லவை. உணவு அப்ப வகைகள். படையலாக அமைவன அனைத்தும் கறி. பொன்னாடையினர். குழந்தைப் பேறில்லாதவர்.

பிரபந்தத்திரட்டு சிவனை முதலில் கூறிப் பின் விநாயகருக்கு அணிகூறும் முறைமை இரத்தினச் சுருக்கத்திலும் அமைகின்றது. ஆயின் பிங்கலம், காப்புக்கு ஒப்ப, முதலில் விநாயகனை மொழி

கின்றது அங்கு, இறைமகன், ஆகுவாகனன், பாசாங்குச தரன் (93) என வரும் பெயர்கள் மேற்கண்ட இயல்பு சிலவற்றைச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது. அறுவகை இலக்கணம்,

அறுதய கொனறையும் அங்குச பாசமும்
அபபுலிச் சடையும கொம்பும் கனியும்
ஆகுவும் மயிலும் ஆனையும சிங்கமும்
ஆய பரிகளும அளவிலபே ருண்டியும்
மருங்கிற் றோய்வுறும் வல்லவைச் சத்தியும்
பினனும பெரியோர் பேசிய பிறவும்
களிறறு மாமுகக் கணபதிக் குரித்தே (46)

என உடைமைகளை விநாயகருக்குச் சுட்டுகின்றது. (9)

வேறு

227 ஐநதுசர முள்ளவர்பி னாறுமுளர் வேணித்
தந்தையணி யுடபொருட னைபபெறுவர் முக்க
ணெந்தையுறு பூராடர் மாயனுறு சாபஞ்
சிநதியவி நாயகர்சி றப்பிவைக ளாமே

விநாயகர் விசேடவணித் தொடர்ச்சி அமைகின்றது.

ஐந்து கரங்கள் உடையவர். அததுடன் மும்மதமாகிய ஆறு உடையவர். சடையுடைய தந்தையான அரன் அணியும் பொருட்களைப்பெறுவர். முக்கண்ணனான எந்தை சிவபெருமான் பெய் பொருநதியவர். பூராட நட்சத்திரத்தினர். மாயன் உற்ற சாபத்தை நீக்கிய விநாயகரின் சிறப்பு இவைகளாம்.

சாபம் காரணமாகப் பாம்பாகிய திருமாலின் சாபம் நீக்கி உய்வளிததவர் விநாயகர் எனப் புராணம் கூறும்.

ஐங்கரன், மும்மதன், முக்கண்ணன் எனும் பெயர்களைப் பிங்கலம போன்ற பல நிகண்டுகளும குறிப்பிடுகின்றன. 'இந்துமுடி' எனக் கயாதரன் குறிபபதில், தந்தையின் அணி இவருககானமை தெரிகின்றது. இரத்தினச் சுருக்கம் இலக்கிய நயம் மிளிர, விநாயகன் பெருமையை மொழிகின்றது.

வண்டார் மதப்பிரச வல்விலங்கு கிம்புரித்தூண்
டண்டார் புழைச்சிந் துரத்தடக்கைத்—துண்டக்
கழைமருப்புச் செங்கட் கறையடிவெங் கோபக்
குழைசெவி நால்வாய்க்குஞ் சரம் (67) (10)

வேறு

228 ஆறுமலை யாறுமுக மானநதி
நாடதுகு றிஞ்சிநக ராறுமணியூர்
தேறியகு றிஞ்சியொடு நீபமித
ழித்தொடைதி றற்குதிரை வேதமதமே
யூறுகரி யப்பொருள கொடிக்கிசைதல்
கோழிவைய முற்றமன வேகமுழவே
சீறியத டாரிமயி லேறசமு
மானகுடைசெ கம்படைகி ளர்நதவயிலே

முருகனுக்குரிய உடைமைகள் கூறப்படுகின்றன.

பரங்குன்று முதலிய ஆறு மலைகள. ஆறுமுகமுடையவர். மானசரோவர் எனபது நதி. நாடு குறிஞ்சி. நகர் ஆறு ஊர்கள. குறிஞ்சி, வெணகடம்பு, கொன்றை என்பன அணியும் மாலை. வலிமையுடைய குதிரை வேதம். மதம் ஊறுகின்ற யானை வேதப்பொருள. கொடியில் இசைவது கோழி உருவமாம். தேராக அமைவது மனத்தின் வேகமாம. வலிமையுடைய முழவு, ஒலிக்கின்ற தடாரி. ஏறாக அமைவன மயிலும் ஆடுமாம். உலகமே குடை. படையாக அமைவது வேல.

'ஆடும் யானையு மயிலு மூர்தி' (111), 'அயிலவேலரும்படை கொடிசேவ லாகும' (112), 'நீபமுஞ் செச்சையு மாலை யாகும்' (113) எனும் பிங்கலப் பகுதி முருகனுக்குரிய ஊர்தி, படை, கொடி, மாலை ஆகியவற்றை ஒப்புமையுடன் குறிபபிடுகின்றது. சிலம்பன், குறிஞ்சிக்கிழவன், கடம்பன், வேலன், மயில் வாகனன், சேவலங் கொடியோன (110) எனும் பெயர்களும் முருகன விசேட அணிகளை உணர்த்தி நிற்கின்றன. அறுவகை இலக்கணம் முருகனுக்கு முதலிடம் அளித்து உடைமைகள் வகுக்கின்றது.

வேலுங் குலிசமும் சூலமும் வில்லும
அம்புவாள் கேடகம் அங்குச பாசம
தண்டமும் ஆழியும் தவளவா ரணமும்
தகரும் மஞ்ஞையும் சேவலும் கிளியும்
குன்றமும் கடம்பும் குல்லையும் கூதளம்
புனலி யன்னபன் மாலையும் புலவோர்
பகர்ந்துள பிறவும் பரம குருபரன்
ஆகிய முருகனுக்கு அறையத் தகுமே (44)

இரத்தினச் சுருக்கம், 'அயிலோன் மாமயிலோன் கந்தன் சேவற் றுவசன் காண்' (63) என இரத்தினச்சுருக்கமாக மொழிவது குறிப்பிடத்தக்கது. (11)

229 ஓர்குண மிலாருடு விசாகமுளர் தநதையினு
யாந்தமுறை யின்வழியரே
யார்வளா குஞசரி குறகொடி மணாளர்மு
துணரிட மனபரிடமே
சீரிய பிதாமபரர் சடாட்சரர் நடக்குடைய
ரெசசெயலு யேபுகழுவோர்
பேரிலகு மற்றவை யளித்தவ ருற்றகுறவர்
பேசுமுரு கக்கடவுளே

முருகன் இயல்புத் தொடர்ச்சி.

தமக்கென ஒரு குணமிலலாதவர். விசாக நட்சத்திரத்தினர். தநதைககுரிய உயர்நத முறை வழிகளை உடையவர். யானை வளர்ததிய தேவயானி, வள்ளி எனபவர்ககுக் கணவர். சீரிய தங்கும் இடம், அனபர் உளளமே. சிறந்த பீதாம்பர உடையினர். சரவணபவ எனும் ஆறெழுந்து மநதிரத்தினர். நடனமாகக் குடைக்கூத்து ஆடியவர். எசசெயலும புரிவர். பெயரும் புகழும் இலங்குகின்ற மற்றுப் பலவற்றையும் அளித்தவர், உறவாகப பொருநதிய குறவர்கள் பேசும் முருகக் கடவுள் (குரவர் போற்றுகின்ற முருகன் எனவும கொள்ளலாம்).

விசாகன், தெய்வ குஞ்சரி மணாளன், வள்ளி கேள்வன், சரவணபவன் போன்ற பெயர்கள் வாயிலாகப் பிங்கலம் முருகனின் சில பிற வியல்புகளையும் தருகின்றது. (110) (12)

வேறு

230 ஆறுமுக முங்கைக ளீராறு முளரே
தேறு சடைகண் ணணியாற் புரைவரே
கூறுபல பூதர்படை யாக வுறுவோர்
நீறுபட வேயசுர ரைப்பொடி செய்தோர்

முருகனுக்குரிய சிறப்பணிகள் தொடர்கின்றன.

ஆறுமுகமும், பன்னிரு கையும் உள்ளவர். தேறுகின்ற சடைகளைக கண்ணி எனும் தலைமாலையால் புனைவார். கூறத்தகுந்த பல பூதகணங்களைப் படையாகக் கொள்ளுவர். அசுரர் சாம்பலாகப் போகும் வண்ணம் செய்தவர்.

ஆறுமுகக் கடவுள், ஆறிரு கரத்தோன், குன்றெறிந்தோன், அசுரற் றடிநதோன் எனும் பெயர்களால் பிங்கலம் மேற்கண்ட முருகன் இயல்புகளைச சுட்டுகின்றது. சரவணததுஉதித்தமை, ஆறு தாயர் வளர்த்தியமை, இந்திரனுக்கு மருமகனானமை (63) எனபனவற்றைச் சுட்டுவதுடன்,

காணுஞ சசிமகளைக் கானவளைக் கைப்பற்றி
நாளைவய னிந்திரனன் னாடுறவே—பூணு
முரண்சூர்செற் றக்கடம்பின் மொய்ம்பனடி யார்க்குக்
கருணைபெருக் கின்பக் கடல் (64)

எனச் சிறப்பிக்கின்றது இரத்தினச் சுருக்கம். (13)

வேறு

231 மாலைவனங் கொன்றையணி வெண்பரிய
வானைகொடி கோழிசடை வாணிலவரே
சீலமுறு வெண்குடைக் கைச்செண்டு
படைராசத செழுங்குணந னாள்பரணியே
கோஆமுறை தந்தைநெறி மேனிகடல்
பூரணை குணம்பெருகு புட்கலைமினாா
சாலமுத மூணுடைபி தாம்பரமை யட்சரமு
தாடனடங் காத்தல் செயலே

ஐயனாருக்குரிய விசேடவணிவகைகள் கூறப்படுகின்றன.

மாலையாக அமைவது அழகிய கொன்றை. பெருமை யுடைய வெள்ளை யானை வாகனர். கோழிக் கொடியர். சடையில் ஒளிபொருந்திய திங்களை உடையவர். சிறப்புடைய வெண் குடையினர். கைச்செண்டை ஆயுதமாகக் கொண்டவர். சிறப் புடைய இராசத குணத்தினர். இவருக்குரிய நல்ல நட்சத்திரம் பரணியாம். தந்தையார் கொள்ளும் முறைநெறிகளை உடையவர். கடல் வண்ண மேனியினர். பூரணை நற்குணமுடைய புட்கலை என்போரை மனைவியாகப் பெற்றவர். சால்புடைய அமுதமே உணவு. உடை பீதாம்பரம். ஐந்தெழுத்தினர் (அரிகர ஓம்); முதுமையான வெற்றியையே நடமாக உடையவர், காத்தல் தொழிலையுடையவர்.

கோழிசகொடியோன், வெள்ளையானை வாகனன், செண் டாயுதன், பூரணை கேளவன, புட்கலை மணாளன, கடனிற வணணன எனப் பிஙகலம் (117) சுட்டும் பெயர்கள் ஐயனாரின் மேறசுட்டிய சில இயலபுகளுடன் பொருததம காட்டுகின்றது.
(14)

வேறு

232 மற்றவைக டநதைவழிக குரியமான் பொருவே
யுற்றவை யர்ககிவவா றமைநதனவே யோர்காரிக்
கற்றமறி நாயேறு நீலப்பரி படையே
முற்றுகொடி யேமுடுவன முறைபகவன் முறைவழியே

ஐயனார்க்குரிய பிற அணிகள் சிலவும் வைரவர்க்குரிய அணியும் தரப்படுகின்றன.

மேற்குறித்தவை தவிரப் பிறவனைத்தும், தநதையாகிய அரன் பெறுவன படி அமையும். சிறந்த பொருள் சார்ந்த ஐயனாருக்கு இவவாறு அமைந்தன. காரியாகிய வைரவருககு நாயே ஏறும் ஊர்தி. கரிய குதிரையுடையவன், படையாகவும் கொடியாகவும் அமைவது நாயகளாம. தந்தையாகிய அரனின் முறைவழியே முறைகொள்பவன் ‘அற்றமறிநாய்’ எனறதால மறைப்பை மறைக்கக் கூடிய நாய் எனலாம்.

வைரவனை, காரி எனச் சேந்தன் திவாகரம் முதலியனவும் ஞாளியூர்தி எனப் பிங்கலம் முதலியனவும் கருங்குதிரையாளி, முடுவற் படையோன் எனச் சூடாமணியும், முடுவலூர்காரி எனக் கயாதரமும் குறிப்பது பிரபந்தத்திரட்டுச் செய்தியுடன் ஒத்துச் செல்கின்றது. (15)

வேறு

233 நாணமரன் றலையுரு நிலஞ்சூரி மினாளிடமே சுடலை
பூணே முதலிய நாதன்பெறும்வை யுயர்வீரற் குமனை
நாணும பத்திரை யேறேசிங்க நனாளத்தந் தந்தை
பேணுமுறை வழிமுறை தந்தையி னியல்பெறு மற்றவை
யெல்லாம்

வைரவர்க்கும், வீரபத்திரற்குமுரிய விசேட வணிகள் சில இயம்பப்படுகின்றன.

பிரமனது நடுத்தலையைக் கிள்ளியவர். உருவம் நீலநிறம். மனைவி சூரி. இடம் சுடலை. உணவு முதலியன தலைவனான அரன் பெறுவன. உயர்வுடைய வீரபத்திரனுக்கு மனைவி பத்திரை. ஏறும் ஊர்தி சிங்கம். நல்ல நாண்மீன் அத்தம். தந்தைக்குரிய முறைவழியே முறை கொள்ளப்படும். தந்தையின் இயல்புப்படியே பிறவிசேட அணிகள் எல்லாம் அமையும்.

வீரபத்திரன், பத்திரை கேள்வன் எனப் பிங்கலத்தில் (114) குறிக்கப்படுகின்றான். (16)

234 அன்னவ ரரனா ரணியிற் சிலவுளர்
சிலவில ராவாரே
மன்னிய வணிகளி னயனங் கரமுக
மாத்தொகை யுங்கொண்டே
முன்னுரை யாவிடி லிருகண் கரமுக
மொன்றென வறியரனார்
துன்னணி பெறுவ ரெனிற்காத லென்ன
சொற்பொரு டவிர்கண்டே

சிவன் புதலவர் ஐவர்க்கும் பொதுவிதி கூறப்படுகின்றது.

அவ் இயல்பினர், தநதையாகிய அரனாரின் அணியில் சில பெறுகின்றனர்; சில பெறார். நிலைபெறுகின்ற அணிகளில் கண்கள் கரங்கள், முகம் இவற்றின் எண்ணிக்கையை உட்படுத்தி முன்னே உரைக்காவிடில், இருகண, இருகரம், முகம என அறி. அரனார் பெறுகின்ற அணிகளைப் பெறுவாா. ஆயின் வயிரவன் வீரபத்திரவன் போன்றவருக்குக் காதல் தொடர்பான சொல்லும் பொருளும் தவிர்க்கப்படல் வேண்டும். (17)

வேறு

235 நீலகிரி வேணிநதி சுரநாடு வைகுந்த
நீடுளம பரிபாத்தியம தேநதிர னாங்கரியே
சோலுமொரு கொடிசிங்கஞ் சருடன்றேர் மாயை
கோடணைவாத்திய மேறுங்கருடன் செகங்குடையே
சாலமரர் படைசங்கு சக்கரம்வாள் கதையே
தனுவாயுதங் குணம்ராசத நாளே யோணஞ்
சீலமுறை சிவன்மைத்துனன் மற்றவர்க்கும் வழியே
தேகநீலம் பூமிதிரு மனையுளானே

அச்சுதனுக்குரிய அணிகள் அமைகின்றன.

மலை, நீலகிரி, நதி, வேணி தேவருககுரிய வைகுந்தம் நாடு நிலைத்த உள்ளமே குதிரை; பாத்தியம். உரிய யானை மதம் பொருந்திய இந்திரன். உயர்ததிய கொடி சிங்கம், தேர் கருடன் மாயா சகதியுடைய கோடனை எனபது வாத்தியம். ஊர்தி யாக ஏறுவதும் கருடனே. குனறு குடை. அமரரே படை. ஐம்படைக் கலங்கள் சங்கு, சககரம, தனு, வாள், கதை என்பன வாம். ராசத குணத்தினன. உரிய நாள் ஓணம். சிரிய உறவு முறை, சிவனுக்கு மைத்துனன். அவவழியே மற்றோக்கும் உறவு நோக்கப்படும். உடல் நீலநிறம். பூமாதும், திருமகளும் மனைவி யராகப் பெற்றவன்.

பிங்கலம், 'ஊர்தி கருட னொண் கொடியு மதுவே' (132) எனவும், 'சக்கரந் தனுவா டண்டு சங்கம் பற்றலர் மேல்விடும் பஞசாயுதமே' (133) எனவும் மாலின் ஊாதி, கொடி, படை களைக் குறிக்கின்றது. நாராயணின் நாமமாகப் பிங்கலம் சுட்டும் வைகுந்த நாதன், திருமகள் கொழுநன், பூமி கொழுநன், கொண்டல் வண்ணன் (130) போனறன நகர், மனைவியர், மேனி வண்ணம் என்பன தொடர்பாக அமைகின்றன. அறுவகை இலக்கணம்,

பொன்னா லாடையும் பூணும பொறியராப
பள்ளியுங் கலுழப் பரியும் பார்மகள
பூமகள் சேர்க்கையும் பொருவில் ஆழியும்
சங்கமும் தண்டும் தனுவும் கட்கமும்
கவுத்துவ மணியும் கடிமலர்த் துளவமும்
மற்றும் பாவலர் வகுத்தபல் சிறப்பும்
மூதுல களிக்கும் முகுந்தனுக் குரித்தே (49)

என விரிக்கின்றது. இரத்தினச் சுருக்கம், 'வீறுங் கொடியும் விய னூர்தியுங் கருடன்' எனவும் 'தேறுகின்ற மாயவன், பின்னை, சதயபாமை, உருக்குமணி நேயன்' எனவும் (69) சங்குசரம் பொருதண்டாழிவில் வாளுட னேந்தும் புனிதன் எனவும் (68) குறிக்கினறது. (18)

வேறு

236 பிரமனு மதனுஞ் சாமனும் வள்ளிப் பொனனுங் குஞ்சரியு
மரிதுறு மக்கண் மணாரனே கறியளையால்கடல்பணியிடமே
புரிபீ தாம்பரங் கவுத்துவ மணிபணி புகழட் டாட்சரமே
யருநட மல்லியம் வினைகாத்திடலிவை யச்சுதனணி பரமே

திருமாலுக்குரிய மகவு, ஊண், கறி, இடம, உடை, பூண், மந்திரம், நடனம், தொழில் எனபன கூறப்படுகின்றன.

பிரமன், மதன், சாமன், வள்ளி, தேவயானை என்பவர் அரிதிற் பெற்ற மக்களாம. உணவு, மண், கறி, வெண்ணெய, பாயல் கொள்ளும் இடம் கடல். உடை பீதாம்பரம். அணியும் பூண் கவுத்துவமணி. புகழ்ந்து பணிதற்குரிய மந்திரம் எட்டெழுத்துடைய ஓம்நமோநாராயணாய. அரிய நடனம் அல்லியம். தொழில் காத்தல். இவை அச்சுதனுக்குரிய அணியாம.

பிரமன்றந்தை, உலகமுண்டோன், புணரிபிற்றுயின்றோன், பீதாம்பரன் எனும் அணித்தொடர்புடைய பெயர்களைப் பிங கலம் தருகின்றது. 'கூறுமெழுதது எட்டுடையான்' என இரத்தினச் சுருககம் சிறப்பிககின்றது.

மாயன் செயல்கள் பலவறறைப் பெருமைச்குரியனவாக இரததினச் சுருக்கம் விரிககின்றது (65-68). தசாவதாரம, ஒவ்வொரு அவதாரததின் செயல்நிலைச் சிறப்புகள் போன்றன இங்குச் சுட்டப்படுகின்றன. (19)

வேறு

237 மலர்மலை மனைநதி பிதிர்நாடூர் நிசவளநகர் மரைமாலை
மாறும் யுகப்பரி கற்பக்கரி கொடிவா லன்னந்தேரே
நிலைபெறு வான்முழ வதிர்துந் துமியன நீடேறேகுடை
நீர்நீள் படையே குறள்படை தண்டே சாற்பீதங்
குணநாளே
கலைரோகணி முறைவழி பொன்மேனி நலவாணி
மினெல் லூணே
கறியே பயறிடமலரேபொற்கலை நூலணியசகரமே
யலர்நான்காம்பிரமரிநடம்விளையுண்டாக்குதல்முகநாலே
யார்கரமேபத் தெண்விழிபிரமற் காமணியிவையாமே

பிரமனுக்குரிய அணிகள் நவிலப்படுகின்றன.

மலரே மலை, மனையே நதி, பிதிர் நாடு, ஊர் நிசவனநகர், தாமரை மாலை. குதிரை, மாறுகின்ற யுகம். கற்பம் யானை. கொடி தூய அன்னம். அன்னமே தேர். நிலைபெற்ற சிறந்த முழவு ஒலிக்கின்ற துந்துமி. அன்னம் ஏறு. குடை நீர். சேனை, குறட்படை-ஆயுதம் தண்டு. குணம் சாத்வீகம். நன்னாள்

உரோகிணி உறவு முறை வழி. மேனியின் நிறம் பொன்மை. வாணி, மனைவி, நெல், உணவு. கறியாக அமைவது பயறு. பயில் இடம் மலர். பொன்னாடை உடையோன புரிநூலே அணியாகப் பூண்டோன். எழுத்தாக மலர்ந்து அமைவன நான்கு வேதமாம். பிரமரி நடனம். படைத்து ஆக்குதல் தொழில. நான்கு முகத்தோன். பத்துக் கரம். விழிகள் எட்டு. இவை பிரமனுக்குரிய அணியாம்.

மலரோன், அன்னமுயர்த்தோன், ஓதிம வாகனன், பாரதி கொழுநன், திசைமுகன் போன்ற பெயர்கள் பிரமனின் அணி நிலை பற்றி அமைந்ததனைப் பிங்கலம் வழி அறியலாம். (156)

> அன்ன மூர்தி யரும்படை பாச
> மன்னிய கதைபடை கொடிமறை யாகும் (157)

எனப் பிங்கலம் ஊர்தி, படை, கொடியையும் குறிப்பிடுகின்றது.

> கமலப் பூவும் கடத்தொடு மறையும்
> ஓதிமப் பரியும் உயர்ந்தோர் கூட்டமும்
> நாமகள் சேர்க்கையும் நான்கு முகனம்
> அன்னசீர் பிறவும் அயன்றனக் குரித்தே (52)

என்பது அறுவகை இலக்கணம். கமலந்தார், முந்நூலர், மலர் வாணி மனை என இரததினச் சுருக்கம் (70) மொழிகின்றது.

238 பசுமலை மந்தாகினி நதிவிண் ணாடூரம ராபதிதரா
பதிகற்பக முச்சம் பரியயி ராவண மேகரி யிடியே
யசைகொடி தனபே ரிரதந் தூரிய மாமுழ வேறேகா
ரம்புதமே குடையமர்ப் படைபடையணி வச்சிரங் குணமே
பிரகா ராசத தாமதமே நாளசுபதி முறைமாயன்
பின்னவன்மேனீலஞ்சசிபிறர்மனை பிள்ளைசயந்தனமு
திசையூ ணற்கறி யிடம்வான் பொறைகலை பொற்பணி
செயன்மகமே யேகந்துணை வதனங்கை யாயிரமே விழிவேந்தற்கே

இந்திரனுக்குரிய மலை முதலியன வகுக்கப்படுகின்றன.

மலை, பசுமலை. நதி, மந்தாகினி. விண்ணே நாடு. ஊராக அமைவது அமராவதி. கற்பகம் முதலிய ஐந்தருக்களுக்குத் தலைவன். அவனது பரியின் பெயர் உச்சைச் சிரவம். யானையாக அமைவது அயிராவதம். கொடியாக அசைவது இடி. தனமே

பெரிய தேர். பறைவகையான தூரியம், பெருமுழவாம் ஏறும் ஊர்தியாக அமைவது கார். குடை மேகம். அமரரே படை. வச்சி ராயுதம் படைக்கலம். வேறுபடாத ராசத தாமத குணங்கள் இவருக்குரியன. உரிய நட்சத்திரம் அசுவதி. திருமாலின் தம்பி எனும் முறையுடையவன். உடல் நீல நிறத்தினன். இந்திராணி யும், பிறரும் மனைவியர். பிள்ளை சயந்தன். அமுதமே ஊணா கவும் நல்ல கறியாகவும் அமைகின்றன. வானுலகம் பயிலிடம். பொறுமையை ஆன டயாக உடையவன் பொன்னணிகள் பூண்ட வன் யாகம் புரிதல் செய்யும் தொழிலாம். ஒரு முகமும், இரு கையும், ஆயிரம் கண்ணும் உடையவன் இந்திரன்.

அமராவதியோன், ஆயிரங்கண்ணன், வச்சிரப் படையோன், மேகவாகனன், அயிராவதன், வேள்வி நாயகன், கரியவன், வெள்ளை வாரணன், ஐந்தரு நாதன், பொன்னகர்ச் செல்வம் எனப் பிங்கலம் (160) குறிக்கும் பெயர்களின் அணியியைபு சுட்டத்தக்கது. 'வச்சிரம் படையே வண்கொடி இடியாம்' (166) 'சயந்தன் இந்திரன் றன்மகனாகும்' (162) 'ஆங்கவன் றிருநகரம ராவதியே' (163), 'ஒங்கிய வூர்தி வெள்ளை யயிராவதம்' (164), 'மெச்சிய பரிமா வுச்சைச் சிரவம்' (165) என இன்னும் விரிவாகப் பிங்கலம் செய்திகளைத் தருகின்றது. இந்திரனுக்குரிய இன்னும் பல பொருட்களான மண்டபம், மாளிகை, பண்டாரம், நந்த வனம், சேமநிதி, கோ, உணவு, அணிபோன்ற பலவும் (167–175) இப் பிங்கலத்தில் தரப்படுகின்றன. (21)

வேறு

239 கொற்றவனு பேந்திரற்குங் கூறுமக னணியாம்பி
னுற்றமனை பற்மவிலோசனி பரிபாடலமே
துற்றகரி மத்தந் தவளமின் னாங்கொடியே
முற்றுசயந் தனுக்கைய னணிமனை சுந்தரியே

உபேந்திரனுக்குரிய அணிகள் கூறபபடுகின்றன.

வேந்தனாகிய உபேந்திரனுக்கும் இந்திரனின் அணிகளை உரியனவாகக கூறுக. பினபு அவன் பொருநதிய மனைவி பத்மவிலோசனி; குதிரை பாடலம்; பொருந்திய யானை மத்தம்; கொடி, முத்தைப் போன்ற மின்னலாம்; சயந்தனாகிய இந்திரன் மகனுக்கு; இவனும் தந்தை முறையினன். அழகிய மனைவி சுந்தரி யாம்.

சிவனின் கட்டளைப்படி, திருமால், இந்திரனுக்குத் தம்பி யான உபேந்திரனாசப பிறந்தான் என்பர். (22)

வேறு

240 தாருமலை நதிவிடு தென்காமிய நாடு
சவுசனிய நகர்தார் மகிழமலர்
தாவுபரி கிளிகரியே யிருள்கொடி
சாடுகயல் வளிவருதே ரலைகடல்
பேரிபுலி மழவேறே மதிகுடை பெண்கள்
படைமுலை சோகே குவளைகள்
பேசுமா முகிழ் வனசங் கணையரி
பெற்றமாக் குணநாளே மான்றலை
யாருமுறை யரிவழியே பசுமைய தான
வுருமனை யிரதிக் கணியுண
வவணி மேன்மய லாராவி கள்கறி
யவர்க ளழகுக ளிடமெங்கும்பெற
லூரும் வான்கலை பணிநா ளணிநட
மோங்கு பேடது செயல்கூட்டி
டுதல்கையோ ரிரண்டுக ணைவையே சிரமது
மொன்றுமார னதுயர்வா மணிகளே

மன்மதனுக்குரிய அணிகள் கூறப்படுகின்றன.

தாரு மலை, நதியை யுடைய தென்காமியம், நாடு. நகராக அமைவது சவுசனியம். மாலை, மகிழம்பூவாலானது. தாவிச் செல்கின்ற குதிரை, கிளி. இருளே யானை. துள்ளும் மீன்,கொடி. தென்றல் காற்று, தேர். அலைவீசும் கடல் முழவு. இளமை யுடைய புலி ஏறுகின்ற ஊர்தி. திங்கள், குடை. பெண்கள், படை முல்லை, அசோகு, குவளை, மா, தாமரை என்பன அம்பு. திருமாலுக்குரிய குணமே இவனுக்குமாம் (இராசதம்). திருநாள் மிருகசீரிடம் முறை, அரியின் வழித்தோன்றல். பசுமையான உருவம் உடையவன். மனைவி ரதி. கணிக்கத்தக்க உணவு இவ் வுலகின் மயலுற்ற மெல்லியலாரின் ஆவிகளே உணவு. அவர் களுடைய அழகே அவன் விரும்பியுண்ணும் கறி. எல்லா இடமும் அவனுக்குரியது ஆகும்படி ஊர்வான். வானமே ஆடை. நடம், பேடிக் கூத்து. தொழில் ஆணையும் பெண்ணையும் இணைத்தல்.

இருகை கண்ணும் அத்துணையே தலை யொன்று. இவை மாரனுக்குரிய விசேட வணிகள்.

காமனுக்கு இத்தகு அணிகள் வகுக்கும் பாங்கு, உவமான சங்கிரகத்தில் விரிவாக அமைகின்றது (28-37). அவ்வாறே, இரத்தினச் சுருக்கமும் காமன்பற்றிய செய்திகள் பலவற்றை நவில்கின்றது (8-11, 37-38). அறுவகை இலக்கணமும் அணியிலக்கணத்தின் உடைமையியல்புப்பகுதியில் (54) மன்மதனுச்குரிய உடைமைகள் சிலவற்றை மொழிகின்றது.

பிங்கலம், காமன் பெயர்களைச் சுட்டுவதுடன் ஊர்தி, கொடி, வில், கணை, கணைச் செயலும் அவத்தையும் போன்றவற்றையும் சுட்டுகின்றது (145-50). மசரக் கொடியோன், வேனிலாளி, வசந்தன், ஐங்கணைக் கிழவன், திங்கட் குடையோன், தென்றற் றேரோன், மலர்க் கணையோன், ரதிகாந்தன், கடன் முரசோன், கைதைச் சுரிகையன், கருப்பு வில்லி எனும் பெயர்கள் மன்மதனின் விசேட அணி விளக்கம் தரல் குறிப்பிடத்தக்கது.

அறுவகை இலக்கணம்,

மதியும் கிளியும் வசந்தனும் குயிலும்
சடலும் அன்றிலும், காரிருட் பெருக்கும்
வண்டும் கரும்பும் மலர்க்கணை ஐந்தும
வருள மாலையும் மங்கையர் கூட்டமும்
கேதகைப் பூவும் கிளத்துவ பிறவும்
அன்னத் திவரும் அணங்கும் அங்கசற்கு
உரியன வாம்என றுரைத்தனர் உணர்ந்தோர் (54)

எனத் தொகுத்துச் சுட்டுகின்றது. மன்மதனுக்குரிய கரும்புச்சிலை பூங்கணை, சுரும்பு நாண், கிளிப்புரவி, மாருதத்தேர், வேலை முரசம், கங்குல் களிறு, குயில் காளம், மகரக் கொடி, திங்கட் குடை ஆகியவற்றைச் சுட்டுவதுடன (9), வேள் நகருக்கு அடையாளமும் கூறுகின்றது இரத்தினச் சுருக்கம்.

ஆமே கொடிவள்ளை யம்புயமு நெய்தற்பூ
பூமே சுரும்பு புனலாட்டுக்—காமவேள்
தென்றலுறு மென்மறுகு தேராடன் மாடமதி
லன்றுநக ருக்கடையா ளம் (38)

உவமான சங்கிரகம், குடைக்கால், மதியின்கிரணம், பரிசை வெருகிலை, தேரின உருள் சந்தனம், மாந்தளிர் பட்டு, கைச்சரம் மாதுளம் பூ, பரிக்கலனை, மல்லிகை, கடிவாளம் இலஞ்சு, கன்னச் சல்லி, புன்னைப்பூ கவசம் விரை, தோழன் வசந்தன். . எனப் பல இணைவுகள் அளிப்பது புதுமை. அத்துடன பஞ்ச வில் காமனுக் குண்டு எனக் கூறி, கதிர்ப்பூம் பச்சைத் தண்டு, மாந்தண்டு, கருப்பந்தண்டு, கமலப் பூந்தண்டு என அவற்றை விளக்குவதும், அவ்வைநது தனுவுக்கும் பூட்டிய நாண் என, பிச்சிக்கொடி, தாமரை நூல், வெட்டிவேர், வண்டு, மாந்தளிர் என்பனவற்றைச் சுட்டுவதும் தனித்தன்மை காட்டுகின்றன.

ஆசிரிய நிகண்டு (6), பூவில், கருப்புவில், இருப்புவில் என மூன்றினைச் சுட்டி அவை முறையே தேவர், மனிதர், அரசர் மேல் எய்யப்படுவதாக மொழிவது வேறுபாடாம். (23)

241 சாத மலைபணி நீரா றலர்வுறு
சாம நாடு வினோதர் நகரணி
சலச மேபரி யனமே பகல்கரி
தாக்கு மாக்கொடி மகரந் தோகுளிர்
வாத முழவுக ளேறே கொடிபொய்
மாறு குடைகதிர் படையா ணலிபடை
மலர்களி யாவையு மரியின் குணமதி
வந்த நாண்முறை தந்தைதன் வழிமுறை
யோது மேலணி காரே மனைவிய
ருதய முச்சிகொண் மாலைவிண் மடவிய
ருண்ணு நற்கறி யமுதே கலையலை
யுற்ற பணிமலர் முகையே நடமது
சீத மேமலி தூக்கே மதனது
செயல்க ளேசெயல் சிரமோன் றிருமைகை
செப்பு நயனம தைந்தே வேடுனண
சேர்நதி லங்கிய சாமற் கணிகளே

சாமனுக்கு உரிய அணிகள் கூறப்படுகின்றன.

சாதம், மலை. பனிநீர் ஆறு மலர்கள் பொருந்திய சாமம் நாடு, வினோதர் நகர் அணிவது தாமரை, குதிரை, அன்னம், யானையாக அமைவது பகல், ஏந்துகின்ற கொடி, மீனக் கொடி, பனிக்காற்று, தேர். காற்று, தேர், காற்றே முழவு. ஏறுகின்ற ஊர்தியாக அமைவது காகம், பொய்யை மாற்றுகின்றதான

குடை, கதிர், ஆணும் அலியும் படைக் கலங்கள் எல்லாவகை மலர்களுமாம். அரிக்குரியதான இராசத குணம் மதிக்கு உரிய நாண்மீன், முறை, தந்தையாகிய திருமாலின் வழியமையும் முறைகளாம். கார்காலத்திற்குரிய அணிகளுடையவன். மனைவியர், உதயம், உச்சி, மாலை, தேவமகளிர்; உணவும் விரும்பும் கறியும் அமுது, ஆடை, அலை, பூணாக அணிவன மலர் முகை; புரியும் நடனம் குளிர்ச்சி நிறைந்த தூக்கு; மதனின் செயல்களே சாமனுக்கும் உரியன. ஒருதலை; இருகை; கண்கள் ஐந்து மன்மத வேளின் துணையாக அவனோடு சேர்ந்து இலங்கும் சாமனுக்கு இவை அணிகளாம். (24)

சாமன்பற்றிய எண்ணங்கள் வேறெங்கும் அமைந்தது புலப்பட்டிலது.

வேறு

242 சிவன்முதல் வேளீ றாகிய பற்பலர் சிற்சில வணிசொற்றா
மிவர்களிலுற்றவையின்னும்பலபலவேயுளவவைதனுநாண
டல்வில் லணிதூ ணியடைப் பைத்தொழில் பிறவுடை
வாள்காள
நவின்முடி யாம்பிற பெறல்கண் டேயுள நவிலுது மறிநீயே

தெய்வங்கட்கு, முன் கூறியனவன்றி இன்னும் சில அணிகள் உள்ளமை கூறப்படுகின்றது.

அரன் முதல் மன்மதன் முடிய பலருக்குரிய அணிகள் சிலவற்றைச் சொன்னோம். இவர்கட்கு உரியவை இன்னும் பல உண்டு. அவை தனு, நாண் பொருந்திய போர்வில், அணிகின்ற அம்பறாத் தூணி, அடைப்பைத் தொழில் புரிவோர், உடைவாள், எக்காளம், பொன்முடி என்பனவாம். பிறவும் பெறுமாறு கண்டு உளளனவற்றைக் கூறுவேன். நீ அறிக.

'தனு' கூறி மீண்டும் 'வில்லணி' எனக் கூறியதால் 'ஒளியுடைய அணி' எனவும் கொள்ளலாம். (25)

வேறு

243 ஆதி மாலயன் பினாகஞ் சார்ங்கஞ சிந்துவார
மாலமே யலை நூன் மண்டபம், விடங்க மந்திர
மேதவி தானம்வீடே யிரத்தவெள் ளரமிய
மேயிசைபச்சரமியங்கடல்பூவேறியலை வெஞ்சுமனே

யோது நீலன் சாம்பன் கதிர்மகூபூ வடைப்பை
காளாஞ்சிவெள்ளி செவ்வாயொண்புதனே செம்மை
தீதில் கறுப்பே வெண்மை மணியின் சாமரையே
சேர்சாம வேதகானம் பிறர்க்கும் பிறவே

முதற்கடவுளர் மூவர்க்குரிய மேற்குறித்த அணிகள் சில விளக்கப் படுகின்றன.

ஆதிக்கடவுளான சிவன், மால், அயன் என்போர் முறையே பெறுவன பினாகம், சார்ங்கம், சிந்துவாரம் எனும் வில்கள். ஆலமரம், கடல், நூல் என்டன உரிய மண்டபம். சிறுவழியும், மனையும், விதானமும் உள்ள வீடு முறையே இரத்த நிறமும் வெள்ளை நிறமும் இசைந்த பசுமை நிறமும் உடைய அரமனையாம், கடல் மீதும் பூவின்மீதும் ஏற்றின் மீதும் அமைவர். இயமறும், நீலறும், சாம்பனும் அடைப்பைக்காரர் கதிர்,மதி,உலகம் என்பன.அடைப்பை காளாஞ்சியாக அமைவன. வெள்ளி, செவ்வாய், புதன் என்பன நிறம், முறையே செம்மை, தீதற்ற கறுப்பு, வெண்மை என்பன. மணி பொருந்திய சாமரை இனிய சாம வேத கானமாம். பிறருக்குப் பிற. (26)

244 காவ னந்தி கூர்மாங்கன் கடுவந்தகனு மேகாக்
கொன்றை துளவுவில்வங் கானற்பன்றிக் கொம்பே
மேவுபிறை மலரிதழே மறைகுடிலை வாக்கிய
மெய்யினிற் மணித்தெய்வ மூன்றுங்குழை சங்கம்
பாவுபிறர்க் கறிவருரைப் படியாகு நிலமே
பகர்குறிஞ்சி முல்லை வருணன்படைத்த நிலமே
தேவர்பணி யானைமுகன் வேலனய்யன் பிள்ளை
வீரன் றனக்குமணி செப்புதுநீ காணே

முக்கடவுளர்க்குரிய அணிகள் பிற கூறப்படுகின்றன.

காவலாக அமைவன நந்தி, ஆமை உடலினன், கடுமையான யமன் என்போர். கொன்றை, துளசி, வில்வம் என்பன முறையே மலர்கள் காட்டுப் பன்றியின் கொம்பும், பிறையும், மலர் இதழும் அணியப்படுவன. வேதம், பிரணவம் வேத நியமம் என்பன. தெய்வமணிகள் மூன்றும் மெய்யில் அணியப்படும். சிவபெருமானுக்குக் காதணியாக அமைவது சங்கு. பிறருக்கு, அறிஞர் கூறியபடி ஆக்குக. மூவர்கருரிய நிலம், முறையே குறிஞ்சி, முல்லை, வருணன் படைத்த நிலமான நெய்தல்

என்பனவாம். தேவர்களும் வணங்குகின்ற விநாயகர், முருகன் அய்யனார், வைரவன், வீரபத்திரன் என்போருக்கும் அணிகள் கூறுவதை நீ காண்க. (27

245 தனுவொடு நாண்டூணி யடப்பையுடன் காளாஞ்சி
சாமரை வாள்காளங் கானம்புவி காளாஞ்சி
காக்குழையு
கனவுலக நெறிமுன்னும் பினனான்குந் தந்தை
காட்டுநெறி மண்டபமே கந்தரங் கந்தற்ப
மனவுதிகழ் பீடம்பீ டாரீடம் விபுலைவாய்ந்த
விலவந்தம் பெயர்சார் கோட்டமடை கொடுப்பா
ரினமுறையாஞ் சிங்கியான் மாறதன ளன்றிருத்தி
யிச்சுவாவிண் டிடும்பன ஞ்ச னதனசிதன் காவலரே

முன் பாடலில சுட்டியபடி, விநாயகர், முருகன் அய்யனார் வைரவன், வீரபத்திரன் என்போர்க்கு அணிகள் கூறுகின்றார்.

தனு, நாண், அம்பறாத்தூணி, அடப்பை, காளாஞ்சி சாமரை, வாள, காளம், கானம், புவியைக் காக்கின்ற குழையும் தேவர் உலக முறைப்படி அமையும். பின்பு வரும் நான்கும் தந்தை பெற்ற பொருட்களின் நெறியினவாம். மண்டபங்கள் கந்தரம் கந்தற்பம் பீடம் பீடாரீடம், விபுலை என்பன பொருந்திய இலவம், மேற்கூறிய பெயர்கள் சார்ந்த கோட்ட மாம் அடைப்பை கொடுப்பார் முறையே சிங்கியரன் மாறதன் நளன் திருத்தி; இச்சுவா இடும்பன் அஞ்சன் நதன் அசிதன் என்பவர் காவலராம். (28)

வேறு

246 மாளிகை வசந்தமலர் மண்டபஞ் சுதான
மன்னியமின் சாய்மரை சிந்தாமணி படிக்க
நீளுநிதி யேநதிமலர் நன்னிதிய டைககாய்
நீட்டுமவ னேபுழுக்க னேகாம தேனு
வாளுமல ரைநதருவ டைப்பையணைப் பூக்க
ளாடலும ணைத்தலுமு றற்குரிய மாதர்
வேளைவெல் புலோமிசை திலோத்தமை முதற்பேர்
வீசுவிற் பெயர்த்தனு மழைத்தாரை நாணே

இந்திரனுக்குரிய பிற அணிகள் சில சுட்டப்படுகின்றன.

மாளிகை, வசந்தம்; மலர்மண்டபம் சுதானம்; நிலைத்த மின்னல் சாமரை; சிந்தாமணி படிக்கம்; அளவற்ற நிதிகளைத்

தாங்கும் குபேரன் அடைப்பைக் காரன், மலரும் நவநிதி அடைக்காய், வேலைக்காரனாக அமைபவன காமதேனு, வாள் மலா; ஐந்து மரங்கள் தரும் பயனான பூக்களை அணையாக அடைபவன; ஆடலும் அணைத்தலும் உரிய மாதர் மதனனை வெல்லும புலோமிசை, திலோத்தமை முதற்போ. வீசுகின்ற வில் மழைவில்; அதன நாண மழைத்தாரை.

பிங்கலம, இவற்றில சிலவற்றைச் சுட்டுகின்றது. நாடகத்து அரம்பையரை,

மேனகை யரம்பை யுருப்ப திலோத்தமை
யான நால்வரு நாடகத் தரம்பையர் (176)

எனவும், 'மண்டபம் சயந்தம்' (167), 'மாளிகை வசந்தம்' (168), பண்டாரப் பெயர் பகரிற் சுதன்மம்' (169), 'சேம நவநிதி' (171), 'கோக் காமதேனு' (172), 'அணிவது சிந்தாமணி சூளாமணி' (173) எனவும குறிப்புகள் அமைகின்றன. (29)

வேறு

247 கன்னல் வின்னாண் வண்டாகுங் காம காண்டபங்
கைம்மா லைத்தனுநீல மத்தமலர் தூணி
சொன்ன மண்டபங் காமாங்க விலாச மிலவநதொகு
மதன்பீட மடைப்பைக் காரன்றெய்வ வேனின்
மன்னு தேக்கல ரடைப்பை மல்லிகை காளாஞ்சி
மலிகமு கின்பாளை சாய்மரை காவல் வேத்தியர்
பன்னு காஞ்சி தாளம் பூமாவின் தளிர்வாள்
புகர்காளங் குயிலின் றாரை வச்சிர முடியே

மதனனுக்குரியன மேலும் சில கூறப்படுகின்றன.

கரும்புவில், நாண்கயிறு வண்டு எனக் காமனின் வில் அமையும. கைமாலை வில்லாக, நீலூரமத்தமலர் தூணியாக அமையும். அவனுக்குரிய மண்டபம் காமாங்க விலாசமாம். அதன் பீடமே இலவம். தெய்வ இயல்புடைய வேனிலான், மதனனுக்கு அடைப்பைக்காரன். தேக்கின் மலர் வெற்றிலை முதலியன. மல்லிகை மலர் வெற்றிலையை மென்றுமிழும காளாஞ்சி. கமுக மரததின் பூம்பாளை சாமரை. காவலாக அமைபவர் வேத்தியர். தாளமாக அமைவது, காஞ்சி என்னும் பண் மாமரத்தின்

தளிரே வாள். எக்காள ஒலியாக அமைவது குயிலின் இன்குரல், விண்மீன் வைரமெளலியாம்.

இரததினச்சுருக்கம் இவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது.

தொடையிலஞ்சி மஞ்சளிளஞ் சோலைபடை வீடு
படைமங்கை யர்கமுகம பாளை—யிடுகவரி
காளாஞ்சி மல்லிகையாங் காரிகையீர் மாரனுக்கு
வாளாமோ லைப்பூவு மால் (8)

உவமான சங்கிரகம் இச்செய்தியை தானும் அமைக்கின்றது.

வெல்லு மதவேள் மார்பினிலே
விளங்கு மாலை யிலஞ்சிமஞ்சள்
புல்லுங் கமுகி னரும்பாளை
பொறப விரட்டுஞ் சாமரையாஞ்
செல்லு மவன்கா ளாஞ்சிமலர்
செண்ப கமுமல் லிகைப்பூவு
மொல்லும் வேனி லவனறிருநா
ஞடைவா ளோலைப் பூவாமே (30)

இந்நூல்கள சுட்டுவதினும் இன்னும் சில செய்திகள் மிக்குப் பிரபந்தத் திரட்டு அளிப்பது குறிப்பிடத் தக்கது. (30)

வேறு

248 வனசமா வசோகொடு முல்லை
நீலமா மதன்கணை தாமஞ்சுங்
கனவுன் மத்தமே மதன
மோகனஞ் சந்தாப வசிகரணந்தா
னனைய தஞ்செயல் சுப்பிர விப்பிர
யோகஞ் சோகம் மோக
மனம்விடா மரணமு
மென்ப ரிச்செயல் வகுத்துறச் சொல்வாமே

மதனனின் மலர்க்கணைச் செயல் கூறப்படுகின்றது.

வனசம், மா, அசோகு, முல்லை, நீலம் என்பன மதன்கணை இவை ஐந்தும் முறையே, கனவு, உன்மத்தம், மோகனம், சந்தா

பம், வசிகரணம் எனும் செயலினையுடையன. இதனால் உறும் அவத்தைகள, சுபபிரயோகம, விபபிரயோகம், சோகம், மோகம், மனம இழக்காத மரணம் என்பனவாம. இவ் அவத்தைகளை, (வரும்பாடலில்) வகுத்துக் கூறுவேன்.

காமனின் ஐங்கணை, அக்கணைச் செயல், அககணைகள் உருவாக்கும் ஐந்தவத்தை, அவற்றின விளக்கம் என்பன பிங்கல நிகண்டு (148-150) இரத்தினச் சுருக்கம், (10-11) உவமான சங்கிரகம் (34-36) போன்ற பல நூல்களிலும் அமைகின்றது. இரத்தினச் சுருக்கம், கணைச் செயலை

நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்துணவு நீக்கு மசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலம்
கொல்லுமத னம்பின் குணம் (11)

என எளிமையாக வகுக்கின்றது. அத்துடன் ஐந்து கணைகளும் முறையே எயயப்படும் இடங்களும்,

நெஞ்சி லரவிந்த நீள்சூதங் கொங்கையிலே
துஞ்சும் விழியி லசோகமாம்—வஞ்சியாதம்
சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
யனனவே ளெய்யுமியல் பாம் (37)

என குறிக்கப்படுகின்றன. உவான சங்கிரகமும் இதனை ஒட்டிய கருத்துகளை வழங்குகிறது. (31)

வேறு

249 சுப்பிர யோகம் பேச்சு நினைவு மாகிடுமே
சொல்லிய விப்பிர யோகம வெய்துயிர்த்தே யிரங்கல்
செப்பு சோகமது வெப்பந் துய்ப்பனவு மறுத்தல்
செம்மமோக மழுதல் பலமொழி பிதற்ற லாமா
லொப்பு கின்ற வேகமா மரணமது தானே
யுற்றமிகு மயக்கமுடன் மிகுமயர்ச்சி யதுவாந்
தப்பறு நெஞ்சே கொங்கை விழிசென்னி குய்யஞ்
சாற்றிமல ரெய்யுமிடந் தனித்தனிநீ பாரே

காமன் ஐங்கணை அவத்தையின் விளக்கமும், ஐம்மலர்க்கணை எய்யுமிடங்களும் கூறப்படுகின்றன.

சுப்பிரயோகம், பேச்சும் நினைவுமாம், விப்பிரயோகம் பெருமுச்செறிந்து வருந்துதல். சோகம் எனபது, வெதும்புதலும, ஊண் மறுத்தலுமாம், மோகம், அழுதலும் பலபல பேசிபபிதற்றலுமாம். ஒத்த நிலையினதான மரணம் என்பது, மிகுந்த மயக்கமும, மிகுந்த சோர்வடைதலுமாகும். கணைகள் தப்பாது எய்யுமிடம், நெஞ்சு, கொஙகை, கண், தலை, அல்குல் என்பனவாம்.

இவ ஐவகை அவத்தைகளைப் பிற நூல்களும் விரிக்கின்றன (பிங்கலம் 150-155; ஆசிரியம 7). கருத்து மாறுபாடு பெரும்பாலும காணப்படவிலலை. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் தரும் எண்ணங்கள் இங்குப் பெருகி வளாந்துள்ளமை தெரிகினறது. (32)

வேறு

ஐங்கணை முதற்சிலவு மெழுவயதிற்
றவமறிநது தான்மகிழ்ந்துதவியே
மங்கியழி யாவிவையி லைங்கணை
மயக்குமெனை யும்முறைவழா தவரையு
மங்குடல் பொருத்துமரு டாயையும
தியக்குமறி வாரையும் மயக்கநினது
பொங்குடல மாவியழி யாவெனவு
ரைத்திரதி தன்வரைவு பூட்டினனரோ

காமன் ஐங்கணையின் ஆற்றல் சுட்டப்படுகின்றது.

ஐங்கணை முதலிய சில, ஏழு வயதில் தவம் செய்து தான் மகிழ்ந்து அளித்தலால் மங்கி அழியா; இவையில் ஐந்து கணைகளும் என்னை மயக்கும்; முறை தவறாதவரையும் உடல் இணைவுக்குத் தூண்டும்; பெற்ற தாயையும் சஞ்சலப் படுத்தும்; நல்லறிவுடைய வரையும் மயக்கும்படி, நினது உடலும் உயிரும் அழியா என உரைத்து இரதியை மணமுடித்தனன்.

ஏழுவயதளவில் தவம் புரிந்த மதனனுக்கு விருப்பமுடன் சிவபெருமான் ஐங்கணை முதலியன அளித்தான் எனவும், அப்பிரானே இரதியைக் காமனுக்கு மணமுடித்தான் எனவும் இவற்றைச் சிவன் செயல் கூற்றாகப் பொருத்தலாம். (33)

வேறு

251 நம்மினொடு நாமுமி தியற்றி செறுநாள் யாவு
நண்ணின நமமேவ லெய்வா
எம்மையிவள் மேலுமய லார்திரளின் மேலும்
விடுவோம் மருமநத முறையே
செம்மையமர் செய்யிவணி யெம்முருவைச்
செயலெஞ் செய்கைகள் மறுக்கில் வருமோ
விம்மிதம தாவதென வும்பினு ரைத்தேமுனம
விள்சமர மென்றன ரரோ

காமன போரின இயல்பு விளக்கப்படுகின்றது.

நமது மின்னொத்த மனைவியுடன் நாமும் இதனை இயற்றி மிகுந்த நாட்கள் எல்லாம் நெருங்கினால, நம்மேல அவள் எய்வாள்; அமமையாகிய இவள மேலும் மயக்கம் பொருந்திய மாதர் கூட்டததின மேலும் பாணம் செலுத்துவோம் எனக் கருதி, அரிய முறையில் செம்மை யுடைய போர் செய்ய இங்கு எம் உருவைச் செயதல் எம் செயகைகளை மறுத்தால் வருமோ? அதிசயம் உடையது எனவும் பின் உரைததே அதனைப் போர் எனக் கூறினர்.

வேறு

252 அமபுயம ஊர்தி கொடியே யருளசோகு
வனநா லுமுக மற்றவை யெலாங்
கும்புபுரி கொன்றை யனையொப்ப ளருகக்
கடவுள்கூ றவுணர் புத்தனரசிற்
பம்புவன முனோரணி பொருந்திய வாகும்
பெயர்படைப்பன வனமாயை மகனேசே
ரம்புபெறு மன்னவர்கள் பெண்டிர்வகை யிற்பிறரி
லுற்றவணி செப்புது மரோ

அருகனுக்குரிய அணிகளும், புத்தனுக்குரிய சிறப்பும். இனி மொழியும் செய்தியும் சுட்டப்படுகின்றன.

அம்புயம் ஊர்தியாம்; கொடியாக அமைவது அருள்; அசோகு, அமரும் இடம்; நான்கு முகமுடைமை தவிர மற்ற அணிகள் எல்லாம் திரளாகக் கட்டிய கொன்றை அணிந்த அரனை ஒப்ப அமையும். இவை அருகக்கடவுளுக்குக் கூறுக.

உணருகின்ற புத்தன் அரசமரத்தின் கீழ் அமர்வான். அவனுக்கு முன்னோர் அணி பொருந்தினவாகும். பெயர்களில், படைத்தவன் காரணமாக மாயை மகன் எனப்படுவான். அம்புப் படையுடைய மன்னர், பெண்டிர், பிறரில் பொருந்திய அணி கூறுவேன்.

அருகனுக்கு அம்புயம் ஊர்தியும் படையும் எனப் பிங்கலம் கூறுகின்றது கொடி காட்சி, ஞானம், சீலம எனபனவாம்.

அருக்க னூர்தி அம்புயம் படையே
நாடகக் காட்சி ஞானசீ லங்கொடி (192, 193)

அசோகமர் கடவுள், எண்குணன, முக்குடையோன் (191) எனும் பெயர்கள் பிற அணிவிளக்கி நிறகின்றன.

புத்தனுக்கு அமையும் போர்தி வேந்தன் எனும் பெயரைப் பிங்கலம் (194) தருகினறது. 'முனோரணி பொருந்திய வாகும்' எனப் பிரபந்தத் திரட்டு கூறுவதால் அருகனுக்கும புத்தனுக்கும் சில ஒப்புமை அணிகள் அமையலாம் என நினைக்க இடம் அமைகின்றது. பூமிசை நடந்தோன்-பார்மிசை நடந்தோன். பசவன்-பகவன், முனைவன்-முனைவன் என இருவருக்கும் பிங்கலம் (194, 191) தரும் ஒத்த பெயாகளை இங்கு நினைக்கலாம்.

வேறு

253 ஆதியரி வேதன்மனை யார்முனவர் மக்கண்மனை
யார்மகப திப்புணருவோ
ரோதுபிறர் மாதரவர் தம்மணிய ரேகவுரி
யோங்கரி நடத்துவளுரு
வேதமறு நீலமலர் மிற்குநட மேபாவை
யேறுமலர் மேனிசெமையே
காதிவரு மூர்திமலர் பூரமுரு வெள்ளைகலை
கண்டவர் பெறப்படுமரோ

கடவுளரின மனைவியரும் மக்களும் பெறும் அணிகளின் பொது மையும், கௌரி, மலர்மகள் அணிச் சிறப்பும் கூறப்படுகின்றன.

ஆதி, அரி, வேதன் ஆகியோரின் மனைவியரும், மக்களும், அவர் மனைவியரும், இந்திரன் மனைவியரும், கூறப்பட்ட

பிறமாதரும, தம் அணியே பெறுவா. கவுரி, வலிமையுடைய சிஙகத்தை நடததுவாள் அவள உருவம குற்றமற்ற நீலமலர், மின் போன்ற அவளுககு உரிய நடனம் பாவை; இலககுமியான மலர்மகளின் மேனி செம்மை. ஊர்தியாக அமைவது மலா பூரான், உருவம் வெணமை, வெண்மையான ஆடையினள் எனக கலைமகளின் அணி பெறப்படும்.

தூாக்கைக்குரிய அணிகளைப பிஙகலபபெயர் சிலவும் உணர்ததுகின்றன. மாகாளியின ஊர்தியாகப பிங்கலம சிங்கத்தைக் குறிககின்றது (120). 'ஊர்தி பூரமாகும' (159) என நாமகளின ஊர்தியும் அஙகுக் குறிககப்படுகின்றது. (36)

வேறு

254 குணடிகை படிக மாலை
மிண்டிய வித்த கத்தோ
டண்டிய பொத்த கங்கைக்
கொண்டவள் வாணி யாமே

கலைமகளுக்குரிய வருணனை நிலை இங்கு அமைகின்றது.

கமண்டலம, பளிங்கு மாலை, நெருங்கிய ஞானம் என்பனவற்றுடன், சிறநத புத்தகத்தைக் கையில் ஏந்தியவள் வாணியாம்.

பிங்கலம், நாமகளுக்கு உரியதாகத் தரும் பனுவலாட்டி, பாமடந்தை, நூன்மடந்தை (158) என்பன இங்கு இணைத்து நோக்கத்தக்கன. அறுவகை இலக்கணம்,

புலவோர் நாவும் பூத்தவெண் கமலமும்
பளிங்கு வடமும் படிக்கும் சுவடியும்
கலச மாதியும் கலைமகட் குரித்தே (53) (37)

எனச் சுட்டுகின்றது.

வேறு

255 ஆணியு மிதழ்சே ரேடும் பூவும்
பேணிய கையிற் பெறுவா ளேமலா
வாணி சிதேவி மலர்க்கைய ணேமிப்
பாணி பசாங்குசி கருப்புவிற் பரையே

வாணி, சீதேவி, பரை எனபோர் கையில தங்குவன கூறப்படுகினறன.

எழுத்தாணியும், வகிர்ந்த ஓலைகளாலான ஏடும், தாமரை மலரும் மதிப்புடைய கையில் கலைமகள் பெறுவாள். திருமகளும் மலரைக் கையில் உடையவளாம். சக்கரபாணியாகவும், பாசம், அங்குசம் இவை தாங்கியவளாகவும் கரும்புவில்லினையுடைய உமை அமைகின்றாள்.

பிங்கலம் துர்க்கைக்குச் சக்கராயுதி (124) எனும் பெயரைத் தருகின்றது. அறுவகை இலக்கணம் உமையவளுக்கு,

அங்குசம் பாசம் அகல்வாய்ப் பாம்பு
சூலம் கபாலம் சுடர்மணிப் பைம்பூண்
கரும்பொடு பூங்கணை கனற்கட் சீயம்
ஏறுஇவை முதலாம எண்ணில்பல் பெருஞ்சீர்
வெள்ளிவெற் பினன்பால் மேவினட் குரித்தே (49)

எனத் தருவதில் பிரபந்தத் திரட்டுச் செய்தியின் ஒப்புமை அமைகின்றது. (38)

வேறு

256 சிருரு முதற்சில சிலர்க்கிலை மகற்குரிய
தேவி கடையஞ்செய் நடமே
காருருவி காளியரி யேறலகை யினகொடியெண்
கைம்முந் நயனங் கழுமுளே
யாருரு மொருதுர்க்கை யுறைபாலை யொருமுவிழி
யெண்கை கலையினூர்தி யயில்வா
ள்ரும்வ ளைசூலமுறு மாற்கிளை யாளாடன்
மரக்கா லுடைய ளென்று மிகவே

வேறு

257 ஆனையத ளாடை
யேனையணி யெல்லா
மானையணி வான்சேர்
தேனைநிகர் வாகோ

இந்திராணி, காளி, துர்க்கை ஆகியோர்க்குரிய அணியும் பிறவும் உணர்த்தப படுகின்றன.

சீரிய உருவம் முதலிய ஒரு சில சிலருக்குக் கூறப்படவில்லை. சதமகனாகிய இந்திரனுக்குரிய தேவி இந்திராணி செய்த நடம்

கடையமாம். கரிய உருவமுடையவள் காளி. சிங்கம் அவளுக்கு ஏறாம். அலகையைக் கொடியாக உடையவள். எட்டுக் கரங்களும் மூன்று கண்களும் உடையவள். சூலம் ஏந்தியவள். துர்க்கை தங்கும் இடம் பாலைவனமாம். மூன்று கண்களும, எட்டுக் கரங்களும் உடையவள். கலையினை ஊர்தியாகக் கொண்டவள். அயில், வெட்டும் வாள், வளைநத சூலம் என்பன வற்றை யுடையவள். முறை, திருமாலுக்குத் தங்கையாம். செய்த நடம் மரக்கால்.

ஆனைத்தோல் உடையாம். பிற அணிகள் எல்லாம், மானை ஏந்திய சிறந்த சிவபிரானைச் சேர்ந்த தேன்போன்ற உமைக்கு உரியனவற்றை ஒத்து அமையும்.

மாகாளிக்குரிய ஊர்தி சிங்கம், கொடி அலகை, படை சூலம் (120) எனப் பிங்கலமும் குறிப்பிடும். முக்கண்ணி, எண்டோளி (119) எனும் பெயர்கள் அங்கு உண்டு. துர்க்கைக்குப் படையும் ஊர்தியும், 'கைவாள் படை வாகனங் கலையாகும்' (125) எனக் குறிக்கப்படுகின்றன. எண்டோளி, மாலுக்கிளையாள். பாலைக் கிழத்தி, கலையூர்தி, வாட்படையாள், சூலி (124) எனப் பிங்கலம் தரும் பெயர்களும் அவள் இயல்புணர்த்துகின்றன (39—40)

வேறு

258 ஏறு தானகர் மேனி நீலம் படையிலங்
கில்லமது தூரவை
மாறு மாலையே யெருக்கலர் துப்பிரன்
மணவிறை கொடிகாகந்
தேறு ணாத்தனைச் சிவனையே மறந்தவர்
திரவிய மிருப்பாதன்
மீறுமூர்க் குளத்தங்கரை முகடிக்கு
விளம்பணி பிறவெண்ணே

முகடிக்குரிய அணிவகைகள் இங்கமைகின்றன.

ஏறும் ஊர்தி கழுதை. மேனியின் நிறம் நீலம். படையாக அமைவது வீட்டை இலங்கும் படி தூய்மைப்படுத்தும் விளக்குமாறு. மாலை, எருக்கு, துப்பிரன் மணம் புரிந்த தலைவனாம். கொடி காகம், சிவனை மறந்தவரின் பொருட் செல்வம் இவளுக்குரிய உணவாம். இருக்கும் இடமாக அமைவது ஊரின் வெளியே உள்ள குளத்தங்கரையாம். இன்னும் முகடிக் குரிய பிற உடைமைகளை எண்ணுக.

பிங்கலம், வானவர் வகையில் மூதேவிக்கு உரிய பெயர், ஊர்தி, படை, கொடி முதலியவற்றைச சுட்டுகின்றது.

வாகனங் கழுதை வன்படை துடைப்பம்
காகம் கொடியெனக் சழறல் வேண்டும் (189)

கழுதை யூர்தி, காக்கைக் கொடியாள் (187) எனும் பெயர்களிலும் இச் செய்திகள் சில பொருந்துகின்றன. (41)

வேறு

259 முன்னவர்க்கும் பின்னவர்க்கு மூண்முதல வுலகநெறி
யன்னவர்க ளணிசிலவே யரியதெய்வ மாகுமா
லுன்னுகதை யேயறிதற் கோதினாங் கூறாதோர்
பன்னுமணி குறைந்த பான்மையோரென் றறியே

இங்குக் கூறப்படாதோர்க்கு அணி இயல்பு சுட்டப்படுகின்றது.

முன்பு கூறியவர்களுக்கும், பின்பு கூறியவர்களுக்கும் உணவு முதலிய உலக இயல்புகளுக்கேற்ப அமையும். அன்னாரின் விசேட அணிகள் சிலவும் அரிய தெய்வங்களின் படி ஆகும். எனவே அதனை உன்னுக. அவற்றை அறிவதற்காகக் கூறினேன். கூறாதவர்களுக்கு உரிய அணிகள் குறைந்த இயல்பினர் என அறிக. (42)

வேறு

260 மரகத வல்லி
ஒருகமு குறைவாள்
வரியயில் விடையா
டருமமி னாமே

தருமதேவதைக்குரிய சிறப்புகள் உணர்த்தப்படுகின்றன.

மரகதவல்லி, கமுக, மரத்தின் கீழ் தங்குபவளாம். வடிவுடைய சூலாயுதமும், விடையுமுவையள். தருமதேவதை எனப்படுவாள்.

பிங்கல நிகண்டு, ஒரு சூத்திரத்தில் தரும தேவதைக்குரிய பெயர்களைச் சுட்டுமிடத்தில் இங்கமையும் செய்திகள் சில இடம் பெறுகின்றன.

மரகத வல்லி பூக நிழலினள்
பரம சுந்தரி யியக்கி பகவதி
யருகனைத் தரித்தா ளறத்தின் செல்வி
தரும தேவதை யம்பாலிகை பெயரே [190] (43)

வேறு

261 திக்கு நாதரி லசுகினி யேமுதற் சிவனவ னீறாக
மிககுளார்ககுவாகனமசஙகிடாவையமீன் மறிநான மானந்
தக்க மால்விடை படைமழுப் பாசமே சககர மயில்வாளே
தொக்க செண்டு சூலந்திகழ் முறைமுறை சொன்னிரனிறை
தானே

எண்திசைப் பாலரில் இந்திரன் நீங்கப் பிறருக்குரிய ஊர்தி, படை என்பன கூறப்படுகின்றன.

திசைக்குரிய இறைவர்களில், அக்கினி முதலாக ஈசானன் ஈறாக அமைந்த பெருமையுடையோருக்கு உரிய ஊர்த்தி, ஆட்டுக் கடா, எருமைக் கடா, தண்டிகை, முதலை, மான், குதிரை, இடபம் என்பனவாம். படையாக அமைவன மழு, பாசம், சக்கரம், அயில, வாள், செண்டாயுதம், சூலம் என்பன. இவற்றை முறைமுறையாகவும் நிரனிறையாகவும் கொள்க.

திக்குப் பாலர் எண்மர். அவர் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன, ஈசானன் என்போராவா. இவருக்கு ஊர்தி, ஆயுதம், குறி தேவியர் என்பன பற்றிய செய்தி தொகையகராதியில் அமைகின்றது [பக். 125—126]. (44)

262 ஆனையே யயிராவண நீக்கிய வானைக ளேழாகு
மானமான தேசசிவ னிவைவச்சுதங் கிட்டிண வதிசீர
தானசுத்த பதியுங் கந்த பதியும் கோதையு மெழிலான
பானலந் தடத்திசேர் பதியெழு நகர்பகரவ ருறைவாரே

திசையானைகள் இங்குச் சுட்டப்படுகின்றன.

யானைகள் அயிராவணம் நீங்க ஏழு யானையாம் (பொருள் தெளிவிலலை).

எண்டிசை யானை எவை எனப் பிங்கலம் உரைக்கின்றது.

ஐராவதம் புண்டரீகம் வாமனங் குமுத
மஞ்சனம் புட்பதந்தஞ் சார்வ பூமஞ்
சுப்பிரதீப மெண்டிசை யானைப் பெயரே (20)

தொகை யகராதி, இவற்றின் பிடியின் பெயரும் உரைக்கின்றது (பக். 126). பிரபந்தத் திரட்டு, இவ்வியலில் எண்டிசை யானை யின் பெயரும் பண்பும் பிறவும் உரைக்கின்றது [285-86]. (45)

263 ஆதி யீற்றினர்செம்மையீறொட்டினான்வச்சிர வணனீரோ
னோது வெண்மை மற்றோர் கறுப்பாகு மாலுருநிறம்
வாகனமங்
கோதிலாக் கொலைபொறி யறமு ரோகணி மணியெட்
டீரகங் கொன்றை
சோதி மாலையா மின்னுமே யணியுறிற் றொகுத்தறி
நூலானே

திசைப்பாலர்க்குரிய நிறமும், வாகனமும், அணி போன்றனவும் கூறப்படுகின்றன.

முதலும் இறுதியிலும் அமைபவர் (அச்னி, ஈசானன்) செந் நிறம்; ஈற்றியலாக அமைபவன் (குபேரன்) வசசிர வண்ணன் வருணன் வெண்மை; மற்றவர்கள் கறுப்பாம். இவை சிறப்புடைய நிறம் (பொருள் தெளிவில்லை). (46)

264 சுதைசுவாகிகேசரி விந்தைசவுசலைசுரசைமாந்தினி பாகை
முதியபாரியென்றிவர்மனையிருவராமுன்னவரிருவோர்க்கு
மதிக வெழு நாமுத்தலை கனற்கிலை யத்தமுமீன்கேட்டை
புதிய முக்குளஞ் சோதியே சதைய மான்றலை
யிவைபுகனாளே

அட்டதிக்குப் பாலர்க்குரிய தேவியர், நாள் என்பன கூறப்படு கின்றன.

சுதை, சுவாகி, கேசரி, விந்தை, சவுசலை, சுரசை, மாந்தினி, பாகை, பாரி என்றவர் மனைவியர். முதலிருவரான அக்கினி, யமன் என்போருக்கு இருவர் மனைவியராம. ஏழுநாவும், மூன்று தலையும் கனலோனுக்கு உரியன இவர்கட்கு நாள், அத்தம், கார்த்திகை, கேட்டை, முக்குளம், சோதி, சதையம், மிருகசீரிடம் என்பன. (47)

வேறு

265 பிரமாணி மயேஸ்வரி கவுமாரி நனாரணி
பிசகாத வராகி யிந்திராணி காளி
வரமேவன மேறொடு மயின்மா யவனேறுபுள்
வருசீய நல்யானை முந்திய பேயே

பொருவாகவ மேபடை மறையொடு பினாகயில்
புகழாழி யலாதி வச்சிரஞ் சூலந்
தருவாய நடமேதுடி படையேகுறள் வாழ்வழி
மணியேழ்மலை யாகு மங்கையர் சீரே

சத்த மாதர்க்குரிய பெயரும், ஊர்தியும, ஆயுதமும், நடனமும், படையும் கூறப்படுகின்றன.

பிரமாணி, மயேஸ்வரி, கவுமாரி, நல் நாரணி, தவறாத வராகி, இந்திராணி, காளி என்போர் வருவதற்கு ஏறுவன, அன்னம், ஏறு, மயில், மாயவன் ஏறுகின்ற பறவையான கருடன், சிங்கம், நல்லயானை, பேய் என்னும் பொருத்தமுடைய ஊர்தியாம். படையாக அமைவன வேதம், பினாகு, அயில், புகழுடைய சக்கரம், கலப்பை, வச்சிராயுதம், சூலம் என்பன. மரமாக நின்ற சூரனுக்கு ஆடிய துடியே நடனம். படையாக அமைவது குறட்பூதகணம். வாழும் இடம் தனிவுடைய ஏழு மலையாம். சப்தமாதர் விசேடவணி இது.

பிங்கலம் போன்ற நூல்களும் சத்தமாதர் பெயர் (127), ஊர்தி (128), படை (129) என்பனவற்றைப் பேசுகின்றன. சத்த மாதர் ஆடல் துடி எனவும் அந்நூல் கூறுகின்றது. (1455)

மலைகள் ஏழு, எவையென தொகையகராதி போன்ற நூல்கள் (பக். 183) பேசுகின்றன். கைலை, இமயம், மந்திரம், விந்தம், நிடதம், எமகூடம், நீலகிரி எனபன. (48)

வேறு

266 அதிதி தருமனயன் மாலே யங்கிராவே பிருகு
கதிர்ததை விசாக மாரல் பூராடமாரல் பூராடம்
புதியபூசம் ரேபதியே புகர்பெற்றொரு நாட்களுங் குதிரை
கதிர்நீலன் கேதேழ புகர்பத் தொழிந்தகோ ளெட்டே

அதிதி முதலியவருக்கு நாளும் கோளும் எவை என்பது இங்குக் கூறப்படுகின்றது.

அதிதி, தருமன், அயன், மால், அங்கிரா, பிருகு, கதிர் எனபவர்களுக்கு, விசாகம், ஆரல், பூராடம், ஆரல், பூராடம், புனர்பூசம், இரேவதி என்பன நிறம்பெற்ற ஒப்பற்ற நாள் (பொருள் தெளிவில்லை). (49)

வேறு

267 அருக்க னூர்தி யோருருட்டேர்
மருச்சார் மதிக்கு விமானமாங்
குருக்க ளமரர்க்கு கொடுவரியாந்
தருக்குங் காகஞ சநிதனக்கே

கடவுளர் சிலருக்குரிய வாகனம் கூறப்படுகின்றது.

சூரியனின் ஊர்தி ஓர் உருளையுடைய தேராம். புட்ப விமானம் சந்திரனுக்கு வாகனம். தேவர்களுக்கு வாகனம் கொடுவரியான புலியாம். சனிக்கு, காகம் ஊர்தி.

அருக்கன் ஊர்தியை, தனிக்கால் பொற்றேர் (222) எனவும் சந்திரன் ஊர்தியை, வெண்மதி யூர்தி விமானமாகும் (228) எனவும் பிங்கலம் குறிப்பிடுகின்றது. (50)

வேறு

268 செவ்வாய் புதற்கும் விமானமாஞ்
சிறந்த வுடுவின் றொகைக்குமவை
வெவவா ளரவு மிரண்டினுக்கும்
வேக விரதங் கரமிரண்டா
மொவ்வா நிறமே கருமைசெம்மை
ஒளிகொள் செம்மைவெண்மைசெம்மை
கவ்வா நீன்மை பொன்மைவெண்மை
கருமை கதிர்நீ வமுந்தருமே

கடவுளர் சிலர்க்குரிய ஊர்தியும், கைகளின் எண்ணிக்கையும், நிறமும் கூறப்படுகின்றன.

செவவாய், புதன் எனும் கடவுளருக்கும் சந்திரன்போன்று விமானமே ஊர்தியாக அமைகின்றது. சிறப்புடைய இருபத்தியேழு தொகையான நட்சத்திரங்களுக்கும் அதுவேயாம். இராகு, கேது எனும் பாம்புகளான இரண்டு கிரகங்களுக்கும் விரைவாகச் செல்லும் இரதம ஊர்தி. இவர்க்குக் கைகள் இரண்டு. இவர்கட்கு முறையே பொருந்துகின்ற நிறம் கருமை செம்மை ஒளிபொருந்திய செம்மை வெண்மை செம்மை நீலம் பொன் வெண்மை, கருமை என்பன. கதிரவன் நீலமும் தரப் பெறும்.

அபிதான சிந்தாமணி, சூரியன், செம்மை, சந்திரன், வெண்மை, செவ்வாய் செம்மை, புதன் பச்சை, வியாழன் மஞ்சள், சுக்கிரன் வெள்ளை, சனி கறுப்பு, இராகு கறுப்பு, கேது செம்மை என நிறங்கள் அறிய உதவுகின்றது (பக். 434-35).

நவககிரகம் பற்றிய நூல்கள் இவற்றை விளக்கும். (51)

வேறு

269 ஒன்ப தாயிரம் யோசனை பருதிமார்
புவாமதிக் கிரட்டித்தாம்
பின்பா மண்டில மும்மடங் காகுமாற்
பேசிய வெள்ளிக்கே
யன்பு மேவ மூவா யிரத்தொடு
முந்நூற்றெழு பத்தைந்தாம்
பொன்பி றந்தவீ ராயிரத் தஞ்சுநூற்
றொருமுப்பத் தொருகாலே

270 காரி சேய்க்கறு நூற்று முப்பக்திரண்டே
முக்கான் மாகாணி
யார்புதற் கெட்டு நாலுமா முநதிரி
நூற்றைம்ப தருந்தூரந்
தேரிற் பாம்புகட் குவாமதி மண்டலஞ்
செப்பலாம் பிறமீன்க
ளார நோக்கிலே புதனவன் மண்டலத்
தளவையென் றுரைப்பாரே

பருதி முதலியவற்றின் தூரஅளவு மொழியப்படுகின்றது.

ஒன்பதாயிரம் யோசனை தூரம் பருதிக்கு உரியது; உவா மதிக்கு அதன் இரட்டியாம். இவற்றுக்கு உரிய மண்டலம் மும்மடங்காம். வெள்ளிக்கு மூவாயிரதமொடு முந்நூற்று எழுபத்தைந்து யோசனை தூரமாம். வியாழனுக்கு ஈராயிரத்து ஐந்நூற்று முப்பத்தொருகால் அளவாம;

சனி, செவ்வாய் ஆகியவற்றிற்கு அறுநூற்று முப்பத்தியிரண்டே முக்கால் மாகாணியாம: புதனுக்கு நூற்றைம்பதும், எட்டு நாலுமா முந்திரியுமாம; அரிய தூரம் தேர்ந்தால், பாம்புகளான இராகு கேதுவுக்கு மதியின் மண்டிலமானதைக் கூறலாம். பிற நாள்களைப் பொருந்த நோக்கினால் புதனின் மண்டலத்தின் அளவு என்று கூறுவர்.

நவக்கிரக மஞ்சரி, நவக்கிரக மாலை எனும் நூல்கள் இவற்றைக் கூறி விளக்கும். (52-53)

வேறு

271 மீறுமுசை பிரத்தியுசை கதிர்மதிக்கே யுடுக்கள்
விளங்குசேய்க் காங்கிபுதற் கிளைதாரை குருவுக்
கூறுபடு விலச்சை வெள்ளிதனக் கனிட்டையுறு சநிக்குக்
கெடுவி பாம்புகட்கு விறுஞ்சை பிறுஞ்சை
கூறுபெண்டிராம் புதல்வர் கதிர்க்கியமன் சனியே
குளிர மதிக்குப் புகன்றனத்தன் வருணன்குருமார்கட்
கீறிலா வாயுவொரு நிருதி செவ்வாய்க் கனலோ
விசைபுதற்கு விச்சுருவாச் சனிக்குத் துப்பிரனே

கதிர் முதலியோர்க்குரிய மனைவியரும், புதல்வரும் கூறப்படுகின்றனர்.

உசை, பிரத்தியுசை என்பவர் கதிரவன் மனைவியர். சந்திரனுக்கு இருபத்தியேழு நட்சத்திரங்கள். விளங்குகின்ற செவ்வாய்க்கு காங்கி புதனுக்கு இளை, தாரை என்போர்: குருவுக்குக் கூறுபடுகின்ற இலச்சை. வெள்ளியோனுக்கு அனிட்டை. சனிக்குக் கெடுவி. இராகு கேது எனும பாம்புகட்கு விறுஞ்சை, பிறுஞ்சை என்பவர் மனைவியாம். புதலவர், கதிரவனுக்கு இயமன், சனி என்போர் குளிர்ச்சியுடைய சந்திரனுக்கு, புதன் தனத்தன், வருணன் என்போர். குருவுக்கு முடிவற்ற வாயுவுடன் நிருதியாம். செவ்வாய்க்கு, அனலோன். இசைந்த புதனுக்கு விச்சுருவா சனிக்குத் துப்பிரன். (54)

272 வந்த காசிபன் மனைவி யதிதி மக்க டேவர்
மனைவியரிற் றிதிமக்க ளசுரர் குருவேந்தன்
முந்து வெள்ளியவன் மனைவி வினதை மகன் கருடன்
முதல வருணனு மவன்சேர் கந்துருவின் புதல்வர்
சிந்தைபெறு மாதிசேடன் முதலோர் பிரமன்
சேய்வசிட்டன் கும்பமுனி காசிபனே தக்கன்
கந்துலகாங் காசிபற் கிந்திரனு மகன்மாயை
காதலரு மகவெனவே காட்டி நவில்வாரே

தேவர், அசுரர் முதலியோரின் தோற்றம் தொடர்பான செய்திகள் கூறப்படுகின்றன.

காசியப முனிவரின் மனைவி அதிதி. அவர் மக்கள் தேவர். திதி எனும் மனைவியில தோன்றிய மக்கள் அசுரர். குரு இவர் கட்கு அரசன். சிறப்பில முன்நிற்கின்ற வெள்ளியின் மனைவி வினதை இவர்கள் மகன் கருடன். காசிபனும் அவன் இணைந்த மனைவியருள் கத்துருவைக்கும் பிறந்த புதல்வர் சிந்தனைக்குரிய ஆதிசேடன் முதலிய நாகங்கள். பிரம்மனின் மகன், வசிட்டன், அகத்தியர், காசிபன், தக்கன் என்போர். பற்றுக்கோட்டை உடைய உலகின் காசிபருக்கு இந்திரனும் மகனே. மாயையின் மக்களும், இவருக்கு மகவு எனவே காட்டிக் கூறுவர். (55)

273 கும்ப முனியிடம் பொதிய மனைவியே யிரவை
கொண்ட கவுதமன் மனைவி யகலிகையாம் வசிட்ட
னமபுமனை யருந்ததி மார்க்கண்டன் மனைசெமி
நற்புலத்தியன் மனைவி பிரமி யங்கிராவுக்
கம்பிகை சேடற்கு மனைசேடிகை கானமுடியே
யாயிரமாயிர மாகுங்கண் மூவாயிர மாகுங்
கும்புபுநி யனநதன் வாசுகி தற்கணுறுங்கார்க்
கோடன பற்பன்மா பற்பன்சங்கன் குளிகனுமே

சில முனிவரின உடைமையும், அட்டநாகம் பற்றிய செய்தியும் அமைகின றன.

அகத்திய முனிவருக்கு உரிய இடம், பொதியமலை. மனைவி இரவை. கவுதமன் தவமிருநது பெற்றுக் கொண்ட மனைவி அகலிகை. வசிட்ட முனிவரின் முழு நம்பிக்கைக்குரிய மனைவி அருந்ததி. மார்க்கண்டன் மனைவி செமி. புலத்திய முனிவர் மனைவி பிரமி. அங்கிராவுக்குரியவள் அம்பிகை. ஆதி சேடனுக்கு மனைவி சேடிகை. அழகிய தலைகள் ஆயிரமாயிர மாம். கண்கள் மூவாயிரமாம்; அட்டநாகங்கள், அனந்தன், வாசுகி, தறகண, கார்க்கோடன், பற்பன், மாபற்பன், சங்கன், குளிகன் எனபன.

பிங்கல நிகணடு வானவர் வகையில் அட்டமா நாகங்களின் பெயர் கூறுகின்றது (21). (56)

வேறு

274 அட்டமா நாகமென்ப ரனந்தனே குளிகண் பார்ப்பா
ரிட்ட வாசுகியே சங்க பாலனே இறைவராகும்

வட்டமாந் தக்கன் சிறு மாபற்பன் வணிகராகுந்
துட்டன கார்க்கோடன பறபன் சூத்திரரா குமனறே

அட்டநாகங்கட்கு சாதிப்பகுப்பு இங்கமைகின்றது.

அட்டமாநாகம் என்பதில், அனந்தனும், குளிகனும் அந்தணசாதி. வாசுகி, சங்கபாலன என்போர் அரச சாதி. தககன், மாபற்பன் என்பன வணிக சாதி. தீயவனான கார்க்கோடன், பற்பன் என்பன சூத்திர சாதியாம்.

பிஙகலம் வான வகைபற்றிக் கூறுமிடத்து அட்டநாகம் பற்றியும் பேசுகின்றதே யொழிய சாதிப்பகுப்பு கூறவில்லை. (57)

வேறு

275 வார மேழினுஞ் சனியி னிரவினிலு முறையே
வாழரவ மிரைக்கெழும்புஞ சாதிமுத னான்கு
மாராண் பெண்பின் பாம்பா மிரைமணம் வாயுவதே
யறுகுவேர் வண்டோந்தி யெலிதவளை மீனே
சாரிடங் கோயிற்றரு வின்மனை புற்றி லாடறா னணாநதே
சேவை தெற்கு திசி பூப்பார்ச்கு
நேர்படத்தின் குறிசங்கு சக்கரம் விற்புளடி
நிறஞசெமமை பொனவெண்மை கருமை
பெறுமன்னோ

அட்டநாகங்கட்குரிய பண்புகள் சில விளக்கப்படுகின்றன.

வாரத்தின் ஏழுநாட்களிலும், சனிக் கிழமையின் இரவுநேரத்திலும முறையாக இந்நாகங்கள் இரைஉண்ணும நோக்கத்துடன் எழும். நான்கு சாதிப்பகுப்புத் தரப்பட்ட நாகங்கள் ஆணும். பின் வருவன பெண். அவற்றுக்கு இரையாக அமைவன, மண், நீர், காற்று, அறுகுவேர், வணடு, ஓந்தி, எலி, தவளை, மீன் என்பனவாம். அவை தங்குகின்ற இடங்கள், கோயில், மரப்பொந்து, புற்று என்பனவாம். ஆடல் புரியும்போது தலைதூக்கி அமையும. பாம்பினைச் சேவை செய்யும் போது, பெண்களுக்கு உரியது தெற்குத் திசையாம். இப்பாம்புகளின் படத்தின் அடையாளம், சங்கு, சக்கரம், வில, பறவைக்கால் என்பனவாம். நிறம், செம்மை, பொன்மை, வெண்மை, கருமை என்பனவாம்.

'தருவின்மனை' என்றதால் மரப்பொந்து என்பதனறி மரமும மனையும் எனவும் கொள்ளலாம். (58)

276 மணநாவி தாழை பாதிரி யிருப்பை தந்தம்
வளர்காளி காளாத்தி யிமனிம தூதனுமாம்
பணவரவப் புணர்ச்சி யாடித் திங்கண் முட்டை
பகர்ந்த கார்த்திகை மாத மிருநூற்று நாற்பா
னிணைநாள் கேழ்நாளினி விட்டெழு நாளினிலே
யிருநூற் றிருபத்தெட்டு முட்டை குடித் திருபா
னணையண்டந் தனினாலு கெடவிருபா னெழுநா
ளரவங்கள் பிறக்கு நாலாறு காலோடே

இவ் அரவங்கட்குரிய, மணம், பல்லின் பெயர், முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல போன்றன கூறப்படுகின்றன.

இந்நாகங்கட்குரிய மணம், கஸ்தூரி, தாழை, பாதிரி, இருப்பை என்பனவாம். நச்சுப் பல்லின் பெயர் காளி, காளாத்தி, இமன், இமதூதன் என்பன. படமுடைய பாம்புகளின் இணைச் சேர்க்கை ஆடிமாதம் நிகழும. முட்டையிடுவது கார்த்திகை மாதமாம். நானூற்று எண்பது முட்டைகளை இருபத்தெட்டு நாட்களில் இட்டு, ஏழு நாட்களில், அவற்றில் இருநூற்றிருபத் தெட்டு முட்டைகளைக் குடித்து, இருபதாக அணைத்த முட்டைகளில் நான்கு கெட, இருபதது ஏழு நாட்களில் அரவக் குஞ்சுகள் பிறக்கும்.

அபிதான சிந்தாமணி இதனை ஒத்த சில எண்ணங்களைத் தருகினறது. 'இவை ஆடி மாதம் கருக்கொண்டு கார்த்திகையில் பொரிக்கும். இவை 200—க்கு மேல் முட்டையிடும் அவற்றில் சில கெடும். இவை பிறந்த பதது நாட்களில் ஆதித்தனை நோக்கிப் பார்க்க மேற்பற்கள் நான்கிலும் விஷம் ஊறும்... இவற்றின் பற்கள் காளி, காளாத்திரி, யமன், யமதூதி' (பக். 1082) (59)

வேறு

277 பிறந்த வெழுநாட் கதிரோனைப்
பார்தபே பிறஙகு நஞ்சமுறு
மறைந்த மேல்வா யலகிருகசு
மப்பற் கரிய துளையுண்டா
முறும்ப னாகந் தத்தநெறி
யுலகி லரவங் களுக்குமாஞ்
சிறநத கருடன் முதலவைக்குச்
சினந்தீர்ந் தஞ்சும பெரும்பணியே

நாகங்களின் வளர்ச்சியும், பகையும் உணர்த்தப்படுகின்றன.

பிறந்த ஏழு நாட்கள் கதிரவனைப் பார்த்து விளங்கும். நஞ்சம் உறும். மறைந்து, மேல்வாயில் இருக்கும் விடப்பல்லில் கரிய துளை உண்டாகும். சேரும் பல்நாகத்தின் இந்த நெறிகள் உலகில் அனைத்துப் பாம்புக்கும் ஆகும். சிறந்த கருடன் முதலி யவைக்கு, சினம் தீர்ந்து, அஞ்சும் இப் பெரும்பாம்புகள்.

பாம்பு பற்றிய இத்தகு செய்திகள் சித்திராரூடம் போன்ற வற்றில் இருப்பதாகத் தெரிகின்றது (பார்க்க, அபிதான சிந்தா மணி, பக். 1082) (60)

வேறு

278 ஆரூடஞ் சொன்னநெறி யவையெலாஞ் சொலிலியலுக்
காருகமா சாகையினாற் றெய்வத்தோ டணிந்துரைத்தா
மோருருவம் பாம்பேனும் பிறவேனு முயர்ந்தவருக்
கேருலவு மெம்மெய்யும் பெறப்படுவா ரென்பாரே

கூறும் பொருளின் நிலையும், தெய்வங்களைக் கூறுமிடத்தில் நாகங்களைக் கூறுவதற்கு அமைதியும் மொழியப்படுகின்றன.

ஆரூட நூல்கள் சொன்ன நெறிகளை எல்லாம் இங்குச் சொன்னால், இவ இயலின் நுவல் பொருளுக்கு மற்றொன்று விரிததல் எனும் குற்றம் ஏற்படும். எனவே தெய்வங்களோடு சார்த்தி உரைத்தேன். உருவம் பாம்பாகவோ பிறவாகவோ இருப்பினும், உயர்வுடையவர்களுக்கு, அழகுடைய எந்த உடம்பும் பெறப்படும் என்பர்.

'ஆரூடம்' என இவர் சித்தராரூடம் போன்ற நூல்களைக் குறிப்பிட்டிருக்கலாம். (61)

279 முன்னவர்க்கு மனைவியரே முதலவணி யெல்லாமுந்
துன்னுமவர் முதற்றெற்ற வணியும்பின் றொடுமணியு
மின்னுமறு பெயராயும் விரித்துரைத்தாந் தோற்றாம
னுன்னிவிடா திரொன்பான் புராணத்து முற்றறிநீ

கூறப்பட்டோருக்குப் பிறவும் உரிய எனவும், இன்னும் அறிய பதி னெண் புராணம் துணைநிற்கும் எனவும் கூறப்படுகின்றது.

முன்சுட்டியவர்களுக்கு மனைவியர் முதலிய அணிகள் எல்லாம பொருந்தும. அவர் முன்னோர் ஏறற அணியும் பின்

அணிந்தனவும, மறுபெயராகவும் விரித்துரைத்தோம். வெளிப் படையாக அன்றி உளனுமபடி அமைந்த இவற்றைப பதினெண் புராணங்களிலும விடாது கண்டு நீ அறிக.

பதினெண் புராணமும், பதினெண் உபபுராணமும பற்றிய செய்திகள வடமொழியில் அமைகின்றன. பிங்கலம் இவற்றின் பட்டியலை அமைக்கிறது. (444-45)

மசசங் கூர்மம் வராகம வாமனம்
பதுமம வைணவம் பாகவதம பிரமஞ்
சைவ மிலிங்கம் பௌடிய நாரதியங்
காருடம் பிரம கைவாத்தங் காந்த
மார்ககண் டேயமாக கினேயம் பிரமாணடம
பாற்படு பதினெண் புராண மாகும (444) (62)

வேறு

280 சஙகநிதி நந்துருவம் பறபநிதி பூவுருவந தனியைந்தாருப்
பொங்குமர வுருவமாய்பசுவுருவந்தேனுவணி புறக்கலாகத்
தங்குருவ மாஞ்சிந்தா மணியைந்தும வேண்டியவை
தருங்காண் வெண்மை
நுங்குசெமமை பொனமைவெண்மைசெம்மையென
வயிந்திரியர் நுவனறாரன்றே

தேவ உலகப் பொருட்கள் ஐந்திற்கு உருவமும், இயல்பும், நிறமும் கூறபபடுகின்றது.

சங்க நிதியின வடிவம் சங்கு. பதமநிதியின் வடிவம் தாமரை மலா. தனிசசிறப்புடைய ஐவகைக் கற்பகத் தருக்களின் வடிவம் பெரியமரம. காமதேனு, பசுவடிவினது அழகுபெற்ற கல்லாகத் தங்குகின்ற உருவமாம சிந்தாமணிககு இவை ஐந்தும் வேண்டியனவற்றை அளிக்கும். இவற்றின் நிறம் முறையே வெண்மை, செம்மை, பொன்மை, வெண்மை, செம்மை என்று அயிந்திரர் கூறினார். (63)

வேறு

281 அனாதி நித்திய மொன்று தள்ளி
னமலை தக்கன் முதலோர்க்கு மமமை பிள்ளை
தனாதி தமக்கு மிறைவன் வைத்த
தந்தக்கு மிரத முற்றாள் சாயவெ டேவி

மனாதியொடு கடற்பிறந்தாள பொறியவள் சேர்
மனஞ் செனித்து மதர்ப்பி லுற்றோன்
விநோத மதன் பசப்பி லுறறோன் சாமன்
மயலதி லுற்றார் வேலன் பெண்டீர்

சிவனை நீக்கிப் பிறருக்குப் பிறப்பு மொழிகின்றார்.

அனாதி எனவும் நித்தியம் எனவும் கூறப்பட்ட சிவனை நீக்கினால், அமலை, தக்கன் முதலோர்க்கும் தாய். பிள்ளை தனாதி தமக்குய இறைவனை வைத்த தந்தைக்குமிரதம் உற்றாள் சாயவள் தேவி. மனா ஆதியொடு கடலில் பிறந்தாள் பொறியவள். சேர் மனம் செனிதது மதர்பபில் உறறவன் விநோத மதன். பசப்பில் உற்றவன சாமன். மயலதில் உற்றவன வேலன் (பொருள் தெளிவில்லை) (64)

வேறு

282 வெள்ளைமலர் கலைப்பிறந்தா ளலர்வாணி மாது
மீறுபரை காற்சிலபபி னவமணியின் பேரா
ருள்ளுநவ வீரர்தமைப் பெற்றதாய் மார்க
ளுலகமே ழினுக்கு மேழுருவமாய்க் காக்க
களவிழிப் பரைசென்னி நெற்றிமுக மூக்குக்
கண்வாய் கண்டமதி லுற்றார்சத்த கனிமா
ரள்ளிலைவேற பெருமபூதர் வரவேயரவிற் பிறந்தா
ரலகையொடு சிலதெய்வமு மவர்களீன் றவரே

கலைமகள், சத்தமாதர் போன்றோர் பிறப்புக் கூறப்படுகின்றது.

வெள்ளை மலரில் வாணி பிறந்தாள். பரையின் காற் சிலம்பிலுள்ள ஒன்பது மணிகளின் பெயரால், குறிப்பிடத்தக்க ஒன்பான வீரர்களைப் பெற்ற தாய்மார்கள், ஏழு உலகங்களுக்கும் ஏழு உருவில் காப்பதற்காக, பரையின் சென்னி, நெற்றி, முகம், மூக்கு, கண், வாய், கண்டம் எனும் ஏழிடத்திலும் தோன்றினர் சத்த கன்னியர். கூரிய இலைத் தலையுடைய வேலேந்திய பெரும பூதர் வர, அரவிடம் பிறந்தவர்கள் அலகையும சில தெய்வங்களும். (65)

வேறு

283 ஓமெனும் பிரணவமந்திரத் துற்றவன் விநாயகன் குமரவேளான்
வேமழற் கணொடு மிருக ணுற்றவன் வீரனுந் தழல்
விழிக்கண்வந்
தமகன் சிவன திந்தியத்தி னுதித்தவன் பரவு மய்யனே
மாமனந் திகழ் சிலாதரன் மைந்தனரன் வாயில்காவ
லுறுநந்தியே

வேறு

284 நாலுகர முள்ளான்
கோனுமிட பம்போ
லேலுமுக னங்கைக்
கோலுளவ னந்தி

விநாயகன், குமரன், வீரன், அய்யன், நந்தி ஆகியோர் பிறப்பு நிலை கூறப்படுகிறது.

'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தில் தோன்றியவன் விநாயகன். முருகன், சிவனின் கனல் கண்ணுடன் இரு கண்களில் தோன்றியவன். வீரபத்திரனும் நெருப்புக்கண்ணில் தோன்றியவனே. சிவனது இந்தியத்தில் தோன்றியவன் பரவப்படும் ஐயனார். பெருமனமுடைய சிலாதரனின் மைந்தன் சிவனின் வாயில் காப்போனான நந்தியாம்.

நான்கு கரம் உடையவன், அழகிய காளை போன்ற முகத்தினன், கையில் கோல் வைத்திருப்பவன், நந்தி. (66-67)

வேறு

285 புண்டரிகம் வாமனங் குமுதம் மஞ்சனமே
புட்பதந்தஞ் சாருவபவுமஞ் சுப்பிர தீப
மண்டயி ராவண மொழிந்தவவ் வேழுயானை
வாய்ந்தநிறம் வெள்ளைகொம்பு நந்நான் காமுயர்
மண்டுமிவ் வுலகத்தளவை யாகிடும்பின் சுருங்கு
மண்டமெலாஞ் சுமக்கு நிலஞ்சுமக்கு மரவம்போற்
றுண்டவடி மருப்பீரெட் டாயிரம் யோசனையாந்
துன்னுகன நீளமத னிரட்டியெனச் சொல்வரா

286 ஆயிரம் யோசனை நிறுத்தி யடுக்கடுக் காயடிதொட்
டாரு நுனிவரின் மருப்புக் களம்பதி னாறொருபங்
கேயு மானையி னீளமுலகளவை குறைந்து
மியல வேண்டிற் றெய்வ மாகையினா லியலும்
பாயிரு ளஞ்சுறு மஞ்சன மொன்று மேதவிரப்
பகரேழு மமுதி லுற்றவெனப பகரு நூலே
யாய வேண்டிக் கிடத்தி லிருட்பூமிக் கப்பா
லரசு நிலைவர வேண்டிலெவ்விடத்தும் வருமே

எண்டிசை யானையின் பெயரும், இயல்பும் பிறவும் உணர்த்தப்படுகின்றன.

புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்ப கந்தம், சார்வபூமம், சுப்பிரதிபம எனும் அயிராவணம் ஒழிந்த அநத ஏழு யானைகள் சொண்ட நிறம வெண்மை தநதங்கள் நான்காம். இவ் உலகத்தின அளவாகட பெருகுதலும், பின கருங்குதலுமான ஆற்றலுடையது நிலத்தைச் சுமக்கும எண்திசை நாகம் போன்று, இவை அண்டங்கள் எல்லாவற்றையும் சுமக்கும். அடிமுதல் மருப்புவரையுள்ள தூரம் பதினாறாயிரம் யோசனை. நெருங்குகின்ற சுமுழம் நீளமும அதன இரட்டி எனக் கூறுவர்.

ஆயிரம் யோசனையாக ஆககி நிறுத்தி, அடுக்கடுக்காக, அடிமுதல் நுனிவரை வநதால. மருபபுச்கு இடம் பதினாறில ஒரு பங்காக இணையும். யானையின நீளம, உலகின் அளவு குறைந்தும் நிகழ வேணடுமெனில், தெய்வ இயலபுடைமை பற்றி ஆகும். பரவிய இருள் பொருந்திய நஞ்சில் தோன்றிய அஞ்சனம் எனும் யானை ஒழியக கூறிய ஏழும் அமுதத்தில் தோன்றின என நூல்கள் கூறும். அவ் யானையை ஆய்தற்காக நிலத்தில் கிடத்தினால், இருளநிறைந்த பூமிக்கு அப்பாலும் செல்லும். அரசு நிலைவர வேண்டுமாயின் எவ்விடத்தும் வரும். (68-69)

287 நிதிமணி கற்பகந் தேனுவைந்து மமுதினிலே
நேயத்தால் வந்தனவாம் பூரணை புட்கலைமா
ளை ஏழு சுவாயம்பு மனுகுலச் சேயென்று
மகணிதரு பந்தனைமா றெனறுமே புகல்வா
ரதிவீரன மனைவி பவரமக னாகுமிரு பானான்
பவமுத் தினத்தை மாலைகளாப் புனைவோர்
மதிகோணவவீரரன்னை மாரெழுவர் பரைபொன்
வாணிதன்மி யொழிபுரைக் குவியலின்றி வகையே

ஐவகை நிதி, பிற கடவுளர்க்குரிய தோற்றம் கூறப்படுகின்றது.

சங்கம், பதுமம் ஆகிய இரு நிதிகள், சிந்தாமணி, சற்பகத் தரு, காமதேனு எனும் ஐந்தும், அமுதத்தில் அன்பால் வந்தன வாம். பூரணையும, புட்களைமானும் மிருதியாகப் பொருந்திய சுவாயம்புமனுவின் குலததின் குழந்தை என்றும், பூமாதேவி தரு கின்றவர் என்றும் கூறுவர். வீரபத்திரன் மனைவி பரையின் மகளாம், இருபத்து நான்குடன் மூன்றான நாள்களை மாலை யாகப் புனைபவர் மதி; நவவீரரின் அன்னைமார் எழுவர்; பரை, பொன்வாணி, தருமி இவருக்குரிய ஒழிபு உரைக்கும் இயலின்றி வகையே. (70)

288 ஒருமுக மென்றிடி லிருகை கண்ணிரண் டென்றுனலா
முன்னின்முன் னோர்நூற்படியுமுறுதலுநன்றாமா
விருமைபெறு மின்னவர் தன்னணி பெறுவா ரின்னாரெனி
லவர்கரு முலகத்தின வழங்குநெறி சொல்வாய்
பரவுமிப் பொருளெவைக்கு மணிகூற மயங்கிப்
பாடாமன் மறந்தே மேலறிந்து கொண்டு தள்ளி
மருவிடவை யணிபிருக்கக் கூறாம லிருந்தால்
வழக்கமுறு மணியறிந்து செய்யுட்கள் பாடே

அணிகூறல் பற்றிய சில பொது எண்ணங்களும், இலக்கியத்தில் அதனை அறிந்து கையாளும் நிலையும கூறபபடுகினறது.

ஒருமுகம் என்றால், இரண்டு கைகள், கண்கள் இரண்டு என உணரலாம். நினைத்தால், முன்னோர் உரைதத நெறிப்படியும் பொருந்துதல் நன்றாம். மறுமை பெறுகின்ற மனை போன்ற வான்மகளிருக்குரிய அணிகளைப் பெறுபவர் இன்னார் என்றால் அவருக்கும உலகத்தில வழங்குகின்ற முறைக்கு ஏற்பக் கூறுக. கூறப்பட்ட இப்பொருட்கள் எல்லாவற்றிற்கும் உரிய அணிகளை, மயங்கக் கூறலாகாது. மறந்துவிட்டதை மேலறிந்து தள்ளி மருவிடவை அணிகள் வழக்கில இருக்க, இந்நூல் கூறாது விட்டிருந்தால், வழங்குகின்ற அவ் விசேடவணிகளை அறிந்து செய்யுள் பாடுக. (71)

வேறு

289 அலப்படை பிடித்திசை பனைக்கொடி யுயர்த்தவ
னரிக்குமுதிர் கற்புருஷ பலதேவ
னுலக்கையை யெடுத்தவனு மக்கொடி கணிக்கிசைய
வுற்றவனு மெய்க்குழையை யொருகாதிற்

கலக்கடை தரித்தவனு மச்சினியிரப்பதி
கலக்கமரு வுற்றவனு மவனாமே
தலத்தில வசைக்கணி மழுப்படை தரித்தவர்
சிலைக்குரு வெனப்படுவர் பரசுராமர்

பலதேவன் அணிகள் கூறப்படுகின்றன. பரசுராமர் பற்றிய சிறு விளக்கமும் அமைகின்றது.

கலப்பையை ஆயுதமாகக் கொண்டு, இசைகின்ற பனையைக் கொடியாக உயர்த்திய, அரிக்கு மூத்தவனாகச் சிறந்தவன் பலதேவன். உலக்கையைக் கொடியாக எடுத்தவனும், அக் கொடிக்கும், அணிக்கும் இசையப் பொருந்தியவனும், வெண் சங்கக் குழையை ஒரு காதில் அணிந்தவனும், மச்சினி இரேவதி யைக் கலந்து இன்புற்றவனும் அவனாம். உலகத்தோரின் வசைக் குரியதாகக் கணிக்கும் மழுவைப் படையாகக் கொண்டவர், வில்லாற்றலில் ஆசிரியராகத் திகழும் பரசுராமராம்.

பலதேவனை பிங்கல நிகண்டு, பெயரும், படையும் கொடி யும் சுட்டி விளக்குகின்றது. 'படையே கலப்பை கொடி பனை யாகும்' (144) என்பதும், இரேவதி கொழுநன், குண்டலன், அலாயுதன், அச்சுதன் முனனோன், பனந்துசன் (143) எனும் பெயர்களும் பலதேவனின் பலவிசேட அணிகளை உணர்த்தி நிற் கின்றன. (72)

வேறு

290 அண்ட கோச மறைந்தனர் யாவருங்
கண்ட தன்மை கழறிற் பெருகுமால்
துண்டு செய்து தெய்வதத்தினைச் சுட்டியே
கொண்ட வேழி னியல்பினைக் கூறுவாம்

கூறாது விட்டதும், கூறப்போவதும் சுட்டுகின்றார்.

உலக அண்டங்களின் இயல்பினைப் பலர் கூறினர். அவர்கள் கண்டு கூறிய அவ் இயல்பினைக் கூறப்புகுந்தால் அளவின்றி பெருகும். எனவே அதனைக் குறைத்து, தெய்வங்களின இயல் பைக்கூறி, எழுவகை மேகங்களின் தன்மையினைக கூறுவேன.

அண்டகோசம் என இவர் கூறுவதால், அண்டகோள விலா சம் போன்ற நூல்களையும் (பார்கக, 44, உரை), நிகண்டுகளின் முதற்பகுதியில் அமையும் 'வான்வகை'யையும் கருதலாம். வான்

வகை கூறாது வானவர் வகைக்குச் சென்றமை பற்றி, 'அண்ட கோசம்...துண்டு செய்து தெய்வததினைச் சுட்டி' எனக் கூறினர் போலும். (73)

வேறு

291 துலங்குகின்ற ஆவர்த்தம் புட்கரஞ் சங்காரஞ்
சொல்லு மார்வச நீலக்கா ரிருதிரோற் காரி
இலங்குசிலா வருடமான வென்றி நாணுதற்க
ணிடம் பிறந்து நஞ்சுதீக் கன்மணிசெந் நீரே
கலங்குமிடி பெயமுதல செறியுமிருள் கொடுத்துக்
காணப்பட்டன வெல்லா மழிக்குமிவற் றினையும்
அலங்குமவற் றுயிர்களையுந் தன்னிடத்திற் சேர்ப்பா
னருட்பார்வை கொண்டுபரன் சுத்தமாய் நின்றே

எழுவகை மேகமும் அவற்றின் மழைவகையும் உணர்த்தப்படுகின்றன.

விளங்குகின்ற ஆவர்த்தம், புட்கரம், சங்காரம், சொல்லுகின்ற ஆர்வசம், நீலக்கார், இருதிரோற்காரி, ஒளியுடைய சிலா வருஷம் என்றன வெற்றியுடைய சூரியன்போன்ற அரனின் நெற்றிக்கணிடம் பிறந்து, நஞ்சு, தீ, கல், மணி, செந்நீர், கலங்குகின்ற இடி, மழை முதல் செறிகின்ற இருள் கொடுத்து, காணப்பட்டன எல்லாவற்றையும் அழிக்கும். இமமேகங்களையும், அவற்றின் உயிர்களையும், பரன், அருட்பார்வை கொண்டு, சுத்தமாய் நின்று, தன்னிடத்தில் சேர்ப்பான்.

ஏழுமேக வகையும், ஏழு மழை வகையும் பிங்கலம் போன்றவற்றின் வான்வகைப் பகுதியில் விளக்கப்படுகின்றன. ஆயின் பிரபந்தத் திரட்டின் பெயர் பொருள் நிலைகள் அவற்றை நோக்கச் சிறிது வேறுபட்டதாயுள்ளது.

சம்வர்த்த மாவர்த்தம் புட்கலா வர்த்தஞ்
சங்கா ரித்தந் துரோணங் காளமுகி
நீல வருணமேழ் மேகப் பெயரே (71)

மணிநீர் பொன்பூ மண்கற் றீயென்
றெழுவகை மேகம் பொழிமாரி யேழ (72)

292 அந்தமுகி லிந்தநாட் கயிலையுறு மவற்றி
னாயமுகி லோரேழும் வேந்தனுரை கடவா
திந்தவுல கத்துறு பூலோகமேற் பதினா
யிரம்பதி னாயிரமாக வடுக்குற்ற நிலையில்
முந்திரவி பதங்காறு முறுந்தச வாயுவினில்
மூன்றொழியக் கூடுமொரு மழைக்குமூன் றயுதம்
வந்தமேற் கோடிமழை யினங்கொள்ளும் பெயரு
மழையின் பேரும்பெய்யு மழையினையும் வகுப்பாம்

மேகங்களின் நிலையும், வாயுவுடன் இணைந்து செயல்படும் என்பதும் உணர்த்தப்படுகின்றன.

அந்த ஏழுமேகங்களும், தற்காலத்தில் கயிலை மலையைச் சார்ந்து அமையும். அவற்றாலாய மேகங்கள் ஏழும் இந்திரனின் ஆணையைக் கடக்காது இந்த பூவுலகத்தில் பொருந்தும். பூலோகத்தின்மீது, பதினாயிரம் பதினாயிரமாக அடுக்குகின்ற நிலையில், முந்துகின்ற சூரியனின் பாதம் வரை அமைகின்ற பத்து விதமான காற்றுகளில், மூன்று நீங்கப் பிற ஏழும், ஏழு மேகங்களுடனும் கூடுகின்ற மழைக்கு, ஊன்றுகின்ற ஆயுதம், மேற்குத் திசையில் அமையும. இவவாறமையும் மழையினங்கள் ஏற்கும் பெயரும், மழைகளின் பெயருப், அவை பெய்யும் மழையையும் வகுப்பேன்.

293 விதன னுவன பிறசேதகன் றழற்பிற சேதன்
விளங்கு சேசனி அவுதகன் வயிராங்கதனே
புதிய வயுத்தித னிரைவதன் சங்கவர்தன்
போற்றிய விசங்கவர்தன் வாயுப் பத்தா
முதிய சத்துவக்க னுரோதக னுபலககினியே
முற்று வயுததியுதன் புட்டிவி தன்மைப் பகையே
அதிர குரோதன னெனசசொல் லிவையேழு மேக
மறைந்த சேசனி வாயு நிலைமுதன் மேனமேவும்

வாயுக்கள் பத்தின் பெயரும், அவையியக்கும் மேகங்கள் ஏழின் பெயரும் கூறப்படுகின்றன.

விதனனுவன், பிறசேதகன், தழற்பிறசேதன, சேசனி, அவுதகன், வயிராஙகதன், வயுததிதன, இரைவதன், சங்கவர்தன், விசயங்கவாதன் என வாயு பததாம். சத்துவககன, உரோதகன், உபலக்கினி, வயிததியுதன், புட்டிவிதன், மைப்பகை, குரோதனன்

எனக் கூறப்பட்டும் இவை ஏழு மேகமும், செசனி எனும் வாயுமுத லாக நிரனிறையே பொருந்தும்.

'சேர்சனி வாயு' எனக் கொண்டு சனிமூலையிலும் வாய மூலையிலும் சேரும் மேகம் மழைபொழியும் எனும் எண்ணமும் கொள்ளலாம்.

294 முதல்வாயு விதனனுவனக னற்பறவை யிவைக்கு
முதியபெல னீயுமிரண் டுடலீரஞ் சுவற்றி
மதுவாட்டி மரமுறிக்கு மூன்றதுவே சுழன்று
மனையிடித்து மலையிடித்தே உயிர்க்கனல்தந் தழிக்கும்
அதிர்வாயு வோரேழு மேழ்மேகத் துறவா
மாவித்துப்பெய்மழையையறைகுவன்கேள்முறையே
எதிராதி மழையுயிர்கள் துன்புறவே குளிர்ச்சி
யெய்திநடுக் குற்றழியு மழைபெய்யு மன்றே

295 பின்னதுவெவ் விடம்பெய்யும் பின்னதுமண் ணிரத்தம்
பெருந்தசையோடெலுமபுசிலைஅழல்மாரிபெய்யும்
பின்னதுமின் னசனியாலக் கனலவாதை செய்யும்
பின்னதுநன் நீர்பெய்து பேருலகை வளர்க்கும்
பின்னதுநீர் குடித்தோர்க்குப் பிணிகள்வரச் செய்யும்
பின்னதிறை வர்கசிறைவ ரிகல்வரப்பி டையுறப்
பின்னமுற வேகண்ட மாரிபெய்து கெடுகசும்
பேசுதச வாயுவுமா வகன்வாயுப் பிறிவே

பத்து வாயுக்களின் செயற்பாடும், எழுமேகத்தோடு அவற்றில் ஏழு இணைந்து பெய்யும் மழையும் கூறபபடுகின்றன.

முதல்வாயுவான விதனனுவனகன், நல் பறவை வனக்கு வலிமையும் ஆற்றலும் அளிககும. இரண்டாவதான பிறசேதகன், உடலின் ஈரததை வற்றச் செய்து, மதுவை வாட்டி, மரங்களை முறிக்கும். மூனறாவதான தழறபிறசேதன், சுழன்று வீசி, வீடு களை அழித்து, மலைகளைத் தரைமட்டமாக்கி, உயிர்களை வெப்பமுறச் செய்து அழிககும. பிற வாயுக்கள் ஓரேழும், ஏழு மேகங்களுடன் உறவு கொண்டு, நீர்த்திரள் கொணடு பெய்யும் மழையை முறையே கூறுவேன், கேள். முதல மழை, உயிர்கள் துனபுறுமபடி குளிர்சசி அளிதது நடுங்கி அழியும்படியான மழை பெய்யும.

இரண்டாவது கொடிய நஞ்சு பெய்யும். மூன்றாவது, மண்ணுடன் இரத்தமும் தசையும் எலும்பும் அழியும்படி தீமாரி பொழியும். நான்காவது, மின்னல், இடி என்பனவற்றால் நெருப்பழிவு புரியும். ஐந்தாவது நன்னீர் பெய்து பெரிய உலகை உய்விக்கும். ஆறாவது, நீரைக் குடிப்பவருக்கு நோய்கள் வரும் படியான மழை தரும் ஏழாவது, அரசனுக்கும் அரசனுக்கும் போர்வரும்படி, துன்பம் வர, வேறுபாடு ஏற்படும்படி கண்டமாரி பொழிந்து கெடுக்கும். கூறப்பட்ட பத்துவாயு இவை. வான மண்டலததில் நிறையும் காற்று வேறாம். (77 78)

296 இவையன்றி யிம்மழைக ளிந்திரனே வலினா
வேழ்விதமு மொன்றுபெய்யுங் கூறாத மலர்பொன்
நவமணிநெல் பாறயிர்நெய் நறைகரும்பின் சாறு
நவிலுமே ழினிலொன்றும் பெய்யுமின மழைகள்
புவியிலிக்கா லங்களிலே பொழிமழை கஎௗனப்
புகன்றனங் கூறாதனவாய்ச் சுருங்கியதா லிவற்றை
அவிர்கதிர்மண் டலமுதலா மாரகங்கா யங்க
ளவைகூறி னார்கூற்றி லாராய்ந்து கொள்ளே

இவ் ஏழுமழைகளின் பிறவியல்புகளும், இயல்முடிவும் கூறப்படு கின்றன.

மேற்கூறியனவன்றி, இந்த மேகங்கள், இந்திரனின் ஆணைப் படி இன்னும் எழுவகையான மழைகளில் ஒன்றினைப் பெய்யும். கூறப்படாத மலர், பொன், நவமணி, நெல், பால், தயிர், நெய், தேன், கரும்புச்சாறு எனப் பேசும் ஏழுவகைகளில் ஒன்றினைப் பெய்யும் இம முகிலினங்கள், பூவுலகில, தற்போது பொழியும் மழைகளௌனக் கூறினேன், கூறாததாகச் சுருங்கியதனை, அவிர் கதிரமண்டலம் முதலாக, மாரகம் (மாரி), காயம் (உடல்) இவை பற்றிய நூல்களில் கண்டுகொள்க. (79)

எனக் கூறப்பட்டும் இவை ஏழு மேகமும், செசனி எனும் வாயுமுத லாக நிரனிறையே பொருந்தும்.

'சேர்சனி வாயு' எனக் கொண்டு சனிமூலையிலும் வாய மூலையிலும் சேரும் மேகம் மழைபொழியும் எனும் எண்ணமும் கொள்ளலாம்.

294 முதல்வாயு விதனணுவனக னற்பறவை யிவைக்கு
முதியபெல னீயுமிரண் டுடலீரஞ் சுவற்றி
மதுவாட்டி மரமுறிக்கு மூன்றதுவே சுழன்று
மனையிடித்து மலையிடித்தே உயிர்க்கனல்தந் தழிக்கும்
அதிர்வாயு வோரேழு மேழ்மேகத் துறவா
மாவித்துப்பெய்மழையையறைகுவன்கேள்முறையே
எதிராதி மழையுயிர்கள் துன்புறவே குளிர்ச்சி
யெய்திநடுக் குற்றழியு மழைபெய்யு மன்றே

295 பின்னதுவெவ் விடம்பெய்யும் பின்னதுமண் ணிரத்தம்
பெருந்தசையோடெலுமபுசிலைஅழல்மாரிபெய்யும்
பின்னதுமின் னசனியாலக் கனலவாதை செய்யும்
பின்னதுநன் நீர்பெய்து பேருலகை வளர்க்கும்
பின்னதுநீர் குடித்தோர்க்குப் பிணிகள்வரச் செய்யும்
பின்னதிறை வர்கிறைவ ரிகல்வரப்பி டையுறப்
பின்னமுற வேகண்ட மாரிபெய்து கெடுகசும்
பேசுதச வாயுவுமா வசுன்வாயுப் பிறிவே

பத்து வாயுக்களின் செயற்பாடும், எழுமேகத்தோடு அவற்றில் ஏழு இணைந்து பெய்யும் மழையும் கூறபபடுகின்றன.

முதல்வாயுவான விதனணுவனகன், நல் பறவை வனக்கு வலிமையும் ஆற்றலும் அளிககும. இரண்டாவதான பிறசேதகன், உடலின் ஈரததை வற்றச் செய்து, மதுவை வாட்டி, மரங்களை முறிக்கும். மூனறாவதான தழறபிறசேதன், சுழன்று வீசி, வீடு களை அழித்து, மலைகளைத் தரைமட்டமாக்கி, உயிர்களை வெப்பமுறச் செய்து அழிககும. பிற வாயுக்கள் ஓரேழும், ஏழு மேகங்களுடன் உறவு கொண்டு, நீர்த்திரள் கொணடு பெய்யும் மழையை முறையே கூறுவேன், கேள். முதல மழை, உயிர்கள் துனபுறுமபடி குளிர்சசி அளிதது நடுங்கி அழியும்படியான மழை பெய்யுமு.

தின் 'மரபு' எனும் இயற்பொருத்தம் இங்கும் 'சாதிமரபு' என்பதில் தொடர்வது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

பதினெட்டு விருத்தங்களால் இப்பகுதி அமைகின்றது

297 மறையு லாங்கொடி வாரிச மாலையே
நறைகொ ளாகுதி நற்செய லாகுமே
நெறிகொ டண்டு கமண்டல நேரணி
குறிய தொல்குடை கோவண முத்தியே

298 நூலோ டங்க நுவனற்பு கோத்திர
மேலும் வேதஞ் சமிதையென் றின்னை
சாலப் பெற்றரி தன்கழல் போற்றியும்
பாலின் வேட்டன் மறையவர் பண்பரோ

அந்தண சாதியர்க்குரிய மரபுகள் பேசப்படுகின்றன.

மறையே உலவுகின்ற கொடி. தாமரைமலர் மாலையாம். நறும்புகை பொருந்திய யாகம் புரிதல் செயலாம். நெறியுடைய கோல், கமண்டலம் என்பன பொருந்தும் அணி. குறுகிய தொன்மையான குடையுடையவர். கோவண ஆடையர். முத்தி அடைபவர்.

அற நூல்கள், வேதாங்கம் ஆகியன ஓதுகின்ற அற்புதமான கோத்திரததினர். மேலும், வேதம், ஓமவிறகு என்றின்னவை மிகுதியாகப் பெற்று திருமாலின் பாதங்களைப் புகழ்ந்தும், முப்பகுப்புடைய வேள்வி செய்தும் அமைதல் வேதத்தோர் இயல்பாம்.

தொல்காப்பியம, நூல், கரகம், முக்கோல், மணை என்பனவற்றை அந்தணர்கசுரியதாக மொழிகினறது (1570). பிற்கால நிகண்டுகள், அநதணர் அறுதொழிலாக ஓதல, ஓதுவிததல், வேட்டல், வேட்பித்தல், ஈதல, ஏற்றல் என்பனவற்றையும் (பிங்கலம். 729), பிரபந்தத் திரட்டுப் போன்று, அவாக்கு மாலையும் கொடியும (730) கூறுகினறன. அநதணர்கசுரிய பொருளாகத் தருப்பை, முஞ்சி சமிதது என்பன சுட்டப்படுவதும (731) குறிப்பிடத்தக்கது. முததீயாச, காருக பத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினியம் என்பன அமைக்கப்படுகின்றன (727). (1-2)

வேறு

299 பூவைநிலை யெல்லோன் கழல்வாழ்த்தல் போர்வேட்டல்
சாவன்முடி சூடல் கவரிசெங்கோல் வெண்குடையே
தேவரி யாசனமும் வண்குலமுந் தீத்தொழிலு
மேவும் விருதும்வர வேண்டுகின்ற மாலையுமே

300 குடிவளர்த்தல் சாதுரங்கங் கூர்சமயம் வாய்மை
படியும் பொருணெறியாற் பாடவிட லகற்றிடுதல்
வடியுவமை யும்பரென வாழிசைதூ துள்ளார்
படியினின் மிக்கான பார்த்திபரா மன்னே

அரச வருணத்தினர்க்குரிய மரபு பேசப்படுகின்றது.

பூவைநிலையாக மன்னனைத் திருமாலென வாழ்த்தல், சூரியனின் பாதங்களை வழிபடல், போர்விரும்பல், காவலுடைய மௌலி சூடல், சாமரை, செங்கோல், வெண்குடை, கடவுளரியாசனம் உடையோராதல், வள்ளண்மையுடைய குலத்தோராதல், தீத்தொழில் மேவல், கொடி முதலிய விருதுகள் உடையோராதல், உரிய மாலைகள் பெறுவர்.

குடிகளைக காப்பாற்றுதல், நாற்படையுடைமை, வாய்மையையே சமயமாகக் கொள்ளுதல், தங்குகின்ற பொருள் வழியால புலவர்களைப் பாடவிடுதல், நாடபடை விரிவுபடுத்துதல, அழகிய உவமையாக தேவரைப் பெறுதல், புகழுடன் வாழ்தல், தூதனுப்பல், உலகில் மிக்க தகுதியுடைய அரசராம். சமயமும் வாய்மையும் பொருளாகப் பாட, பரிசளிதது அனுப்பல் எனவும் கொள்ளலாம்.

தொல்காப்பியம் அரசர்க்குரிய உடமைகளின் தெளிவான பட்டியலை அமைக்கின்றது.

படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய (1571)

பிங்கல நிகண்டு, வெட்சி முதலிய எண்வகை மாலையும், அறுவகைப் படையும் சிங்கக் கொடியும் அரசர்க்கு உரியது என இயம்

பும் (734-35). ஆசிரிய நிகண்டு, ஓதல், ஈதல், வேட்டல், பார் புரந்திடல், படைக்கலம் பயிற்றல், போர்புரிதல் ஆகிய ஆறும் அரசர் தொழில் எனக் கூறுகின்றது (51). நாற்படை, அறுபடை எனும் இருகருத்தும் இங்கு நிலவுகின்றது. இரதகரி பரி பதாதி எனும் நான்கில், பதாதியை அகற்றி வேல், வில், வாளினை இணைகக ஆறாகும் என்பது இங்கமையும் கருத்தாம். (3-4)

வேறு

301 சாதியி னணிகளு மொருவன் றந்திடச்
சோதிசெ யணிகளுந தொடுதன் றெய்வத்தா
லேதிலா வணிகளுந் சமரி லேற்றவு
மாதிபர்க் குறுமரிக் கொடியு மாகுமால்

302 சந்திரன் சூரியன் றழலின் றோற்றமா
மிநதமுக் குலமலா திமைப்பி லார்பிறர்
தந்தவ ராதரித் தவர்க்கு மவவவ
ரெந்தநல் லணிகொள்வா ரிவர்க்கு மன்னவே

அரசாகுரிய சாதிமரபுகள் இன்னும் சில கூறப்படுகின்றன.

அரசசாதிக்கு உரிய அணிகளும், பரிசாகவும் திறையாகவும் ஒருவர் தர, ஒளிசெயயும் அணிகளும் அணிதல், தெய்வத்தால் பெற்ற குற்றமற்ற அணிகளும், போரில் பெற்றனவும் அரசருக்கு உரியன. சிங்கக் கொடியு மாகும்.

சநதிரன், சூரியன், அககினி ஆகிய தோற்றங்களை உடையது இந்த மூன்று அரச குலம் அல்லாது, இமைத்தல் இலலாத தேவர்களும் பிறரும் பெற்றளித்தவரும் ஆதரித்தவரும், அவ்வக் கடவுளர் முதலியோர் எந்தச் சிறந்த அணிகளைக் கொண்டன ரோ அவற்றையே கொள்வர்.

இந்திரஆரம், சந்திரகாரம் போன்றனவற்றை மன்னர் இறைவரிடமிருந்து பெற்றதாக அமையும் புராணக் கருத்தின் இயைபு இங்கு அமைகின்றது. (5-6)

வேறு

303 இறையினை யிகழ்ந்தின்ப மீகையும் புரிவார்
மறைகொடு கனலசெய்து வாய்மையும் பெறுவார்
பொறைநிரை யோம்பலும் போற்றுவர் நிதிக்கோ
னறைகழல் வணங்குவர் வாணிப மளிப்பார்

304 சீரக மாலையா திரள்பெறு மணிக
ளாரமாச் சோமன தவவணி பெறுவார்
மார்புறு நூலர் மணிச்சிகை யுடையார்
பாரினில விளங்குவர் பணிவணி கர்களே

வணிக சாதியருக்குரிய மரபுகள் சுட்டப்படுகின்றன.

மன்னனை இகழும் வண்ணம் இன்பமும், கொடைத் தன்மையும் கொள்வர் வேதங்களை ஏற்று யாகம் புரிந்து வாய்ம்மையும் பெறுவா. பொறுமையுடைய ஆநிரைகளைக் காத்தலும் செய்வர். குபேரனது நறிய கழல்களை வணங்குவர். வணிகத் தொழில் செய்வர்.

சீரகமணி மாலையுடையவர் திரளான அணிகளைப் பெறுவர். அணியும் ஆரமாகச் சந்திரஹாரம் உடையவர். மார்பில் நூலணிந்தவர். கரியகுடுமியுடையவர். உலகில் புகழோடு விளங்குவர். பணியும் வணிகர் இவராம்.

தொல்காப்பியம், வணிகரை, அரசர் போன்று படைக்கலப் பயிற்சிக்கு உரியவராகக் காட்டுகினறது (1577). வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை (15 8)என்பதால் அவர் வாழ்க்கைத் தொழில் சுட்டப்படுகின்றது. கூலவணிகமும் (1579), அவர்க்குரிய தாம். தலைமாலையும், தாரும் அணியும் பாங்கு இச்சாதி யினர்க்கு உரியதாம் (1580).

பிங்கல நிகண்டு வைசியர் முத்தொழிலாகக் கோக்களைக் காத்தல், பொருளீட்டல், ஏர்த்தொழில் என்பனவற்றைக் கூறு கின்றது (774). கோவைசியர், தனவைசியர், பூவைசியர் எனப் பகுப்புக் காண்பது (775-77) சுட்டத்தக்கது.பூவைசியருக்கு, ஓதல், வேட்டல், உபகாரம், வாணிகம், பசுக்காவல், உழவுத் தொழில் என அறுவகை கூறுவதும்(778) எண்ணத்தக்கது.ஆசிரிய நிகண்டும், இவர்க்குரிய பண்பாக ஈட்டல், பகுத்தல், முனிவிலார் ஆதல், தனிமை ஆற்றல், இறுவது அஞ்சாமை, பெறுவது தெரி தல், காலம் இடன் அறிதல் என்பனவற்றைக் கூறுகினறது (56). (7-8)

வேறு

305 சமவணிகர் கொடிமேழி குவளைபுனை மாலை
யமருறுவ ரிறையோர்க் ளணிகள்பெறு வாரே
யமைவினொரு கொடைமேவி யமர்வர்நதி குலரே
சமைகாணி கங்காவ னூலறிவர் தானே

306 மூவர்கள் பணித்தபணி தவறாம லேருழுத
லேவபிழை யாதொருமை குணமுற்ற லேகோப
மேவிடல் செருச்செய்தல் பிறபுரிதல் பிறசாதி
யார்வழிப டப்புரிவ ரணி பிறபி னறுநீ

வேளாளசாதியினர்க் குரிய மரபுகள் பேசப்படுகின்றன.

வணிகருக்குச் சமமாக அமைவர். மேழிக் கொடியினர். குவளை மலரை மாலையாகப் புனைவர். போரில் பங்கேற்பர். மன்னர்க்குரிய அணிகள் பெறுவாாகள. அடக்கத்துடன், வள்ளல் தன்மை பொருநதியிருப்பர். கங்கை நதிக் குலததினர். செவ்வைப் படுத்திய நிலத்தைக் காக்கும் செயலுடையவர்; நூலறிவினர்.

அநதணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று சாதியினர் கூறிய பணிகள் தவறாமல், ஏர்உழுதல், பணித்தது தவறாமை, ஒற்றுமையைக குணம் மிகுதல், கோபத்தை விடல், போர் செய்தல, பிற செயலகள புரிதல், பிற சாதியார் வழிபடும்படிச் செயலபுரிவர். அணியும் பிறவும் நீ அறி.

தொல்காப்பியம், முதனிலையில் வேளாண்மாந்தர்க்கு உழுதூண் ஒனறே நிகழ்ச்சி (1581) என மொழிந்து, பின்பு வேந்துவிடு தொழிலின் படையும, கண்ணியும் அவர்க்குரியன (1582) என்கிறார். பிங்கலமும் (791) ஆசிரிய நிகண்டும் (57) வேளாளர்சகு உரிய தொழிலாகப் பத்தினைச் சுட்டுகின்றன.

ஆணைவழி நிறறன் மாண்வினை தொடங்கல்
கைக்சட னாற்றல் கரிலகத் தின்மை
யொக்கல் போற்ற லோவா முயற்சி
மன்னிறை தருத லொற்றுமை கோட
திருந்திய வொழுக்கம் விருந்துபுறந் தருதல்
வேளாண் மாந்தர் செய்கையீ ரைந்தே (781)

'நதி குலர்' எனப் பிரபந்தத் திரட்டு வேளாளருக்குப் பெயர் அளிப்பது, சிலம்பு சுட்டும் 'காவிரிப் பாவைதன் புதல்வா' (10-148) என்பதுடன் இணைத்து எண்ணத தக்கது. (9-10)

வேறு

307 பிரம னார்வழி வேதிய ரரிவழி
பேசிய விறையோர்கள்
பரம னார்வழி வணிகர் தேவர்கள்
வழிபகர்வர் பணிசெய்வா

ரரனை யேமுத லோரையெச் சாதியர்
யாவரு மனத்தேற்பாா
குரவா சொற்படி மறுத்தலும் புரிகுவா
குற்றமோ குறையின்றே

நாற்சாதியினர் தெய்வத் தொடர்பும் பிறவும் கூறப்படுகின்றன.

பிரம்மாவின் வழி வந்தவர் அந்தணர். திருமாலின் வழி வந்தவர் சுட்டப்பட்ட அரசர்கள். சிவனின்வழி வணிகர். தேவர்கள் வழி, முன்சுட்டிய மூவர் ஏவல் செய்யும் வேளாளர் வந்தனர். சிவபிரானை முதலாகக் கொண்ட வணிகரை எல்லாச் சாதியினரும் எல்லோரும் கொள்வா, பெரியோரின் கூற்றிற்கு ஏற்ப; மறுக்கவும் செய்வர். இது குற்றமோ குறையோ அன்று.

நால்வருணைதநோர்க்கு இறைத் தொடர்பு காட்டும் இப்பிரபந்தத் திரட்டியல்பு புதுமை நோக்குக கொள்கின்றது.
(11)

308 நாலு சாதியிற பிறபிற சாதியி
னரர்புவிப பதியாகிற்
சீல மேவிய யிராசனே யாகுமாற
றன்ளுமோ செகந்தானு
யேலி ராசனே குலததுதித் திரந்திடில்
வேண்டுவர் வேணடாரே
கால காலன்ற னருளைநா மறிநதிடத்
தள்ளிடக் கடவோமே

அரச சாதிககு ஒரு புறநடை கூறப்படுகின்றது.

நான்கு சாதிகளில், அரசசாதி யல்லாது, பிற சாதியினைச் சேர்ந்த மனிதர்கள் உலகாளும் தலைவர் ஆனால் சிறப்புப் பொருந்திய அரசசாதியே ஆகும். அதனை உலகம் விலக்காது. மேன்மையான அரசகுலத்தில் பிறநது இரப்பானேயானால், வேண்டும் உறவினரும விரும்பமாட்டார். காலகாலனான சிவபெருமானின் அருளை அறியவோ, விலக்கவோ நாம் ஆற்றல் பெற்றிலோம்.

அரசராகும் இயல்பு அச்சாதியினர்க்கனறிப் பிறர்க்கும் உரியது எனும் எண்ணம் தொலகாப்பியத்திலும், காணப்படு

கின்றது. 'அந்தணாளர்க் கரசு வரைவின்றே' (1574) என்பது, பிறிதொரு குலத்திற்கு மட்டும் உரிய ஆட்சிநிலையைச் சுட்டு கின்றது. காலப்போககில், இது வளர்சசி கொண்டதனைப் பிரபந்தத் திரட்டுக் காட்டுகின்றது. (12)

வேறு

309 அருமுரசக் கொடிதருமற் காங்குவளை மாலை
யரவகே தனந்துரியோ தனற்குவலம் புரித்தார்
பரவுகச்சைக கொடிகன்னற் காம்வீமன் றனக்கே
பகாசிங்கக் கொடியரிசசு னற்குவா னரமே
யுரவுபடை வில்லினொடு தண்டாகும் பின்னோ
னுன்னுவிற் காண்டீப மன்னைகுந்தி காந்தாரி
தருமய்யர் பாண்டுகண் ணிலலான்குந்தி புதல்வர்
தருமன்கா லிந்திரனையுந் தந்தையெனப் பெறுவார்

சில குறிப்பிட்ட பேரரசருக்குரிய சாதிமரபு கூறப்படுகின்றது.

அருமையான முரசுக்கொடி தருமனுக்குரியது. அவன் மாலை, குவளை, துரிய்யாதனனுக்குப் பாமபுக்கொடி, வலம்புரி மாலை. பரவத்தக்க கவசக் கொடி கர்ணனுக்காம். வீமனுக்குச் சிஙககொடி அர்சுனனுக்குக் குரங்கு. அவர்க்குரிய ஆயுதம் விலலும் தண்டுமாம். அருசசுனர்ககுரிய வில்லின்பெயா காணடீபம். அன்னை குந்தியும், காந்தாரியுமாம். இவரைப் பெற்ற தந்தையா பாண்டுவும், கண்ணில்லாத திரிதுராட்டினனு மாம். குந்தியின் புதல்வர், இயமன், வாயுபகவன், இந்திரன் என்பவரையும் தந்தையாகப் பெறுவாாகள்.

நிகண்டுகளின் ஆடவர்வகைப் பகுதி (பிங்கலம்), மக்கட் பெயர்த் தொகுதி (ஆசிரியம) போன்றன. அரசர் பற்றிப் பேசுமிடத்தில்,அறுவகைச் சக்கரவர்த்திகள பற்றிப் பேசுகின்றன. பிங்கலம் தருமன் போன்ற சில மன்னர்க்குரிய பலபெயர் நிலையைச் சுட்டுமிடத்து, பிரபந்தத் திரட்டின கருததுகட்கு இணையமைகின்றது. தருமனை முரசக் கொடியோன் (739) எனவும, துரியோதனனை பன்னக முயர்த்தோன் (740) எனவும், கனனனைக் கச்சைக்கொடியோன் (741) எனவும், வீமனை கோளரிக கொடியோன் (742), அருச்சுனனை வானரக் கொடி யோன் (743) எனவும் குறிப்பிடுகின்றது பிங்கலம். தருமமைந்தன் என தருமபுத்திரனும (73˚), வாயு மைந்தன் (742) என வீமனும்,

சுரேந்திரன் மைந்தன் (743) என அருச்சுனனும் சுட்டப்படு கின்றனர். ஆசிரிய நிகண்டு இதனை ஒத்த செய்திகளை மக்கட் பெயர்த் தொகுதியின் ஆரம்பத்தில அமைக்கினறது. (5,6) (13)

310 வார்சிலையின் கொடிபனந்தார் வஞ்சியூர் கொல்லி
மலை பொருனை யாறு சேரற்காகுஞ் சோழற்
கார்புலியின கொடியாத்தி மாலையுறை யூரோ
டகனேரி மலைபொனனி யாறாகுஞ் செழியற்
கோர்சேலின் கொடிவேப்பந் தார்நகரங் கூட
லுயர்பொதிய மலைவையை யாறாகுங் குதிரை
சீருலவு பாடலங்கோ ரங்கனவட் டமதே
செபபெல்லை குடகடலவேங் கடங்கன்னி கிழக்கே

சேர சோழ பாண்டிய மன்னற்குரிய கொடி, தார், ஊர், மலை, ஆறு, குதிரை, எல்லை ஆகியன கூறப்படுகின்றன.

சிறநத விற்கொடி, பனம்பூமாலை, வஞ்சி ஊர், கொல்லி மலை, பொருநை ஆறு என்பன சேரமன்னனுக்கு உரியனவாம். சோழனுக்கு புலிககொடி, ஆத்திமாலை, உறையூர், அகன்றநேரி மலை, பொன்னியாறு என்பனவாம். பாண்டியனுக்கு, ஒப்பற்ற மீனக்கொடி, வேப்பம்பூ மாலை, கூடல் நகர், உயர்ந்த பொதியம் மலை, வையை ஆறு என்பனவாம். இவருக்குரிய குதிரைகள் முறையே, சிறப்புடைய பாடலம், கோரம், கனவட்டம் என்பனவாம். இவர்கள் ஆண்ட நாட்டின் எல்லை, மேற்கில் கடலும் வடக்கில வேங்கடமும் ஒற்கில் கன்னியும் கிழக்கில் கடலுமாம்.

சேரசோழ பாண்டியர் பெயர்களை பிங்கல நிகண்டு ஆடவர் வகையிலும் (745-751) ஆசிரிய நிகண்டு மக்கட்பெயர்த் தொகுதியிலும் அமைகின்றன (7-8). வில்லவன் போந்தைக் கண்ணியன், வஞ்சி வேந்தன், கொல்லிச்சிலம்பன், பொருநைத் துறைவன் (745) எனச் சேரனும்; புலிக்கொடியோன், ஆரின் கண்ணியன், கோழிவேந்தன், நேரிவெற்பன், பொன்னித்துறை வன் (747) எனச் சோழனும்; மீனவன், வேம்பின் கண்ணியன், கூடற் கோமான், மலையப் பொருப்பன், வைகைத் துறைவன (750) எனப் பாண்டியனும் அங்குக் குறிப்பிடல் காண்க. சேரனைக் குடநாடன் எனவும் பாண்டியனைக் குமரிச்சேர்ப்பன் எனவும் கூறல், பிரபந்தத்திரட்டின் நாட்டெல்லைச் செய்திக்கு ஓரளவு இணை கொள்கின்றன. (14)

311 தேவருக் கிந்திரன் வேந்தன் தெய்வ மரன் முதலோர்
செனமுனி வர்க்கிறை பிரமரிஷி தெய்வ முன்னோர்
பூவவருக் கிறையுலகு காவலனே மிருகம
புசலிறை சிங்கந் தெய்வ புருட மிருகமதே
மேவுபற வைக்கரசு கருடனே தெய்வம்
விளங்கன்னஞ் சரபுமே யாதியா மரங்க
டாவரசு கற்பகமே வேந்தனாந் தெய்வஞ்
சங்கரனாஞ் சோதியுறு தருவாகும் பிறக்கே

தேவர் முதல் மரம் வரை பலவற்றிற்குரிய தெய்வமும், அரசனும் நவிலப்படுகின்றன.

தேவர்களுக்கு, மன்னன் இந்திரன். தெய்வமாக அமைபவன் சிவபெருமான் முதலியவர். முனிவர்களுக்கு அரசன் பிரமரிஷி. தெய்வம், முன்னோர்கள். பூ உலகத்திலுருக்கு வேந்தன உலகக் காவலனாம். விலங்குகட்குக் கூறப்படும அரசன் சிங்கமாகும; தெய்வமாக அமைவது புருடமிருகம். பறவைகட்கு அரசன் கருடன்; தெய்வமாக அமைவது அன்னப்புள்ளும் சரபப் பட்சியும் முதலியனவாம். மரங்களின் அரசன் இந்திரனுககுரிய கற்பகமாம். தெய்வமாக அமைவது சஙகரன் என்னும் ஒளிவிளங்கும் மரமாம்.

இங்குச் சுட்டப்படும் நிலை பிறவிடங்களில் காணப்படாத போதும தேவர்வேந்தன் (இந்திரன்), பறவைவேந்தன் (கருடன்), மிருகாபதி (சிங்கம்) போன்ற பெயாநிலைகளால் ஒத்த செய்தி உணர்த்தப்படுவது நினைக்கத்தக்கது. (15)

**வேறு**

312 ஊர்வனவே வைக்கும்
பேரரசு நாக
மாருமொரு தெய்வம்
வாரணந்த னாமால்

313 ஏழகடலி னுக்குஞ்
சூழ்கடறெய் வபபேர்
வாழுமொரு வேந்தன்
காழ்வருண னாமால்

314 இமையமலை வேந்த
னமையுமக மேருக்
கமையினமலை கட்கே
யிமையிறெயவ மாமால

ஊர்வன, கடல், மலை என்பனவற்றிற்கு முறையே அரசனும் கடவுளும் கூறப்படுகின்றன.

ஊர்வனவான உயிரினங்கள் அனைத்திற்கும் பேரரசன் நாகம். பொருந்துகின்ற தெய்வம் யானை.

ஏழ்வகைக் கடலுக்கும், சூழ்கின்ற கடலை தெய்வத்தின் பெயராகக் கொள். வாழுகின்ற வேந்தன் சிறப்புடைய வருணனாம்.

மலைக் குலங்கட்கு வேந்தன் இமையமலை. அமைகின்ற மேருமலை, மலைச்குலங்கள் அனைத்திற்கும் தெய்வமாம். தெய்வத்திற்கு இமைப்பின்மை பற்றி 'இமையில' என்றார்.

தலைமைப்பண்பு பற்றிப் பலவற்றிற்கும் இவ்வாறு அரசனும் தெய்வமும் வகுக்கப்படுகின்றன எனக் கருதலாம். வருணனைச் சலபதி எனல், போன்றதை இங்கும் கருதலாம். (16-18)

எட்டாவது

# குலநில வியப்பு சார்வோரியல்

குலம், நிலம் ஆகியவற்றின் இயல்பையும் மேம்பாட்டையும் ஒன்றோடொன்று சார்த்தி மொழிவதாக இவ்வியல் அமைகின்றது.

முதற்பொருளின் கால இடமாகிய இருகூறுகளில் ஒன்றாக அமையும் நிலமும், கருப்பொருட்களில் ஒன்றான மக்களைக் குறிக்கும் குலமும் இங்கு இணைந்து வெளிப்படுவதாகக் கொள்ள முடிகின்றது.

ஏழாவது இயலில் குறிப்பிட்ட நாற்சாதியினர் ஒழிய அமையும் பிற பல மக்கள்நிலைபற்றி இவர் குலம் அமைத்துக் கொள்கின்றார் எனலாம். நாற்குலம் என்ற பண்டை மரபு மறைந்து பலகுலங்கள் உருவாகிவிட்டமை பற்றியும், இலக்கியத்தில் இவரும், நிலச்சார்பு பற்றியேனும், இடம் பெறலாம் எனும் வாய்ப்புக் குறித்தும், 'சாதிவிளக்கம்' போன்ற நூல்கள் பலவகை மக்களைப் பேசியதனைப் பின்பற்றியும், பிரபந்தத்திரட்டும் இப்பொருளைப் பேசியிருக்கலாம்.

எழுபத்நாறு விருத்தங்களில் இப்பகுதி அமைகின்றது.

315 தலைகடை யிடையுறழ் தகுநில மைநது
மலைசுர மடவிசெய் மலிகட லிடமா
மலைமுத லிவையணி வளரணி யவைசார்
நிலமென நிலவகை யைந்துற ழேழே

நிலவகைகள் முப்பத்தைந் தாதல் கூறப்படுகின்றது.

தலை, இடை, கடை எனும் முப்பகுதிகள், தக்க குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐந்துடன் பொருந்தி மலை, சுரம், அடவி, செய், கடல் என்பனவற்றை இடமாகக் கொள்ளும் மலை முதலிய இவை அழகுற வளரும் இயல்பில், அவற்றைச் சார்ந்த நிலவகைகளும் கொள்ள முப்பத்தைந்தாம்.

ஐவகை நிலங்களிலும், தலை-இடை-கடை எனப் பகுப்புக் கொள்ள, வரும் நிலவகை பதினைந்தாம். அவ்வாறே ஐவகை நிலமும், தனிததனியே பிற நான்கு நிலத்துடன் மயங்கியமையும், மலையும் மலைசார்ந்த இடமும் போன்ற, சார்பு நிலங்கள் இருபதும் இணைய, மொத்தம் முப்பத்தைந்து அமைகின்றன. இவை, தலைக்குறிஞ்சி, இடைக்குறிஞ்சி, கடைக்குறிஞ்சி...எனவும் பாலை சார்ந்த குறிஞ்சி, முல்லை சார்ந்த குறிஞ்சி, மருதம் சார்ந்த குறிஞ்சி, நெய்தல் சார்ந்த குறிஞ்சி...எனவும் அமையும்.

தொல்காப்பியம் முதலியன ஐவகை நிலமே கொள்ள, இவர் அவற்றில் தலை இடை கடை என முப்பகுப்புக்காண்பதும், அங்குச் சார்பு நிலங்கள், தனியாகக் கருதப்படாது மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என அமைய இங்கு அவை தனி வகுப்புப் பெறலும் கருத்துப் புதுமை காட்டுகின்றன. (1)

வேறு

316 கடைக்குறிஞ்சித் தொழும்பர்கள் வாழுவார்
கண்ணி சண்பகஞ் சம்பு கொடியதா
மிடைக்குறிஞ்சி குறவர்க் கிடமதா
மேற்ற மாலை தினைகொடி யோதியே
யடற்குறிஞ்சித் தலைவேட ரில்விட
மாரம்பா லைகரடி கொடியதே
நடைக்குறிஞ்சிக் கருநா லிரண்டொன்று
நண்ண லாதிமுதல் குறிஞ்சியே

மூவகைக் குறிஞ்சி நிலத்திற்கும் உரிய குலமும், மாலை, கொடி என்பனவும் குறிஞ்சிக் கரு எண்ணிக்கையும் தரப்படுகின்றன.

கடைக்குறிஞ்சியில் தொழும்பர்கள் வாழுவார். கண்ணியாக அமைவது சண்பகம் மலர். கொடி நரி இடைக்குறிஞ்சி குறவர்க் குரிய இடமாம். ஏற்புடைய மாலை; தினை. கொடி, ஓதி. வன்மை யுடைய தலைக் குறிஞ்சி தலைவர்களான வேடரின் வீடிருக்கும் இடமாம். மாலை, பாலை, கொடி, கரடி. குறிஞ்சிக் கரு. நாலிரண்டும் ஒன்றும் என நண்ணல். மூலம், முதல் குறிஞ்சியே.

ஒதி கொடி என்பதால், ஓந்தி அல்லது பூனை கருதப்பட்டிருக்கலாம். இவ்வியலின் பிற்பகுதியில ஒவ்வொரு நிலத்திற்கும் பதினைந்து கரு கூறுவதால், இங்குக் 'கரு நாலிரண்டொன்று' எனக் கூறுவதனைத் தெளிவாகப புரிந்துகொள்ள இயலவில்லை. முதல், இடை, கடை ஆகிய முப்பகுதிகட்கும் மக்களும், கண்ணியும், கொடியும் தனித்தனியே கூறுவதால் வரும் ஒன்பதனைக் கொள்ளலாகாது எனும் கருத்தினைத் தருகின்றான் என்பது ஐயமே. அல்லது, நாலிரண்டு, அதாவது எட்டுக்கரு ஒன்று தலைக்கொள்க, எனத் தொல்காப்பியத் தொடர்பு கொண்டிருக்கலாம். (2)

வேறு

317 கடைக்குப் பாலை புன்வேட ரில்லமே
கண்ணி வாச மராக்கொடி ஞாளியே
யிடைக்குப் பாலை மறவர்வல் லம்பரே
யேற்ற பாலை யணியல் கொடிபுலி
யடைக்குப் பாலைத் தலைமறக் கைக்கிளை
யணியன் முல்லை கொடிபுலி யாகுமே
நடக்கும் பாலைக் கருநா லிரண்டொன்று
நண்ண லாதி யிடைகடைப் பாலையே

பாலை நிலவகை மூன்றன் குலத்தினரும், கொடி, மாலையும் கூறப்படுகின்றன.

கடைப்பாலை, புல்லியவேடரின் இல்லமிருக்கும் இடமாம். கண்ணி, நறுமணமுடைய மரா. கொடி, ஞாளி. இடைப் பாலையில் வாழ்வோர் மறவர்; அவர் அம்பாற்றல் உடையவர். பொருத்தமான பாலைமலர் மாலையாம். கொடி, புலி. தலைப் பாலையில் மறவீரமுடைய கைக்கோளர் வாழ்வர். மாலை முல்லை. கொடி புலியாகும். நடக்கும் பாலைக் கரு, நாலிரண்டொன்று நண்ணல்; மூலமாக அமைவது இடை, கடைப்பாலைப் பகுதிகளாம். (3)

318 கடைகொண் முல்லை குறும்பர்க ளில்லமே
கண்ணி கொன்றை கொடிவா னரமதே
யிடைகொண் முல்லை யிடையர்த னில்லமே
யேற்ற மாலை துளபங் கொடிகவி

யடிகொண் முல்லைத் தலைகரை யாயரி
லணியன் முல்லை கொடிவா னரமதே
நடைகொண் முல்லைக் கருநா லிரண்டொன்று
நண்ண லாதி யிடைகடை முல்லையே

முல்லையின் முப்பகுப்பும், குலமும், மாலை கொடி என்பனவும் கூறப்படுகின்றன.

கடைமுல்லை, குறும்பர்கள் இல்லங்களை உடையது. கண்ணி கொன்றை. கொடி வானரம். இடை முல்லையில் இடையர் வீடமையும். பொருத்தமுடைய மாலை துளசி. கொடி, குரங்கு. தலை முல்லை கரையாயர் வீடுடையது. மாலை முல்லை. கொடி குரங்கே. நடைகொள் முல்லையின் கரு நாலிரண்டொன்று நண்ணல். மூலமாக அமைவது இடை, கடை முல்லைப் பகுதியாம். (4)

319 கடைத்த மாருதஞ் சாம வசியரிற்
கண்ணியுங் கொடியுங் கூறு மாறதே
யிடைத்த மாருத மில்ல மகம்பிடா
ரேற்ற மாலை கொடிகுல மன்னவே
யடித்த மாருதங் கள்ள ரிடக்சொடி
யணியல் கற்பக மிந்திர குலமரோ
நடைத்த வீதுக் கருநா லிரண்டொன்று
நண்ண லாதி முதல் மருதமே

மருதத்தின் மூநிலம் குலம் முதலியன இயம்பப்படுகின்றன.

கடைமருதம், வைசியர் இல்லம். கண்ணி, கொடி என்பன ஏற்கெனவே கூறியபடியாம். இடை மருதத்தில் வீடு கொண் டவர் அகயபிடார். ஏற்ற மாலை, கொடி என்பன முன்சுட்டிய குலத்தினை ஒத்தனவே. தலைமருதம் கள்ளர் இடமாம். கொடியும் மாலையும் கற்பகமாம். இந்திர குலத்தினர் வாழ்வர். சிறப்புடைய இதற்குக் கரு நாலிரண்டொன்று நண்ணல். அடிப்படையாக அமைவது முதல் மருதமாம். (5)

320 கடைத்த நெய்தல் வலைபடை யாச்சியர்
கண்ணி புனலை குளமீன கேதன
மிடைத்த நெய்தல் குயவர் பிறருமே
யேற்ற மாலை குமுதங் கொடியன

மடித்த நெய்தற் கடையர்த மில்லமே
யணிய னெய்தல் கொடிவலி யானதே
நடைத்த நெய்தற் கருநா லிரண்டொன்று
நண்ண லாதி யிடைகடை நெய்தலே

நெய்தலின் முப்பகுப்புக் கேற்ற குலம் முதலியன மொழிகின்றது.

கடைநெய்தல், வலைபடையாச்சியரை உடை யது. கண்ணியாக அமைவது புனலை மரத்தின் மலர். குளமீனே கொடி. இடைநெய்தலில் குயவரும் பிறரும் வாழ்வர். மாலை, குமுதம். கொடி, அன்னம். தலை நெய்தலில் கடையர்கள் வீடு அமையும். மாலை நெய்தல். கொடி வலியான். சிறப்புடைய நெய்தல் கருநாலிரண்டொன்று நண்ணல். அடிப்படையாக அமைவது இடை, கடை நெய்தலாம்.

வலைபடையாச்சியர் என்பதால் வலையாகிய படையை ஆளும் பரதவரைக் குறித்திருக்கலாம். (6)

வேறு

321 குறிஞ்சி சார்ந்த பாலைமுல்லைக் கொடுந்தொட்டியர்
தொம்பரும் வாழ்வார்
குறிஞ்சி சார்ந்த மருதத்திற் கொல்லர்
தச்சர் கன்னாரே
குறிஞ்சி சார்ந்த நெய்தலிலே கூரும்
பறையர் சக்கிலியர்
குறிஞ்சி சந்த மாமாலை கொடியே
யாளிசவி நண்டே

குறிஞ்சியின், பிறநிலச் சார்புடைப் பகுதிகளின் குலம், மாலை, கொடி கூறப்படுகின்றன.

குறிஞ்சி சார்ந்த பாலையிலும், முல்லையிலும் கொடிய தொட்டியரும், தொம்பரும் வாழ்வர். குறிஞ்சி சார்ந்த மருதத்தில் கொல்லர், தச்சர், கன்னார் வாழ்வர். குறிஞ்சி சார்ந்த நெய்தலில் பறையரும், சக்கிலியரும் வாழ்வர். குறிஞ்சி, சந்தனம், மா என்பன மாலையாம். கொடி, யாளி, குரங்கு, நண்டு என்பனவாம், (7)

322 பாலை சார்ந்த குறிஞ்சியிலே பள்ளி யொட்டர் வளரில்லம்
பாலைசார்ந்த முலைமருதப் பள்ளர் வாழுந் தனியில்லம்
பாலை சாாந்த நெய்தலிலே பகரும வடுக ரிருப்பில்லம்
பாலை நிலத்தி னுழிஞைவேம் பலரி மாலை யாகுமே

பாலை சார்நிலங்களின் குலம், மாலை என்பன கூறப்படுகின்றன.

பாலைசார்ந்த குறிஞ்சியில், பள்ளி, ஒட்டர் என்போர் வாழ் வீடு உள. பாலைசார்ந்த முல்லை, மருதத்தில் பள்ளர்கள் வாழும் தனியிடம் அமைகின்றன. பாலை சார்ந்த நெய்தலில் கூறப்பட்ட வடுகரின் இல்லங்கள் அமையும். பாலையின் இந் நிலங்கட்கு, உழிஞை, வேம்பு, அலரி என்பன மாலையாம். (8)

323 முல்லைசார்ந்த குறிஞ்சியிலே
முறக மாறாட கரிருப்பார்
முல்லைசார் பாலையின் மருத
மொய்த்த வண்ணார் மயிர்வினைஞர்
முல்லை சார்ந்த நெய்தலிலே
முழுக்கம் பவதர் வாழுவார்
முல்லை நிலக்கா யாப்பிடவ
முகிழ்த்த குருந்த மணிமாலை

முல்லைச் சார்புடை நிலங்களின் குலமும் மாலையும் சுட்டப்படு கின்றன.

முல்லைசார்ந்த குறிஞ்சியிலே முறகர், மாறாடகர் வாழ்வர். முல்லை சார்ந்த பாலையிலும் மருதத்திலும் வண்ணாரும், நாவிதரும் வாழ்வர். முல்லை சார்ந்த நெயதலில் கம்பவதர் வாழ்வர். முல்லை நிலத்துககுக் காயா, பிடவம், விரிந்த குருந் தம் என்பன அணிகின்ற மாலையாம். (9)

324 மருதஞ சார்ந்த குறிஞ்சியிலே
வளர்வா ராரியத் துள்ளார்
மருதஞ் சார்ந்த பாலைமுல்லை
மயிரின் வினையல் லார்வாழ்வார்
மருதஞ் சார்ந்த நெய்தலிலே
வரித்தோற் காற்சா ணார்வாழ்வார்
மருதமே பாதிரி பன்னீர்
மாலை யாக வழங்குமால்

மருதச் சார்பு நிலங்களின் குலமும் மாலையும் நவிலப்படுகின்றன.

மருதம் சார்ந்த குறிஞ்சியில், ஆரியர் வாழ்வர். மருதம் சார்ந்த பாலையிலும் முல்லையிலும், நாவிதர் அல்லாதவர் வாழ்வார்கள். மருதம சார்ந்த நெய்தலில் வரிகளுடைய தோல் கால் சாணார் வாழ்வர். மருதம், பாதிரி, பன்னீர் மலர் எனபன மாலையாக வழங்கும். (10)

325 நெய்தல் சார்ந்த குறிஞ்சியிலே
நேர்காற் சாணார் தனிவாழ்வார்
நெய்தல் சார்ந்த பாலைமுல்லை
நெடிய தறிக்கைக் கிளர்வாழ்வார்
நெய்தல் சார்ந்த மருதத்தில்
நேர்வார் துலுக்கர் சோனகரா
நெய்தற் புவிவாழ் புளிவாச்சி
நேரு மாலை பிறபின்னே

நெய்தற் சார்பு நிலங்களின் குலமும் மாலையும் அமைகின்றன.

நெய்தல் சார்ந்த குறிஞ்சியில், நேர்கால் சாணார் வாழ்வர். நெய்தல் சார்ந்த முல்லையிலும் பாலையிலும் நீண்ட தறியை யுடைய கைக்கோளரான செங்குநதர் வாழ்வர். நெய்தல் சார்ந்த மருதத்தில் துலுக்கரும் சோனகரும் வாழ்வர். இந்நெய் தல் நிலங்கட்கு அங்குளள புளி, இருவாட்சி என்பன பொருந்தும் மாலையாம். (11)

வேறு

326 பச்சைமலை கருப்பாறு வச்சிர வளநாடு
பகர்காய லூர்மாலை குங்கும மேயாகு
மெச்சும்பசும் புரவிவெள்ளை யானைகொடி சிங்கம்
விரித்தல்சோ னகர்க்காகுந் துலுக்கர்க்கு நகர
மச்சுதனா ரடிதேடும் பரமனார் கூட
லாகுமோ .....ய காயதலா மின்னு
முச்சிதநூற் பொருள்கண்டு கூறகம் பிடாருக்
குற்றநெறி மறவருக்சே யுற்றவந்த நெறியே

சோனகர், துலுக்கர், அகம்பிடார் எனும் குலத்திற்குரியன சுட்டப்படுகின்றன.

பச்சைமலை, கருப்பாறு, வச்சிரம் எனும் வளமுடைய நாடு, காயல்பட்டினம், ஊர், மாலை குங்குமம், மெச்சத்தகுந்த பசிய

புரவி, வெள்ளை யானை, சிங்கக் கொடியை விரித்தல் சோன கர்க்கு ஆகும். துலுக்கருக்கு நகரம், திருமால் தேடிய அடியின ரான சிவபெருமானின் மதுரை .. சிறந்த நூலின் பொருள் கண்டு கூறுக. மறவருக்கு உரியனவே அகம்பிடாருக்கு உரியன. (12)

327 அரசர் சமவணிக ரீறாஞ் சாதிநான்கு
மருந்தெய்வம் வேண்டினா லெவ்விடத்து மிருப்பார்
புரையி னிலங்களி னிருந்தாலன் னிலத்தின் பூவே
புனைவார்க டிணைமயங்கிற் பூவகையு மயங்குந்
திருநிறைய முறைபிறழா கூறியவே நன்மை
செப்புத னன்றன்று பிறசெப்புதலைக் குறித்தான்
மருவுமவன் குறிததணியி னன்றாகு மெவையு
மாறாமற் பரப்புணர்த்தி வையகத்திற் கூறே

நாற்சாதியினருக்குரிய நிலம் முதலியனவும் இலக்கியத்தில் குலநில வியப்பின் இடமும் கூறப்படுகின்றன.

அரசா, அவருக்கு சமமான வணிகர் முடிய அமையும் நாற் சாதியினர், அரிய தெய்வம் விரும்பினால், எந்நிலத்திலும் இருப்பர். குறையற்ற நிலங்களில் இருத்தலால், அந்தந்த நிலத்திற்குரிய பூவையே அணிவார்கள். நிலம் மயங்கினால், பூவகையும் மயங்கும். செல்வம் பெருகவேண்டி, நிலத்திற்குரிய முறைகள் பிழைக்காமல் கூறப்படுவனவே நன்மை. பிறவற்றைக் கூறுவது நன்றன்று. இக்கருத்துப் பற்றியே இப் பொருண்மைகளை எடுத்துமொழிதலைக் கொண்டனர். பொருந்தும்படி அவர் குறித்த உரிமைகள் கூறின் நன்றாகும். எனவே அவற்றில் எவையும் மாறாத வண்ணம் விரிவுகூறி, உலகத்தில் அமைத்துக் கொள்க. (13)

வேறு

328 குறிஞ்சி பாலை முல்லையொடு குறித்த மருத நெய்தலுக்கு
மறைந்த தெயவ வேள்காளி யரிவா சவனே வருணனாந்
துறும்பொன் வெற்பன் விடலையே தோன்றன் மகிணன
சேர்ப்பனிற
மறிந்த கொடிச்சி யெயிற்றியே மனைவி கிழத்தி
பரத்திபெண்ணே

ஐந்நிலக் கருப் பொருள் கூறும் முகமாக, தெய்வமும், தலை மக்களும் வகுக்கப்படுகின்றனர்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன வற்றிற்குக் கூறப்பட்ட தெய்வம், வேள், காளி, அரி, வாசவன், வருணன் என்பவராம். வெற்பன், விடலை, தோன்றல், மகிழ்நன், சேர்ப்பன் என்போர் தலைவர். கொடிச்சி, எயிற்றி, மனைவி, கிழத்தி, பரத்தி என்போர் பெண்டிர், துறும்பொன் என்பதனைக் குறும்பன் எனப் பாடம கொளளலாம்.

தொல்காப்பியம், கருப்பொருள் பற்றிய நூற்பாவில், எட்டுக்கருவைச சுட்டிப் பிறவும் என பெருக்கத்திற்கு இடமளிக் கின்றது.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (964)

நமபியகக் பொருள், இதனை விரித்து, தெய்வம் முதலாகத் தொழில ஈறாகக் கரு பதினானகு என அமைககின்றது.

ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர முணாப் பறையாழ்பண்
டொழிலெனக கருவீ ரெழுவகைத் தாகும (19)

பிரபந்தத்திரட்டு, 'கருப் பொருளே, கடவுளொடு பதினைந்து வகை' (354) எனப் பின்பு கூறலால இன்னும் வளாச்சி காட்டு கின்றது எனலாம். ஐந்நிலங்கட்கும இலச்சினை கூறல கருப் பொருளின் எண்மிகுதிக்குக் காரணம்.

தெய்வம், நானிலத்திற்கே தொலகாப்பியம் கூறிய போதும், பின்பு ஐநிலங்கட்குப கூறும் மரபு ஏற்பட்டுவிட்டது. உயர்ந் தோருக்கு நிலத்திற்கேற்பப் பலபெயா நமபியகப் பொருளில் சுட்டப்படுகின்றது. சான்றாகக் குறிஞ்சியில், பொருப்பன், வெற்பன், சிலமபன், குறத்தி, கொடிச்சி எனக் கூறப்படுவன வற்றுள் வெற்பன், கொடிச்சி என்பனவற்றை மட்டும் பிரபந்தத் திரட்டுச் சுட்டுகின்றது.

நிகண்டு, அவனிவகை பற்றிப் பேசுமிடத்து ஐவகை நிலங் களையும, இறைவர், மாந்தர் போன்றோரையும் சுட்டுகின்றது.

(14)

329 குறவ ரெயின ரிடையர்களே
குறித்த வுழவ ரளவர்மக்க
ளறையுங் குறத்தி யெயிற்றியிடை
யாச்சி கடைச்சி பரத்தியர்பெண்
முறையாம் யாழே நானிலத்து
முதிர்ந்த பேர்பின் னதுவிளரி
மறிதொண் டகமே துடியேற்றப்
பறையீர் கிணைசா பறையாமால்

ஐந்நிலங்கட்குரிய பொதுமக்களும், யாழும், பறையும் கூறப்படுகின்றன.

குறவர், எயினர், இடையர், உழவர், அளவர் என்போர் மக்கள். குறத்தி, எயிற்றி, இடையாச்சி, கடைச்சி, பரத்தி என்பவர் பெண்கள். முறையான யாழ், நானிலத்திற்கும் உரிய பெயருடன் அமைந்து, ஐந்தாவதான நெய்தலுக்கு விளரி என அமையும். தொண்டகம், துடி, ஏற்றப்பறை, ஈர்க்கிணை, சாப்பறை என்பன பறையாம.

தலைமக்களைப் போன்றே, தாழ்ந்தோரைக் குறிப்பிடும் போது நம்பியகப்பொருள் தரும் பலபெயர்நிலை இங்கு இல்லை. சான்றாக நெய்தலுக்கு நம்பி, நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் ஆகியோரைச் சுட்டப் பிரபந்தத் திரட்டு அளவர், பரததியர் ஆகிய இரு பெயர் மட்டும் அமைக்கின்றது.

பறை பற்றிக கூறும்போது, முல்லைக்கு ஏறங் கோட்பறையும், மருதத்துக்கு நெல்லரி இணை, மணமுழவு எனபனவும், நெய்தலுக்கு மீன்கோட்பறை, நாவாய்ப்பம்பை எனவும் நம்பி பெருக்கமும் வேறுபாடும் கொள்கின்றது. ஒரு பொருளுக்குரிய பல சொல் தரும் நிகண்டில், குறிஞ்சி நிலப்பறைக்குத் தொண்டகம், முருகியம், துடி (பிங்கலம். 522) எனப்பெயர் வேறுபாடு அமைகின்றது. நெய்தல் நிலப்பறையாகப் பிங்கலம் சுட்டும் சாபறை (599) பிரபந்தத் திரட்டிலும் இடம் பெறுகின்றது. (15)

வேறு

330 கரியகிளி மயில்சேவல் சகோர மண்டகோண்டங்
கதுவாலி சிச்சிலி வெண்கோழி சிவல்காடை
சரபரு சாதகம் யானையிறாஞ்சி சககிரவாகஞ்
சலாங்கு பிறகுறிஞ்சி பெரும்புறவு பருந்திரந்தை

யெருவை வானம்பாடி செம்போத்து வலியா
னிலைச்சிட்டுக் கரிச்சான் காகங் கழுகுக்கள்ளிக்
குருவி நின்றுசிணுங்கி நிலம்புறண்டி மாயக்குருவி
கூகை நிலக்கூகை யூமான் கடைபாலைக்கே

331 கருடன் கானாங்கோழி பசும்புறா வாலிநா
கணவாய் சசியாள்க்காட்டி காட்டுக்கிளி குயில்கண்
டிருவாலி சுடுகுருவிக் கூட்டங் கட்டைத்தாராச்
சில்லை கருஞ்சிட்டு தயிலான் பிறவுமுல்லை
குருகுதாராச் சம்பங்கோழி கம்புள் போதாமீன்
கொத்திவண் டானமன்ன நாரை கொக்குவவ்வா
லரிமுழஞ்சான் பச்சைக்கிளி மாடப்புறவு தூக்கணம
ரங்கொத்தி யடைக்கலங் காத்தான் மருதம்

வேறு

332 அன்றில் பஞ்ச வனக்கிளி யுள்ளான்
கன்று வெள்ளைக் கிளிகணீர்க் காக
மன்றிக் கூழைக் கிடாவுட னாலா
நனறி நெய்த னவின்றிட லாமே

ஐந்நிலஙகட்குரிய புள் வகை முறையே தரப்படுகின்றன.

கருங்கிளி, மயில், சேவல், சகோரம், தூக்கணஙகுருவி, சதுவாலி, சிச்சிலி, வெண்கோழி, சிவல், காடை, சரபம், சாதகப் புள், யானையிறாஞ்சி, சக்கரவாகம், சலாங்கு என்பனவும் பிறவும் குறிஞ்சி. பெரும்புறவு, பருந்து, இரநல ௲ (?) எருவை, வானம்பாடி, செம்போத்து, வலியான், இலைச்சிடடு, கரிச்சான், காகம், கழுகு, கள்ளிக்குருவி, நின்று சிணுங்கி, நிலம் புறண்டி, மாயக்குருவி, கூகை, நிலக் கூகை, ஊமன் முடியவருவன பாலையாம். கருடன், கானாங்கோழி, பசும்புறா, வாலி, நாகண வாய், சசி, ஆள்காட்டி, காட்டுககிளி, குயில், திருவாலி, சிட்டுக்குருவிக கூட்டம். கட்டைத் தாரா, சில்லை, கருஞ்சிட்டு, தயிலான் என்பனவும் பிறவும் முல்லை. குருகு, தாரா, சம்பங் கோழி, கம்புள், போதா, மீன்கொததி, வண்டானம், அன்னம், நாரை, கொக்கு, வெளவால், அரிமுழஞசான், பச்சைககிளி, மாடப்புறவு, தூக்கணங் குருவி, மரங்கொத்தி, அடைக்கலங் காத்தான் என்பன மருத நிலத்திற்குரியன. அன்றில்,

பஞ்சவர்ணக்கிளி, உள்ளான், வெள்ளைக் கிளிகள், நீர்க்காகம், கூழைககிடா, ஆலா என்பன நல்ல நெய்தலுக்குக கூறப்படும்.

புள் எனும் கருவின் விளக்கத்தில், பிரபந்தத் திரட்டு முன் நூல்களினும் பெருக்கம காட்டுகினறது. நமபி, கிளி, மயில் என்பனவற்றைக் குறிஞ்சிககும், புறா, பருந்து, எருவை, கழுகு என்பதைப் பாலைக்கும், காட்டுக்கோழியை முல்லைக்கும், வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா ஆகியவறறை மருதத்துக்கும், கடற்காகத்தை நெய்தலுககும் இயம்புகிறது.

பிங்கலம், மாப்பெயா வகை கூறும் எட்டாம் தொகுதியின் தொடக்கத்தில புள்வகைகளைக் கூறுகின்றது (2311—2408). அங்கமையாத நிலத்துக்கேற்ற பகுபபைப் பிரபந்தத் திரட்டு புதுமையாக அமைத்துக் கொள்கின்றது. (16-18)

333 கரிபுலி கரடிசிங்கம் வேங்கை முட்பன்றி
காட்டெருமை யாமா வொட்டக மோரியாளி
மரைகுதிரை குரங்கு மடசூற் கரடி
கருங்குரங்கு செவ்வங்கிக கருநாய் கவரிமாக்
கிருட்டிப் பன்றி வரையாடு தேவாங்
காள்ப்பாய்நதான் பச்சோந்தி மலைப்பாம்பு வேசரிகாண்டா
மிருகந தேரை புருடமிருகஞ் சவாதுப்பூனை
கத்தூரிப்பூனை புழுகுப்பூனை குறும்பாடு குறிஞசி

334 கருமா னுடும்பு செந்நாய்
நாகங்க ளோநாய் கருந்தேரை
கரும்பூ னைகளே கருங்கீரி
கருங்கோ மாயு வெண்சாரை
வெருகு பள்ளை யாடெலிபொன்
மேனித் தவளை கருந்தவளை
வெள்ளைப் புல்வாய் நரியடியன்
மிதிக்கப் புடைத்தான் பாலைக்கா
மரநாய் புள்ளிமான் முயல்புல்
வாய்நாய் கலைமான் பன்றிபசு
மாடுசாரை வெண்கீரி
வான்மண் டூகம் வெண்பூனை

நரிசெம் மறிவெள் ளாடுசூனாவே
நடைத்தெண் முல்லைநீர்
நாயே மேதி மந்திபொதி
யெருது கீரி பூனையே

335 குதிரை வளர்ப்புக் கட்டியானை
குறுந்தோன் முதலை குளிநரிசங்
கூரி யிப்பி நண்டியாமை
தவளை சொறித்தவ ளைநத்தை
பதனி வாளை வரால்கெண்டை
பஞ்சினை மசறை மலங்குழுவை
பாட்டை குறவை கருங்கணியே
கெளிறு பொத்தை சிறைவாவன்
முதிய மருதங் கடலாமை
முதலை மகரந் திமிங்கிலமீன்
முட்டை யானை பனைமீன்கா
முட்டி சுறவு கடல்வாளை
மதுரை திருக்கை முரங்கிளிமீன்
மணலை குண்டை யாக்கணிறால்
வாசி யோராச் சங்கிப்பி
மற்று நெய்தற் காகுமால்

ஐவகை நிலங்கட்குரிய மா கூறப்படுகின்றன.

யானை, புலி, கரடி, சிங்கம், வேங்கை, முள்ளம்பன்றி, கா டெருமை, ஆமா, ஒட்டகம், ஓரி, யாளி, மரைமான், குதிரை குரங்கு, இளமையான சூலுற்ற கரடி, கருங்குரங்கு, செவ்வங் (கழுதைப்புலி) கருநாய், கவரிமான், கிருட்டிப்பன், மலையாடு, தேவாங்கு, ஆள்ப்பாய்ந்தான், பச்சோந்தி, மலை பாம்பு, கழுதை, காணடாமிருகம், தேரை, புருடமிருகம், சவ் துப்பூனை, கஸ்தூரிபூனை, புனுகுப்பூனை, குறுமபாடு என்ப குறிஞ்சிக்குரியன.

கருமான், உடும்பு, செந்நாய், பாம்புகள், ஓநாய், க தேரை, கரும்பூனை, கருங்கீரி, கருநரி, வெள்ளைச் சான வெருகு, பள்ளாடு, எலி, பொன்னிறத்தவளை, கருநதவளை வெள்ளைக் கலைமான், நரியடியன், மிதிக்கப் புடைத்தா என்பன பாலைக்கு உரியன.

மரநாய், புளளிமான், முயல, புல்வாய், நாய், கலைமான், பன்றி, பசுமாடு, சாரை, வெண்கீரி, வான மண்டூகம், வெண் பூனை, நரி, செம்மறியாடு, வெள்ளாடு, சூலுற்ற பசு, முல்லைக்கு உரியன.

நீர்நாய், மேதி, மந்தி, பொதிசுமக்கும் எருது, கீரி, பூனை, வளர்ப்புக குதிரை, தறியில கட்டப்பட்ட யானை, குறுகிய தோலையுடைய முதலை, குழிநரி, சங்கு, ஊரி, சிப்பி, நண்டு, ஆமை, தவளை, சொறித்தவளை, நத்தை, பதனிவாளை, வரால், கெண்டை, பஞசினமசறை, மலங்குழுவை, பாட்டை, குறவை, கருங்கண்ணி, கெளிறு, பொத்தை, சிறைவாவல் என்பன மருதமாம்.

கடலாமை, முதலை, மகரம், திமிங்கிலமீன், முட்டைமீன், யானைமீன், பனைமீன், சாமுட்டி, சுறவு, கடலவாளை, மதுரை, திருககை, முரல், கிளிமீன, மணலை, குண்டை, இறால், சங்கு, இப்பி முதலியன நெயதலுக்காம்.

விலங்கு பற்றிய எண்ணததிலும், பிரபநதத் திரட்டு விரிவு கொள்கின்றது. நமபியகப்பொருள், புலி, கரடி, யானை, சிங்கம் என்பனவற்றைக் குறிஞசிக்கும், செந்நாயைப் பாலைக்கும், மான், முயலை முல்லைக்கும், எருமை, நீர்நாய்களை மருதத்துக்கும், சுறாமீனை நெய்தற்கும தருகின்றது.

நிகணடு, மாப் பெயரின் விலங்கின் வகைப்பகுதியில், வேறு கோணத்தில் பல விலங்குகளைக் குறிப்பிடுவதைப் பிங்கலம் காட்டுகின்றது (2409—2600). தொடர்ந்து பாம்பு, சலசரம் தரப்படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது (2601-2649). (19-21)

வேறு

336 குறிஞ்சி சிறுகுடி பாலை குறும்புமுல்லை
கூர்பாடி மருதம் பேரூர் மூதூரே
பிறிந்த நெய்தலூர் பாக்கம் பட்டினமாந் தண்ணீர்
பேரருவி சுனைகுறிஞசி பாலைக்கே கூவ
லறைந்த முலலைகானம் யாறு குறுஞசுனை யாமருத
மாறு மனைக்கிணறு நீரேரி குளங்குட்ட
முறிநத நெய்தற் குவர்நீரின் கேணி சிற்றூற்றே
முன்னோராற் செயப்பட்ட நன்னீ ரினகுளமே

ஐந்நிலங்களின ஊரும், நீரும் கூறபபடுகின்றன.

குறிஞ்சிக்குச் சிறுகுடி; பாலைக்குக் குறும்பு; முல்லைக்குப் பாடி; மருதத்தில் அமைவன பேரூரும மூதூரும். வேறுபட்ட நெய்தலின் ஊர, பாக்கம், பட்டினம் என்பனவாம். தண்ணீராகப் பேரருவியும, சுனையும் குறிஞ்சியில அமையும். பாலைச்குக் கூவல்; கூறிய முல்லைக்குக் காட்டாறும்; குறுஞ்சுனையுமாம். மருதத்திறகு ஆறு, மனைககிணறு, ஏரி, குளம, குட்டம் என்பன. மாறுபட்ட நெய்தலுக்கு உப்புநீாக் கிணறு, சிறறாறறு, முன்னோர் தொட்ட நன்னீர்க் குளம் என்பன.

ஊர்பற்றிய எண்ணம், நம்பியகப் பொருளிலிருந்து வேறுபடாதே அமைகின்றது. பிங்கலம அவனி வகையில், இபபெயர்களில் சிலவற்றிற்குப் பெயர் வேறுபாடு காட்டுகின்றது. 'குறும்பொறை சீறூர் சிறுகுடி குறிஞ்சியூா' (521), 'முனையிடங் குறும்பு முதுபாலை நிலத்தூா' (530), 'மடப்பந் தண்ணடை மருதநிலத்தூர்' (569) என அமைவன குறிப்பிடத்தககன.

நீர்நிலைகள் பற்றிய எண்ணத்தில் நூல்களிடையே சிறிது வேறுபாடு அமைகின்றது. பாலைக்கு நீரில்லாக் குழியையும் நீரில்லாக் கிணற்றையும் நம்பி கூறுகின்றது. ஆறு, குளம், கிணறு என்பன மருதத்துக்கு நம்பியால் கூறப்பட ஏரி, குட்டம் என்பனவற்றைப் பிரபந்தத்திரட்டு இணைக்கினறது. நெய்தலுக்கு நம்பி கூறும் உவர்நீர்க்கேணி, கவர்நீர் என்பன இங்குச் சறறே மாறுபட்டுள்ளன.

நீர்நிலைகட்குப் பெயர் மாறுபாடு தரல் பிங்கலம் போன்ற நிகண்டுகளில் உண்டு.

வேறு

337 கணிகாந்தள் குறிஞசிகின்னி குறிஞ்சிமராக் குரவே
கடும்பாலை குல்லைமுலலை துளவுபச்சை முலலை
யணிமகிழ்தா மரையறநீா குவளையரக காம்ப
லல்லிமல் லிகைமுதல் செவ்வநதி மருத
மணிநெய்தற் கொட்டிநெய்தற் குறிஞ்சியிலச் சனையே
மலைபெருமபுற் றேதோட்டங் கான்முழை
மழைக்கொள்
பிணிதங்க நிறம்பாலை வெளிசெம்மை யுதிர்கான்
...கெகொளவான் மறைபுற்றோ டருஞ்செலவு மாமே

ஐநிலங்கட்கும் மலரும், குறிஞ்சி பாலைகட்குரிய இலச்சினையும் நிறமும் கூறபபடுகின்றன.

கொன்றை, காந்தள், குறிஞ்சி, கின்னி என்பன குறிஞ்சிக் குரியன. மரா, குரா என்பன பாலைக்காம். குல்லை, முல்லை, துளவு, பச்சை என்பன முல்லைக்காகும். அழகிய மகிழ், தாமரை, குவளை, அரக்காம்பல், மல்லிகை, செவ்வந்தி என்பன மருதம். நெய்தலை அழகு செய்வன, கொட்டி, நெய்தல் என்பன.

குறிஞ்சி நிலத்துக்கு அடையாளம் மலை, பெரியபுற்று, தோட்டம, காடு, குகை, மழை என்பன. அதற்குரிய வண்ணம் தங்க நிறமாம. பாலை வெளியிடம்; செம்மை நிறம்; ... வானத்தை மறைக்கும் புற்றுடன், செல்லற்கு அருமையும் உடையது.

மலர்பற்றி எண்ணத்திலும் இந்நூல் ஓரளவு நம்பியகப் பொருளை ஒத்துச் செனறபோதும ஒவ்வோரிடத்தில் இரண்டும் தம்முள் வேறுபடுகினறன. குறிஞ்சியில் கின்னியை நமபி சுட்ட வில்லை. நம்பி கூறிய தோன்றி, பிடவம் எனபன இங்கு முல்லை யில் விடப்பட்டுத துளவும் பச்சையும் சேர்க்கப்படுகின்றன. மகிழ், மல்லிகை என்பன நம்பியின் மருதத்தில் சுட்டப்பட விலலை. தாழம்பூ, முண்டகம், அடம்பம் என்பன நமபியில் மட்டும் நெய்தலுக்கு உரியனவாக அமைகின்றன.

ஐவகை நிலங்கட்கும் இலச்சினையும் நிறமும் கூறுதல் புதுமைப்போக்குக் கொள்கின்றது. (23)

338 செல்வவீ டருஞ்சோலை பொன்னிறஞ் சிலகானஞ்
சில்லேரி யெருக்காட்சி சேமணியி னோசை
முல்லையறி குறியாகு மருதம் பேரேரி
முதுவணி னிறந்தெய்வக் குழாந்திகழுங் கோயில்
கல்விபயி லிடநடன சாலை கோபுரமே
கடைதெரு மேன்மாடி யரண்பொதுச் சோலைபிறவா
மல்லனெய்தன் முன்னீரே நாஞ்சில்வகை யதனா
லவர்வெற்றம் வெண்மைநிறம் பலபண்டச் சாலை

முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்கட்குரிய இலச்சினை அமைகின்றது.

செல்வம் நிறைந்த வீடு, அரிய சோலை, பொன் நிறம், சில காடுகள், சில ஏரி, எருவிடுமிடங்கள் காட்சியில் படுதல், கன்று காலியின் கழுத்துமணி யோசை என்பன முல்லைக்கு அறிகுறியாம். மருதத்திற்கு பெரிய ஏரி, கனன்ற எரியின் நிறம், தெய்வக் குழுக்கள் திகழும் கோவில், கல்விச் சாலைகள், நடனசாலை, கோபுரம், கடை, தெரு, மேல்மாடி, அரண், பொதுச்சோலை என்பனவும் பிறவுமாம். நெய்தலுக்கு, கடல், கலப்பை வகை, அதனால் பெற்ற வெற்றி, வெண்மை நிறம், பல பொருட் களுடைய பண்டகசாலை என்பன அடையாளமாம். (24)

339 ஆரந் தேக்ககி லசோகம் புன்னை செருந்திமலை
 யலரி கல்லத்தி கன்மூங்கில் மலைவாழை
பேரீஞ்சு புரசாச்சா வெள்ளுள்ளி கழச்சி
 பெருமலை நாரத்தை கூந்தற்கமுகு கோங்கு
வீர வாசினி கூந்தற்பனை பொன்னு மாது
 வெள்ளெருக்குக் கறிமிளகு புளிமாமந் தாரை
தாரிதழி யிஞ்சி பொன்னாவரை குமிழஞ்
 செங்கத் தாரியூனாச் சாதிமலை வேம்புகுறிஞ்சி

340 காரை சதிரக்கள்ளி திருகுகள்ளி வாகை
 கன்னி குழன்மூங்கி றேறுழிஞை முள்ளியிருப்பை
வீரை வறற்பூலா வூகையோமை பாலை
 வேலாத் தேற்றாகூகை கருநெல்லி வள்ளி
சூரைகருங் கிளாப்புறண்டி சங்குபுன்கு முருங்கை
 சூலி முருக்சோடை கறிவேம்பு வக்கணாத்தி
யாரை நச்சுககொடி கரிந்தவறு கச்சுப்பா
 னாவார விடத்துப்பூ வாக்காயா மரங்கள் பாலை

ஐவகை நிலங்கட்குமுரிய தாவரவகைகள் கூறுமுகத்தான் இங்குக் குறிஞ்சிக்கும் பாலைக்கும் குறிப்பிடப்படுகின்றன.

சந்தனம், தேக்கு, அகில், அசோகம், புன்னை, செருந்தி, மலையலரி, கல்லத்தி, கல்மூங்கில, மலைவாழை, பேரீஞ்சு, புரசு, ஆச்சா, வெள்ளுள்ளி, கழற்சி, பெரிய மலைநாரத்தை, கூந்தற் கமுகு, கோங்கு, ஆசினிப்பலா, கூந்தற்பனை, பொன் ஊமத்தை, வெள்ளெருக்கு, கறிமிளகு, புளி, மா, மந்தாரை, சரக்கொன்றை, இஞ்சி, பொன்னாவரை, குமிழமரம், செங்கத்தாரி, ஊனாங் கொடி, சாதி, மலைவேம்பு என்பன குறிஞ்சிக்குரியன,

காரை, சதிரக்கள்ளி, திருகுகள்ளி, வாகை, கற்றாழைச்செடி, குழல்செய்யும் மூங்கில், உழிஞை, முளளி, இலுப்பை, வீரை, உலர்ந்த பூலா, ஊகை, ஓமை, பாலை, வேலம், ஆச்சா, தேற்றா, கூகைக்கொடி, கருநெல்லி, கொடியாக அமையும் சூரை, கருங் களா, பிரண்டை, சங்குச் செடி, புன்கு, முருங்கை, சூலிமுருக்கு, ஓடை, கறி,வேம்பு, வக்கணாத்தி, ஆரை, நச்சுக்கொடி, கரிந்த அறுகு,அச்சுப்பால், ஆவாரம், அவ்விடத்துப் பூவாதவும் காய்க் காதவுமான மரங்கள் பாலைக்குரியனவாம்.

மரப்பெயர் கூறுவதிலும் பிரபந்தத்திரட்டு பெருச்கம் காட்டு கின்றது. பெருமரங்கள் மட்டுமன்றி, கொடி, செடி, புல் முதலிய பல தாவரங்களும் இப்பட்டியலில் இடம்பெறுகின்றன. நம்பி யகப்பொருள் சுட்டும் மர வகைகள் இப்பட்டியலில் அடங்கிவிடு கின்றன குறிஞ்சியில், சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் என்பனவும்; பாலையில் உழிஞை, பாலை, ஓமை, இருப்பை என்பனவும்; முல்லையில், கொன்றை, காயா, குருந்தம், என்பனவும்; மருதத்தில் காஞ்சி, வஞ்சி, மருதம் என்பனவும்; நெய்தலில் கண்டல், புன்னை, ஞாழல் என்பனவும் பொருந்து வதை நம்பி காட்டுகின்றது.

நிகண்டு, மரப் பெயர் வகையில் பல்வகை மலர், மரங்களைச் சுட்டுகின்றமை பிங்கலத்தில் புலப்படுகின்றது (2650-3010). (25-26)

341 குருக்கத்தி காயாவிளா வேழிலைம் பாலை
குருந்து கருங்காலி யுடையவரை யாமணக்குப்
பருத்தியாதளை தோன்றிகொன்றை பிடவம்வெப் பாலை
பூவரசு புளிவேம் பூமத் தெட்டி
யெருக்குநா கரசுநெல்லி யிலவாத்தி யத்தி
யிலந்தை வெள்ளைநாவல் வெள்ளடம்பு செங்காலி
யரக்குமர முசிலமரஞ் செம்பிலவு வன்னி
அலிமர மஞ்சணத்தி கொய்யாமரஞ் சீதாமுல்லை

342 கலவ மருதங் காஞ்சி வஞ்சி வட்டரசு
கற்பிளை சுண்டி யிண்டு தெங்கு காயரசு
பலவு மாமரம் வாழை கரும்படம்பு சேம்பு
பன்னீரால் வீழிமரம் வெள்ளரி நாவன்முள்

ளிலவு பூகரம் கடம்பு பூந்தாழை கோரை
யித்தி நீர்முள்ளி யிலாமிச்சு வள்ளை
பிலவ மலரி தாடிமபூலா மாதளை நீலூமத்
தகத்தி கஞ்சா நாகவல்லி யறுகு மருதக்கே

முல்லைகரும் மருதத்திற்கு முள்ள தாவரங்கள் கூறப்படுகின்றன.

குருக்கத்தி, காயா, விளா, ஏழிலைப்பாலை, குருந்து, கருங்காலி, உடை, அவரை, ஆமணக்கு, பருத்தி, ஆதளை, தோன்றி, கொன்றை, பிடவம், வெப்பாலை, பூவரசு, புளி, வேம்பு, ஊமத்தை, எட்டி, எருக்கு, நாகு, அரசு, நெல்லி, இலவு, ஆத்தி, அத்தி, இலந்தை, வெண்ணாவல், வெள்ளடம்பு, செங்காலி, அரக்குமரம், உசிலமரம், செம்மைஇலவு, வன்னி, அலிமரம், மஞ்சணாத்தி, கொய்யாமரம்,சீதா என்பன முல்லைக்கு உரியன.

தோகை போன்ற மருதம், காஞ்சி, வஞ்சி, வட்டரசு, கற்பிளை, நீர்ச்சுண்டிச் செடி, இண்டை, தென்னை, காயரசு, பலா, மாமரம், வாழை, கரும்பு, அடம்பு, சேம்பு பன்னீர்ஆல்,வீழிமரம், வெள்ளரி, நாவல், முள்இலவு, கமுகு, கடம்பு, பூந்தாழை, கோரை. இத்தி, நீர்முள்ளி, இலாமிச்சைப்புல், வள்ளை, பிலவம், அலரி, தாதுமாதுளம், பூலா, மாதுளை, நீலஊமத்தை, அகத்தி, கஞ்சா, நாகவல்லி, அறுகு என்பன மருதத்துக்காம். (27-28)

343 ஞாழல் கொடியடம்பு முயற்காலி நெடுமுள்ளி
நாய்க்கடுகு சுரபுன்னை பனைமர முண்டகங்காய்த்
தாழை வேத்திரந் தெற்பை முந்திரிகை கண்ணாத்
தாணிகிறாம் பொதிய மரஞ் சாதிக்காய் மரமே
வாழு நெய்தற்கே முறையே குறிஞ்சி பஞ்சுரமே
வாய்ந்த சாதாரி மருதஞ் செவ்வழிபண்ணே
யூழினூண் குறிஞ்சிக்கு வேயரிசி மலைநெல்லோ
டிறுங்கேனற் சோளங் கடலை பிறவாமே

நெய்தலுக்கு உரிய தாவரமும், ஐந்நிலங்கட்குரிய பண்ணும், குறிஞ்சிக்குரிய உணவும் இங்கு உணர்த்தப்படுகின்றன.

ஞாழல், கொடியாக வளரும் அடம்பு, முயற்காலி, நெடுமுள்ளி, நாய்க்கடுகு, சுரபுன்னை, பனைமரம், முண்டகம், காய்க்கும் தாழை, பிரம்பு, தருப்பைப்புல், முந்திரிகை, கண்ணாத்தாணி,

கிராம்பு, ஒதியமரம், சாதிக்காய் மரம் என்பன நெய்தல் நிலத்தில் வாழும்.

ஐந்நிலங்கட்கும் முறையே, குறிஞ்சி, பஞ்சுரம், சாதாரி, மருதம், செவ்வழி என்பன பண்ணாம்.

உரிய உணவு, குறிஞ்சிக்கு மூங்கில் அரிசி, மலைநெல்லோடு காக்காச் சோளம், தினை, சோளம், கடலை முதலியனவாம்.

நிலங்கட்குரிய பண்வகையில் நூல்களிடையே கருத்துமாறுபாடு அமையவில்லை. பிங்கலம், அறுபோக வகையில் இசை வகையை விரிவாக விளக்குகின்றது (1374-1443).

உணவுப் பொருட்களில், நம்பி கூறுயதினும் மிகுதியான வகைகளைப் பிரபந்தத் திரட்டு உட்படுத்தியுள்ளது. மலைநெல், மூங்கிலரிசி, தினை என்ற மூன்றுமே குறிஞ்சிக்கு உரியதாக அங்குச் சுட்டப்படுகின்றது. (29)

344 வழங்குகதிக் கொண்டனவு மடவி கவர்ந்தனவு
மாடங்காக் கவர்ந்தனவுங் கவர்ந்து வித்தனவுந்
தழைந்தவூண் பாலைக்கே முல்லைககேயெள்ளுச்
சாமைகோத் திரவங் கோதும்பை கம்புதுவரை
யுழுந்துமுற்கங் குலத்தம் விழைகாரா மணியே
யுறுவாலி கேழ்ப்பை காடைக் கண்ணிபிறவா
முழங்கரிச் செந்நெல் வெண்ணெற்கா ருடனீர்
வாரமுதலவர் முதன்மையுறு மருதக்கு முறையே

பாலை, முல்லை, மருதங்கட்குரிய உணவுகள் சுட்டப்படுகின்றன'

மக்கள் செல்லும் வழியில் பறித்துக் கொண்டனவும், காட்டில் திருடினவையும், மாடங்களிலும் சோலையிலும் கொள்ளை செய்தனவும், அவ்வாறு கவர்ந்து விற்றனவும் காரணமாக ஏற்பட்ட உணவு பாலைக்காம். முல்லைக்கு, எள், சாமை, பசுவிலிருந்து பெறும் பால், மோர், தயிர், நெய் முதலிய பொருட்கள், கோதுமை, கம்பு, துவரை, உழுந்து, பச்சைப் பயறு, கொள், விரும்பத்தகும் காராமணி, வெள்ளரி, கேழ்வரகு, காடைக் கண்ணி என்பனவும் பிறவுமாம் (உறுவாலி-உறுவாரி-வெள்ளரி). ஆரவாரத்துடன் அரிகின்ற செந்நெல், வெண்ணெல், கார் நெல்லுடன் மழை தருகினற அமுது உழவர் மிகுதியாகப் பொருந்தும் மருதத்துக்கு முறையானது.

குறிஞ்சியின் உணவு மிகுதிபோன்றே, பாலை, முல்லை, மருதங்களிலும் பிரபந்தத்திரட்டு சில இணைவுகளை அமைக்கின்றது. நம்பி, பாலைக்கு வழியிற்பறித்த பொருளும் பதியிற் கவர்ந்த பொருளும் தருகின்றது; முல்லைக்கு வரகு, சாமை முதிரையைச் சுட்டுகின்றது; மருதத்திற்குச் செந்நெல், வெண்ணெல் அரிசியையே கூறுகின்றது.

345 நாற்றமீ னிலவணமே கொள்வார்கள் கொடுத்தன்று
நெய்தலூ ணாகுந் தொழிலைந்து நிலக்குஞ்
சாற்றுதுங்கேள் வெறியாட்டுதேன்கெடுத்தன் மலையச்
சாலிவித்தல் பைங்குரற்பைந் தினைகாத்தன் மூல
மேற்றகழ்தன் மலையருவி யிருஞ்சுனை நீராட
லிசைபட்சி படுத்தல்கணி மலர்கால மணத்தல்
கூற்றினுங்கோ பம்புரிதல் பெருவேட்டந் திரிதல்
கொலைமிருக வதைவேயின் குழலூதல் குறிஞ்சி

நெய்தல் உணவும், ஐந்நிலத் தொழில் கூறும் முகமாகக் குறிஞ்சித் தொழிலும் அமைகின்றன.

நாற்றமுடைய மீன், உப்பு என்பனவற்றை உடையவர்களாதலால், அவற்றைப் பெறுவார்க்கு விற்றுப் பெறுவன நெய்தல் நிலத்தாரின உணவாம். ஐந்து நிலங்களுக்கும் உரிய தொழில் கூறுவேன், கேள். வெறியாட்டு, தேனெடுத்தல், மலைநெல் விதைத்தல், பசிய கதிர்களையுடைய தினைப்பயிரைப் பாதுகாத்தல், கிழங்கு வகைகளை அகழ்ந்து எடுத்தல், மலையருவி, பெரிய சுனை இவற்றில் நீராடல், இசைபாடும் பறவைகளைப் பிடித்தல், கொன்றை மலரும் காலத்தில் திருமணம் புரிதல், கூற்றைவிட மிகுந்த கோபம் கொள்ளல், பெரியஅளவில் வேட்டை செய்தல்,கொலைபுரியும் விலங்குகளைக் கொல்லல், மூங்கில குழல் ஊதல் என்பன குறிஞ்சி.

நெய்தல் உணவாக, நமபியகப்பொருள், மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள் எனக் கூறுவது இங்கும் தொடர்கின்றது.

தொழிலை, கருப்பொருட்களின் இறுதியிடத்தில் நம்பி வைக்கும் பாங்கு, இங்கும் தொடர்ச்சி காட்டுகின்றது. ஆயின், செயல் நிலைகள் நமபி கூறுவதை உள்ளடக்கியும் மிக்கும் அமைதல் பெரும்பான்மை.

...வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ் சுனை யாடல் ... (20)

என்பது நம்பி. (31)

346 ஒன்றுக்கொன் றமரிடுதல் காளியிடஞ் சேற
லுயர்பலிக ளூட்டல் பிறர்நகர்ச்சம ரம்புரிதல்
பொன்றுதலை நினைந்திருத்தல் காவுதனிச் செய்தல்
போர்வில்வாள் முதல்படைகை தரித்தே யிருத்தன்
மன்றவே வேட்டமுற லெவரெனினும் வதைத்தன்
மச்சமென்று நினையாமல் விருதுகுடிற் படுத்த
லென்றுக்கு வருந்தல்கோ டூதற்ற செயலே
யேறுபகற் சூறையுயிர்த் தொகைமயங்கல் பாலை

பாலைக்குரிய தொழில் விரிக்கப்படுகின்றது.

ஒருவருக்கொருவர் போர்செய்தல், காளி கோயிலுக்குச் செல்லல், உயர்ந்த பலிகள் செய்தல், பிறர் நகர்சென்று போர் புரிதல், இறத்தலை நினைத்து இருத்தல், பலியாகத் தானே தன்னைக் கொடுத்தல், பேருக்குரிய வில், வாள் முதலிய படைகளைக் கையில் எப்போதும் கொண்டிருத்தல்,வேட்டையில் ஈடுபடல், விருது எவரென்றாலும் கொல்லுதல், குற்றம் என்றும் பாராமல், விருது எனும கொடியைக் குடிலின் மீது படரவிடுதல், என்றூழாகிய வெயிலுக்கு வருந்துதல், கோடு ஊதுதல் என்பன; செயல் ஆநிரைகளைப் பகற்கொள்ளை -செய்தல்; உயிர்த் தொகை மயங்கல் என்பன பாலை.

நம்பி, மிகச் சுருக்கமாகப் பாலை நிலத் தொழிலை 'வெஞ்சமம், பகற் சூறை யாடல்' (21) எனக் குறிக்கின்றது. (32)

347 கோத்திரவஞ் சாமைவிதைத் தவைகளைக் கட்டரிதல்
கூட்டுறுபோ ரேற்றவவை விரித்தல்கிடா விடுத்த
றாத்திடுதல் பதடிநீத் திறைகொடுத்துக் கோட
றழைகொன்றைக் குழலூதன் மூவினமேய்த் துறுத
லார்த்தவெருத் தினந்தழுவல் குரவையிட் டுக்கான்யா
றாடனிரை நிலைமொழிதல் கன்றூட்டு கிடையே
காத்தல்கதிர்த் தலைகாத்தல் யாவருக்கு மஞ்சல்
காட்டையொரு சிறைவிடுத்தன் முலலையார் வினையே

முல்லை நிலத்தாரின் தொழில்கள் கூறப்படுகின்றன.

பசுவின் பொருட்கள் தொடர்பான தொழில்கள், சாமை விதைத்தல், களை நீக்கல், விதைத்தவை விளைந்தபின் அரிதல், கூட்டுறுதல், போராக அமைப்பதற்காகக் கட்டுகளை விரித்தல், போரடிக்கக் கடாவிடுதல், தூற்றுதல், பதரை நீக்கி மன்னனுக்கு வரிசெலுத்தியும் விற்றுப் பிறபொருள் வாங்குதலும் செய்தல், செழிப்புடைய கொன்றைக் குழல் ஊதுதல், மூவினங்களை மேய்த்தல், ஆர்க்கின்ற ஏறுகளைத் தழுவுதல், குரவை அயர்தல், கான் ஆற்றில ஆடல், ஆனிரைகளின் நிலையைக் கூறுதல், கன்றூட்டுதல், கிடைகாத்தல், கதிர் காத்தல், அனைவருக்கும் அஞசல், காட்டின் ஒருபக்கம் தங்குதல் என்பன முல்லை நிலததினரின் தொழிலாம்.

முல்லை நிலத்தில் ஓரளவு தொழில் மிகுதி அமைவதை நம்பியகப்பொருள் வாயிலாகவும் அறியலாம்.

சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னாடல் ... (22)

மூவினம் மேய்த்தல் என இந்நூல் தருவது, எருமை, பசு, ஆடு என்பனவற்றைக் குறிக்கும். (33)

348 இரவுச் சவம்பொங்கல் களியாடு மூரி
யிசைவிளையாட் டாற்றுநீ ராடல்குளங் குடைத
றிருமணவாத் தியமுழக்கல் பேரிகொட்டல் வருநீாச்
சிறுபறைபே ரேரிநீர் பெருக்கல்வண்ட லாடல்
கரிவிடன்மா வேநடத்த விரதம்விடன் மறைநூல்
கற்றலவை கேட்ட லேருழுத னாறிட்டல்
குரவைவிதை வித்தலவை களைகட்டல் காத்தல்
குரலரிதல் போரேற்ற மேதிபிற விடுதல்

349 நாவலோ பொலியோவென் றட்டுவையை யகற்றி
நாட்டரசர் திறைகொடுத்துத் தானமது வழங்கிக்
காவலுழ வர்க்குதவிச் சகடமிட் டகத்திற்
கலக்கவிடல் பலபொருட்கள் கோடலமு திட்டல்

பாவலருக் குதவனெல் லரிகாணற் பொருட்டுப்
பகருமங் கலவள்ளை பாடல்சங்க முழக்க
றாவுகா ளம்பூரி சின்னமுத லூத
றம்புருவீ ணைகண்மீட்டற் குங்கனக் மிகுத்தல்

350 வாசமாம் பொருள்பூசல் குருமுறை வழாதன்
மந்திரமுற் றேநீறு முதலவே யணித
றாசர்நடங் கூத்துவித்தை பார்த்தல்வனம் வைத்த
றகுநெறிகள் பிறவெல்லாம் புரிதனிசஞ் சொற்ற
னேசமுற லருளுற்ற விறைமகிழ நடத்த
னெய்த்தலைமள் ளர்கள்சுரா பானஞ்செய் தாட
லாசைவிடா மாதர்சுகந் தேடல்விளி காட்ட
லாளரவம் வேள்விமுதற் பிறவாகு மருதம

மருதநிலத்தினர்க்குரிய தொழில் விளக்கப்படுகின்றது.

இரவுநேர விழா, பொங்கலிடல், கள்ளுண்டு களித்தல், ஆடு, எருது இவற்றைப் பொரச்செய்து விளையாடல், ஆற்று நீரிலாடல், குளம் குடைதல், திருமண வாத்தியம் முழக்கல், பேரி கொட்டல், பெருகிவரும் நீர்பற்றிச் சிறுபறை கொட்டுதல், பேரேரிகளில் நீர்பெருகச் செய்தல், வண்டலாடல், யானை செலுத்தல், குதிரை செலுத்தல், தேர் ஓட்டல், வேதம் கற்றலும் கேட்டலும், ஏருழுதல், நாற்று நடுதல், குரவை இடல், விதை விதைத்தல், களையெடுத்தல், பயிர் விளையும்போது காவல் புரிதல, கதிா அறுத்தல், போரடிக்க எருமை, பிறவற்றை விடுதல்;

'நாவலோ பொலியோ' என்று குரலெழுப்பி வைக்கோலை அகற்றி, நாட்டின் அரசருக்குத் திறைகொடுத்து, தானம் அளித்து, காவல்செய்யும் உழவர்கட்கு உதவி, வண்டிகளில் இட்டு, வீடுசேர்த்தல், பல பொருள்கள் கொள்ளுதல், அமுதளித்தல், பாவலருக்கு உதவுதல், நெல்லின் அளவு மிகும பொருட்டுக் கூறும் மஙகல வள்ளை பாடல், சங்கு முழக்கல், எககாளம் பூரி சின்னம் முதலியன ஊதல, தம்புரு வீணை எனபன மீட்டல் எனபனவறறிற்கும பொன அளித்தல்;

வாசனைப் பொருட்கள் பூசல், குருமுறை வழுவாது அமைதல, மநதிரம் நவிலல், நீறு முதலியன அணிதல், அடியவர் நிகழ்த்தும் நடனம், கூத்து, வித்தை கண்டு மகிழ்தல், மரங்கள

நடுதல், இத்தகைய தகுதியுடைய பிற செயல்கள் எல்லாம் செய்தல், உண்மை பேசல, அனபு கூர்தல், அருளுடைய மன்னன் மகிழும்படி நடததல்; நெய்பூசப்பட்ட தலையையுடைய மருதநில மக்களான மள்ளர் கள்குடித்து ஆடுதல், பரத்தையர் சுகம் தேடுதல், கூப்பிடும் ஓசை காட்டுதல், ஆள் ஓசை, வேள்வி செய்தல் போன்றன மருதமாம்.

பிரபநதத் திரட்டிலமையும் மருதநிலத தொழில் விரிவு நம்பியகப் பொருளில அமைந்திலது.

மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிடல் அகன்குளம் குடைதல்
வருபுன லாடல் ... ... (23)

என மிகச் சுருக்கமாகவே செய்தி தரப்படுகினறது. (34-36)

351 நீரோட்டஞ் சங்கெடுத்த னித்தில சலாப
நீந்திநீர்க் குளித்தல் வலையின்மீ னிழுத்தல்
பார்நீட்ட மறிதன் மீனுலத்தன் மீன்விறறல
பாறுமுதற் புள்ளோப்பல் வெள்ளுப்புப் படுத்தல்
காரோட்டங் காணன்மீன் கோட்பறையோ டத்தி
கண்டைகோட்டல் வலைப்பாட்டுக் கழறலம்பி
யோட்டல்
சூர்காட்டல் பிறர்தேசம் புகுதலவிலை மாதர்
சேரன்மாத ராதறுத்து யூதநெய்தற் காமே

நெய்தலுக்குரிய தொழிலகள் கூறப்படுகின்றன.

நீரில செல்லுதல், சங்கு எடுத்தல், முத்துக்குளித்தல், நீந்துதல், நீரில் குளித்தல, வலையில் மீன் இழுத்தல், நீரில் உள்ள பாறையின் நிலை அறிதல, மீன உணக்கல், மீன் விற்றல், உணங்கும் மீனிலிருந்து பருந்து முதலிய பறவைகளைக கடிதல், வெள்ளை உப்பு உண்டாககல், மேக ஓட்டம் மூலம் மழைநிலை காணல், மீன்கோட்பறையுடன், மீன் எலும்பு கண்டை எனும் ஓலையை வளைத்துப் பின்னல், வலைபபாட்டுப பாடல், படகு செலுத்தல், கடல்தெயவம் காட்டல, கடல் கடந்து பிறநாடு செல்லுதல், பரத்தையரைச் சேரல், அன்புற்று அங்குத் தஙகுதல், துத்தி எனும் கொம்பினை ஊதுதல் என்பன நெய்தலுக்காம்.

நெய்தல் தொழிலாக, நம்பி, இவற்றில் ஒருசிலவற்றை மட்டும் சுட்டுகின்றது.

...மீனுப்புப் படுத்தல்
உணங்கவை விற்றன்மீன் உணககல்புள் ளோப்பல்
நெடுங்கட லாடல் (24)

பிரபந்தத்திரட்டு பல்நிலைப் பெருக்கங் காட்டுகின்றது. (37)

352 ஏரிலகு கார்கூதிர் முன்பனிபின் பனியே
யிளவேனின் முதுவேனில் பெருங்காலஞ் சிங்க
வோரைமுத லிரண்டிரண் டாய்க்கற் கடகமான
வோரைமட்டு மிவையைந்து நிலக்குவரும் வழியே
சீரில்கூதிர் முன்பனி குறிஞ்சி பாலைத்
திணையிரு வேனிற்பின்னாம் பனிமுல்லை காரே
யாரும் மருதக்கு நெய்தற்காறு காலமுமா
மவற்றுளே சிறுகால மறைகுவோங் கேட்டி

353 மாலையுடன யாமமே வைகறை காலையதே
வந்துறுநண் பகலெற்பா டறுகூற்றா மவைதாம்
வேலைபடு சுடர்பாதி தொட்டீரைந் தளவை
மீக்கன்னற் பகுதிமுறை பெறுமைந்து நிலக்கே
கோலலிடை யாமமே குறிஞ்சிநண் பகலே
கூர்பாலை மாலையே முல்லைக்கா மருதக்
கேலுமே கடையாமம விடியலென்னு மிரண்டு
மெறபாடு நெயதற்கென் றியம்பினா ரன்றே

பெருமபொழுதும் சிறுபொழுதும் 'ஐவகை நிலதது்க்கும் வகுக்கப்படுகின்றன.

அழகு பொருந்தியகார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெருமபொழுது. சிஙக இராசி முதல இரண்டிரண்டாகக் கறகடக இராசி வரை இவை ஐநது நிலங்கட்கும பெருமபொழுது அமைககும்போது, சிறபபில்லாத கூதிா, முன்பனி என்பன குறிஞசி; பாலைத் திணைக்கு இளவேனி லும் முதுவேனிலும் பின்பனியுமாம. முல்லைக்குக் கார்; நிறைவுடைய மருதத்துக்கும் நெய்தலுககும் ஆறுகாலங்களுமாம். அவற்றுள் அமையும் சிறுபொழுது கூறுவேன், கேள்.

மாலையுடன், யாமம், வைகறை, காலை என்பதே, வந்து சேர்கின்ற நண்பகலோடு,எற்பாடு எனும் ஆறு கூறு உள. அவை, கடல்படுகினற கதிரவன் காலப்பகுதி முதல் பத்து அளவும் மேம்பட்ட நாழிகைப் பகுதி முறை, ஐந்து நிலங்களுக்கும் அமை யும். இடையாமம் குறிஞசி, நண்பகல பாலை, மாலை முல்லை, மருததநிற்குக் கடையாமம், விடியல எனும் இரண்டு, நெய்த லுக்கு எற்பாடு என்று கூறினர்.

பிரபந்தத் திரட்டு, குலநில வியப்புச சார்வியலினை, முதற் பொருளின் நிலம்பற்றிப் பேசித தொடஙகிய போதும் அ'' முதற் பொருளின் பிறிதொரு கூறான காலம்பற்றி இங்கேயே மொழி கின்றது கருபபொருட்கள் முதன்மை பெற்று, இவ்இடைவெளி அமைக்கின்றன எனலாம்.

முதற்பொருள், நிலம்-பொழுது என இரண்டு எனும் கருதது தொல்காப்பியம் முதலே அமைந்துவிடுகின்றது.

முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே (950)

காலம், ஆண்டின் பகுதியும், நாளின பகுதியுமாக இருநிலையில் அமைதலும் தொல்காப்பியம் முதலே தொடர்கின்றது. இதனைப் பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பெயரளித்து வேறுபடுத்தும் பாங்கு பிற்காலத்தே ஏற்பட்டது எனலாம்.

ஆண்டின் பகுதிகள் ஐந்தும் (கார், கூதிர், பனிஎதிா பருவம, பின்பனி, வேனில்,) நாட்பகுதிகள் ஆறும் (மாலை, யாமம, வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல்) தொல்காப்பியத்தில் (952-956) சுட்டப்பட, நம்பியகப்பொருள், பெரும்பொழுது ஆறெனவும், சிறுபொழுது ஐந்தெனவும் வரையறுக்கின்றது.

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில வேனி லென்றாங்
கிருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே (11)

மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக
கைவகைச சிறுபொழு தைவகைத் தாகும் (12)

பிரபந்தத் திரட்டு, சிறுபொழுது 'அறுகூற்றாம்' (353) என் கினறது.

நிலநதிற்கேற்பப் பெரும, சிறு பொழுதுகளை வகுக்கும் எண்ணம் எல்லாக் காலத்தும் அமைகின்றது. தொல்காப்பியம் மருதத்துக்கும், நெயதலுககும் நாட்காலம் மட்டும் வகுக்க, நமபியகப்பொருள் முதலியன 'பெரும்பொழுது இருமூன்றும் பெறும்' எனப் பேசுகின்றன. யாமத்தை இடையாமம், கடையாமம் எனப்பகுத்து முன்னதைக் குறிஞ்சியிலும் பின்னதை மருதத்திலும் இணைத்தல் பிரபந்தத் திரட்டின் தனித்தன்மை போலும். பெருங்காலம் இரண்டிரண்டாய் சிங்க ஓரை முதல் எண்ணப்படும் எனவும் சிறுகாலம் சூரிய அஸ்தமனம் முதல் கருதப்படும் எனவும பிரபநதத் திரட்டு, முன்னைய உரையாசிரியரைப் பின்பற்றிச் சுட்டுகின்றது.

பிங்கலம் போன்ற நிகண்டுகள், வானவர் வகைபற்றிப் பேசும்போது, பருவகாலம் குறிததும் (296-304), உதயம் முதலிய வற்றிற்குப பிறசொல் சுட்டியும் அமைதல் குறிப்பிடத்தக்கது. (38-39)

354 கூடலே பிரிதலே யிருத்தலே யூடல்
குறித்திரங்க லேயிவற்றி னிமித்தமெனு பத்து
நாடுமுறை யந்நிலங்கட் காமிரண்டி ரண்டாய்
நவிலுமுரிப பொருளிவையே கருப்பொருளே கடவு
ளோடுபதி னைந்துவகை கூறியவே முதலா
மொண்பொருள்கா லங்களொடு மேற்கூறு மலையே
மூடுபடு நிலங்கான மானவய லங்கண்
முதுநீரே சாரிடமே யெனப்பத்து மாமே

ஐந்நிலங்கட்குரிய உரியும், கருப்பொருள் எண்ணிக்கையும், முதற்பொருளும் கூறப்படுகின்றன.

கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், நினைந்து இரங்கல் இவற்றின் நிமித்தம், என்னும் பத்தினையும் அம்முறையில், குறிஞ்சி முதலிய நிலங்கட்கு இரண்டிரண்டாய்க் கூறுவது, உரிப்பொருளாம். கருப்பொருள் கடவுளோடு பதினைந்து வகையாகக் கூறப்பட்டனவே. முதற்பொருள் காலங்களோடு, மேற்கூறும் மலை, மூடுபடு நிலம், கானம், மருதம, பரப்புடைய முதுநீா இவற்றைச் சார்ந்த இடம் எனும் பத்துமாம்.

முதல், கரு, உரி எனும் பகுப்பு தொல்காப்பிய அகத்திணையில் அமைகின்றது.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை (949)

முதலும், கருவும் சுட்டியபின், பிரபந்தத் திரட்டு இங்கு உரிப் பொருளைத் தருகினறது. ஐநது நிலஙகட்கு, ஐநது உரிஎனும் பொதுப்பாங்கினை நிமிததமும் இணையப் பத்து எனப் பிரபந்தத் திரட்டு காட்டுகின்றது.

ஏற்கெனவே கண்ட வண்ணம், தொல்காப்பியம், எட்டும் பிறவுமாகச் சுட்டிய கருவை, நம்பி பதினான்காக விரிகக, பிரபந்தத் திரட்டு பதினைந்தாகப் பெருககுகினறது தெய்வம், உணா, மா, மரம், புள, பறை, செய்தி, யாழ என்பனவற்றுட னும் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஊர், நீர், பூ, பண் என்ப வற்றுடனும் நிலங்கட்குரிய அடையாளமும் சேர்ப்பதால், பிரபந்தத் திரட்டில் எண்ணிக்கை ஏற்றம் அமைகின்றது.

முதற்பொருளின் நிலத்தை, பிரபந்தத் திரட்டு ஏற்கெனவே முப்பத்தைந்து (315) எனச் சுட்டியபோதும், இங்கு, ஐந்நிலமும் சாரிடமுமெனப் பத்து எனக் கூறுவது மரபுத் தொடர்ச்சியாக அமைகின்றது (நம்பி.9) (40)

355 குங்குமங்கா ரகின்மரீ சங்கோட்ட மேதற்
கோலமா மைந்துமே குறிஞ்சிபடு பொருளே
தங்கிளவே னிற்பருவப் பாலையார்க் கிறலி
சார்நாவி மயிற்பீலி தேனான பொருளே
யங்குமுல்லைநெய்பான்மோர்தயிர்வெண்ணெய்பொருளே
யணிமருத நெற்கழுநீர் கழைவாழை பயறாந்
தங்குநக ரந்நிலத்திற பொருண் மனனன் யூகந்
தந்திபித்தன கணணாடி யெனமனா புலவர்

வேறு

356 பொன்னே பவள முத்துப்புத்
தன்னோர் சங்கந் தனிநெய்தற்
குன்னா நின்ற பொருளென்றே
சொன்னா ரறிவோர் தொகைகொண்டே

மலைபடுபொருள் முதல் கடல்படு பொருள்வரைக் கூறப்படு கின்றன.

குங்குமம், கரிய அகில், மிளகு, கோட்டமெனும் மருந்து, தக்கோலம் எனும ஐநதும குறிஞசி நிலப் பொருட்களாம். இள வேனில் பருவம் தங்குகினற பாலைகககு அரககு, இறால், நாவி, மயிற்பீலி, தேன் என்பன பொருள். அழகிய மருதம், நெல், கழு நீர், கருமபு, வாழை, பயறு என்பனவாம். அந்நிலத்தில் அமைந் துளள நகரப் பொருள், மன்னன் படை, யானை, பித்தன், கண்ணாடி என்று புலவர் சொல்வர்.

பொன், பவளம், முத்து, உபபு, தனக்கு ஒப்பு இலலாத வலம்புரிச்சங்கம என்பன தனித்தனமையுடைய நெய்தல் நிலத் திற்கு உரிய பொருள் எனறு தொகுத்துச் சொன்னார்கள் அறிவோர.

பிங்கலம் நிகண்டு ஐவர் வகையில் இவற்றை விளக்குகின்றது (397-401). தொகையகராதி, காடுபடுதிரவியம், மலைபடு திரவி யம் எனச் சில தலைப்புகளில் இதனை ஒத்த எண்ணத்தைத் தரு கின்றது. அகில், குங்குமம், கோட்டம், தக்கோலம், மிளகு என்பன மலைபடு திரவியம் எனவும் (பக். 184). அரக்கு, இறால், தேன், மயிற்பீலி, நாவி என்பன ஐந்தும் காடுபடு திரவியம் என வும் (பக். 76), கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, யானை, வேந்தன் எனும் ஐந்தும் நகர்படு திரவியம் எனவும் (பக். 138), பவளம், முத்து, சங்கு, ஓர்க்கோலை, உப்பு எனும் ஐநதும் கடலமிர்து எனவும் (பக். 65) குறிககபபடுகின்றன. பிங்கலம், நாடுபடு திரவியம் ஐந்து என்பதில், செந்நெல், செவ்விளநீர், சிறு பயறு, கரும்பு, வாழை ஆகியவற்றைக் கூறுகின்றது (399) (41-42)

வேறு

357 பிரமம்பிர சாபத்திய மாரீடந் தெய்வம்
பெற்றகாந் திருவம் சுரம்மிராக் கதமே
பரவுபசா சம்மிருநான் குலகமண மவற்றுட்
பகர்குறிஞ்சி காந்திருவம் பாலையிராக் கதம்பேய்
தருமுல்லை யசுரமா ரீடமே மருதஞ்
சாற்றுபிற வாகுங்காந் திருவமுமா மன்றே
திருவமரு நெய்தற்கே பிரசாபத் தியமே
செப்புமிவை யெட்டுமுறுஞ் செயல்கூறு வாமே

எண்வகை மணங்களை; ஐவகை நிலங்கட்கும் பகுத்து அமைக் கின்றார்.

பிரமம், பிரசாபத்தியம், ஆரீடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பசாசம் எனும எட்டும் உலகத்தோர செய்யும் திருமணமாம். அவற்றுள், குறிஞ்சிக்குக் காநதிருவம; பாலைக்கு இராக்கதம், பசாசம் எனபன; முல்லைக்கு அசுரம், ஆரீடம் என்பன; மருதத்திற்குப் பிறவும் (பிரமம், தெய்வம்), காந்திருவமுமாம்; திரு அமாகின்ற நெய்தலுக்குப் பிரசாபத், தியம். கூறுகின்ற இவை எட்டும் சாரும் செயல் கூறுவோம்.

எண்வகை மணம் பற்றிய செய்தியும் விளக்கமும், நிகண்டுகள், தொகையகராதிகள் போன்றவற்றில் அமைகின்றன. பிரபந்தத் திரட்டு ஆரீடம் எனவும் அசுரம் எனவும் பசாசம் எனவும் குறிக்கப்படுவன அங்குப் பெரும்பாலும் ஆரிடம், ஆசுரம், பைசாசம் எனவும் அமைகின்றன (பிங்கலம் 1101). கந்தருவத்தைத் தமிழரின் களவு மணத்தோடு ஒப்பவைத்து எண்ணும் நிலை முன்பு காணப்படினும், எண்வகை மணத்தையும் நிலச் சார்பு பற்றிக் காணல் புதுமையாக அமைகின்றது. (43)

358 கன்னிருது வெய்துமுன்னங் கன்னிருது வயிற்றிங்
களினொத்த வந்தணர்க்கு நீரளித்தல் பிரமம்
பின்னுற்ற மனங்கொள்வான் கொடுத்தபொருட் கிரட்டி
பெண்ணுக்கீந் துற்றவரோ டளித்தல் தன்பின்னே
மன்னுமண மீரிடத்தா னிறீஇமனத் துக்கேற்ற
மணமகற்குத் தனக்கொத்த பொருளுதவி மகளைப்
பன்னியாக் குவதாகு மறையொடுநெய் வேள்விப்
பருங்கனன்முற் கரமுற்றார்க் கீய்வதாந் தெய்வம்

359 வலலேற்ற முலையாளு மிறையவனு மெதிரே
வந்துகட்பார் வையிற்புணர்தல் காந்திருவ மணமே
விலலேற்றல் பொறியழித்தன் முதலசெய் தார்க்கு
மின்னிவளே பாரியெனச செய்தணைத்த லசுரஞ
சொல்லேற்ற வலிதிற்பெண் டனைமருவிச் சுகிதத்தல்
சூழ்ந்தவிராக் கதமாகுமொருவாமயல் கொள்வாள்
கல்லேற்று முலைபுணர்ந்து மவற்கூடா தழித்துங்
கலிங்கபங்கஞ் செய்துதுயில் போதுறலும் பாசம

எண்வகை மணங்களும் விளக்கப்படுகின்றன.

கன்னி பருவம் அடையும் முன்னம், அல்லது கன்னி பருவம் எய்திய ஒரு மாதத்தில், ஒத்த அந்தணனுக்கு நீர்வார்த்து அளித்

தல் பிரமமணம். பின்வரும் பிரசாபத்திய மணம், பெண்ணை ஏற்கும் தலைவன் கொடுத்த பொருளுக்கு இரட்டியாகப் பொருள் பெண்ணுக்கு அளித்து, உரிமைச் சுற்றததுடன் அளிப்ப தாம். பின்வருகின்ற ஆரிடமணம் இருஇடங்களும் நிறுவி, மனத் திற்குப் பொருந்திய மணமகனுக்கு, தனக்கு ஒத்த பொருள் உதவி மகளைப் பத்தினியாக்குவதாகும். வேதம் ஓதி, நெய்யூற்றி வேள்விசெய்து, தீயின் முன்னர் கைப்பற்றி உற்றவர்க்கு அளித் தல் தெய்வம்.

வல்லுக் கருவியை ஒத்த நகிலுடைய பெண்ணும், தலை வனும் எதிர்ப்பட்டு, கண்பார்வையில் புணர்தல் காந்தருவம் எனும் மணம். வில்லை வளைத்தல், சுழற்பொறி எய்தல் முதலி யன செய்தவருக்கு இப்பெண் பாரியை என அறிவித்து, அது செய்தவன் அவளைப் பெறுவது அசுரமாம். வலிதில் பெண்ணை மருவி இன்பம் பெறுவது சூழ்ச்சியுடைய இராக்கதம் ஆகும். நீங்காத மயக்கம் கொண்டவளின குன்றொத்த நகில் புணாந்தும், கூடாது அழித்தும், ஆடை கவர்ந்து துயிலும்போது கூடுவதும் பைசாசம்.

தொல்காப்பியம், மறையோர் 'தேயத்து மன்றல் எட்டு' (களவு. 1) எனச் சுட்டியதனை இளம்பூரணர் உரையில் வகுக்கும் போது, எண்வகை மணங்களைப் பெயர் கூறி விளக்குகின்றார். பிரபந்தத திரட்டின் விளக்கம் அதனை ஓரளவு ஒட்டிச் சென்ற போதும் சிறிதளவு மாறுபடுவது குறிப்பிடத் தக்கது.

'பிரமமாவது, கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியா யிருப்பா னொருவனுக்குத் தானமாகக் கொடுப்பது'.

'பிரசாபத்தியமாவது, மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேணடியவழி இருமுது குரவரும் இயைந்து கொடுப்பது'.

'ஆரிடமாவது, ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது.

'தெய்வமாவது, வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள் ளும் ஒருவற்கு வேள்வித்தீ முன்னாக் கொடுப்பது.

'காந்திருவமாவது, ஒத்த இருவர் தாமே கூடுங் கூட்டம்.'

'அசுரமாவது, வில்லேற்றினானாதல்திரிபன்றியெய்தானால் கோடற்குரியனெனக் கூறியவழி அது செய்தாற்குக் கொடுத்தல்'.

'இராக்கதமாவது, தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது.'

'பைசாசமாவது 'களித்தார் மாட்டுந் துயின்றார் மாட்டுங் கூடுதல்' (இளம் உரை, தொல், பொருள். 89). (44-45)

வேறு

360 முன்னே கூறுமூன்றுகுலமொழியுமுலகில்வெளிப்படையாம்
பின்னே கூறுஞ்சூத்திரர்தாம்யாவரென்னுமபெரியோர்க்கு
மின்னே தொகையுந் தொகைமுன்பா விளங்கு குலத்திற் பேதமுமாய்
நன்னூற் படியே தொண்ணூற்றாறானகுலமும்நவிலுவாம்

ஐந்நில இயல்புகள் கூறியபின், இங்குக் குலவியல்பு கூறும் தொடக்கமாக முதல் மூன்று குலமும், நான்காவதன் விரிவான தொண்ணூற்றாறு குலமும் பற்றி மொழிகின்றார்.

முன்பு கூறிய அந்தணர், அரசர், வணிகர் எனும் மூன்று குலம் பற்றிய பொருளும் உலகில் வெளிப்படையாம். நான்காவது குலமாகக் கூறும் சூத்திரர் யார் என்று கேட்கும் பெரியவர்கட்கு, மின்போன்றவளே, குலங்களின் தொகையும், அத்தொகை யுடன் விளஙகுகின்ற குலபேதமுமாக, நல்ல நூல்களின்படி தொண்ணூற்றாறு குலம்பற்றிப் பேசுவேன்.

நிகண்டுகள், ஆடவர் வகையில், அந்தணா முதலிய நாற்குலம் குறித்து மொழிநத பின்பு குயவா, உப்புவாணிகர், கொல்லர்.. போன்ற சிலர் பற்றிப் பேசுகின்றன (பிங்கலம் 783-830). பெரும்பாலும் தொழில் அடிப்படையில் இவர் பெயர்கள் அமைதலை, சேந்தன் திவாகரம், சூடாமணி, கயாதரம், ஆசிரிய நிகண்டு போனறனவும் காட்டுகினறன (ஆசிரியம 57-62). தொகையகராதி, சாதி எனும் தலைப்பின்கீழ் (பக. 96) தொண்ணூற்றொரு குலப்பெயா தருவதுடன், 'அவறறையெல்லாம் சுப்பிர பேதாகமம், பிரம புராணம், வைகாநசம, மாதவியம, சாதி விளக்கம் முதலிய நூல்களில் கண்டு தெளிக' எனவும் சுட்டுகினறது (பக. 96), பிரபநதத் திரட்டு, 'நனனூல்' என சாதி விளக்கம் பறறிய நூலொன்றைக் குறிப்பிடுவது, இததகைய நூல்களில் ஒன்றாகலாம். (46

361 பூதியிரா யஞ்சந்தனம பொட்டுமுதற் பிறவாய்ப்
போறறுமறை யோரைந்து விதமாகு மிறைவ
ராதித்தன் மதியங்கி பலசாதி யிறைவ
ராகநான் காம்வணிகர் கோத்தனமே பூமி
பாதுகாத் திடுமூவ ராமிவருட் பூமி
பாலர்பன் னிருவர் கொசசி நாடுசோ ழமதே
யோதுதொண் டை கூடல்கச்சி கொங்குசந் தனக்கொ
லுத்தாம்பட் டங்காரை வள்ளியோ ராமே

மறையோர் வகை, இறைவர் வகை, வணிகர் வகை என்பனவும் பூமிபாலர் பன்னிருவர் பற்றியும் கூறப்படுகின்றன.

நீறு, கருகுமாலை, சந்தனம், பொட்டு முதலிய பிறவற்றுடன் போற்றப்படும மறையவர் ஐந்து விதத்தினராம். அரசர்கள் சூரியன், சந்திரன், அக்கினி, பலசாதி மன்னர் என நான்காம். வணிகர், கோ, தனம், பூமி பாதுகாத்திடும் மூவராம். இவருள் பூமிபாலர் பன்னிருவர். கொச்சிநாடு, சோழநாடு, தொண்டை, கூடல், கசசி, கொங்கு, சந்தன மலையான பொதியம், கொலுத் தாம் பட்டம், வள்ளியூர் என்பனவாம்.

அந்தணகுலத்தின் ஐவகைப் பகுப்புநிலை புதுமையாகத் தெரிகின்றது. சூரியகுலம், சந்திரகுலம், அக்கினி குலம் என அரசர்க்கு முக்குலம் கூறல் பொதுமை (தொகை அகராதி, பக். 12) வைசியரில், கோவைசியர், தனவைசியர், பூவைசியர் என முபபகுப்புப் பிங்கலத்தில் தரப்படுகின்றது (775-777). இப் பன்னிருவகையும் நிலம் காக்கும் அரசரை அளிக்கவல்லர் என்பது புலப்படுகின்றது. (47)

362 சென்மரச புத்திரன் ராசாக்கவறை தட்டான்
சிங்களன்கோமுட்டிமலையாளிகொங்கன் மிறாட்டி
கன்னடியன் வாணியனொச் சன்செம்மான் பாணன்
செக்கான் சவுண்டிகன் கூத்தன்முதலி வேழம்பன்
பன்னுசே ணியனாண்ட தாதன்ரெட்டி வாடன்
பக்கிரி பட்டாணி வள்ளுவன்ரா வுத்தன்
வன்னிய னாயக்கன் ரவுத்தேபொருள் வெண்புலையன்
வலையன்பொந் திலியன்மா லிமைதொழும்பன்
குறவன்

363 வல்லம்பர் புனவேடர் மறக்கைக்கிளை வேடர்
மறவர்கரை யாயரகம் பிடார்குறும்ப ரிடையர்
கொல்லர்படை- யாச்சிகள்ளர்சடையர்தொம்பர் கன்னார்
குயவாதொட் டியர்பறையர் சக்கிலியர் பள்ளி
நல்லவொட்டர் பள்ளர்தச் சர்வடுகர் மாறாடர்
நாவிதர்வண் ணார்சாணார் துலுக்கர்சோ னகரே
சொல்லுகம்ப வதராரியர் வேற்றுச் சாணாா
சொற்றகைக் கிளர்வேறம் பட்டரிவ ராமே

பல குலங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

இராசபுத்திரன், ராசா, கவறை, தட்டான், சிங்களன், கோமுட்டி, மலையாளி, கொங்கன், மிறாட்டி, கன்னடியன், வாணியன், ஒச்சன், செம்மான், பாணன், செக்கான், சவுண்டிகன், கூத்தன், முதலி, வேழம்பன், சேணியன், ஆண்டி, தாதன், ரெட்டி, இலாடன், பச்கிரி, பட்டாணி, வள்ளுவன், ராவுத்தன், வன்னியன், நாயக்கன், ரவுத்தன், பொருளுடைய வெண்புலையன், வலையன், பொந்திலியன், மாலிகன், தொழும்பன், குறவன்,

வல்லம்பர், புனவேடர், வீரமுடைய கைககிளை வேடர், மறவர், கரையாயர், அகம்பிடார், குறும்பா, இடையர், கொல்லர், படையாச்சி, கள்ளர், கடையர், தொம்பர், கன்னார், குயவர், தொட்டியர், பறையர், சக்கிலியர், பள்ளி, ஒட்டர், பள்ளர், தச்சர், வடுகர், மாறாடர், நாவிதர், வண்ணார், சாணார், துலுக்கர், சோனகர், கம்பவதர், ஆரியர், வேற்றுச் சாணார், கைககிளர், அம்பட்டர் என்பவராம்.

இப்பட்டியலில் எழுபத்தியிரு பெயர்கள் அமைந்திருக்க வேண்டும் என்பது, 'எழுபானிரு சாதியும் சூத்திரரே' (370) என்பது போன்றுவரும் சில பாடலால (368) தெரிகின்றது
(48-49)

வேறு

364 உற்றபேத மோாநிலத்துக குறுதல்
சொற்றோ மாணாலு
மற்ற நிலத்து மெபபொருளும் வருதல்
வேணடில் வருங்கண்டா

யற்றை நாளி னின்னிலத்தி னாகும்
பொருளாய்க் கூறாமற்
சொற்ற தன்றி யிப்பொருளைத் தொகுத்துச்
சொற்றே மல்லேமே

சாதிபேதங்கள் நிலத்தில் மயங்கலாம் எனல்.

குலத்தில் பொருந்திய வேறுபாடுகள், ஒரு நிலத்திற்குப் பொருந்துவதைக் கூறினேன். ஆயினும், மற்ற நிலத்திலும் எப் பொருளும் வேண்டுமாயின் வர வாய்ப்பு உளது. அத்தகைய நாளில், இந்நிலத்திற்குரிய பொருளாகக் கூறாமல், கூறியதன்றி, இப்பொருளைத் தொகுத்துச் சொல்லவில்லை.

இவ்வியலின், முதற்சில பாடல்களில் ஐவகை நிலத்தின் தலை, இடை, கடைப் பகுதிகளும், ஐவகை நிலம் சார்ந்த பிற வகை நிலங்கட்கும் உரிய குலததினா தனியாக ஓதப்பட்டது பற்றி, இக்கருத்து அமைகின்றது எனலாம.

தொழில் காரணமாகவும், நிலம காரணமாகவும், மொழி காரணமாகவும், இனம் காரணமாகவும், பெயர்கள் அமைகின்றன எனலாம் (தச்சர், வடுகர், மலையாளி ஆரியர்). (50)

வேறு

365 இவர்களினூ றரித்துமறை யோர்செயல்கொண் டிருப்பா
ரேலவர்சகுப் பிறந்தவகை நூறரித்துக்
கொலைகொண்
டவனிகாத் திடுவரே லரசர்க்குப் பிறந்த
வவ்வகைநூ றரித்துவா ணிபம்புரியில் வணிகர்
பவமதனிற் பிறந்தவகை பிறந் தார்பலப்
பலரே கோவசியர் பாாவசியர் வழியோர்
தவறிநூ றரித்திலராய்த் தந்தைவழி யாவார்
சாற்றவரிற் பிறந்தவகை யளவிலா தவரே

தொழிலாலும், பிறப்பாலும் சாதி அமையுமாறு.

மேற்கூறிய இக்குலததினரில், பூணூலிட்டு, அந்தணர் ஒழுக்கம் கொண்டிருப்பாராயின, அந்தணருக்குப் பிறந்தவர் போன்று கருதப்படுவா; பூணூலணிந்து கொலைத் தொழில் புரிந்து நிலம் புரப்பாராயின அரசகுலம்; பூணூல் புனைந்து வணிகம் செய்தால

வணிகர். இவ்வுலகில் இத்தகு பிறப்புவகையில் பிறந்தவர் பலப் பலர். கோவசியர், பாரா வசியர் வழியினர், தவறி, பூணூல் அணி யாதவராகத் தந்தை வழியினர் ஆவர். அவர்கட்குப் பிறந்த சாதியினர் அளவில்லாதவர் எனக் கூறு.

முதன்மையான முக்குலங்களும், பிறப்பாலன்றித் தொழி லால் குலநிலை அமைதலும இங்குத் தெரிகின்றது. வேதகுலம், செட்டிகுலம், அரசகுலம என்ற இம்மூன்றும் பல்வகைக்கலப்பால் எண்ணற்ற சாதிகளை உருவாக்கியமை இங்குக் குறிக்கப்பட்டு' தொடர்ந்து வரும் பகுதிகளில் விரிக்கப்படுகின்றது. (51)

366 வேதகுலஞ் செட்டிகுலம் வேதகுல மரசர்
விளங்குகுலத் தாண்பெண்ணுக் குற்பத்தி காவின்
மாதையுற்று மணமின்றிப் புணர்ந்துமே பெற்ற
மகசனூ றரித்துமறைப் படிநடப்பா ராகு
நாதகுலஞ் செட்டிகுலம பூவசியர் குலத்து
நாரியரை மேவவுறற மைந்தானூ றரித்து
நீதிபெறு கோலபிடித்து நடப்பவர்கள் பின்னு
நேரான வணிகனையு நிசழ்த்துவோங் கேட்டி

மேற்குறிப்பிட்ட குலக்கலப்பினுரில், அந்தணர், அரசர்க்குரிய வேதகுலமும் நாதகுலமும் கூறப்படுகின்றன.

வேதகுலம் என்பது, வணிகக்குலமும், அந்தண குலமும் அரசர் குலமும், மேற் குலத்தின் ஆணும மற்றகுலத்தின் பெண ணும் இணைய உருவாகும. சோலையில் பெண்ணை இணைந் தும், திருமணம் புரியாது புணர்ந்தும பெற்ற மக்கள், நூல் தரித்து வேதப்படி நடப்பவரால் ஆகும். நாதகுலம் என்பது' அரசர், செட்டிகுலம் பூவசியர்குலம் என்பவற்றின் பெண்டிரை இணையப் பெற்ற மக்கள, பூணூல் தரித்து, செங்கோல் பிடித்து நடப்பவரால் ஆவது. பின்னும பொருத்தமுடைய வணிகக்குலத் தையும் கூறுவேன், கேள்

உயர்குலத்து ஆணும, இழிகுலப் பெண்ணும் கூடிய பிறந் தவர் அநுலோமர் எனவும, உயர்குலபெண்ணும இழிகுல ஆணும் இணையத் தோன்றியவர் பிரதிலோமர் எனவும் கூறப்படு வர். பிராமணர் விவாக முறைப்படி க்ஷத்திரிய கன்னிகையுடன் சேரப் பிறந்தவர் சவர்ணர்;, பிராமணன் க்ஷத்திரிய குல மகளி

ரைச் சோரத்தாற் சேரப் பிறந்தவர் நக்கத்திரசீவகர்; பிராமணன் வைசியகுலக் கன்னியை விவாகஞ் செயது பிறந்தவர் அம்பட்டா; வைசிய குலப்பெண்களைச் சோரததாற் கூடிப் பிறந்தவா குமபகாரா் (நாவிதர், குயவர்) ..., இததகு விளக்கங்களைத் தொகையகராதி தருவது (பக். 96) இயைபு பறறி இங்கு நினைக்கத் தக்கது. (52)

367 தனவணிகக் குலமக்கள் கோவசியர் பாரிற்
சார்வசியர் புதல்வியரை மணமின்றிக் கலந்து
மனமகிழ்ந்து பெற்றமைந்தர் முன்சொற்ற வவரா
மற்றிவர்சா தியின்முறையே மறையோரை முதலாய்த்
தனவணிக ரீறாகிப் பெற்றமைந்தர் கீழ்மைத்
தலைமையுள்ளா ரிவர்மாதர்ச் சேர்ந்தவர்க்கே பிறநதோ
ரினமில்லாத் தாழ்வாவ ரன்றிப்பார் வசிய
ரிச்சாதிக் கூட்டத்திற் பிறந்தவ ரனேகர்

குலக்கலப்பு, வணிகக்குலம் முதலியவற்றிற்குக் கூறப்படுகின்றது.

தனவணிகக் குலத்தைச் சார்ந்த மக்கள், கோவசியர், பூவசியர் ஆகியோர் புதல்வியரைத் திருமணம் புரியாது இணைந்து மகிழ்நது பெற்ற மக்கள், முன் சொன்ன வணிகக் குலமாம் இவர்கள், சாதியின் முறைப்படி அந்தணர் முதலாக, தனவணிகர் ஈறாகப் பெற்ற மைந்தர் கீழ்மைத் தலைமை யுள்ளவர்களாம். இவர்கள் மாதர்களைச் சேர்ந்து பிறந்தவர்கள் இனம் இல்லாத கீழ்மை உடையவர்கள் ஆவார்கள். அன்றியும், பூவசியார் இத்தகைய சாதிக் கூட்டத்தின் வழிப் பிறந்தவர் அனேகராம்.

குலக்கலப்பில் பிறப்பவரிலும், சிலரை உயர்ந்தோராகவும் சிலரைத் தாழ்ந்தோராகவும் கருதுவதுதெரிகின்றது. பார்ப்பனக் கன்னியும், விதவையும் மணமின்றிப் பார்ப்பனரிடம் பெற்றவரும், பிராமணர் விவாகம் புரிந்தும் புரியாதும் சத்திரியப் பெண்ணிடம் பெற்றவரும், தொகையகராதியில், 'இவர் யாவரும் விரும்பும் குடியாராதலின் வீழகுடியார் எனவும், காணியாளர் எனவும், சிற்றரசராதலின் வேளாண சாமந்தர் எனவும பெயா பெறுவர்' (பக். 96) எனக் குறிக்கபபடுவது இஙகு இயையு பறறிச் சுட்டத்தக்கது. (53)

368 அன்னவருக் சன்னவரே மணமின்றிப் புணர்ந்து
மவர்தாமுமொன்றுக்கொன்றே மாறிப் புணர்ந்தும்
பின்னவரிற் பினனவரே மணமின்றிப் புணாந்தும்
பின்னவர்க்குப் பின்னவரே முன்மாறிப் புணர்ந்து
மின்னவித மெழுபானோ டிரண்டுமுறை மும்மை
யிசைசாதிக கோறந்தோர் புணராதொகை
யும்வரும்
பன்னியதொண் ணூற்றாறா யாயதிவை யயனார்
படைப்பீச னீசனெனப் பாலிததார் பேரே

நீசகுலம் விளக்கப்படுகின்றது.

அந்தண குலததினர் அக்குலப் பெண்டிரையே, திருமணம் புரியாது இணைந்தும்; அவ் அந்தணர் தாமும் பிற குல மகளிரை மாறிப புணாந்தும; அரச குலத்தவர் அக்குல மங்கையரை மணம் செய்யாது இணைந்தும; வணிகக் குலத்தினர் முன்குலத்தின பெண்டிரை மாறிப் புணர்ந்தும்; இவவிதமாக, எழுபதுடன் இரண்டு முறைகளில மூன்று சாதிகட்கும் இணைவால் பிறந்தவர்கள் சேர, தொகையாக வருவது தொண்ணூற்றாறாகும். இவை அயனாரின் படைப்பாம். ஈசன் இவர்க்கு நீசன் எனப் பெயர் அளித்தார். (54)

வேறு

369 அயன்படைப் பினிய வயனிடத் துற்றவ
ரந்தண ரிறையோர்கள்
பயம்ப டுத்திடு மால்வயின் வந்தவர்
பரனெனுங் கோமரன்பா
னயமி குததிடு வணிகரே தோன்றினார்
நவினறம் வழியென்றே
முயன்று முன்னிய றனனிலிங் கோதின
முயற்சியாம் படைப்பென்றே

இறைவனும் முக்குலப் படைப்பும் தொடர்புறுமாறு சுட்டப் படுகின்றன.

அயனின் படைப்பு இனிமையுடையது. அப் பிரம்மா வினிடததில பிறநதவர் அநதணா. அரசர்கள் பாற்கடலில் துயிலும் திருமாலின் வழி வநதவர், சிவபெருமான் எனும்

பெருமையுடையவனிடம் நயம்மிகுந்த வணிகர் தோன்றினர். கூறப்படுகின்ற அறத்தின் வழி முயற்சியால் படைக்கப்பட்ட தென்று முன்பு கூறியதனைக் கொள்க.

இதனை யொத்து, தேவரையும் குலத்தினரையும் தொடர்பு படுத்துதல் பிரபந்தத் திரட்டில் முன்பும் காணப்படுகின்றது (307). அங்கு, தேவர் வழிப் பணி செய்வோர் வந்ததாகக் கூறப்படுகின்றது. (55)

வேறு

370 எழுபா னிருசா தியுஞ்சூத் திரரே
வழுவா யவர்தம் வழியுஞ் சிலரே
முழுவாய் மையினே மொழியும் பெரியோ
னழிவான் வெளிவந் திடினே யழியும

சூத்திர சாதியின் எண்ணிக்கையும் பிறவும் கூறப்படுகின்றன.

எழுபத்திரண்டு சாதியும் சூத்திரராம. வழுவாக அவர்கள் வழிவந்தோர் இன்னும் சிலர் உளர். முழு வாய்மையுடன் அவற்றை எடுத்துக் கூறும் பெரியவன் அழிவதற்காக, வெளிவந்தால், அழியும (தெளிவில்லை). (56)

வேறு

371 மாதாமோ கங்களினான மாதாகுருச் சொல்லான்
மையிட்டும் பொட்டுமுத லணியணிந்துங் குடுமி
சிதசிகை சடைதெய்வம் வருணநடைப் புடையே
செய்கையூண் பிறவேறா யாயதுபின் னன்றே
வாதமே தவழமலையை முதலதசாங் கங்கள்
வருணநடை யறிந்துதான கூறுவது பின்னோ
ரோதுவதை வைப்பதுவு நன்றிவர்க்கும் வேறே
யுரைக்கவயன்படைபபினிலுமுறுதியில்லைமாதோ,

வருண ஒழுக்கம மாறுபடலும, தசாங்கம் மன்னர்க்கே கூறப்படலும் இங்கமைகின்றன.

பெண்ணிடம் ஏற்பட்ட மோகம் காரணமாகவும், மாதா, குரு முதலியோரின் சொற்காரணமாகவும், மை இட்டும்,

பொட்டு முதலிய அணிகள் அணிந்தும், குடுமி, சிகை, சடை வைத்தும்; தெயவம் வருணததிற்குரிய நடைமுறைகள், உடை, செய்கை, உணவு எனபனவும் இவை போன்ற பிறவும் வேறுபடுவது பினபு நனறாம. தென்றல தவழகின்ற மலை முதலிய தசாங்கங்கள் வருண நடை அறிநதுதான கூறப்படல வேண்டும். பின்னோர் கூறுவதை வைப்பதுவும் நனறு. இவருககும் வேறே உரைக்க. அயனின படைப்பிலும் உறுதியிலலை.

தசாங்கம, மன்னர்ககும், உலக மனனவரான இறைககும மட்டும கூறப்படும என்பது பொதுக்கருதது. இரத்தினச சுருக்கம் போன்றன எலலோருக்கும் தசாஙகம கூறபபடலாம் எனும் உணர்வைத் தருகின்றது

வரையாறு நாடுநக ரூர் துரக மதகரியே
விரையாரு மாலைமுரசம் பதாகைமெய யானையெனனு
முரையார் தசாங்கத்தி னொவ்வொன்றை நாடியுற
வகுத்தே
தரையாளு மன்னா முத லாயெவருக்குஞ் சாற்றுகவே (51)
(57)

372 நாலுவகைத் தோற்றமெழு வகைப்பிறவி பேத
நாட்டுமெண்பா னான்குநூ றாயிரமா மிவையா
மேலவகை வேறுவே றாய்ப்புகல வடங்கா
வெம்மாலு முடியுமோ வெவர்பாட வல்லார்
சாலுமொன் பதிலகக மனுடபே தத்திற்
சாற்றுமுதற் பேதத்திற் றாள்பேதஞ் சொன்னோங்
கோலுமவர் பிறவிமுறை வகுப்புமவை யவமுங்
கூறுவே முன்னோராற் குறித்தநூ லறிநதே

பிறவிபேதம் எண்ணிலடங்கா எனவும், கூறியதும், கூறப் போவனவும் எடுத்து மொழியப்படுகின்றன.

நான்கு வகைத் தோற்றம் (பை, முட்டை, நிலம், வியர்வை) எழுவகைப் பிறவி (தேவர், மக்கள், விலங்கு புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம) இவற்றின் யோனிபேதம எண்பதது நானகு நூறாயிரம் இவற்றை இன்னும் வகைப்படுத்தி வேறு வேறாகக் கூறில் அடங்காது. எம்மாலும் முடியுமோ. எவர் பாட வலலார். மிகுந்த ஒன்பது லட்சம மனுடபேதம். அதில் கூறப்படு கின்ற முதல் பேதத்தின் தாள்பேதம் சொன்னேன். அவர்

களுடைய பிறவி முறை வகுப்பும், அவயவமும், முன்னோர் அவற்றைக் குறித்த நூலறிந்து கூறுவேன்.

யோனிபேதம் எண்பத்தி நான்கு நூறாயிரம என்பதனை, மக்கள ஒன்பது நூறாயிரம், தேவர் பதினான்கு நூறாயிரம், விலங்கு பதது நூறாயிரம், புள் பத்து நூறாயிரம், ஊர்வன பதினொன்று நூறாயிரம், நீர்வாழ்வன பத்து நூறாயிரம், தாவரம் இருபது நூறாயிரம எனவும அல்லது தேவர் பதினாறு நூறாயிரம் எனவும் தாவரம் பதினெட்டு நூறாயிரம் எனவும் கூறுவர் (தொகையகராதி, பச. 170)

முறையும், உடலுறுப்பும் தொடர்பான செய்திகள் சில பிங்கலம் போன்ற நிகண்டுகளின் ஆடவர் வகைத் தலைப்பில் அமைகின்றன (பிங்கலம் 905-924; 972-1079 ஆகிய நிகண்டு மக்கட் பெயர்த்தொகுதி 39-53). (58)

373 தாதையுடன் முன்பிறந்தான் பெருநதாதை பின்னே
தானபிறந்தான சிறுதாதை பெண்பிறந்தாள்மாமி
மாதாவி னுடன்பிறநதான் மாமனுடன் பிறந்தாள்
வருமபெருநதாய் சிறுத்தாய்பெற் றோர்தநதோர் பாட்ட
ரேதமிலலா வுடனபிறநதான் றமபிபெண்ணேற் றங்கை
யிசைந்தபெருந் தாதைமக்கட் கிம்முறையே மாமன்
பேதமில்லா மகன்மைத்துனன் பெண்ணேற் கொழுந்தி
பெற்றபிள்ளை மகன்பேரன் பெண்மகளும் பேத்தி

முறை வகுப்புக் கூறப்படுகின்றது.

தந்தையுடன் முன்பு பிறந்தவன் பெருந்தாதை; பின்பு பிறந்தவள் சிறுதாதை; பெண் பிறந்தவள் மாமி. தாயுடன் பிறந்தவன் மாமன்; உடன் பிறந்த பெண்டிர் பெருந்தாய், சிறு தாய் பெற்றவர்களைத் தந்தவர்கள் பாட்டர். குற்றமற்ற உடன் பிறந்தான் தம்பி பெண்ணாயின் தங்கை ஏற்புடைய பெருந் தாதையின் மக்களுக்கும இம்முறையேயாம். மாமனது மாறு பாடில்லாத மகன் மைத்துனன்; மகள் கொழுந்தி; பெற்ற பிள்ளையின் மகன் பேரன்; பெண்ணின் மகள் பேத்தி. (59)

374 அண்ணன்மகன் மகன்மகளே மகளக்காண் மகனே
யானமரு மகன்மகளேன் மருமகளே யாகு
மண்ணியே கொள்ளுமுறை மாமிமக்க ளாகு
மிவையின்றி யானமுறை யிரண்டொன்று கூடு

நண்ணுமிவை யின்றியே பிறந்தவகை யதனா
 னற்றஙகை யண்ணன்மனை மாமிமுதற் குற்றம்
பண்ணுமுறை யழிததுச் சேர்நதுதாலி யின்றிப
 பார்த்துமே வியும்பிறவும் பெற்றார்கள் பிறரே

முறை வகுப்புத் தொடர்ச்சி.

அண்ணனுடைய மகன், மகள்; மகளாயின் மகள. அககாளின் மகன், மருமகன்: மகளாயின் மருமகள். நெருங்கி மணம் கொள்ளும் முறை மாமியின் மக்களாம். இவையின்றியும உரிய முறைகள் இரண்டொன்று ஏற்புடையதாம. பொருத்தமுடைய இவையின்றிப் பிறந்த வகைகளினால் நலல தங்கை, அண்ணன், மனைவி, மாமி முதலியன குற்றமுற்றன. மணம்புரியும் முறை அழித்துச் சேர்ந்து, தாலி இல்லாது பார்த்தும், மேவியும்,பிறவும் பிறர் பெற்றார்கள். (60)

375 குதியுள்ளங் சால்புறங்கால் துடைமுழங்கால கணைக்கால்
 குறங்குநகம் விரல்சகனங் கறண்டைகுறி யுந்தி
முதுகுகுறித் துளைநெஞசு வயறுமலத் துளைகை
 முலைபிடரி புயமுள்ளங் கைம்முழங்கை மணிகைக
யிதழ்கழுத்துத தலைகன்னங் காதுகண்மூக் கண்ண
 மிடைபல்லு நாக்குவாய் புருவநெற்றி தாடி
வதனந்தோ லிரத்தமிறைச்சி மேதையெலும்பு மச்சை
 மயிர்நரம்பு சுவேதநீர் பிறபொருந்து முடலே

உடலின் உறுப்புகள், உட்கூறுகளின் பட்டியல் இங்கு அமை கின்றது.

குதி, உள்ளங்கால், புறங்கால், துடை, முழங்கால், கணைக் கால், குறங்கு, நகம், விரல், கடிதடம், கறண்டை, குறி, உந்தி, முதுகு, குறித்துளை, நெஞ்சு, வயிறு, மலத்துளை, கை, நகில், பிடரி, தோள், உள்ளங்கை, முழங்கை, மணிக்கை, இதழ், கழுத்து, தலை, கன்னம், காது, கண், மூக்கு, அண்ணம், இடை, பல், நாக்கு, வாய், புருவம, நெற்றி, தாடி, வதனம்; தோல், இரத்தம, இறைசசி, மேதை, எலுமபு, மசசை, மயிா, நரம்பு, சுவேதநீர் என்பனவும் பிறவும் உடலில பொருந்தும்.

அவயவங்களின் எண்ணிக்கை முப்பத்தியிரண்டென பின்பு சுட்டுகின்ற போதும் (376), துடை-குறங்கு என்பது போல் இரு நிலை கொள்வதாலும், அண்ணம், நா என்பது போன்ற உறுப்பு

களைக கூறலாலும், எண்ணிக்கை மிகுகின்றது. பாதம் முதல் கேசம வரை முபபத்திரு உறுபபு எவை எவப பன்னிருபாட்டியல் பட்டியல அமைககின்றது.

அகஅடி உகிரே விரல புறஅடியே
பரடே கழலே கணைததாள முழந்தாள்
குறங்கே அல்குல கொப்பூழ வயிறதன்
வரையே இடையே மயிரன்ஒழுங்கே
முலை உகிர் விரலே முனகை அகஙகை
தோளஇணை கழுதமே முகம் நகை செவ்வாய்
மூக்கே கணணே காது புருவம்
நுதல எனும ஆறைந்து உறுபபுடன இரண்டும்
பாதமஆதியா வேண்டுதல புணாபபின... (214)

இப்பட்டியல மாறுபட வாய்ப்பமைவதைத் தொகையகராதி காட்டுகின்றது (பக். 57). (61)

வேறு

376 இரண்டார் பதினா றவயவமாந்
திரண்ட வதனுட் சிலபேதந்
தெருண்ட மேலோர் சொற்றதனான்
மருணடி டாது வசனித்தோம்

377 கூறு மிவையே தொகுத்தவுட
லூறு பாடின் றிககொண்ட
வேறு தத்து வந்தன்னைத்
தேற வுரைக்கப புகுந்தேமே

உடலுறுப்புகளின் எண்ணிக்கையும, உடற் தத்துவம் கூறப் போவதும் சுட்டப்படுகின்றன.

முப்பத்திரண்டு, அவயவங்களின் எண்ணிக்கையாம். கூட்டமான அவறறுள், சில விகற்பங்கள் தெளிவுடைய பெரியோர் கூறியதனால மருளாது உரைத்தேன்.

மேற்கூறிய இவற்றின் தொகுதியான உடல், ஊறு பாடிலலாது ஏற்றுக்கொண்ட வேறு உடல் தத்துவங்களை தெளிவாக உரைக்கப் புகுந்தேன். (62-63)

வேறு

378 பூத மைந்துநீர் தீபூப் புகல்கால வானாம் ஞானேந்தியம்
புகழ் தோத்திரந் தொக்கே சட்சுசிங்வை யாக்கி
ராணங்க ளைந்தா
மோதுசத்தபரிசமே யுருவம் ரசகந்தம் புலனைந்து
வாகருப் பாதமபாணி பாயுரு பததங் கற்மவிநதியந
தீதி லநதக் கரணமனம் புத்தி யாங்காரரு சித்தந் திரண்ட
தாந்ம தத்துவ மிருபத்து நாலாம் வித்தைதத்துவம்
பேத கால நியதிகலை வித்தை ராகம் புருடனே
பேசு மாயகை யெனப்புகன்ற வேழு மாகும்
பேசுங்கால்

ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் வித்தை தத்துவம் ஏழும் கூறப்படுகின்றன.

பூதம் ஐந்து, நீர் தீ பூ காற்று வான் என்பனவாம். ஞானேந்திரியம், சுரோத்திரம், துவககு, சட்சு, சிங்நுவை, கிராணம் என ஐந்தாம். சத்தம், ஸ்பரிசம், உருவம், ரசம், கந்தம் எனப் புலன் ஐந்து. வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ப கருமேந்திரியம். தீதற்ற அந்தக் கரணம் மனம், புத்தி, ஆங்காரம், சித்தம். இவை சேர்ந்தது ஆன்ம தத்துவம் இருபத்து நாலாம். வித்தியா தத்துவம், காலம், நியதி, கலை, விதத்தை, இராகம், புருடன், மாயை எனக் கூறிய ஏழும் ஆகும்.

தத்துவம் தொண்ணூற்றாறில், ஆன்மதத்துவம் இருபத்து நான்கு. அவை பூதம் ஐந்து, புலன் ஐந்து, ஞானேநதிரியம் ஐந்து, கருமேந்திரியம் ஐந்து, கரணம் நான்கு என்பன (சதுரகராதி, பக். (73). ஞானேநதிரியம் எனப் பிரபந்தத் திரட்டு குறிப்பிடுவன முறையே காது, மெய், கண், நா, மூக்கு என்பனவாம். அவ்வாறே புலனைந்தும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனபனவாம். அவ்வாறே கருமேந்திரிய முறையே சொல், கால், கை, குதம், குறி எனபன.

ஆன்மா எனபதனையும் இணைத்துத் தத்துவம் இருபத்தைந்து என பிங்கலம் சுட்டுகின்றது (1091). (64)

379 சுத்த வித்தை யீகரஞ்
சாதாக்கி யஞ்சத்தி சிவமைந்துந்
தொகுத்த சிவதத் துவமாக
நாலொன பானு முட்கருணி

நத்து பிராண னபான
னுதானன் வியானன் சமானனே
நாகன் கூர்மன் கிரிகரன்
றேவதத்தன் றனஞ்செயன் பத்து
மொத்த வாயுவா மிடையே
யுயிர்பிங் கலையே சுழிமுனையே
யுறுகாந் தாரியத்தி சிங்வை
யலம்புருடைகுகுசங் கினியே
சித்திர வயிரவனு மாக
நாடி பத்தாம் பூசகூறு
சேர்ததோன் மயிரே யென்பு
நரம்பு தசையாகச் செப்புமைநதே

சிவதததுவம், உட்கருவி எண்ணிக்கை, வாயு, நாடி என்பனவும் மண்ணின் கூறும் தரப்படுகின்றன.

சுத்தவித்தை, ஈசுரம், சாதாககியம், சததி, சிவம் எனும் ஐந்தும் தொகுச்கப்பட்ட சிவதத்துவமாக, முப்பத்தியாறும் உட்கருவியாம. விரும்பததக்க பிராணனை, அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூாமனை, கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன எனும் பத்தும ஒன்றுபட்ட வாயுக்களாம். இடைகலை உயிர்க்கும பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடை, குரு, சங்கினி, சித்திரவயிரவன் என நாடி பத்தாம். நிலத்தின கூறு, தோல், மயிர், எலும்பு, நரம்பு, தசை எனக் கூறும் ஐந்துமாம்.

சிவதத்துவம் ஐந்தும, 'ஞானமேறிக கிரியை குறைந்தது சுத்தவித்தை, ஞானங் குன்றிக கிரியை யுயர்ந்த தீச்சுரம், ஞானங் கிரியையை யொத்தது சாதாக்கியம், கிரியை நாடல் சத்தி, ஞானமென்றல் சிவம்' என விளக்கப்படுகின்றது (சதுரக ராதி, பக். 271-2).

முன்பாடலில் (376) அமைந்த 24 ஆன்ம தத்துவமும், 7 வித்தை தத்துவமும இங்குச் சுட்டப்பட்ட 5 சிவதத்துவமுமாக மொத்தம் 36 உட்கருவியாம்.

தசவாயு பற்றிய எண்ணம் 'வான்வகை'ப் பகுதியில் பிங்கலத்தில் தரப்படுகின்றது (32-42). இவ்வாயுக்கள், பத்து வெவ் வேறு

பட்ட இயல்பும் செயலும் உடையனவாம். சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இவற்றை இவ்வாறு விளக்குகின்றார். 'அபான வாயு மல மூத்திரங்களைப் பெய்விக்கும். உதானன கண்டத் தானத்தில் நிற்கும். வியானவாயு போககு வரவு செய்து இயங்கப் பண்ணும். சமான வாயு அறுவகைச் சுவையையும் அன்னத்தையும் பிரித்து எழுவகைத் தாதுவின் கண்ணும் கலப்பிக்கும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும். நாகன் விக்கல் இடுவிககும. கிருகரன கோபததைப் பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப் பண்ணுவிககும். தனஞ்சயன் பிராணன் போன பின்னும உடம்பை விடாதே நின்று மூனறாம் நாள் உதிப்பித்து உச்சந்தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெறகிடை வெடித்துப் போமென்றறிக' (3. 26 உரை). 'இருதய மணடலத்து இயஙகும் பிராணன்' (33) எனப் பிங்கலம் பிராணனை விளககுகின்றது.

தசநாடிகள் பறறிய பாடலொன்றை சிலப்பதிகார உரையில் அடியார்கு நல்லார் எடுத்துக் காட்டுகின்றார்.

இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி-பூடாவே
டங்குகு கன்னி யலம்புடை யெனறுரைத்தார்
தங்குதச நாடிக டாம்

நாடிசள் எழுபத்திராயிரம் எனவும் அவற்றில் தசநாடிகள் பிரதானம் எனவும் நல்லார் கூறுகின்றார் (3. 26 உரை). சதுரகராதி, இநநாடிகளை, 'அவையாவன:சுழிமுனை யாதாரமாறினு மூடுருவி நிற்பது; இடை பிங்கலை இரண்டுங் கத்திரிகைக் கால் போற பினனி நிறபன; காந்தாரி நாபியிற் றோனறிச சதத மேழுககு மேழு நாடியாய்க கண்டததுறுவது; அத்தி சிகுவை யிரணடும் பத்து நாடியுறறுக் கழுத்தி னிறபன, அலம்புடை புருடனிரணடுஞ் செவியி னூறறிருபது நாடிபுறறிருப்பன; குகு நாபியுறைந்து குய்யம பறறி நிறபது; சஙகினி உபததததைப் பற்றியிருப்பது, (பக். 279) என விளககுகின்றது.

ஐம்பூதங்களையும் உடலோடு பொருத்திக்காணும் எண்ணமும் அடியார்க்கு நல்லாரிடம் அமைகின்றது. மணணின் பகுதி,

நரம்பு, இறைச்சி, என்பு, மயிர், தோல் என ஐந்து எனக் கூறி யமைகின்றார் (3. 26 உரை). (61)

380 தண்ணீரின் கூறோடு நீர்சோரி
சுக்கில மூளை மச்சை
தழலின்கூறு துயில்சோம்பு பயமைதுன
மாகாம மைந்தே
விண்ணார்காற் கூறோட னடைகிடத்த
றத்தல் வாங்குதலாம்
விண்கூறே காமக் குரோத
லோப மோக மதமைந்தே
நண்ணுங் கன்ம விந்திரியப்
புலனே வசனங் கேமன
நதானம் விசற்க மானந்த
மாகும் வாக்கு நாலாவ
தெண்ணுங் சூக்குமை பைசந்தி
மதிமை வைகரி யென்ப
வியல்ராசத தாமத சாததுவித
மேமூன்று குணமென்பார்

வேறு

381 ஆணவ மாயை கர்மம்
பேணிய மலமே மூன்றாம்
பூணுறு மிருமுப் பானு
மேணுறு புறத்தீ தென்பார்

நீர் முதலிய பூதக் கூறுகளும், கன்மேந்திரியம், வாக்கு, குணம் என்பனவும், மலமும், இவை புறக்கருவி என்பதும் கூறப்படு கின்றன.

தண்ணீரின் கூறு, ஓடுகின்ற நீர், இரத்தம், சுக்கிலம், மூளை, நிணம். தழலின் கூறு, துயில், சோம்பு, பயம், மைதுனம், காமம் எனும் ஐந்து. விண் நிறைந்த காற்றின் கூறு, ஓடல், நடை, கிடத்தல், நத்தல், வளைதல் என்பனவாம். வானின் கூறு, காமம், குரோதம், லோபம், மோகம், மதம் எனும் ஐந்து. பொருந்தும் கன்மேந்திரியப் புலன் வசனம், கேமனம், நதானம், விசர்க்கம், ஆனந்தம் என்பனவாம். வாக்கு நான்கு ஆவன, சூக்குனம், பைசந்தி, மத்திமை, வைகரி எனபர். இயலுகின்ற இராசதம், தாமதம், சாத்துவிகம் எனும் மூன்றும் குணம்.

ஆணவம், மாயை, சன்மம் எனப் பேணிய மலம் மூன்றாகும். இவை இணைந்த அறுபதும் நிலைபேறுடைய புறத் தீதாம்

'பூதங்கள் ஐந்தும் தத்தம் தன்மை நீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீக கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம' 'என்றும், மண்ணால் உடம்பு ஊறாயும், நீரால் வாய் சுவையாயும, தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம்' எனவும் அடியார்க்கு நல்லார் உடலையும் ஐம்பூதங்களையும் இணைத்துக் காண்பார். ஒவ்வொரு பூதக் கூறும் உடலில் அமைவதைப் பிரபந்தத் திரட்டுக் கூறுவது போன்று இவரும் கூறி மேற்கோள் செய்யுட்களும் எடுத்துக் காட்டுகின்றார். கருததின் பழமை இதனால் புலப்படுகின்றது. 'நீரின் பகுதி, நீர் மூளை சுகசிலம் நிணம் உதிரம் என ஐந்து' எனத் தருவது பிரபந்தத் திரட்டிலும் பின்பற்றப்படுகின்றது. 'பசி சோம்பு மைதுனம் காட்சி நீர் வேட்கை என இவைகாற்றின் குணம்',

பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீகுணமோ ரைந்து-மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை

என அங்கனமதல் பிரபந்தத் திரட்டில் சிறிது மாறுபடுவதாசத் தெரிகின்றது ஆகாயத்தின் குணத்தை நல்லார், 'வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோபமென விவை' எனக்கூறி,

ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும-பாங்காய
வண்ண முலைமடவாய வானகத்தின் கூறென்றார்
எண்ணரிமிக நூலுணர்ந்தோ ரெண்

என மேற்கோளுங் காட்டலும் ஓரளவே பிரபந்தத் திரட்டில் பின்பற்றப்படுகின்றது.

கருமேந்திரிய காரியங்களை, உரை, ஏறறல், நடத்தல், இரதி போகம், மலநீககம் எனத் தொகையகராதி (பக். 71) விளக்குகின்றது.

குணம் மூன்றாம் சதுரகராதியில் விளக்கம் பெறுகின்றன. 'ஞானம் அருள், தவம், பொறை. வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கலென எட்டும் சாத்துவிகம்; மனவூக்கம், ஞானம்,வீரம்,தவம்,தருவம்,தானம், கல்வி, கேள்வி என எட்டும் இராசதம்; பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்க வழு, வஞ்சகம், மறதி, பொய், கோபம், காமம், கொலை இவை தாமதம்' (பக். 270).

சூக்குமம் முதலிய வாக்கு நான்கின் விளக்கத்தை அபிதான சிந்தாமணி தருகின்றது (பக். 1401). 'சூக்குமை என்னும் வாக்கு நாபியை இடமாகக் கொண்டு நாதமாகிய அறிவு தானே வடிவாக வரும். பைசந்திக்குத் தானம் உந்தியும் வடிவு பிராணவாயுவுமாம். இது அக்கர சுவரூபம் தோன்றாதபடி நினைவு மாத்திரமாய் நிற்கும். மத்திமை, இது நெஞ்சத்தையும் கண்டத்தையும் இடமாகக் கொண்டு அக்ஷரசுவரூபத்தை ஒழுங்குபட நிறுத்திச் செவிக்குக் கேளாமல் உள்ளறிவு மயமாய் நிற்கும். வைகரிக்கிடம் நாக்கினடியாம். இது செவிப்புலனாம்படி வசனிக்கும்? (66-67)

வேறு

382 கால்கோசங் கைவாலேழ் நிலந்தோய்ந்து பலரைக்
கால்முதல வாற்கொன்று கால்நகங்கள் கொம்பு
பால்சங்குப் போல்வெளுத்துப் பத்துமுழச் சுற்றாய்ப்
பகர்நீளம் ஒன்பதா யேழுமுழ முயர்ந்து
கோலியமுன் புயர்ந்துபின் பணிந்துசிறு கண்ணாய்க்
கொம்பிறுகிம் புரிதாங்கிச சூழிமத்தகஞ் சேர்ந்த
தால்காது முறத்தொடுமும் மதங்கொண்டு பாகல
மின்றாய்க் கரியகுனறம் போன்றிடிபோற் கூப்பிட்டு

383 எதிரினா மாமலைகள் பஞ்சாக்கி வேகத்
தெழுந்தபிற சண்டமா ருதமாகித் தறியின்
பற்றி முறித் துப்புரசை தண்டேந்தி இரண்டு
பக்கமணி யிட்டவுதரச் சகடோவம் பாரி
தைத்த விலகமிட்டுச் சங்கிலியை யறுத்துச்
சகவாத்துச் சிந்துரமிட்டே சாந்து பூசி
துத்தமணி கழுத்தணிந்தே அங்குச தண்டைத்
தார்வரை இருபுறந்தாங்கிச் சாமரைகள் கட்டி

384 மருப்பசைத்துக் கச்சிறுக வுரலடியை யதிர
வைத்துமழைத் தாரைக்கை வாஙீட்டி யாட்டி
இருப்புத்தூண் கால்தேய்த்துப் பிறைக்கொம்பால் நிழலை
எரிவிழித்துப் பாய்ந்தூதை நாதன்தோற்
கடம்போன்
றுருத்துவேசக தாலவட் டத்தை வீசி
யரூமுதுகு நெளியாம லக்காடபுட் கரஞ்சேர்ந
திருத்துநிரி யாணம்பார்த்துக் கதுப்பை யதுக்கி
யெழுநீர் விலாழிக ரீரந்தோன்ற நினறே

வேறு

385 காத்திர முன்கால் பரப்பின் காலோர் நெறியி லின்றிக்
காட்டி மேனி
சூததிரம் போலசை வுற்று சேவகத் தைச்சேரா
மலப்பயம்பு தூர்த்து
சார்த்த பிடியொடு கூடிக் காட்சி யுள்ளாய்க்
களபங்க டன்னோ டேகும்
ஏர்த்த விறைவர்கள் மாமத யானை யென்றிடுவர்
யிசைபெற் றோரே

அரச யானைக்குரிய விளக்கம் இங்கமைநின்றது.

நான்கு காலும், கோசமும், கையும் வாலும் எனும் ஏழும் நிலத்தில் தோய்ந்து, பலகைரக் கால் முதலிய உறுப்புகளால கொன்று, கால்நகங்களும் தந்தமும் பால்போன்றும் சங்கு போன்றும் வெளுத்துப் பத்துமுழச் சுற்றளவும், ஒன்பது முழ நீளமும், ஏழு முழ உயரமும் உடையதாய், முன்புறம உயர்ந்து, பின் புறம் தாழ்நது, சிறுகண்ணுடன், தந்தத்தில் கிமபுரி எனும் பூண் தாங்கி முகபடாம நெற்றியில அணிநது, சாது முறம போன்று தோன்ற, முடமதம சொரிநது, பாகலம எனும நோயின்றி, கருங் குன்று, போல தோற்றம் பெற்று, இடி போல முழஙகி,

எற்றலால் பெரிய மலைகளைப் பஞ்சுபோல சிதறி, வேக முடன் எழுந்த வலிமையுடைய காற்றுப் போல் ஆகி, அதனைப் பிணிக்கும் தறியின் பத்திலை முறிநது; சமூத்தணி கயிறும், தண்டும் தாங்கி, இருபக்கம் மணி பொருநதிய வயிற்றுச் சகடம், அம்பாரி, தைத்த இலசம் இட்டு, சங்கிலியை அறுநது உயர்ச்சி யுடன் வரும இயல்புடையது, குங்குமம் இட்டு, சாந்து பூசி,

துத்தமணி கழுத்தில் அணிந்து, அங்குசத் தண்டினை மாலை பொருந்திய குன்று போன்று இருபுறமும் கொண்டு, சாமரைகள் கட்டி;

கொம்பினை அசைத்து, இடைக் கச்சு இறுக, உரல் போன்ற கால்களை நிலம் அதிரும்படி வைத்து, மழைத்தாரை போன்று மதம் ஒழுகும் துதிக்கையை வானுக்கு நேராக நீட்டி, ஆட்டி, இரும்புத்தூண் போன்ற கால்களைத் தேய்த்து, பிறை போன்ற கொம்புகளால், நிழலைக் கோபமுடன் விழித்துப் பார்த்து, பாய்ந்து, காற்றுக் கடவுளின் தோற்றம் போன்று, கோபித்து, பகைத்து, விசிறியை வீசியெறிந்து, முதுகு நெளியாமல், முதுகு ஆட, கைந்நுனி சேர்ந்திருந்து, கடைக்கண் பார்த்து, கதுப்பை அதுக்கியதால் வழியும் நீரும், துதிக்கை யுமிழ்நீரும், கொம்பின் அடியும் தோன்ற நின்று;

காத்திரமாகிய முன்காலைப் பரப்பி வைக்கும்போது ஒரு கால் நெறியிலில்லாது காட்டி, உடல இயந்திரம் போல அசைவுற்று, சேவகம் சேராது, மலையில் பள்ளம் நிரப்பி, சார்த்திய பிடியொடு சேர்ந்து, காட்டில் உள்ளதாகி, பல யானைகளுடன் செல்லும்; எழுச்சியுடைய அரசர்களின மாமதம் பொருந்திய யானை இத்தகையது எனப் புகழ் பெற்றோர் கூறுவர்.

அரசுவா பற்றிய எண்ணத்தை நிகண்டுகளும் சுருக்கமாகத் தருகின்றன (பிங்கலம் 1492). நிலை தோயும் ஏழுறுப்பு, கால் நக வெண்மை, கொல்லும் இயல்பு, நீளம் முதலிய அளவு, கண் முதலியனவே அங்குக் கூறப்படுகின்றன. பிரபந்தத்திரட்டு பெருக்கம் காட்டுகின்றது. (68-71)

வேறு

386 மல்லகதி மயூரகதி வானரததின் கதியே
வந்தச்சகதி சரததினகதி மாதர்மணம் போலச்
சொல்லுமணம் வாலழமடற் செவிமுன்கால் பின்கால்
சிறந்தமுகம்வால்வெள்ளைஎண் பதுடனிரண்டாய்ச
சொல்லுமங் குலியுயர்ச்சி சீனிமெததை கலணை
முததுக்குச்சி யங்கவடி கடிவாளம் கச்சு
நல்லதாழ்ப பிணி கொய்யுளை முகமெட்டு லாடம்
நடைசிலம்பு முதுகுகுஞசம் வீரசடை குமிழே

387 வாகு மாலைகள் புனைந்து மத்திகை கொள்ளாது
வாயமுரைத்து வேர்வையிற் கவனமூண்டு செருமிப்
போகையிலுங் கனைத்துவல சாரியிட சாரி
போய்ப்பினந்த முன்னந்தம் பாய்ந்திருகா றூக்கி
ஆகமாடிக் கணிமையாது சிலம்பொலிகா லதிரொலி
மேல்தட்டொலி கொண்டது மன்னா பரியாம்
ஓகமுகங் கழுத்தி லொவ்வொன் றிடையுரமீரி ரண்டே
யுறுமட்டி சரியிரண்டே யுறுசுழிக ணன்றே

388 பட்டைச் சுழிமன்னை பிடிலிங்கா விறதம்
படிகடநத மட்டிபாடை சுழிபூரச் சுழி
முட்டி யறுபுலனு விலங்குச்சுழி குததுச்சுழி
முனையம்புச் சுழிசோகா விர்தமே வாங்கு
மட்டி தடாவிற்தங் கொள்ளிக்கால் கந்தப் பாம்பு
வற்ற கண்டமாலை சுடுகாடு நக்கி துண்டு
பட்ட வெள்ளையுச் சமட்டி இருபதுமே குதிரைப்
பகர்சுழியாகாதன வெனறியம்பினர்பற்றறிநதோர்

அரசர்க்குரிய குதிரையின் இயல்பு உரைககின்றன.

மல்லகதி, மயூரசதி, வானரகதி, சசகதி, சரத்தின்கதி; பெண்களின் மணம் போலச் சொல்லத்தக்க மணமுடையது; வாழைமடல் போன்ற செவி; நாள்கு காலும், முகமும், வாலும வெண்மை; எண்பத்திரண்டு விரல் உயரம்; சேணம், மெத்தை, கலணை, முத்துக்குச்சி, அங்கவடி, கடிவாளம், கச்சு, தாழ்ப்பிணி, பிடரிமயிர், முகமெட்டு, லாடம், சிலம்பு, முதுகுக் குஞ்சம, சடை, குமிழ் எனபனவும்;

அழகிய மாலைகள புனைந்து, குதிரைச் சம்மட்டிக்கு அடங்காது நீரர்தய்த்து, வேர்வையில் கவனம பொருந்தி, செருமி, போகையில் கனைத்து, வலசாரி இடசாரி போய, பின்அந்தம், முன்அந்தம் பாய்ந்து, இருகால் தூககி உடல் ஆடி, கண் இமையாது, காலின் சிலமபொலி, காலோசை அதிரும் ஒலி, மேல் தட்டின் ஒலி என்பனவற்றை உடையது அரசக்குதிரை. உ.வம.க தருகின்ற முகத்திலும் கழுத்திலும் ஒவ்வொன்றும், இடையிலும் மார்பிலும் இரண்டிரண்டும உறும். மட்டி, சரி எனும் இரண்டு சுழிகளும பொருந்துதற்கு நன்றாம்.

பட்டடைச் சுழி, மன்னை, பிடி, லிங்காவிறதம், படிகடந்த மட்டி, பாடைச்சுழி, பூரச்சுழி, முட்டியறுபுல்லு, விலங்குச்சுழி, குத்துச்சுழி, முனையம்புச்சுழி, சோகாவிர்தம், வாங்குமட்டி, தடாவிற்தம், கொள்ளிக்கால், கந்தப்பாமபு, கண்டமாலை, சுடுகாடு நக்கி, துண்டுபட்ட வெள்ளை, உச்சமட்டி ஆகிய இருபதும் குதிரைக்கு ஆகாத சுழி என அறிந்தவர் கூறினர்.

பிங்கலம், மிகச் சுருக்கமாக அரசப் பரியின் இயல்பைப் புனைகின்றது.

மாதர்தம் மணமென மிகக மணத்தது
வாழை மடலென வளர்நத செவியது
நாலு தாளு மெருத்து முகனும்
வெந்நு முன்னும் வெண்மை யுடையதாய்
எண்பத் திருவிர லுயர முயர்ந்தது
பண்புடை யரசர்க் காவது பரியே (1493)

பரியின் கதிவகையாக, மல்லகதி, வாநர கதி, மயூரகதி, வல்லிய கதி, விடைக்கதி என்பனவும் பிங்கலத்தில அமைகின்றன (1494). இவை முறையே விரைந்தசெலவையும், குரங்கு மயில் புலி காளை இவற்றை ஒத்த செல்கையையும் குறித்ததாகக் கொள்ளலாம். பிரபந்தத் திரட்டு சசகதி என முயலின் ஒத்த பாய்ச்சலையும், சரத்தின் கதி என்பதால் அம்பின் போக்கையும் குறித்திருக்கலாம். தொகையகராதி, குதிரை நடையை சுவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம, இரேசிதம், புலிகம் எனக் கூறி, அதனை முறையே மெல்லியநடை, விரைவு நடை, இருகால் தூக்கி ஆடிவரு நடை, சுற்றியோடல், முழுவோட்டம் என விரிக்கின்றது.

குதிரைச்சுழியளவு பத்தும் தொகையகராதி கூறுகின்றது. சிரத்தில் இரண்டு, காதில், நான்கு, மார்பில் இரண்டு, நெற்றியினிடத்து ஒன்று, குளம்பிலொன்றுமாகப் பத்துச் சுழிகள் குறையாதிருக்க வேண்டும் என்கினறது. ஏழு குதிரைச் சுழிகளும் இந்நூல் சுட்டுகினறது. சநதிரசுழி, அண்டாவர்தம், சௌவகம், சாகாவர்த்தம், சேதாரி, தேசாவர்த்தம், பட்டடை என்பன அவை.
(72-74)

389 வரிச்சச்சச் சுருவாணி யுருளைவிட் டந்தட்டு
வளையந்தேர்க் கால்கயறு சங்கிலிபொற் பூட்டுப்
பொருத்தால வட்டஞசில் லாணிகொடி கொடிஞ்சி
பொற்குடம்பூ மாலைதேர்ச் சீலைபொற் றட்டி

தரித்தமரப் படிசிங்கா சனக்குறடு பதுமை
சன்னமணி வீரமணி குடமணியே கண்டை
இருத்துகிடு கேயடுக்குப் பலகணிபூட் டுச்சுற
றேவடிம்பு பலகைபா கரைத்தாங்கி நின்றே

வேறு

390 பரியோசை பாகோசை மணியோசை யுருளோசை
பலவுந் தாங்கிக
கிரியோடி வரலபோல வண்டகடா கத்துமுடி
கிண்டி யேற
எரியேறப் புனறதும்பப் புவிபிளக்க மலைபொடிய
வேறி யெட்டுக்
கரியோட வடமுகாக் கினிபோல வருவதிறை
காகருந் தேரே

அரசனின் தேரின் இயல்பு கூறப்படுகின்றது.

அழகிய பறவை மூக்குப்போன்ற அச்சு ஆணி, உருளை, விட்டம், தட்டு, வளையம், தேர்க்கால, கயிறு, சங்கிலி, பொன் பூட்டு, பொருந்துகின்ற ஆலவட்டம், சில்லாணி, கொடி, கொடிஞ்சி, பொற்குடம், பூமாலை, தேர்சசீலை, பொன்கட்டி தரித்த மரப்படி, சிங்காசனக் குறடு, பதுமை, சன்னமணி, வீர மணி, குடமணி, கண்டைமணி, கிடுகு, அடுக்கு, பலகணி, பூட்டு, சுற்று, வடிம்புப பலகை என்பனவற்றை உடையதாய், பாகரைத் தாங்கி நின்று;

குதிரையின் ஒலி, பாகனின் ஒலி, மணியின் ஒலி, உருளுகின்ற ஓசை பலவும தாங்கி, மலை ஓடிவரல் போல, அண்டகோள ஓட்டின் முடி துளைபடும்படி, தீபரவ, கடல்நீர ததும்ப, நிலம் பிளக்க, மலை பொடிய ஏறி, எட்டுத்திசை யானைகளும் ஓடும் படி, வடவைக்கனல் போல வருவது அரசனின் காவலமிக்க தேர்.

பிரபந்தத்திரட்டின் இச்செய்திகள் புதுமைநயம் கொள்ளு கின்றன. பிங்கல நிகண்டு, அநுபோக வகையில், படைவகைப் பகுப்பில தேர் தொடர்பான சில சொல்நிலைகளை மட்டுமே தருகின்றது (1477-1489). (75-76)

## ஒன்பதாவது

# ஒழிபியல்

ஒழிபுச் செய்திகள் அமையும் இயல் என இது பொருள்படுகின்றது. ஏட்டில், 'ஒன்பதாவது தொழிபியல்' என இயலின் தொடக்கத்திலும், கையெழுத்துப் பிரதியில், இயலின் ஈற்றில் 'தொழிபியன் முடிந்தது' எனவும் காணப்பட்டதால், 'தொழிலியல' என்பதே அவ்வாறு எழுதப்பட்டதோ எனும் ஐயமும் ஏற்பட்டது.

பெரும்பாலும் பாட்டியல் நூல்களின் ஒழிபுப் பகுதிகள் சுட்டும் கவிஞர்பற்றிய எண்ணங்களும், முன் இயல்களின் ஒழிபுச் செய்திகளும் இங்கமைவதால், ஒழிபியல் எனும் பெயரே பொருத்தமுடையதாக அமையலாம்.

பெரும்பாலும், இலக்கண நூல்கள் ஒழிபியலை நூலின் ஈற்றில் அமைக்குமே யொழிய இடையில் தருவதில்லை. ஆயின், பிரபந்தத் திரட்டு, பத்தாம் இயலான கொடையியல் ஈற்றில் அமையும வண்ணம் ஒழிபியலை ஈற்றயலில் அமைத்தமை எண்ணத்தக்கது. பத்தாம் இயலுக்கு அன்றி, முதல் ஒன்பது இயலுக்கும் மட்டுமே ஒழிபு கூறுவதால் இவ்விடத்தில் வைத்தார் எனப் பொருத்திக்கொள்ளலாம். சிதமபரப்பாட்டியல், இவ்வாறு இடையில் ஒழிபியலைக் கொண்டமை இங்கு இணைத்து நோக்கற்பாலது.

முதலியலான திரட்டியலைத் தொடர்ந்து இரண்டாவதாகப் 'புறநடையியல்' என இன்னுமொரு இடத்தில் இந்நூல் ஒழிபு கூறுவதன் பொருத்தம் ஆயத்தக்கதே. முதலியலுக்கு மட்டும

உரிய சில இன்றியமையா ஒழிபுகளை அங்கும், ஏறத்தாழ முழுநூலுக்கும் உரிய சில புத்திணைவுகளை ஒன்பதாமியலாக ஆக்கினார் எனவும் கருதிக் கொள்ளலாம்.

இவ்வியலில் முதல் 56 விருத்தமும் கவிதைத தொழில் தொடர்பான பலசெய்திகளைத் தருவதால், அதனடிப்படையில் இது தொழிலியல் எனப் பட்டிருக்கலாமோ எனவும் எண்ணம் தோன்றாமலில்லை.

இதன்கண் 107 விருததப்பாடல்கள் அமைகின்றன.

391 சாதிபெறு மாலையவ ரெடுத்தவிரு தெல்லாந்
தகுங்கலைசேர் புலவருக்கு வாகனம்பூஞ் சிவிகை
மோதிவரு கேழல்வே ழக்கொடியா மிறைவர்
முற்றுசெய லணிகளெல்லா முற்றியே வாழ்வார்
காதிவரு கவிகமகன் வாதியேவாக் கிகழ
றாசுமது ரஞ்சித்திர வித்தார நான்கு
மோதிய லிசைநாட கம்பயின்று தேசத்
தோங்குமிலக் கியமுமைந் திலக்கணமுந் தெரிவார்

கவிஞர்க்குரிய சிறப்பணிகளும் நால்வகைப் புலவரும் நால்வகைக் கவிகளும் பற்றிய செய்திகளும் தரப்படுகின்றன.

கவிஞர், எச்சாதியினரோ, அச்சாதிக்குரிய மாலை, அவர் எடுத்த விருதெல்லாம் தாங்கல், தகைமையுடைய கலைமகள் சேர்ந்த புலவருக்கு வாகனம் பூஞ்சிவிகையாம். தாக்குகின்ற பன்றி வேழம் என்பன கொடி. அரசன் பெறுகின்ற அணிகள் எல்லாம் பெற்று வாழ்வர். கேள்வி ஞானமுடைய', கவி, கமகன், வாதி, வாககி; கழறுகின்ற ஆசு, மதுரம், சித்திரம, வித்தாரம என்ற நான்கும் ஓதி, இயல், இசை, நாடகம் என்பன பயின்று, நாட்டில ஓங்குகின்ற இலக்கியமும், ஐந்து இலக்கணங்களும் தெரிவர், கவிஞர்.

கடவுளருக்கும், அந்தணர் முதலியவருக்கும் கூறுவது போன்று புலவருக்கும் சிறபபணிகள் கூறுதல் புதுமை. நிகண்டு களும், யாப்பருங்கலமும், பிற்காலப் பாட்டியல்களும் நால்வகைப் புலவர் பற்றியும், நால்வகைக் கவிகள் பற்றியும் கூறுவதுண்டு.

கவியே கமகன் வாதி வாக்கியென்
றிவையொரு நான்கும் புலமைக் கியல்பே (361)

என்பது பிங்கலம். யாப்பருங்கல விருத்தியுரை, 'கமகனாவான் பல நூல்களது வகைமையாலும் மதியது பெருமையாலும் கல்லாத நூல்களையும் கற்றார் வியபப உய்த்துரைக்கும் கருததுடைய புலவன் எனக் கொளக. வாதியாவான் மேற் கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் நாட்டி அளவை செய்து தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்பான் எனக் கொள்க. வாக்கி என்பான் அறம் பொருள் இன்பம் வீடுகண்மேற் கேட்க வேட்கை பிணிககச் சொல்லும் ஆற்றலுடைய ஆசிரியன் எனக் கொள்க' (பக் 552-553) என இவர்களை விளக்குகின்றது. பெரும்பாலும் 'கவி' என்பவனை ஆசு முதலிய பாடுவோனாகக் குறிப்பது மரபு. ஆயின் பிரபந்தத் திரட்டு இதில் மாறுபடு கின்றது. (1)

392 அன்னவையிற் கவிககாசு மதுரங்கம கனுக்கே
யறிவாதி சித்திரம்வாக் கிக்குவித்தா ரப்பாச்
சொன்னமொழிக சவ்வேலை சொற்றவா சோசை
சொல்லெடுத்த பொருளினிதாய்த் தொடை
விளங்கச் செஞுசொன்
மன்னவைது திக்கநிற்றன் மதுரமாந் தொன்னூல
வண்ணம்வழு வாதுசித்திர கவிமுழுதும் புகற
லிநநிலத்திற் சித்திரப்பாத் திரட்டியதும் பிறவு
மெடுத்துரைத்தல் வித்தார கவியாகு மாதோ

நாற்கவி விளககமும், நாற்புலவர் தொடர்பும் கூறப்படுகின்றன.

மேற் கூறிய அவற்றில், கவிக்கு உரியது ஆசு; மதுரம் கமகனுக்கு; அறிவுடைய வாதிக்குச் சித்திரம்; வாக்கிற்கு வித்தாரப்பாவாம். சொன்ன சொல் அல்லது பொருள் முதலியவற்றிற்கு அந்நேரத்தில் செய்யுள் சொல்வது ஆசு; ஓசை, சொல், எடுத்த பொருள் இவை இனிமையுடைய வாய், தொடை விளங்க, செவ்விய சொற்கள் நிலைகக, அவையோர் துதிக்கும் வண்ணம் நிற்பது மதுரமாம. பழைய நூல்கள் கூறிய வண்ணம், வழுவாது, சித்திர கவி முழுவதும் கூறுதல் இந்நிலததில் சித்திரப் பாவாம்; (முதலியலில்) திரட்டிக் கூறியதும பிறவும எடுத்துக் கூறுதல் விததாரகவியாகும்.

கவி எனும் முதல் வகையினனை இலக்கண விளக்கம்
ஆசு மதுரம் சித்திரம் அகலம்
பாவகை பாடுவோன் கவிஎனப் படுமே (இ.வி. 930)

எனக் கூறுகின்றது. நாற்புலவரையும் ஆசு முதலிய நாற்கவிகளை யும் பிரபந்தத் திரட்டினைபபோல இணைத்துக காணுதல் பிற நூல்களில் இல்லை.

ஆசு முதலிய நால்வகைககளையும நிகணடுகள், யாப்பருங்கல விருத்தி, பாட்டியலின் ஒழிபுப் பகுதிகள் போன்ற விளககுகின்றன. இவை தரும் விளக்கங்களால சித்திரகவி பற்றிய பட்டியல்களும், வித்தார கவி வகைபற்றிய எண்ணங்களும் புலப்படுகின்றன. (2)

393 வாக்குறுத வியலிரா கம்புகற லிசையாம்
வருபாத முதலவுற னாட்டியமா நிகண்டு
தேககுபொருள் வள்ளுவர்நா லடிசிந்தா மணிநூற
றிரட்டிவையே முதலவிலககியமெழுத்துச் சொலலே
யாக்கமுறு மிருபொருளே யலங்கார மிவையே
யைந்தான விலக்கணமிவ் விலக்கணங்க ளெவைககு
மோக்குமொரு பொதுச்சிறப்பு வரலாறு பொதுவைந்
திசைச்சிறப்புப் பதினொன்றா வழங்கிடுவா ருலகே

இயல் இசை நாடகம, இலக்கிய இலக்கணம், பொதுச்சிறப்புப் பாயிரங்கள பற்றிய செய்தி கூறப்படுகின்றது.

சொல் பொருந்துவது இயல்; இராகம் கூறுவது இசை; வருகின்ற பாதம் முதலியனவை அமைவது நாட்டியமாம். நிகண்டுகள் நிறைவாகத் தரும் பொருள், வள்ளுவர் நூல், நாலடியார், சிந்தாமணி, நூல்திரட்டு என்பன முதலியவை இலக்கியம; எழுத்து, சொல், ஆககம் உடைய அகம், புறம் எனும் இருபொருள், அலங்காரம் என்பவையே ஐந்தான இலக்கணம; இந்த இலக்கணங்கள் எல்லாவற்றிற்கும் பொது, சிறப்பு எனும் பாயிரம ஏற்புடையதாம். இவற்றின் வரலாறு, பொதுப் பாயிரம் ஐந்து வகை; இசைவுடைய சிறப்புப்பாயிரம் பதினொரு வகை என்று உலகில் வழங்குவர்.

இயல், இசை, நாடகங்கட்குப் பிரபந்தத திரட்டு விளககம் தர முயல்வது புதுமை. இலக்கியப் பட்டியலில இவர் தருவன இவர்கால எண்ண வெளிபபாடாகவோ இவரது தனிப்பட்ட கருத்தாகவோ இருக்கலாம். நிகண்டுச் செய்திகள் பலவற்றைத் தம் நூலில் கூறும் இவர் நிகண்டுக் கல்வியை இலக்கியவாதிக்குரிய தேவைக் கூறாக அமைப்பது நினைக்கத் தக்கது. ஐந்திலக் கணத்தை விளக்கும்போது, இருபொருள் என அகம், புறம்

சுட்டி, யாப்பினை குறிக்காமல் விட்டதன் இயைபு புலப்பட வில்லை. அல்லது 'ஆக்கமுறுதல்' என்பதால வடிவை நினைத்தார் என இணைககலாம்.

நன்னூல் போன்றன கூறும் பாயிரம் தொடர்பான எண்ணங்களைப் பிரபந்தத்திரட்டு இவ்வொழிபுப் பகுதியில் அமைக்கின்றது. நூல், உரைகள் பற்றிய எண்ணம் தொல் காப்பியம் முதலும்' யாப்பருங்கல விருத்தியுரை, சில பாட்டியல் பகுதிகள் போன்றவற்றில் தொடர்ந்தபோதும், பிரபந்தம் கூறும் நூல்களில் பெரும்பாலும் இத்தகு செய்தி முழுமை அமை தலில்லை. (3)

394 நூனுவல்வோ னுவறிறனே பெறுவானப் பெறுவா
னுவல்கூற்ற வைந்துபொது வியையினூ லாவ
தானவிரு வரலாறு மூவாநூ னான்மை
யழகுபய னெழுமதந்த சக்குறையவ் வழகே
யூனமறு மெண்ணான்கா முத்தியோத் துடனே
யுறுபடல மெனுமுறுப்பிற் சூத்திரங்காண டிகையே
வானுலவு விருத்திவிகற் பமும்பரவு நுவல்வோன்
வரலாறு குலமுதல நிலமலைகோன் மலரே

பொதுப்பாயிரமும், நூலும் நுவல்வோனும் பெறும் விளக்க மும் அமைகின்றன.

நூல், நுவல்வோன், நுவல்திறன், பெறுபவன், அப் பெறுபவன் கூறும் கூற்று என ஐந்தும் பொதுவாக இயைக்க. இந்நூலாவது, பொது, சிறப்பு என்னும் இரு வரலாறு பெற்று, மூவகை நூலுள் ஒன்றாய், நான்கு அழகிய பயன் உடையதாய் எழுவகை மதம் தழுவி, பத்துக் குற்றம் நீங்கி, அத்துணை அழகால் ஊனமற்று, முப்பத்தியிரண்டு உத்திகளுடன், ஓத்து, படலம் எனும் உறுப்புகள் பெற்று, சூத்திரம், காண்டிகை, சிறப்புடைய விருத்தி,விகற்ப நடை என்பன பரவும்.நுவல்வோன் வரலாறு, குலம் முதலியன, நிலம், மலை, கோல், மலர்—என்பன வற்றின் தன்மையுடையவன்

பொதுப்பாயிரத்தின் ஐவகைக் கூறுகளை நன்னூல் சுட்டு கின்றது (3). பிரபந்தத் திரட்டு, பாயிரம் என்ற சொல்லை ஆளாது வரலாறு எனவே கூறிச் செல்லுதல் புதுமை.

நூலின் விளக்கம் தொல்காப்பியம் முதலே அமைகின்றது. ஆயின் நன்னூற் கருத்தையே பிரபந்தத் திரட்டு பின்பற்றிய தாகத் தெரிகின்றது (நன். 4). 'மூவகை நூலுள் ஒன்றாய்' என முதலும், வழியும், சார்பும் குறிசகும் பிற்காலக் கருத்துத் தொல் காப்பியத்தில் காணப்படாது, முதல், வழி எனும் இருவகை நிலையே அமைகின்றது (1593-97). நாற்பயனை, 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்' (10) என நன்னூல் விளக்கு கின்றது. ஏழுமதம் எவை என்பதை நன்னூல்,

எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே (11)

என விளக்குகின்றது. பத்துக்குறையும் பத்து அழகும் பற்றிய எண்ணங்கள் நன்னூலுக்கு முன் யாப்பருங்கல விருத்தியுரையி லும் அமைகின்றன.

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச் சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபயன் இன்மை

என வழுவையும், மாண்புகளை,

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத் தாதல்
உலகம் மலையாமை முறையின் வைத்தல
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல்...

எனவும (பக். 13) விரிக்கின்றது. உத்திகள் பற்றிய எண்ணம் தொல்காப்பிய மரபியல்முதல் அமைகின்றது (1610). நன்னூல் (14) இதினின்று சிறிது வேறுபடுகின்றது. பிற்கால இலக்கணங் களில் உத்தி முப்பத்திரண்டு எனும் எண்ணம் தொடர்கின்றது.

ஒத்து, படலம், சூததிரம் எனும் நூலின் பகுதிகள் பற்றிய எண்ணம் தொல்காப்பியச செய்யுளியலில் அமைகின்றது.

ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஒத்தி னானும
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும் என்று
ஆங்குஅனை மரபின் இயலும் என்ப (1424)

இவற்றின் விளக்கம் ஓரளவு தொல்காப்பியத்தைப் பின்பற்றி நன்னூல் முதலியவற்றிலும் அமைகின்றது.

உரையின் வகையாகக காண்டிகையைத் தொல்காப்பியம் (1601) கூறுகின்றது காண்டிகையுடன் விருத்தி எனும் பெயர் நிலையையும நன்னூல் கொண்டு விளக்குகின்றது (21-23).

ஆசிரியன் வரலாற்றை நன்னூல் சிறப்பாக உரைக்கின்றது.

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலைமலை நிறைகோல் மலாநிகர் மாட்சியும்
உலகியல் அறிவோ டுயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே (26)

பிரபந்தத் திரட்டு, 'நில மலை கோல் மலரே' எனத் தரும் இச் செய்தியைத் தக்க விளக்கம் அமைக்கும் நன்னூற் பகுதியால் தெளியலாம். இந்நாற்பொருளின் மாட்சியுரைப்பதன் முகமாக ஆசிரியரின் மாட்சி விளக்கம் பெறுகின்றது. நிலத்தின் மாட்சி,

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே (27)

எனவும், மலையின் மாட்சி,

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே (28)

எனவும், நிறைகோல் மாட்சி,

ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும
மெய்நடு நிலையும் மிகுநிறை கோற்கே (29)

எனவும், மலரின் மாட்சி,

மங்கல மாகி இன்றியமை யாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெலகிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே (30)

எனவும் விரிக்கப்படுகின்றன. இவ்வனைத்து எண்ணங்களையும் பிரபந்தத் திரட்டுச் சுட்டியதுடன் அமைந்துவிடுகின்றது. (4)

395 ஒவ்வாதான் குணமின்மை முதலகழற் குடமே
யோங்குமடற் பனைபருத்திக் கும்பமுடைத் தாழை
கவ்வுவமை நுவறிறனே காலமிட முதல
கண்டுவிரை யாதுவெகு ளாதுரைத்தல் பிறவே
செவ்வையுறு கொள்வோரே தன்மகனா சான்சேய்
செம்பொனருள் வோனிறைவன்மகனுரைகோளாள
னௌவியமின் றிதொழுவோ ரிவரேமா ணாக்க
ராமாகார் துற்குறிகள் வையுறுவோர் தாமே

ஆசிரியர் ஆகத் தகாதார், நுவலும் திறன், கொள்வோர், மாணாக்க ராகத் தகாதார் பற்றிய செய்திகள் அமைகின்றன.

ஆசிரியன் ஆகத் தகாதவன், குணமின்மை முதலிய இயல்பினனாய், கழற்குடம், மடறபனை, பருத்திக்கும்பம், முடத்தாழை எனும் உவமைகள் பெறுவான். நுவலும் திறன், காலம், இடம் முதலியன ஏற்புடையதாக நோக்கி, விரையாது, வெகுளாது உரைத்தலும் பிறவுமாம். செவவியுடைய, பாடம் கொள்ளும் மாணாக்கர், ஆசிரியனின் மகன், தனது ஆசான் மகன், செம்பொன கொடுப்பவன், அரசன் மகன், உரைகோளாளன், ஔவியம் இன்றித் தொழுவோர் ஆகியவராம். மாணாக்கர் ஆகத் தகாதோா, துற்குறிகளும் வையுறுவோருமாம்.

ஆசிரியன் ஆகத் தகாதவனின் இயல்பினை நன்னூல்,

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்கா றவாவஞ்சய் அச்ச மாட லும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே (31)

கழற்குடம் முதலிய ஒப்புப் பொருட்களை நன்னூல் விளக்கு கின்றது.

பெய்தமுறை யன்றிப் பிறழ உடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே (32)

எனக் கழற்குட இயல்பும்,

தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை (33)

என மடற்பனையின் தன்மையும்,

அரிதிற் பெயக்கொண் டப்பொருள் தான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை (33)

எனப் பருத்திக் கும்பப் பாங்கும்,

பல்வகை உதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே (35)

என முடத்தாழையின் பண்பும் விளக்கம் பெறுகின்றன.

நூல்கற்பித்தலின வரலாறு கோடிகாட்டப்படுவது நன்னூ லில் விரிவாக அமைகின்றது.

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்தல் என்ப (36)

நன்னூல் தன்மகன், ஆசான் மகன், அரசன் மகன், மிக்க பொருள் கொடுப்பவன், வழிபடுவோன், உரைகோளாளன் (37) என மாணவராகத் தகாதவரைக் கூறுவதனைப் பிரபந்தத் திரட்டும் பின்பற்றி மொழிகின்றது.

துற்குறிகளையும், வையுறுவோரையும் மாணாக்கராகத் தகாதவர் எனப் பிரபந்தத் திரட்டுக் கூறுவதற்கு வாய்ப்பாக நன்னூலின்,

களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே (39)

எனும் பகுதி அமைகின்றது. (5)

396 இன்னவரிற் றலையிடையே கடைபெறுமா ணாக்க
ரில்லிபெறு குடமசமே யெருமையன்னா ரப்பான்
மன்னுமண்ணும் பூங்கிளியு மாவரன்றி யனமும்
வளர்பசுவு மாவாரா லினிக்கோடன் மரபு
துன்னுபொழு தோடுவழி படன்முனியான் குணத்திற்
றொடப்பழகல் குறிப்பினுறல் சித்திரம்போ லடங்கல்
பொன்னுலவு மிவைமுதல வாங்கோடற் கூற்றைப்
பூவுலகில் வகையாகப் புகல்வோங் காணே

மாணாக்கர் வகை, கோடல் மரபு என்பனவும், கொள்வோன் முறையைக் கூறுவேன் எனலும் அமைகின்றன.

இம் மாணாக்கரில், தலை, இடை, கடை எனக் கூறத் தகும் மாணவர்கள்; கடைமாணவர் இல்லிக்குடம், ஆடு, எருமை போன்றவர்; அப்பால் நிலைபெறும் மண்ணும், பூங்கிளியும் போன்றவா ஏற்புடையவர்; அன்றி, அன்னமும், பசுவும் போன்றவரும் ஆவார். இனி, கொள்ளும் மரபு, காலைப் பொழுதோடு சென்று வழிபடுதல், முனியாதிருத்தல், குணத் தொடு பழகல், குறிப்பில் சார்ந்து அமைதல், சித்திரம் போன்று அடங்குதல், போன்ற இவை முதலியவாம். கொள்ளும் முறை யை இந்த உலகில் வகைவகையாகக் கூறுவேன், காண்க.

மாணாக்கர் வகையை நன்னூலும் இவ்வாறே விளக்கு கின்றது. அன்னம் ஆ என்பன போன்றவர் தலைமாணாக்கர் எனவும், மண்ணும கிளியும் போல்பவர் இடைமாணாககர் என வும் இல்லிகுடம் ஆடு எருமை நெய்யரி எனபனவற்றை ஒததவர் கடைமாணாக்கர் எனபதும் அங்கும் அமையும கருததாம் (38).

நூல் கற்றலின் வரலாறு,

கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போஎனப் போதல் என்மனார் புலவர் (40)

என நன்னூலில் தரப்படுகிறது. (6)

397 பாடமது போற்றல்கேட் டவைநினைத்தன் முதலாம்
பாடமது திறப்படுதற் கொருகுறிகேட் போனே
கூடிரண்டிற் பிழையறான் மூன்றின்முறை யறியுங்
குருவுரைநெஞ் சுறினுங்காற் கூறாமவ் வினையா
ரோடுபயின் றிடிலிருகா லிருகாலுஞ் செவ்வா
யுரைக்கவுறு மாண்புவழி பாடுமூறு நீக்கித்
தேடிறைவன் வழியெல்லை நூற்பெயர்யாப் பகத்திற்
றேறுபொருள் கேட்போர்கள் பயன்காலங் களனே

நூல்பயிலும் முறையும், வழிபாடும், சிறப்புப்பாயிர இலக்கணமும் கூறப்படுகின்றன.

பாடத்தைப் போற்றல், கேட்டவை நினைத்தல் முதலியனவாம். பாடத்தைத் திறப்படுத்துவதற்கு, ஒருகால்கேட்டதுணையானே அமையாது, இருமுறை கேட்பானானால் பிழைபாடு இலன, மூன்றுமுறை கேட்டால் முறையறிவான்; ஆசான் உரைத்தவை நெஞ்சில் பொருந்தினாலும் அதுகால் பகுதியேயாம். தன்போன்றோருடன் பயின்றால் இன்னொரு கால் கூறு புலமை பெறுவான. அதைப் பிறருக்கு உணர உரைத்தால் மீண்டும் அரைச்கூறு புலமை பெறுவான். மாண்புடைய வழிபாடும் குற்றம் நீக்கி அமைதல் வேண்டும். சிறப்புப் பாயிர இலக்கணமாகச் சாரவேண்டியது, ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூலின் பெயர், யாப்பு, உள்ளே கூறிய பொருண்மை, கேட்போர், பயன், காலம், களன்,

நன்னூல், நூல்பயிலும் முறையில் இதனை ஒத்த கருத்துதனை வழங்குகின்றது. அறியாமை மிகுதியும் போகும்படி நூல்

கற்கும் முறையாக வழக்கறிதல், பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல், ஆசாற் சார்ந்தவை, அமைவரக் கேட்டல், அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல், வினாதல், வினாயவை விடுத்தல் (41) எனப் பலவற்றைக் கூறுகின்றது. ஒருமுறையன்றி மும்முறை பயிலும் பாங்கினையும்,

ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின
பெருக நூலிற் பிழைபா டிலனே (42)

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும் (43)

என நன்னூல் சுட்டுகின்றது.

ஆசானிடம் கற்றலால் காற்கூறு மட்டும் புலமைத் திறம் அமைய, அதனை முழுமையாகப் பெறும் சூழலையும் நன்னூல்,

ஆசான் உரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும் (44)

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவவிரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும் (45)

என விளக்குகின்றது. 'வழிபாடு' என மட்டும் பிரபந்தத் திரட்டுச் சுட்டி அமைவதையும் நன்னூல் விளக்கிக் கூறுகின்றது.

அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு
எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே (46)

சிறப்புப் பாயிரக் கூறுகளாக நன்னூல் இருபாடலில் கூறும் பதினொரு வகைகளில பத்தினைப் பிரபந்தத திரட்டு இங்கு சுட்டுகின்றது. அடிப்படையாக அமைவன எட்டு எனவும, பிற மூன்றும் ஏற்றியும் மொழியப்படும் என்பதும் நன்னூலின் கருத்து. இத்தகைய எண்ணம் பிரபந்தத் திரட்டில் சுட்டப்படவில்லை. (7)

வேறு

398 காரண மொருபா னொன்று
மேருறு சிறப்பா மென்றும
பாருறு நூல்கட் கெல்லாஞ்
சீருறு திறன்கூ றாமே

சிறப்புப்பாயிரம் பதினொரு கூறுசுள் உடையது எனல்.

(முன்பாடலில் கூறியவற்றுடன்) காரணம் என்பதும் இணை யப் பதினொன்று கூறுசளுடையது அழகு பொருந்திய சிறப்புப் பாயிரமாம். எல்லாக் காலத்திலும், உலகில் தோன்றும் நூல்கட்கு எல்லாம் இவையே சிறப்புப் பாயிரத்தின் பகுதியாகும்.

சிறப்புப் பாயிரத்தின் பதினொரு கூறுகளை எட்டும மூன்று மாக நன்னூல் பிரித்து மொழிகின்றது.

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே (47)

காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே (48) (8)

வேறு

399 ஆர்முதனூல் கருத்தனள வேமிகுதி கொடுத்தோ
னருந்தன்மை முதனிமித்த மிடுகுறியா னூற்குச்
சேருமே பெயர்திறன்கூற் றுரைத்தலுக்கே யுரியார்
தேசிகன்றன் னொடுகற்றோன் றன்சீட னுரைமான்
பாரிலா மென்றெரித்து மென்கற்றும் பெரியாா
பகர்ந்துதம்மைப்புகழ்ந்திடார்புகழுமிடந்தெரியார்க்
கோர்வெற்றி யவையிலிகழ்ந் தவரிடத்தின் மன்றத்
தோலையெடுத் துரைக்கினுமா மென்பரறிஞோரே

நூலின பெயர், சிறப்புப்பாயிரம் செய்தற்குரியார், சிறப்புப் பாயிரம் பிறர் செய்யக் காரணமும், தற்புகழ்ச்சிக்குரிய இடமும் இயம்பப்படுகின்றன.

நிறைந்த முதல் நூல், கருத்தன், அளவு, மிகுதி, பொருள் கொடுததோன், அரும்தன்மை முதலிய காரணங்களாலும், இடு குறியாலும் நூலுக்குத் திறனுடைய பெயர் சேரும். சிறப்புப் பாயிரம் கூறுதற்கு உரியார், தன் ஆசிரியன், தன்னொடு கற்றோன். தன் மாணவன் உரைகாரன் என்பவராம். எலலாம் தெரிந்தா லும், எல்லாம் கற்றாலும் பெரியவர் தம்மைத் தாமே புகழமாட் டார். அருகிப் புகழும் இடம தன்னைத் தெரியாதவரிடத்திலும்,

அரங்கேற்றும் ஒப்பற்ற வெற்றியுடைய அவையிலும், தன்னை இகழ்ந்தவரிடமும், மன்னனுடைய மன்றத்தில் ஓலை எடுத்துக் கூறும்போதும் என அறிவோர் கூறுவர்.

நன்னூலிலும் இதனுடன் தொடர்புடைய செய்திகள அமை கின்றன. நூற்பெயரமைய எழுவகைக் காரணம் கூறப்படு கின்றது.

முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானும்நூற் கெய்தும் பெயரே (49)

பாட்டியல் நூல்களும் நூலின் பெயர் அமைக்கும் அடிப்படைகள் சிலவற்றைச் சுட்டுகின்றன. தொழில், அளவு, காலம், இடம், பொருள், பா, உறுப்பு, எல்லை, பாடுவான், பாடுவித்தான் இவர்கள் அடிப்படையாகின்றனர் (வெ.பா.செ. 45)

சிறப்புப்பாயிரம் செய்தற்குரியராக, ஆசிரியன், உடன் மாணாக்கன், மாணவன், உரையாசிரியர் என்பவர் அமை கின்றனர். (51)

தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே (52)

எனும் காரணம் பற்றியே சிறப்புப்பாயிரம் பிறரால் செய்யப்படு கின்றது. அருகித் தற்புகழ்ச்சியும் கூறப்படலாம் எனும் எண்ணம் பற்றிய சூழலை, நன்னூலும் (53) உரைக்கின்றது. (9)

400 இவ்விதங்க டெரிவல்லோ னிவ்விதங்கள் சொல்வோ
னிசைந்தநல்ல குலம்வடிவ மிகுதாதைக் கவிஞன்
செவ்விபெறு மொழுக்கமுளளோ னிருபானாண் டுற்றுத்
திகழெழுபா னிங்காதோன் குறைமெய்ந்நோ
யில்லோ
னவ்விவிழி வாணிவளர் நாவலனாம் வழுத்தீர்
நற்கவியை யரங்கேற்று வானாகின் வம்பி
னெளவியமின் றிக்கொடிக டோரணங்கள் கௌர
வருங்கோலந் துகில்விரிதுப் பல்லியத்தோ
டெழுந்தே

401 இலங்குமட்ட மங்கலமேந் தக்கணிய ராட
வேந்திழையார் வாழ்த்தமறை யோராசி கூறத்
துலங்கியயா னைகள்குலவுங் குடந்தீபம் பெருகத்
தொட்டபாலிகை பலுணாப் பந்தர்விதா னக்கீ
ழிலங்குமனை யிற்சான்றோர் சுற்றத்தார் சூழ
வணிவிருது பல்லியங்க வெண்டுகிலே தரித்துக்
கலங்காமல் வெள்ளையா சனத்திருந்து கவிஞன்
கண்கரம்வாய் பார்த்துமுக மாறாமற் சிறந்தே

402 மறையோரோ மங்கள்செயச் சாந்துகொடு மெழுகி
மணித்தரள மாதல்பச் சரியாதல் பரப்பி
நிறைகனகங் கண்ணுற்றுச் சிதறிவெள்ளை மாலை
நேரணிநது வெண்பட்டுங் கொய்துகட்டி வைத்துச்
சிறுருவெண பணிசாத்தி மஞ்சள்வித மணிந்து
சீப்புமுத லணியணிந்து விளக்கிட்டு மலரா
னறையணைமுத் தவைமேலிட் டருச்சனைக ளியற்றி
நாமகளை யேற்றியே டங்குவைத்துத் தொழுதே

403 ஏடெடுத்துக் கிழக்காதல் வடக்காதன் முகமா
யிசைசூலங் கண்டேநன் னாளறிந்தே யிருந்து
தேடிறைவன் மேற்காதற் றெற்காதன் முகமாய்ச்
செப்புமவை யறிந்தேகா சனமாத லன்றிப்
போடும்வே றாசனமே யாதலதி லிருக்கப்
புலவோர்க ளெதிரிருந்து தர்க்கமிட்டுச் செயமாய்
வாடுதலி லாதுதமி ழரங்கேற்று வானேல்
வழங்குநெறி பலநெறியு மாற்றுதுநீ கேளாய்

கவிஞன் இயல்பும், அரங்கேற்றமும் கூறப்படுகின்றன.

இந்த விதங்கள் தெரியவல்லோன், இந்த விதத்தில் உரைப்போன், புகழுடைய நல்ல குலம், உருவ அழகு மிகுந்தவன், கவிஞர் குலததில வந்தவன், செம்மையான ஒழுக்கம் உடையவன், இருபது ஆண்டு நிறைந்து, எழுபது ஆண்டுக்கு மேற்படாதோன, உடற்குறையும நோயும் இலலாதவன், மான்விழியுடைய கலைமகள் வளர்கின்ற நாவன்மையுடையவன், குற்றம் நீங்கிய நல்ல கவிதையை அரங்கேற்றம செய்வானாகில், திமையும் பொறாமையும் இன்றி, கொடிகளும் தோரணமும் ஒளிர

வருகின்ற அழகு, ஆடை விரித்து, பல இசைக்கருவிகளின் ஒலி யெழும்ப;

இலங்குகின்ற அட்டமங்கலம் ஏந்த, கணியர் ஆட, ஏந்திழை யார் வாழ்த்த, அந்தணா ஆசி கூற, யானைகள மீது நீர்க்குடம் பொருந்தவும், தீபம் பெருகவும், முளைப்பாலிகை, பல உணவுப் பொருட்கள், பந்தலிட்ட கூரையின் கீழ இலங்கும் மனையில், சான்றோரும் சுற்றத்தாரும் சூழ, அணிகளும் பெற்ற விருதுகள் பலவும் இலங்க, வெள்ளாடை அணிந்து, கலக்கமின்றி, வெண்நிற இருக்கையில் அமர்ந்து, எல்லோரும் கவிஞனின் கண், கரம், வாய் இவற்றைப் பார்க்க, முகம் மாற்றங்களின்றி சிறக்க;

அநதணர் வேள்விகள் செய்ய, சாந்தால் தரை மெழுகி, மணி, முத்து அல்லது பச்சரிசியைப் பரப்பி, நிறைந்த பொன்னை எங்கும் சிதறி, வெண்ணிற மாலையை நேராக அணிந்து, வெண்பட்டாடையை கொய்சகம் வரக் கட்டி வைத்து அச் சிறு உருவில் வெண்ணிற அணிகள் பூட்டி, மஞ்சள் அணி வித்து, சீப்பு முதலிய அணிகள் அணிவித்து, விளக்கேற்றி, நறை மலர் அணைசெய்து முத்து அதன்மேலே தூவி, அருச்சனை நள் செய்து, நாயகளைப் போற்றி, ஏட்டினை அங்கு வைத்துத் தொழுது;

ஏட்டை எடுத்து, கிழக்கு அல்லது வடக்கினை முகமாக்கி, இசைகின்ற சூலம் கண்டு, நல்ல நாள் அறிந்து இருந்து, தலைவன் மேற்கு அல்லது தெற்கு முகமாக அமைய, கூறும செய் திகளை அறிந்து, ஒரு இருக்கையாதலன்றி, போடுகின்ற வேறு இருக்கை ஏற்புடையதாக, அதில் இருக்க, புலவர்கள் எதிரே அமர்ந்து, தர்க்கம் செய்து, வெற்றியாக, சோர்வு இன்றி தமிழை அரங்கேற்றுவானானால், அதற்கு வழங்குகின்ற பல நெறியும் கூறுவேன், நீ கேள்.

கவிஞனின் இயல்பு பற்றிய எண்ணங்களையும் அரங்கேற்றம் தொடர்பான செய்திகளையும் பெரும்பாலான பாட்டியல் நூல் களும் பகுதிகளும் தம் ஒழிபுப் பகுதியில் அமைக்கின்றன. அந்த மில் கேள்வி ஆசிரியனைப் பற்றி, அறிவு நிலை சுட்டி யாப்பருங் சலம் அமைத்தது, பிற்காலத்தில் குலம், வயது போன்றவையும் சுட்டும் நிலைக்கு அதனை ஆக்குகின்றது.

அறஒழுக்கமுடைமையும், நாற்குலப் பிறப்பும், தெய்வ உணர்வுடைமையும், இருபதுக்கும் எழுபதுக்கும் இடைப்பட்ட வயதும், உறுப்புக் குறையும் நோயும் இன்மையும் வெண்பாப் பாட்டியல் முதலாகப புலவர் இயல்பாகக் கருதப்படுகின்றது. நவநீதப்பாட்டியல் இவ்வாறு கூறுவதுடன் அமையாது நற்கவி ஆகத் தகாதவரையும் சுட்டுவது வேறுபாடாம்.

மூன்று தமிழின முறை உணராதவர் நாற்குலத்தில்
சான்றவர் அல்லவர் தாழ்ந்த உறுப்பினர் தாமபிணியில்
தோன்றும் துயரத்தர் தெய்வம் தொழாதவர் தூய்மை இல்லோர்
ஆன்றவர் பாடிடில ஆனந்தமாம் என்று அறைவார்களே (99)

குலப்பிறப்புசகு இந்நூல் ஓரளவு குன்றிய முதன்மையே அளிக் கின்றது. இதன் காரணமாக, முக்காலம் உணர்ந்தவராகவும் சாவவும் வாழவும் பாடும் இயல்பினராகவும் அறமுடையவராக வும் இருக்கும புலவர், இழிகுலததினராயினும் இழுக்கன்று என் கிறது (100)

பிரபநத மரபியல், செலவம் மேன்மையுளனாய் சமயநூல் பிறநூல் அறிந்து உவக்கும் பிறபாடை நூல் இலக்கண நூல் அறிந்தவனாய் (28) இருக்க வேண்டும் என்கிறது. பின்வந்த சில நூல்கள் இத்தகு எண்ணங்களைக் கூறுகின்றன.

அரங்கேறறம தொடர்பான சில எண்ணங்கள் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல, பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் போன்றவற்றில் அமை கின்றன. அரங்கேற்ற மண்டபத்தின் சிததிரத் துகிலும் விதான மும் தோரணமும் பிற அலங்காரமுமம பிரபந்த மரபியலில் சுட்டப்படுகின்றன (31). நாமகளை வழிபடச் சாந்தால் மெழுகி தரளம் பரப்பலும் பிறவும் வெண்பாப் பாட்டியலில் கூறபபடு கின்றன (பொ-29). தர்க்கமிட்டு வெல்லும பாங்கை நவநீதப் பாட்டியல் உரைக்கின்றது.

கருப்பட்ல் இன்றிக் கருதிய மேற்கோளும் எயதுவிக்கும்
மதம்படக் கூறி எடுத்துக் காட்டு ஏற்றி அளவைநெறி
விதண்டை வாதம் சற்பம் என்னும் இவற்றின் மேலோர் உரைத்த
மதங்க நெறி சொல்ல வல்லவர் வாதினில் வல்லவரே (93)

பிங்கலம் போன்ற நிகண்டுகளும் அநுபோக வகையில் கவியரங் கேற்றல் தொடர்பான செய்திகளைத் தருகின்றன (1370).
(10-13)

404 உள்ளபொரு ளுயராடை வாகனந்தான் றாழ்த
லுவைபலவு மீயந்தவன்பி னேழடிபின் னடந்து
வள்ளனில்லு மெனநிற்ற னன்மையா மிவையின்
மணியெவையுங் குறையினே குறையுண்டா மன்றி
யுள்ளபொரு ளுதவாமன் முகமதுபா ராம
லுதாசனங்க ளுரைத்துபசார ருசெய்யா னேற்கேள்
கள்ளவிழி மின்னகல்வாள் மாமியுநிற் பாளோ
காடுறைவார் நாடுறையுங் கதியகல்வா ரன்றே

405 கொடுக்காமற் சினத்தகவி வேறொருவன் பேரே
கொடுத்தரங்கேற் றிற்பெருமா னிவன்செல்வ
மவற்காந்
தொடுசெம்பூச் செவ்வாடை செவவணிக டரித்துச்
சுநதரியாம் வாணியையோர் கவியிலா கருடித்
திடுமிறைவன் புகழுருவ மிதுவெனவே நினைத்தே
யிடுகாடு புற்றருகு காளிகோட் டத்து
மடுமனையின் புறத்துந்தீக் கொளுத்தின்மூ வாண்டி
னறிமரண மாவானெனன் றறைந்தார்மே லவரே

அரங்கேற்றிய புலவனுக்குத் தலைவன் செய்யவேண்டியனவும், செய்யாதபோது ஏற்படும் தீமைகளும் கூறப்படுகின்றன.

கொடுப்பதற்கு ஏற்புடைய பொருள், ஆடை, வாகனம் என்பனவும் அத்தகைய பலவும் அளித்து, அவன் பின்னாள் ஏழடி நடந்து, 'வள்ளல்! நில்லும்' எனக் கூற நிற்பது நன்மையாம். இவையில், மணி எவையும் குறைந்தால் குறை உண்டாகும். அன்றியும், உரிய பொருள் கொடாது, பாராமுகமாய், உதாசீன மாகப் பேசி, உபசாரம் செய்யாதிருந்தால், கேள்!, கள்நிறைந்த மலர்போன்ற கண்களுடைய கலைமகள் அகல, மூதேவி நிற்பாள்; அத்தகையவர் நாட்டில் வாழும் நிலைமை நீங்கிக் காட்டில் வாழ்வர்;

உரிய பொருள் கொடுக்காமல் கோபித்த கவிதை, வேறொரு தலைவனின் பெயர் கொடுத்து அரங்கேற்றினால் தலைவனான

தொடுத்த செந்நிறப்பூ, செந்நிற ஆடை, செந்நிற அணிகள் இவை பூண்டு, அழகியாகிய கலைமகளை ஒரு கவிதையில் தரு வித்து, 'தலைவனின் புகழ்உருவம் இது' எனவே நினைத்து, சுடு காடு புற்றின் அருகு காளிகோட்டம் மடைப்பள்ளியின் வெளியில் ஆகிய ஏதேனும இடத்தில் தீ கொளுத்தினால், மூன்று வருடத்தில இறப்பான் என மேலோர் கூறினர்.

பிரபநதத் திரட்டு தரும் இசசெய்திகளை ஒப்ப, பாடலைப் பெறும் தலைவன் புலவனுக்குச் செய்யும் சிறப்புகளை நவநீதப் பாட்டியல் (103) முதலியன உரைக்கின்றன. கற்பகம் போல நவ மணி யாடைகளும பொன்னும் அளித்தலும் எனவும், பொன் புவி வத்திரம் பூண்பன பிறவும் அளிததலும (பிர.31) எனவும், 'தண் ணடை மதாணி தமனியம் களிறு பண்ணமை இரதம் பாய்பரி உதவி' (இ.வி. 939) எனவும நூலகள் கூறுகின்றன. புலவனுடன் ஏழடி சென்று மீளல் சிதம்பரப் பாட்டியல் முதலிய நூல்களில் அமைகின்றது.

உளளமகிழ பொன்புவி பூண் ஆடை மற்றும்
முதவிஏழடி புலவனுடன் போய் மீளே (சி. பா. ம. 18)

பாடல் இயற்றிய புலவனுக்கு உரிய சிறப்புகள் செய்யாமை யால் தலைவனுக்கு உறும் தீமை பற்றிய எண்ணம் பிரபந்த மர பியல் முதலிய நூல்களில் அமைகின்றது (34). இவ் வெண்ணம் அகத்தியன மரபில் வந்தமையும் சுட்டப்படுகின்றது.

உடம்படச் செய்யான் செய்யுள் பிறர்பால் கூறில்
உற்றதிரு அவனிடைப்போய் ஒதுங்கும் அன்றித்
திடம்பெறச் செய்யுள் வரைந்து செம்பூச் சூட்டித்
தெருவு மயானம் புற்றுக் காளிகோட்டத்து
இடந்தனில் அங்கு அவன்தன்னை நினைந்து சுட்டால்
ஈராறு திங்கள் தனில் இறுதி ஆவான்
தொடர்ந்து செயாது உளம் நொந்தால சுற்றத்தோடும்
தொலைவன் இஃது உண்மை அகத்தியன் தன்
சொல்லே (சி. பா. ம. 19)

பிங்கலம போன்ற நிகண்டில், பாட்டியல் மரபு தோன்றும் முன்பே இத்தகு செய்தி யமைந்தமை குறிப்பிடத்தக்கது (1371-73).

406 அனறியுமே வசையுரைக்கிற் றிருக்குன்று நஞ்சா
யாரெழுத்தை யிறைவன்பே ரருகின்வைத்துப் பாடி
மன்றமுறுங் கொடுந்தெய்வங் கடனையுடன் வைதும்
வாழ்த்தியுநீர் கெடுங்களென்னு மறம்பாடிற் சாவா
னன்றிமனங் குன்றிலாயுட் போகும் பொய்யோ
நாகம்பேய் நோயொருவன் மந்திரத்தாற் பிறவா
லொன்றுமிறல் போலெண்ணார் மூடரிறுங் கால
முற்றிடிலிச் செயல்வருமன் றித்தினம்வா ராதே

407 பகைத்தவன்மேற் செந்தமிழைப் பாடியே கட்டிற்
பகருமவன் றனக்கிக்கட் டென்றைக்கு முறுமாற்
றகைக்குரிசி றன்னாமத் தயலிருபாற் றொழிற்சொற்
றங்கவைக்கிற் காயத்திற் காயமுறு மெருக்கிற்
றொகைக்கள்ளி யிடமபுகில் வாணியகன் றுறைவாள்
சொல்லிம்மலர் தொடுதேட்டோ டெறியிலறை காவிற்
சிகைக்கடங்கட் டுண்டொழிவ னவர்குவந்த படியே
செப்பினோய்முதலவெலாஞ்சோவார்கண்மன்னோ

பாடலால் விளையும் தீமைகள் சுட்டப்படுகின்றன.

அன்றியும் வசை உரைத்தால் செல்வம் குறையும்; நஞ்சாக நிறைந்த எழுத்தைத் தலைவன் பெயரின் அருகில் வைத்துப் பாடி மன்றத்தில் உள்ள கொடிய தெய்வங்களையும் உடன் வைத்து இகழ்ந்தும் வாழ்த்தியும் 'நீங்கள் கெடுங்கள்' என்ற அறம் பாடினால சாவான். அன்றியும், மனம் குன்றினால் வாழ் நாள் போகும். இது பொய்யோ, அன்று. பாம்பு, பேய், நோய், ஒருவன் மந்திரம் இவற்றாலும் பிறவாலும் இறத்தல் போல எண்ணார். மூடர்கள் இறக்கும் காலம் முற்றினால், இச்செயல் வரும். அல்லாது இந்நாளில் வாராது.

பகைமையுற்றவன் மீது செந்தமிழைப் பாடிக் கட்டினால், கூறப்படுகின்ற அவனுக்கு இடுக்கண் என்றும் பொருந்தும். தகைமையுடைய குரிசிலின் பெயருக்கு அயலில் இருபக்கமும் கொலைத்தொழில் சொல்லைத் தங்கவைத்தால் உடலில் ஊறு ஏற்படும். எருக்கு அல்லது கள்ளிச்செடி வகைகளிடம் வைத்தால், கலைமகள் தங்காமல் நீங்குவாள். சொல்லப்பட்ட இம் மலர்களைத் தொடுத்து ஏட்டுடன் எறிந்தால, வீட்டிலோ காட்டிலோ குடுமியுடைய உடல் கட்டுண்டு அழிவான். அவர்க்கு வந்தபடியே கூறினால் நோய் முதலாகிய எல்லாம் சேர்வார்கள்.

அறம் வைத்துப் பாடும் எண்ணம் வளர்ந்த ஒரு கால அமைப்பின பிரதிபலிப்பு இங்கு அமைகின்றது. பொருத்தம் பற்றிய எண்ணம் நிலவிய காலமாயினமையின், எழுத்தையும் சொல்லையும் பொருத்தம் நோக்காது பயன் கொள்ளுவதன் தீமையும் கருதப்பட்டது இயல்பே.

வசைக்கவி பற்றிய எண்ணங்களை யாப்பருங்கல விருத்தி யுரை தருவதும், அறம்பாடியதால் நந்தி மாண்டான் எனும் கருத்தும் இங்கு நினைக்கலாம். (16-17)

403 ஏறறகவி யஞ்சுமோ பிழைசெய்யிற் பெற்றோ
ரேனுமின மேனுந்தெய்வ மேனுமிறை யேனுரு
சாற்றும்வசை தெய்வமன்றி வணக்கநதா னுறுமோ
தனமனநொாந திடிற்றெய்வந் தன்னையுமே வணங்கா
னூற்றமுறு கீரன்முத லோரைநினைந் துரைப்பா
யுயர்தமிழுக் கிரங்காதா ரிரங்காத துண்டோ
மாற்றுபிள்ளை தனைமுதலோ ரசுணமா னரவ
மன்னையழ லெழலுதைதல் கடித்தல்கொலை மாறும்

எதற்கும் அஞ்சாக் கவிஞனின் ஆற்றலும், தமிழுக்கு அனைவரும் அடங்குவதும கூறப்படுகின்றது.

ஏற்புடைய கவிஞன் அஞ்சுவானோ? பிழை செய்தால் பெற்றோராயினும் இனத்தினராயினும் தெய்வமேயாயினும் அரசனேயாயினும் வசை கூறும். கடவுளை அன்றிப் பிறரை வணங்குமோ? தன் மனம் துன்புற்றால், தெயவத்தையும் வணங்காது. ஆற்றலுடைய நக்கீரன் முதலியவரை நினைந்து உரைப்பாய். உயர்வுடைய தமிழுக்கு இரங்காதவர் இரங்காதது உண்டோ? மாற்று பிளளை தன்னை முதல் ஓர் அசுண மானரவம் கடிக்க, அன்னை அழுது எழுந்து இழிவுபடுத்தக் கொலைமாறும்.

கருத்தை விளக்கக் கதை கூறும் உத்திமுறை இலக்கியத்திலும் அறநூல் போன்றவற்றிலும் அமைதலே பெரும்பான்மையும் இயல்புமாம். இந்திரனே சாலும் கரி (25) என வள்ளுவர் குறிப்பாகக் கூறுவதும், காப்பியங்கள் கதை மாநதர் வாயிலாகத்

தரும் துணைக் கதைகளும் இருக்க, இலக்கணங்கள் இத்தகு மேற்கோள் தருவது அருமையாம். பிரபந்த இலக்கணம் கூறும் பிற பாட்டியல்களிலும் காணப்படாத இவ் இயல்பு பிரபந்தத் திரட்டின் புதுமைகளில ஒன்று

இவற்றில் சில கதைகளே விளக்கமுடையன. தருமிக்காக சிவபிரான் இயற்றிய அஞ்சிறைத்தும்பிக் கவிதைக்குக் கீரன் முனிந்தது இங்குச் சுட்டப்படுகின்றது. (18)

409 மாயவன்பின் னடந்ததுவுந் தூதான்சென் றதுவு
மணிவேலன் வனத்தொருவன் றன்னைமறித ததுவு
மேயுங்கன மயிலரவம் விட்டதுவுங் கொததி
யெடுத்ததுவுங் கன்னீரி லேடிலங்கி யதுவு
மாயதலை யீந்ததுவு மிறைபினடந் ததுவு
மாடேச மீநததுவு மிறைகவிஞன் பதத்தை
மேயதலைச் சுமந்ததுவுந தொண்டையார் புகழு
மெண்ணிறன மீந்ததுவு மொருகவியா லன்றோ

கவிதையின் ஆற்றலைச் சான்றுடன் விளக்கல் அமைகின்றது.

மாயவன் பின் நடந்ததும், தூதாகச் சென்றதும், மணிவேலன் வனத்தில் ஒருவனை மறித்ததும், மயில பாம்பினை விட்டதும், கொததி எடுத்ததும், கனலிலும் தண்ணீரிலும் ஏடு இலங்கியதும, மாயத் தலை அளிததும், இறைவன் பின்னே நடந்ததும, பெரிய நாட்டை அளிததும், அரசன் கவிஞனின் பாதங்களை தலையில் சுமந்ததும், தொண்டை நாட்டினர் புகழும் எண்ணற்ற பொருள் அளித்ததும் ஒரு கவிதையால் அன்றோ.

மாயவன் பின் நடந்தது, 'மணிவண்ணன் போகின்றான்' எனும் பாடல் தொடர்ச்சி காட்டுகின்றது. சுநதரருக்காகப் பரவையாரிடம் சிவபிரான் தூது சென்றது அமைகின்றது. கனலிலும நீரிலும் ஏடிலங்கியது ஞானசம்பந்நர் கதை. மாயததலை ஈநதது குமணன் வரலாற்றுடன் தொடர்பு படுததலாம். 'இறை கவிஞன் பதத்தை மேய தலை சுமந்தது' எனபதனை, 'ஒட்டக் கூத்தன பதாம்புயத்தைச் சூடும குலோத்துங்கன்' என்பதுடன் இணைத்துப் பார்க்கலாம். ஜெயங் கொண்டாரின பரணிககாகப் பெரும் பொருளளித்தமை 'எண்ணில் தனம் ஈந்தது, என இங்குக் குறிக்கப்படுகின்றது போலும். (19)

வேறு

410 கரியமா யவனபிறந்தான் கண்பெறறான் கற்பகத்தோன்
வருநகுடன பாமபானான் கனறமலை நிலமபுகுந்த
துரியகுறள் சூரான தோர்நாலவர் மீனானார்
பெரியவர்கள் சொலும்வார்த்தைபேசுலகிற் பொயயாதே

பெரியவர் வார்த்தையின் ஆற்றல், சான்றுடன் சுட்டப்படுகின்றது.

கருநிறத்தினனான மாயவன் பிறந்தான்; இநதிரன் கண்கள் பெற்றான்; அரிய நகுடன் பாம்பானான்; அகன்ற மலைகள் நிலத்தில் புகுந்தன; தூய குறள் சூரானது; ஒரு நாலவர் மீன் ஆனார். பெரியவர்கள் சொல்லும் சொல் உலகில் பொய்க்காது எனக் கூறு.

அகலிகை காரணமாகக் கௌதவமுனிவர் சாபத்தால் இநதிரன் ஆயிரம் கண்பெற்றான். தவமியற்றி இநதிர பதவி பெறற நகுடன் சிவிகை சுமந்த முனிவரரைச் 'சற்ப சற்ப' என விரைவு படுததியதால் பாம்பானான். வழிமறித்த மலையை அகத்தியர் சபிக்க அது நிலம்புக்கது. (20)

411 வறுமையினி லுப்பினுக்குங் கூழினுக்கு மாற்றுவார்
தெறுஙகோடி தனததினுக்குஞ் செப்பார்பா நறகாலம
அறுஞ்செய்கை யறிந்துதவு மரைக்காசா யிரம்பொன்னா
முறுங்காலங் கோடிபொன்னு மொருகாசாம் பாவலர்க்கே

கவிஞர் பொருளை மதிக்குமாறு கூறப்படுகினறது.

வறுமைக் காலத்தில் உப்புக்கும் கூழுக்கும் ஆற்றுவார்; கோடிப் பொன்னுக்கும் செய்யுள் கூறார், நல்ல காலம நீங்கும் நிலை அறிந்து உதவும் அரைக்காசும் ஆயிரம் பென்னாகக் கருதுவர். செல்வம் உள்ள காலத்தில, கோடி பொன்னும் பாவலருக்கு ஒருகாசாம். (21)

வேறு

412 ஈறா தடக்கமே சேர்வாணி யுன்மாட்டோ
தூறார் பொதியமுனி தொல்காப்பியருடனே
பாறார் நிழற்போல் வான்சீடனென்றும் பாராம
லாறாயிரம் வருடமொரு முனியோடமர்க் கிழைத்தான்

வாணியின் அடக்கமும், கவிஞனின சீற்றமும் கூறப்படுகின்றன.

சீற்றமடையாது, அடக்கம் பொருந்துகின்ற கலைமகள் தனக்காக, செடிகள் நிறைந்த பொதியத்தின் முனியான அகத்தியர், தொல்காப்பியருடன், பருந்தும் நிழலும் போன்று, மேன்மையுடைய சீடன் என்றும் பாராமல், ஆறாயிரம் ஆண்டுகள், ஒரு முனியுடன் போருக்குச் சூழ்ந்தான்.

சமதக்கினி முனிவர் கதை போன்ற ஒன்று இங்குக் கருதப்பட்டது போலும். (22)

வேறு

413 தர்க்கமென்றா லெவர்மேலுந் தர்க்கமிட லாகாச்
சாருநலன் வாய்மைநடு நிலையடக்க முளர்பா
லொக்குமிவை பெற்றோரே யிடுவார்நல் லவையு
முதுவவையு மறியாதோ னுரைத்ததமிழ்க் குகந்து
நற்கவியென் றுரைப்புனவு நற்சபையே யாகு
நலமில்லாத் தீயவவை யவைத்திறத்தை யறியா
துற்கையெனக் கொடுத்துமுகம் பெறுவர்கற்றுத் தேறா
ருறநாணா ரஞ்சார்கா சுறாவுரைசொ லாரே

தர்கம் செய்தற்குரியாரும், சபைகளின தன்மையும் உரைக்கின்றது.

தர்க்கம என்றால் எவர்மேலும் தர்ககம் இடல் ஆகாது. சாரும் நலன், வாய்மை, நடுநிலை, அடக்கம் இவை உள்ளவரிடம் தர்ககம் இடலாம். இவை பெற்றவரே தர்க்கம் இடுவார்கள். நல்ல அவையும் நிறை அவையும் அறியாதவன் உரைத்த தமிழுக்கு உகந்து நற்கவி என்று உரைப்பனவும் நற்சபையாம். நலம் இல்லாத தீய அவை, அவையின் திறம் அறியாது, தீய தன்மை எனக் கொடுத்து முகம் பெறுவர். கற்றுத தேறாதவர் உறுவதற்கு நாணார், அஞ்சார், குற்றம் பொருந்தாத உரை சொல்லார்.

மூன்றுவகை அவைகள் பற்றிய எண்ணம் யாப்பருங்கல விருத்தி, பாட்டியல் போன்றவற்றில் அமைகின்றது. அரங்கேற்றம், நூலுக்கும் ஆசிரியனுக்கும் இன்றியமையாச் சூழலில் அமைவதால், அவை பற்றிய எண்ணங்களும் அமைதல் இயல்பு. நவநீதப் பாட்டியல அரங்கேற்றத்தையும் அவையையும் தொடர்பு படுத்தித் தருகின்றது.

நல்லவைக் கண்ணும் நிறையவைக்
கண்ணும் நயந்து ஒருவன்
சொல்லிய வாதினில் தோற்றலும்
தான் தொலைவல்ல என்ப
வெல்லுவன் என்னின் மிகச்சிறப்பு
எய்தி விளங்கும் என்ப
அல்லவை தன்னின்முன் வெல்லினும்
ஆகும் அவர்க்கு இழுக்கே (96) (23)

414 இத்திறத்தோர் பாடும்விதஞ் சிற்றின்பம் பேரின்ப
மிரண்டுவகை சிற்றின்ப மொருவனைப்பார்த்தேம்ப
லதநிர விழிமான் கொண்டாட விரப்பையென வுரைத்த
லதுமுதலாம் பேரின்ப மாவதுதான் றெய்வ
மித்தரையோர் தமைப்பார்த்தே தன்செயலுந் துயரு
மினிநீக்கு துணைநீயென் றியற்றுதலே முதலாந்
தத்துமுவை யிரண்டுமொன்றாய் வந்திடினு மமையுஞ்
சாற்றுமிவை சாற்றில்பார்த் தாரணிக்கு முளவோ

கவிஞர் பாடும் விதம் சிற்றின்பம் பேரின்பம் என இரு வகையென விளக்கல்.

இத்தன்மை உடையவர்கள் பாடும் விதம், சிற்றின்பம் பேரின்பம் என இரண்டு வகை. சிற்றின்பம் என்பது ஒருவனைப் பார்த்து, 'ஏக்கம் அடையாதே; அம்பொத்த கண்களுடைய பெண் கொண்டாட இரப்பாய்' என உரைத்தல் முதலியனவாம். பேரின்பம் என்பது தான், தெய்வம் இவ்வுலகத்தோர் தம்மைப் பார்த்துத் தன் செயலும் துயரும் இனி நீக்கு, நீயே துணை என்று கூறுதல் முதலானவையாம். ததும்புகின்ற இவை இரண்டும் ஒன்றாய் வந்நாலும் பொருத்தமுடையதாம். கூறுகின்ற இவை பிற உலகுக்கும் உண்டோ?

இரத்தினச் சுருக்கமும், இதனை யொத்து, பாடு பொருளைச் சிற்றின்பம பேரின்பம் எனப் பகுக்கின்றது.

விடமொன்று மைக்கண்ணி
வாட்டமுஞ் சோகமிகு விரகுந்
தடமென் றொருவரைச்
சாற்றுதல் சிற்றின்பந் தன்செயலே

படுகின்ற துன்பப் பிறவியும்
போக்கெனப் பண்புடனே
யிடமுன் றுணையெனக்
கூறுதல் பேரின்ப மென்பதுவே (44) (24)

415 முன்னடியிற் பின்னடியின் மூன்றிரண்டா மடியின்
முதலவன்பேர் வரப்பெறுமா லன்றியூர் நின்று
மன்னபெயர் பலநின்றுங் கீர்த்திபல நின்று
மாம்பாக்கள் குறிப்பினா லலங்காரத் தொகையு
மன்னுநிந்தாத் துதிதுதிநிந் தையுமுறுஞ்செம் மொழியே
மாட்டுபிரி மொழியெனுஞ் சிலேடையினி லருத்தந்
துன்னியொரு மூன்றுமுறு மிறுங்குறிதற் குறிபோய்ச்
சூழ்விகுதி யிடைசசொல்பிற வாலும்வழங் கிடுமால்

பாவில் தலைவன் பெயர் வரும் இடமும், குறிப்பினால் பொரு ளுணர்த்தும் நெறியுங் கூறப்படுகின்றன.

முன்னடியில், பின்னடியில், மூன்றிரண்டாம் அடியில் தலைவன் பேர் வரப்பெறும் அன்றியும், ஊர்ப் பெயர் நின்றும், அத்தகைய பெயர் பல நின்றும், புகழ் பல நின்றும் பாக்கள் அமையும். குறிப்பினால் அணிகள் பலவும் நிலைக்கும். நிந்தாத்துதி, துதி நிந்தை என்பனவும் பொருந்தும். செம்மொழி, பிரிமொழி, மாட்டுறுப்பான கொண்டு கூட்டமைப் பாடல் எனும் சிலேடையில் பொருள் நெருங்கி, ஒரு மூன்றும் எற்கும். இறுங் குறி, தற்குறி, விகுதி, இடைச்சொல் முதலியவற்றாலும் பிறவாலும் வழங்கும்.

தண்டிபோன்ற அணியிலக்கணங்கள், மாறுபடு புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, சிலேடை பற்றி மொழிகின்றன. பிரபந்தத் திரட்டும், முதலியலில் விளக்கிய பொய்ம்மொழி யலங்காரம் மெய்ம்மொழி யலங்காரம் (16), சிலேடா சாகரம் (52) போன்றன இதனுடன் ஒப்புமை காட்டுகின்றன. (25)

416 அந்நெறிகள் வழங்கும்பா வெள்ளையா சிரிய
மருங்கலியே வஞ்சியென நான்காகு மிவைக்குத்
துன்னுமின முதலிவையே யேற்றிடுதா ழிசையே
துறைவிருத்த மெனுமூன்று மாம்பிறபாக் களுமா
மின்னவைக்கு முறைசாதி பிரமனிறை வணிக
னிசைககின்ற சூத்திரனே யெனுநான்கு மாகு
நன்னிலமு மவ்வழியே முல்லையொடு குறிஞ்சி
நடுமருத நெய்தனிறம் வால்குருதி பொன்கார்

417 வந்தமுறை கார்த்திகையே மகமனுட மவிட்ட
மாதியா நாளிரா சியைநாலு கூறிட்
டுந்துமேடாதி தொட்டாசிரி யம்வஞ்சி கலியு
மோங்குவெள்ளை யும்பெறுங்கோ ளும்புகல்வர் முறையே
தந்தவெள்ளை திங்கள்வியா ழம்மகவல் செவ்வாய்
தனிநாயி றாங்கலிக்குப் புதன்சனியாம் வஞ்சிக்
கந்தமுறு வெள்ளிபாம் பாமினக்கு மனவே
யணிவிரைபூ வாடைநிறத் தாற்பகர்வா ரன்றே

நாற்பாவும் இனமும், அவைக்கு சாதி, நிலம், நிறம் நாள், ராசி, கோள் முதலியனவும் கூறப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நெறிகள் வழங்கும் பா, வெள்ளை ஆசிரியம் கலி வஞ்சி எனநான்கு. இவைக்கு நெருங்கும் இனம் முதலாக இவற்றையே ஏற்றிடும் தாழிசை துறை விருத்தம் எனும் மூன்றும் ஆம். பிற பாக்களும் வரலாம். இவைக்கு முறையே சாதி, பிரமன் இறைவன் வணிகன் சூத்திரன் எனும் நான்கும் ஆகும். நலல நிலமும் அவ்வழியே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்; நிறம், வெண்மை செம்மை பொன்மை கருமை.

அந்த முறையே, கார்த்திகை மகம் அனுடம் அவிட்டம் தொடக்கமாக நாள் அமையும்; இராசியை நான்கு கூறிட்டு மேடம் என்பதைத் தொடக்கமாகக் கொண்டு ஆசிரியம், வஞ்சி, கலி, ஓங்கும்வெண்பா என்பன பெறும்; கோளும் இம்முறையே கூறுவர், வெண்பாவுக்குத் திங்கள் வியாழன், அகவல் செவ்வாயும் ஒப்பற்ற ஞாயிறும், கலிக்கு புதன் சனி என்பன, வஞ்சிக்கு வெள்ளி, இராகு கேது என்பன. இனத்துக்கும் இவ்வாறே. அவ்வாறே பூண், மணப்பொருள், பூ ஆடை என்பனவற்றை நிறத்தை அடிப்படையாக்கிக் கூறுவர்.

பாக்களுக்கு சாதி முதலிய பகுப்புகள் கூறும் அமைப்பு முந்தைய பாட்டியல்களிலும் காணப்படுகின்றது. இடைக் கால வருணக் கோட்பாட்டு எண்ணத்தின் முதிர்ந்த தாக்கம் இதில் அமைகின்றது. சாதிப் பகுப்புடன் நின்று விடாது, நாளும், கோளும், இராசியும், விரையும், பூவும், நிறமும், நிலமும் பகுத்துத் தரப்படுகின்றன. பாட்டியல் நூல்கள் பாவகை பற்றிச்

சுட்டும் இடமாக இது அமைகின்றது. பிரபந்தத் திரட்டு' நிறத்தைச் சுட்டிவிட்டு, அதன் அடிப்படையிலேயே அணிகின்ற விரை பூ ஆடை அமையும் எனச் சுட்டுவதுடன் நின்று விட, பன்னிரு பாட்டியல் விரையும் பூவும் எவை எனவும் விளக்குகின்றது. பிரபந்தத் திரட்டு மருட்பாவைச் சுட்டாதிருக்க, பன்னிரு பாட்டியல், அது வருணம் பொருந்தாது எனக் கூறுகின்றது.

அந்தந்த இனத்தினரைப் பாட அவ்வவ் வருணப் பாவினைப் பாடவேண்டும் என்ற எண்ணமும் நால்வகைப் பாவும் மங்கலம் பொருந்த வேண்டும் என்ற கருத்தும் பன்னிரு பாட்டியலில் அமைகின்றது. இலக்கியத்துக்கு வருணம் முதலிய பொருத்தம் நோக்கும் பாங்கு பாவுக்கும் ஆனமையை இது உணர்த்துகின்றது (இலக்கணத்தொகை, யாப்பு-பாட்டியல், பக் 500-505) பாவுக்குரிய வருணமும் பிறவும் அவ்வப் பாவினத்துக்கும் உரியன எனும் எண்ணம் மரபுத் தொடர்ச்சி காட்டுகின்றது. (26-27)

418 துணியவரிதாம்பொருளுஞ்சோர்வுஞ்சொன்மேற்பகுத்துச்
சொல்லுதலு மணிபொருட்டான் மற்றுமுண் டெனவுரைப்போா
தணியும்வழிச் செல்லலுமே பாவினுக்கே யிழுக்காந்
தருமிழுக்காக் கலைகவிஞன் வைத்தமுறை வந்து
மணிசிலசான் றோருத்திக் கேற்றபடி பொருள்வே
றாகிநலங் கொள்ளுதலு மாமலையும் பிறவுங்
கணிதமில்லார் வெள்ளாற்றின றெற்காகிற் பொதியங்
காட்டும்வடக் கேற்கொல்லி வடக்கேறிற் பிறவே

பாவினுக்கு இழுக்கு எது எனலும், பா பொருள் நலங்கொள்ளுமாறும் இங்கு அமைகின்றன.

துணிதற்கு அரியதான பொருளும், சோர்வு அளித்தலும், சொல்லைப் பகுத்துச சொல்லுதலும அழகு செய்யும பொருள மற்றும் ஒன்று உண்டு என்று உரைப்போர் தணியும் வழிச் செலலலும பாவுக்கு இழுக்கு. தருகின்ற இழுக்காத கலை, கவிஞன் வைத்த முறையிலேயே வந்தும், அணியுடன், சில சான்றோரின உததிககு ஏற்றபடி வேறு பொருள் தோற்றி நலம் கொள்ளுவதும் ஆகும். மலையையும பிறவற்றையும் கணித்துக் கூறும் இயலபு இல்லாருககு வெள்ளாற்றின தெறகாகில் பொதியம, வடக்கெனில் கொல்லி, பின்னும வடககாயின பிற. (28)

419 சொல்லுலுத்தன் மேற்பாடிற் கவிதறுகு நலனேற்
சுழித்தெழும்பும்பெண்மயலினுற்றவர்க்கப்பொருளி
னல்லபொரு ளுறும்ஞானிக் கச்செயலே பொருந்து
நடுவர்க்கந் நடுவாகுங் கொடியவர்க்குககொடிதாய்
வல்லமுறுங் கொடிதையன்றோ வசையென்பார் நல்ல
வாக்காவ துண்டுபாக் கடைதரித்து மகிழ்வா
யல்லணினை யாதுரைத்த லாமனல்வாக் காவ
தவைநீக்கிப் பாடுதலா மவரணியில்வே றுண்டோ

கவிதையின் பல பண்பு நிலைகள் கூறப்படுகின்றன.

உபோபியின் மேல் பாடினால், கவிதை தடைபடும். நல்லவன் ஆயின் சுழித்து எழும்பும் பெண் மயக்கத்தில் ஆட்பட்டவருக்குப் பொருளில் நல்லபொருள் பொருந்தும்; ஞானிக்கு அந்த ஞானச் செயலே பொருந்தும். நடுநிலைமையுடையவர்க்கு அது அத்தன்மைத்து ஆகும்; கொடியவர்க்குக் கொடியதாய் வலிமை பொருந்தும், கொடியதை யன்றோ வசை என்பர். நல்ல வாக்கு என்பது, பாவின்கண் அமைந்து மகிழ்வுடன் துன்பம் நினையாது உரைத்தலாம்; அனல்வாக்கு என்பது அவை நீக்கிப் பாடுதலாம் அவர் அணியில் வேறுண்டோ? (29)

420 ஞானிகவி விரகமறுங் காமிகவி யதுவா
நடுவர்கவி யிரண்டுமுறும் படியாதான் கவியே
யூனமுறுங் குலனலனி விருதாதைக் கவிகட்
கோங்கிடும்வாழ் வெழுபான்மே லுறுமாண்டார் கவிக்கு
மேனியுறு சிரத்தையறுந் தெரித்தவிரு தாதை
மிகைவரல்க விக்காசு மிடலுமுண்டா மன்றோ
கூனன்முதற் குறைக்கவத்தை நோய்க்குநோய் நான்கு
குலந்தவறுங் கவிககுமறு மனையிச்சை பிறவே

பாடுவோர் இயல்புக்கேற்பக் கவிதை அமைதல்.

ஞானியின் கவி விரகம் நீங்கும்; காமியின் கவி அதுவாகும்; நடுநிலைமையுடையவா கவிதையில் இரண்டும் பொருந்தும, படிககாதவன் கவி குறைபாடுடையதாகும; குலநலன் உள்ள பெருந தந்தையின கவிககு வாழவு ஓங்கிடும் எழுபதுக்கு மேல் வயதுள்ளவா கவிதைக்கு மேனியுறும கவனம் நீங்கும்; கூறிய பெருங்குலக் கவிஞனின் மிகைவரல் கவிக்கு ஆகும் வலிமையும்

உண்டாம். கூனன முதலிய குறையால் அவத்தை உண்டாம்; நோயால் நோய் வரும்; நான்குகுலம் தவறும் கவிக்கு பிறன்மனை விருப்பம் ஏற்படும்.

இருதாதைக் கவி என்றதால, தலைமுறை தலைமுறையாகக் கவிபாடும் குலத்தினன் எனபதைக் குறித்திருக்கலாம். (30)

421 குற்றமுறுங் கவிபாடி லொருதிங்கட் கொருக்காற்
குறையறுவான் மங்கலப்பாட் டரங்கேற்றி னலனா
மற்றவர்மங் கலவள்ளை தனிலிறைவ னாம
மாட்டவே தினையிடிப்பா ரமுதுண்டா னலனாம்
வெற்றியிறைக் கிறைபாடி லாயிரத்தோர் பங்கு
மேன்மையொடு திருவிவர்க்கு வருவாள்பெண்
கவிகள்
பற்றிருக்குங் காமியென முதுமையேற் பெருமை
பகர்நடுக்குத் தனமலியென மறுபிறவி யலியே

குற்றமுடையகவி, மங்கலப்பாட்டு, கவிஞனின் இயல்புக்கேற்பக் கவியின் உயர்வும் சிறப்பும், பெண்புலவர் என்பன பற்றிக் கூறு கின்றது.

குற்றம் உண்டாகும் கவிதை பாடினால், ஒரு மாதத்திற்கு ஒருமுறை. குறையறுவதற்கு மங்கலப்பாட்டு அரங்கேற்றினால் நலனாம். அவரது மங்கலவள்ளை தன்னில் அரசனின் பெயர் பொருந்தவே தினையிடிப்பார் அமுது உண்டால், நலனாம். வெற்றியுடைப அரசனுக்கு, அரசன் பாடினால் ஆயிரதொரு பங்கு மேன்மையுடன் திருமகள் இவரிடம் வருவாள். பெண் கவிஞர்கள்; காமியாயின் பற்று இருக்கும்; முதுமையாயின் பெருமை; நடுவுக்கு, தனம் எனக் கூறு; அலியாயின் மறுபிறவி அலியாம்.

அரசனைப் புகழும் வள்ளைப் பாட்டு இங்குக் கருதப்பட்ட தாகத் தெரிகின்றது. (31)

422 இவ்விதங்கள் சொற்றவெல்லா மிப்பிறப்பே தொடரு
மிதுதப்பிற் பின்பிறப்புப் பிறந்தொழிக்கவேண்டுஞ்
செவ்வைபெறும் விரைவுகவி தனிநலத்தாற் குறுமாற்
சிறப்பின்மந்த கவிபிறருக் குறுமெனவே சொல்ப

வெளவியஞ்சே ருலுத்தனுயிர் போம்பொழுது மிருகத்
தடையுருப்போ லேகுமிடை முதலுலுத்த ருயிரே
நவ்விபுலி யுருப்போற்போங் கொடையாளி யுயிரே
நாட்டிரணருயிர்போலப்பொற்றூண்போற்போமே

கவிதையின் பயனை அனுபவித்தலும், விரைவு மந்த கவி நிலையும், மனிதர் தன்மைக்கேற்ப உயிர் பிரிதலும் கூறப்படுகின்றன.

இவ்வகையாகக் கூறியவை எல்லாம் இந்தப் பிறப்பில் தொடரும். இப்பிறப்பில் அவை நிறைவேறாவிடின், அடுத்த பிறப்பும் பிறந்து ஒழிக்கவேண்டும். செம்மை பொருந்திய விரைவுகவி,மிகுந்த நலமுடையவனுக்குச் சேரும் சிறப்பு இல்லாத மந்தகவி, பிறருக்குச் சேரும் எனவே கூறுவர். பொறாமை உடைய உலோபியின் உயிர் போகும் பொழுது மிருகத்தின் உருவுடன் நீங்கும்; இடைலோபி முதல்லோபியரின் உயிர் மான், புலி உருவைப்போலப் போகும்; கொடையாளியின் உயிர் போர் வீரர் உயிர் போல, பொன்தூண் போலப் போகும். (32)

423 வீரசொர்க்க முறுமந்த வீரருயி ரதன்றி
மேலான விதரணசொர்க்கத்திலுறுங்கொடையான்
றீரவுயி ரிடைகடையாங் கொடையவர்தம் முயிரே
சீறியெழும் வாயுவாய்க் கனலாகிச் சிரகக
ணாரவெழுந் தோடுமா லன்றியிடைக் கொடையா
னலங்குயிர்பொற் றூணுமா யந்தரத்தி லெழுமே
நேர்பகலி லுச்சிமட்டு மிரவினிலுங் கொடுத்தா
னிதிபெருகு மற்றவைக்கு நிதிகுறையு மன்றே

424 தலையிடையே கடைக்கொடையார் மூவேழு வள்ள
றலைக்கொடைதன் னுபகாரம் பிறவுபகா ரத்தோ
டலமறக்கேட் டவைகொடுத்த லாமிடையு தார
மவன்கொடையும்பிறர்கொடை யுமாங்கடையுதார
நலமுறுவன் கொடையே பெறலாகு முலுத்தர்
நாட்டுதலை யிடைகடையிற் றலைலோப
மொழித்துச்
சிலகொடுத்த லாமிடைக் கொளிததுமே பிறராற்
சேர்ந்தவுப காரவிடஞ் செய்தலாம் பிறவே

425 கடைலோப மொழித்தொன்றுங் கொடுக்காத வதுவாங்
கவிபாட லெச்சாதி யானாலு முயர்த்தி
விடலாகுங் கொடையாளிக் குதவல்சிறி துளர்க்கு
விளம்பலா காதுயர்ந்த திணையையஃ றிணையா
யடையுமஃ றிணையையுயர் திணையாப்பாப் புணர்த்தி
யரும்பொருளசெம் பொருள்வைத்துப் பாடுதலு
நலனா
நடுகாப்பிற் பொருத்தவித மமைந்தாலு நலனே
நாடானந் தந்தையூர்க் கமைந்திடினு நலனே

கொடையாளன் உயிர் போமாறு, கொடுக்கும் நேரத்திற்கேற்ப நிதிபெருகல், தலை இடை கடைக் கொடைநிலை விளக்கம், மூவகை உலோபம், கவிபாடும் முறை என்பனவும் உணர்த்தப் படுகின்றன.

வீரசுவர்க்கம் சேரும் அந்த வீரர் உயிர்; அதுவன்றி மேலான விதரணசுவர்க்கத்தில் கொடையாளன் உயிர் சேரும். இடை கடைக் கொடையாளர் உயிர் சீறியெழும் காற்றாகி, கனலாகி தலையிடத்து நிறைய எழுந்து ஓடும். அன்றியும்,இடைக்கொடை யாளின் ஒளிவிடும் உயிர், பொன் தூணாகி வானில் எழும்.

நேரிய பகல் நேரத்திலும், மதியம் வரையும், இரவினிலும் கொடுத்தால் நிதி பெருகும்; மற்றவைக்கு நிதி குறையும்.

தலை, இடை, கடைக் கொடையாளர் இருபத்தியொரு வள்ளல்கள். தலைக் கொடை, தன்கொடையுடன் பிற ஈகையும், 'போதும்' என்பது நீங்கும் வண்ணம் கேட்டவையனைத்தும் கொடுத்தலாம்; இடைக் கொடை, தன்கொடையும் பிறர் கொடையுமாம்; கடைக் கொடை நலம் பொருந்தியன கொடுத்தலே;

பெறற்குரிய உலுத்தரை தலை, இடை, கடை என நாட்டுக. தலைலோபம், சில நீககிச் சில கொடுத்தலாம்; இடை, அவ்வாறு ஒழித்தும், பிறரால் நேரும் கொடையை விடச் செய்தலாம கடை லோபம அவ்வாறு ஒழித்து ஒன்றும் கொடாத நிலையாம்.

கவிபாடுதல் எந்தச்சாதியானாலும் உயர்த்தி விடுதல் ஆகும். கொடையாளிககு உதவல் சிறிது உள்ளவர்க்குக் கூறலாகாது. உயர்ந்த திணையைஅஃறிணையாக அடையச்செய்தும்அஃறிணை

யை உயர்திணையாகப் பாவில் இணைத்தும், அரிய பொருளும் செம்பொருளும் வைத்துப் பாடுதலும் நலனாம். காப்பில் பொருந்தும் வண்ணம் அமைந்தாலும் நலனே. நாள், தானப் பொருத்தம் தந்தை ஊருக்கு அமைந்தாலும் நன்று.

தொடர்ந்து வரும் கொடையியலில் வள்ளல்களைப் பற்றிப் பேசுமுன் முன்னோடியாக இவ்வியலில் அவரியல்புகளைச் சுட்டுகின்றார் எனலாம் (33-35)

426 கவிமுதலாம் பிரபந்தங்க ளுக்குரைத்த நாளுங்
காட்டிராசி யும்பிறவு மிறையவனுக் கொப்பிற்
புவியின்மிகு நன்மையிறை நாட்டொத்தெண் ணாளிற்
பொருத்தவியற் படிதப்பி லாகாது தின்மை
தவமுடைய நிறங்கண்டு பாடுதலு நலனாங்
தாமரைமின் குடியிருப்பா ளிதயத்தி லுருவா
யவயவமே யெழுத்தாகு மவளழகு சொல்லா
மவளந்தக் கரணநான் குங்கூறும் பாவே

427 அந்தவெள்ளை யுருவெனலாஞ் செங்கைகா லகவ
லகன்றமுலை கலிப்பாவாங் குழல்வஞ்சி யாமா
லிநதவித முற்றபாப் பாடில்வே றேபோ
லிசைந்தொன்றித் தொடைபட்டு நிற்குமசை நெறியே
யிந்தவகை நல்லறிவர் சதகோடி யுளவா
மிசைஞானி தனக்குமுக் கோடிபிறர் கோடி
முந்தவுறு மிவையன்றி விகடமுதற் பிறவாய்
முப்பானோ டிருகோடி வாணிவிளங் கிடுமே

கவிதை பொருத்தம் நோக்கிப் பாடப்படலும், கலைமகளுக்கு உருவிளக்கமும், நல்லறிவர் எண்ணிகையும் அமைகின்றன.

கவிதை முதலிய பிரபந்தங்களுக்குக் கூறிய நாளும் காட்டிய இராசியும் பிறவும், அரசனுககு இயைபுற்றால், உலகில் மிகுந்த நன்மை விளையும். இறைவனின் நாள் முதல் எட்டு நாளில் 'பொருத்தவியல்'படி தப்பினால் ஏற்புடையது அன்று; தீமையாம், தவமுடைய நிறம் கண்டு பாடுதலும் நலனாம். கலைமகள் குடியிருப்பாள். இதயத்தில் உருவாகி, அவயவம் எழுத்தாகும்; அவள் அழகு சொல்; அவளது அந்தக் கரணம் நான்கும் கூறிய பாக்களாம்.

வெண்பா உரு எனலாம்; கையும் காலும் அகவலாம்; அகன்ற நகில் கலிப்பா; குழல வஞ்சியாம். இவ்விதமான பாவைப் பாடினால், வேறுபோல் தோன்றினும இசைந்து ஒன்றித் தொடைப்பட்டு அசை நெறியே நிற்கும் இநநவகை பாடும நல்ல றிவுடையவர் சதகோடி உள்ளனர்; இசை ஞானிகள் முக்கோடி; பிறர் கோடி; முநதுகின்ற இவை அன்றியும விகடம் முதல் பிற முப்பத்திரண்டு கோடியாக வாணி விளங்கும். (36-37)

428 நாற்பிறப்பாம் பாவாணி யகங்குடியா நினைக்கி
னாதமுறும் வாயுவொடு கூடியுன்னிக் களத்தி
லாற்றலுறு மங்காத்த லாகினா நடுவி
லவதரித்து நுனிநாவிற் கானீட்டி யிருக்கு
மேற்றவன்மெல் லிடையுயிரா யுரங்கண்டஞ் சீர்மூக
கிடமாகி யிதழ்நாப்பல் லண்ணத்தின் வினையாய்த்
தோற்றிடும் வேறுருவ மாய்நஞ்செய லொவ்வனே
தோற்றுவது மூமையெனச் செய்வதுவு மன்னோ

429 ஓசையே பயனன்றி யெழுத்தினுககுப் பயனோ
வொலியேறிற் பயனுண்டா மெழுத்துமடுத் துறுமே
தேசுபெறு மெழுத்தின்ன விதமென்று புகலத்
தெரியாவோ சையைப்பற்றிப் பலபாடை யெழுத்தாங்
காசினியி லோவியத்தன் மனத்தினிலோ வியம்போற்
கலந்திருந்து வெளிக்காணிற காட்டிலுறிற் றெரியும்
பூசைநாய் மிருகநர ரொலியெழுத லாமோ
புகன்றவொலி காரியமேற் புகலொலிகா ரணமே

பாவாணி உருவாகுதலும், ஒலியின் நிலையும் உரைககப்படுகின்றன.

நான்கு விதப் பிறப்புடைய பா, வாணியின் அகத்தைக் குடியிருப்பாகக் கொள்ளும். நினைத்தால், நாதம் சேரும். வாயுவுடன் சேர்ந்து உந்தியெழும்பி, கண்டத்தில் ஆற்றல் சேரும். வாய்திறக்கும் அங்காத்தலாகி நாவின் நடுவில் பிறந்து, நாநுனியில் கால்நீட்டி இருக்கும். ஏற்புடைய வலி, மெலி, இடையினங்களாய் உயிராய், நெஞ்சு, கண்டம், சீரிய மூக்கு என்பன இடமாகி இதழ், நா, பல், அண்ணத்தில் வினையாகித் தோற்றம் கொள்ளும். வேறு உருவமாகி நம் செயலுக்கு ஏற்பத் தோற்றும் அதுவே ஊமை எனச் செய்வதுவும் ஆகும்.

ஓசையில் பயன் இல்லாது எழுத்துக்குப் பயன் உண்டோ; ஒலியேறினால் பயன் உண்டாகும்; எழுத்தும் அடுத்துச் சேரும்; ஒளி பெறுகின்ற எழுத்து இத்தகைய இயல்பினது என்று கூறத் தெரியாது; ஓசையைப் பற்றிப் பல மொழி எழுத்துக்கள் ஆகும். உலகத்தில் ஓவியம்போல, மனத்தில் ஓவியம்போலக் கலந்திருந்து, வெளிக் கண்டால் காட்டினால் தெரியும். பூனை, நாய், மிருகம், மனிதர் ஒலியை எழுதலாமா? கூறிய ஒலி காரியமாயின், கூறும் ஒலி காரணமாம்.

'உந்திமுதலா முந்துவளித்தோன்றி ..' (83) எனத் தொல் காப்பியம் கூறுவது இங்கு நினைக்கத்தக்கது. ஒலியாகிய வாணியைப் பாவாணியுடன் இணைத்து இங்குக் காண்பதாகத் தெரிகின்றது. எழுத்திலக்கண நூல்கள் அனைத்தும் எழுததுப் பிறக்கும் இந்நிலை பற்றி மொழிகின்றன (நன்னூல் 74-88).

ஒலி, ஓசை என்பன வேறுபடுத்தப்படல் மொழிக்கல்வியில் இயல்பே. முற்கு, ஈளை என்பன எழுத்திலா ஒலியாக அமையும் எனும் எண்ணத்தொடர்ச்சி, 'பூசை நாய் மிருக நரரொலி எழுதலாமோ' என்பதில் வெளிப்படுகின்றது போதும். (38-39)

430 தெய்வங்கள் மேற்பாடிக் கட்டில்வினை யிவர்க்கே
சீர்ச்சாதி வழுவின்னீ சன்றனோடு சேரில்
வையகத்தி னெறியன்றித் தனநிரம்ப வாங்கின்
மறுத்தவன்மேற் கவிபாடி னீசன்மேற் றனத்தாற்
செய்யகவி புகன்றிடினற் கவிக்குமொரு கோடி
திருவாணி வாக்கிலியல் கவியகலு மன்றி
யுய்யுமிவன் கவியவர்க்காம் வாக்கறுங்கண் டதுகற்
றுற்றானேற் பண்டிதனா வானெனவும புகல்வார்

கவிதையின் இயல்பால் கவிஞனுறும் தீங்கு கூறப்படுகின்றது.

தெய்வங்கள் மேல் பாடிக் கட்டினால், அதன் தீவினை கவிஞனையே சாரும்; சீரிய சாதி வழுவி நீசன் தன்னோடு சேரலை உலக நெறி யல்லாது பொன் நிறைய வாங்கினால், கொடை மறுத்தவன்மீது கவிபாடினால், நீசன் மீது பெரும்கொடை காரணமாகச் செம்மையான கவி பாடினால், நல்ல கவிதைக்கும் ஒரு கோடிக்குமேல் பொன் பெற்றால், திருமகளும் கலைமகளும் சொல்லில் இயலுகின்ற கவிதையும் அகலும்; அன்றியும்

இவனது கவி அவருக்கு ஆகும்; வாக்கு அறும்; கண்டது கற்றவன் பண்டிதன் ஆவான் எனவும் கூறுவர். (40)

431 வெள்ளைசொல்லு நாலெட்டா மகவலுக்குப் பாதி
விளங்குகலிக் கதிற்பாதி பாதிவஞ்சிக் காம்பொ
னுள்ளவிலை கவிச்சிரதத்தை பார்த்துதவிற் றழைவ
ரவைகுறையி லிறைவருக்குக் குறையுண்டா மகவல்
வள்ளமலர் வாணிசெங்கை வனசமாகை யினால்
வையகத்திற் றிரளாக வழங்கிடுந்தொன் னூலுங்
கொள்ளுமவை மிகவாங்கும் விகனனொடு கம்பன்
கும்பனார ணக்கவிஞன் குறைவுற்றா ரவர்கசே

பாவுக்குப் பொன்விலையும், தகுதியறிந்து கொடுத்தலும், அகவலின் பயிற்சியும் சுட்டப்படுகின்றன.

வெண்பாவுக்கு முப்பத்திரண்டு, அகவலுக்குப் பதினாறு, விளங்குகின்ற கலிக்கு எட்டு,வஞ்சிக்கு நான்கு எனப் பொன்விலை கூறு; கவியின் ஊற்றம் நோக்கி உதவினால் பூரிப்புக் கொள்வர்; கொடுப்பது குறைந்தால், தலைவனுக்குக் குறை உண்டாகும். அகவற்பா, பெருமையுடைய மலாமகளின் செஙகையில பொருந்திய தாமரை மலர் ஆகையினால் உலகில் மிகுதியாகப் பயிற்சி பெறும்; பழைய நூல்களும் அவற்றை மிகுதியாகக் கொள்ளும். விகனன் கம்பன் என்பவர்க்குக் கும்பன், ஆரணக் கவிஞன் என பவர் குறைவுற்றார்.

விகனன் என்பது சிறந்த காதுடையவன் எனும பொருள் படும் பெயர்நிலையாம். கும்பன், நாரணன் (ஆரணன) என்பவர் கம்பனுக்கும் விகனனுக்கும் கீழ்ப்பட்ட கதையொன்று இருக்கலாம. (41)

432 நல்லவைக்கா கியவிலக்க ணந்தெரியா வாக்கி
நாடனறிச் சபைக்காகா னெனமறுக்க லாமோ
சொல்லுகவி குறைபோமோ வவனிடத்து மலர்மின்
றோன்றினளேல் விடுவனோ பாடுவான் வசையும்
புல்லுமுப சாரமே பொருள்புலவர் தமக்குப்
போற்றுமப சாரமுறிற் கோபமுறு வாரே
வல்லவுப சாரமின்றேற் சினமெவர்க்கும் வருமோ
வருங்காற்றீ் கூற்றனலிற் கொடியநாவ லர்க்கே

433 கோபமென்றா லிவனன்றே கோவிப்ப தளியார்
கோகனக மானன்றோ வறிவில்லா ரறியார்
பாவுநீர்நெய்த் தேன்பால் வாயுவொடு புகைக்கும்
பாவலர்க ளதிகமா விளங்கியிடஞ் செல்வார்
மேவுகிரா ணததிலுரு வேறியமந் திரம்போன்
மீறுமொன்று பத்தாகிக் கவிபாடி யுதவி
லாவிவிடின் மறுபவக்குங் கடவுளுரு மேற்பா
வரங்கேற்றிலொன்றுபத்தாய்விழைந்துவருங்கவியே

புலவர் இயல்பும் சினமுற விளையும் தீதும் கூறப்படுகின்றன.

நல்லஅவைக்கு உரிய இலக்கணங்கள் தெரியாத வாக்கி அரசன் அறியும் சபைக்கு ஆகான் என மறுக்கலாமா? அவன் சொல்லுகின்ற கவி குறையுடையது ஆகுமோ? அவனிடத்திலும் கலைமகள் தோன்றினால விடுவானோ? வசையும் பாடுவான். புலவருக்கு நல்ல உபசாரமே பொருட்டாம் அபசாரம் நேர்ந்தால் சினம் அடைவர். சிறந்த உபசாரம் இல்லாவிடின் எல்லோருக்கும் சினம் வருமோ? புயல் காற்றுப் போலவும் பெருநெருப்புப் போலவும் கூற்றுவன் போலவும் கொடியதாக நாவலர்க்குச் சினம் வரும்.

சினம் கொள்ளுவது எனக் கூறினால், இக் கவிஞன் அன்று கோபம் உறுவது; வண்டுகள் மொய்க்கும் செந்தாமரை மகளான கலைமகளே கோபம் கொள்ளுகின்றாள் எனல் வேண்டும்; அறிவு இல்லாதவர்கள் இதனை அறிய மாட்டார்கள். பரவுகின்ற நீர் நெய் தேன் பால் வாயுவோடு புகைக்கும் பாவலர் மிகுதியாக விளங்கி நல்லிடம் செலவர். மேவுகின்ற மூக்கில் உருவேறிய மந்திரம் போன்று, மீறுகினற ஒன்றினைப் பத்து ஆக்கிக் கவிபாடினால், உயிர் விட்டால் மறு உலகில் கடவுள் உரு ஏறும்;அத்தகைய பா அரங்கேற்றினால் கவிதை ஒன்று பத்தாகப் பெருகி வரும். (42-43)

434 பாப்பாடத் தெரிந்தவவன் பரமனையே பாடு
பாடினியே லெழுபிறப்பும் வாணிவிடா ளவளுந்
தீப்பாயு நடத்தானைப் பூசனைசெய் வதனாற்
செப்புவேன் கவியதிகஞ் செகத்திலார் பெறுவார்.

கோப்பாரவ ரணையையா யிரந்தானத் ததிகங்
கோபபஞ்ச விஞ்சதியாந் தானமதிற் கோல
மாப்பகிரக் கணமங்கைமா ரதிகமான பூசை
மலரென்றோர் கவிகோடி பலனதிக மன்றே

நற்பயன் பெறக் கவியைப் பாடும் ஆறு குறிக்கப்படுகின்றது.

பாப் பாடத் தெரிந்தவன், பரமனையே பாடல் வேண்டும். அவ்வாறு பாடினால், ஏழு பிறப்பும் வாணி அவனை விட மாட்டாள். அவ் வாணியும் அழலாடியாகிய சிவபிரானை பூசை செய்வதனாலேயே இந்நிலை அமைகின்றது எனக் கூறுகின்றேன். மிகுதியான கவிதைகள் உலகில் யார் பெறுவார்? அவர்கள், அன்னையான வாணியை ஆயிரம் தானத்துக்கு அதிகமாகக் கோப்பார். சிறந்த ஐந்தும் இருபதுமான நூறு இடங்கட்கும் அழகுற, சிறந்த தேவகண மங்கையரின் மிகுதியான பூசை மலர் என்று ஓர்கவி, கோடிப் பலன் அதிகம் உடையதன்றோ?

பஞ்ச என்பது ஐந்து எனவும் விஞ்சதி என்பது இருபது எனவும் பொருள்படுகின்றது. மலர்ப்பூசையும் கவிதைப் பூசையும் நோக்க, கோடி மலரால் பூசனை செய்வார் பெறும் பயனை ஒரு கவிதை தரும் எனலால் சிறப்புச் சுட்டப்படு கின்றது. (44)

435 குலவித்தை கல்லாமற் பாதியன்றோ பாடுங்
குலனெனினுமானைநிந்தை செய்தால்வாக்கறுமாற்
கலையரங்கேற் றிற்கொடுதத றாமதமே யாகிற
காவலற்கு வினையுண்டாங் குலனலன்சேர் கவிகட்
கலைபவமே யிலைமன்னர்க் கருங்கவிஞர் பெரியோ
ரட்டமியில் வாசித்தா லாசாற்குக் கேடு
நிலைபதினான் கவர்க்காகா திரணடைந்தோ டைந்தி
னேயவித்தை கெடும்பாட்டி மத்திினை யாதே

கவிஞன் குலம், பாடலின் நற் றீப் பயன், பாடல வாசிக்கும் நேரம் என்பன கூறப்படுகின்றன.

குல வித்தை கல்லாமல் பாதி அன்றோ? பாடுகின்ற குலம் எனறாலும் கலைமகளை நிந்தித்தால் வாக்கு வன்மை நீங்கும்; கலையரங் கேற்றிய போது கொடை அளித்தல் காலம் தாழ்தது அமைந்தால், அரசனுக்குத் தீவினை உண்டாகும்; குலத்திற் கேற்ற நலம் சேர்ந்த கவிஞர்கட்கு அழிவு இல்லை; மன்னருக்கு

அரிய கவிஞர் பெரியோர் அட்டமியில்வாசித்தால் ஆசிரியனுக்குக் கேடு அமையும. பதினான்காம் நிலையும் அவருக்கு ஆகாது; அமாவாசையான பதினைந்தாம் நாளாயின் சிறந்த வித்தை கெடும்; பாட்டிமத்தில் நினைத்தல் கூடாது.

அமாவாசையும், பிரதமை எனப்படும் பாட்டிமையும் கல்விக்குச் சிறப்பன்று எனும் கருத்து இன்றும் உண்டு. (45)

435 பிறதோடம் பெருக்கமில்லைக் காலையிலே கற்றாற்
பெருக்கமுறு மாலைக்கு மிரவுக்கு மன்ன
முறுமுச்சி நேரத்திற் கலையறுந்தான் படித்த
வுருவுக்குத் தக்கதாய் வாணியரு ளாலே
நிறைமனனந் தன்னிற்குங் கல்வியவண் மறுக்கி
னினைவுகெடுங் கெடுமேட்டின் கல்வியா யன்றோ
வுறுங்கவிக ளரங்கேற்ற விரவதே நலமா
மோங்குபக லலமில்லை யுச்சியதிற் குறையே

பாடல வாசிககும் நேரமும், அரங்கேற்ற உசிதமான நேரமும் கூறப்படுகின்றன.

மேற்கூறியன இருக்க, பிற தீமை; காலையில் கற்றால் பெருக்கம இல்லை; மாலைக்கும் இரவுக்கும் பெருககம் உறும், அன்னம் உறுகின்ற உச்சி நேரத்தில் கலை நீங்கும், தான் படித்த உருவுக்குத் தக்கதாய்க் கலைவாணியின் அருளால் நிறைந்த மனனம் தன்னில் நிற்கும்; கல்வியை அவள் மறுத்தால நினைவு கெடும்; கெடுகின்ற ஏட்டுக் கல்வியாகச் சேருமு; கவிகள் அரங்கேற்றுவதற்கு இரவே நலமாம், ஓங்குகின்ற பகல் நலம் இலலை; உச்சிக் காலம் அதனினும் நலம் குறைந்ததாம். (46)

437 ஏழையா யிருந்தவனு மிறையவனா னானே
யிலக்குமியு மைந்திலக்கம் வாணியும்வந் துறைவா
டாழாத வாணிநின்றாற் புலவனுக்குப் பொருள்பொன்
றருகிறோ மென்றலைவு பண்ணினா னேற்கேள்
வாழாமல் வாணிவிடு மனலைப்போல் வேந்த
வாணன்மனத் தபசார மிறையவனோ பெறுவா
னேழான நரகுறுவா னாளையென்பான் கொடையு
மிசைகொடையோ வன்றுதலை லோபனென்பார்
பெரியோர்

புலவனின் நிலை மாறும் எனலும் கொடை நிலையும் உணர்த்தப் படுகின்றன.

ஏழையாக இருந்தவனும் மன்னவன் ஆனால், இலக்குமியும் வலிமை பொருந்திய கலைமகளும் வந்து உறைவர். தாழாத கலைமகள் நின்றால், புலவனுக்குப் பொருளும் பொன்னும் தருகிறோம் என்று அவைவு பண்ணினால் வாணி அவனிடம் வாழாமல் நீங்குவாள். தீப் போன்ற அரசப் புலவனது மனத்தின் இழுக்கை அரசனே பெறுவான், ஏழாவது நரகத்தைச் சேர்வான்; நாளை கொடுப்பேன் என்பவனது கொடையும் புகழ் சார்ந்த கொடையன்று; அவனைப் பெரியோர் தலைலோபன் என்பர்.

'ஏழையா யிருந்தவனு மிறையவனா னானே
இலக்குமி யமைந் திலங்கும் வாணியும் வநதுறைவாள'

எனக் கொள்வது சிறப்பு. (47)

488 அருளின்மா பாதகரே பிறபொருள்வாங் குவரே
யானாலு மவர்மனததோ டுதவுதலா னலனே
தெருளினா வாணருக்கு பிழைப்பிதுவே யன்றோ
தெய்வமா வடுதுறையிற் றனங்கொடுககவிலலையோ
மருவுமனம் வாக்குடம்பு மூன்றினால் வகையாய்
வரும்பாவ மிருந்தாலு மகலவென்று நினைததே
யரனையா யிரமதுர கவிபாடி லகலு
மவைபாடப் பாடவேதிருந் துங்கலவி யதுவே

பாவாணரின் நிலையும், கடவுளர் அவர்க்கு இரங்குதலும், பாவம் அகல அவர் பரனைப பாடுக எனலும் இங்குச் சுட்டப்படுகின்றன.

அருள் இலலாத பெரிய தீவினை செய்தவராயினும, பிறர் பொருளை வாஙகுபவர் ஆயினும், அவர்கள் மனமுவந்து உதவி செய்தால் நலனாம். மயக்கம் அற்ற நாவுடைய வாணருக்கு பிழைப்பு இதுவேயாகும்; தெய்வம் ஆவடுதுறையில் பெரும் பொருள் கொடுக்கவிலலையோ? மருவுகின்ற மனம், வாக்கு, காயம் மூன்றினால் வகையாக வரும் பாவம் இருந்தாலும், அது நீங்க வேண்டும் என நினைந்து, சிவபிரானை ஆயிரம் மதுரகவிதை பாடினால் அப்பாவம் அகலும்; அவற்றை மீண்டும் மீண்டும் பாடுவதனால் கல்வியும் திருந்தும்.

திருவாவடுதுறையில், திருஞானசம்பநதர், தம் தந்தையார் வேள்வி செயய வேண்டும் என்ற கருத்தை உணர்த்த பதிகம்

பாடி உலவாக்கிழி பெற்றார். இதனைத் 'தெய்வம் ஆவடு துறையில் தனம் கொடுக்க வில்லையோ' என்பதில் எடுத்தாளு கின்றது இந்நூல். (48)

439 பாடமோதா தொருநாளி ருப்பாரோ வறிவார்
பகர்ந்தவில்லுஞ் சொல்லுமே பலகால மென்பார்
தேடுமெண்ணு மெழுத்துமே கண்ணெனவே போற்றிற்
றேயத்திற் பெருமையுண்டாம்புலையருக்கு மன்றோ
நாடுமவர் வள்ளுவர்யாழ்ப் பாணரே முதலோர்
நாவலரை வெகுளுவா ருலகத்தி லுளரோ
சாடுவித்து வானையடித் தவனுமில்லைப் பெற்ற
தாயைச்சேர்ந் தவனுமில்லை யெனுமுலக வழக்கே

புலவர் இயல்பும், அவரை எவரும் வெகுளார் எனலும் சுட்டப்படு கின்றன.

அறிவுடையவா ஒருநாளேனும் பாடம் ஓதாது இருக்க மாட் டார்கள். பயிறசியுடைய வில்லும சொல்லும் பலகாலம் நிற்கும் எனப் பெரியோர் கூறுவர். தேடுகின்ற எண்ணும் எழுத்தும் கண் எனப் போற்றினால் நாட்டில் பெருமை உண்டாகும். இழி குலத் தினருக்கும் அவ்வாறு பெருமை வரும். அனைவரும் நாடுகின்ற அவரையும், வள்ளுவர், யாழ்ப்பாணர் முதலியவரையும், நாவல ரையும் சினப்பவர் உலகத்தில் உளரோ? குதிதது வானத்தை அடித்தவனும் இல்லை, பெற்ற தாயைச சேர்ந்தவனும் இல்லை என்பது உலக வழக்கு.

எதிரியைச் சாடுகின்ற வித்துவான் என மற்றொரு பொருள் கொள்ளவும் இடமுண்டு. (49)

440 காலிருந்துங் கண்ணில்லா னிலக்கணங்க டெரியான்
கண்ணிருந்துங் காலில்லா னிலக்கியங்க டெரியா
னேலுமிவை யிரண்டுமுற்று மூமைதா னன்றோ
விசைவாக்க திரண்டுமில்லா னிவையிருந்துஞ்
சபையிற்
கோலியுறா னிமூடன் பெரியோர்க ளகமே
கூடவிருந் தேபழகிற் சபைக்கோழம் போமே
சாலுமலர் வாணிக்குப் பொய்த்தோழி யதனாற்
சாற்றுகவி படிறின்றிக் கூறிலை மின்றே

புலவருக்குத் தேவையான கல்வி நிலையும், சபை அச்சம், கவிதை கூறும் நிலை போன்றவையும் இங்கு அமைகின்றன.

கால் இருந்தும் கண் இல்லாதவன் போன்றவன் இலக்கணம் தெரியாதவன்; கண் இருந்தபோதும் கால் இல்லாதவன் இலக்கியங்கள் தெரியாதவன்; ஏற்புடைய இந்த இரண்டும் முற்றிலும் தெரிந்த போதும் இசையும் வாக்கும் இல்லாதவன் ஊமையை ஒத்தவன்; இவை அனைத்தும் இருந்தாலும் சபையில் ஏற்புடன் பொருந்த இயலாதவன் மிச்சமூடனாம். பெரியோர்களுடன் இணைந்து இருந்து பழகினால் சபைஅச்சம் போகும்; சால்புடைய மலர்மகளுக்குப் பொய்த்தோழி ஆனமையால் கூறுகின்ற கவிதையை பொய்நீங்கக் கூறினாலன்றி நலம் இல்லை. (50)

441 அணியறையி லாடியன்றோ வம்பலத்திற் புகுவா
ரருங்கல்விக் கொருபாடோ வாற்கன்றோ தெரியுந்
துணிவரது பாடில்வண்ண மரியதூக்கம் மானை
சொற்பெருகுங் கவிக்கிதுவும் பாரமோ திலமே
கணிதமில்லா விமகண்டங் கவிகாளை மேகங்
கழறினன்பார் சவமாகி யெழுநதெண்ணில் கவிகண்
மணிமறையோன் புகன்றனன்பார் நற்கவிவீட் டடுத்த
வளநகர்பத் தியோசனையும் வாக்குறுவார் பிறரே

கவிஞனின் தொழில் வன்மையும் பிறவும் கூறப்படுகின்றன.

அணியறையில் ஆடியபின் அன்றோ அம்பலத்தில் ஆடப் புகுவார்? அரிய கல்வி பெறுவதற்கு உள்ள வருத்தம் அது முடிந்தவர்க்கே தெரியும். அவா துணிந்து பாடினால், வண்ணம் அரியது. செய்யுள் அம்மானையால் சொல் பெருகும். கவிக்கு இதுவும் அளவற்றதால் ஓதவிலலை. கணித்தற்கு அரிய யமகண்டம் கவிஞனாக காளமேகம் பாடினன் என்பதைப பார்; இறந்து, பின் எழுந்து, எண்ணற்ற கவிதைகள் மணிபோன்ற மறையவன் புகன்றான் என்பதைப் பார்; நல்ல கவிஞனின் வீட்டை அடுத்த வளநகரில் பத்து யோசனை தூரம் உள்ள பிறரும் வாக்கு வன்மை பெறுவர்.

உயிருக்கு அபாயமான நிபந்தனைக்கு உட்பட்டுக் கவிபாடுதல் யமகண்டமாம. சவமாகி எழுந்து எண்ணில் கவி பாடியது திருமூலர் ஆகலாம். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பதனை ஒத்த கருத்தும் இங்கு அமைகின்றது. (51)

442 பூவாணி யுடன்றோன்றிப் பொலிந்ததைத்தா னன்றோ
போய்பிறந்த வதுபுலவர் நாவிலென்பார் பிறரே
பாவகைகூ றிற்கூறி யவைகூறிற் குற்றம்
பணிப்பதில்லை வேறுபொருள் விளங்கத்தோன்
றிடிலே
மேவுமுப்பா னாண்டளவிற் கல்விதனம் பிள்ளை
வேண்டியபேர் பெறினன்மை கல்வியவை யதிகந்
தாவமரர்க் கொபபென்றே புலவரென்றார் வேந்தர்
தகைமையென்ற கவிராச ரென்னவும்பேர்
படைத்தார்

கவிதைச் சிறப்பும், கவிஞர் உயர்வும் கூறுகின்றது.

கலைமகளுடன் தோன்றிப் பொலிந்த ஒன்றே, போய்ப் புலவன் நாவில் பிறந்து கவிதை ஆயிற்று என்பார் பிறர்; பாவின் வகைமை கூறினால், கூறியது கூறல் குற்றம்; விளங்கத் தோன்றினால் வேறுபொருள் தருவதில்லை; முப்பது வயதின் அளவில் கல்வி, செல்வம், குழந்தைகள், வேண்டிய அளவு பெயரும் புகழும் என்பன பெறின் நன்மை; கல்வியின் மிகுதிபற்றி அமரர் உலகத் தாருக்கு ஒததவர் என்பதால், அமரரைக் குறிக்கும் புலவர் என்ற பெயரை இவருக்கும் அளித்தார். அரசரின் தகைமை பெற்றவர் என்ற நிலையில் கவிராசர் எனவும் பெயர் படைத்தார். (52)

443 பிறபொருளைக் கரவுசெயும் பாதகன்சேர் நரகம்
பிறகவிமேற் பொருள்கரவு செய்தவவன் பெறுமாற்
றுறுகவிக்கு மற்றதுகேட் போர்க்குமறு மனையாட்
டொட்டவனை நிலைப்பிடித்தா ரதிநிரையம்
வருமாற்
றெறுசபைக்கட் கேட்போர்க ளதுமகிழ்ந்தோ ரடையுஞ்
செய்கையுள ரிறைவருக்குத் திருவகலு மன்றே
யறமாகு மொருவன்மேற் பாடியரங் கேற்றா
வத்தமிழை யொருவன்மேல் வைத்தல்புல வருக்கே

ஒருவர் கவிதையைப் பிறர் கவர்ந்து கூறலின் விளைவும், ஒருவர் மேல் பாடிய கவிதையைப் புலவர் பிறர்மேல் கூறும் பாங்கும் சுட்டப்படுகின்றன.

பிறருக்கு உரிய பொருளைத் திருடும் பாதகன் சேருகின்ற நரகத்தில், பிறருடைய கவிதையின் பொருளைத் திருடியவன்

சேருவான். அவ்வாறு மாற்றிய கவிக்கும், அக் கவிதையைக் கேட்போருக்கும், பிறன்மனை நயந்தவனைப் பற்றியவர் சாரும் நரகம் வரும். சபையின்கண் அதனைக் கூறக் கேட்டவர்கள், பிறன்மனை நயந்தவர் அடையும் செய்கை பொருந்துவார். அரசனுக்குச் செல்வம் அன்றே நீங்கும். ஒருவன் மீது பாடி, அரங்கேறறாத தமிழை, இன்னொருவன் மேல் வைத்துக் கூறுதல புலவருக்கு அறமாகும்.

பிள்ளைக் கவி எனவும் வெள்ளைக் கவி எனவும் சோரகவி எனவும், சார்த்துக்கவி எனவும் பாட்டியல் சில சுட்டும் நிலை உண்டு.

> ஆரொருவன் பாக்களை ஆங்கு ஒருவனுக்கு அளிப்போன்
> சோரகவி சார்த்து ஒலியில் சொல்லும் அவன்—சீர்இலாப்
> பிள்ளைக்கவி சிறந்த பின் மொழிக்காம் புன்மொழிக்காம்
> வெள்ளைக்கவி அவனின் வேறு (செ.48)

என இவரை வெண்பாப் பாட்டியல் கூறுகின்றது. (53)

வேறு

444 மரணமுறிற் கேட்பதிலை யெனில்வறிய னாகிற்
றருதாதை சொல்லவனற் சம்மதமி லானேற்
பொருள்குறைக்கில் வேறொருவன் பொருண்மிகவே கொடுக்கி
லொருவன்மேற் கவிபுகல்வா னொருவனது கவியே

ஒருவன்மேல் பாடிய கவிதையை இன்னொருவன் மீது வைக்கும் சூழல் இங்குச் சுட்டப்படுகின்றது

பாடல் தலைவன் இறந்து போனால், கேட்கமாட்டேன் எனக் கூறினால், வறுமை உற்றால், கவிதையைத் தருகின்ற பெருங்குலக் கவிஞன் அதனைக் கூறச் சம்மதம் இல்லையெனில், பரிசாகக் கொடுக்கும் பொருள் குறைவாக அமைந்தால், வேறு ஒருவன் மிகுந்த பொருள் கொடுத்தால், ஒருவன் மீது பாடிய கவிதையை இன்னொருவன் மேல் கூறுவர். (54)

வேறு

445 குற்றமிலை யதனாலே கொள்ளாத குமருண்டோ
நறறரையி லிருப்பதுதா னலனறியா ரறியாதார்
கற்றமலர் வாணியாற காரணத்தாற் காரியத்தால்
வெற்றியிறை தந்தைமரு மகனெனபார் மிகைபபுலவர்

வேறு

446 இறைசெங்கோ றிருமாலா மிறைசெல்வ மிலக்குமியா
மறைசெய்கை பரனாகு மவன்புயமே பரையாகு
நிறையுருவ மயனாகு நேர்புலவர் தம்மிடத்தி
லுறைகவிசேர் திறன்வாணி யுவளில்லார் மூடர்களே

மாற்றிக் கூறிய கவிதையின் குற்றமின்மையும், இறையவனுடன் கவிஞன் பெறும் உறவும் கூறப்படுகின்றன.

மேற்கூறியபடி கவிதையை மாற்றிக் கூறுவதனால் குற்றம் இல்லை. அத்தகைய கவிதையைக் கொள்ளாத குமர் உண்டோ? இத்தகைய நிலை இந்த நல்ல உலகில் இருப்பதுதான். அதன் நலத்தை அறியாதவர் அறிய மாட்டார்கள். கல்வியுடைய மலர் வாணியாலும், காரணத்தாலும், காரியத்தாலும், வெற்றி யுடைய மன்னவன் தந்தையாகப் புலவர் மருமகன் ஆக அமைவர் என்பர் மிக்க அறிவுடைய புலவர்!

அரசனின் செங்கோல் திருமாலாம்; அவன் செல்வம் இலக்குமியாம்; அவனது மறைவுடைய செயல்கள் பரனாம்: அவன் தோள்கள் பரையாய்; நிறைந்த உருவம் அயன் ஆகும்; புலவர்கள் தம்மிடத்தில் தங்குகின்ற கவிதையினைச் சேர்ந்த திறனுடைய கலைமகள் ஆவர்; அவளைப் பெறாதவர் மூடர். (55-56)

வேறு

447 முதலியன்மா லைப்பேராம் பிரபந்தம் பிறவு
மூண்டெப்பா வினுக்குஞ்சொல் லாமவையினி
லந்தாதி
பொதியின்மிக நன்மையா மறைசெங்கோற் கன்றிப்
புகழ்தசாங்கம் பிறர்க்குக் கூறுதலாங் குற்ற
மதிகதனம வரிற்கூறல் குற்றமில்லைத் தொகைச்சொற்
றரும்பாப்பேர் கூறேமே லெப்பாவு மாமாற்
றுதிகொள்புற னடைகருவிற் கூறுதல்கூ றாத
றொகுத்தறியக் கணத்தினாட்பொருத் தம்விண்டு
முறுமே

இனி, முதல் எட்டு இயல்களுக்கும், ஒழிபு கூறும் முகமாக, முதல் இயலின் மாலை, தசாங்கம், தொகைப்பா என்பனவற்றிற்கும், பொதுவாக இரண்டாம் மூன்றாமியலுக்கும் ஒழிபு கூறி, பொருத்ததிற்கு ஒழிபு கூறத் தொடங்குகின்றது.

முதல் இயலின் 'மாலை' எனும் பெயருடைய பிரபந்தம், பிறவும் செழித்து, எந்தப் பாவிலும் சொல்லுதற்கு உரியதாம். அவற்றில் அந்தாதி இணைந்தால் மிக நன்மையாம் மறையும் செங்கோலும் உள்ள அரசருக்கு அன்றி, புகழுடைய தசாங்கம் பிறருக்குக் கூறுதல் குற்றமாம் மிகுதியான பொருட்செல்வம் உடையவருக்குக் கூறுவது குற்றமில்லை. தொகை இலக்கியங் களுக்கு, அவை அமையும் பாவின் பெயரைக் கூறுக. எப்பாவிலும் அது ஆகும். இரண்டாம் இயலான புறனடை, மூன்றாமியலான கருப்பொருள்—இவற்றில கூறுவனவற்றைப் போற்றிக் கொள்க. கூறாதனவற்றைத் தொகுத்து அறிக. நான்காவது இயலான பொருத்தத்தில், கணத்திற்கு நாள் பொருத்தம் வேறுபட்டும் வரும். (57)

448 மங்கலச்சொற் றனையெடுத்தட் சரந்தான நாளே
வருகதியே கணமமைக்கு லமைந்திடுமப் பொருந்தந்
தங்குமுத்தி யானறிந்து தானநாட் கணமே
தானமைக்கி லமைந்துநிற்குந் தானநா ளிரண்டு
மங்கமைக்கி னலனுமுறுந் தானமதைப் பிரிதரே
யருநாளொன் றதைக்குறித்தே யமைக்கவல்லா
ரமைப்பார்
துங்கமுறுந் தானதது முயிர்மெய்யே லுயிரைத்
தேற்றியந்த வுயிர்பிடித்தெண ணொற்றிலென்ன
பலனே

நான்காமியலான பொருத்தத்திற்குப் புறநடைகூறும் முகமாக மங்கலப் பொருத்தம் தொடர்பான செய்திகள் மொழியப்படு கின்றன.

மங்கலச் சொல்லை எடுத்து, எழுத்து, தானம், நாள், பொருந்தி வருகின்ற கதி, கணம அமைததால் மங்கலப் பொருத் தம் அமைந்திடும். பொருந்துகின்ற உத்தியால் அறிந்து தானம், நாள், கணம் என்பனவற்றை அமைததாலும் அப பொருத்தம் அமையும். தானம், நாள் இரணடும் மட்டும் அமைத்தாலும் நலம் சேரும். தானப் பொருததததை நீககி, அரிய நாட் பொருத்தம். ஒன்றை மட்டும குறித்து அமைக்க வல்லவர் அவ்வாறும் அமைப்பார். உயர்ச்சியுடைய தானத்திலும், உயிர் மெய் எழுத்து ஆயின், உயிரைத் துணிந்து, அந்த உயிரைப் பற் றுக் கோடாகக் கொண்டு எண்ணுக. ஒற்றெழுத்தில் என்ன பலன்? (58)

449 உலகிலுற்றோ ரவயவங்கட் குவமைபலப் பலவே
யுவையினிற் முருட்சிபிற வாற்பிறவுஞ் சொல்ப
வலகினிறம் பேதனமா யிரதமுதல் ருசியா
லருங்கீத வாக்கியத்தா லமர்வனவு முளவாந்
தலைமையிவை கூறியது கூறாத பொருட்குச்
சாற்றுபநல் லுவமானந் தெரிந்துகவி பாடு
துலைவிலவர் செயல்கூறல் சார்வோர்ச்சார்ந் துறலாற்
றொகுத்ததெய்வ முதன்மூன்றா மியலினுறல்
சொல்வாம்

ஐந்தாவதான உவமாரூட வியப்புச் சார்வியலுக்கு ஒழிபும், இனி வரும் மூன்றியலுக்கும் கூறுவேன் எனலும் அமைகின்றன.

உலகில் பொருந்தியவர் உடலுறுப்புகளுக்கு உவமை பலப் பலவாம். அவையில், நிறம், உருட்சி போன்றவற்றாலும் பிற வற்றாலும், கூறியன அன்றி, பிறவும் உவமை கூறுவர். அளவற்ற நிற வேறுபாட்டால், இனிமை முதலிய சுவையால், அரிய இசைப் பாட்டால் பொருந்தும் உவமைகளும் உளவாம. இவற்றில் தலைமையானவையே கூறப்பட்டவை. கூறாத பொருட்களுக்குக் கூறத்தகும் நல்ல உவமைகளைத் தெரிந்து கவிதை பாடுக. தொலைதூரத்திலிருக்கும் தேவர்ச் செயல்களைக் கூறுவது சார் வோரைச் சார்ந்து சேருதலால், தொகுத்த தெய்வம் முதல் மூன்று இயலில் பொருநதுவதைக் கூறுவேன் (59)

450 கூறாத கடவுள்கதிர் பன்னிரண்டொன் றில்லாக்
குறியுருத்தி ராளட்ட வசுவிருவர் மருத்துவர்
பேறான முதலோர்கட் கறிவர்சொன்ன வணியை
பேசுசாதி யின்மரபிற் பின்னுமுண்டேற் கூறு
மாறாத குலநிலவி யப்பியலிற் பிறந்தார்
வருவரே லவர்க்கவரே கூறணிகள் கூறு
வீறான கொடிமுதல வில்லாரேற் சாதி
விறல்பிறகொண் டிசைகொடியும் வாசனமுப்புகலே

ஆறாவது இயலான விசேடவணி வியப்புச் சார்வோரியலில் கூறாத கடவுளர்க்கு அணி கூறலும், ஏழு எட்டாம் இயலுக்கு ஒழிபும் கூறப்படுகின்றன.

கூறபபடாத கடவுள ஆதித்தர் பன்னிருவர், அதில் ஒன்று குறைநத உருத்திரர்கள், அடட வசுக்கள், இருவர் மருத்துவர், முதலியவர்கட்கு அறிஞா சொன்ன அணிகளைப் பேசுக. சாதி

மரபில், வேறும் உண்டாயின கூறுக. மாறாத குலநிலவியப் பியலில் பிறந்தவர்கள் வருவாரேல அவருக்கு அவ்அறிஞர் கூறுகின்ற அணிகளைக் கூறு. பெருமையுடைய கொடி முதலியன இல்லாதவராயின், சாதிக்குரிய பெருமை, பிறவற்றைக்கொண்டு, இசைகின்ற கொடியும், வாகனமும் கூறுக.

முப்பத்து மூன்று தேவர்வகையாக இவரைப் பிங்கலம் குறிப்பிடுகின்றது.

ஆதித்தர் பன்னிருவ ரச்சுவினிக ளிருவ
ரீசர் பதினொருவ ரெண்மர் வசுக்க
ளாக முப்பத்து மூவர்தம் பெயரே (178)

தொடர்ந்து வரும் பகுதியில் பிங்கலம் இவரை விளக்குகின்றது (179-182). (60)

451 சொல்லிருபா னொன்றான மாதர்கட்கு முறையே
தேரருமீன் கொக்கிபபித்தந் திபூகமழை சனிநோள்
நெல்லாவின் பன்மாதர் கண்டநந்து கரும்பு
நீண்மூங்கி லரவுகார் வுடும்பிநது பன்றி
வல்லமருப் பேகமலந் திருப்புயத்திற் பிறக்கு
மணிமுத்த நவின்மாலை யாம்பழத்தின் மூன்று
நல்லானி மாபலா வாம்பையென லாகு
நாடுமவா முறையெழுவர்க கெழுவர்க்காஞ்
சோலை

இருபத்தொரு மாதருக்கும் உரிய பொருண்மைகள் சுட்டப்படுகின்றன.

இருபத்தொன்றான மாதருக்கு முறையே, சொல்க, தேர், அருமீன், கொக்கு, இபபி, தநதி, பூகம், மழை, சனி, நோள், நெல், ஆவின்பல, மாதா கண்டம, நநது, கரும்பு, நீணட மூங்கில் அரவு, கார், உடும்பு, இநது, பனறியின வலிமையுடைய கொம்பு, கமலம, திருவின் புயததில பிறக்கும மணி, முத்துள்ள மாலை என்பனவாம். பழததில மூனறு நல்ல கனி, மா, பலா, வாழை எனல ஆகும. கூறப்பட்டவருக்கு இவை முறையே ஆகும். எழுவர்க் கெழுவாக்காம் சோலை.

இருபத்தொருவர் மாதர் எவர் என்பதும் அவர்க்குக் கூறப்படும இம் மேற்கண்ட பொருட்களின் இயைபும தெரியவின்றி யமைகின்றன. (61)

452 அன்னநடைத் திருவொருத்தி யப புயங்கைப் பெறுவா
ளன்னவாய்த் திருவொருத்தி யணிகுவளை யேந்து
மன்னமொழி திருவொருத்தி யல்லியெடுத் துறைவா
ளன்னகை திருவொருத்தி யமுதகுட மேந்து
மன்னவெயிற் றொருதிருவாள் சங்கேந்துஞ் சங்கம
மாவாயா ளொருதிருவாள் சக்கரத்தைத் தாங்கு
மன்னவேயாத் திருவொருத்தி கரும்பியாழ் சுமக்கு
மருங்கிளியேந் துவளொருவி யாழேவரு மெடுப்பார்

அம்மகளிர் கையில் ஏந்தும் பொருட்கள் கூறப்படுகின்றன.

அன்னம் போன்ற நடையுடைய திருமகள் ஒருத்தி, கையில் தாமரை தாங்குவாள். அத் தாமரை போன்ற வாயினையுடைய ஒரு திருமகள் அழகிய குவளை ஏந்துவாள். அத்தகைய இனிய மொழியுடைய திரு ஒருத்தி அல்லிமலர் தாங்கி அமைவாள். அதனைப் போன்ற நகையையுடைய திருவொருத்தி அமுதகுடம் ஏந்துவாள். அதனை ஒத்த எயிறுடைய ஒரு திருமகள் சங்கு ஏந்துவாள். கூடுகின்ற அழகிய வாயுடைய ஒரு திருமகள் சக்கரம் தாஙகுவாள். அததகைய அழகு செய்யாத் திருஒருத்தி கரும்புயாழ் சுமப்பாள். ஆரிய கிளி யேந்துவாள் ஒருத்தி. எல்லோரும் யாழ் எடுப்பர். (62)

453 அரிதுடையிற் பிறந்தவுறு வசிகாந்த ளேந்து
மக்கினிதன் சுதைசுவா காமுத்த மாலை
புரிவர்யமன் முதலான வைவர்மனை யவர்கள்
பொற்குயின்மான் மீனிலவு நிதியிரண்டுந் தரிப்பார்
தரிகொளபுரந் தரனமனைவி கற்பகப்பூ மாலை
சயந்தன்மனைபவளமுறுங்கண்ணிகையிற்றரிப்பாள்
பரைபசிய கிளிவாணி யன்னமதன் மனைவி
பசுங்குல்லைதரிப்படன்மி தரிப்பள்புன்னை யரும்பே

கடவுட் பெண்டிர் சிலருக்குரிய கையில் ஏநதும் பொருள், மாலை போன்றன கூறப்படுகின்றன.

நாராயண முனிவர் என்பவரின் தொடையில்பிறந்த ஊர்வசி காந்தள் மலர் ஏந்துவாள். அக்கினியின் மனைவியரான சுதையும் சுவாகா தேவியும் முத்துமாலை புனைவர். யமன் முதலிய ஐவர் மனைவியர் பொற்குயில், மான, மீன், நிலவு, இரண்டு நிதிகள் என்பன அணிவர். இந்திரனின் மனைவி கற்பகப்பூ

மாலை அணிவாள். சயந்தன் மனைவி பவளம் பொருந்திய மாலை கையில தரிப்பாள். பலரைக்குப் பச்சைக் கிளி, வாணிக்கு அன்னம்; மன்மதன் மனைவி பசிய துளசிமாலை தரிப்பாள். தருமிமாது புன்னைமொட்டு அணிவாள். (63)

454 புன்னையரும் பென்னுநகை யரம்பையர்க ளெல்லாம்
பொற்றிவவி யாழெடுப்பர் கற்பகமும் பொறுப்பர்
மன்னுபாற் கடல்வதனத் தசுரமா மாதர்
மல்லிகையேந் திக்குலவ சோகுநிழ லுறுவார்
பன்னரம்பை யர்கடோழி யரைமுல்லை யென்பார்
பாடையா னசுரமங்கை மார்மல்லி யென்பார்
துன்னிறையை யரம்பையர்கள் கரவீர மென்பார்
சொல்லசுர மாதர்ச்ச விந்துவெனப் புகல்வார்

அரம்பையர், அசுரமாதர்க்குரிய அணியும், பயன் கொள்ளும் சொற்களும் கூறப்படுகின்றன.

புன்னை அரும்பு எனக் கூறத்தகும் நகையையுடைய அரம்பையர்கள் எல்லாம் வலிந்துகட்டப்பட்டபொன்யாழ் தாங்குவர். கற்பக மரநிழலில் தங்குவர் நிலைபெற்ற பாற்கடல் போன்ற முகத்தினரான அசுரப் பெண்டிர், மல்லிகை மலர் தாங்கி, பிரகாசிக்கின்ற அசோக மரநிழலில் தங்குவர். அரம்பையர் தம் தோழியரை முல்லை என்பர்; மொழியால் வேறுபட்ட அசுர மங்கையா மல்லி என்பர்; நெருங்குகின்ற இறைவனை அரம்பையர் கரவீரம் (அலரிச் செடி) என்பர்; அசுர மாதர் சவிந்து (சமித்து = கஞ்சாச் செடி) எனக் கூறுவர்.

புராண மாதர் வழங்கிய வட மொழியின் சில சொல், பயன்பாடுகளைத் தமிழ்ப்படுத்தும் ஆசிரியர் நோக்கு ஓ்ருப புலபபடுகின்றது. பதினெண் புராணம் போன்று வடமொழி வழித் தமிழ்ப் புகுந்த கதை முதலியவற்றை முழுமையாகப புரிந்து கொள்ள உதவும் பாங்கில் இவை தரப்பட்டிருக்கலாம். (64)

455 பேசுதற்குக் கொடையென்றும் வாவென்ன மோவென் றும்
பேயென்றல் போவென்றல் மிருத்தல்பிச் சென்று
மாசில்நட வென்பதற்குச் சற்பவென்று மிறக்கென்
பதற்குவளை யென்றுமனை தனையிந்து வென் றுங்
கூசுவதைக் கூட்டென்று மாசையையெட் டென் றுங்
கூடன்முதற் பிறவையே குறிஞ்சிமுத லைந்தாய்
மாசிலாவு ரையென்றும் திறன்மைத்து வென்றும்
வாய்நயத்த றுப்பென்றும் வழங்குமையர் பாடை

ஐயர் பாஷையில் வழங்கும் சொல்நிலை சில உணர்த்தப்படு கின்றன.

பேசுவதற்குக கொடை என்றும், வா என்று கூறுவதற்கு மோ என்றும், பேய் என்பதற்கும் போ என்பதற்கும் நிரனிறையே மிருத்து என்றும் பிச்சு என்றும், குற்றம் இல்லாத நட என்பதற் குச் சற்ப என்றும், இறக்கு என்பதற்கு வளை என்றும், மனைவியை இந்து என்றும்,கூசுவதைக் கூட்டு என்றும், ஆசையை எட்டு என்றும், கூடல் முதலிய பிறவற்றைக் குறிஞ்சி முதல் ஐந்தாக மாசுஇலலா உ ர என்றும், திறன் என்பதனை மைந்து என்றும், வாய் நயந்து உண்பதனைத் துப்பு என்றும் ஐயர் மொழி வழஙகும்.

ஐயர் மொழி என்றதால், சிறந்தமொழி வடமொழி எனும் எண்ணம் இவர் கொண்டதாகப் புலப்படுகின்றது. தமிழருக்கே உரிய குறிஞ்சி முதலிய, உரிப்பொருளைக் குறியீடாக்கியுணர்த் தும் நிலையை இவர் மாற்றிக் கருதுவது வேறுபாடாக அமை கின்றது இலக்கியத்தில் பயிலும் திரி-திசைச் சொற்கள் பற்றிய எண்ணத் தொடர்புடன் இது அமைந்தது போலும். (65)

456 தேவபாடை யினெழுதது வலஞ்சுழிக்கு மசுர
தேசபாடை யினெழுத்தே யிடஞ்சுழிக்கு மிருந்தே
பூவுலகிற் றேவபா டைக்குமறு தலையாப்
பூந்தமிழென் றொருபெயரிட் டரியமறை படித்த
நாவாலி தனைப்புகட்டிக் கும்பமுனி செய்தா
னாட்டினிற்செந் தமிழ்நாடு பாண்டியநன் னாடு
கூவுகொடுந் தமிழ்நாடு தெனபாண்டி குட்டங்
குடங்கற்கா வெண்பூழி பன்றியரு வாவே

தேவபாடை, அசுர பாடைகளின் எழுத்து நிலையும், தமிழ் செய்யப்பட்டமையும, செந்தமிழ் நாடும், கொடுந்தமிழ் நாட்டுப் பகுதி சிலவும் கூறப்படுகின்றன.

தேவாமொழியின எழுத்து வலம்சுழிககும். அசுரதேச மொழியின் எழுதது இடப்பக்கமாகச் சுழித்து எழுதப்படும் மண்ணுலகில், தேவாமொழிக்கு மறுதலையாகப் பூந்தமிழ் என்று ஒருபெயர் அளித்து, அரிய மறைகளைக் கற்ற கலைமகளைக் கற்பித்து, அகத்தியன் செய்தான்.

அந்த நாட்டில், செந்தமிழ் நாடு, பாண்டிய நலநாடாம்; சொல்லப்படும் கொடுநதமிழ நாடு, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வெண்பூழி, அருவா.

தமிழெழுததின் வரிவடிவம் பற்றிய பல எண்ணங்களும் ஆய்வுகளும் நிகழ்ந்து வந்தபோதும், இங்கமைவது போனற, வலஞ்சுழித்தல் (Clock-wise), இடஞ்சுழித்தல் (Anti Clock-wise) எனும் எண்ணம் முன்பு அமைந்ததாகத் தெரியவில்லை. 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' (14) என்பது போன்று தொல் காப்பியம் முதலே வரிவடிவம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓரளவு விரிவாக வடிவ ஆய்வு செய்தவர் தண்டபாணி சுவாமிகள். அறுவகை இலக்கண எழுத்திலக்கணப் பகுதி இத்தகு வரிவடிவச் செய்திகள் சிலவற்றைத் தருகினறது (7–35).

பொதுவாக எழுத்திலக்கணங்கள் கூறும், தமிழமொழி வழங்கும் நாடுபற்றிய எண்ணங்களைப் பிரபந்த ஆய்வு செய்யும் நூல் தருவது புதுமையாம். (66)

457 புகன்றவரு வாவடக்கு சீதமலா ட துவே
புனனாடு பன்னிரண்டா மத்தமிழ்முன னிலைய
லகன்றநெடுங் கணக்கிலுயிர் பனிரெண்டாய்ப் பதினெட்
டாயுடம்பு நிலத்துநிற்கு மெய்யுயிரென் றுரைத்த
லுகந்தவுயிர் மெய்போன்ற தாலன்றோ வவையு
மொலிவகையான் மாத்திரையா
னுரைப்பவென்றார் பெரியோர்
தகுந்தமிழின் சிறப்பெழுத்தால் வரும்பொருளைப்
பொதுவாய்ச்
சாற்றிமேலிந் தலாவாணி சாற்றவிது செய்தான்

கொடுந்தமிழ் நாட்டின பிறபகுதியும், தமிழ் நெடுங்கணககுப் பற்றிய சில எண்ணமும் அமைகின்றன.

கூறிய அருவா வடதலை, சீதம், மலாடம், புனலநாடு எனப் பன்னிரண்டாம். அந்தத் தமிழின்முன் நிலையல் அகன்ற நெடுங் கணக்கில் உயிர் பன்னிரண்டாய், மெய்பதினெட்டாக நிலைத்து நிற்கும். மெய் என்றும் உயிர் என்றும் பெயர் உரைத்தது விரும்பத் தக்க உயிர்போன்றும் மெய்போன்றும் அவை அமைந்ததாலே யாம். அவற்றையும் ஒலிவகைப் பாட்டாலும் மாத்திரை வேறு பாட்டாலும் உரைப்பர் என்றார் பெரியோர். தகைமையுடைய தமிழின் சிறப்பெழுத்தால் வரும் பொருளைப் பொதுவாகக் கூறி, மேலும், கலைமகள கூற இதனைச் செய்தான்.

செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு பற்றிய எண்ணங்கள் பண்டை இலக்கண நூல்கள் முதலே அமைந்து வருகின்றன. தொல்காப்பியச் சொல்லதிகாரம் எச்சவியலில் செந்தமிழ் சேர் பன்னிருநிலம் என்ற குறிப்பினைத் திசைச்சொல்பற்றிப் பேசும் போது தருகின்றது(883). உரையாசிரியர் இவற்றைப் பலவிதமாக விளக்குவர். செந்தமிழ் நிலம் என்பது வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகும். அதைச் சேர்ந்த பன்னிரு நிலம், பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்கா நாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலை என்பன நச்சினார்க்கினியர் இவற்றையுஞ் சூழ, சிங்களமும் பழந்தீவும் கொல்லமும் கூபமும் கொங்கணமும் துளுவும் குடகமும் கருநடமும் கூடமும் வடுகும் தெலுங்கும் கலிங்கமும் என வேறு பன்னிரண்டு நாடுகள் கூறுவர். (67)

458 மிடைந்தமஃகான் முப்புள்ளிக குறுககங்கா லரையே
மேலொற்றே யிகரவுக ரககுறுக்க மாய்த
மடைந்தவொன்றே குறிலையெளக் குறுமையொற்றளபே
யணியிரண்டு நெட்டெழுத்து மூன்றுயிரி னளபே
தொடர்ந்தமாத் திரையாகுங் காரணத்தாற் பிறந்து
தொகைபெற்று நின்றனவா லிவைவருக்க நெறியே
யுடங்கொ டெய்வ வணக்கமுற அ ஆ இ
ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔவென்றாம் பின்னே

எழுத்துகட்கு மாத்திரை கூறப்படுகின்றது.

செறிந்த, மகரக்குறுக்கம் ஆய்தக் குறுக்கம் என்பன கால் மாத்திரையின, அரை மாத்திரை அளவின மேல ஒற்றுப் பெறும். மெய்யும் இகர உகரக் குறுக்கமும் ஆய்தமுமாம்; ஒருமாத்திரை அளவு அடைவன குறில், ஐகார ஔகாரக் குறுக்கம், ஒற்றளபு எனப; ஆகிய இருமாத்திரையினை நெட்டெழுத்தாம்; மூன்று மாத்திரை உயிரளபெடைக்கு ஆகும். இவ்வாறு தொடர்ந்தன மாத்திரை அளவுகள். காரணத்தால் பிறந்து, தொகைபெற்று நின்றமையால் இவை வருக்க நெறியாக உடன் கொள்ளத்தக்க தெய்வ வணக்கம் பொருந்த, அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என ஒன்றன்பின் ஒன்றாகக் கூறப்பட்டன.

எழுத்து, மாத்திரை பற்றிய எண்ணங்கள் தொல்காப்பியம் போன்ற பல நூல்களிலும் அமைவதே. பொதுவாக எழுத்திலக்கணங்கள் விரிவாகப் பேசும் இச்செய்தியைப் பாட்டியல் இயல்புடைய பிரபந்தத் திரட்டுக் கூறுவது புதுமை. (68)

459 அமருமஃ கேனம்மது பனிரெண்டா முயிரு
மடுத்தேறு மெய்வருக்கங் கஙசஞுட ணதந
பமயரல வளழறன வெனலாகு முயிரும
பகர்மெய்யுங் கூடுமுயிர் மெய்யெழுத்தே யிருநூற்
றிமிழ்பதினா றாமவையுண் முதற்ககரன முறையே
யியம்புவா முயிர்முறையே கக்காகிக் கீயே
கமையிலகுக் கூக்கெக்கேக் கைக்கொகக்கோக்
கௌவென்றாம்
காட்டொற்றாய்ப் பின்னேயிக் கென்றுகமமெய்
நிற்கும்

தமிழ் நெடுங்கணக்கின் எழுத்து வரிசை கூறத்தொடங்குகின்றது.

அமரும் அஃகேனம் என்பது, பன்னிரண்டாம உயிரை அடுத்து அமையும்; மெய் வருக்கம், கங சஞ டண தநபம யரலவ ளழ றன எனல் ஆகும். உயிரும் மெய்யும இணைந்த உயிர் மெய் எழுத்துகள் இருநூற்றுப் பதினாறாம் அவையுள், ககரம் முதல் முறையே கூறுவோம், உயிர் ஏறிய ககரம் முறையே கக கிகீ குகூ கெகே கை கொகோ கௌ என்று ஆகும்; காட்டுகின்ற ஒற்றாய்ப் பின்பு 'க்' என்று ககர மெய் நிற்கும்.

நெடுங்கணக்கின் எழுத்துமுறை 'யரலவழள' என அமைவது பொதுவான போதும், 'வளழ' என மாற்றியமைக்கும் பாங்கினையே இந்நூலாசிரியர் ஏற்புடையதாகக் கொள்கிறார் என்பது தெரிகிறது. பிறிதொரு இடத்தில் இம் முறைநிலைகளைச் சுட்டுகின்றார் (466) (69)

460 மற்றவைக்கு மிம்முறையா மகரவுயிர் மெய்யுள்
வரிற்றனுரு வாய்நின்று பிறவுயிர்க்குப் பிறவாய்ச்
சொற்றவுயி ருருவையொழித் துயிரளவே யாகித்
தோன்றும்வரி யெவறெழுத்துச் சாரியைநா வாலே
யற்றைறவே லையினுமொற் றொலிமுன்னா மன்றோ
வவைவிகற்ப மெண்பெயரே முறைபிறப்பு ரூப
முற்றுமாத் திரைமுதலே யிடையீறே போலி
முதிர்பத்தாங் கூறியவை தவிர்ந்துமற்ற வறியே

உயிர்மெய்களின் வடிவநிலையும், அளவும், எழுத்துச் சாரியையும், எழுத்தை ஒலிக்கும் நிலையும், எழுத்திலக்கண வகையும் கூறப் படுகின்றது.

மற்ற எழுத்துகளுக்கும இந்த (ககர) முறையே ஆகும். அகர உயிர் மெய்யில் வருமபோது, தன உருவாகி நின்று, பிற உயிர் களுக்குப் பிறஉருவாகி, சொன்ன உயிரின் உருவினை ஒழித்து; உயிரின அளவே ஆகித தோனறும, அவர் 'இ' என்று எழுத்துச் சாரியையின் நாவால கூறாத நேரத்திலும், ஒற்றின் முன் அது ஒலிக்கும. அவ் எழுததின் விகற்பம, எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாததிரை, முதல், இடை, ஈறு, போலி என முதிர்ந்த பத்தாம். கூறியனவற்றை நீககிப் பிறவற்றை அறிக.

நன்னூல், எழுத்திலககண விளக்சம் கூறும் தொடக்கமாக, பனனிரு எழுத்திலககண வகையைச் சுட்டுவதன் தொடர்ச்சி இங்கு அமைகின்றது.

எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை
முதல் றிடைநிலை போலி எனறா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே(57) (70)

461 தெரியாது மயங்காமன் மெய்களுககு முயிர்மெயத்
தேற்றெகர ஒகரக்கு முயிரான விவைக்கும
புரியுமாத் திரைக்குறுக்க வெழுத்தான வெவைக்கும்
புள்ளிமேற்பெறல்வேணடுந் தொல்லைவடிவெல்லா
மரியதமிழ் வரிடபம யழவைந்து மிடச்சுற்
றல்லவெழு துவதுநப்பா யொழுதுகிறா ருலகிற்
பரியகால் வாங்குவது தொட்டெழுதல் வேண்டும்
பணியகர வுயிர்மெய்க்கு மட்டுமைந்தி னுக்கே

புள்ளி பெறும் எழுத்து நிலைகளும், தமிழில் இடச்சுற்றெழுத்தும், கால்வாங்குவதை எழுதும் முறையும் சுட்டப்படுகின்றன.

தெரியாதும் மயங்காமலும், மெய்யெழுத்துகளும், உயிர் மெய்யில் எகர ஒகரங்களுக்கும், அவ் உயிர்களுக்கும், மாத்திரை குறுகிவரும் எல்லா எழுத்துக்கும், மேலே புள்ளி பெறுதல் வேண்டும். பழைய வடிவமுடையன எல்லா அரிய தமிழ வரிவடி வங்களும்; டபமயழ என்னும் ஐந்து எழுத்தும் இடச்சுற்று அல்ல; அவ்வாறு எழுதுவது, தப்பாக எழுதுகின்றனர் உலகில்,

திண்ணிய, கால் வாங்குவது (ா), எழுத்தை அண்டி எழுதப்படல் வேண்டும்; யகர உயிர் மெய்யில் ஐந்துக்கு மட்டும் இந்நிலை கடைப்பிடித்தல் வேண்டும்.

ஒற்றுடன், ஏகர ஓகரமும் ஒற்றும் பெறும் பழங்கருத்தே இந்நூலாசிரியருக்கு உடன்பாடாக அமைகின்றது. வரிவடிவ வேறுபடுத்துதலை இவர் வரவேற்பதாகத் தெரியவில்லை. (71)

462 புரியுமிடம் புரிபார்த்த றங்கடெய்வ மயக்கிற்
புகல்பிறப்பின் மாறுபா டியன்றன வியன்று
மருவுலக மெழுதுவதிற் பிறவுயிர்கள் வருதல்
வழிபார்த்தல் காட்டுதலா லிடம்புரியன் றன்றே
குருவுலகிற் றெய்வமெல்லாங் கணபதியே யாகுங்
கூறவனை மனநினையா துரைத்தநெடுங் கணக்கு
வரியிலுயர் வோரெழுத்தில் வலம்புரியி லாமன்
மறைபடைத்தோன் படைப்பினுமே மயங்கினவும் பலவே

இடம்புரியாகவும் வலம்புரியாகவும் அமைக்குமெழுதுநிலை பற்றிய எண்ணங்கள் அமைகின்றன.

புரியும் இடம்புரி பார்த்தல், தங்கள் தெய்வம் மயக்கில், கூறிய பிறப்பில் மாறுபாடு இயன்றவை ஏற்பட்டு, உலகம் எழுதுவதில், பிற உயிர்கள் வருதல், வழிபார்த்தல், காட்டுதல் என்பதால் இடம்புரி இல்லை. குரு உலகில், தெய்வம் எல்லாம் கணபதியே ஆகும். கூறிய அவனை மனத்தில் நினையாது உரைத்த நெடுங்கணக்கு வரியில், உயர்வோர் எழுத்தில், வலம்புரி இல்லாமல் அயன் படைப்பில் மயங்கினவும் பல. (72)

463 அம்மயக்கங் கும்பமுனி யறிந்திருந்து மவனை
யகமயக்கி யைந்தெழுத்து விட்டதுபின் னறிந்துஞ்
செம்மைபெற மாறியெழு திடவுரைத்தா னில்லா
திவ்வுலகோர் வழக்காகப் போயதுகண் டாயோ
வம்மைபெறு முதனூற்கு வழிநூலசெய வோரே
யப்பொருளிற துணிவதையே வேண்டுவர்வேண் டாரே
கோமமைபெற விவனையறி யாதுபொருள் கிடக்குங்
கூறுமிவை தாமுமந்த நெறியிற்கிடந் தனவே

வலம்புரி-இடம்புரி நெறிகள் வழக்காகிப் போனமாறு உரைக்கின்றது.

மேற்குறிப்பிட்ட மயக்கத்தை அகத்திய முனிவர் அறிந்திருந்த போதும், அவனை முற்றிலும் மயக்கி ஐந்தெழுத்துகள் வலம்புரியாக அன்றி இடம்புரியாக விடப்பட்டதைப் பின்பு அறிந்தும், செம்மை பெறும் வண்ணம் மாற்றி எழுதிடக் கூறவில்லை; அதுவே இவ்வுலகத்தினர் வழக்கு ஆகிவிட்டது. முதல் நூலுக்கு வழிநூல் செய்கின்றவர்கள், அந்நூல் துணிகின்ற பொருளை மட்டுமே வேண்டுவார்; பிறவற்றை வேண்ட மாட்டார். அழகு பெற இவனை அறியாது கிடக்கும் பொருளை, தாமும் அந்த நெறியிற் கிடந்தவண்ணமே கூறுவர்.

ஐந்தெழுத்து என்பன, முன்பாடலில் (461) சுட்டப்பட்ட, டபமயழ என்பனவாம். முதனூலின் வழி நிற்பதே வழிநூலின் இயல்பு என்பதைத் தொல்காப்பிய முதலியன சுட்டுகின்றன (1595). (73)

464 அகரவுயி ரொற்றேயா மாகாரம் ரவ்வா
மடுமுயிர்க ளொற்றின்மேற் பாதியுறு மையுமே
யுகரவூ காரமொற்றில வளைவுகுற்றுப் பாதி
யுருப்பிறவாய் நிற்கும் எஏக கொம்புபெற்றே நிற்கு
மொகரவோ காரங்கொம் பொடுரவ்வும் பெறுமே
யோங்கியவௌக் கொமபொடுளப் பெறுமிவையிற் றிரிபு
புகலுவோ மாகார ணுறுனு மூன்றும
புகன்றிடுரத் தவிர்ந்துநிற்கும் இஈச்சொன்னெறியே

465 ஈகாரஞ் சுழிமேவு முகரத்தில் வளைத
லிசைகுடுமு ருளுழுவாஞ் சுவுபுயுவு வைந்தும்
வாகான கீழ்க்குறறும ஞுணுதுநுலு றுனுவே
வாங்குமேற் குற்றுறூகா ரத்திற்கூ ஹூஹூத்
தூகார நூலூறூ னூக்குற்றுநேர் வாங்குஞ்
சுழிககுமவலம நூகுடூ பூமூயூ ருவூ
ளூகார ழூகாரஞ் சுழியுமேற் பொருநது
மொற்றிலையே பாதிணைலை ளேனையொழிந் துண்டோ

466 உற்றநா லையும்வம் மேலுமுற்று நிற்கும்
ஒஔவில் ணறன ஒஔரவ்வை யொழிக்கும்
பெற்றவிலக் கணந்தவிர்ந்து சிலவுலக நடையிற்
பிறழ்ந்துநிற்கு நன்மையன்று சிறப்பெழுத்து றுறன

வற்றபின்னே முறைக்கிடந்த ழவ்வை ளவ்வின்
முன்னாவாக் கினாருலகத்தா ரானாலு நன்றே
சுற்றவாவீச் சுழியுமு வௌப்பின் ளவ்வுந்
தொடருமுயிர் எஏஒஓ வொன்றாய்த் தோன்றும்

உயிர்கள், மெய்சார்ந்து, உயிர்மெய் வடிவம் பெறும்போது ஏற்படும் வடிவ மாறுபாடுகள் சுட்டப்படுகின்றன.

அகர உயிர் ஏறும் போது, உயிர்மெய்யின் வடிவம், மெய்யின் வடிவமேயாம்; ஆகாரம் 'ா' என நிற்கும; அடுத்து வரும் உயிர்கள (இ, ஈ,) ஒற்றின் மேல் பாதி சேரும்; ஐயும் அத்தகைய தாம்; உகர ஊகாரம், ஒற்றில் வளைவு, சுற்று, என்பன பெற்று பாதி உருவம் வேறுபட்டு நிற்கும். எகர ஏகாரம் கொம்பு பெற்றே நிற்கும்; ஒகர ஓகாரம் அத்தகைய கொம்புடன் 'ா' என்பதும் பெறும்; ஔகாரம், கொம்போடு 'ள' என்பதும் அடையப் பெறும்; இவை பொது வடிவாக, இவற்றில் வேறுபட்ட திரிபு வடிவங்களையும் கூறுவேன். ஆகாரத்தில், ணா, றா, னா எனும் மூன்றும் ஏற்கெனவே கூறிய 'ா' அடையாளம் நீங்கி நிற்கும்;

ஈகாரம், சுழி மேவும்; உகரத்தில், வளைதல் வடிவம் இசைவது குடுமு ருளுழு என்பனவாம்; சுவுபுயுவு என்ற ஐந்தும் ஒழுங்கான கீழ்க்குற்றுப் பெறும்; ஙு, ஞு துநு லுறு னு என்பன மேற்குற்று வாங்கும், ஊகாரத்தில், கூஞூஙூ தூகாரம் நூலூறூனூ என்பன குற்றுநேர்வாங்கும்; வலம் சுழிக்கும் நூகுடூ பூமூயூ ரூவூ, ளூகாரமும் ழூகாரமும் மேலே சுழி பொருந்துவ; ஒற்றில் ஐகாரம் என்பது பாதியாக அமைதல் ணை லை ளை னை என்னும் எழுத்துகள் ஒழிந்து உண்டோ;

உற்ற நான்கு ஐகாரமும் வம் மேலும் சேர்ந்து நிறகும் (?) ஒகர ஓகாரங்களில், ண ற ன என்பனவற்றின் ஒகர ஓகாரம், 'ா' என்பதை நீக்கும் (ணொ ணோ; றொ றோ, னொ னோ) பெற்ற இலக்கணம் தவிர்ந்து சில எழுத்துகள் உலக நடையில் விலகி நிற்கும்; அது நன்மை அன்று. சிறப்பெழுத்துகளானவை ழ ற ன ; அவற்றில், பின்முறையில கிடந்த ழ கரத்தை ளகரத்தின் முன்பாக ஆக்கினர் இவ்வுலகத்தினர்; ஆயினும் அது நன்றாம். சுற்ற, ஆ, ஈ சுழியும், ஊ, ஔ பின்பு 'ள' என்பதும் தொடரும்; உயிர்களில் எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும் ஒரே தன்மையின வாய்த் தோன்றும்.

465-ஆம் பாடலில், ஊகாரம் குற்றுநேர் வாங்குவதனைக் கூறும் போது, 'னூலூ தூ நூலூறூ னூ' என்பதில் னூ லூ என்பன இருமுறை அமைவதனைத் தவிர்க்க, முதல் வருவதனை ஞூனூ எனக் கொள்ளல் பொருந்தும் என்பது எண்ணம். ஞூகாரம் விடப்பட்டுள்ளது. கு என்பது வடிவு எனப்பட்ட போதும் ஏட்டில் கூ என்பது பயன்படல், நகல் செய்தவருக்குரிய வேறுபாடாகலாம். குறில் உகரம் சுட்டப்படும் போது, கீழ்க்குற்றும் பட்டியலில் நு விடப்பட்டுள்ளது. ஆயின் 'சுவுபுயுவு' ஐந்தும் என்பதனைச் 'சுநுபுயுவு' எனக் கொள்ளின் செவ்வை யாகும். (74-76)

467 வல்லெழுத்தே யாதலிடை யிடைசுலவை விடுத்து
மருங்கினுமெ யெழுத்தையுற்றுநிற்பதினா லுரத்திற்
புல்லுற்பொ ருந்துமெல்லி னங்கொடிய விறைக்கீழ்ப்
புகுங்குடிபோ றபெலந்துன் றலான்மூக்கிற்பெறலாற்
சொல்லலா மிடையினமே யாதல்வல் லினக்குந்
தொகுத்தமெல்லினக்குமிடை நின்றதினான்மூக்கிற்
கல்லலுறா வுரக்குநடுக் கண்டமுறு மதனா
லமருமென்பர் குறினெடிலும் பிறவுமக்கா ரணமே

மெய்யெழுத்துகளில் மூவினத்தின் வேறுபாடும், குறில் நெடில் போன்றனவற்றின் காரணமும் கூறப்படுகின்றன.

வல்லின எழுத்துகள், என்பன, இடையிடையே காற்றை விடுத்து, அருகிலும் மெய்யெழுத்தைச் சேர்ந்து நிற்பதினால், நெஞ்சத்தில் சேர்வதினால் பொருந்துகின்றன. மெல்லினம், கொடுங்கோல் அரசனின் ஆட்சியின் கீழ் அமைகின்ற குடிகள் போல வலிமை குறைவதாலும் மூக்கில் பெறப்படுவதாலும் சொல்லலாம்; இடையினம், வல்லினத்திற்கும் கூறிய மெல்லினத் திற்கும் இடையே நின்றதால், மூக்கினுக்குத் துன்பம் சேர்க்காது மார்புக்கும் நடுவே கழுத்தில் பொருந்தும். அதனால் பெயர் பொருந்தும் என்பர். குறில் நெடில் என்பனவும் பிறவும் அத்தகு காரணம் பற்றியே அமையும்.

'மருங்கினுமே யெழுத்தையுற்று', க் முதலியன ஒலியின்றி யமைவதால் மெய்யெழுத்து எனும் நிலையை ஐயுறும்படி யமையும் என்பதைச் சுட்டுவதாகவும் கொள்ளலாம்.

'மருங்கினுமே எழுத்தையுற்று', என அருகில் உயிர் சேர்ந்தே ஒலிக்கும் நிலையும் கருதப் பட்டிருக்கலாம்.

சுலவை, காற்றைக் குறிக்கின்றது. காற்று புறத்தே போகாத நிலையே வல்லின மெய்கட்கு உரியது எனினும், அப்போது ஒலி யினமையால், இடையிடையே காற்றை விடலின் தேவை பற்றி, 'இடையிடை சுலவை விடுத்து' எனப்பட்டிருக்கலாம்.

எழுத்து இலக்கணங்களின் பிறப்பியல் பகுதிகள் இதனை யொத்த செய்திகளை விளக்குகின்றன. (77)

468 தசவிதத்தி லுறுசந்துப் பொருட்குப்புற னடைதான்
சாற்றுதுமோ திமக்குச்சார் வன்பகந்தா ராவே
யிசைமயிற்குக் கோழிகிளிக் கச்சாதிக் கிளியே
யெழிலிக்குப் புகைசோலை முகில்களாம் பூவைக்
கசையுமா டப்புறவு பெரும்புறவாம் பாங்கிக்
கரம்பைமற்றோர் குயிற்குக்கா கங்கரிச்சான் வாலி
வசிநெஞ்சிற் குடம்பான்மாத் தென்றல்வான் மாரன்
மலையமளிக் கச்சாதி வகையெல்லாம் பகர்வார்

வேறு

469 இந்தவிதஞ் சார்வுறு மிடமுண்டே லெப்பாவுஞ்
சந்தவிதத் திற்கூறுவர் நூல்செய் தக்கோரே
யந்தவிதத் திற்கூறா தொழிவாரறி கில்லா
பந்தமுறிந் நூல்கற்றீர் பெற்றீர் பகாவாயே

பத்து எனக் கூறிய தூதுப் பொருட்களுக்குப் புறனடையும் இந் நூல் முறையைப் பின்பற்றி மொழிதலும் சுட்டப்படுகின்றன.

பத்து விதமாகப் பொருந்துகின்ற சந்து கூறும் பொருட் களுக்குப் புறனடை கூறுவேன். ஓதிமத்திற்கு வன்பகம் தாரா என்பன; மயிலுக்குக் கோழியைக் கூறு; கிளிக்கு அந்த சாதியின் பிறகிளிகள்; எழிலிக்குப் புகை, சோலைமுகில்கள் என்பனவாம்; பூவைக்கு அசைகின்ற மாடப்புறவு, பெரும்புறவு என்பனவாம். பாங்கிக்கு அரம்பை, பிறர் என்போர்; குயிலுக்குக் காகம், கரிச் சான், வாலி; தேற்றுகின்ற நெஞ்சினுக்கு, உடம்பு, ஆன்மா என்பன; தென்றலுக்கு வானமும் மாரனின் மலையமாருதமும் ஆகும்; வண்டினுக்கு அந்தச் சாதியின் அறுகால் பறவை வகை எல்லாம் கூறுவர்,

இந்த விதமாகச் சாரும் இடம் உண்டாயின், எல்லாப் பாவும், சந்தவிதத்தில் கூறுவர், நூல் செய்யுமா தகைமையோர். அந்த விதமாகக் கூறாது விடுவர் அறியாதவர். அழகு பொருந்திய இநத நூலைக் கற்றீர், நூல் சொல்லும் வாய் பெற்றீர்.

சந்து செய்யும் நிலை தூதுப் பொருட்களுக்கு அமைவதால், 'சந்தவிதம்' எனத் தூதுவகைகளைக் குறிப்பதாகத் தெரிகின்றது. இலக்கியம் எனும் பொருளில் பா' என்பதனைக் குறிப்பிடுகின்றார் போலும். (78-79)

வேறு

470 உயர்தெய்வ வாயினின்று கவிஞன்போற் றுகமுன்
புறாதுதிரு முகமவற்கு மோரிறைக்குங் கடவு
ளியவாணன் முன்புதவிப் புலவன்றிரு முகத்தி
லேற்றுதித்து நிற்பழித்தா யென்குலத்தின் வளமை
பயிலுவன் கேளெனப்பகர்ந்து நினதுகுறை நிரம்பப்
பார்த்திபனுண் டென்றவன்றன் சரித்திரஞ்சொற் றனவாய்க்
குயிலிவா ணன்கூறல் திருமுகவி லாசங்
குற்றமிந்த நெறிதப்பிக் கூறலுல கிடத்தே

திருமுக விலாசம் எனும் பிரபந்தம் விளக்கப்படுகின்றது.

உயர்வுடைய தெய்வத்தின் வாயிலிருந்து, கவிஞன் போற்ற, முன்பு தோன்றாது, திருமுகம் ஒன்றனை அவனுக்கும் அரசனுக்கும், கடவுள், அப்புலவன் முன்பு அளிக்கப் புலவன் அம்மடலை ஏற்றுத் துதித்து, நிற்றலை நீக்கினாய், என் குலத்தின் வண்மையைக் கூறுவேன் கேள் எனக்கூறி, நின் குறை நீங்க அரசன் உண்டு என்று அவ்வரசன் வரலாற்றைக் கூறுவதாய்க் குயில் போன்ற இனிய புலவன் கூறுவது திருமுக விலாசம். இம்முறை தவறிக் கூறுவது குற்றமாம்.

சிவபிரான், பாணனார் பத்திரனார்க்கு, சேரமன்னனிடம் அளிப்பதற்குக் கொடுத்த மடல்பற்றிய செய்தி இங்கு இயைபு பற்றி நினைக்கத்தக்கது. (80)

471 கொடுப்பாரில் லாமையினாற் கோவையைக்கூ றிட்டுக்
குலவுவருக் கமபிறவாய்ப் பாவெவற்றும் புனைந்தார்
தடுப்பாரில் லாமையிற் றூதுபல வற்றைச்
சாதியறி யாமாந்தர் பலவினமேற் செய்தார்

தொடுப்பான விறைசேனை சத்துருசெயம் பவனி
சூழிருக்கை யிறையவர்கள் வரவுவினா விடையே
சடுப்பான மொழிநான்கு பாயமனை வாழ்தல்
கனவிசைய விலாசமென்று காட்டியுரைத் தாரே

கோவை, தூது பற்றிய எண்ணமும், விசையவிலாசம் எனும் பிரபந்த விளக்கமும் அமைகின்றன.

போதிய அளவு கொடையளிக்க வல்லவர் இல்லாமை காரணமாகக் கோவை எனும் இலக்கியத்தைப் பகுத்து, குலவுகின்ற வருக்கமாகவும் (வருக்கக் கோவை), பிறவாகவும் (ஒருதுறைக் கோவை), கலித்துறை அல்லாத பா எல்லாவற்றிலும் புனைந்தனர். தடுப்பதற்கு யாரும் இல்லாமையால் தூது இலக்கியம் பலவற்றை சாதி அறியாத மக்கள் பல இனங்களின்மேல் செய்தார். தந்திரமுடைய அரசனின படை, பகைவரை வெல்லுதல், பவனி செல்லல், சூழ்ச்சிபொருந்திய அவையில் இருந்தல், பல மன்னர் வரல், வினவலும் விடையளித்தலும, கடுப்பான மொழி, சாம தான பேத தண்டம் என்னும் நான்கு உபாயம், மனைவியுடன் வாழ்தல் என்பன, பெருமையுடைய விசைய விலாசம் என்று காட்டி உரைத்தனர்.

இவ்வியலின் இறுதிப்பாடல் (497), கோவையைச் சீரன் ஆசிரியத்திலும், பூதர் விருத்தத்திலும் செய்தார் எனவும், பெரியோர் இலக்கணச் செவ்வியுடன் செய்யின் ஏற்புடைத்து எனவும் உரைக்கின்றது.

இன்று வழங்கும் தூதிலக்கியங்களைப் பட்டியல் செய்து நோக்கினால்,பிரபந்தத்திரட்டு கூறும் பத்தில் ஒருசிலவழங்காமையும், இன்னும் பிறபல வழங்குவதும் புலப்படும். அன்பு, அன்னம், ஆனை, கமலம் (வனசம்), கழுதை, காக்கை, கிள்ளை (கிளி, தத்தை), சவ்வாது, செருப்பு, தமிழ், துகில், தென்றல், நெஞ்சு, நெல், பணம், பழையது, பாங்கி, பிள்ளை, புகையிலை, புலவர், பொடி, மதங்கி (விறலி), மறலி, மான், மேகம் (மாரி), வண்டு, வானவன் எனப் பல தூதாயுள்ளமையை இலக்கியம் காட்டுகின்றன, (81)

472 இறைமனைப் பிருந்துமணி யத்தாணி சோடித்
திருக்குமதி லிருக்கவெற்றி காணவுல குள்ளார்
நிறையுஞ்சா ரவைபாட லொருபெண்மய றீர்த்தே
நினையுமணம் புணர்ந்துறுதல் சமுகவிலா சமதே
நிறைவுசம முதலுவுபா யங்களினம் ஏற்றம்
நீங்கிறக்கம் பழிப்புரைதோத் திரமகிழ்வு விலக்கல்
தறுகுதலி லாதகொடை சத்துருசெயந் தசங்கந்
தன்கீர்த்தி பவனிபுரண் மொழிமாதர் மயக்கம்

சமுகவிலாசம், மாதர் மயக்கம் என்பனவற்றில் விளக்கம் அமை கின்றன.

அரசன் அரண்மனையிலிருந்து ஒப்பனை செய்து, அத்தாணி மண்டபத்தை அலங்கரித்து அதில இருக்க, வெற்றி காண, உலகோர் நிறைசார்ந்த அவையில் பாட, ஒரு பெண் மயல் தீர்த்தே நினைசகின்ற திருமணம் புணர்ந்து தங்குதல் சமுகவிலா சம். நிறைவுடைய சாம பேத தான தண்டம் எனும உபாயங்கள் இனம் ஏற்றம், நீக்குஇறக்கம், பழிப்புஉரை, தோத்திரம், மகிழ்வு, விலக்கல், தடை இல்லாத கொடை, பகைவெற்றி, தசாங்கம், தன்மெய்க்கீர்த்தி, பவனி செல்லல், புரண் மொழியையுடைய மாதர் மயக்கமாம். (82)

473 முறைபிறழ்தல் சம்பிரத வசனமூர் முதல
முற்றுமுரு வகமடையா ளம்பழித்தல் பழிச்சல்
உறுதிரிபே யெமுகஞ்சி லேடைவிக டமதே
யுற்றபல துறைசமுகம் சமையமுறன் முறையார்
திறன்கூற்றுத் திருப்பெயர்நித் தியகருமம் கப்பஞ்
செப்பியகட் டியமுதல விராசவரி கைகளே
தறையவரொப் பனைஆசை மயக்கமொட்டு வசனஞ்
சாற்றுபஞ்ச பாணமெய்த லட்டவித சமரம்

வசனசம்பிரதாயம், பலதுறை, சமுகம், அட்டவிதசமரம் எனும் பிரபந்த விளக்கமாக இது அமைகின்றது.

முறை பிறழ்தல் வசன சம்பிரதம்; ஊர் முதலியனவற்றை முற்றுருவகமாகப் பாடி அடையாளங்களைப் பழிததலும் போற் றுதலுமாகப் பொருந்துகின்ற திரிபு, எமகம், சிலேடை, விகடம

என்பன சேர்வது டலதுறை; சமுகம் என்பது நேரம் பொருந்துதல், முறையுடையவா தலைவன் திறன் மொழிதல். அவன் பெயர்ப் பெருமை கூறல், தினமும் உரிய செயல்கள், திறை செலுத்துதல, கூறப்பட்ட கட்டியம் முதலான அரச சின்னங்கள் கூறல் என்பதாம்; உலகததோர் ஒப்பனை செய்தல், ஆசை காரணமாக ஏற்பட்ட மயக்கம், இன்பமொழிகள் கூறுதல், காமன் ஐங்கணை எய்தல் என்பன அட்டவிதசமரம்.

ஓட்டு வசனம் என்பதால் சாக்கிட்டுப் பேசுதல், ஒட்டணி தோன்ற மொழிதல் என்பன கருதப்பட்டிருக்கலாம். (83)

474 மயல்வகுப்புக் கங்குல்விலக் கல்லிறைவி மயக்க
மற்றெவையும் பிரபந்தங்களிற்பாட னலனாம்
பயில்தூது பத்தினுக்கு மிவ்வகைமீக் கூறாம்
பாடுதலின் றேற்குற்றங் கூறலா மிவைக்கு
நயமருவு புறநடைசொன் னடைகண்டு கூற
னன்மையா முலாமுதல பிரபந்தங் களுக்குத்
துயர்பின்மடந் தையர்கன்னி மாரென்றே புகல்வர்
சொல்பருவம் நேரன்பில்வியாச் சியத்தினிற்சென்
றதுவே

பிரபந்தப் பொதுப்பொருளும், தூது, உலாவின் சில புறநடை எண்ணமும் அமைகின்றன.

காமமயக்கத்தை வகுத்துக் கூறுதல், துன்பம் தரும் இரவை விலக்க மொழிதல், தலைவியின மயக்கம், மற்றும் எவையும் பிரபந்தங்களில பாடுதல் நலமாம். பயிறசியுடைய பத்துத் தூதுக்கும இவ்வகைகள் கூறுவது புகழ்ச்சியாம். பாடாவிட்டால் குற்றம கூறலாம்; இவற்றிற்கு நயம பொருந்திய புறநடை சொல் நடை கண்டு கூறுதல் நன்மையாய; உலா முதலிய பிரபந்தங்களுக்குத் துயர்புறும் மடந்தையர் கனனியர் என்றே கூறுவர்; சொல்லுகின்ற பருவம நேரும் அன்பில்லாத வழக்கில சென்றது. (84)

475 மன்னனது சென்னிமுதல் வன்னனைத சாங்கம்
வளங்கீர்த்தி பவனிபிற வேட்டமே [illegible]னியே
கன்னிபுற நகர்நீங்க லனமுதலாற் றனிமை
காவலன்சொல் கனனிபா தாதிகே சமதே

துனனுகொக்கோ கப்பொருண்மை முப்புணர்ச்சியமைச்சர்
சூழ்நெறிகல் யாணந்தன் னகர்வரவு வாழி
இன்னவைமுன் பின்மாறி னாலுநல னெவைக்கு
மிதுவேபா தாதிகே சாதிசென்னி பதமே

பாதாதிகேசம், கேசாதிபாதம் என்பனவற்றின் பொதுப்பொருள் நிலை கூறப்படுகின்றது.

மன்னனது தலைமுதல் வருணனை, தசாங்கம், வளம், மெய்க்கீர்த்தி, பவனிபோன்ற பிற; வேட்டை; கன்னி, தனியே புறநகர் நீங்கல்; அன்னம் முதலால் தனிமைபுலம்பல்; காவலன் கூறுகின்ற கன்னியின் பாதாதிகேச வருணனை; நெருங்கிய கொக்கோகப் பொருண்மை, முப்புணர்ச்சி, அமைச்சர்நெறிசூழ்தல்; திருமணம், தன் நகர் வரவு, வாழிகூறி முடித்தல். இன்னவை முன் பின்னாக மாறினாலும் இவை எவற்றிற்கும் நலமே. இதுவே பாதாதி கேசாதி சென்னிபதமாம். (85)

476 இன்னதுக்குப் புறனடையாய்க் காதலென்று பெயரா
யிசைத்தார்கள் பெரியோர்க டனிச்சொல்லை யணைத்தே
பனனுகாப்பே சரணு தொடி மஙகளமேபகர் தருக்கள்
பலசிநதுப் ... ... ... ...
.. ... ... ... ... ... ...
... ... ... பொருட்டமிழ்க்கு முன்னாம்
பின்னுமுள்ள நெறியுநீங் காதுபுலன்மிக் காலப்
பேசுவோர் பேசுவதும பேசலா மன்னோ

காதல எனும் புறநடை வகை விளக்கப்படுகின்றது.

மேற்கூறிய பாதாதிகேசத்திற்குப் புறனடையாகக் காதல் என்னும் பெயருடன் இலக்கியம் ஒன்றைப் பெரியோர்கள் கூறினார்கள். தனிச்சொல்லைச் சேர்ந்தே காப்பு, சரண், தோடயம், மங்களம் என்பனவற்றைக் கூறுக. தருக்கள் பல சிந்து ... ... ... ... பொருள் தமிழுக்கு முன் ஆகும்; பின்னும் உள்ள நெறியும் நீங்காது புலன் மிகுந்தால், அவர்கள் பேசுவதும் பேசலாம். (86)

477 குறவஞ்சிக் கொருகூறு குழுவனா டகமே
குழுவன்வரல் பறவைசினே கன்வரவு சிககல்
உறுசிலவூர் செய்வேட்டஞ் சிலவன்றிச் சிககா
தோடலுக்குக் கற்பனையே களியன்விளை யாட்டே

துறுமலர்கொய் திடல்பிறவே சிங்கிதனைத் தேடல்
சொல்லுமுள்ளூர்த் தருவதற்குச் சொலலுமூ
லிகையே

அறைமணிமந் திரங்காட்டங் காணனின் றேச
லாஞ்சரணு தொடிமங்கள முன்னாகக் கூறே

குழுவ நாடகததிற்கு விளக்கம் தருகின்றது.

குறவஞ்சியின் ஒரு கூறான் குழுவநாடகம், குழுவன் வருதல், பறவை வருதல், சினேகன் வருதல்; பறவை சிக்குதல், சேர்ந்த சில ஊர்களின் வயலில் பறவை வேட்டை; சில பறவை அன்றிப் பிற சிக்காது ஓடல்; கற்பனை; களியன் விளையாட்டு; நெருங்கிய மலர் கொய்திடலும் பிறவு'ம, சிங்கியைத் தேடல், சொல்லும் உள்ளூர்த் தருவதற்குச் சொல்லும் மூலிகை, சொல்லுதற்குரிய மணிமந்திரம்; காட்டுதல், காணுதல், நின்று ஏசல் என ஆகும். சரணம், தோடயம், மங்களம் என்பன முன்னாகக் கூறப்பட வேண்டும்.

இவ்வகையைக் குழுவ நாடகம் எனல் பெருமபான்மை. ரணு தொடி மங்களம்' என்பதனைத் தெளிவாகப் பொருள் காள்ளச சிக்கல் உள்ளது. சினனமகியன் குழுவ நாடகம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1980) நூலின தொடக்கத்தில் ாப்பினை ஒட்டித் தோடையம், மங்களம் என்பன அமைதலால், தனை ஒட்டிப் பொருள் கொள்ளப் படலாம். (47)

78 வந்தவே காங்கிரியின் புறனடையே பொய்ககால
மாற்றுதுதி முற்கூறி மோகினிவெண் ணிலவே
சுநதரவா டையைமுதல கூறித்தன் காதல்
சொலலிறைவன் றுதிகூறு நொண்டியிடம் புகல
வந்தகவல் குலம்விளக்க நாட்டியமம மானை
வருசிந்தின் மோகினியின் மயல்கூறிப் புகழ
முந்திறைவன் வந்தணைத லாம்பாங்கி மாது
மொழிவதென்றார் பொருந்தாறு பொய்க்காற்கு
யானே

பாய்க்கால் எனும் புறநடை வகை பற்றிய எண்ணங்கள தரப் டுகின்றன.

ஏற்கெனவே சுட்டிய காங்கிரியின் புறநடையான பொய்க்கால், சிறந்த துதியை முதலில் கூறி, மோகினியின்

வெண்ணிலவு, அழகியவாடை ஆகியவற்றை முதலில் கூறி, பின்பு தன் காதலைச் சொல்லல், தலைவனைப் போற்றிக் கூறும் நொண்டியிடம் அதனைக் கூற, அவன் வந்து கூறுதல்; தலைவன் குலம் விளக்க, நாட்டியம், அம்மானை, வருசிந்துகளில் மோகினி யின் மயலைக் கூறிப் புகழ, கேட்ட இறைவன் விரும்பி வந்து அவளை அணைதல் என்பதாம். தோழிப்பெண் மொழிவது எனக் கூறுவது பொய்க்கால் எனும் வகைக்குப் பொருந்தாது. (88)

479 புதியனவே புகுதலா மெதிர்மொழிநா டகமே
புகலிலது முன்பின்னா மடலேறல் விலக்குத்
துதிவினாத் தாய்தண்டம் எதிர்தல்மண முதலாய்ச்
சொலலுவதாம் வன்மாதங் கிக்குமுன மணைந்த
இதவிறைபின் வந்தானை பிடியோடு புலம்பி
யேழையே வரப்புலம்பல் மங்கைபுறஞ் சேர்தல்
கதிவானைக் கும்மடந்தை யுறுப்பினுக்கும் பாடல்
கைக்கொண்டேகுதல்மணமேபண்ணுதலாம்பிறவே

எதிர்மொழி நாடகம், மாதங்கி எனும பிரபந்த விளக்கம் அமைகின்றது

புதியன புகுதலாக எதிர்மொழி நாடகம் அமைகின்றது. அது, முன்பின்னாக மடல்ஏறல், விலக்குதல், துதி, தாய்வினா, தண்டம், எதிர்தல், மணம் முதலியனவாகச் சொல்லுவதாம். வன் மாதங்கிக்கு, முன்பு அணைந்த இன்பமான தலைவன், பின்பு வந்து, அங்குக் கண்ட யானையுடனும் பிடியுடனும் புலம்பி, அப்பெண் வரப் புலம்பல், அவளைப் புறமபுல்கல், விரை வுடைய யானைக்கும் மடந்தையின் உறுப்புக்கும் சிலேடையாகப் பாடுதல், அவளைக் கைக்கொண்டு திரும்புதல், மணம் செய்த லும் பிறவுமாம். (89)

480 திருவடியின் சுவடுகாவினின்மடந்தை நீக்கம்
சோபாலை பின்றொடர்வோர் தொடர்தல்போர் மன்னன்
அரிவையைநீத் தேகல்மறை யோரோடு வந்தே
பினணைதலா மிவையன்றிச் சிலபொய்க்கால் முதலாம்
பரிவுபெறு மிவையெல்லாம வியாகரணப் படியு
மன்றியயிந் திரப்படியுந் தமிழினுக்குச் சிறபபும்
உரியதாயுள் ளனவெல்லா முரைத்தே மிவையி
லுத்தியினா லறிந்துதேர்ந் திசையேற வுரையே

திருவடிச்சுவடு எனும் வகையின் விளக்கமும், பொது ஒழிபும், மூலநூலைச் சுட்டலும் இங்கு அமைகின்றன.

திருவடியின் சுவடு, காவில இனிய மடநதை நீங்குதல், பாலை சேர்தல், பின்தொடர்வோர் தொடர்தல், போர், மன்னன் அரிவையை நீங்கிப் போதல், மறையவருடன் வநது பினபு அணைதலாம். இவையன்றி, சில பொய்க்கால் முதலிய வற்றின் இன்பமும் பெறும். இவை எல்லாம் வியாகரணப்படியும், அன்றி, அயிந்திரப்படியும், தமிழுக்குச் சிறப்பும் உரியதாயும் உள்ளன எல்லாம் கூறினேன். இவையில் உத்தியால் அறிந்து தேர்ந்து புகழ்பொருந்த உரை. (90)

481 சேர்ந்தவிறை நகர்க்கேக வெண்மடந்தை யிறைவன
சீர்வரவுக் கிடையூறு நினைந்துதுயர்ந் திருநத
ஆர்நதவிறை வரல்மேவல் இரவிடையீ டதுவே
அண்ணலுயிர் நிலைக்கவே சகிமடலை மாற்ற
லூரந்தமட லெழுதலவை பாரத்துப்பின புலமபல்
ஒள்ளிறைவி வருதல்பெண்ணே நீதானோ வென்று
ஈாந்தவவைய வச்சமமே கூறல்பின் மறாவல்
இவையான்ம நிலையெனவே யியம்பினார்கற்றோர்

இரவிடையீடு, ஆன்மநிலை எனும் வகைகள உணர்த்துகின்றது.

தனனை இணைநத தலைவன் அவன் நகருக்குப் போய்விட, அச்சமுற்ற பெண், அததலைவன் சீர்பொருந்தி மீண்டும் வருவ தற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நினைந்து துயருற்று இருக்க, தலைவன் வநது மேவுவது இரவிடையீடு. தலைவனின் உயிர் நிலைக்கும்படி, அவன் மடலேறத் துணிந்ததைத் தோழி மாற்றல, அவன் மடல் எழுதுதல, அவறறைப் பின்பு பாாத்துப் புலம்புதல, ஒளிபொருந்திய தலைவி வருதல், 'பெண்ணே நீ தானோ' என்று இழுத்து, அவள உறுப்புகட்கு ஒப்புகள் கூறுதல், பினபு மருவுதல், இவை ஆன்மநிலை என்று கற்றோர் கூறினா. (91)

482 பத்துவகைத் தூதனுப்பி வராமலிடை யூறு
பாடிச்சோலையிறபுலம்பி யுருவெளியை யவனென்
றததிமதன் போர்பாடி இறைபவனி யுலாவா
யாக்கியிவள் மாலைகொண் டவனிடத்திற் புகலும

எத்துமவர் நயனத்தின் புணர்ப்புரைத்துக் கூட
லிசைத்தல்பல தொகையாகும் இந்திரசா லந்தான்
வித்தையென விறைகாட்ட விறைவியவ யவத்தில்
மேவுமென்று பின்மேவ லென்பார்கள் பெரியோர்

பலதொகை, இந்திரசாலம் எனும் பிரபந்த விளக்கம் தரப்படுகின்றது.

எகினம் முதலிய பத்து வகைகளையும் தூதனுப்புதல்; அவை மீண்டு வராமையால் உற்ற துன்பம் பாடி, சோலையில் புலம்பி, உருவெளித்தோற்றத்தை அவன் எனக் கருதிப் பேசுதல், இருள் மாலை மீதுவரும் மதவேள் செய்யும் ஐங்கணைப் போர் பாடி, தலைவனின் பவனியை உலாவாக ஆக்கி, இவள் மாலை கொண்டு அவனிடத்தில் புகுதலும், அவர்கள் கண்ணொடு கண்கலத்தலும் கூறி, கூடுதலைப் பேசுதல் பலதொகை ஆகும்; இந்திரசாலம் என்பது, வித்தை என்று தலைவன் காட்ட, தலைவியின் உறுப்புகளில் பொருந்தும் என்றும் பின்பு ஒவ்வாது என்றும் அமைத்தல் என்பர் பெரியோர். (92)

483 அவயவத்தி லொன்றெடுத்தே யதற்குவமம் சிறப்பா
யாககியுவ மதனுக்கோர் கதைகொடுத்துக் கூறி
புவியிலவள் தனையிறைவன மருவல்ஒருபொருட்கொன்று
புகுபரத்தை யிலமேவு மிறைக்குசெவ் வணியும்
கவலும்வெள் ளணியுமணிந் தேசசியை யனுப்புங்
காதலியை வாயில்கொடு காணல்மைந்த னாலே
அவிர்தானஞ் செய்தல்பின் கூடலிது சலோசம்
அணங்கிறைவ னிவர்மறுக லதுவறிய களமே

ஒருபொருட்கொன்று, சலோசம், வறியகளம் எனும் வகைகளின் பொருண்மைநிலை விளக்கப்படுகின்றது.

பெண்ணின் உடலுறுப்புகளில் ஒன்றினை எடுத்து, அதற்குச் சிறப்பான உவமை கூறி, அவ் உவமைக்கு ஒரு கதையைச் சான்றாகக் கூறி, உலகில் அவளைத் தலைவன் சேருவதாகக் கூறுதல் ஒருபொருட்கு ஒன்று எனும் வகை. பரத்தையின் வீட்டில் சேர்ந்து அவளைப் பொருந்திய தலைவனுக்குச் செவ்வணியும் விரும்பத்தக்க வெள்ளணியும் அணிந்து தோழியை அனுப்புகின்ற அன்புக்குரிய தலைவியை வாயில்களின் உதவியுடன் காணுதல், பெற்ற மைந்தனாலே பெருங்கொடை அளித்தல், பின்பு கூடல் என்பது சலோசம்; அணங்குபோன்ற தலைவியும், தலைவனும் கலங்குதல் என்பது வறியகளம் ஆகும். (93)

484 கூறுமெதிர் மொழிமுறையே கூறிடினே கட்டியங்
குலாம்பவனி மாதுமயல் பாங்கியர்தந் தொகையே
மீறுமவள் வெண்ணிலவே முதலவற்றோ டுரைத்தல்
விரகதா பங்கூறல் தூதிடததில் வளமை
யேறுநகர் நாடுரைத்தல் நிமித்தமதை யறித
லிறைகூடன மறுநாள்வே டத்திலுறல் பாங்கிக்
கூறுபுக ழிறைமடலை யெழுதல்சித்த வேட
முயர்மாதா ஐயமுறல் பரியாச மதுவே

கட்டியம், பரியாசம் எனும் பிரபந்தப் பொருள் விளக்கப்படு கினறது.

தலைவன் வரும்போது எதிரேற்பதற்காகக கூறுகின்ற சொற்களை முறையே கூறுவது கட்டியம்; குலவும் பவனி, பெண்ணின் காம மயக்கம், பாங்கியர் தொகுதி, அடங்காது அவள் வெண்ணிலவு முதலியவற்றோடு உரைக்கும் காமம்மிக்க கழி படர் கிளவி-உவாலம்பனம், விரகதாபம் கூறுதல், தூதாகச் செல்லவேண்டியவரிடத்தில் தலைவனின் வளமை, நகர், நாடு என்பனவற்றைக் கூறுதல, தலைவன் வருவான் என்பதனை நிமித்தம் வழி உணர்தல், தலைவனைக் கூடல், மறுநாள் வேடம் புனைந்து சேர்தல, பாங்கிக்குத் தலைவன் புகழ் கூறல், தலைவன் கடிதம் எழுதுதல், சிததவேடத்தில வருதல், தலைவி ஐயுறுதல் என்பன பரியாசம். (94)

485 குலவுவெளிப் படைமடலின் வன்னனையும் மடலமேற்
கொள்வானைச் சகிநீக்கல் வெறியாட்டுக் கேட்டல்
உலவுவர லாறுரைத்தல் சுரம்போகல் சமர
முறுமகளிச்சிறைவைத்தல்தாய்கொள்சோதனையே
நலிகளவா வெதிர்மொழி தல்ஏசல் கோளிடல்
நாயகியாள் தான்புலம்ப லுறுதிமொழி கூறல்
அலகில்மணச் சோடனையே பிறர்வரவு தலைவி
யலங்காரந் துணைப்பாங்கி யிறைவன்றன் றூதே

வெளிபபடை எனும வகைககு விளக்கம் தரப்படுகின்றது.

விளங்குகின்ற வெளிப்படை என்பது, மடலின் வருணனையும் மடல் மேறகொள்பவனைத் தோழி தடுத்தலும், வெறியாட்டும் குறிகேட்டலும், உலா தொடர்பான செய்திகளை உரைத்தலும், பாலைநிலததில போகுதலும், போர்மேல் செல்லலும், மகளை

இற்செறித்தலும், தாய் கொள்ளுகின்ற சோதனையும், நலிவு தருகின்ற களவொழுக்கம், எதிர் மொழிதல், ஏசுதல், இடையூறு செய்தல், தலைவியின் தனிமைப் புலம்பல, உறுதிமொழி கூறு தல், அளவில்லாத திருமண ஒப்பனை, பிறர் திருமணத்திற்காக வருதல், தலைவியின் அலங்காரம், துணையாகப் பாங்கி மட்டும் அமைதல், அரசத் தலைவனின் தூது வருதல்; (95)

486 பாராட்டுத் தூதிலின்ற ஓலையிறை வருதல்
பார்கொலுவே கட்டியமே மாலையெறி வதுவே
சீரார்ந்த னகர்புகுதல் பிறவாகு மிதுவே
செப்புபிற பாவாலுஞ் செப்பலா மாதே
ஆதசங்கம பவனிஅரம் பையர்வருதல் பிறர்மா
லறிந்தவிந்திரன் போரவனே தோற்றலிறை யிவரை
மாராக மருவுமுன்ன மவர்உருவெ ளியினை
யிசைந்துமரு வுதல்வாழதல் இசைந்தவச்சி ராங்கி

வெளிப்படை எனும் வகையின் விளக்கம் தொடர்கின்றது; வச்சி ராங்கியின் விளக்கமும் அமைகின்றது.

பாராட்டுதற்குரிய தூதில் தலைவனின் ஒலை அமைதல், தலைவன் வருதல், அத்தாணி மண்டபத்தில கொலுவிருத்தல், கட்டியம் கூறுதல், மாலைக் காலத்தை வெல்லுதல் சீருடைய தன் நகர் புகுதல் என்பதும் பிறவு மாகும். இதனைப் பிற பாவகையிலும் கூறலாம். நிறைந்த தசாங்கம், தலைவன் உலா, அரம்பையர் வருதல், பிறர் மயக்கம், அதனை அறிந்த இந்திரன் போர்மேற் செல்லல், அவன் தோல்வி அடைதல், இறைத் தலைவன் அவரை அழகுறப் பொருந்தும் முன்பு அவர் உருவெளி யைக் கண்டு இசைந்து மருவுதல், வாழ்தல் என்பன இசைந்த வச்சிராங்கி.

மாலைக் காலத்தைப் பழித்தல், மாலைக் காலம் வருத்து வதாகக் கூறல் என்பனவும், 'மாலையெறி(ரி) வதுவே' என்பதால் கொள்ளப்படலாம். (96)

487 ஆகுமதிற் பின்றேவ வரம்பையரை வானத்
தமரர்கோ னுறவுகொண்டு கூட்டியே சேறல்
ஆகவே யுரைக்கிலது வச்சிராங்கி விசேட
மாகுமென்ப ரிவைக்கெல்லா முனபினகூ றுதலே

ஆகுமே வமைத்திடுதல் நன்றாகு மிவற்றை
அரசர்கோன் காவிரியா னாவலனா யழைத்தே
ஆகுநல னாற்பாடு மென்பபிரபந்த மெல்லா
மருவரையின் மாரிபோல வர்பொழியப பெற்றான்

வச்சிராங்கி விசேடம் என்பதன் விளக்கமும், பொதுவாகப் பிர பந்தம் பற்றிய எண்ணமும் அமைகின்றன.

வச்சிராங்கியின் பின், தேவ அரம்பையரை வானத்து அமரர் கோனான இந்திரன் உறவுகொண்டு கூட்டியே செல்லுதலாக உரைத்தால், அது வச்சிராங்கி விசேடம் ஆகும் என்பர். இவற்றிற்கு எல்லாம், முன்பின்னாகக் கூறுதலும் ஆகும். எனவே அவ்வாறும் அமைத்திடுதல் நன்றாகும். இவற்றை அரசர்க்கு அரசனான சோழன் புலவனாகி அழைத்து, பொருந்துகின்ற நலனால் பாடுக என்பான்; பிரபந்தம் எல்லாம், மலையில் பொழியும் பெருமழைபோல அப்புலவர் பொழிய, அவன் பெற்றான். (97)

438 இவற்றுளே பரணிபாடு தற்குத்தற்க மாகி
யிறைவன்வெகு பெரியோரை வரித்துநீா புகல்மின்
றவறின்றி எனவவர்க ளாயிரம்வா ரணமே
தகுபரியே பூமக்களே ஒருமுகிர்த்தங் கொல்வார்க்
குவமையற வுரைக்கலா மென்றனர்மற் றின்றே
லொருமுகிர்த்தங் கொல்வோமென் றுன்னுமெதி
ரில்லாத்
தவவிறைவற் குரைக்கலாமென் றனராத லினா
றற்றம்கோ ளரிபரணி தன்னைக்கொண் டானே

சோழமன்னன் பரணி பெற்றதன் வரலாறு உரைக்கின்றது.

மேற்கூறிய பிரபந்தங்களுள், பரணியைப் பாடுவதில் வாக்கு வாதம் உண்டாகி, மன்னன் மிகப்பெரியவரை நியமித்து, 'நீங்கள் தவறுபடாமல் கூறுங்கள்' எனக் கூற, அவர்கள், 'ஆயிரம் யானை, தகுதியுடைய குதிரைகள், உலக மனிதர்கள் ஆகிய வற்றை ஒரு முகூர்த்தத்தில் கொல்லுபவருக்கு ஒப்பில்லாமல் உரைக்கலாம்' என்றனர். 'அவ்வாறு அன்றியும், "ஒரு முகூர்த் தத்தில் கொல்லும் ஆற்றல் உடையேன்" என்று நினைக்கும் எதிர் இல்லாத தவமுடைய அரசருக்கும் உரைக்கலாம்' என்ற னர்; ஆதலினால், தாவுகின்ற சிங்கம் போன்ற சோழன் பரணி இலக்கிய வகையும் பெற்றான். (98)

489 இவையன்றி மடலேறு வேனென்னு மடலு
மிசையாத மஞ்சரியென் றியம்புதலுஞ் சந்த
மவையாற் பேதங்களா யீரடியே பிறவா
லாக்குவன வெல்லாமு மமைத்தெழுத னன்றாம்
நவமான பிரபந்த முயர் வோர்க்குப் பாடி
னாரியரை யிரப்புமுத லனநலனன் றென்னா
தெவரேனு முரையவருக இதுவிர்தி யோவென
றிடிற்புகழ்தல் விந்தியெனக் கென்றின்ப நோக்கே

மடல், மஞ்சரி, பிற பிரபந்தங்கட்குப் பொதுவாக யாப்பு நிலையும், அவற்றில் பெண்மயலின் இடமும் உரைக்கப்படுகின்றன.

மேற்கூறிய பிரபந்தம் தொடர்பான செய்திகளன்றி, மடலேறுவேன் என்னும் பொருண்மையுடைய மடலும், இசையாத மஞ்சரி என்று கூறுவதும், சந்தங்கள் காரணமாகப் பல வேறுபாடுகளாகி, ஈரடியாயும் பிறவாலும் ஆக்கும் பிரபந்தங்கள் எல்லாம் அமைத்து எழுதுதல் நன்றாகும்; புதியதான பிரபந்தங்களை உயர்வுடையோருக்குப் பாடி, பெண்களை இரத்தல் முதலான கூறுதல் நலன் அன்று என்று கூறாது எவரேனும் கூறுக; அவருக்கு இது சிறப்போ என்றால், புகழ்தல் சிறப்பு, எனக்கு என்றும் இன்ப நோக்காம். (99)

490 மக்களே மக்களுக்குத் தூதுசெல்லத் தகுமால்
மற்றவைநன்றோவெற்றுட்டசமென்றாரென்னென்
றக்கிரமங் கூறினரேல் அன்னமொடு பூவை
யஞ்சுகமோ பேசுநெஞ்சே ஆதிகா ரணமாந்
தொக்கசகி தானலனே மயில்வண்டு குயிலே
சொல்மேகந் தென்றலிவைசோறலேனேனென்றாற்
றக்கமழை வளிதெய்வம் சொல்லுமென்க பிறவுஞ்
சாற்றியதாய்க் காவியங்க டனிலுரைத்தார் பிறரே

491 தசவகையுஞ் சந்துவிட்டா ருளரோவென் றோதிற்
றாருவிறைபுலோமன் மகட்கனமவிடுத்தான் மாயன்
றிசைசொளம்ப ரீடன்மகள் துனிவிடவை குண்டத்
திற்றோகை விடுத்தான்கல் லுருவானான் மருவ
இசைபயிலிந் திரன்கிளியை யேவிமேவி னானாஸ்
எண்ணில்கா லஞ்செழியன் மகட்குக்காண் டீடபன்
வசையில்மழை தனைவிடுத்தான் சிசுபால னுருக்கு
மணிக்குப்பூ வையைவிடுத்து மருவுதலற் றானே

492 சத்திரன்பொன் மனைபாங்கிதனைவிடுத்தான்சுக வாகாத்
தனக்கனலோ னிடத்துற்றுஞ் சமண்குயிலை
விடுத்தான்
முந்துமெழிற் சீதையின்னா டன்னெஞ்சே குறியாய்
முயற்றி கண்முதலா லறிவித்தா னிராம
னிந்திரன்றி லோத்தமைக்கு முறுவசிக்குந் தென்ற
லினைவிடுத்தான் சுவாயம்பு விறைபிரமன் மகட்குக்
கொந்தணிவண் டினைவிடுத்தா னாகையாற் றூதாய்
கொண்டுபிரபந் தமெனக்கூட் டிச்செய்தா ரென்னே

தூதுப் பொருட்கள் பத்து என்பதன் பொருத்தம் கருத்தும் கதை யும் கூறி நிறுவப்படுகின்றது.

'மக்களே மக்களுக்குத் தூது செல்லல் தகும்; மற்றவை நன்றோ? அவற்றுள் பத்துஎன்று ஏன் கூறினர்?'' என்று கொடுமை யாக உரைத்தால், அன்னத்துடன் பூவை அஞ்சுகம் என்பன பேசும்; நெஞ்சு முதற்காரணமாம்; சகி நலன் தான்;மயில்,வண்டு குயில், சொல்லப்பட்ட மேகம், தென்றல் இவற்றைச் சொலவது ஏன்? ஏன்? என்றால், தகுதியுடைய மழை, காற்று வழியாகக் கடவுள் சொல்லும்; பிறவும தூது உரைத்ததாகக் காவியங்கள் தன்னில் பிறர் உரைத்தனர்.

பத்து வகையையும தூதாக விட்டவர் உளரோ என்று கேட்பின், கற்டகத தருவின தலைவனான இந்திரன் லோமன மகளான இந்திராணிககு அன்னத்தை விட்டான்; மாயவன், திசைகளை வென்ற அம்பரீடன் மகள் ஊடலை நீக்க வைகுண்டத்தில் தோகையை விட்டான; கல உருவான அகலிகையை நெருங்க புகழ்பரவிய இந்திரன் கிளியை அனுப்பி மேவினான்; எண்ணற்ற காலம பாண்டியனின மகளுக்கு அருச்சுனன் பழியற்ற மழையை விட்டான்; சிசுபாலன் உருக்கு மணிக்குப் பூவையைத் தூதாக அனுப்பியும பொருந்துதல பெறான்;

சந்திரன அழகிய தன் மனைவியிடம் தோழியைத் தூதனுப்பினான். சுகவாகாவினிடம், அனலோன் குயிலைத் தூதாக்கினான். முந்துநிறை எழிலையுடைய மனைபோன்ற சீதையின் நெஞ்சமே குறியாக முயற்றி, கண் முதலியவற்றால் இராமன் அறிவித்தான்; இந்திரன் திலோத்தமைக்கும்

உறுவசிக்கும் தென்றலைத் தூதாக விட்டான். சுவாயம்பு எனும்மனு, பிரமனின் மகளுக்குப் பூங்கொத்தில் உள்ள வண்டினை விடுத்தான்; ஆகையினால் அவற்றைத் தூதுப் பொருட்களாக ஏற்றுக் கொண்டு, பிரபந்தம் எனச் சேர்த்துச் செய்தார் என்க.

கதைகளை மேற்கோளாக்கி விளக்கும் இந்நிலை தமிழ் இலக்கண நூல்கட்கும் பாட்டியல் மரபுக்கும் புதுமையாம். இக்கதைகளில், ஆடவர் தூது விடுவது அமைகின்றது. அன்பைக் கூறி மாலை பெற்றுவா எனும் தலைவியின் ஒருதலைக் காம வெளியீட்டைப் பெரும்பாலும் தூதிலக்கியம் தர, இங்குக் களவும், கற்பும், புறத்தொழுக்கமும் பொருளாகின்றன. தூதிலக்கியங்கள், பொதுவாக, முடிவினைக் காட்டாத போதும் ஒருசில நன்முடிவை உணர்த்துகின்றன. மறுக்கப்பட்ட தூது நிலை இருப்பதாகத் தெரியவில்லை. ஆயின் உருக்குமணிக்குச் சிசுபாலன் விட்டதூது தோல்வியில் முடிவது மாறுபாடாம்.
(100-102)

493 பாதாதி கேசங் கேசாதி பாதங்
பகர்ந்தவன் மாதங்கி முதலெவற் றினுக்கு
மோதுபுணர்ச் சிகள்கூறா துரைத்தலுநன் றாமா
லோங்கிலைவே லிறைபவனி தசாங்கமுத லவற்றைத்
தீதறமுன் னிடைகடைக் குங்கூறினு நலனே
செப்புகுழ மகன்முதல மூவிடத்து நலனே
காதருங் குழையரைப் பழித்துரைத்த றேவ
கன்னியரை யுரைத்தலுமாஞ் சகியர்பிற வுரையே

பாதாதி கேசம், கேசாதி பாதம், மாதங்கி, பவனி, குழமகன் போன்றவற்றிக்குச் சில ஒழிபுகள் கூறப்படுகின்றன.

பாதாதிகேசம், கேசாதிபாதம், கூறிய வன்மையுடைய மாதங்கி முதல் எவற்றிற்கும், ஓதப்படுகின்ற புணர்ச்சிகளைக் கூறாது அமைதலும் நன்றாம். ஓங்கிய இலைபொருந்திய வேலை யுடைய அரசனது பவனியை, தீதன்றி, முதலிலும் இடையிலும் கடையிலும் தசாங்கம் முதலியனவற்றை வைத்துக் கூறினாலும் நலமே; குழமகன் முதலான மூன்று இடங்களிலும், குழை பொருந்திய காதை உடைய பெண்களைப் பழித்துக் கூறலும், தேவ கன்னியரைப் புகழ்தலும் நலமே; பிற உரைத்தலைப் பொறார். (103)

வேறு

494 சொல்லு மஞ்சரிப் பவனிமுன் பரிபொற்
றேர்துய ரறுசிவி கைபின் னிரதம்
வல்ல தண்டிகை மாப்பின்முத் தூர்தி
மாமணி யணிகொடிஞ் சியந்த டநதேர்
மல்லன் மேவிய தும்பிபத் தாந்தினம்
வரும்பவ னிக்கென விதித்தா
ரல்ல லுற்றிடா தறிவச்சி ராங்கியி
னரம்பை யார்பெயர் சில மொழிவாம்

மஞ்சரியின் பவனிக்கு விளக்கமும், வச்சிராங்கிக்குரிய அரம்பையர் பெயரைக் கூறுவேன் எனலும் அமைகின்றன.

ஏற்கெனவே சொல்லிய மஞ்சரியின் பவனி, முன்பு குதிரை, பொன்தேர், துயர்நீக்கும் சிவிகை; பின்பு இரதம், வலிமையுடைய தண்டிகை, மா; அதன் பின்பு முத்து ஊர்தி, மா மணி அணிந்த கொடிஞ்சியுடைய அழகிய பெரிய தேர்; வலிமை பொருந்திய யானை பத்தாம் நாள் வரும், பவனிக்கு என விதித்தார், துன்பம சேராது அறிக; வச்சிராங்கியின் அரம்பையர் பெயர் சில கூறுவேன்.

திரட்டியலிலும் (35-39), கருப்பொருளியலிலும் (98-100) மஞ்சரியை விளக்கும் போது, அரசன் பவனி பற்றிய குறிப்பு அமைகின்றது இங்குப் பத்துவகைப் பவனி வாகனங்கள் சுட்டப்பட்டு விளக்கம் சேர்க்கின்றது. (104)

495 சுந்தரியம் புயமுகிசந் திராணனிகங் காளி
சூலிமேன கைதிலோத்த மையுறுவ சிப்பெண்
விந்தைசுத வாகியிந்தி ராணிகெம் பீரி
விமலிகிருத் தலைபுஞ்சி கத்தலைய ரம்பை
சுந்திபிற மலோசந்தி யனுமுலோ சைப்பெண்
காமிவிசு வவசிசுக கலனிகைகிறு தாசி
யந்தரிபூ, றுவசித்தி தாரைவசமி ராங்கி
யமுதலோச னிகங்கை கமலைசந்திர பதிமான

வேறு

496 அமுதகந்தி பயகந்தி மோகினி
சூரியகாந்தி யமாயை மாயை
குமுதகந்தி யனசூயை யசோகி
மந்திரி யுவதைக் கொடிசம்போகி

தமதசிந்தை ய'த்தினி மான்கூர்த
விந்தை காணிகலாதரி மாதங்கி
சமைதருமி கலியாணி விசாலி
சித்திரலேகை சுகசாலி யாமால்

வச்சிராங்கிக்குரிய அரம்பையர் பெயர் சில கூறப்படுகின்றன.

சுந்தரி, அம்புயமுகி, சந்திரானனி. கங்காளி, சூலி, மேனகை, திலோத்தமை, உறுவசிப்பெண், விநதை, சுதவாகி, இந்திராணி, கெம்பீரி, விமலை, கிருத்தலை, புஞ்சிகத்தலை, அரம்பை, கந்தி• பிறமலோசந்தி, அனுமுலோசைப் பெண், காமி, விசுவவசி, சுககன்னிகை, கிறுதாசி, அந்தரி, பூர்வசித்தி, தாரை, வச்சிராங்கி, அமுதலோசனி, கங்கை, கமலை, சந்திரபதிமான்;

அமுதகந்தி, பயகந்தி, மோகினி, சூரியகாந்தி, அமாயை, மாயை, குமுதகந்தி, அனசூயை, அசோகி, மந்திரி, உவதைக் கொடி, சம்போகி, தமதசிந்தை, அத்தினிமான், கூர்தவிந்தை, காணி, கலாதரி, மாதங்கி, தருமி, கலியாணி, விசாலி, சித்திரலேகை, சுகைசாலி என்பவராம்.

திரட்டியல் (43), வாச்சிராங்கியை விளக்கும்போது, 'அரம் பையர்' எனத் தந்த பொதுச்சுட்டு இங்கு விளக்கம் பெறு கின்றது. (105-106)

வேறு

497 கூறும் பெரியோர் கலித்துறையாற்
கோவை யுரைத்தா ரானாலு
மீறும் பலபா வினுமுரைக்கின்
மிகையென் றில்லைத் திணைமுதலீ
ராறு விதியு மமைந்தக்கா
லழகார் கீர ராசிரியந்
தேறச் செய்தார் பெரும்பூதர்
செய்தார் விருத்தத் தொகையானே

கோவை இலக்கியத்திற்குப் புறநடை கூறுகின்றார்.

கூறுகின்ற பெரியோர், கலித்துறையில் கோவை இலக்கியம் உரைத்தா ராயினும், மேலும் பல பாவில் உரைத்தால் மிகை என்பது இல்லை. திணைமுதலிய பன்னிரு கூறுகளும் அமைவது அழகாம். கீரர் ஆசிரியத்தில் கோவை செய்தார்; பெரும பூதர் விருத்தப் பாடலின் தொகையாகச் செய்தார்.

கீரனும், பூதரும் செய்த நூல்கள் எவை எனத் தேரவியல வில்லை. (107)

### பத்தாவது

# கொடையியல்

கொடை பற்றிய இயல் என்பதால் இப்பெயர்ப் பொருத்தம் அமைகின்றது. இலக்கிய வகை பற்றிய எண்ணம், புலவன் தான் படைத்த நூலைத் தலைவன் முன் அரங்கேற்றியளித்துப் பெருங் கொடையினைப் பரிசாகப் பெறுவதில் முடிகின்றது. அதற் கேற்பப் பிரபந்தத் திரட்டும், திரட்டியலில் தொடங்கிக் கொடையியலில் முழுமை பெறுகின்றது எனலாம்.

பாட்டியல் நூல்கள், பொதுவாகத் தம் ஒழிபுப் பகுதியில் பேசும் செய்திகளில், தலைவன் கொடையும் ஒன்று.

எண்திசை பரவத் தண்தமிழ் கொண்டு
தண்ணடை மதாணி தமனியம் களிறு
பண்ணமை இரதம் பாய்பரி உதவி
ஏழடி பின்போய் மீள்வது மூவர்
வாழ்தமிழ் நாடர்க்கு வகுத்தனர் புலவர் (939)

என இதனை இலக்கண விளக்கம் சுட்டுகின்றது. நிகண்டிலும் இத்தகு செய்தி உண்டு. பிரபந்தத் திரட்டும், முன்னியலான ஒழிபியலில் புலவர் பெறும் பரிசு பற்றி மொழிகின்றது (404). அத்துடன், கொடையாளியின் உயிர் பொற்றூண்போல் போதலும் (422), மூவகைக் கொடையாரும், மூவகை வள்ளலும் பற்றியும் (423-24) அவருக்கு மாறான உலோபி குறித்தும் (425) மொழிகின்றது ஒழிபியலின் அத்தகு கருத்துகட்கு மீண்டும் ஒரு விரிவும் விளக்கமும் அமைப்பது போன்று இப் பத்தாம் இயலை யாக்குகின்றது.

கொடையியல் எனப் பெயர் பெற்றபோதும், இதன்கண், ஏழுவேழு வள்ளல் தொடர்புறும் நாடு, அவர் பெறும் உயர்வு முதலிய செய்திகளும் இடம்பெறுகின்றன.

இவ்வியல் பல்வகை விருத்தப்பாடல்கள் இருபத்தொன்பதா லாகியது.

498 இந்தவிதந் தமிழ்விதியிற் பிரபந்த முரைத்தீ
ரிவைபாடை பலவற்றும் பாடினா ருளரோ
அந்தமுற விவைகேட்ட பேருளரோ விவற்றை
யப்பாடை யினும்பாட லாகுமோ வென்னில்
நிந்தையோ வெங்குமலர் வாணிகேட் டாரு
நிகழ்த்தியவற்றைப் பாடைகொண்டு நிகழ்த்து கின்றவவரும்
உந்தவுல கினிலுரைக்கோம பரதகண்ட மதுவே
உயர்வான வொன்பதுகூ றாய்விளங்கு மென்ப

தமிழப் பிரபந்தங்கள் பிறமொழியிலும் பாடப்படலாம் எனவும் பரதகண்டம் ஒன்பது கூறுகளுடையது எனவும் அமைகின்றன.

'இவ்விதமாகத் தமிழ் நெறியில் பிரபந்தம் உரைத்தீர், இவை பல மொழிகளிலும் பாடினவர் உளரோ? முழுமையாக இவை கேட்டவர் உளரோ? இவற்றை அம்மொழிகளிலும் பாடலாமோ? எனக் கேட்டால், நிந்தையோ, எங்கும் கலைமகள் கேட்க, யாரும் இவற்றை நிகழ்த்த, பிற மொழியில் நிகழ்த்துபவரும் பற்றி இவ்வுலகில் கூறுவேன். பரத கண்டம் என்பது ஒன்பது கூறுகளுடன் விளங்கும் எனக் கூறுவர்.

நாவலந் தீவின் நவகண்டம் பற்றிப் பிங்கலம் அவனி வகையில் கூறுகின்றது (450). (1)

499 இந்திர ஞசே ருகமெழிற்றாம் பிரநாகங் கேவத்தி
யிசைசவுமியங் காந்திருவம் வருணங் குமரி
தந்தயோசனை சகத்திர மொவ்வொன்று பெறுமாற்
சாற்றுமவற் றுட்குமரி கண்டமொழி கண்ட
முந்துமாச் சிரமமின்றித் தானதவ மின்றி
முறையில்முன்ன முரைத்தகண்டம் போன்முறையு மின்றிச்
சிந்தையுடன் வாழ்வரிந்தக் குமரிகண்டந் தன்னிற்
சிவதலமோ முதலான பொருளெல்லாம் விளங்கும்

ஒன்பது கூறுகளின் பெயரும், அவற்றுள் குமரிக் கண்டம் சிறப்பும் கூறப்படுகின்றன.

இந்திரம், சேருகம், அழகிய தாம்பிரம், நாகம், கேவத்தி, புகழுடைய சவுமியம், காந்திருவம், வருணம், குமரி என்பன பெறும் நில அளவு, ஒவ்வொன்றும் ஆயிரம் யோசனையாம். கூறப்பட்ட அவற்றுள் குமரிக்கண்டம், ஏற்கெனவே கூறப்பட்ட தமிழ் மொழி பெறுமாம். சிறந்த ஆச்சிரமம் இன்றி, தானதவம் இன்றி முறையற்ற முன்பு கூறிய கண்டங்கள் போல முறையும் இல்லாது, நற்சிந்தையுடன் வாழ்வர். இந்தக் குமரிக்கண்டத்தில், சிவதலம் முதலான எல்லாப் பொருளும் விளங்கும்.

பிங்கலம் தரும் நவகண்டப் பெயர்கள், இங்கு அமைவதினும் வேறுபடுகின்றன.

வடபால் விதேகம் தென்பால் விதேகம
கீழ்பால் விதேகம் மேல்பால் விதேகம்
வடபா லிரேவதம் தென்பா லிரேவதம்
வடபாற் பரதந் தென்பாற் பரதம
மத்திம கண்டம் என்ன வருபவை
நறபெரு நாவலந் தீவின்நவ கண்டம் (450) (2)

500 இன்பமே யறிவதல்லாற் பாடையுமங் கின்றா
மிருடியாற் சிலரறிந்து பேசுநரு முளரோ
அன்புபெறு மிக்கண்டத் தனபதோ டாறாய்
மாதேச முளவவற்றை விரிக்குதுநீ கேளாய்
துன்பமறு மகதம்வங்க மாறாட மச்சந்
துளுவஞ்சிங் களங்கலிங்கந் தெலுங்கங்குருக
கேத்திரம்
வன்புபெறு கொங்கஞ்சீனஞ் சிந்துவிராடஞ் சேதி
மகாசீனம் விலாடஞ்சாளு வந்திகத்த நிடதம்

குமரிக் கண்டச் சிறப்பும், அதன்கண் அமையும் ஐம்பத்நாறு தேசங்கள் எவை எனவும் அமைகின்றன.

இன்பமே அறிவதல்லாது வேறு மொழியும் அங்கு இல்லை. முனிவர்கள் வாயிலாகச் சிலர் பிற மொழி அறிந்து பேசுபவரும் உண்டு. அன்பு நிறைந்த இக்கண்டத்தில் ஐம்பத்தாறு பெரிய தேசங்கள் உள. அவற்றை விரித்து உரைப்பேன், நீ கேளாய்; துன்பம் நீங்கிய மகதம், வங்கம், மாறாடம், மச்சம், துளுவம்,

சிங்களம், கலிங்கம், தெலுங்கம், குருகக்கேத்திரம், வலிமை பெற்ற கொங்கம், சீனம், சிந்து, விராடம், சேதி, மகாசினம், விலாடம், சாளுவம், திகத்தம், நிடதம்;

ஐம்பத்தாறு தேசங்களின் பட்டியல் சில சிறு மாற்றத்துடன் தொகையகராதியில் அமைகின்றது (பக். 133) அங்கம், அருணம், அவந்தி ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், சவ்னடம், கன்னாடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குடகம், குந்தளம், குரு, குருகு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம். (3)

501 குடகமிராட் டஞ்சவுராட் டங்குகுதம் வந்தி
கொப்பமா ரியமங்க மாளவங்காந் தாரம்
அடல்செயலத் தவம்விதற்பங் காம்பீர மிதுலை
யழகுகடா ரங்குலிங்கந் தொட்டியங்கொங் கணமே
தொடர்வுறுபஞ் சமமொட்டியங் கோசலம்பாஞ் சாலஞ
சொல்சவுடம் பங்களம்பப் பரங்காச்சி மீர
மிடலுறுகாம் பீலிகுச் சரங்கொந்தள மீழம்
விறல்சோழம் பாண்டிசேரங் கேக யமதே

ஐம்பத்தாறு தேசங்களில், தொடர்ச்சியாக, பின்னும் சிலவற்றைக் கூறுகின்றார்.

குடகம், இராட்டம், சவுராட்டம், குகுதம், அவந்தி, கொப்பம், ஆரியம், அங்கம், மாளவம், காந்தாரம், போர் செய்கின்ற அத்தவம், விதர்ப்பம், காம்பீரம், மிதிலை, அழகிய கடாரம், குலிங்கம், தொட்டியம், கொங்கணம், தொடர்வுறுகின்ற பஞ்சமம், ஒட்டியம், கோசலம், பாஞ்சாலம், சொலகின்ற சவுடம், பங்களம், பப்பரம், காச்சிமீரம், வலிமை பொருந்திய காம்பீலி, குச்சரம், கொந்தளம், ஈழம், வெற்றியுடைய சோழம், பாண்டி, சேரம, கேகயம். (4)

502 பல்லவங்கன் னடமொடுகூ பகமிவையே யிவற்றுட்
பாடல்கொண்டு கீர்த்தியுற்றார் மூவேழு
தொகையார்
சொல்லுமவ ராதியிடை கடையெனமூன் றுள்ளார்
தொகுத்தபெயர் செமபியனசகாரியொடு விராடன்
வல்லமைசேர் நிருதிதுந்து மாரியொடு சகரன்
மலிந்தநளன் அக்குரன்சந் திமானந்தி மானே
வெல்லும்விறற் சிசுபாலன் வக்கிரன்கறன்னன் சந்தன்
வேளைநிகர் பாரிஆய் எழிலிநள்ளி மலையன்

ஐம்பத்தாறு தேசப் பட்டியலின் இறுதி மூன்றும், மூவேழுவளளல் பகுக்கும், சில வள்ளல் பெயரும் அமைகின்றன.

பல்லவம், கன்னடம் என்பதுடன், கூபகம் எனும் இவையே இவற்றுள் பாடல் பெற்று, புகழ் அடைந்தவா இருபத்தொரு எண்ணினர். செல்லும் அவர், ஆதி, இடை, கடை என மூவகை யினராம். தொகுத்த பெயர்கள், செமபியன, சகாரி யுடன், விராடன், வலிமை பொருந்திய நிருதி, துந்துமாரி யுடன், சகரன், மிக்க நளன், அக்குரன், சந்திமான, அந்திமான், வெற்றி யுடைய சிசுபாலன், வக்கிரன், காணன், சந்தன, வேளினை ஒத்த பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலையன்;

பிங்கல நிகண்டு, ஆடவர் வகையில் மூவகை வளளன்மை யுடைய இருபத்தொரு வளளல்களைப் பற்றிப் பேசுகின்றது. வரைவின்றி யாவருக்கும் கொடுக்குந் தலைவள்ளல் எழுவரை,

சகரன் காரி நளன் றுந்துமாரி
நிருதி செம்பியன் விராடன் றலைவள்ளல (755)

எனவும் இரப்போர்க்குக் கொடுக்கும் இடைவள்ளல் எழுவரை,

அந்திமான் சிசுபால னக்குரன் வக்கிரன்
சந்திமான் கன்னன் சந்த னிடைவள்ளல் (756)

எனவும், புகழ்வோர்க்குக் கொடுக்கும் கடைவள்ளல் எழுவரை

பாரி யெழிலி நள்ளியாய மலையன்
ஓரி பேக னிவர்கடை வள்ளல் (757)

எனவும் சுட்டுகின்றது. (5)

503 பேகனே யோரியென்ப ரிவன்கண்மேற் படித்தோர்
பேசுலகி லெண்ணில்லை யிவர்தமிழ்ததே யத்து
மாகுபிற பாடைதே யத்துமுள்ளார் தேய
மறைகவென்னி லப்பாரிஆய் ஓரிநள்ளி சோழந்
தாகமுறு நகருறையூ ரவர்சோழர் மலையன்
சாற்றெழிலி பாண்டியதே யங்கூட லூராம்
போகுயரும் புகழகொளிவர் பாண்டியர்செம் பியனே
புகழ்ப்பேகன் சேரதேயங் கருவூர் சேரர்

இருபத்தொரு வள்ளல் பட்டியலின் தொடர்ச்சியாக இருவரும், இவர் பாடல் பெற்றோர் என்பதும், தமிழும் பிற மொழியினரும் என்பதும், நாட்டிற்கேற்ப அவரைப் பிரித்தலும் அமைகின்றன.

பேகன், ஓரி என்பார்; இவர்கள் மீது பாவியற்றியோர் இவ்வுலகில் எண்ணற்றவர். இவர்கள், தமிழ் நாட்டிலும், ஆகிய பிற நாட்டிலும் உள்ளனர். அந் நாடுகளைக் கூறுக என்றால், அந்த பாரி, ஆய், ஓரி, நள்ளி என்பவர் சோழநாடு; விரும்பத்தக்க நகர் உறையூர்; அவர்கள் சோழர். மலையனும், கூறிய எழிலியும் பாண்டிநாடு; ஊர் கூடல்; பரந்துயர்ந்த புகழ் பெற்ற இவர்கள் பாண்டியர். செம்பியன், புகழுடைய பேகன் என்பவர்க்கு உரியது சேர நாடு; இவர்கள் சேரர். (6)

504 காசியூர்தே சம்விரா டமவிராட னுக்குக்
காட்டுசகா ரிக்குவத்த வதேயந் துருவம்
பேசுமூர் நிருதிக்குத் தேயமே யவந்தி
பெட்புறுமூர் கேடங்கன்ன னுக்கங்க தேயம்
ஆசிலூர் கறுவடமாந் துந்துமா ரிக்கே
அயோத்தியூ ராரியதே யஞ்சகரன் றனக்குத்
தேசுறுமூர் சமவாக மாறாடந் தேயஞ்
செப்புநளற் குத்தேய நிடதமூர் விந்தம்

இன்னும் சில வள்ளலுக்கு நாடும், ஊரும் குறிக்கப்படுகின்றன.

விராடனுக்கு, ஊர் காசி, தேசம் விராடம், காட்டிய சகாரிக்கு வத்தவ தேசம், பேசும் ஊர் துருவம்; நிருதிக்கு தேசம் அவந்தி, பெருமை சேரும் ஊர் கேடம்; கர்ணனுக்கு அங்கதேசம், குற்றமற்ற ஊர் கறுவடம்; துந்துமாரிக்கு அயோத்தி ஊர், ஆரிய தேசம்; சகரனுக்குப் பெருமையுடைய அழகிய ஊர் சமவாகம், மாறாடம் தேசம்; கூறிய நளனுக்கு தேசம் நிடதம், ஊர் விந்தம். (7)

505 தொட்டியம்ஒட் டியங்கொங்கணந் துளுவம்வக்கிரனுக்குத்
தொகுந்தேய மயேந்திரமூர் சராசந்தன் றனக்கே
ஒட்டுறுதே யமகதங் கிரிவிரச மூரா
முரைக்குமக்கு ரூரற்குக் காச்சிமீர தேயந்
தட்டறுமூர் பானுபதி சந்திரமா னுக்குச்
சாற்றுமூர் பாடிமகா சீனமே தேய
மிட்டமுள அந்திமான் குருச்சேத்திர தேய
மிசையூரே அத்திபுரி யென்னவிசைப் பாரே

வள்ளலில், பிறருக்கு நாடும் நகரும் உணர்த்துகின்றார்.

தொட்டியம், ஒட்டியம், கொங்கணம், துளுவம் என்பன வக்கிரனுக்குத் தொகுத்த நாடுகளாம், மயேந்திரம் ஊர்; சராசந்தனுக்கு ஒட்டுறுதேயம மகதம், கிரிவிரசம் ஊர்; கூறிய அக்குரூரனுக்குக் காச்சிமீரதேயம், தட்டறும் ஊர் பானுபதி; சந்திரமானுக்குச் சாற்றும் ஊர் பாடி, மகாசீனம் தேசம், விருப்பம் பொருந்திய அந்திமானுக்குக் குருச்சேத்திரதேயம், புகழுடன் பொருந்திய ஊர் அத்திபுரி, என்று கூறுவர். (8)

506 சீரான குருச்சேத்திரந் தேயமே யாகுஞ்
சிசுபாலன் றனக்கூரே கடகமதா மிவர்க
ளேரான தமிழ்நாட்டி லெண்மர்பிற நாட்டி
லீட்டுபதின் மூவர்பிற பாடைநூ றோர்நதும்
பார்மீது தமிழ்ப்பாடை கற்றுதவும் பேர்கள்
பகரீரேழ் பெயருமேய வர்கொடுத்த கொடையை
யாருரைப்பா ரொன்பதா மியலிலிவர் தன்மை
யறைந்தனமங் கறிகவிவர்க் கார்நிகரிவ் வுலகில்

வள்ளலுக்குரிய தேயமும் ஊரும் தொடர்ந்து கூறுதலும், தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலுமுள்ள வள்ளலுக்கு எண்ணிக்கை சுட்டுதலும், இவரில் தமிழ் மொழியினர் பதினால்வரும் கொடுத்த கொடையும் பிறவும், ஒன்பதாம இயலதொடர்பும் அமைகின்றன.

சீரான குருச்சேத்திரம், சிசுபாலனுக்கும் தேசமாம், கடகம் ஊராம்; இவர்கள், அழகிய தமிழ் நாட்டில், பிறநாட்டில் சேர்ந்த பதின்மூவர்; பிறமொழி நூல் தோர்நதபோதும், உலகில் தமிழ்மொழி கற்று உதவியவர்கள் பதினால்வர். இவர்கள் கொடுதத கொடையை யார் உரைப்பார்? ஒன்பதாம் இயலில்

இவர்கள் தன்மை கூறிலேன். அங்கு அறிக. இவர்களுக்கு இவவுலகில் ஒப்பு யார்?

ஒன்பதாம் இயலில், தலை, இடை, கடைக்கொடையியலபு கூறியதை இங்குச் சுட்டுகின்றார் எனக் கொள்ளலாம்.

தலையிடையே கடைக்கொடையார் மூவேழு வள்ள
றலைகொடைதன் னுபகாரம் பிறவுபகா ரத்தோ
டலமறக்கேட் டவைகொடுத்த லாமிடையு தார
மவன் கொடையும் பிறர்கொடையு மாங்கடையு
தாரம் (424) (9)

507 கவிமீது கொடுத்தும்யா சகர்மீது கொடுத்துங்
காசினியி லிரப்போர்க்கு வலிதினழைத் திட்டும்
புவிமீது சமமானோர் மிக்கானோர்க் குதவி
புரிந்துத்தன்னுயிரேனும்புகழ்வேண்டிக்கொடுத்துந்
தவறாத கீர்த்திகொண்டா ருயிர்கொடுத்தார் யாரேற்
சராசந்தன் கன்னனா மற்றோர்தங் கீர்த்தி
யெவர்புகலவாரவற்றுளொவ்வொன்றெடுத்துநாம்சொலு
மிசைத்தமூ வெழுவருக்கு முறையேகண் டறியே

வள்ளல்கள் கொடை நிலையும், புகழுக்காக உயிர்கொடுத்தோரும், பிறர் புகழ் கூறுவேன் எனலும்.

கவிதைக்காகக் கொடுத்தும், இரவலர்க்கு அளித்தும், உலகில் இரப்பவர்க்கு வலியே சென்று அழைத்து அளித்தும், உலகில் ஒந்தவருக்கும் மிக்கவருக்கும் உதவி புரிந்தும், தன் உயிரையும் புகழுக்காகக் கொடுத்தும் தவறற்ற கீர்த்தி கொண்டனர். உயிர் கொடுத்தவர் யாரெனில், சராசந்தன் கன்னன் என்போராம். மற்றவர்களுடைய புகழை யாரால் கூற இயலும். அவற்றுள் ஒவ்வொன்றை எடுத்து நாம் சொல்லுகின்ற புகழுடைய இருபத்தொருவருக்கும் முறையாகக் கண்டு அறிக.

தொடர்ந்து வரும் மூன்று பாடல்கள் (508-510) கூறும் கதைகள் கொடைச் செயல் விளக்கமாகப பொருந்தும்படி அமைகின்றன போலும.

சராசந்தன் வீமனால் கொல்லப்பட்டான்; கர்ணன் அருச்சுனனால் கொல்லப்பட்டான். (10)

508 தருவீய்ந்தான் மனைகொடுத்தான் தாலிகட்டு மகளைத்
தான்கொடுத்தா னடிமைமுறி கொடுத்தான்றன்
னரசைப்
புரவென்றீய்ந் தப்புலமை கொண்டானற் பசுவைப்
புரப்போனை யடித்தோனை யெப்பசுகாத்
திடச்செய்
துரனுறுமம் மேய்ப்பனைச்சிங் காசனத்து நிறுவி
யுயர்செந்திற் பதிசெல்ல வருகவென்றே யுரைத்த
திருவாணன் றனக்கவையே செய்துபின்னே சென்றான்
செப்புமா மனவீமன் றேசமெல்லாங் கொடுத்தான்

மூவெழு வள்ளலின் கொடைமடம் கூறும் முகமாகச் சில நிகழ்வுகள் சுட்டப்படுகின்றன.

தரு ஈந்தான், மனை கொடுத்தான், தாலி கட்டும் மகளைக் கொடுத்தான்; அடிமை முறிகொடுத்தான், தன் அரசினைப் பாதுகாப்பாயாக என அளித்துப் பதிலாகப் புலமை பெற்றான்; நல்ல பசுவைப் பாதுகாப்பவனைத் துன்புறுத்தியவனை, பசுக்களைக் காத்திடும்படிச் செய்து துன்புற்ற அந்த மேய்ப்பனை சிங்காசனத்தில் இருத்தி, உயர்வுடைய செந்திற்பதிக்குச் செல்ல வருக என உரைதத திருஅயர்ந்த புலவனுக்கு அவற்றைச் செய்து பின்னே சென்றான்; செப்புகின்ற பெரும் மனம் படைத்த வீமன் தேசமெல்லாம் கொடுததான. (11)

509 கையில்விற கெடுத்துதவி னான்சிவிகை சுமந்தான்
காதல்வே சையைத்தொட்ட கையுத[வா]வென்
றெழுதும்
பொய்யில்வா ணனுக்குக்கை யுதவினான் கோடி
பொன்னீந்தத் தாசிக்குக் கொடுக்கவெனக
கொடுத்தான்
தையலாளாஞ்சுரத மஞ்சரியை யிணககித்
தருகவென விணக்கினான் வீடுபிரித் தளித்தான்
துய்யவிறக னறுகோடா தகற்குமநதிர வாழி
தொகுதனுசம் புறுதுணி தந்துபுகழ் பெற்றான்

வள்ளல்களின் பெருஞ்செயல்கள் சுட்டப்படுகின்றன.

கையில் விறகு எடுத்து உதவினான், சிவிகை சுமந்தான; காதல் வேசையைத் தொட்ட கை உதவாது என்று எழுதும் பொய்யில்லாத புலவனுக்குக் கை உதவினான; கோடி பொன்

கொடுத்து அந்தத் தாசிக்குக் கொடு எனக் கொடுத்தான்; பெண்ணாகிய சுரதமஞ்சரியை இணக்கித் தருக எனக் கேட்க அவ்வாறே இணக்கினான்; வீடு பிரித்து அளித்தான்; தூய்மை யுடைய அறிஞனைப் புலி கொள்ளாதிருக்க மந்திரச் சக்கரமும், வில்லும் அம்புறாத்தூணியும் அளித்துப் புகழ் பெற்றான். (12)

510 வீதியினிற் கைகொடுத்தா னிலைமடித்துக் கொடுத்தன்
வெங்களிற்றின் மேலேற்றிக் கைபிடித்து நடந்தா
னோதனமோர் வட்டிலதி லுண்டானோர் தினத்துக்
கோர்தரநா வலன்வளவிற் கேபோந்தானொன்றித்
தீதுரைகும் வாணன்சொற் றேர்ந்தழைத்துச் சொன்ன
செயல்கேட்டு வேண்டியது கொடுத்தான்றன் காணி
மீதுறுமூ ரோர்த்தால் ஓரியெனும் பெயரான்
வென்றியிற்கொன் றோர்க்காகச் சதையனலி
லிட்டான்

இன்னும் பிற வள்ளல்கள் செயல் சிறப்புச் சுட்டப்படுகின்றது.

தெருவில் கைகொடுத்தான்; இலை மடித்துக் கொடுத்தான், சின வெம்மையுடைய யானையின்மீது ஏற்றிக் கைபிடித்து நடந்தான்; சோறு ஒரு வட்டிலில் உண்டான்; ஒரு நாளுக்கு ஒரு முறை புலவனின் வீட்டிற்கே சென்றான்; ஒன்றி, தீது உரைக்கும் வாணன சொல் தேர்ந்து, அழைத்து, சொன்ன செயல் கேட்டு, வேண்டியது கொடுத்தான்; தன் காணி மீதுறும் ஊர் மக்களின் நாக்குக் கூறும் ஓரி எனும் பெயருடையவன், வெற்றியுடைய போரில் கொன்றவருக்காகச் சதையை நெருப்பில போட்டான். (13)

511 இன்னமிவர் புகழ்கூற முடியாது புகழே
எண்ணியக்காலத்துள்ளோர்பிறவா லுங்கொண்டார்
அன்னவர்யா ரெனிற்செங்கை யறுத்தானோர் செழிய
னரியதுலை யேறினா னொருசோழன் முனிவன்
வன்னவெலும்பீய்ந்தானோர்ப் பார்ப்பானீர்கொடுத்தான்
வாள்விசய னிறந்தபிள்ளை கொடுத்தான்மெய்த்
தருமன்
சொன்னவிரா தனெறிதல் பொறுத்தான்மற் றோரைச்
சொல்லமுடி யாதெண்ணில் பேருண்டு காணே

மேற்கூறியவர் தவிரப் பிறரும கொடையாளியானமையும, அவரையும் முழுமையாகக் கூறவியலாது எண்ணற்றவர் உளர் எனலும் அமைகின்றன.

இன்னும் இவர் புகழ் கூற முடியாது; புகழே கருதி அக்காலத்து உள்ளவர் பிறவற்றாலும் கொண்டனர். அன்னவர் யாரெனில், செங்கை அறுத்தான் ஒரு செழியன், அரிய துலையில ஏறினான் ஒரு சோழன்; முனிவன் அழகிய எலும்பு ஈந்தான், ஒரு பார்ப்பான் நீர் கொடுத்தான்; வாளையுடைய விசயன் இறந்த பிள்ளையைக் கொடுத்தான்; மெய்த் தருமன் முன்பு சொன்ன விராதன் எறிதல் பொறுத்தான்; மற்றவர்களைக் கூறமுடியாத படி எண்ணற்றவர் உளர், காண்க.

செங்கையறுத்த செழியன், பொற்கைப் பாட்டியன்; அரிய துலை யேறிய சோழன் சிபி; எலும்பு ஈந்த முனிவர் ததீசி. விசயன் அரவானைக் களபலியாகப் பரதப் போருக்குமுன் அளித்தான். வனவாசத்தின் இறுதியாண்டில் பாண்டவரைத் தன் நாட்டில் வைத்துப் பாதுகாத்தவன் விராதன் எனும் அரசன். (14)

512 சொல்லுமிவ ரன்றியே தமிழ்க்குதவும் பெயர்கள்
சொல்லுதமிழ் நாட்டினிற்றொண் ணூற்றாறு பெயர்கள்
வல்லவர்தங் கீர்த்தியெல்லாங் கீர்த்திவிசே டத்தை
வாய்ந்தறிக விவர்களன்றி யிக்காலந் தன்னில்
நல்லதமிழ்க் குதவுகின்றோர் பலர்யாவர் நவிலவார்
நாகமுத லிரங்குமென்று சொற்றனமுன் னேயாம்
செல்லனைய நரரிரங்கு தற்கென்ன வீணோ
செய்கிறார் விதரணசொற் கத்திலுறச் செய்நார்

தமிழகத்தின் கொடையாளிகள் பலரெனவும், அவர் பற்றிய செய்தி அறியும் இடமும், அவர் இயல்பும், அவர்ச் செயல் காரணமும் கூறப்படுகின்றன.

சொல்லப்பட்ட இவர்கள் அன்றியும், தமிழுக்கு உதவுபவர்கள், சொல்லும் தமிழ் நாட்டினில் தொண்ணூற்றாறு பெயராம். வன்மையுடைய அவர்கள் புகழனைத்தும் 'கீர்த்தி விசேடம்' என்பதனைக் கண்டு அறிக. இவர்கள் அன்றியும், இக்காலத்தில் நல்ல தமிழுக்கு உதவுகின்றோர் பலராம். இவரை யார் வரையறுத்துக் கூற இயலும். பாம்பு முதலியன இவர்க்கு இரங்கும் என்று முன்னே நான் கூறினேன். செல்லொத்த மானிடர் இரங்குவதற்கு என்ன? வீணாகவோ செய்கிறார்? விதரண சொர்க்கத்தில் சேரும்படி செய்தார்.

ஒன்பதாம் இயலில் (408), 'உயர் தமிழுக்கு இரங்காதார் இரங்காத துண்டோ' எனக் கூறி, தாயின் சொல்லுக்காக நாகம் கொலை நீங்கியதைச் சுட்டுவதே இங்கு மேற்குறிக்கப்படுகின்றது போலும்.

கீர்த்தி விசேடம் என்பது கொடைவள்ளல்கள் பற்றிய நூல் போலும். நொன்னூற்றாறு எனும் எண்ணைப் பலவிடத்தும் பிரபந்தத் திரட்டுப் பயன்படுத்துதல் காண்க. (15)

513 இந்திரலோ கத்தின்மேல் வீரசொர்க்க மதன்மே
லேற்றுவித ரணசொர்க்க மதிற்கொடுப்ப தெல்லா
முந்துமொன்று பத்தாக வரமாதர் கோடி
முயங்கியய னாளளவுந் தீங்ககற்றி யிருப்பார்
பிந்துமுகாந் தந்தநிலவித ரணசொர்க்க மாயன்
பெருவயிற்றிலவைப்பர்தினப் பிரளையத்தின்காறும்
தந்தவயற் றிட்டுதவு முலகமபோல்ப் பின்னே
தன்னிலையி னிறுத்தவுறுந் தனிமுடிவிற் கேளே

சுவர்க்கம் பற்றிய எண்ணங்கள் சில தரப்படுகின்றன.

இந்திர உலகத்தின் மேல் வீரசுவர்க்கம்; அதன் மேல் அமைவது விதரண சொர்க்கம்; அதில், கொடுப்பன எல்லாம் ஒன்று பத்தாக முந்தி வர, கோடி மாதர்கள் முயங்கி அயனின் வாழ் நாளளவும் தீங்கின்றி இருப்பார். பின்பு வருகின்ற ஊழி இறுதியில், இந்த விதரண சுவர்க்கம் மாயவனின் பெருவயிற்றில் பாதுகாப்பாக வைக்கப்படும்; ஊழிப் பெருக்கு முடிவதுவரை அந்த வயிற்றினகத்தில் வைத்து பாதுகாத்து உதவுகின்ற உலகம்போல, பின்பு தன் நிலையில் நிறுத்தப்படும். ஒப்பற்ற முடிவின் நிலைமையைக் கேள்;

பிங்கலம் போன்ற நிகண்டுகள் வான்வகையில் சுவர்க்கம், மேல் உலகம் ஏழு போன்றன பற்றிய செய்தி தருகின்றன. (16)

514 உலகமெல்லாம் பொடியாக்கிச் சிவத்தொடுங்கும் வீர
முறுசொர்க்கம் பரன்முகத்தி லுற்றிருக்கு மிந்த
நிலவுசொர்க்கஞ் சந்திரன்பாற் பட்டரனார் விழியி
னின்றுபின்பு வரும்வீர சொர்க்கமுறு வோர்கள்

மலரிரவிக் கிடைபோவார் கொடையோர்சந் திரனின்
வழிசெல்வா ருதவியில்லோர் வையகத்தி லுண்டோ
கலைமதிய மாதிமால் தொடர்ந்தசசா சுரனைக்
காத்துமால் வரல்கண்டுமானுருவாய்ச் சமைத்தான்

சொர்க்கமும் கொடையாளிகளும் பற்றிய எண்ணங்கள் தொடர்கின்றன.

உலகமெல்லாம், யுக முடிவில், பொடியாகிச் சிவத்தில் ஒடுங்கும் வீரமுறும் சொர்க்கம் பரன் முகத்தில் சேர்ந்திருக்கும். இந்த நிலவுகின்ற சொர்க்கம் சந்திரனிடம் அடங்கி, அரனின் விழியிலிருந்து பின்பு வரும்; வீர சொர்க்கத்தில் சேருபவர்கள் மலர்ச்சியுடைய சூரியனிடையே போவார்; கொடையாளர், சந்திரனின் வழியே செல்வர்; உதவி இல்லாதவர் உலகில் உண்டோ? கலை மதியம், ஆதியான மால் தொடர்ந்த சசாசுரனைக் காத்து, திருமால் வருவதனைக் கண்டு மான் உருவாக மாற்றினான். (17)

515 அறிந்துமுய லகன்றுன்ப நினக்குவரப் பிறவி
யைந்துறுக வனற்பிறப்பி லயிக்கமா குகவென்
றுறுஞ்சாப மிடப்பானு கவசமிட்டுங்கன லப்பால்
உயர்ந்ததவம் புரிந்துநா னிறக்கினுமென் னிடமுள்மா
னிறந்துபடா மற்காத்தி யெனக்கேட்டும் பிறந்தும்
எல்லாமுயற் கூடென்றிட விருந்தான் முயலின்
றிறம்புரியு மிருகூறுங் கனற்பிறந்து பரனார்
திருவடிகொண்டங்கைகொண்டுதிருவுற நின்றனவே

சசாசுரன் காரணமாக மதியுற்ற சாபம், துன்பம், பிற கூறப்படுகின்றன.

நிகழ்ந்ததை அறிந்து, முயலகன் உற்ற துன்பம் நினக்கு வர பிறவி ஐந்து சேர்க, அனற் பிறப்பில் ஐக்கியம் ஆகுக என்று சேரும் சாபம் இட, கதிரவன் கவசமிட்டும் கனல அப்பால் உயர்ந்த தவம் புரிந்து,''நான் இறந்தாலும் என்னிடமுள்ள மான் இறவாது காத்தல் வேண்டும்' எனக் கேட்டும்,மீண்டும் பிறந்தும், எல்லாரும் முயல்கூடு என்று கூறிய இருந்தான். முயலின் திறம் புரியும் இருகூறும் கனலில் பிறந்து பரனாரின் திருவடியில் இடம் கொண்டும், அங்கையில் இடம் பெற்றும் அழகுற நின்றன. (18)

வேறு

516 எந்தவாற் றானுங் கீர்த்தி தேடினோ ரேழோ டேழு
சிந்தையா ருலகம் போற்றச் சிறப்பொடு பொலிந்து வாழ்வார்
நந்திய கோடி கீர்த்தி நலம்பெறச் செய்துளோர்க
ளந்தமி லண்டந் தம்மி லவர்செய லவர்க்காய் வாழ்வார்

புகழுடையவரின் வாழ்வுச் சிறப்புக் கூறப்படுகின்றது.

எந்த வழியாக வேனும் புகழ் தேடினவர்கள், பதினான்கு உலகின் சிந்தையார் போற்றச் சிறப்பொடு பொலிந்து வாழ்வார். நிலைபெற்ற கோடி புகழ் நலம் பெறச் செய்தவர்கள் அந்தம் இல்லாத அண்டத்தில் தமசெயலே தமக்கு இணையாக வாழ்வார். (19)

வேறு

517 பாடுவோன்றன் மையைச்சொற்ற னைமுன்னங் கேட்கும்
பார்த்திபன்றன் மையை யுரைக்க வேண்டு மென்னிற் கொடுப்போன்
நாடுமன்று பிறந்தபிள்ளை தொட்டிறக்குங்காலு
நற்கவிகேட் கிற்பிழையோ பொருளன்றோ விதுவும்
தேடுவா ரில்லையோ தானிறக்குங் காறுஞ்
செத்துமிடங் கொடுத்தோர்க ளில்லையோ செத்து
வீடுற்றார் மேற்கவியு மில்லையோ நந்தி
மேலீமத் திருந்துகவி கேட்கிலனோ வன்னே

பாடலைக் கேட்கும் அரசன் தன்மை கூறப்படுகின்றது.

'பாடுகின்றவன் தன்மையைச் சொன்னாய், முன்னம் கேட்கின்ற அரசன் இயல்பை உரைகக வேண்டும்' என்றால், கொடுபபான் நாடும்; அன்று பிறந்த பிள்ளை முதல் இறப்பது வரை நல்லகவி கேட்டால் பிழையோ? பொருள் அன்றோ? இதுவும்? தேடுவார் இல்லையோ, தான் இறப்பது வரை? செத்தும் இடம் கொடுத்தவர் இல்லையோ? செத்து வீடுபேறடைந்தவர் மீது கவியும் இல்லையோ? நந்தி ஈமத்தின் மேலிருந்து கவி கேட்கிலனோ?

செத்தும் கொடுத்தவன் சீதக்காதி; இறந்தவர் மீது பாடப்படும் கையறுநிலை பற்றிய செய்தி பண்டைக்காலம் முதல்

உண்டு. நந்திக் கலம்பகத்தைக் கேட்க, மன்னன் ஈமத்தில் அமர்ந்தான் என்பது பழஞ் செய்தி. (20)

518 கொடுக்கின்ற விறைவரணி கூறினை முனவரே
கொண்டதென்ன விவற்றைநெ யெனில் நிலவுபோ
லுலகை
அடுத்துக்காக் குந்நன்மங் குடையுலகை யடக்கு
மக்குறிப்பால்க கவிழ்ந்துநிற்குஞ் சாமரைவீ
சலினால்
நடக்கும்வறு மைசணீங்கும் வறுமைபேர் போனவர்
நன்கிலெனக் கைகாட்டல் போல்மேல்கீ ழாகத்
தடக்கைவலத் தால்வீசல் வேண் டுந்தனம் தெய்வஞ்
சமைகொளெனுஞ் செங்கையே சிவிறிவீ சுதலே

அரசர்க்குரிய சிறப்புடைப் பொருட்கள் பண்பும் பாங்கும் உணர்த்தப்படுகின்றன.

'கொடைச் செயலுடைய அரசருக்குரிய அணிகளை முன்பு, கூறினை; இவற்றை அவர் ஏன் கொண்டனர்?' எனக் கேட்டால், நிலவு போன்று உலகை அடுத்துக் காக்கும் தருமந் தன்மையுடைய குடை, உலகை அடக்கும் எனும் அந்தக் குறிப்பால் கவிழ்ந்து நிற்கும்; சாமரை வீசுவதனால் நடக்கும் வறுமைகள் நீங்கும் வறுமை பேர் போனவர் 'நன்கில்லை' எனக் கைகாட்டல் போல, மேல்கீழாக, பெரிய வலது கரத்தால் வீசல் வேண்டும்; 'செல்வம். தெய்வம் அமையக் கொள்க' என்னும் செங்கையே விசிறி வீசுதலாம். (21)

519 வாகுவினில் விந்தைமகள் நடனமன்றோ குஞ்சம்
வளர்கீர்த்தி பூமியெல்லை வரைக்குமே சுற்றும்
ஓகைநிக ரன்றோபா வாடைவீ சிடுதல்
உயர்நீதி வேரூன்றல் கம்புதழைத் தோடி
ஆகுமூன் றுலகினுமே படர்தல்போல் நிற்ற
வாலவட்டத் தின்குணமாம் எக்காள முழுவ
ஏகலிறை வரல்கூற விறைகொடியே முழங்கு
மிசைப்பேரி வீரம்வே லீட்டிபிற வெடுத்தல்

அரசர்க்குரிய சிறப்புப் பொருட்களின் குறிப்புச் செய்தி விளக்கம் தொடராகின்றது.

தோளின் மீது வெற்றித் தெய்வத்தின் நடனத்தைக் காட்டும் குஞ்சம்; (அங்க வத்திரம்) வளர்கின்ற புகழ் உலகத்தின்

எல்லை வரைக்கும் சுற்றும் உவகையை ஒத்தது பாவாடை வீசியிடுதல்; உயர்நீதி வேறுன்றல், கம்பு தழைத்து ஓடி. மூவுலகங்களிலும் படர்வது போல் நிற்பது ஆலவட்டத்தின் குணமாம்; எக்காளம் முதலியன ஏகல், இறைவன் வரக் கூறும் கட்டியம், அரசனின் கொடி, முழங்குகின்ற புகழுடைய பேரி; வீரம், வேல் ஈட்டி போன்ற படைக்கலம் தாங்குதல். (22)

520 சங்கீத மேளம்வீணை யிலக்குமிதன் னடனத்
தாட்சிலம்பி னோசையா மொன்னாராம் பனியே
பங்கமுறத் தோன்றுதலால் முடிகதிரே யாகும்
பகரரசர் யாரேனுங் கதிர்க்குலமா கையினால்
பொங்கவனே யிவனெனலா குடைமதிக்கீ ழுற்றான்
புகல்பிள்ளைத்தன்மைக்குப் போடுதண்டை பிறவும்
அங்குறுவீ ரச்செயலா லணியோடை கழற்குற்
றம்புலங்குகொடிப்பக்கமென் வறைந்தணிவாரரசர்

அரசர்க்கு உரிய சில சிறப்பியல்புகளின் பொருட்குறிப்புப் பொருத்தம் சுட்டப்படுகின்றது.

சங்கீதம், மேளம், வீணை என்பன இலக்குமியின் நடனத்தின் போது எழும்பும் காலசிலம்பின் ஒசையாம்; பகைவராகிய பனி அழிந்துவிடும் படித் தோன்றுவதால், கிரீடம் கதிரவனேயாகும்; கூறப்பட்ட அரசர்கள் யாரெனினும் சூரியகுலம் ஆகையினால், பொங்கியெழும் அக கதிரவனே இவ் அரசன் எனல் ஆகும்; குடையாகிய சந்திரனின் கீழே பொருந்தியவனின் இளமை தன்மையைக் கூறும்படி அணியப்பட்டது தண்டை; பிற அணிகளும் அங்குப் பொருந்தும்; வீரச் செயலால் அமையும் பொன் கழல்; குற்றம் நீக்கும் கொடி நட்புடையது எனக் கூறி அணிவர் அரசர்.

குறுகிய அம்பும், உலங்கு (கொக்கு), கொடி (காகம்) என்னும் பறவைகளின் இறகும் அணிவர் எனப் பிற்பகுதியைக் கொள்ளலும் சாலும். (23)

521 ஆவரண மிடுவதெலாம் விழுப்புணென நினைப்பார்
ஆனையே றுவர்குடியோர் மகிழ்வானை யேறத்
தாவுபரி யேறுவார் குடிபரம்பி லேறத்
தண்டிகையே றுவர்நாடு தையலர்கூட் டாகக்

கோவிரத மேறுவார்குடி கள்பொலி யேறக்
கூறுமிவை யேறாரேற் குன்றுமிவை யெல்லாந்
தேவசிங்கா சனமிருந்தல் புவித்தைய றொடைமேற்
சென்றிருத்த லாந்தவளச் சங்குகுழல் கேட்டல்

மன்னர்க்குரிய அணி, வாகனம், இருக்கை முதலியவை உணர்த்தும் உட்பொருள் சுட்டப்படுகின்றது.

ஆபரணம் அணிவன எல்லாம் விழுப் புண்கள் என நினைப்பார்; குடியோர் மகிழும் மறுமை பெற, இவர் யானை ஏறுவர்; குடியோர் பெருகும்படி, இவர் தாவும் குதிரையில் ஏறுவர்; நாடு, பெண்டிரின் கூட்டத்தால் நிறையும்படி, சிவிகையில் ஏறுவர்; குடிகள் பொலிவுமிக்கு அமைய, கோ இரதம் ஏறுவர்; கூறப்பட்ட இவ் வாகனங்களில் ஏறவில்லை என்றால், கூறப்பட்ட இவை குன்றும்; அழகுடைய சிங்காசனத்தில் இருத்தல் என்பது, பூமாதேவியின் மடியில் சென்று இருப்பதாம்; வெண்ணிறமுடைய சங்கு ஒலித்தல், குழல் கேட்டலாம். (24)

வேறு

522 செய்மொழியுஞ் சுதைமொழியுந் தேசத்தோர்
கேட்பவெனச் செப்புவாரால்
நாய்வாய்மே வாத்தசைபசு வினதுதசை
நிகராம்நனி யூதங்கள்
சாய்வாகில நாய்த்தந்தம் படச் செய்து
தின்னுதலே தருமங்காணாய்
வாய்வாய்க்குந் தந்தமெல்லாஞ் சுசிதெய்வ
மெனவுரைக்கு மன்னர்நூலே

அரசனுக்குரிய சில சிறப்பியல்புகள் மொழியப்படுகின்றன.

'குழந்தையின் மொழியும், பெண்ணின் மொழியும் அரசர் கேட்க' எனக் கூறுவார்; நாயின் வாயில் படாத தசை பசுவினது தசையை ஒக்கும்; மிகுந்த பசுக் கூட்டம் சாய்ந்தால் நாயின் பல்லைப் படச் செய்து உண்ணுதலே தருமம் எனக் காண். வாயில் அமையும் பல் எல்லாம் பால்தெய்வம் என மன்னர் நூல் கூறும்.

மன்னர் நூல் என, அரசனுக்குரிய பலசெய்திகளும் தரும் நூல் குறிக்கப்பட்டது போலும், (25)

### வேறு

523 படைகுடிகூ ழமைச்சுநட் பரணா றுமுள்ளார்
பயமுலுத்த மூடமே ழைத்தன்மை யில்லார்
அடைதுயில்கொள் ளாமைகல்வி துணிவுடைமை யுள்ளார்
ஆங்கியற்றல் மீட்டல்காத் தேவகுத்தல் உள்ளார்
இடரில்காட் சிக்கருமை கடுஞ்சொல்லே யில்லார்
இருசெவிகைத் திடுஞ்சொல்லை நீத்தபொறை
யுள்ளார்
தொடர்துன்பம் வரினுமின்ப வினைசெய்த னீங்கார்
துட்டரையுஞ் சிட்டரையுந் தடிந்துகாப் பாரே

மன்னரின் பண்பும் செயலும் சுட்டப்படுகின்றன.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு. அரண் ஆகிய ஆறும் உள்ளவர்; அச்சம், லோபம், மூடம், ஏழைமை என்பன இல்லாதவர்; அடை துயில் கொள்ளாமை, கல்வியும் துணிவும் உடைமை, என்பன பெற்றவர். இயற்றல், மீட்டல், காத்தல், வகுத்தல் என்பன உள்ளால்; துன்பமற்ற, காட்சிக்கு அருமையும் கடுஞ்சொல்லும், இல்லாததர்,இரு காதும் கசந்திடும். சொல்லை நீக்கிய பொறுமை உடையவர்; துன்பம் தொடர்ந்து வந்தாலும் இன்பம் தரும் செயல் செய்வதிலிருந்து நீங்க 'மாட்டார்கள்; துஷ்டரையும், சிஷ்டரையும் தடிந்து காப்பார்.

வள்ளுவர் மன்னரைப் பற்றி மொழியுமிடத்து இதனை யொத்த செய்திகள் சிலவற்றைத் தருகின்றது.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (381)

இதனை, அரசியல் ஆறு எனப் பிங்கலமும் உரைக்கின்றது (758).

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேற்
மீக்கூறும் மன்னன் நிலம் (386)

எனும் வள்ளுவர் கருத்தின் தோய்வும் இங்கு அமைகின்றது. அரசருக்குரிய செயல்களாக நிரை மீட்டல், தண்டித்தல போன்றவற்றை ஆடவர் வகையில் மொழிகின்றது (762). (26)

524 மூவருங்கா வலரதனாற் சிறியோரைப் பெரியோர்
முக்கியரைச் சிறியோரா கிடச்செய்வர் தொல்லூழ்
காவலர்முன் னில்லாது கணிதமுநில் லாது
கற்றவரே யவர்மீது கவியரன்மேற் கவியாம்
பூவுலகந் தனக்கவரே தந்தைகுறிப் பறிந்து
புகழ்வோரைப் புகழ்ந்துகொடுப் பதுகொடுப்ப
ரென்றும்
மேவுகின்ற கீர்த்தியே பொருளவர்க்குத் தந்தி
மெய்க்கவளச் சேர றுகலபோற் செலவினையெண்
ணாரே

புலவரும் அரசரும் தொடர்புறுமாறு கூறப்படுகின்றது.

கேடும் முடிவும் அற்ற காவலரானமையால், சிறியோரைப் பெரியோரும, முதன்மையானவரைச் சிறியோரும் ஆகிடச செய் வர்; தொன்மையுடைய ஊழும் அரசர்முன்பு நிலைாது; வரு வதைக கணிக்கும சோதிடமும அவர் முனபு ஆற்றல இழக்கும, கற்றவர்கள மீது இயற்றிய கவிதை அரன்மீது பாடிய கவிதை யாகும; பூவுலகத்துக்கு அவர் தந்தையாம்; குறிப்பு அறிந்து, புகழ்வோரைப் புகழ்ந்து, கொடுப்பது கொடுப்பர். என்றும், மேவுகின்பு புகழே அவருக்குப் பொருளாம். எனவே, யானை யின் கவுளில் ஒதுக்கப்பட்ட கல் போன்று, செல்லுவதை எண்ணார்.

...... யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே (புறம் 101)

எனும் பகுதியை இங்கு நினைக்கலாம். (27)

வேறு

525 வருந்திக் கோடி பொன்கொடுத் தழகேயிலா
மாதரை மேவுதற்கே யோர்
அருந்து நல்லமு தனையவள் முகதரிசனஞ்
செய்தல் மிக்கதாமது போல
இருந்து நன்றெனத் தன்சிர கம்பிநகு
செய்திலா னிடும்பொன் கோடிக்குப்
பரிந்து சொல்லறிந் தின்புறு நரர்முகப்
பண்பது மேலதா மன்றே

தெரிந்தளித்த கொடைச் சிறப்பும் உயர்வும் நவிலுகின்றார்.

வருந்தி, கோடி பொன் கொடுத்து, அழகு இல்லாத பெண்களைப் பொருந்துவதை விட, அருந்தும்படியான நல்ல அமுதம் போன்றவளின் முகத்தைப் பார்ப்பது மிக உயர்ந்ததாம் அது போன்று, இருந்து, "நன்று" எனத் தன் தலையை ஆட்டாதவன் கொடுக்கும் கோடிப் பொன்னைவிட, அன்புற்று, சொல்திறன் அறிந்து இன்பம் சேருகின்ற மனிதரின் முகச்செவ்வி மேன்மையுடையதாம்.

சங்கப் புலவர் சிலர் எண்ண ஒப்புமை இங்கு அமைகின்றது. குன்றியளவு கொடுப்பினும் நிறைவடைதலும், போதிய மதிப்பின்றிக் கொடுப்பின் சினத்தலும் கவிஞர் இயல்பாக அமைகின்றன.

.. உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் ... (புறம். 159) (28)

வேறு

526 நகைமு கத்தினா விரித்திடு கையினர் நடந்து
புகவி டுபபவ ரின்மொழி புக^பவா புகல்பாத
தகைய றிந்துதம் மணிமுடி துளக்குவார் தாங்கொள
மிகைய றிந்துதந் திடுபவர் கொடையுடை வேந்தர்

கொடை வேந்தரின இயல்பு கூறுகின்றது.

எப்போதும சிரித்த முகத்தினை உடையவர்; விரித்த கையினை யுடையவர்; நடந்து புக விடுப்பவர்; இனிய மொழி கூறுபவர்; கவிஞன் கூறும் கவிதையின் தகைமை அறிந்து தம் மணிமுடி அசைப்பார்; அக் கவிதையைத் தாம் கொள்ள, மிகுதி அறிந்து அளிப்பவர்; இவரே கொடைத் தன்மையுடைய அரசராம். (29)

## பிரபந்தம்

527 சாதகம் பிள்ளைத் தமிழ்பல் சநதத்
திரட்டுக் கூடல் விசித்திர மதுவே
பிணையல் மும்மடி லெட்சுமி விலாசம்
கூடற் கலப்புக் குலோதய சித்திரந்
தசாங்க வற்னனை ஆடா மணியே
நாற்பா னான்மணி பருவவிஸ் தாரம்
இரட்டைப் பாட்டே இணைநூ றதுவே
தடாகசிங் காரஞ் சடாடன மேகாங்கிரி
பன்மணித் தொகையே சின்னப் பூவே

528 இராச விர்தி யலங்கார பஞ்சகம்
பொய்ம்மொழி யலங்கார மெய்ம்மொழி யணியே
தெய்வக் கையுறை குறியறி சிந்தே
பண்ணை விசித்திரம் ராசாங்க வகையே
மணியூஞ்சல் மணியொன்பது தசப்பிரா துற்பவம்
நயன பயோதரப் பத்து மடலே

529 பாதாதி கேசங் கேசாதி பாத
மங்க வேடம் புறநாட்டுச் செய்கை
ஏடார் தாமரை வாடாத மலரே
கனகாபி டேக மாற்றுப் படையே
நட்சத் திரதொகை சின்னக் கவியே
வருக்கப் பாட்டே முரண்வஞ்சி யதுவே
பத்துவகைத் தூது லாக்கலம் பகமே
மஞ்சரி மாதிரக் கட்டுக் கோவை
மதன விசயங் காமரச சிகழிகை
வச்சிராங்கி சகத்திராங்கி அண்டகோசம் பரணி
சிந்து மோகினி உத்தியா பனமே

530 மன்மத சிங்காரந் தமிழ்சொரி சிந்தாமணி
சவுந்தர கல்யாணங் கன்ய விசேடம்
உபாய செயமே தளசிங் காரம்
விடயசந் திரோதயஞ் சிலேடா சாகரந்
விசயவிஸ் தார மான தவமே

சுரவேட்ட மதுவே நாக பநதமே
கோமூத் திரியே சுழிகுளஞ் சருப்பதோ
பத்திர முதல சித்திரகவி சுயம்வரல்
பிரிவு சுரமே சமசங்கி ராமம்

531 வேடர் வினோதங் கன்னிகா மயக்கம்
வசனசம் பிரதாயங் கதைமொழி மாற்றுக்
கற்பனை விலாசங் குலநதி விசேடம்
வதனசந் திரோதயந் திருப்பெயர்ப் பொறியே
தேவாங்க சிலோச்சயம் பட்டாபி ஷேகங்
களவு கண்ணி ஒலியந் தாதி
திருமுகஞ் சமுகங் காத லெதிர்மொழி
வன்மா தங்கி இரவிடை யீடே
ஆன்ம நிலையே பலதொகை யதுவே
யிந்திர சாலந் திருவடிச் சுவடெனக்
கூறிய தொண்ணூற் றாறு பிரபந்தமு
முற்றக் கற்றலா மொழிகுவர் பெரிதுஞ்
சின்னூற் காறர் செப்புதல் சிறிதே

தொண்ணூற்றாறு பிரபந்தங்களின் பட்டியல் தருகின்ற இப் பாடல்கள் பின்பு வந்தோரால் இயற்றிச் சேர்க்கப் பட்டதாகத் தெரிகின்றது. பிரபந்தத் திரட்டு, திரட்டியலிலும், ஒழிபியலிலும் கூறிய வகைகள் பெரும்பாலும் இங்கு இடம் பெறுகின்றன. ஒவ்வொரிடத்தில் சிறு பெயர் மாற்றம் உண்டு. (1-5)

## பூமிசுக்கிரன்

532 காகமுதல்ப் பக்கமுடன் நவமிகிழக் காகுங்
கனிப்புடை யபதி னொன்று மூன்றுந்தென் கிழக்காந்
தெரியிலொரு பதிமூன்று மஞ்சுந்தெற் காகுஞ்
செப்பரிய பனிரண்டு நான்குந்தென் மேற்காம
மருவுபதி னான்காறு மேற்குவர வேழு
வடமேற்காந் திசைமியுட னிரண்டும்வடக் காகு
முரியவிரு நான்கும்வட கிழக்கே யுண்ணும்
யோகினியின் முன்னி . . ந்தீ யந்தொழித்த
துமைசநன்மே

கிழக்கு முதலாக வெட்டுத் திக்கிலும் பிரதமை முதல் அட்டமி யீறாக நிற்கும். நவமி ய.ாகாசத்தில் நிற்கும். தசமி பூமியிற்

நிற்கும். ஏகாதசி முதலாக அபர பக்கத்துப் பஞ்சமி யந்தமாக முன்பு போலே யுண்ணும். சட்டி முதலாக அமாவாசை முடிய வாக முன்போலே யுணணும்.இப்படி முப்பது பக்கத்தையும் நிறுத்துவது. இவையிற்றில் தெனகிழக்கும நிற்கு பக்கஙகளும் ஆகாச பாதாளததில நிறகும் பக்கங்களும சுபகருமங்களுககும விலக்கப் பட்டன. இவை யாத்திரைச்கு எதிரும் வலமும் விலக்கப்பட்டன. அல்லாத பக்கங்களும் இடமும் பின்னும் 'பூமிசுக்கிரன் நலன் னெனபது பூமிசுக்கிரன்.

இந்தப் பாடலும், உரைநடைப்பகுதியும, நன்மையும் தீமையும் விளைவிக்கும் திசை பற்றிக் கூறியமைகினறன. மஞ்சரி, 'பத்துத் திசை பார்த்தல்' எனக் கூறுவதும், பாடலை அரங்கேற்றுமிடத்துத் திசை கருதப்படலும் இயைபு பறறி இங்கு நினைக்கத் தக்கன. இது, பிரபந்தத் திரட்டின் பகுதியாகத் தென்படவில்லை. (1)

## அறுபத்து நான்கு கலைஞானம்

533. வேதம் வேதாங்கம் மிருதி ஆகமம் நாடகம் காவியம் நீதிசாத்திரம் அட்டாதெச புராணம் இதியாச புராணம் பரதம் கணிதம ஆயுள்வேதம தனுவேதம் மூநட்டமட்டி சநதிரவிககிரகம் அட்சதாலெக்கியம் சிந்தினை அட்டாங்கயோகம் கிரந்தயுத்தி சட்சமையம் மாயாமதம் சத்தப்பிரயோகம் தர்க்கம் மநனசாத்திரம் லேபணம் பரகாயப்பிரயோகம் சொற்சாவிக்கிரகம பரிபாஷை ஆகாசகெமனம் அசுப்பரீட்சை அததிபரீட்சை அஙகபரீட்சை புட்பபரீட்சை பூமிபரீட்சை கற்பரீட்சை பொன்பரீட்சை கூடார பரிட்சை சாமத்திரா லெட்சணம் நடபணம் பே நனம உச்சாடனம் வித்துவேசணம் ஆக்ருஷணம் பேதனம சல்லிகா சாத்திரம் வசியம் பதுரபாஷணம் வீணாவேணு நாணா தேகப்பிரவேசம் விஷதந்திரம் ரசவாதம் சித்திரலேககியம் பிறதத அவித்திரம் மிறுதாங்கதாதியம் சதுரங்கப் பிரவேசம் புத்திரலெக்கியம் அக்கினித்தம்பம் சலத்தம்பம் வாயுத்தம்பம் மனத்தம்பம் வாக்குத்தம்பம் சனத்தம்பம் இந்திரசாலம் மயேநதிரசாலம் ஆக கலைக்கியானம் 64.

பிரபந்தத் திரட்டின், நூற்பெயர் தாங்கும் தலைப்பு ஏட்டினை அடுத்தும், கடவுள் வாழ்த்துக்கூறும் முதல் ஏட்டுக்கு முன்னும, தனி ஏட்டில் அமையும் இப்பகுதியும், நூலைச்சார்ந்த தாகத் தெரியவில்லை. (1)

## பாடல் முதற்குறிப்பு

(எண் - பாடல் எண்)


அகரக் குற்றுயி 140
அகர வுயி 464
அங்கதஞ் 214
அட்டதிக்கு 53
அட்டமா 274
அடர்ந்து 179
அடிக்கடி 194
அண்ட கோச 290
அண்ணன் 374
அணியறை 441
அதிதி 266
அந்த முகி 291
அந்த வெள்ளை 427
அந்தாதி 49
அந்நெறி 416
அம்புய 252
அம்மயக்க 463
அமரு 459
அமுத 496
அயன் 369
அரசர் 327
அரனொழி 219
அரிதுடை 453
அரிவையர் 214
அருக்க 267
அருமரச 309
அருளின்மா 438
அலப்படை 289
அவயவ 483
அறத்துறு 120
அறிந்து 515
அறுகா 37
அன்றியுமே 406
அன்றிய கொடி 196
அன்றிய பஞ்ச 332
அன்ன நடை 452
அன்ன மென்ன 195
அன்ன மொடு 186
அன்னவரர 234
அன்னவருக் 368
அன்னவை 392
அனாதி 281
ஆகும் 107
ஆகுமதிற் 487
ஆசிடை 108
ஆணவ 381
ஆணி 255
ஆதி மால 243
ஆதி முத 70
ஆதி மொழி 122
ஆதி யரி 253
ஆதியீற் 263
ஆயிரம் 286
ஆர் 399
ஆரந் 339
ஆரமுத 133
ஆரிமயோ 98
ஆருடஞ் 278
ஆலிலை 181
ஆவரண 521
ஆறுமலை 228
ஆறுமுக 230
ஆன 61
ஆனைபரி 54
ஆனைமுகன் சேய் 82
ஆனைமுகன் சேயிறைவ 36
ஆனைமுகன் மான் 89
ஆனைமுக னாறு 224
ஆனையத 257
ஆனையயில் 225
ஆனையே 262
இசை 92
இடுகுறி 90
இத்திற 414
இந்தவிதஞ்சார் 469
இந்த விதந்தமிழ் 498
இந்திரஞ் சேருக 499
இந்திர லோக 513
இமய 314
இரண்டார் 376
இரண்டு 38
இரண்டைந் 4

இரவுச் 348
இராச 528
இராசி 91
இருகை 105
இருபா 12
இலங்கு 401
இவ்விதங்கட் 400
இவ்விதங்கள் 422
இவர் 365
இவற்று 488
இவையன்றி மட 489
இவையன்றி யிம் 296
இழிதிணை 137
இறை செங் 446
இறை மயக் 103
இறைமனை 472
இறையினை 303
இறைவ 71
இன்பமே 500
இன்னதுக்கு 476
இன்ன பிர 78
இன்ன மிவர் 511
இன்னவரிற் 396
ஈகாரஞ் 465
ஈரசைச் 158
ஈரசையின் 159
ஈறொழித்த 128
உயர் 470
உயிர் 123
உலக 514
உலகி 449
உவமை 217
உள்ள 404
உள்ளி 41
உற்ற நாலை 466
உற்ற பேத 364
ஊச 15
ஊர்குடை 16
ஊர்வன 312
எகின 30
எண் 59
எத்தினா 383
எந்தமனை 57
எந்தவாற் 516
எழு 370
என்று 80
எடெடு 403
ஏ{il} 352
ஏல 203
ஏழ் 373
ஏழை 437
ஏர் மகவி 408
ஏறாதான 160
ஏறுறா 114
ஏறிய 141
ஏறுதா 258
ஏறுநுதல் 166
ஐங்கணை 250
ஐங்குறி 24
ஐந்து 227
ஐயார் 121
ஒரு 288
ஒவ்வா 395
ஒவ்வு 126
ஒரூ 134
ஒன்பதா 269
ஒன்பான் 21
ஒன்றுக் 346
ஒன்று பூ 205
ஓசை 429
ஓமெனும் 283
ஓர் 229
கங்கு 25
கங்கை 220
கச்சை 193
கடக 204
கடிகை 45
கடித்த 100
கடைக்குப் 317
கடைக்குறி 316
கடைகொள் 318
கடைத்த நெய் 320
கடைத்த மா 319
கடை நிலம் 46
கடை லோப 425
கண்ண 208
கணைமெல் 22
கணி 337
கரப 532
கரிபுலி 333
கரிய கிளி 330
கரிய மா 410
கருடன் 331
கரும்பு 180
கருமா 334
கலவு 342

கலித்துறை 42
கலிப்பா 14
கவ்வரி 143
கவிமீது 507
கவிமுதலா 426
கறுப் 169
கன்னல் 247
கன்னனொடு 211
கன்னி 358
காசி 511
காண் 76
காத்திர 385
காதிற்கு 171
கார் 164
காரண 398
காரி 270
காரை 340
கால் 382
காலி 440
காலை 200
காவ 244
கான் 130
குங்கும 355
குடக 501
குடி 300
குண்டிகை 254
குண 168
குதியுள் 375
குதிரை 335
கும்ப 273
குரா 202
குருக் 341
குலவி 435
குலவு 485
குவ்வில் 163
குற்றமில் 445
குற்றமுறு 421
குற்று 135
குறவஞ்சி 477
குறவரியி 329
குறிஞ்சி சார் 321
குறிஞ்சி சிறு 336
குறிஞ்சி பாலை 328
குறியது 109
கூடலே 354
கூறாத 450
கூறுங்காற் 5
கூறும் 497
கூறுமிவை 377
கூறுமுத 187
கூறுமெதிர் 484
கையில் 509
கையின் 177
கொஞ்சு 197
கொடுக்கா 405
கொடுக்கின்ற 518
கொடுப்பா 471
கொற்றவ 239
கோத்திர 347
கோப 433
கோளி 150
சங்க 280
சங்கீத 520
சத்த 84
சந்திரன் சூரி 302
சந்திரன் பொன் 492
சம 305
சமை 152
சாதகத்தை 85
சாதகம் 527
சாதமலை 241
சாதி நான் 81
சாதி பெறு 391
சாதியி 301
சார் 3
சாற்று மங்கல 110
சாற்றுவன 69
சித்திர 55
சிவன் 242
சீர் 111
சீரக 304
சீரான 506
சீருரு 256
சீல 43
சீறரவு 182
சீறா 412
சுத்த 379
சுதை 264
சுந்தரி 495
சுப்பிர 249
சூது கிண்ணங் 178
சூது சதுரங்க 188
செல்வ 338
செவ்வாய் 268
சென்ம 362
சேய் 522

சேர்ந்த மான 52
சேர்ந்த விறை 481
சொல்லி 451
சொல்லுந் 79
சொல்லு மங்கல 112
சொல்லு மஞ்சரி 494
சொல்லு மிவ 512
சொல்லுலுத்தன் 419
சொற்ற 142
சொன்முய 223
சொன்ன 212
சோருங் 190
ஞகர 145
ஞமல் 343
ஞானி 420
தசவகை 491
தசவித 468
தண்ணீ 380
தந்தை 226
தர்க்க 413
தரு 508
தலைகடை 315
தலை யிடை 424
தலைவன் 67
தளை 60
தன 367
தனு 245
தாதை 373
தாய 199
தாரு 240
தானத்தி 162
தானரசு 74
திக்கு 261
திணை 106
திதி 2
திரி 147
திரு 480
தீதில் 198
துணிய 418
துலங்கு 291
தூதி 72
தூது 86
தெய்வ 430
தெரியா 461
தேவபாடை 456
தேவருக் 311
தேவவருண 138
தொட்டி 505
தொண்ணூற் 1
நகை 526
நஞ்சு 131
நடு 191
நம் 251
நல்ல 432
நற்சாதி 136
நன்மை 64
நாட்டு 184
நாலா 94
நாலு கர 284
நாலு சாதி 308
நாலு வகை 372
நாவலோ 349
நாற்பிறப் 428
நாற்ற 345
நாளை கடி 56
நான 233
நிதி 287
நின்று 149
நீரோட்டஞ் 351
நீலகிரி 235
நூலிடை 65
நூலெழுது 185
நூலோ 298
நூனுவல் 394
நெடிலை 63
நெய்தல 325
நோன்பு 96
பகைக்கு 215
பகைத்த 407
பச்சை 326
பசி 172
பசு 238
பட்டடை 388
படை 523
பத்துகொரு 6
பத்துவகை 482
பரணி 68
பரி 390
பல்லவ 502
பவ்வரி 144
பவனி 18
பனி 192
பாடமது 397
பாட மோதா 439
பாடு மதனன் 102
பாடு விதரு 77

பாடுவோன் 517
பாதாதி கேசங் கேசாதி பாத மங்க 529
பாதாதி கேசங் கேசாதி பாதம் 493
பாதாதி கேசமே 23
பாப்பாட 434
பாராட்டு 486
பாலை 322
பாவுங் 7
பாவெவை 44
பாவையை 99
பாற்கடல் 174
பிடி 206
பிரமம 357
பிரமனார் 307
பிரமனு 236
பிரயாணி 265
பிறந்தோடா 436
பிறந்த 217
பிறபொருளைக் 443
பினைது 295
பின்னா 139
பின்னு 176
புகலுறு 115
புகன்ற வரு 457
புகன்ற வெழுத்து 119
புண்டரிகம் 285
புதியன 479
புரியு 462
புன்னை 454
பூத 378
பூதி 361
பூவாணி 442
பூவை 299
பெற்றோன் 65
பேசுனே 503
பேசு 455
பேதை 31
பொயம் மொழி 17
பொய்யா 129
பொருந்த 161
பொன்னை 154
பொன்னே 356
மக்களே 490
மகிழ் 35
மங்கலச் சொல் 113
மங்கலச் சொற் குறு 117
மங்கலச் சொற் பொருட் 118
மங்கலச் சொற்றனை 448
மதசாலை 104
மடவியர் 207
மணநாவி 276
மதனவிசய 87
மதனனை 48
மதி 170
மயக்க 28
மயல் 474
மரகத 260
மரண 444
மருதஞ் 324
மருப்ப 384
மல்ல 386
மல்லிகை 201
மலர் 237
மலை 218
மற்றவைக்கு 460
மற்றவைக 232
மற்றவையெவை 151
மறையுலாங் 297
மறையோ 402
மன்பவனி 13
மன்மத 530
மன்ன 475
மன்னிய 58
மாக்கடி 183
மாதர் 371
மாதரி 19
மாயவன் 409
மாரன் 83
மாலாற் 26
மாலையுடன் 353
மாலையை 97
மாலைவனங் 231
மாளிகை 246
மான்மய 40
மான்வலிய 9
மிடைந்த 458
மின்னு 221
மீறு 271
முக்கனி 175
முதல 294
முதலியன் 447
முப்பத்தி 50
முப்பா 101
முல்லை 323

முற்று 157
முறை 473
முன்மொழி 127
முன்னடி 415
முன்னவர்க்கும் 259
முன்னவர்க்கு மனை 279
முன்னவருள் 132
முன்னிரண்டு 153
முன்னே 360
மூவர் 306
மூவருங் 524
மூவாறெனும் 213
மூவா றொற்று 125
மூவெட் 75
மூன்று 156
மெல்லிடை 116
மேவலுறா 68
மொழி 146
வகிர் 165
வஞ்சித்துறை 33
வஞ்சிப்பா 29
வடபத 148
வண்ண 62
வணிகர் 34
வந்த காசி 272
வந்த முறை 417
வந்த வே 478
வரிசச் 389
வருந்தி 525
வரும் 39
வல் லம்பர் 363
வல்லெழுத் 467
வல்லேற்ற 359
வழங்கு 344
வறுமை 411
வனச 248
வாக்கு 393
வாகு தவம் 32
வாகு மாலை 387
வாகுவினில் 519
வாச 350
வாணர் 27
வாணி 189
வாய்கனி 209
வாய்குமுதம் 173
வாயின் 10
வார் 310
வார 275
வான 222
வானே 155
விண்ட 167
விதன 293
வீதி 5 0
வீர 423
வெண்கலியாலே 20
வெண்கலியாற் 93
வெண்பாக் கலித்துறை வேந்தன்
பா மன் 11
வெண்பாக் கலித்துறை வேந்தன்
பா முப்ப 8
வெள்ளை சொல்லு 431
வெள்ளை மலர் 282
வெற்றி 73
வேகமது 210
வேட்டை 51
வேடர் 531
வேடகுல 366
வேதம 533
வேந்த 24
வேற்றுமை 95
வேனிற் 47

## சொல்லகராதி

(எண் - பாடல் எண்)


அகப்பொருள் 42
அங்கமாலை 23
அச்சுதன் 236
அசுரதேச பாடை 456
அசுர மாதர் 454
அசுரர் 2?0
அசை 158, 159
அட்சரம் 448
அட்டதிக்குப் பாலர் 53
அட்டநாக பந்தம் 55, 60, 61
அட்டமராசி 147
அட்டமா நாகம் 274
அட்டமி 435
அட்டவித சமரம் 473
அடையாளம 473
அண்டகோசம 44, 87, 290
அண்டம 285, 516
அணிகலன் (பட்டியல்) 204-205
அநதக் கரணம 378
அநதகன் 244
அநதாதி 49, 75, 94, 107, 108, 121, 447
அந்தாதித் தமிழ் 7
அமமனை 193
அமுது 128, 129, 132-134, 153
அமைச்சா 34
அயனா 243
அயன்படைப்பு 371
அயன்மால் 221
அயிந்திரம் 197, 480
அயிநதிரியர் 280
அரஙகேற்றம 400, 403, 405, 443
அரசர் 34
அரசபாளை 382-385
அரசு 74
அரமபை 43, 103, 454, 486, 487, 494
அரம்பையர் பெயர் 495-496
அரன் 219
அரி 220
அரிச்சுனன் 309
அரிய தமிழ் 461
அரிவை 198
அருக்கன் 267
அருகக் கடவுள் 252
அருந்ததி 189
அல்வழி 95
அலங்காரத் தொகை 415
அலங்கார பஞ்சகப்பா 16
அலங்காரம் 17, 393, 485
அவயவச் சமம் 481
அவயவம் 372, 376, 449, 482, 483
அவிர்கதிர் மண்டலம் 296
அளபெடை 130
அறம் 443
அறம் பாடல் 406
அறிகுறி 338
அனல் வாக்கு 419
ஆசு 78, 391, 392
ஆடாமணி 10, 106
ஆடு 208
ஆணுடைமை 207
ஆதி 243
ஆநம தத்துவம் 378
ஆயிரம் விழி 238
ஆரணக் கவிஞன் 431
ஆருடம 278
ஆவடுதுறை 438
ஆற்றுப்படை 27
ஆனமநிலை 481
ஆனை 262
ஆனைமுகன் 36, 82, 89
இச்சிறை 485
இசை 92, 393
இசைக் குறி 92
இசைச் சுவை 92
இடுகுறி 90
இடைச் சொல் 95
இடையினம் 467
இணைமணி 12

இதழ் 171, 174
இந்திரசாலம் 482
இந்திரலோகம் 513
இந்திரன் 43, 296, 486
இமகண்டம் 441
இயல் 393
இயலிசை நாடகம் 391
இரட்டை நாக பந்தம் 56
இரட்டை மணிமாலை 12
இரதி 250
இரப்பதி 289
இரவிடையீடு 481
இரவுச்சவம் 348
இராச வரிசை 473
இராசி 91
இலக்கணம் 147, 148 393, 432, 440, 466
இலக்கியம் 391, 393 440
இலக்குமி 520
இலச்சனை 337
இறைகாக்கும் தேர் 389-390
இறையோர் 307
இறைவர் 351
இனம் 416
ஈரோன்பான் புராணம் 279
ஈறு 174
உகிர் 177, 185
உட்கருவி 379
உட்சரண் 185
உண்டி 114
உத்தி 418
உத்தியாபனம் 88
உபாயம் 472
உபேந்திரன 239
உயர் தமிழ் 408
உரிப்பொருள் 354
உலகநடை 406
உலவு வரலாறு 85
உலா 31, 81, 108, 474
உலுத்தன் 4 9
உலுத்தனுயிர் 422
உவமம் 483
உவமானம் 102, 212
உவமானித்தல் 71
உவமித்தல 217
உவமை 52, 97, 207, 300, 449
உவமைப்பொருள் 217
உவமையிலி 217
உறவுமுறை 373-374
உறுப்பு 23, 375, 479
உறுவசி 453
ஊசல் 15, 187
ஊமன் 343-345
ஊர (பட்டியல்) 336
ஊழ்விதி 48
எதிர்மொழி 484
எதிர்மொழி நாடகம் 479
எதுகை 62, 108
எமகத் தந்தாதி 95
எமகம் 473
எயிறு 173
எழுத்து 119
எழுபானிரு சாதி 370
எழு பிறப்பு 434
எழுவகைப் பிறவி 372
ஏகாங்கிரி 14, 478
ஏசல 485
ஏடு 403
ஏழகடல் 319
ஏழ் பருவம் 31
ஏழான நரகு 437
ஏழிசை 91
ஏழுமேகம 293, 294
ஐந்திலக்கணம் 391
ஐந்து முகத்தன் 1
ஐநது முகம 221
ஐம்பத்தாறு தேசம் 500-502
ஐயர் 34
ஐயர் பாடை 455
ஐயர் 210, 215
ஒண் பொருள் 217
ஒரு பொருட் கொன்று 483
ஒரு போகு 15
ஒலி 429
ஒலியந்தாதி 75
ஒன்பான மணிமாலை 21
ஒனபானாறு 84
ஓசை 429
ஓரி 510
ஓலை 486
கட்டியம் 473, 484, 486
கடவுள் 450
கடிகுடம் 183
கண் 167
கண்மயிர் 169
கணபதி 462

கணம் 114, 119, 154
கணிதம் 418, 441, 524
கணைக்கால் 184
கதி 112, 135, 152, 153, 160, 163
கதை 49, 76, 483
கதை மொழி மாற்று 69
கம்பன் 431
கமகன் 391, 392
கருப்பொருள் 94, 101-103, 354
கல்யாணம 41, 49, 475
கல்வி 438
கலம்பகப்பா 15
கலம்பகம் 33, 86, 107
கலிங்கம் 190
கலியாண சுந்தரம் 49
கலைக்கியானம் 533
கலைவல்லோர் 110
கவி 118, 193, 391, 392, 405, 408, 409, 420, 421, 430, 524
கவிஞன் 401
கவித்திறம 77
கவிராசன் 121
கவுரி 253
கழங்கு 184, 193
களம் 176
களவு கண்ணி 74
கற்பனை 70, 477
கற்பனை விலாசம் 70
கற்பினெறி 188
கற்பு 187
கற்ம விந்தியம் 378
கன்ம விநதிரியம 380
கன்னன் 309
கன்னிகா மயக்கம் 104
கன்னிமயக்கம 68
கனகாபிடேகம் 26
காகம் 200
காசிபன் 272
காதல் 476
காதலுத்தியாபனம் 47
காது 171
காந்தாரி 309
காப்பியம் 76
காப்பு 476
காமகாண்டபம் 247
காமரசமாலை 43
காமரசவாரம 87
காமாங்கம் 104
காமிகவி 420
காரி 232
காலகாலன் 308
காலன் 233
காவனூல் 305
காவியம் 213, 490
காவிரியான் 487
காளைமேகம் 441
காற்கூறு 380
கான வேட்டத் தமிழ் 103
கான வேட்டம் 54
கீர்த்தி 472
கீர்த்தி விசேடம் 512
கீரன் 408
கீரர் 497
குடியோர் 521
குணம் 380
குதி 184
குதிரைகதி 386
குதிரைச் சுழி 388
குந்தி 189, 309
குடபமுனி 272, 273, 456, 463
கும்பன் 431
குமரி கண்டம் 499
குரல் 186
குரவை 348
குருமுறை 350
குலநிலவியப்பியல் 450
குலம் 135
குலம (பட்டியல்) 36 2-363
குலவித்தை 435
குலோதயமாலை 9
குழமகன் 108, 493
குழல் 164
குழுவ நாடகம் 109
குழுவனாடகம் 477
குறட்பேய் 222
குறவஞ்சி 477
குறிஞ்சி 228, 316, 321
குறியறி சிநது 18, 109
கூடன்மாலை 9
கூந்தல் 164, 165
கூர்மாங்கன் 244
கூறியவை கூறல் 442
கேசாதிபாதம் 23, 493
கை 176
கைப்பில்லாப்பூ 99
கைவீணை 179

கொக்கோகம் 43, 475
சொட்டங்கி 40, 41
கொடுந்தமிழ் நாடு 456
கொடை 422-424
கொடையுடை வேந்தர் 526
கொடை வள்ளல் 502-503
கொண்டல் ஏழு 290
கொண்டை 164
கோமுத்திரி 56, 57
கோவை 42, 81, 86, 106, 471, 497
சக்கரம் 58
சகத்திரம் 45
சகத்திராங்கம் 87
சகத்திராங்கி 44
சடானனம் 14
சடை 164, 165
சண்முகப்பா 09
சத்த க(ன்)னிமார் 262
சதுரங்கம் 188
சந்து 491
சந்துப்பொருள் 468
சபைகபோழம் 440
சமபிரதம் 473
சமசங்கிராமம் 67
சமுகம் 473
சமூக விலாசம் 472
சரித்திரம 470
சருப்பதோ பத்திரம் 59
சலோசம் 483
சாதகம் 2, 85
சாதி 81, 136, 301, 306, 308, 450
சாதி நெறி 107
சாதுரங்கம் 300
சாபம் 515
சாம்பன் 243
சாமவேத கானம் 243
சாமன் 241, 281
சாயல் 185
சாரியை 95
சித்திர கவிப்பாட்டு 55
சித்திரம 78, 391, 392
சிததிரவுபாய செயம் 50
சிநதாமணி 393
சிந்து 19
சிந்து மோகினி 4 , 88
சிலேடா சாகரம் 52
சிலேடை 415, 473
சிவதத்துவம் 379
சிவன் 1
சிற்றின்பம் 414
சிறப்பெழுத்து 466
சிறுகாலம் 352
சின்னப்பூ 15
சின்னமாலை 28
சின் னூல் 531
சீதை 189
சீர் 94, 119, 120, 154, 155, 158, 159
சீவகன் 211
சுப்பிரமணியன் 1
சுயமவரம 66
சுரதமஞ்சரி 509
சுவாயமபு 287
சுழிகுளம 59
சூத்திரம் 58
சூது 188
செட்டிகுலம் 366
செந்தமிழ் 407
செந்தமிழ்நாடு 456
செப மொழி 415
செய்யுள் 288
செயல் 346
செவ்வணி 483
செவ்வேள் 18
செழியன் 310
செனமானுசென்மம் 147
சேரன் 310
சொர்க்கம் 514
சொல் 114, 175
சொற்பொருள் 79, 425
சோழன் 310
சோனகர் 3.6
ஞானிகவி 420
ஞானேந்தியம் 378
தசப்பிராதுற்பவம 21
தசவாயு 292, 295
தசாங்கம் 9, 15, 31, 371, 447, 472, 475, 486, 493
தசாங்க வன்னிப்பு 9
தடாக சிஙகாரம 13
தண்ணீரின் கூறு 380
தத்துவம் 377
தந்தைவழி 365

தமிழ் 85, 403, 443 457, 480, 498, 512
தமிழ்சொரி சிந்தாமணி 49
தமிழ்த் தேயம் 503
தமிழ்நாடு 506, 512
தமிழ்ப்பாடை 506
தமையந்தி 189
தர்க்கம 413
தருமம் 522
தருமவிசேடம் 50
தருமன் 309
தளசிங்காரம் 51
தளை 60, 93
தாண்டகம் 75
தாமரை நோன்பு 24
தானம 160, 162
திக்குநாதர் 261
திணை 106, 136—139, 425, 497
திணைமயக்கம் 327
திரிபு 21, 473
திருமுகம 470
திருமுகவிலாசம் 470
திருவடியின் சுவடு 480
திலோத்தமை 246
திறன் 398
தீயவவை 413
துதி நிந்தை 415
துரியோதனன் 309
துரியோதனாதிகள் 198
துருவன் 214
துரோபதை 189
துலுக்கா 326
துறை 62
தூக்கு 110
தூது 30, 32, 47, 79, 81, 86, 300, 471, 474, 484, 485, 490, 492
தெய்வக்கையுறை 17
தெய்வம் 34, 36, 81, 84, 187, 192, 259, 278, 301, 328, 449, 490
தெரிவை 198
தேசம் 500
தேவபாடை 456
தேவவருணம் 138
தேவாங்கமின் 73
தேவாங்க வரையுள் 73
தொடை 184
தொண்டையார் 409
தொண்ணூற்றாறு 1, 76, 360, 368, 512, 531
தொயில் 179, 180
தொல்காப்பியர் 412
தொழில் 345
தொன்னூல் 392
நகை 174—176
நஞ்சு 125, 128—131, 134, 406
நட்சத்திரமாலை 27
நடை 185
நதிகுலர் 305
நதிவிசேடம் 71
நந்தி 244, 283, 284, 515
நயனெழுத்து 141
நயனப்பத்து 22
நரகம் 443
நல்லதமிழ் 512
நல்லவை 413, 432
நவமான பிரபந்தம் 489
நவவீரர் 282, 287
நற்கவி 441, 517
நற்றமிழ் 59
நன்னூல 360
நாடகம் 479
நாடி 379
நாபி 181
நாமகள் 402
நாலடி 393
நாலுவகைத் தோற்றம் 372
நாள் 90 142, 148—151, 156
நாற்றம் 203
நான்மணி 14
நான்மணிமாலை 11
நிகண்டு 393
நிதிக்கோன் 303
நிந்தாத்துதி 415
நிரையம் 443
நிரையோம்பல் 303
நிலவகை 315
நிறம் 91
நீர்நிலை (பட்டியல்) 336
நீலன் 243
நுசுப்பு 182
நுதல் 166
நூல் 263, 305, 372, 398, 469, 506
நூற்பொருள் 326

நூற்றிரட்டு 393
நெடுங்கணக்கு 457, 462
நெய்தல் 320, 325
நொண்டி 14
நோக்கு 167
நோன்பு 96
பகை 192
பசப்பு 190
பகுவாடல் 188
பஞ்சணை 203
பஞ்சமுகிர்த்தம் 82
பட்டாபிடேகம் 74, 101
பண் 343
பண்டிதன் 430
பண்ணை வசித்திரம் 19
பத்துவகைத் தூது 482
பந்தடி 187
பரசுராமர் 289
பரடு 184
பரணி 46, 81, 88. 154, 488
பரதகண்டம் 498
பரியாசம் 484
பருவம் 105, 108, 198, 474
பருவமாலை 11
பரை 255
பல் 174
பல்சந்தமாலை 6
பலதுறை 473
பலதேவன் 289
பலதொகை 482
பவனி 13, 18, 39, 51, 99, 102, 471, 4 2, 475, 484, 486, 493, 494
பவனியுலா 482
பறவை (பட்டியல்) 330-332
பறை 329
பன்மணிமாலை 15
பாட்டிமம் 435
பாடம் 439
பாடல் 502
பாடுவோன்றன்மை 517
பாடை 429
பாண்டி 188
பாதாதிகேசம் 23, 70, 475, 493
பாநான்கு 416
பார்த்திபர் 300
பார்த்திபன் றன்மை 517
பால் 114, 163
பாலை 317, 322
பாவலர் 349, 411
பாவினுக்கு இழுக்கு 418
பாவுக்குச் சாதி 416
பிரணவம் 226, 283
பிரபந்தம் 1, 77, 78, 90, 426 447, 474, 487, 492, 498, 531
பிரபந்தம் (பட்டியல்) 527-531
பிரமரிஷி 311
பிரமன் 237
பிரளையம் 513
பிரிமொழி 415
பிரிவுசுரம் 67
பிள்ளைத்தமிழ் 5
பிள்ளைப்பா 89, 105
புட்கலை 231
புத்தன் 252
புதியன புகுதல் 479
புயம 176
புரண்மொழி 69, 472
புருடமிருகம 311
புருவம் 166
புலவர் 391
புலவோர் 403
புலன் 378
புலோமிசை 246
புவித் தையல் 521
புறத்தீது 381
புறநடை 447
புறநாட்டுச்செய்யை 24
புறவடி 85
புறனடை 76, 468, 474, 476
பூக்கூறு 379
பூசை 53
பூதம் 378
பூதர் 497
பூந்தமிழ் 456
பூமிசுக்கிரன் 532
பூமிபாலர் 361
பூரணை 231
பூவைநிலை 299
பெண்பருவம் 11
பெதும்பை 198
பெயா 399
பெருங்காலம் 352
பேதை 31, 198

பேரிளம்பெண் 198
பேரின்பம் 414
பொதியமுனி 412
பொதுச்சிறப்பு வரலாறு 393
பொய்க்கால் 478, 480
பொய்ம்மொழி 17
பொருட்டமிழ் 476
பொருத்தம் 110, 161, 447
பொருத்தவகை 159
பொருள் 355, 3..6
மங்கலச்சீர் 146
மங்கலச்சொல் 117, 118, 448
மங்கலப்பாட்டு 421
மங்கலம் 111, 112, 113, 116, 127
மங்கலமொழி 114, 130
மங்கலவெள்ளை 421
மங்கை 198 255
மஞ்சரி 39, 81, 86, 98, 100, 489
மஞ்சரிப்பவனி 494
மடந்தை 198
மடமாதருவமானம் 212
மடல் 22, 108, 190, 481, 484, 485, 489
மடவியர்க்கணி 206
மடவியர்க் குவமை 207
மடிதந்தமடி 181
மணம் 357
மணியூசல் 20
மதசாலை 104, 183
மதம் 104, 221, 248, 281
மதன்கணை 248
மதன் கணைச்செயல் 248-249
மதன சிங்காரம் 49, 102
மதனநூல 213
மதன விசயம் 87
மதனன் 48, 102
மதனாகமம் 168
மதுரகவி 438
மதுரம் 78, 391, 392
மந்திரம் 4:6, 433, 477
மந்திரவா..] 40
மயிர்வரி 181
மரகதவல்லி 260
மரம் (பட்டியல்) 339-343
மலம் 381
மலர் (பட்டியல்) 201-202, 337
மலர்ப்பா 96
மறை 222, 298, 361
மன்னர்பரி 386-387
மன்னர்நூல் 522
மாட்டு 415
மாத்திரை 130, 161
மாத்திரைக் குறுக்கம் 461
மாதங்கி 479, 493
மாதமிழ் 85
மாதர் மயக்கம் 472
மாதிரக்கட்டு 41, 86
மாயன் 227, 513
மாயன் பிறப்பு 21
மாரன் 68, 84, 240
மாருதம்319, 324
மால் 243
மாலை 23 ,81, 97, 108, 202, 447
மாலை மாற்று 59
மானதவம் 53
முக்குலம் 302
முகடி 258
முகிர்த்தம் 488
முகிழ்த்தம 41
முகில் ஏழு 292
முதலாம் இயல் 187
முதலாம் ஒண்பொருள் 354
முதலியல் 447
முதன்மொழி 153
முதனூல் 463
முதுவவை 413
முப்பத்திரண்டறம் 50
மும்மணிக் கோவை 7
மும்மணிமாலை 8
முயலகன் 223, 515
முரசபெந்தம் 57
முரண்வஞ்சி 29
முருகக் கடவுள் 229
முல்லை 318, 323
முலை 178
முலைப்பத்து 22
முழச்சரண் 184
முறைவகுப்பு 372
முன்மொழி 110, 111, 127
முன்னோர் நூல் 288
முன்னோரியல் 217
மூக்கு 171
மெய்ம்மொழி 17
மூன்றாமியல் 447

மெய்வருக்கம் 459
மெல்லினம் 467
மெல்லுந்திரவியம் 203
மேரு 73, 215
மொழிக்குமே முதல் 1-6
மோனை 62
யாழ் 329
யானை 285
ராசாங்கமாலை 20
லட்சுமி விலாசம் 8
லோபம் 424, 425
வகிர் 164
வகிர்குழல் 165
வகையுளி 115, 116
வச்சிராங்கி 43, 87, 486, 494
வச்சிராங்கிவிசேடம் 48 7
வசன சம்பிரதாயம் 69
வசிட்டன் 272
வசை 406, 419, 432
வடசொல் 225
வடபதம் 148
வண்ணநெறி 62
வணிகன் 135
வணிகர் 34, 304 307, 361
வணிகவெதர் 39
வதனசந்திரோதயம் 72
வதனம் 170
வயிறு 181
வருக்கநெறி 458
வருக்கமாலை 28
வருக்கம் 471
வல்லெழுத்து 467
வலைப்பாட்டு 351
வழிநூல் 463
வழு 160
வள்ளுவர் 393
வள்ளை 421
வறியகளம் 483
வ(ன்)னம் 114
வாக்கி 391, 392, 432
வாக்கு 380
வாடாதமாலை 26
வாணி 224
வாதி 391, 392
வாய் 173, 174
வாயு 370
விகனன் 431
விகடம் 427, 473
விகுதி 95
விசயவித்தாரம் 53
விசையம் 42
விசையவிலாசம் 471
விசேடவணி (பட்டியல்) 218
விடயசந்திரோதயம் 51
விண்கூறு 380
வித்தாரம் 78, 391, 392
வித்துவான் 439
விதரணசொர்க்கம் 423
விரணசொற்கம் 512, 513
விநாயகன் 84
விமானம் 267, 268
வியாகரணம் 480
விரல் 177, 185
விருது 20, 299, 391
விலங்கு (பட்டியல்) 333-335
விலை 85-88, 431
விழி 167
விழுப்புண் 521
விளரிப்பாட்டு 188
வினை 347
வீரசொர்க்கம் 423, 513, 514
வீமன் 309
வெஞ்சமன் 243
வெள்ளணி 483
வெளிப்படை 485
வெறியாட்டு 485
வேடர்விநோதம் 68
வேதகுலம் 366
வேதியர் 307
வேர்வை 170
வேற்றுமை 95
வைநாசிகம் 147

★ ★ ★